உ

நமச்சிவாப்யாம்

லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம்

(ஆகமக்கோயிலமைப்புமுறை பாகம்-2)

சைவாகமத்தில் ஆலய அமைப்புமுறை – லிங்கவகைகள் – பீடபிண்டிகை வகைகள், ஆலயாங்க பாவனைகள் – லிங்கத்தில் இறைவனைக் கருதும் முறைகள் – லிங்கஸ்தாபனமுறை – பந்தனவகைகள் – லிங்கப் பெருமைகள் – ஆலயலிங்க வழிபாட்டு மஹிமைகள் – சிவலிங்க வழிபாடு – பூஜாமண்டல வகைகள் ஆகியவை அடங்கிய 376 பக்க நூல்.

தொகுப்பாசிரியர்

ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி,

சிவஶ்ரீ. விஜய. சோமசேகர சிவாசார்யார் M.A.,

வெளியீட்டு நாள் : 16-11-2023 வியாழக்கிழமை

வெளியீடு : சிவாசார்யர் அறக்கட்டளை - சென்னை-1.

சிவஶ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் ட்ரஸ்ட் - சென்னை-1.

ஸ்ரீ மனோன்மநீ ஸமேத
மஹா ஸதாசிவ மூர்த்தி



CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

உ

நமச்சிவாப்யாம்

லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம்

(ஆகமக்கோயிலமைப்புமுறை பாகம்-2)

சைவாகமத்தில் ஆலய அமைப்புமுறை – லிங்கவகைகள் – பீடபிண்டிகை வகைகள், ஆலயாங்க பாவனைகள் – லிங்கத்தில் இறையைக் கருதும் முறைகள் – லிங்கஸ்தாபனமுறை – பந்தனவகைகள் – லிங்கப் பெருமைகள் – ஆலய லிங்க வழிபாட்டு மஹிமைகள் – சிவலிங்க வழிபாடு – பூஜாமண்டல வகைகள் ஆகியவை அடங்கிய 376 பக்க நூல்.



தொகுப்பாசிரியர்

ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி, சைவாகமக்ரு சூடாமணி, சைவாகம வித்வான், வ்யாகரண விசாரதா, சிவாகம ஸார்வபௌம:, சிவஸம்வித் ஸபர்யா பாராவாரீணர், சிவாகம அருட்செல்வர், ஸம்ஸ்க்ருத சேவாரத்தினம், சிவாகம வாசஸ்பதி, வாஸ்து வித்தகர், சைவாகமஸ்ரீ: , ஆகம கல்பத்ரும:, ஆகம வித்தகர், சிவாகம வித்யாரத்னம், சாக்தயாக சாம்ராட், வைதிகசைவ ரக்ஷாமணி, சிவபாத பத்மபூஷணம், சிவாகமக் கலாநிதி, சைவாகம துரந்தர:, சைவாகம பரீக்ஷாதிகாரீ, யாக ஸர்வஸாதக திலகம், சாஸ்தா உபாஸகர், அகோரசிவம் என்கிற

சிவஸ்ரீ. விஜய. சோமசேகர சிவாசார்யார் M.A.,

குருமுதல்வர். சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை-1.

வெளியீட்டு நாள் : 16-11-2023 ஐப்பசி 30 குருவாரம்

சிவஸ்ரீ T.S. காளிதாஸ சிவாசார்யாரின் 55வது பிறந்தநாள்விழா வெளியீடு

சிவாசார்யர் அறக்கட்டளை – சென்னை-1.

சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட் – சென்னை-1.

நூல் வெளியீட்டுக் குறிப்பு

நூலின்பெயர், தலைப்பு	: லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம் (ஆகமக்கோயிலமைப்புமுறை பாகம்–2)
நூலின் துறை	: இந்துசமய சைவாகமத் துறை
நூலின் வகை	: தொகுத்திட்ட பாடநூல் வகை
நூலின் பொருள்	: லிங்கம் நிலைநிறுத்தி மருந்துக்காப்புசாத்துதல்
நூலின் மொழி	: ஸம்ஸ்கிருதம் & தமிழ்
நூலின் எழுத்து	: தமிழ் எழுத்துமட்டில்
நூலாசிரியர் & பதிப்பாசிரியர் & வடிமைப்பாளர்	: சிவஸ்ரீ.வி.சோமசேகர சிவாசார்யர்
நூலின் பதிப்புரிமை	: நூலாசிரியருக்கே உரியது.
நூல் அளவு	: 8.5" x 5.5"
நூலின் பக்கங்கள்	: 376 பக்கங்கள்
புத்தகத்தாள் விவரம்	: 80GSM - Maplitho Paper
வெளியீட்டு நூல்வரிசை	: 40
அட்டைப்பட விளக்கம்	: ஆலய மூலலிங்கம்
முதற்பதிப்பு	: சோபக்ருது வருஷம் 16–11–2023, ஐப்பசி 30, குருவாரம்.
வெளியீட்டுவிழா	: சிவஸ்ரீ T.S. காளிதாஸ சிவாசார்யாரின் 55வது பிறந்தநாள்விழா வெளியீடு.
அச்சிட்ட எண்ணிக்கை	: 1000 பிரதிகள்
வெளியீட்ட நிறுவனம் & நிதிக்கொடை அளித்தது	: சிவாசார்யார் அறக்கட்டளை, சென்னை–1. சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட், சென்னை–1.
வெளியீட்டாளர்கள்	: சிவஸ்ரீ T.S. சுவாமிஸதாசிவோம் சிவஸ்ரீ T.S. காளிதாஸ சிவாசார்யர் சிவஸ்ரீ Dr. T.S. ஷண்முக சிவாசார்யர் M.A., Ph.D., சிவஸ்ரீ M. கார்த்திக் சிவாசார்யர்
புத்தகத்தின் விலை	: **விலை ரூ.500/–**
வடிவமைப்பு–அச்சாக்கம்	: ஓம் டிஜி ஒர்க்ஸ், சென்னை–40.
புத்தகம் கிடைக்கும் இடம்	: அறக்கட்டளை & நூலாசிரியர்அகம்.
நூலைபெறத் தொடர்புக்கு	: 98402 99352 | 99402 01849

உரிமை : © இந்த புத்தகத்திலுள்ள எந்த ஒரு பகுதியையும் நூலாசிரியர் அனுமதியை எழுத்து மூலம் பெறாமல் பதிப்பிக் கூடாது.

Copyright © All reserved including the rights of reproduction in whole or in part in any form.

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

உள்ளடக்கம்

1. நூல்குறிப்புகள் — வெளியீட்டு விவரம்.
2. ஞானதீப நமஸ்காரம் — அறிவுச்சுடரொளி வணக்கம்.
3. கோமாதா ஸ்துதி — பசுத்தாய் வணக்கத்துதிகள்.
4. ப்ராதஸ்மரணதுதி — காலைநேரசிந்தனை இறைத்துதிகள்.
5. ஆசார்ய வந்தனம் — சைவாகம 18 பத்ததி ஆசார்யப்ரணதி.
6. இஷ்டதேவதாவந்தனம் — விருப்பத் தெய்வகளின் துதிகள்.
7. திருமுறைத்துதிகள் — தமிழ்த்திருமுறைத் துதிப்பாடல்கள்.
8. நூலின் முகவுரை — தொகுப்பாசிரியர் முகவுரை.
9. நூலின் பதிப்புரை — பதிப்பாளரின் வெளியீட்டுரை.
10. நூலின் கருத்துரைகள் ஆகம அறிஞர்களின் வாழ்த்துரைகள்.

இந்நூலைக் கண்ணுற்று அணிந்துரை தந்தசான்றோர்கள்

1. சீலஸ்ரீ 27வது குருமாகசந்நிதானம், தருமபுரம்ஆதீனம்.
2. பாலமுருகனடிமை சுவாமிகள், ரத்தினகிரி, வேலூர்.
3. சிவஸ்ரீ. S. ஹாலஸ்யநாத சிவாசார்யார், திருவண்ணாமலை.
4. சிவஸ்ரீ. K. ராஜப்பா குருக்கள், காஞ்சீபுரம்.
5. சிவஸ்ரீ. K. பிச்சை குருக்கள், பிள்ளையார்பட்டி.
6. சிவஸ்ரீ. S. ஸபேச சிவாசார்யார், (பெங்களூர்) மயிலாடுதுறை.
7. சிவஸ்ரீ. S. அருணாசலம், B.A., B.L., அட்வகேட், கடலூர்.
8. சிவஸ்ரீ. Dr. K. தக்ஷிணாமூர்த்தி ஸ்தபதியார், சென்னை.
9. சிவஸ்ரீ. Dr. S.P. ஸபாரத்தின சிவாசார்யார், மயிலை, சென்னை.
10. சிவஸ்ரீ. A.V. சுவாமிநாத சிவாச்சார்யார், மயிலாடுதுறை.
11. சிவஸ்ரீ. அவிநாசி A.S. சுந்தரமூர்த்திசிவம், பெங்களூர்.
12. சிவஸ்ரீ. Dr. V. அபிராமசுந்தரம், (முண்டகப்பட்டு). மயிலாப்பூர்.
13. சிவஸ்ரீ. Dr. தி. கணேசன், பிரெஞ்சுஇன்ஸ்டிடியூட், புதுச்சேரி.
14. சிவஸ்ரீ. S.K. ராஜாபட்டர், குருமுதல்வர், திருப்பரங்குன்றம்.
15. சிவஸ்ரீ. Dr. R. சத்யநாராயண சர்மா, A.Prof. EFEO, புதுச்சேரி.
16. சிவஸ்ரீ. K.S. பாலசுப்ரமண்ய சிவாசார்யார், உடையாளூர், (பழனி).
17. அருங்கலை முனைவர். Dr. N. பாலசுப்ரமண்யன், சென்னை.
18. ஸ்ரீமதி. Dr. தீபா துரைசுவாமி, சென்னை.

11. நூலுக்கு எடுத்தாண்ட நூல்கள் விவரம்.
12. நூல் – ஒன்பது சிவதத்துவநிதிகளில் விளங்குவது
13. வாழ்த்துப்பாடல்
14. நூலாசிரியரின் பிறநூல்களின் அறிவிப்பு.

உ

ஞானதீப நமஸ்காரம்

(காலை மாலை இருவேளையும், தீபம்ஏற்றிவைத்து, இந்த ஸ்லோகத்தைக் கூறி நமஸ்காரம் செய்தால் சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.)

ஸுவர்ண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
ஸுதான்ய வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
கல்யாண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
விபூதி வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:

***

சுபம் பவது கல்யாணி! ஆயு ராரோக்ய ஸம்பத: |
சத்ருபுத்தி விநாசாய தீபஜ்யோதிர்! நமோ(அ)ஸ்து தே ||

***

கோமாதா ஸ்துதி. (பசுவணக்கத் துதிகள்)

இந்த அபூர்வமான ஸ்தோத்திரத்தைச் சொல்லி கோபூஜையைச் செய்து, பிரதக்ஷிணம் செய்தால், அளவற்ற புண்யங்களும், சகலபாக்யங்களும் ஏற்படும். இதனைக்கூறிப் பணிந்து வாசகர்கள் பயன்பெற வேண்டும்.

நமோ தேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யை ச நமோ நம:.
கவாம் பீஜ ஸ்வரூபாயை நமஸ் தே ஜகதம்பிகே. 1

நமோ ராதா ப்ரியாயை ச பத்மாம்சாயை நமோ நம:.
நம: கிருஷ்ண ப்ரியாயை ச கவாம் மாத்ரே நமோ நம:. 2

கல்பவ்ருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸந்ததம் பரம்:
ஸுதாயை தனதாயை ச வ்ருத்திதாயை நமோ நம: 3

சுபதாயை ப்ரஸன்னாயை கோபதாயை நமோ நம:.
யசோதாயை கீர்த்திதாயை தர்மக்ஞாயை நமோநம:. 4

இதம் ஸ்தோத்ரம் மஹத்புண்யம் பக்தியுக்தச்ச யப்படேத்.
ஸ கோமான் தனவான் சைவ கீர்திமான் புத்ரவான் பவேத். 5



ப்ராதஸ்மரணம் (காலைஇறைவணக்கம்)

ப்ராதர் நமாமி கணநாத மநாத பந்தும் –
சிந்தூர பூர பரிசோபித கண்ட யுக்மம் |
உத்தண்ட விக்ன பரிகண்டன சண்டதண்டம் –
ஆகண்டலாதி சுரநாயக ப்ருந்த வந்த்யம் || 1

ப்ரஹ்மா முராரிஸ் த்ரிபுராந்தகாரி –
பானுஸ் சசீ பூமி சுதோ புதஸ் ச |
குருஸ் ச சுக்ரஸ் சனி ராகு கேதவ: –
குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம் || 2

ப்ராதஸ் ஸ்மராமி சரதிந்து கரோஜ்வலாபாம் –
ஸத்ரத்னவன் மகர குண்டல ஹாரபூஷாம் |
திவ்யா யுதோர்ஜித ஸுநீல ஸஹஸ்ர ஹஸ்தாம் –
ரக்தோத்பலாப சரணாம் பவதீம் பரேசாம் || 3

ப்ராதர் நமாமி மஹிஷாஸுர சண்டமுண்ட –
சும்பாஸுர ப்ரமுக தைத்ய விநாச தக்ஷாம் |
ப்ரஹ்மேந்த்ர ருத்ர முனி மோஹநசீல லீலாம் –
சண்டீம் ஸமஸ்த ஸுரமூர்த்தி மனேக ரூபாம் || 4

ப்ராதர் பஜாமி பவதா மபிலாஷ [3]தாத்ரீம் –
[4]தாத்ரீம் ஸமஸ்த ஜகதாம் துரிதாப ஹந்த்ரீம் |
ஸம்ஸார [3]பந்தன விமோசன ஹேது பூதாம் –
மாயாம் பராம் ஸம[4]திகம்ய பரஸ்ய விஷ்ணோ: || 5

சைவாகம பத்ததிகளின் ஆசார்ய வந்தனம்



18பத்ததி ஆசார்ய ப்ரணதி: ஸ்ரீ குருப்யோ நம:

தூர்வாஸாப் பிங்களஸ் சைவ உக்ரஜ்யோதிஸ் ஸுபோதக:.
ஸ்ரீகண்டோ விஷ்ணுகண்டஸ் ச வித்யாகண்டஸ் ததைவ ச.
ராமகண்டோ ஞானசிவோ ஞானசங்கர ஏவச.
ஸோம சம்புர் ப்ரம்ம சம்புஸ் த்ரிலோசன சிவஸ் ததா.
அகோர சிவ ஏவா(அ)த ப்ராஸாத சிவ ஏவச.
ராமநாத சிவஸ் சைவ ஈசான சிவ ஏவச.
வாருணாக்ய சிவஸ் சைவா(அ)ஷ்டாதசா சார்ய புங்கவா:.
ஏதைர் திவ்யைர் சிவாசார்யைர் பத்ததிப் பரிபாஷிதா.
தேப்யோ நித்யம் நமோ திவ்ய தேசிகேந்த்ரேப்ய ஏவச.
ஸித்தாந்த மார்க்க தர்சிப்யோ ஆசார்யேப்யோ (அ)ஸ்து மே நதி:.

பக்தசுந்தரமூர்த்திஸ்தவ:- கேயூர குண்டல கிரீட விபூஷி தாங்கம் –
ஹஸ்தோத்பலம் கடிகரம் த்ருத ராஜவேஷம் |
ருத்ராக்ஷ ருத்ரஜப பூதி லலாட பாஜம் –
த்யாயேத் த்ரிபங்க சிவசுந்தர மூர்த்தி ரூபம் ||

சைவ ஸந்தான ஆசார்யர்கள்

ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலரவர்கள் பாடிய
சிதம்பர சபாநாத புராணத்துள்ள சந்தான குரவர்
முதலிய சைவ சித்தாந்த பரமாசாரியர் வணக்கம்

திருநந்தி தேவர் துதி

திருக்கயிலை மலையிலருட் கல்லால
நிழலிருந்து தேவ தேவன்
பெருக்கமுடை யாகமத்துட் பிறங்குரௌ
ரவத்தெழுந்த பீடார் ஞானஞ்
சுருக்கமறப் போதிக்க மலைவுதீர்ந்
தருளிமுதற் குருவாய்த் தோமில்
அருட்குரியர்க் கதனையளித் தருணந்தி
பெருமானுக் கடிமை செய்வாம்.

மெய்கண்ட சிவாசாரியார் துதி

மைகண்டர் வகுத்துரைத்த சிவஞான
போதமெனும் வட நூல் தன்னைக்
கைகண்டு தமிழுலக முய்யமொழி
பெயர்த்தருளிக் கலைநூல் காட்டும்
பொய்கண்ட வுளத்தினர்கா ணாதபுனி
தாத்துவிதப் பொலிவு காட்டும்
மெய்கண்ட தேவனடி யகந்தழீஇப்
பணிந்தேத்தி வினையை வெல்வாம்.

அருணந்தி சிவாசாரியார் துதி

தவமாருந் திருத்துறையூர்ச் சார்ந்தருளிப் பொய்யினைமெய்த்
தவமாகக் கொண்டுழல்முப் புறத்தினருஞ் சாய்ந்திரியச்
சிவஞான போத நூல் தமிழுலகந் தெளிந்துய்யச்
சிவஞான சித்தியருள் தேசிகனைப் பணிகுவாம்.

மறைஞானசம்பந்த சிவாசாரியார் துதி

முரண்ட ரும்புறச் சமயநூல் முழுப்பொயென் றகற்றி
அரண்ட ருஞ்சிவ ஞான நூல் கேட்டினி தாய்ந்து
தெருண்டு நிட்டைசேர் கடந்தையூர்ச் சம்பந்த தேவன்
இரண்டு பாதமும் முடிக்கணிந் திடுக்கண்வே ரறுப்பாம்.

உமாபதி சிவாசாரியார் துதி

மூட்டு மார்க்கமாங் களைகளை யருளினால் முரணிக்
கட்ட ருட்புடை நூல்சிவந் திகழ்தரக் கண்டு
நிட்டை மேவிவீற் றிருந்தரு ளுமாபதி நிமலன்
மட்ட றாவடிக் கமலமென் மனத்தட மலரும்.

திராவிட மாபாடியகாரர் துதி

குறியமுனி யருளியமெய் வரத்தினா
லவதரித்துக் கோதில் ஞானத்
துறைசைநமச் சிவாயகுரு வருட்கடலும்
வடமொழிதென் மொழிப்பேர்த் தூய
நிறைகடலு முண்டுபுனி தாத்துவித
சித்தாந்தம் நிலவப் பூமேல்
மறைமொழிமெய்ச் சிவஞான பாடியஞ்செந்
தமிழ்வகுத்த யோகி வாழி.

இஷ்டதேவதாவந்தனம்



ஓம் கணேசாய நம:

குணாதீத மாத்யம் சிதானந்த ரூபம் –
சிதாபாஸகம் ஸர்வகம் ஞானகம்யம்.
முனித்யேய மாகாச ரூபம் பரேசம் –
பரப்ரஹ்ம ரூபம் கணேசம் பஜே(அ)ஹம்.

ஓம் ஷண்முகாய நம:

குந்தேந்து மந்த ஸ்மித சுந்தரா ஸ்யம் –
வந்தாரு பூதேவ வரை ருபா ஸ்யம்.
ப்ருந்தாரகா ராதி ஜனை ரசா ஸ்யம் –
வந்தே பவானீ தநயம் ஷடா ஸ்யம்.

ஓம் சங்கராய நம:

தவள மய சரீரம் ஸர்ப்ப சூலஞ் ச பாசம் –
பரசு மனல கட்கம் கேடகம் வஜ்ர ஹஸ்தம்.
அபய வரத ஹஸ்தம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம் –
பணி சசி ஜல மௌளிம் தேவதேவம் நமாமி.

ஓம் தக்ஷிணாமூர்த்தயே நம:

கபர்திநம் சந்த்ர கலா வதம்ஸம் –
த்ரிநேத்ர மிந்து ப்ரதிமா நநோ ஜ்வலம்.
சதுர் புஜம் ஞானத மக்ஷ சூத்ரம் –
புஸ்தாக்னி ஹஸ்தம் ஹ்ருதி பாவயேத் சிவம்.

ஓம் நடேசாய நம:

க்ருபா ஸமுத்ரம் சுமுகம் த்ரிநேத்ரம் –
ஜடாதரம் பார்வதி வாம பாகம்.
ஸதாசிவம் ருத்ர மனந்த ரூபம் –
சிதம்ப ரேசம் ஹ்ருதி பாவயாமி.

ஓம் லலிதாம்பாயை நம:

ஸ்ரீம் பதபூர்ண மஹா மநு ரூபே –
ஸ்ரீ சிவகாமி மஹேச்வர ஜாயே .
ஸ்ரீ குஹ வந்தித பாத பயோஜே –
ஸ்ரீ லலிதா பர மேசி நமஸ்தே.

ஓம் க்ருஷ்ணாய நம:

இந்தீவர ச்யாமள கோமலாங்கம் –
இந்த்ராதி தேவார்ச் சித பாத பத்மம்.
ஸந்தான கல்ப த்ருமம் ஆச்ரிதானாம் –
பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி .

ஓம் விஷ்ணவே நம:



மேக ச்யாமம் பீத கௌசேய வாஸம் –
ஸ்ரீவத் ஸாங்கம் கௌஸ்துபோத் பாஸிதாங்கம்.
புண்யோ பேதம் புண்டரீகாய தாக்ஷம் –
விஷ்ணும் வந்தே ஸர்வ லோகைக நாதம்.

ஓம் மஹாலக்ஷ்ம்யை நம:

ஸரஸிஜ நயனே ஸரோஜ ஹஸ்தே –
தவளதரா ம்சுக கந்த மால்ய சோபே.
பகவதி ஹரி வல்லபே மனோக்ஞே –
த்ரிபுவன பூதிகரி ப்ரஸீத மஹ்யம்.

ஓம் துர்க்காயை நம:

நமஸ்தே சரண்யே சிவே ஸாநுகம்பே –
நமஸ்தே ஜகத் வ்யாபிகே விச்வரூபே.
நமஸ்தே ஜகத் வந்த்ய பாதாரவிந்தே –
நமஸ்தே ஜகத் தாரிணி த்ராஹி துர்கே.

ஓம் ஸரஸ்வத்யை நம:

சுராசுர சேவித பாத பங்கஜா–
கரே விராஜத் கமநீய புஸ்தகா.
விரிஞ்சி பத்னீ கமலாஸந ஸ்திதா–
ஸரஸ்வதீ நிருத்யது வாசி மே ஸதா.

ஓம் ஹயக்ரீவாய நம:

ஞானா னந்த மயம் தேவம் –
நிர்மல ஸ்படிகா க்ருதிம்.
ஆதாரம் ஸர்வ வித்யானாம் –
ஹயக்ரீவம் உபாஸ்மஹே.

ஓம் லக்ஷ்மீந்ருஸிம்ஹாய நம:

யஸ்யா (அ)பவத் பக்தஜனா (ஆ)ர்த்தி ஹந்து: –
பித்ருத்வம் அன்யேஷு அவிசார்ய தூர்ணம்.
ஸ்தம்பே (அ)வதாரம் தம் அநந்ய லப்யம் –
லக்ஷ்மீ நிருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே.

ஓம் மஹாசாஸ்த்ரே நம:

ஹரிவரா ஸநம் விச்வ மோஹனம் –
ஹரிததீ ச்வரம் ஆராத்ய பாதுகம்.
அரிவிம ர்தநம் நித்ய நர்த்தனம் –
ஹரிஹரா த்மஜம் தேவ மாச்ரயே.

ஓம் பைரவாய நம:

கட்கம் கபாலம் டமரும் த்ரிசூலம் –
கராம் புஜைஸ் ஸந்தததம் த்ரிநேத்ரம்.
திகம் பரம் பஸ்ம விபூஷி தாங்கம் –
நமாம் யஹம் பைரவ மிந்து சூடம்.

ஓம் ஹநுமதே நம:

அசேஷ லங்கா பதி ஸைன்ய ஹந்தா –
ஸ்ரீராம ஸேவா சரணைக கர்த்தா.
அசேஷ துக்காஹத லோக கோப்தா –
த்வஸௌ ஹநூமான் தவ ஸௌக்ய கர்த்தா.

விநாயகர் துதி (உமாபதிசிவம் அருளியது)

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

திருமுறைத்துதிகள்

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத்தேவார முந்திரு வாசகமும்
உய்வைத்த ரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

திருநாவுக்கரசர் - சிவபுரம் (6-87-1)

வானவன்காண் வானவர்க்கும் மேலானான்காண்
வடமொழியுந் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்து மாடினான்காண்
ஐயன்காண் கையிலன லேந்தியாடுங்

கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறந்
தேனவன்காண் சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் றானே.

திருநாவுக்கரசர் - ஆரூர்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சய போற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே அலறா நில்லே.

மாணிக்கவாசகர் - கோயில் (08-21-1)

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

மாணிக்கவாசகர் - திருப்பெருந்துறை (8-15)
(பக்திவைராக்கிய விசித்திரம்)

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

திருவிசைப்பா – திருமுறை–9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் தாளம் : ஆதிதாளம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றளம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

திருப்பல்லாண்டு – திருமுறை–9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் தாளம் : ரூபகம்

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம் – திருமுறை–12 (சேக்கிழார்)

ராகம் : மத்யமாவதி விருத்தம்

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அழுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டுஆர்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருக என உரைப்பார்.

உ

சிவமயம்

முகவுரை

ஸதாசிவம் அனந்தம் ச ஸ்ரீகண்டம் புனர் அம்பிகாம் |
குஹம் விஷ்ணும் ச தாதாரம் குரூன் ஸப்த ஸமாச்ரயே ||

******

தேவாதிதேவ ஸர்வக்ஞ ஸச்சிதானந்தலக்ஷண |
உமாரமண பூதேச ப்ரஸீத கருணாநிதே ||

******

சிவம் சக்திம் கணாதீசம் குஹம் வாகீச்வரீம் க்ரமாத் |
தூர்வாஸஸ மஹம் வந்தே பைங்களாத்யாம்ச்ச தேசிகான் ||

சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் இன்பம் என்ற பொருளுண்டு. அவனை வழிபட்டு அவனடிசேர்பவர்களுக்கு எல்லாமங்களங்களையும் இன்பங்களையும் அச்சிவம் அருளும். அத்தன்மையுடையதான, சிவமே பிரம்மம் எனப்படுகிற, பரம்பொருள். பரம்பொருள் என்றால் தனக்குமேல் ஒருபொருளும் இல்லாமலே தானே முதல்வனாகவும் தலைவனாகவும் விளங்குபவன். இந்த சிவம் ஒன்றே. இதன் வகைபல தெய்வம் ஒன்று பேதம் அனந்தம் என்பார் தாயுமானவர்.

தனக்கென ஒருபெயர் ஒரு உருவம் ஒருதொழில் இல்லாதது சிவம். சிவன் உயிர்களுக்கு அருள்புரியத் திருவுள்ளம்கொண்டு விரும்பினால் தன் இச்சையால் ஞானமயமான திருமேனிகளைத் தாங்கிக்கொண்டு நிலவுலகிற்கு வருகிறான், உயிர்களுக்கு அருள்புரிகின்றான், முடிந்ததும் மறைந்துவிடுகிறான், இது சிவனின் இயல்பு.

இந்த சிவனின் சம்பந்தமுடையது சைவம். இதனை திருமூலரும் சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆகுதல் என்று தெரிவித்துள்ளார். சிவனால் ஸ்தாபிக்கப்பட்டது சைவம். இதனை சைவசமயம் என்று சொல்வர். சமயம் என்றால் நல்வழி அல்லது மார்க்கம் என்று பொருள். உலகாயதம், பௌத்தம் முதலிய முன்முன்னுள்ள சமயங்கள், பின்பின்னுள்ள சமயங்களால் வாதிக்கப்படும், வாதிக்கப்படுவது பூர்வபக்ஷசம், வாதிப்பது சிந்தாந்தம் ஆகும். சைவசமயம் மற்ற

சமயங்களைப் பூர்வபக்ஷசம் பண்ணி நிற்றலாலும், இதனைப் பூர்வபக்ஷசமாகப் பண்ணுவதற்கு ஒருசமயமும் இல்லாமையாலும், இதுவே சித்தாந்தம் எனப்படும். சித்தாந்தம் என்றால் தீர்ந்தமுடிவு, அல்லது முடிந்தமுடிவு அதாவது இதற்குமேல் ஒன்றுமில்லை எனக் கூறுவதாகும். இதனைப் பலர் சித்தாந்தமே சித்தாந்தம் என்றும், சித்தாந்தத்திற்கு வேறானவை பூர்வபக்ஷசங்கள் என்றும், சைவசமயமே சமயம் என்றும், சைவத்தின் மேற் சமயம் வேறிலை. அதிற்சார் சிவமாந் தெய்வத்தின் மேற்றெய்வம்இல் என்றும் பாராட்டியுள்ளனர். சைவசித்தாந்த ஆகமங்கள் காமிகம் முதலான இருபத்திஎட்டு ஞானநூல்களே ஆகும்.

சைவசமயத்தில், பதி (இறைவன்) ஒன்று. பசுக்கள் (உயிர்கள்) பல. பாசம் தொகையாகச் சொன்னால் ஒன்று. விரித்துச் சொன்னால் ஆணவம்–கன்மம்–மாயை என்று மூன்று பொருள்கள் விளக்கப்படும். இதனை திருமூலதேவரும் திருமந்திரத்தில் பின்வருமாறு அருளிசெய்துள்ளார்.

பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்
பதி யணுகிற் பசு பாசம் நில்லாவே.

இந்த முப்பொருள் உண்மையை உலகத்தவர்களுக்குச் சுலபமான முறையில் காட்டவே, நம்முன்னோர்கள் கோயில்களைக் கட்டி வைத்து, அதில் சிவலிங்கத்தையும் (பதி), அதன்முன்னர் விருஷபதேவரையும் (பசு), அதன்பின்னே பலிபீடத்தையும் (பாசம்) முறையே ஸ்தாபனம் (பிரதிஷ்டை) செய்துள்ளார்கள். இதனைக்கூறும் திருமந்திரபாடல்

ஆய பதிதான் அருட் சிவ லிங்க மாம்
ஆய பசுவும் அட லேறென நிற்கும்
ஆய பலிபீட மாகு நற் பாச மாம்
ஆய அரனிலை ஆய்ந்து கொள்வார் கட்கே.

சைவசித்தாந்த சமயம் வைதிகசைவ அருள் நெறியாகும். வேதம் என்ற சொல்லுக்கு ஞானம் (சிறந்தஅறிவு) என்பது பொருள். இறைவனால் முதலில் வேதமும் ஆகமும் வெளியிடப்பட்டன. இவை முறையே சைவசமயத்திற்கு பொதுநூலும் சிறப்புநூலும் ஆகும். வேதம்

ஆகமம் இரண்டுமே இருகண்களாகத் தேவையானவை. வேதம் மந்திரவடிவானது. ஆகமம் சாஸ்த்ரவடிவானது. வேதங்களில் சிவன் பரம்பொருள், அவனை வணங்கு, தர்மம் செய் என்று கூறப்பட்டுள்ளது. சிவனை எப்படி வணங்குவது? அவன் இயல்பு உருவம் யாது? அவனை அடையும் வழிகள் யாவை? முதலான வினாக்களுக்கு விளக்கம் தேவை எனில், அவைக்கு ஆகமங்களில்தான் விடைகள் பேசப்பட்டுள்ளன. எனவேதான் பெரியோர்கள் வேதம் ஆகமம் இரண்டையும் பிரமாணமாகக் கொள்வர். ஆகமங்கள் வேதங்களின் ஸாரமாக செயல் முறையாக விளங்குவன. வேத மந்திரங்களை வழிபாட்டுக்கிரியைகளில் உபயோகப்படுத்துவதைக் கூறுவன ஆகமங்கள். ஆகமங்களில் சிவனை அழைத்து இருத்திடவும், கோயிலில் பல்லாண்டுகள் அருள்வழங்கவும் வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. எனவே ஆகமங்களில் கோயிலமைப்புமுறை, லிங்கம், தெய்வச் சிலைகள், பீடங்கள், இவற்றுக்கான இலக்கணம், மற்றும் பந்தன முறைகள், யாவும் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளன. பரம்பொருள் அருவநிலையிலேயே, இலக்காகஉள்ள உருவங்களில் உறைந்து இருந்து அருளும். அப் பரம்பொருளான சிவம் லிங்கத்தில் உள்ள ஸதாசிவரின் தேஹத்துள்ளே ஜீவனாய் தோன்றி அருள்வதாய் ஆகமங்கள் தெரிவிக்கின்றன. உலகில் எழுவகைப் பிறப்பால் நால்வகையில் தோன்றிடும் 84லட்சம் வகையான உடல்களில் விளங்கும், தேஹியான அனைத்து உயிர்களுக்கும் இறைவன் ஆருளுமிடமே கோயில். சைவசித்தாந்தநூலும், திருஞானசம்பந்த தேவாரமும், இதனைத் தெரிவிக்கும் ஞானசம்பந்தரின் தேவாரப்பாடல் சான்று,

உரைசேருமென் பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்,
நிரைசேரப் படைத்தவற்றினுயிரிக்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்

என்கிறார். இதனை சிவஞானசித்தியார் விருத்தமும் அறி வித்துள்ளது. சுத்தமும் ஞானமுமே சிவம் எனப்படுவது. ஞானமே லிங்கம், கிரியையே பீடம், இவ்விரண்டினைச் சேர்ப்பதே சிவப் பிரதிஷ்டை எனப்படுவதாகிறது. ஆதலால்தான் சிவலிங்க வழிபாடு நமக்கு ஆத்மஞானத்தை அளிப்பதாகிறது. லிங்கஸ்தாபனத்தால் மக்களுக்கு நன்மையும் நற்செயலும் சாந்தியும், நல்லஎண்ணங்களும், தேசஅபிவிருத்தியும் ஏற்படும் என்று அறியலாம்.

சிவவடிவங்களில் மிகவும் தொன்மையானது **சிவலிங்கம்.** குணமும் குறியும் கடந்த பேரொளியாகிய இறைவனை, ஒரு குறியின்கண் வைத்து வழிபடும் பொருட்டுத் திகழ்வது **சிவலிங்கம்** எனப்படுவதாகும். சிவலிங்கம் என்ற சொல்லில் லிங்கம் என்னும் தொடர் **சித்தரித்தல்** எனப்பொருள்படும். சிவபெருமான் படைப்பு முதலான ஐந்தொழில்களாலும் பிரபஞ்சத்தை சித்தரிக்கின்றதால் **சிவலிங்கம்** எனப் பெயர் ஏற்பட்டது என்பர்.

கண்ணுக்குப் புலப்படாத அருவத்திருமேனிக்கும், கண்ணுக்குப் புலப்படும் உருவத்திருமேனிக்கும், மூலமான இருப்பிடமாகியதும், சிவபெருமானை அறிந்து வழிபடுவதற்கு அடையாளமாக விளங்குவதும், **சிவலிங்கம்.** இதனைத் தெரிவிக்கும் அருணாசல புராணக்கூற்று இதுவே.

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிழற்குறியாம் சிவலிங்கம்
நாணாது தேடிய மால் நான்முகனும் காண நடுச்
சேணாரும் தழற் பிழம்பாய்த் தோன்றியது.....

இறைவனுக்கு **தடஸ்தலக்ஷணம், சொரூபலக்ஷணம்** என்று இரண்டு நிலைகள் உண்டு. இவற்றுள் **சொரூபம்** என்பது தன்னியல்புநிலை. **தடஸ்தம்** என்பது அரு–அரு உரு–உரு என்ற மூன்று வடிவங்களாகவரும்.

குணம் குறிகடந்த பேராளியாகிய இறைவனை ஒரு குறியின்கண் வைத்து வழிபடும் பொருட்டுத் திகழ்வது **சிவலிங்கம்.** இது இறைவனது **அருஉருவத்திருமேனி.** இதுவே **சதாசிவத்திருமேனி** எனவும் கூறப்பெறும். இதனை **ரூபாரூபம்** என்றும் **வியத்தாவ்யக்தம்** என்றும் **ஸகளநிஷ்களம்** என்றும் சிவாகமங்கள் குறிப்பிட்டு விளக்குகின்றன.

ஒன்றும் புலப்படாத அருவத்தினின்றும் கண்ணுக்குப் புலப்படுகிற ஓர் அண்டவடிவமான பிழம்பு உருவானது பற்றி, உருவமும், கை, கால் முதலிய உறுப்புகள் எவையும் புலப்படாமை பற்றிய அருவமும், விங்கத்தில் ஒன்றாகக் காணப்படுதலால் **இச்சிவலிங்கம் அருஉருவத் திருமேனி** எனப்படுகிறது. இதனை சிவாகமம்,

அனுக்ரஹாய லோகானாம் லிங்கானி ச மஹேச்வர என்கிறது.

உலகங்களுக்கு கருணை செய்வதற்காகவே லிங்கவடிவில் மகேச்வரர் விளங்கினார் என்பது இதன்பொருள்.

ஸர்வா லிங்கமயீ பூமீ ஸர்வம் லிங்கமயம் ஜகத் |
ஸர்வம் லிங்கமயம் தீர்த்தம் ஸர்வம் லிங்கே ப்ரதிஷ்டிதம் ||

என்ற கூற்றின்படி பூமி எல்லாம் லிங்கவடிவம், அகில உலகமும் ஸர்வதீர்த்தமும் அனைத்தும் லிங்கவடிவமேயாகும்.அனைத்துமே லிங்கத்தினுள் உள்ளது என்பது இதனால் அறியத்தக்கது.

ஆக்கமும் அழிவுமாகிய ஸம்சாரமானது லயத்தை (ஒடுக்கத்தை) அடையும்போது, பூதஜாலங்கள் அனைத்தும், சிருஷ்டி (படைத்தல்) காலத்தில் எவ்வாறு தோன்றினவோ, அவ்வாறே லயத்தை அடைகின்றன. ஒடுக்கத்திற்கு இருப்பிடமாக லிங்கம் உள்ளதால் லிங்கமே அவற்றை மீண்டும் படைக்கும் தன்மைவாய்ந்ததாக உள்ளது ஆகையால் அதற்கு லிங்கம் என்று பெயர் கூறப்பட்டுள்ளது. இதனை தெளிவாக எடுத்துக்கூறியுள்ளளன. இதற்கான சான்று,

லயம் கச்சந்தி பூதானி ஸம்ஹாரே நிகிலானி யத: |
தேந லிங்கம் இதி ப்ரோக்தம் சூக்ஷ்மத்வாத் லிங்கம் உச்யதே ||

(கிரணாகமம் படலம் 21ல் சுலோகம்–2)

லிங்கத்திலிருந்து நவதத்துவங்களின் தோற்றமுறைமை, மூவாயிரம் தேவர்கள் முதலான அனைத்து ஜீவராசிகளும் சிவ சிருஷ்டியில் தோன்றியமுறைமையை மகுடாகமம் விளக்கியுள்ளது. சிவம், சக்தி, நாதம், பிந்து ஆகிய நான்கும் சிவலிங்கத்தின் உச்சியில் உள்ள நிஷ்கள நிலைத் தத்துவங்கள். சிரோவர்தனத்திற்குக் கீழே திருச்யபாகமான, பூஜாம்ச உச்சியில் சதாசிவம். சூத்ரநடுவே ஈச்வரம், சூத்ரத்தடியில் ருத்ராம்சம் என்ற முன்று அம்சங்கள் உள்ளன. இவற்றில் ஸதாசிவ தத்வம் ஒன்று மட்டுமே நிஷ்களஸகளம் என்ற அருஉருவநிலை தத்வம் மற்றவை இரண்டும் உருவநிலை ஸகளதத்வங்கள். கீழே விஷ்ணுதத்வம் அதனடியில் பிரம்மதத்வம் என்ற இரு உருவநிலையிலான ஸகளதத்வங்கள் இவ்விதம் நவதத்துவங் களையும், ஐந்தொழிலாற்று கின்ற ஐந்துதெய்வங்களின் பஞ்சாம்சத்துடனும், முத்தொழில்புரியும் மும்மூர்த்திகளின் முன்றுபாகங்களுடனும் விளங்குவதே சிவலிங்கம். சிவலிங்கத்தில் நாதமே லிங்கவடிவம், பிந்துவே பீடவடிவம் என்றும் லிங்கம் சிவம் என்றும் பீடம் சக்தி என்றும் நெருப்பும் உஷ்ணமும் (வெப்பம்) சேர்ந்து ஒன்றாக இருப்பதுபோலவே, சிவமும் சக்தியும் சேர்ந்து ஒன்றாக உள்ளது என்றும் சிவாகமங்கள் கூறுகின்றன. இந்த பஞ்சாம்சமுள்ள பஞ்சஸாதாக்ய வடிவமான சிவலிங்கத் திருமேனி,

ஸர்வ ஆன்மாக்களையும், ஸர்வ அண்டங்களையும் தன்னுள்ளே அடக்கிக்கொண்டிருக்கும் பரமகாரணமாக விளங்குவதால், உலகத்து மக்கள் தியானித்து வழிபடுவதற்கு சிறந்த குறி (அடையாள உருவம்) வேறொன்று மூவுலகிலும் இல்லை. எனவேதான் உருவவழிபாட்டில் சிவலிங்கவழிபாடே மிகமிகத்தொன்மையானது. லிங்கம் என்பதற்குரிய பொருளை, காரணாகமம், சுப்ரபேதம், அஜிதம், வாதுளம், மகுடம், கிரணம், முதலான சைவாகமங்கள் அழகாகவும், தெளிவாகவும், விரிவாகவும், கூறுகின்றன. சிவனார் தனது ஐந்தொழில்களாலும் இந்த பிரபஞ்சத்தை சித்தரிக்கின்றதால் சிவலிங்கம் எனப்படுவதாக சைவாகம வழிநூலாசான் வருணபத்ததியில் கூறியுள்ளார். தேவர்கள் செல்வத்தை அடையும் பொருட்டு உமது விசித்திரரூபமாகிய மகாலிங்கமூர்த்தியை அபிஷேகம் செய்து வழிபட்டார்கள் என்று ருக்வேதத்திலும் (5–313) சிவலிங்கத்தைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது.

இத்தகைய அளவிலாப் பெருமையுடைய சிவலிங்கத் திருவுருவங்களையும், வகைகளையும், வழிபாட்டுமுறைகளையும் பற்றியபல நூல்கள் வெளிவந்துள்ளபோதிலும். ஆயினும் சிவலிங்கத்தை எவ்வாறு? எண்ணவேண்டும், எம்முறையில் எச்சடங்குகளால் ஆசாரியர் ஸ்தாபனத்தைச் செய்யவேண்டும் என்று ஆகமப்படிகூறும் தனிஒரு நூல் தேவைப்படுகிறது. அத்தேவையை இந்நூல் நிறைவுசெய்யும் வகையில், ஆகம சான்றுகளுடன் ஆலயலிங்க வகைகளின் ஸ்தாபனம் தொடர்புடைய விதிமுறைகள், ஸம்ஸ்காரங்கள், லிங்கவகை, பீடவகைகள் இவற்றை நிலைநிறுத்துகிற ஸ்தாபனமுறைகள், பந்தனமுறைகள், முதலானவற்றைத் தொகுத்துக் கூறுவதாய் அமைந்துள்ளது. மேலும் ஆலயம், லிங்கம், இவற்றைப் புறக்கலைக் கண்ணோட்டத்துடன் மட்டுமே நோக்காமல், அமைப்பின் தத்வார்த்த விளக்கங்களுடன் கண்டு கருதி வழிபடுவது முழுமையான பயனையும், பிறவிப்பயனையும் அளித்திடும் என்றநோக்கில் ஆகமங்களின் அரியபல உட்கருத்துக்களை இந்நூல் தெரிவிக்கிறது. லிங்கவகைகளிலிருந்து உருவச்சிலைக்கு அளவுஎடுக்கும் முறைகள், அமைவிடவிதிகள், மாறுபடும் சிறப்புவிதிகள், சடங்குமுறைகள், கருதவேண்டிய பாவனைமுறைகள், இவைகளைப் பற்றிய கோயில்களில் தொன்டாற்றிடுவோரின் பலவினாக்களே இந்நூல் எழுதுவதற்கு அடிப்படைக் காரணமாயிற்று. எனது சிற்றறிவுக்கு ஏற்றஅளவில் ஆகமப்படி தொகுத்துக் கூறப்பட்டதில் குறைகளை நீக்கி குணங்களைக் கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன். பெரியோர்கள் தம்

காணும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, எழுதிஅளித்தால், மறுபதிப்பில் சரிசெய்திட உதவியாயிருக்கும். கோயில் கட்டிடஅமைப்பானது அடிமுதல் முனைவரை ஆகமப்படி அமைந்துள்ளதை விளக்கிய **"ஆகமக்கோயிலமைப்பு முறை"** என்றநூலை வெளியிட்ட சிவாசாரிய அறக்கட்டளை அக்கோயிலினுள்ளே செய்யப்படவேண்டிய லிங்க ஸ்தாபனத்தையும் அஷ்டபந்தன முறைகளையும் விளக்குவதால் இந்நூலை அதனுடைய இரண்டாம் பாகமாக வெளியிடுவதை உளமாரப் பாராட்டி மகிழ்கிறேன். இந்நூலுக்கு வாழ்த்துரையை அளித்த அன்புள்ள அறிஞர்பெருமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூலாக வடிவமைத்தளித்த திரு அ. கணேஷ் அவர்களுக்கு எனது நன்றி கலந்த வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அணிந்துரைகளை நல்கி அடியேனை ஊக்கப்படுத்தி சமயத்தொண்டில் ஈடுபடுத்திடும் அன்பு உள்ளங்களையும், இந்நூலை வாசித்துப் பயனடையும். வாசகர்களையும் உளமார வாழ்த்துகிறேன். வெளியிட்டாளர்களின் குடும்பத்தினர் இகபர ஸௌபாக்யம் பெற்றுய்ய எல்லாம்வல்ல எம்பெருமானை வேண்டிக்கொள்கிறேன்.

இப்படிக்கு

வி. சோமசேகர குருக்கள்

சென்னை.

சுபம்.

திருக்கயிலாய் பரம்பரைத் தருமை ஆதீனம்
27–ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

குருபாதம்

தருமபுரம்
மயிலாடுதுறை – 609 001

"ஞாலம் நின்புகழேமிக வேண்டும் தென்
ஆலவாயில் உறைபும்பம் ஆதியே"

போகமும் முத்தியும் புத்தியும் சித்தியும்
ஆகமும் ஆறாது தத்துவத்து அப்பாலாம்
ஏகமும் நல்கி இருக்கும் சதாசிவம்
ஆகம் அது அத்துவதவதறும் சிவமே – திருமந்திரம்

நமது தருமபுரம் ஞானப்பண்ணையில் பயின்ற மாணவர் போற்றுதலுக்குரிய சிவஸ்ரீ விஜய. சோமசேகர சிவாச்சாரியார் அவர்கள் முலமாக லிங்கஸ்தாபனம், அஷ்டபந்தனம் எனும் நூல் ஆகமக் கோயிலமைப்பு முறை என்கிற நூலின் இரண்டாம் பகுதியாக வெளி வருகின்ற செய்தியை அறிந்து மகிழ்வுற்றோம்.

நமது சைவ சமயத்திற்கு ஆணி வேராகத் திகழ்பவைகளில் ஆகமம், ஆலயம் இவ்விரண்டும் இன்றியமையாதவைகளாக திகழ்கின்றன. இதனையே " திக் கிராமம் அசிவாலயம் " என்று சாத்திரங்களும்,

திருக்கோயில் இல்லாத திரு இல் ஊரும்,
திருவெண்ணீறு அணியாத திரு இல் ஊரும்,
பருக்கு ஒடிப்பத்தினையால் பாடா ஊரும்,
பாங்கினொறு பல தளிகள் இல்லா ஊரும்,
விருப்போடு வெண் சங்கம் ஊதா ஊரும்,
விதானமும் வெண் கொடியும் இல்லா ஊரும்,
அறுப்போடு மலர்பறித்து இட்டு உண்ணா ஊரும்
அவ் எல்லாம் ஊரல்ல அடவிக்காடே

என திருநாவுக்கரசர் கூறுகின்றார்கள்.

நமது சைவ சமயத்திற்கு ஓர் தனிச்சிறப்பு என்னவென்றால், பொதுவாக அடையாளம் என்பது மதத்தினை அடையாளப்படுத்துவதற்காகவும் ஏற்பட்டது, ஆனால் அதுவே அந்த மதமாக ஆகிவிடாது. ஆனால் நமது சைவத்தில் தான் அடையாளமே மதம். மதமே ஓர் அடையாளம் என காணப்படுகிறது. எவ்வாறு எனில், சிவலிங்கம் நமது சைவ மதம். மேலும் லிங்கம் என்கிற சொல்லுக்கு அடையாளம் என பொருளும் உண்டு.

ஆகவே தான் எல்லா உயிரினங்களும் எவற்றிலிருந்து தோன்றி பின்பு எவற்றுள் ஒடுங்குகின்றனவோ அவற்றிற்கு லிங்கம் – உருவம் – அருவம் – அருவருவம் என மூன்று வகைகளாக காணப்படுகின்றது. இதையே ஆகமங்கள் – சகளம் – நிஷ்களம் – சகளநிஷ்களம் என்றும் வ்யக்தம் – அவ்யக்தம் – வ்யக்தாவ்யக்தம் என்று கூறுகின்றன, இவ்வனைத்து விஷயங்களையும் நூலாசிரியர் புகைப்படத்துடன் கூறியுள்ளார். மேலும் பீடமே சக்தி, சக்தியே பீடவடிவம் என்பதனைப்பற்றியும் தெளிவுற கூறியிருக்கிறார். மேலும் ஞானவடிவான லிங்கத்தில் க்ரியவடிவான தேவியை சேர்ப்பது தான் ப்ரதிஷ்டை எனப்படும். அதற்கு முக்கியமாக அஷ்டபந்தனம் அதைப்பற்றியும் அஷ்டபந்தனத்தில் பிளவு ஏற்பட்டால் எவ்விதம் சரி செய்ய வேண்டும் என்பதனைப் பற்றியும் ஆகம வரிகளை காண்பித்து கூறியிருக்கிறார். மேலும் இதுபோன்ற சிறந்த நூல்கள் அவ்வப்பொழுது வெளி வரவேண்டும், அதனால் சைவர்கள் பயனுற வேண்டும்.

இந்நூலினை வெளியிட்டு உதவி புரிந்திருக்கும் சிவாச்சாரியார் அறக்கட்டளை மற்றும் சிவஶ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாச்சாரியார் டிரஸ்ட் ஆகியோருக்கு சிவனருள் உரித்தாகுக. ஓர் அறிவு சார்ந்த நூல் பல ஆசான்களுக்கு நிகர். ஓர் ஆசான் பல அறிவு நூலிற்கு சமமானவர் என்று கூறி அனைவரும் நல்வளம் பெற சொக்கநாத பெருமானின் திருவடிகளை சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

– சுபம் –

இரத்தினகிரி

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்,
இரத்தினகிரி, கீழ்மின்னல்-632 517.
வேலூர் மாவட்டம், தமிழ்நாடு.

STD 04172 - 266350
267350
மருத்துவமனை 266320
பள்ளி 266420

அன்பரீர்!

13-10-2023

அருளாசி

சிவனோடொக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவருமில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரையோனே.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்றிடச் சிவகதிதானே – (திருமந்திரம்).

சிவனருட்செல்வர், வேதாகமப் பொருள்தனை நன்கு உணர்ந்து சொல்லும் வல்லமைபெற்ற எமது அன்புக்குரிய **சிவஸ்ரீ. விஜய. சோமசேகர சிவாச்சாரியார், எம்.ஏ.,** அவர்கள் **லிங்க ஸ்தாபனம் அஷ்டபந்தனம் (ஆகமக்கோயில் அமைப்புமுறை பாகம்-2)** என்ற நூலினை எழுதியுள்ளார். இதனை சென்னையில் உள்ள சிவாச்சாரியார் அறக்கட்டளை வெளியிட்டு மகிழ்கிறது.

நூலின் சாரம் அடங்கிய முகவுரையை படித்துப் பார்த்தேன்.

உருவம் அருவம் அருவுருவமாய்த் திகழும் சிவலிங்கத் திருமேனியைப் பற்றி இவ்வளவு விஷயங்களா என்பதை நினைத்து மனம் நெகிழ்ந்தேன். ஒன்பது பகுதிகளில் ஆலய லிங்க அமைப்பில் ஆகமச் சிற்பத்துறைகள் துவங்கி லிங்க வழிபாட்டுப் பெருமை வரையிலான 217 வியக்கத்தக்க தலைப்புகளில் இந்நூல் அமைந்துள்ளது. தலைப்புகளும் அதில் சிவாகமச் செல்வரான நூல் ஆசிரியர்

சொல்லியுள்ள சிவலிங்கம் அதன் உட்பொருள் சிவலிங்க வழிபாடும் தரிசனம் மட்டுமே மகத்தானது – சகல சௌபாக்கியங்களையும் எளிதில் தரவல்லது. பாவங்களையும் சாபங்களையும் அடியோடு நீக்கவல்லது என்பதை வேதாகமங்கள் திருமந்திரத்தின் வாயிலாக அடங்கியுள்ள அதிநுட்பமான விஷயங்களை தெள்ளத்தெளிவாக விளக்கிச் சொல்லியிருப்பது போற்றுதலுக்கு உரியதாக உள்ளது. சிவபெருமானின் திருவருளும் அம்பிகை மகாசக்தி காளிகாம்பாளின் பரிபூரண அருளாசியும் நிரம்பப்பெற்ற நூல் ஆசிரியர் தான்பெற்ற பிறவியின் பயனாக எல்லோரும் படித்துப் பயனுறும் வண்ணம் இந்நூலை ஆக்கித்தந்துள்ளார்.

நூலாசிரியப் பெருமகனார் இதுபோன்ற நூல்களை எழுதி வெளியிட நீண்ட ஆயுள் ஆரோக்கியம், ஆற்றலை வழங்கிட எல்லாம் வல்லான் எந்தை முருகனை சிந்தையிலிருத்தி வாழ்த்தி மகிழும்.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லாற்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. –அப்பர்.

உ

ஸ்ரீ அண்ணாமலையார் துணை

"சிவாகம ஞானபாஸ்கரர்" "சிவாகம செல்வர்"
"சிவாகம வாசஸ்பதி"

பட்டம். சிவஸ்ரீ சா.ஹாலாஸ்யநாத சிவாசார்யர்

அர்ச்சகம், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் – திருவண்ணாமலை

தேதி : 20.09.2023

வாழ்த்துரை

லிங்கஸ்தாபனம், அஷ்டபந்தனம்

சிவாய ருத்ராய சிவா(அ)ர்ச்சிதாய
மஹாநுபாவாய மஹேச்வராய
ஸோமாய சூக்ஷ்மாய சுரேச்வராய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய

ந க்ஷேத்ரம் அருணாதஸ்தி நாஸ்தி தேவோருணேச்வராத்
நா(அ)பி ப்ரதக்ஷிணாத் அன்யத் வித்யதே(அ)ப்யதிகம் தப :

ஆகமக்கோயில் அமைக்கும் முறை முதல் பாகநூல் சிவாச்சார்ய பெருமக்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும், ஆன்மீக அன்பர்களுக்கும் மிகவும் பயனுள்ள நூலாக அமைந்தது. அதனை தொடர்ந்து இரண்டாம் பாகமாக லிங்கஸ்தாபனம், அஷ்டபந்தனம் எனும் இன்நூல் ஆலய அமைப்பு, லிங்க வகைகள், ஆலயதத்வபாவனை, லிங்கதத்வம், லிங்கஸ்தாபனம், அஷ்டபந்தன வகைகள், ஆத்மார்த்த பூஜா லிங்கபேதம், ஆலய தத்வரூப விளக்கம் போன்ற வழிபாட்டின் பயன்களை ஆகம முறைப்படியும் சிற்பசாஸ்திரத்தின் முறைப்படியும் இவ்வறிய நூலினை சிவஸ்ரீ விஜய சோமசேகர சிவாச்சார்யர் அவர்கள் சைவ சமயத்திற்கு தொகுத்து வழங்கியுள்ளார்கள் அவருக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

மேலும் இக்கால சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் நாம் எதிர்பார்க்கும் அனைத்து விஷயங்களையும் இந்நூல் பூர்த்தி செய்கிறது. எதிர் வரும் காலங்களில் சிவஸ்ரீ விஜய சோமசேகர சிவாச்சார்யர் அவர்கள் இது போன்ற பயனுள்ள நூல்களை அளித்து நீண்ட ஆயுளுடன் பல்லாண்டு வாழ்ந்து ஆன்மீக பணி செய்திட எல்லாம் வல்ல எம் அண்ணல் ஸ்ரீ உண்ணாமுலை உடனாகிய அண்ணாமலையாரை பிரார்த்திக்கிறேன்.

அண்ணாமலையார் ஆசீர்வாதம்

வாழ்க பல்லாண்டு!

வளர்க தங்கள் ஆன்மீக தொண்டு!!

இப்படிக்கு

சா.ஹாலாஸ்யநாத சிவாசார்யர்

பட்டம். சிவஸ்ரீ சா.ஹாலாஸ்யநாத சிவாசார்யர்

சைவஸித்தாந்த ஆகம ஸாகரம்,சிவாகம ஞானபாநு ,சிவாகம கல்பத்ருமம், சிவாகம ரத்னாகரம்,சிவாகம திருத்தொண்டர், மந்த்ரஸேவாமணி

K.ராஜப்பா சிவாச்சார்யார்

ஸ்தானீகர்- ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தானம்,ஸ்ரீ கைலாஸநாதர் தேவஸ்தானம்

121-45,ஏகாம்பரநாதர் சன்னதி தெரு,காஞ்சிபுரம்.631502.போன்-944525747

உ

ஆசியுரை

नमश्शिवाय-साम्बाय-सगणाय-ससूनवे।

प्रधानपुरुषेशाय सर्गस्थित्यन्तहेतवे।।

பொதுவாக லிங்கம் என்பதற்கு சின்னம் - அடையாளம் என்று பொருள். लीयते गम्यते इति लिङ्गः எந்த ஒன்றில், அண்ட சராசரங்களும் ஒடுங்கி - வெளிப்படுமோ அதற்கு லிங்கம் என்று பொருள் எனப் புராணங்கள் உரைக்கின்றன. எவ்வாறு சிவபெருமான் உலகிலுள்ள அனைத்தையும் தன்னகத்தே அடக்கிப்பின் ச்ருஷ்டிக்கின்றாரோ, அவ்வாறே, அச்சிவபெருமானின் திவ்யவடிவான சிவாகமங்களை தன்னகத்தே உள்வாங்கி, தேவையானபோது புஸ்தகத்தின் வாயிலாக வெளிபடுத்தி, சைவஸமயத்தின் அடையாளமாகத் திகழ்பவர் **சிவஶ்ரீ.விஜய.ஸோமசேகர ஶிவாசார்யார்** அவர்கள். அவரின் மீண்டும் ஓர் புதியபடைப்பு லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம் எனும் இந்நூல்.

पदच्छेदः पदार्थोक्तिः विग्रहो वाक्ययोजना। आक्षेपस्य समाधानं व्याख्यानं पञ्चलक्षणम्।। 1.வாக்கியத்திலுள்ள சொல்-பொருள் ஆகியவைக்களைத் தனித்தனியாகப் பிரித்து, 2.அச்சொல்லிற்கான பொருளைச்சொல்லி, 3.அச்சொல் இந்த கருத்தின் அடிப்படையில் தான் அந்த

வாக்கியத்தில் கூறப்பட்டது எனக்கூறி, 4.அனைத்துச்சொற்களையும் சரியான முறையில் வாக்கியமாக அமைத்து, 5.அவ்வாக்கியத்தினால் கூறப்பட்ட கருத்திற்கு மாற்றுக்கருத்துக்கள் இருந்தால் அதையும் கூறி, அம்மாற்றக்கருத்தில் கூறப்பட்ட தவறைச்சுட்டிக்காட்டிப்பின், ஸித்தாந்தமான பதில் கருத்தைக்கூறுதல் ஆகிய ஐந்தும் விளக்கவுரையுடன் கூடிய புஸ்தகத்திற்கான இலக்கணம்.

இவ்வனைத்து விஷயங்களையும் சாரமாக மனத்திற்கொண்டு, பல கோட்பாடுகளைச் சார்ந்தவர்களும் இப்புஸ்தகத்தினைப் படிக்க வாய்ப்புகள் உள்ளன. எனினும், படிப்பவர்கள் எந்த விதத்தில், எந்த கோணத்தில் படித்தாலும், அவரவர் கோட்பாட்டிற்கு ஏற்றார் போல் உட்கருத்துக்களை மாற்றமுடியாத வகையில், ஸித்தாந்தசைவக்கருத்தையே உணர்ந்து, அக்கருத்துக்களையே ஏற்கும் வகையில் இப்புஸ்தகம் அமைத்திருப்பது மிகச்சிறப்பு. நல்வகையில் புஸ்தகத்தை அமைத்துத்தந்த நூலாசிரியர் அவர்களுக்கு எனது மனமார்ந்த ஆசீர்வாதங்கள்.

மேற்படி நூலை வெளியிடும், சிவஸ்ரீ,காளிகாம்பாள் கோயில் மாமா அவர்களின் குமாரர்கள் **சிவஸ்ரீ.T.S.காளிதாஸ் சிவாசார்யார்** அவர்களுக்கும், அவரது ஸஹோதரர் **சிவஸ்ரீ.T.S.ஷண்முக சிவாசார்யார்** அவர்களுக்கும் அவர்கள் குடும்பந்தார் அனைவருக்கும் எனது பரிபூரண நல்லாசிகள்.

மென்மேலும் இதுபோன்று பலநூல்களை தயாரித்து வெளியிட்டு ஸித்தாந்தசைவ உலகிற்கு திருத்தொண்டு புரிய. ஆகமமாகி நின்று அன்னிப்பான் திருக்கச்சி ஏகம்பனின் திருத்தாள்களைப்போற்றி அமைகிறேன்.

க.ராஜப்பா சிவாசார்யர்

காஞ்சீபுரம்.

SIVASRI K. PITCHAI GURUKKAL

Chief Priest, Sri Karpaga Vinayagar Temple
Principal, Karpaga Vinayagar Veda Agama Vidhyalayam
Founder, Sivaneri Kazhakam
Secretary, Karpaga Vinayagar School,
Founder, Global Hindu Spiritual & Cultural Center
Pillaiyarpatti - 630 207, Sivagangai District, Tamilnadu, South India

உ

ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

வாழ்த்துரை

உலகில் அனைத்து அறிவுகளையும் தோற்றுவிப்பவராயும், அனைத்து ஞானங்களின் வடிவினராயும், அனைத்து தத்துவங்களுக்கும் மேலானவராயும், உலகத்திற்கு ஈசனாயும் நித்யமாயும் உள்ள சிவபரம்பொருள் ஆன்மாக்கள் உய்திபெற அவரால் வழங்கப்பட்டது வேதசிவாகமங்கள். யாகங்கள், தானங்கள், புனிதநீராடல் இவை கோடிக்கணக்கான முறை செய்த பலனை ஒரு லிங்கஸ்தாபனம் செய்து வழிபடுவதால் பெறலாம் என்பது சிவாகமம்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய், ஆனந்தமூர்த்தியாய், சர்வகால சான்நித்யராய் விளங்கும் பெருமானை உரு, அரு, அருஉரு நிலைகளில் திருக்கோயில்களில் எழுந்தருளச் செய்து வழிபடுதலே பிரதிஷ்டை, ஸ்தாபனம் என சிவாகமங்கள் கூறும் வழிமுறையாகும்.

இவ்வரிய, இனிய நூலில் ஆன்மார்த்த, பாரார்த்த லிங்கவடிவங்களையும், ஸ்தாவர, ஜங்கமம் எனும், அசையாத மற்றும் அசையும் திருமேனிகளைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார்.

Ph: 04577 - 290591 | H/P: 00919443362320 | E-mail: pitchaiamma@gmail.com

மேலும் அஷ்டபந்தனம் செய்யும் முறையையும், அஷ்டபந்தனம் செய்து வழிபடுவதால் ஏற்படும் பலன்களையும் இந்நூலில் படித்து உணரலாம். வேள்வித்தூணின் அமைப்பே சிவலிங்கவடிவம் எனவும், பாரதபூமியே சிவவடிவம் எனவும் நிறுவுகிறார்.

சைவாகமச்சீலராய் விளங்கும் இந்நூலாசிரியர் சோமசேகர சிவாச்சாரியார் அவர்கள் நமது சைவ உலகின் பெரும் பொக்கிஷம் என்றால் மிகையில்லை. மகாபலிபுரம் சிற்பக்கலைக் கல்லூரியில் திரு. கணபதி ஸ்தபதியுடன் இணைந்து ஆகம மற்றும் சிற்ப சாஸ்திரங்களில் உள்ள கலை நுணுக்கங்களை உலகறியச் செய்வதில் பெரும் முயற்சி கொண்டவர். அதன் தொடர்ச்சியாக இத்தகைய நூல்கள் வெளிவந்துக் கொண்டுடிருக்கின்றன.

சிவஸ்ரீ 'சிவாகம கலாநிதி' சோமசேகர அண்ணா அவர்கள் பணி தொடர்ந்து சிறக்கவும், இந்நூல் வெளிவந்து சைவ அன்பர்கள் பயன்பெறவும் எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமான் திருவடிகளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

K. Pitchai Gurukkal

சிவஸ்ரீ K. பிச்சைக்குருக்கள்
பிள்ளையார்பட்டி

சூலம்படை சுண்ணப்பொடி
சாந்தஞ்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை
முடிமேலது பண்டைக்
காலன்வலி காலின்னொடு
போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி
யூரின்நிலை யோர்க்கே.

–சம்பந்தர்

உ

ஸ்ரீகுருப்யோ நம:

சிவாகம துரந்தர, சிவாகம ஸார்வபௌம, சிவாகம வாசஸ்பதி,

சிவஸ்ரீ. ஸோ. சபேஸ சிவாசார்யர்

ஸ்ரீகைலாஸாச்ரம மஹாஸம்ஸ்தானம்,

ஞானாக்ஷீ ஸ்ரீராஜராஜேஸ்வரீ தேவஸ்தானம், பெங்களூரு.

வாழ்த்துரை

நல்லம் நமையாள்வாள் நல்லம் நகராளே. (திருநாவுக்கரசர்)

எம்பெருமான் உமையொருபாகன் தன்னுடைய ஐந்து முகங்களில், நான்கு வேதங்களையும், ஆறுசாத்திரங்களையும் தத்புருஷம், அகோரம், வாமதேவம் ஸத்யோஜாதம் முகங்களினால் அருளினார். ஈசான் முகத்திலிருந்து, 28 இறுபத்துஎட்டு, ஆகமங்களை அருளினார், கிராமம் தேடகம் முதல் நகரம் வரை, எவ்விதம் அமைப்பதுபற்றியும் ராஜதாஸி ரத, கஜ, துரக, பதாதி சேனைகள், ராஜ்ய பரிலனம், மனிமனின் வாழ்வுரிமை மனிதன் தன்னை அமையும் விதங்களையும் அருளினார். திருக்கோயில்கள் எந்தந்த இடத்தில் கிராமதேவதைகளையும், சிவவிஷ்ணு ஆலயங்களையும், எவ்விதம் அமைக்கனும் என்பதை அருளி, விமானங்கள், ராஜகோபுரம் லிங்கவகை, ப்ரதிஷ்டை, பூஜை, உத்ஸவம், ப்ராயச்சித்தம் வரை எவ்விதம் செய்யவேண்டும். செய்தால் என்ன பயன் என்பதையும் அருளினார், ஆலய, அமைப்பு, லிங்கவகை, விமானவகை, ஆலயதத்வபாவனை, லிங்கதத்வம் 20 வகை, லிங்கஸ்தாபனம், அஷ்பந்தனவகை, லிங்கங்களின் பெருமை வழிபாட்டு மகிமை, எல்லா தேவதைகளும் லிங்கத்தில் எவ்விதம் உண்டாயின. எவ்விதம் இருப்பார்கள், என்பதையும், விக்ரஹங்கள் தாள அளவுபடி வடிவம் அமைப்பும், மானாங்குலம், மாதநாங்குலம், தேஹலப்தாங்களையும் இதுகளினால் விக்ரமஹம் ஆலயம், வீடுகள், மாளிகைகள் அமைக்கணும் என்பதையும், நமது 25 இருப்பத்தைந்து விருதுகள் அடைக்கலம் அடைந்த நமது ஆசிரிய பெருந்தகை சிவ ஸ்ரீ விஜய. சோமசேகர சிவாச்சார்யர் அவருக்கே உரியமுறையில் தெளிவாக லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம் (ஆகமக்கோயில் அமைப்புமுறை பாகம்—2) எல்லோருக்கும் தெளிவாக புரியும்படியாக எழுதி இருப்பது நமது சைவ சிறாக்களுக்கும் நமக்கும் தெளிவு அடையசெய்து நன்மைபயிக்கும், உலகம் நன்மை அடையும் என்பதில் அய்யமில்லை இப்புத்தகம் நமது இல்லத்தில் இருந்தால் சிவனைவழிபடும் பயனை அடையும், பேராசிரியபெருந்தகை நூற்றாண்டு வாழ்ந்து இன்னும் பல நூல்களை வெளிகொணர நமது குருவான ஸ்ரீதுர்வாஸரையும் ஆன்மமூர்த்தியான ஸ்ரீசிவகாமஸுந்தரி உடனுறை சிதம்பரேச்வரனின் பாதம்பணிந்து ப்ரார்த்திக்கிறேன்.

நமஸ்காரம். சுபம்.

ஸோ. சபேஸ சிவாசார்யர், மயிலாடுதுறை, தமிழ்நாடு.

வழக்கறிஞர்.

S. அருணாசலம், B.A., B.L.,

கடலூர்

வாழ்த்துரை

ஏற்கனவே **"ஆகம கோயில் அமைப்பு முறை"** என்ற தலைப்பில் இதே ஆசிரியரால் ஒரு நூல் எழுதி வெளியிடப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக அதே தலைப்பில் இரண்டாவது பாகமாக **லிங்க ஸ்தாபனம், அஷ்டபந்தனம்** என்ற துணைத் தலைப்புகளிலே இந்த நூலானது எழுதப்பட்டிருக்கிறது.

லிங்க ஸ்தாபனம்

நூலுக்குள் செல்வதற்கு முன்பு இந்த நூலின் அவசியம் பற்றி சொல்லிவிடுகிறேன். ஒரு கிராமத்தில் அதிகம் படிக்காத ஒரு சிவாசார்யர் வசித்து வருகிறார். அவர் தினமும் கோயில் பூஜைக்கு செல்வார். ஒவ்வொரு கோயிலிலும் சிவலிங்கங்கள் வெவ்வேறு ரூபத்தில் இருப்பதைக் காண்பார். வெளியூர் கோயில்களுக்கு செல்லும்போதெல்லாம் அங்கும் பல லிங்க பேதங்களைக் காண்பார். சிலவற்றில் பட்டை பட்டையாக அமைப்புகள் இருக்கும், சிலவற்றில் முகத்தோடு கூடிய லிங்கம் இருக்கும். சிலவற்றில் சிறிய, சிறிய லிங்கங்களாக பல லிங்கங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இதையெல்லாம் பார்த்த பின்னர் இந்த வித்தியாசங்களைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு வருவது இயற்கை. இதே நிலையில் தான் இன்றும் ஆயிரக்கணக்கான ஆகம பாடசாலை மாணவர்களும், சிவாசார்யர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த நூல் ஒரு வரபிரசாதம் ஆகும்.

மேலும், பக்தர்கள் வந்து இந்த பேதங்கள் பற்றி கேட்கும்போதெல்லாம் அதற்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு சிவாசார்யர்களுக்கு உண்டு. ஆகவே, ஒவ்வொரு சிவாசார்யர் கையிலும் தவழ வேண்டிய ஒரு விலைமதிப்பற்ற பொக்கிஷம்

இந்த நூல் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இனி நூலுக்குள் செல்வோம்.

பொது

இந்த நூலில் சிவலிங்கம் சம்பந்தமான அனைத்து விவரங்களும் விரிவாக கூறப்பட்டுள்ளன. லிங்கத்தின் அமைப்புகள் பற்றி வேதங்களிலிருந்தும், உபநிடங்களிலிருந்தும், ஆகமங்களிலிருந்தும், திருமுறைகளிலிருந்தும் பல மேற்கோள்கள் காட்டப்பட்டிருப்பது நூலின் சிறப்பு அம்சமாகும். சிவலிங்கத்தின் பாணம், ஆவுடையார், பீடம் ஆகியவற்றின் அமைப்பு பற்றியும் நூலில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

லிங்க வகைகள்

ஸூக்ஷ்மலிங்கம் முதலான 5 வகை லிங்கங்களைப் பற்றியும் மண்ணாலான லிங்கங்கள், மரத்தாலான லிங்கங்கள், கல்லாலான லிங்கங்கள் ஆகியவை பற்றியும், கூறப்பட்டுள்ளதுடன் கல்லாலான லிங்கங்களின் 2 வகைகளான ஸ்தாவர வகை, ஜங்கம வகை ஆகியவையும் விளக்கப்பட்டுள்ளன. லிங்கத்தின் மேல்பாகம், நடுபாகம், அடிபாகம் என மூன்று பாகங்களாக பிரித்து அவற்றிற்கான விளக்கமும் கூறப்பட்டுள்ளது. மேலே சொன்ன லிங்க வகைகளோடு மட்டுமல்லாமல் ஸ்வயம்புலிங்கம், தெய்வீகலிங்கம், திவ்யலிங்கம், ஆர்ஷலிங்கம், பாணலிங்கம், மானுஷலிங்கம் ஆகிய லிங்க வகைகள் பற்றி பல தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

எல்லாம் லிங்கமயம்

ஆலயத்தின் விமான வடிவமே லிங்கத்தின் அமைப்பை ஒத்து உள்ளது என்றும் ஆலயத்தில் பிரதிமைகள் லிங்க அமைப்போடு தொடர்பு உடையவை என்றும் லிங்கத்தின் பீடத்திற்கும், லிங்க அமைப்பிற்கும் உள்ள தொடர்பு பற்றியும், நம் உடம்பின் பாகங்கங்களோடு லிங்கத்தின் அமைப்பு எப்படி தொடர்பு உடையது என்பது பற்றியும் விவரமாக அலசி ஆராயப்பட்டுள்ளது. ஆவுடை சம்பந்தமான விவரங்களும், பீடத்தின் வகைகளும்

விரிவாக கூறியிருப்பதோடு மட்டுமல்லாமல் முறையற்ற அளவுகளில் லிங்கம் அமைந்தால் என்ன பின்விளைவுகள் ஏற்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

சிவலிங்கம் உள்ள ஆலயங்களின் கதவுகளின் அமைப்பு நந்திதேவரின் அமைப்பு, பலிபீடத்தின் அமைப்பு, கொடி மரத்தின் அமைப்பு, பிரபையின் அமைப்பு, திரைசீலையின் அமைப்பு, விளக்கின் அமைப்பு ஆகியவை லிங்க அமைப்புடன் தொடர்பு படுத்தி விவரமாக கூறப்பட்டுள்ளன.

வாத்திய விசேஷங்கள், பஞ்சபூத ஸ்தலங்கள், பஞ்ச சபைகள் பற்றியும் விவரங்கள் உள்ளன. இறுதியாக மானுஷ லிங்கத்தின் உயர அளவு, பகுப்பு முறை மற்றும் ஐந்து வகை லிங்க பிண்டிகை, 96 வகை லிங்க பெயர்கள் ஆகியவை ஆகம மேற்கோள்களுடன் பட்டியலிட்டு கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக சிவலிங்கம் சம்மந்தமாக பல்வேறு விவரங்கள் நம்மை பிரமிக்க வைக்கின்றன. பாரத தேசத்தின் அமைப்பை லிங்கத்தின் வடிவத்தோடு ஒப்பிட்டிருப்பது ஆசிரியரது சிவபக்தியையும், தேசப்பக்தியையும் பரைசாற்றுகிறது என்று சொன்னால் அது மிகை ஆகாது.

லிங்க பிரதிஷ்டை முறை

தலைப்பிற்கு ஏற்றாற்போல பிரதிஷ்டா க்ரியைகள், ஸ்தாபன முறையில் ஐந்து பேதங்கள் எவை, எவை நவலிங்க ஸ்தாபனம், சதலிங்க ஸ்தாபனம், ஸஹஸ்ரலிங்க ஸ்தாபனம் ஆகியவை பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. நவரத்ன லிங்க லக்ஷணம், லிங்கார்ச்சனை விதி, நவரத்ன லிங்க பலன், உலோக லிங்கம், நவ தாதுலிங்கம் ஆகியவை பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளன.

அஷ்டபந்தனம்

இந்தப் பகுதியில், அஷ்டபந்தன மருந்தை சாத்தும் முறைகள் பற்றி முதலில் கூறப்படுகிறது. பின்னர் ஏகபந்தனம், த்ரிபந்தனம், பஞ்சபந்தனம் ஆகிய மூன்று பந்தன வகைகள்

கூறப்பட்டுள்ளன. அஷ்டபந்தனம் என்பது எட்டு பொருள்களின் கலவை என்று குறிப்பிடப்படுகிறது. பந்தன வகைகளில் ஸ்வர்ணபந்தனம், உஷ்ண-சீத பந்தனம் மற்றும் மேலே குறிப்பிட்ட ஏகபந்தனம், த்ரிபந்தனம் ஆகியவை பற்றி விவரிக்கப்பட்டுள்ளன. அஷ்டபந்தனத்தை காய்ச்சியும், இடித்தும் சாத்தலாம் என்றும், காய்ச்சப்படுவது பக்குவம் என்றும், இடிக்கப்படுவது அபக்குவம் என்றும் கூறப்படுகிறது. அஷ்டபந்தன மருந்தின் எட்டு மூல பொருள்களின் பெயர்களும் தயாரிக்கும் முறையும் விரிவாக கூறப்பட்டுள்ளது.

பந்தனம் எதாவது ஒரு பகுதியில் நிறைவடையாமல் இருந்தால் என்ன கேடு விளையும் என்றும் விவரிக்கப்பட்டுள்ளது. அஷ்டபந்தனத்தின் தேவை, அது எப்போது சாத்தப்பட வேண்டும் போன்றவை பல ஆகம மேற்கோள்களோடு கூறப்பட்டுள்ளன.

இவ்வாறாக இந்த நூல் சிவலிங்கம் பற்றிய அனைத்து விவரங்களைக் கொண்டதாகவும், அஷ்டபந்தனம் பற்றிய முழுவிவரங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

இந்த நூலின் மூலம் ஆசிரியரின் ஆகமஞானமும், கருத்தாழமும், உழைப்பும் நன்கு வெளிப்படுகிறது. சமூகத்தின் மீது அவருக்கு உள்ள அக்கரையின் உந்துதலால் தான் அவர் இப்பணியினை ஏற்று திறம்படச் செய்துள்ளார்.

வாழ்க அவரது தொண்டு!

இதுபோன்ற பல நூல்களை அவர் எழுதிட இறைவன் திருவருள் புரிந்திட வேண்டும் என ப்ரார்த்திக்கிறேன். *வெளியீட்டாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்!*

நமஸ்காரங்கள்!

இப்படிக்கு,

S. Arunachalam

S. அருணாசலம்

Sthapati, Expert Committee
For HR & CE Department, Govt. of Tamilnadu

Managing Trustee
Vastu Vedic Trust
(Founded by Dr.V.Ganapati Sthapati – Padmabushan recipient)

Principal Architect
Vedic Architects and Sculptors

Kalaichemmal
Dr.K.Dakshinamoorthy Sthapati.Ph.D.
Hereditary Indian Traditional Architect and Sculptor

Phone : +91 99400 88401
Email : sthapati49@gmail.com
Website : www.sthapathi.info

28 அக்டோபர் 2023

பெருமதிப்புக்குரிய, பேரன்புக்குரிய ஆகம பிரவீனர், வியாகரண சிரோன்மணி என்றெல்லாம் போற்றுதற்குரிய, பேராசிரியர் சிவஸ்ரீ.விஜயதிருசோமசேகர சிவாச்சாரியார் அவர்களின் லிங்கஸ்தாபனம் பாகம் -2 என்னை பலமுறை படிக்க வைத்தது.

சிவாச்சாரியார் அவர்கள் ஆகமத்தில் பல நூல்களை எழுதியவை அனைத்தையும் படித்திருக்கிறேன். அன்னாரது ஆழ்ந்த ஆகம கலை ஞானமும் அதில் அய்யா அவர்கள் கொண்டிருக்கும் தெளிவான சிந்தனைகளும் என்னை அடிக்கடி வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றன. நிலையற்ற இவ்வுலகில் நமக்குப்பின்னரும் நிலையானவையாய் இருப்பவை நமது புத்தகங்களே என்று அடிக்கடி நாங்கள் பேசியதுண்டு.

வாஸ்து சாஸ்திர விவரங்களை கொண்டிருக்கும் ஆகம நூல்கள் அத்தனையையும் படித்து பாண்டித்தியம் கொண்டிருக்கும் அய்யா அவர்களின் இந்நூல் படித்த போது என்னைக் கவர்ந்ததும் ஒவ்வொரு மாணாக்கர்கள் அறியவேண்டியதையும் சுருக்கமாய் சொல்ல விரும்புகிறேன். இதில் நான் அறிந்த சிற்ப அறிவியலோடு சிலவற்றை கலந்தே சொல்கிறேன்.

லிங்கம் என்பது ஒரு அறிவியல் அடையாளம் என்பதை மிக அழகாக வர்ணிக்கிறார். லிங்கத்தின் மைய தூண் போன்ற பகுதியின் அடியை நாம் காணமுடியாது. அது தளத்திற்கு கீழே சதுர வடிவாக மறைந்திருக்கும். ஆனால் மேலே நாம் காணும் மைய தண்டு வட்டமாய் அமைந்திருக்கும். இடைப்பட்ட பகுதி எட்டுப்பட்டமாய் ஆவுடையாரின் உள்ளே மறைந்திருக்கும். அடிப்பகுதி சாத்விக குணத்தையும் நடுப்பகுதி ராஜஸ குணத்தையும் மேல் பகுதி தாமச குணத்தையும் குறிப்பிடுகிறது. லிங்கத்தின் முகத்தின் முன்புறம் மெல்லிய நூலிழை போன்ற தொங்கும் கோடு வரையப்பட்டிருக்கும். இந்தக்கோட்டுக்கு லக்ஷணோத்தாரம் என்று பெயர். இதுவே பிரும்ம சூத்திரம். இதை நன்கு நுட்பமாய் ஒவ்வொருவரும் கவனித்தல் அவசியம்.லிங்கத்தை வணங்கும் போது அது சொல்லும் அறிவியல் என்ன என்று உணர்ந்து வணங்கினால் நாம் கேட்பதை அந்த பரப்பிரம்மம் நிச்சயம் கொடுக்கும்.

இத்தகைய அரிய அறிவியல் கோட்பாட்டைத்தான் பல்லாயிரம் ஆண்டுகளாய் லிங்கவடிவம் தாங்கி உயர்ந்து நிற்கிறது. எங்களின் சிற்ப மரபில் லிங்கத்தை காலத்தூண் என்றும் மூலத்தூண் என்றும் பேசுவதுண்டு. தஞ்சை பெருவுடையார் லிங்கம் சுமார் 22 அடி தரையின் அடியிலிருந்து சிரோவர்த்தனம் என்ற உச்சிவரை உயரம் ஆகும் . லிங்கத்தின் குறுக்களவு 6 அடி. எப்படி இந்த மூலத்தூணை செதுக்கி நிற்க வைத்திருப்பர். சூக்குமமான கண்ணுக்குத்தெரியாத பிரும்மசூத்திரம் என்ற உயிர் நூல் ஸ்தூலமாக நமக்கு காட்டுவதற்கு நமது முன்னோர்கள் முயற்சித்த வடிவமே லிங்கம்.

ஆன்மாவானது அசைவற்றிருக்கும்போது சதுரமாய் சித்தரிக்கப்பட்டு அமைதி என்ற சாத்வீகத்தன்மையைக் காட்டுகிறது. சதுரம் மெல்ல சுழல்வது நமக்கு எட்டுப்பட்டமாக காணப்படுவதையே ராஜஸம் என்ற விரைந்து செயல் புரியும் தன்மையைக் காட்டுகிறது. அதிவிரைவை தாமசம் என்ற வட்டமான வடிவாய் தெரியப்படுத்துகிறது. இத்தகைய தன்மைகள் ஆன்மாவுக்கு உண்டு என்பதை பாத்ம சம்ஹிதை இதனை மிக அழகாக மீனின் நீச்சல், பறவையின் பறக்கும் வேகத் தன்மை இவற்றோடு ஒப்பிட்டு பேசுகிறது.

ஆன்மாவின் தன்மையை விவரிப்பதே லிங்கம் என்று ஆகம, வாஸ்து சாஸ்திரங்கள் நாகரம், திராவிடம், வேசரம் என்று சொல்லி கட்டும் கட்டடங்களுக்கும் ஜியோமிதி வடிவங்களாக சொல்லப்படுகின்றன. எனவே தான் உக்கிரத்தன்மையை வலியுறுத்த வட்டமான கட்டடங்களை கட்டலாம் என்று உணரவேண்டும்.காளியின் கோயிலுக்கு வட்டமான வடிவம் பொருத்தமானதாக இருக்கும்.

இன்னும் சற்று நுட்பமாய் ஆய்ந்தால் ஆன்ம துடிப்பில் ஏற்படும் அதிர்வுகளை இந்த லிங்கத்தில் காட்டியதை உணரலாம். இதயக் கமலத்தில் ஆன்மா அமைதியாயும், அசைந்தும் இருக்கும் இடமே சித் சபையாகும். மெல்லிய நடனம் எனப்படுவது ஆன்ம அசைவினை புலப்படுத்தும் எட்டுப்பட்டமாகும். விரைந்து ஆன்மா செயல் படும்போது ஒரு கட்டுப்பாடான துடிப்பு நடைபெறுகிறது. தொடர்ந்த ஒரு ஜதியுடன் உள்ள துடிப்பே ஆடல் எனவும் கூறலாம். இதுவே ஆனந்தக் கூத்து. எனவே தான் தஞ்சை லிங்கத்தை ராஜராஜன் 'ஆடல் வல்லான் என்று கல்வெட்டில் அழகாக சொல்கிறார். இப்படியாக லிங்க வடிவம் சொல்வதை சொல்ல பக்கங்கள் போதாது.

அன்னாரது புத்தகம் மாணாக்கர்களுக்கு, பூஜிப்போருக்கு, அறிவியலாளருக்கு , ஆய்வாளர்களுக்கு மிக்க பயனுள்ள நூலாக அமைந்திருக்கிறது. இந்த நூலை படித்து பலப்பல ஆய்வுகள் நிகழ்த்த இந்நூல் நன்னூலாக திகழவும் அனைவரும் பயன்பெற அன்னாரது சேவை இன்னும் தொடரவேண்டும் என்று வணங்கி மகிழ்கிறேன்.

முனைவர் கதட்சிணாமூர்த்தி

ஸகலாகம பண்டிதர்
Siva Sri Dr. S.P.SABHARATHNAM SIVACHARYAR , Ph.D
(Agama Project, Kauai Adhinam, Hawaii, US)
(Formerly, Professor of Tamil, Professor of Philosophy, University of Madras)
1/1B, Abhirami Apartments, Karpakambal Nagar, Mylapore, Chennai 600 004
Email: sabharathnam@gmail.com Cell: +91 90030 16571

உ

திருச்சிற்றம்பலம்

குருவருள்

ஆகமவித்யா ரத்னாகர
சிவஸ்ரீ. விஜய. சோமசேகர சிவாசாரியார்
அவர்கள் எழுதி அளிக்கும்
லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம்
எனும் சிரேஷ்டமான நூலுக்கு அணிந்துரை

"பழுதில் நிற்சொல் சொல்லி எழுதி
நித்தம் உண்மை பகர்வதற்கு நன்மை தருவாயே"

என ஓர் அருமையான வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறார் அருணை வள்ளல் அருணகிரிநாதப் பெருமான். பழுதில் நிற்சொல் என்பது முருகப்பெருமான் திருஞானசம்பந்தப் பெருமானாக வெளிப்பட்டு அருளியுள்ள திருப்பதிகங்களைக் குறிக்கின்றது. முருகப்பெருமான் சிவபெருமானுக்கும் அகத்திய முனிவருக்கும் உபதேசித்து அருளிய பெரும்பொருளையும் குறிக்கின்றது. இவ்விரண்டின் பெருமையைப் பற்றி நாள்தோறும் பேசவேண்டும்; நாள்தோறும் எழுத வேண்டும். அவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பெருமானின் நன்மைமிக்க திருவருள் அவசியம் வேண்டும்.

பழுதில் நிற்சொல் என்பது சிவபெருமான் உபதேசித்து அருளிய ஆகமங்களையும் குறிக்கும். சிவபெருமானின் வேறாகாதவர் முருகப்பெருமான் அல்லவா சிவாகமங்களில் திரண்டிருக்கும் திவ்வியமான கருத்துக்களைப் பற்றி நாள்தோறும் பேசியும் எழுதியும் நடைமுறைப் படுத்தியும் வருபவர்தாம் சிவஸ்ரீ சோமசேகர சிவாசாரியார். சிவாகமங்கள் தொடர்பாக அவர் சிறந்த நூல்கள் பலவற்றை ஏற்கெனவே அளித்துள்ளார்.

அவர் இப்பொழுது எழுதிச் சிவாசாரியார் அறக்கட்டளை வாயிலாக வெளியிடும் **லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம்** எனும் நூலில் சிவலிங்கம், சிவலிங்கஸ்தாபனம், சிவலிங்க பூஜை தொடர்பாகச் சிவாகமங்கள் பலவற்றிலும் கூறப்பட்டுள்ள கருத்துக்களும் விதிமுறைகளும் மிகமிகச் சிறப்பாகத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. எல்லா மரபினரும் அவசியம் ஆழ்ந்து பயின்று உணரத்தக்க அரும்பெரும் நூல் இது.

இதற்குமுன் அவர்களால் எழுதப்பட்ட ஆகமக் கோயில் அமைப்புமுறை எனும் விசேஷமான, விளக்கம் மிக்கதான, விழுமிய நூலின் இரண்டாம் பாகமாக இந்தநூல் அமைந்துள்ளது. இந்தநூல்கள் ஆலயங்கள், ஆலயங்களின் முக்கிய பிராண ஜோதியாக விளங்கும் பல்வேறு வகைப்பட்ட சிவலிங்கங்கள் ஆகியவைகளைப் பற்றி விரிவாகக் கூறும் கலைக்களஞ்சியங்கள் எனவே திகழ்கின்றன.

இந்த நூலில் கூறப்படும் ஆகமக் கருத்துக்களை நூலாசிரியர் ஒன்பது பகுதிகளில் 307 தலைப்புக்களில் நிரல்படத் திரட்டித் தந்திருக்கிறார். ஒவ்வொரு பகுதியும் சிவதத்வ நிதி எனும் சீரிய பெயருடன் திகழ்கிறது. ஒன்பது வகைப்பட்ட சிவதத்வ நிதிகள் இந்த நூலில் சிவவொளி காட்டித் திகழ்கின்றன.

ஸ்ரீதத்வநிதி எனும் சிறப்பான நூலொன்று உண்டு. அதனை எழுதியவர் மைசூர் மஹாராஜா ராஜஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் ஆவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சிறப்புமிகு கலைக்களஞ்சியம் அந்த நூல். சக்திநிதி, விஷ்ணுநிதி, சிவநிதி, பிரம்மநிதி, கிரஹநிதி, வைஷ்ணவநிதி, சைவநிதி, ஆகமநிதி, கௌதுகநிதி எனப்படும் ஒன்பது நிதிகள் அந்த நூலில் அடங்கியுள்ளன. ஒவ்வொரு நிதியும் ஒவ்வொரு சமுத்திரம் எனத் திகழ்கின்றது.

லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம்“ எனும் நூலும் **“கோயிலின் அருங்கலைக் கோலம்”** என்பது முதல் **“வழிபாட்டின் பயன்கள்”** என்பதுவரை ஒன்பது வகைகளாக விளங்கும் சிவதத்வநிதியைக் கொண்டு கலைக்களஞ்சியம் எனத் திகழ்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் நூலாசிரியர் தொகுத்துக் கூறியுள்ள கருத்துக்கள் ரத்தினங்களின் குவியல்கள் எனத் திகழ்கின்றன.

இந்த ரத்தினங்கள் பரப்பிக்கொண்டிருக்கும் விசித்திரமான பேரொளியில் அன்பர்கள் அனைவரும் மூழ்கித் திளைத்துப் பயன்பெற வேண்டும்.

நூலாசிரியர் மேலும் இதுபோன்ற ரத்தினக் களஞ்சியங்களைச் சைவாகமங்கள் எனும் ஆழ்கடலிலிருந்து திரட்டி எடுத்து அன்பர்களுக்கு வழங்கத் தில்லைச் சிற்றம்பலவனின் திருவருள் பரிபூரணமாக வாய்ப்பதாக.

அன்னார் எழுதி அளிக்கும் நூல்களைச் சிறப்பாக அச்சிட்டு வெளியிடும் சிவாசாரியார் அறக்கட்டளை, சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசாரியார் டிரஸ்ட் எனும் அமைப்புக்களை நிர்வகித்துக் கொண்டுவரும் சிவஸ்ரீ காளிதாஸ் சிவாசார்யார், சிவஸ்ரீ ஷண்முக சிவாசாரியார் ஆகியோர்க்கும் உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பர்க்கு அன்பன்

சபாரத்தினம்

உ
சிவமயம்

ஸ்ரீ மஹாசதாசிவ பீடாதிபதி

சிவஸ்ரீ.ஏ.வி.சுவாமிநாத சிவாசாரியார்

நிறுவனர்: சிவபுரம் கல்வி அறக்கட்டளை, மயிலாடுதுறை

No:32, Mayuranathar South Street, Mayiladuthurai, Tamilnadu, India- Pincode: 609001

email:avssivachariyar@yahoo.com website: www.sivapuramtrust.org

உ
சிவமயம்

அணிந்துரை

எல்லாம்வல்ல உமையொருபாகன் திருவருளையும் குருவருளையும் சிந்தித்து வணங்கி மகிழ்கிறோம்.

ஆகமம் என்ற சொல்லுக்கு சித்தாந்தம் என்பது பொருள். ஆன்மாக்கள் உய்யவேண்டி சிவபரம்பொருள் அருளியவை என்பதால் ஆப்தவாக்கியமுமாயிற்று. பேரின்பநிலையடைய ஆன்மார்த்த பரார்த்த பூஜைகளே வழியென முடிந்தமுடிபாகக்கூறுவதால் சித்தாந்தமாயிற்று. கர்ஷணம் ப்ரதிஷ்டை உற்சவம் ப்ராயச்சித்தம் என நான்கு விஷயங்களையும் காமிகாதி ஆகமங்கள் இருபத்தியெட்டும் இயம்புகின்றன. இவற்றில் இரண்டாவதாகிய ப்ரதிஷ்டை என்பதை குறித்தே மற்ற மூன்று தொகுதிகளும் அமைகின்றன. கர்ஷணம் என்றால் கோயில் கட்டும் நிலத்தை தேர்வு செய்தல் உழுதல், ஆலயம் அமைத்தல் முதலிய விஷயங்களை கூறுவதாகும். அமைக்கப்பட்ட ஆலய மூர்த்திகளுக்கு செய்யவேண்டிய விழாக்களை விரிப்பது உற்சவப்பகுதியாகும். இவற்றில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்படின் செய்யவேண்டிய பரிகாரங்களைக்கூறும் பகுதி ப்ராயச்சித்தமாகும். எனவே ப்ரதிஷ்டை என்ற கிரியையே முக்கியமானது. இதை முழுமையாக அறிந்தால் மற்ற பகுதிகளை எளிதில் அறியலாம்.

இனி; ப்ரதிஷ்டை நால்வகையானது. ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என்பன நால்வகை ப்ரதிஷ்டைகளாகும். இவற்றில் லிங்கம் அல்லது பிம்பங்கள் ஸ்தாபித்தலை ப்ரதிஷ்டை என ஆகமங்கள் கூறுகின்றன. மூர்த்திகளை ஸ்தாபித்தலில் அஷ்டபந்தனம் சாத்துதல் மிக அவசியமானது. அஷ்டபந்தனத்தில் குறைவு ஏற்படின் கெடுதியுண்டாகும் என ஆகமங்கள் கூறுகின்றன.

எனவே ஆகமங்கள் ஆலய அமைப்புமுறை கூறுவனவற்றை முதல் தொகுதியாக வெளியிட்ட சகலாகம ஞானசாகரம்

சிவஶ்ரீ விஜய. சோமசேகரசிவாசாரியார் அவர்கள் இரண்டாவது தொகுதியாக லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம் என்ற பெயரில் தொகுத்தெழுதி வெளியிடுவது சைவ உலகம் செய்த தவப்பயனேயாம் என்பதில் ஐயமில்லை.

லிங்கஸ்தாபனத்தை விரித்துக்கூறினால் அஷ்டபந்தன விதியையும் கூறுதல் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டே நூலாசிரியர் இவ்வாறு இந்நூலை வகுத்துள்ளார். ஒரு விஷயம் முழுமையாக ஆராய்ந்து எழுதப்படும்போது அதில் இயல்பாக நமக்கு எழும் எல்லா ஐயங்களுக்கும் விடைகிடைக்குமாறு அந்நூல் அமைவதை காணலாம்.

இந்நூல் புதிதாக ஆலயம் அமைப்பவர்களுக்கும் பழைய ஆலயங்களைப்புதுப்பிப்பவர்களுக்கும் உறுதுணையாகவிருக்கும் என்பதுடன் ஆகமபாடசாலையின் முதுநிலைக்கல்விப்பாடத்திட்டத்தில் கட்டாயப்பாடமாக வைக்க உதவும் என்பதை மகிழ்வுடன் சிந்தித்து இந்நூல் சிறப்பாக வெளியிடப்பட்டு சைவமணம் பரப்பிட வாழ்த்தியும், நூலாசிரியர் சிவஶ்ரீ. விஜய. சோமசேகரசிவாசாரியார் அவர்களுக்கு நன்றிகலந்த ப்ரணாமங்களை சமர்ப்பித்தும் எல்லாம்வல்ல உமையொருபாகனின் திருவடிகளை சிந்தித்தும் வாழ்த்தி மகிழ்கிறோம்.

இங்ஙனம்

VEDA SNAGAMA PARIPALANA SABA TRUST * SIVAPURAM
MAYURANATHAR SOUTH STREET
MAYILADUTHURAI

சிவஶ்ரீ.ஏ.வி.சுவாமிநாத சிவாசாரியார்,

மயிலாடுதுறை.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

–அப்பர்.

ஓம்
ஜெய் குருதேவ் சிவமயம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ப்ரசன்னா

சிவாகம விசாரதா – சிவாகம பிரவீணா – சிவாகம ஞானத்திலகம்

சிவஸ்ரீ.அவிநாசி.எஸ்.சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார்

குருத்துவம் – முதல் ஸ்தானிகம்

அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், அவிநாசி

முதல்வர், வேத ஆகம சம்ஸ்கிருத மஹா பாடசாலை, ஸ்ரீ ஸ்ரீ குருகுலம்

வேத விஞ்ஞான மஹா வித்யா பீடம்,சர்வதேச வாழும் கலை மையம், பெங்களூரு.

A.S.Sundara Murthy Sivam,

PRINCIPAL, VEDA AGAMA SAMSKRUTHA MAHA PATASHALA, THE ART OF LIVING INTERNATIONAL CENTRE,
SRI SRI GURUKULAM, 21ST KM, KANAKAPURA ROAD, UDAYAPURA, BENGALURU – 560 082
Contact: 080 67262851, 9008499833, E-Mail: srisrigurukulinfo@gmail.com/ assmsivam21@gmail.com

ஓம்
சிவமயம்

ஸ்ரீ குருப்யோ நம:

॥லிங்கஸ்தாபனம் – அஷ்டபந்தனம்॥

(ஆகமக்கோயில் அமைப்பு முறை பாகம் – 2)

॥நூல் வெளியீடு॥

அணிந்துரை

தூய விமானமும் தூலம் அதாகுமால்
ஆய சதாசிவம் ஆகும்நற் சூக்குமம்
ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே.

– திருமூலர், திருமந்திம், ஆறாம் தந்திரம் – 1718.

ஆதி நடு அந்தம் கடந்த நித்யானந்த ஜோதியாய் விளங்கும் உமையொருபாகன், ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் வண்ணமாக இப்பூமியில் அவனருளாளே அருளப்பட்ட ஆகமங்கள் வழி தோன்றிய ஆலயங்களில் அருள்பாலித்து வருகிறார். அவ்வாலயங்களில் அடி முடி இல்லா ஜோதிஸ்வரூபமான இறைவன், சிவலிங்கவடிவில் தோன்றி அருள்பாலித்து வருவது மிகச்சிறப்பாகும்.

சிவலிங்கமென்பது சிவமாகிய லிங்கம் எனப் பொருள்படும், 'சி' என்றால் சிவமாகிய நாதத்தையும், 'வ' என்றால் சக்தியாகிய பீடத்தையும் குறிக்கிறது. **नादं लिङ्गमिति ज्ञेयं बिन्दु पीठमुदाहृतम्** என்றவாறு நாதம் லிங்கமாகவும், பிந்து பீடமாகவும், நாதபிந்துக்கள் இணைந்ததாக சிவலிங்கம் திகழ்கிறது.

சிவலிங்கமானது அவ்யக்த லிங்கம் எனவும், வ்யக்தாவ்யக்த லிங்கம் எனவும், வ்யக்த லிங்கம் எனவும் மூவகைப்படும். பீடமும் லிங்கமுமாக இருப்பது **அவ்யக்தலிங்கம்,** லிங்கத்திலே முகமும் தோள்களும் வெளிப்படவிருப்பது **வ்யக்தாவ்யக்தலிங்கம்.**

எல்லா அவயங்களும் வெளிப்பட்டிருக்கும் சந்திரசேகரர் முதலிய 25 மகேஸ்வர வடிவங்கள் வ்யக்தலிங்கமாக லிங்கபேத வகைகளில் பலவாக கூறப்படுகிறது.

இவ்வாறு நாதபிந்துக்களாகவும், லிங்கபேதங்களாகவும், விளங்கக்கூடிய சிவலிங்கங்களை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படுவதே சிவலிங்கப்பிரதிஷ்டை ஆகும். சிவாகமங்களில் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்வதற்கு காலம், நேரம், அமைப்புமுறைகள் என பல விதிகள் கூறப்பட்டுள்ளது. அவ்விதிமுறைகளுள் ஒன்று **அஷ்டபந்தன** முறையாகும், அஷ்டபந்தனம் என்பது எட்டுவகையான பொருட்களைக் கொண்ட கலவை எனக் கூறப்படுகிறது, இதுவே ஏகபந்தனம், த்ரிபந்தனம், பஞ்சபந்தனம் என்றவாறு பலவகைகளில் கூறப்படுகிறது.

இவ்வாறு ஆலய நிர்மானத்திற்க்கு மிக முக்கியமாக திகழ்வது **சிவலிங்க ப்ரதிஷ்டையும், அஷ்டபந்தன முறையுமாகும்,** இவ்விரண்டு விஷயங்களையும் இணைத்து மிக அற்புதமாக அனைவருக்கும் புரியும் வகையில், சிவாகமத்திருக்கோயில்களை முறையே நிர்மானித்து ரக்ஷிக்கும் வண்ணம் **"லிங்கஸ்தாபனம் மற்றும் அஷ்டபந்தனம்" (ஆகமக்கோயில் அமைப்புமுறை பாகம் – 2)** என்னும் இந்த நூலை தொகுத்து வழங்கியுள்ள **நூலாசிரியர் ஆகம ப்ரவீணர், சைவாகம வித்வான், சைவாகமஜ்ஞ, ஆகம கல்பத்ரும சிவஜ்ஞ. விஜய. சோமசேகர சிவாசார்யார் M.A., குருமுதல்வர், சைவாகம கலாசார வித்யாகேந்திரம், அவர்களுக்கும் மற்றும் இந்த அருமையான புத்தகத்தை வெளியீடு** செய்யும் **சிவாசார்யர் அறக்கட்டளை & சிவஜ்ஞ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட்** உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது அன்பான நமஸ்காரத்தை தெரிவித்துக்கொண்டு,

மேலும் இந்த புத்தகம் சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோயில் ப்ரதான **அர்ச்சகர், சிவஜ்ஞ தி. ஸா. காளிதாஸ் சிவாசார்யார் அவர்களின்** ஜென்ம தினத்தன்று வெளிவரவிருப்பது மிக்க மகிழ்ச்சியுடனானதாகும், அவருக்கு என்னுடைய மனமார்ந்த வாழத்துக்களை தெரிவித்துக்கொண்டு, அனைவரும் இன்புற்று விளங்க எல்லாம்வல்ல திருப்புக்கொளியூர், அவிநாசி ஸ்ரீ பெருங்கருணாம்பிகை உடனுறை அவிநாசியப்பரை பிரார்த்தித்து அக மகிழ்கிறேன்.

இப்படிக்கு

A. S. சுந்தரமூர்த்தி சிவாச்சார்யர்

(ஏ. எஸ். சுந்தரமூர்த்தி சிவாச்சார்யர்)
பிரின்சிபால்,
வேத ஆகம ஸம்ஸ்க்ருத மஹாபாடசாலை,
பெங்களூரு– 560082.

12.10.2023
புரட்டாசி மாதம் –25
வியாழக்கிழமை

!! தென்னாடுடைய சிவனே போற்றி !! சுபம் !! எல்லாட்டவர்க்கும் இறைவா போற்றி !!

"Siddhanta Ratna"

Dr.V.Abhirama Sundaram, M.A., M.Phil., B.Ed., Ph.D.
Rtd. H.O.D., PG & Research Department of Sanskrit,
Ramakrishna Mission Vivekananda College, Mylapore, Chennai - 600 004
Ph. No.: 9176380764, 9444971104. Email address: abhiraman @yahoo.com

அணிந்துரை

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" – என்கிறது வள்ளுவம்.

விருப்பு வெறுப்பற்ற இறைவனின் திருவடிகளை என்றென்றும் போற்றி வழிபடுபவனுக்கு என்றும் எப்போதும் துன்பமில்லை என்பதும் இறைவனை போற்றி புகழ்ந்து வழிபடும் அன்பர்களுக்கு அவர்தம் அறியாமையால் சேர்த்த முற்பிறவி மற்றும் இப்பிறவியின் வினைப்பயன்கள் சேர்வதில்லை என்பதும், இவற்றின் பொருள் ஆகும். இவற்றின் வாயிலாக உலகப் பொதுமறை தந்த வள்ளுவர், இறைவழிபாட்டின் மூலமே நாம் நமது ஊழ்வினை பயன்களை களைந்து, மன அமைதியைப் பெற்று, வீடு பெற்றை அடைய முடியும் என்பதை அறுதியிட்டு உரைக்கிறார். இத்தகைய சிறப்பு பெற்ற இறைவழிபாட்டின் நிலைக்களமாக விளங்குபவை ஆலயங்களும், அதில் வழி வழியாக நடைபெற்று வரும் வழிபாட்டு முறைகளுமே ஆகும். இவ்விரண்டையும் நமக்குத் தெளிவாக விளக்க இறைவனால் அருளப்பட்டவையே சிவாகமங்கள். ஆகம முறைப்படியே ஆலயங்களை அமைக்க வேண்டும் என்பதையும், ஆலய வழிபாடுகள் ஆகமம் முறைப்படியே நடக்க வேண்டும் என்பதையும் சேக்கிழார் பெருமான் தனது பெரிய புராணத்தில், மனதிற்குள்ளேயே இறைவனுக்கு ஆலயம் அமைத்த திரு பூசலார் நாயனாரின் வரலாற்றின் ஊடே, மனதினால் அமைக்கப்பட்டாலும் அவ்வாலயத்தை ஆகம முறைப்படியே அமைத்துள்ளார் என்பதை

"சாதனத்தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக்கு ஆலயம் செய் நலம்பெறும் நன்னாள் கொண்டே

ஆதரித்து ஆகமத்தால் அடிநிலை பாரித் தன்பால்
காதலில் கங்குற் போதும் கண்படா தெடுக்கலுற்றார்" என்கிறார்

மேலும் அன்னை பார்வதிதேவி ஆகமமுறைப்படியே ஈசனைப் பூஜித்தார் என்பதை பின்வரும் அடிகளால் நிலைநிறுத்துகிறார்.

"இங்கு நாத நீ மொழிந்த ஆகமத்தின் இயல்பினால்
உனை அர்ச்சனை புரியப்
பொங்குகின்றது என் ஆசை என்று இறைஞ்சி
போகமார்த்த பூண் முலையினாள் போற்ற"

"கொய்த பன்மலர் கம்பை மா நதியில் குலவு
மஞ்சனம் நிலவு மெய்ப் பூச்சு
நெய் தரும் கொழும் தூப தீபங்கள் நிறைந்த
சிந்தையில் நீடிய அன்பின்

மெய் தரும்படி வேண்டின எல்லாம் வேண்டும்
போதினில் உதவ மெய்ப் பூசை
எய்த ஆகம விதி எலாம் செய்தாள் உயிர்கள்
யாவையும் ஈன்ற எம் பிராட்டி" என்றும் கூறுகிறார்.

திருநீலநக்க நாயனாரைப்பற்றி குறிக்கும் பொழுது,

"மெய்த்த ஆகம விதிவழி வேதக் காரணரை
நித்தம் பூசனை புரிந்தெழு நியமமும் செய்தே" என்கிறார்.

இவ்வரிகளின் மூலம், ஆலயங்கள் ஆகமமுறைப்படி நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என்பதும், அதில் வழிபாட்டுமுறைகளும் ஆகமவழி பற்றியே அமையவேண்டும் என்பதும், திருமுறைகளின் முடிந்தமுடிவு எனத் தெளிவாகிறது.

இத்தகைய சீர்மிகு ஆலயங்களின் அமைப்புமுறைகளை ஆகமச் சான்றுகளுடன் **"ஆகமக்கோவில் அமைப்பு முறை"** எனும் முதல் பாகத்தில், ஆலயவகைகள், அதன் ஆறுஅங்கங்கள், அவைகளின் விளக்கம், விமானம், கருவறை, மண்டபங்கள், அவற்றின் வகைகள், மற்றும் அளவுகள், ப்ராகாரங்கள், அவைகளின் வகைகள், பரிவார தேவதைகளின் ஆலயங்கள், அவைகளின் விவரங்கள் முதலியன விரிவாக தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக. **"லிங்க ஸ்தாபனம் அஷ்டபந்தனம்"** எனும், இந்த இரண்டாவது பாகத்தில், ஒன்பது பகுதிகளில், ஸ்தாபனமுறைகள் விரிவாக ஏறத்தாழ 330 தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

அவைகளில் முதல் பகுதியில், கோவிலின் அருங்கலைக்கோலம் என்கிற தலைப்பில், ஆலயத்தின் அளவுகள், ஆலயத்தின் வகைகள் ஆலய அமைப்பின் நோக்கம், ஆலயத்தின் தத்துவம் ஆலய

வழிபாட்டின் ஆவணியகம், ஆலய அமைப்பின் அடிப்படை நூல்கள் அமைப்புமுறைகள் முதலியவைகளும்,

இரண்டாவது பகுதியில், லிங்கவகைகள் மற்றும் அவைகளின் அமைப்பு முறைகள், ஆத்மார்த்த பூஜை லிங்கங்கள் மற்றும் லிங்கஉருவமே பாரததேசம் போன்ற தலைப்புகளில் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மானுஷ்ய லிங்கங்களின் வகைகள் ஆகியவைகளும்,

மூன்றாவது பகுதியில், லிங்க உருவ இலக்கணம், லிங்கவகைகள், லிங்கத்தின் மூன்று பாகங்கள், அவற்றின் உருவ இலக்கணங்கள், பாணத்தின் பல்வேறு வடிவங்கள், பாணத்தில் உள்ள பலவகைக் குறிகளின் அமைப்புகள் மற்றும் அதன் குறிப்புகள், ஸஹஸ்ர லிங்கத்தின் அமைப்புமுறை. 96 வகைகளும் பெயருடன் கூறப்படுகின்றன.

பிண்டிகை எனும் ஆவுடையின் உருவஇலக்கணமும், அதன் 10வகை மற்றும் ஐந்து வகைகளைப் பற்றிய குறிப்புகளும், அதன் வகைகளின் அட்டவணையும், தத்துவவிளக்கங்கள் நான்காவது பகுதியிலும்,

லிங்கஸ்தாபன விதிமுறைகள், ஸ்தாபனவகைகள், ரத்ன ந்யாஸாதிகள், ப்ரதிஷ்டா க்ரியையின் தத்துவம் முதலியவை ஐந்தாவது பகுதியிலும்,

அஷ்டபந்தனம், ஏழுவகையான பந்தனமுறைகள், அவற்றில் பயன்படுத்தப்படும் பொருட்களின் பட்டியல், மற்றும் அவைகளின் அளவுகள் முதலியன ஆறாவது பகுதியில் கூறப்பட்டுள்ளன. அதே பகுதியில் அஷ்டபந்தனம் விலகுவதால் ஏற்படும் தீமைகளும், அதற்காக செய்ய வேண்டிய பரிஹாரங்களும் கூறப்பட்டுள்ளன.

ஏழாவது பகுதியில், ஆலய உருவத்தின் தத்வவிளக்கம், ஆலயஅமைப்பின் தத்வங்கள், ஆலயஅமைப்பின் மூன்றுநிலைகளான, நின்றநிலை, கிடந்தநிலை, அமர்ந்தநிலை முதலியன, ஆலயங்களின் அங்கங்களான நந்திதேவர், பலிபீடம், கொடிமரம் முதலியவைகள், அவற்றின் வகைகள், மற்றும் அளவுகள், அவற்றின் தத்வவிளக்கங்கள், ஆலயத்தின் கருவறையில் இருக்கக்கூடிய திரைச்சீலை, திருவிளக்கு, திருவாசி, ஆலயவழிபாட்டின் பொழுது இசைக்கப்படும் வாத்தியங்களின் வகைகள், அவைகளின் முக்யத்வம் ஆகியவைகளும், திருமுறைகளில் காணப்படும் கோயில்களின் வகைகளும் அரியபல சிவத்தலங்களின் குறிப்பும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளன.

எட்டாவது பகுதியில் சிவலிங்கஸ்வரூபத்தில் பலவகையிலான தத்வபாவனைகள், லிங்கசப்தத்தின் விளக்கம் மற்றும் விவரங்கள், லிங்கவடிவத்தின் நிஷ்களநிலை விவரங்கள், அதற்கான பரதத்வ விளக்கங்களும் கூறப்பட்டுள்ளன.

ஒன்பதாவது கடைசிப் பகுதியில், ஆலயவழிபாட்டின் பயன்களையும், மூல மூர்த்தியின் பெருமைகளையும், பரிவார வழிபாட்டின் ஆவச்யகத்தையும், விரதகாலமண்டல பூசைகளையும் வழிபாட்டின் தத்துவங்களையும் விளக்குவதாக, முடிவுரையுடன் இந்நூல் இனிதே நிறைவேறுகிறது.

இந்நூலின் தொகுப்பாசிரியர் **சிவஸ்ரீ. ஸோமசேகர சிவாசார்யார்** அவர்கள் இதுகாறும், இதுபோன்ற கருத்தாழமிக்க பலநூல்களை சிறப்பாகவும், சீரியமுறையிலும் இயற்றிஇருப்பவர். இந்நூலின் முதல் பக்கம்முதல் கடைசிபக்கம்வரை, **சைவாகமம் மற்றும் சிற்பசாஸ்த்ரத்தில்** தொகுப்பாசிரியரின் நுண்ணியஅறிவும், ஆழ்ந்தபுலமையும், பழுத்தஅனுபவமும் பளிச்சிடுகின்றது. இந்நூல் ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும், சைவஸித்தாந்திகளுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. இதுபோன்ற அற்புதநூல்களை இடையறாது பதிப்பித்து, ஆகம அறிஞர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள், மற்றும் சைவ ஸமயத்தில் பற்றுள்ள அனைவரும் பயன்பெறும் வண்ணம், அரும்பணி ஆற்றி வரும் சிவாசார்யார் அறக்கட்டளை நிர்வாகத்தினரான, **சிவஸ்ரீ காளிதாஸ் சிவாசார்யார், முனைவர் சிவஸ்ரீ ஷண்முக சிவாசார்யார்,** மற்றும் **தெய்வத்திரு ஸாம்பமூர்த்தி வாசார்யார் குடும்பத்தினர் அனைவருக்கும்,** சிவாசார்யஸமூஹம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. தொகுப்பாசிரியரும், பதிப்பாளர்களும், நம் ஸனாதன தர்மத்தை தொடர்ந்துப்ரசாரம்செய்ய, அவர்களுக்குநலமான, வளமானவாழ்வையும், நோயற்றநீண்டஆயுளையும்நல்கவேண்டி, அன்னைகாளிகாம்பிகையின் பொற்பாத கமலங்களை தொழுதேத்தி அமைகிறேன்.

நன்றி.

முனைவர். வீ. அபிராமஸுந்தர சிவம்.

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. –சம்பந்தர்

Dr. தி. கணேசன், M.A., M.Phil., Ph.D.,
சைவாகம சைவசித்தாந்த மூத்த ஆராய்ச்சியாளர்,
பிரெஞ்சு இன்ஸ்டிடியூட், புதுச்சேரி
இயக்குநர், சைவ ஆராய்ச்சி மையம், புதுச்சேரி.

அணிந்துரை

சிவபெருமானைப் பரம்பொருளெனப் பேசும் வேதங்கள் அவருக்கான மந்திரங்களையும் பல தோத்திரங்களையும் அருளியுள்ளன. சைவாகமங்கள் அவற்றை மேலும் விரித்து வழிபாட்டு முறைகளை விளக்கி, மந்திரங்களையும், சிவலிங்கத்தின் மஹிமை, ஆற்றல், அவற்றின் வகைகள், அந்த லிங்கங்களை முறைப்படி பிரதிஷ்டை செய்து வழிபடுவதற்கான ஆலயங்களைப் பற்றிய பல குறிப்புகளையும் செய்திகளையும் நமக்குத் தருகின்றன.

இந்த அனைத்துச் செய்திகளையும் சைவாகமங்கள், சிற்பநூல்கள் ஆகியவற்றிலிருந்து திரட்டி, தலைப்புகளை வரிசைப்படுத்தி முறையாக நமக்கு அளிக்கின்றது **லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம் (ஆகமக்கோயில் அமைப்புமுறை பாகம் 2).**

சிவலிங்கங்களை ஆலயத்தில் தாபித்து வழிபாடாற்றுவதின் தனிச் சிறப்பு, ஆலயங்களை அமைக்கும் முறை, அளவுகள், சிவலிங்கத்தின் வகைகள், சிவலிங்கமானது வேதவேள்விகளில் நாட்டப்படும் யூபஸ்தம்பங்களின் (வேள்வித்தூண்களின்) வடிவத்தை ஒத்திருக்கும் தன்மை, சுதைச் சிற்பங்களின் உள்ளே லிங்கவடிவில் சூலம் அமைத்தல் முதலான பல முக்கிய செய்திகளை நூலாசிரியர் மிகவும் முயன்று தக்க ஆதார நூல்களின் மேற்கோள்களின் அடிப்படையில் நமக்குக் விளக்குவது இந்நூலின் மற்றொரு சிறப்பு அம்சம். மேலும், சிவலிங்கங்களுக்கு பந்தனம் அமைத்தல், த்ரிபந்தனம், அஷ்டபந்தனம் ஆகியவற்றின் வகை, லிங்கங்களுக்கேற்ற பந்தனம், அஷ்டபந்தனத்தின் வகைகள், அதன் முக்கியத்துவம், மனித உடலுக்கும் ஆலய அமைப்புக்கும் உள்ள தொடர்பு, மூலலிங்கம், விருஷபதேவர் ஆகிய மூர்த்திகளின் அடிப்படைத் தத்துவங்கள் என அரியனவும், இன்றைய காலத்தில் மக்கள் அவசியம் அறிந்துகொள்ள வேண்டியனவுமாகிய பல முக்கிய செய்திகளை சிவஸ்ரீ. ஸோமசேகரசிவாசாரியார் அவர்கள் ஆதார நூல்களிலிருந்து திரட்டி அவற்றைத் தொகுத்து எளிதில் எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் நமக்கு

வழங்கியிருப்பது மிகவும் போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரியது. இந்நூலாசிரியர் இத்தகைய சிறப்பான பணியை மேற்கொண்டதற்காக ஸநாதனதர்மத்தைப் பின்பற்றும் நாம் அனைவரும் அவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

இப்படிப்பட்ட நூல்கள் பாரதநாட்டின் மற்ற மொழிகளிலும், மேலைநாட்டார்களும் அறிந்து கொள்ளும் வண்ணம் ஆங்கிலத்திலும் மொழியாக்கம் செய்யப்பட வேண்டும்.

வருங்காலத்தில் மேலும் இம்மாதிரியான நூல்களை ஆசிரியர் சிவஶ்ரீ. ஸோமசேகரசிவாசாரியார் இயற்றி சைவத்திற்கும் சைவர்களுக்கும் பெரும் தொண்டாற்ற வேண்டும் என்னும் கோரிக்கையை முன் வைத்து ஸோமசேகரப் பெருமான் அன்னாருக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அருள வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறேன்.

தி. கணேசன்
புதுச்சேரி



கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழில்நுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதல்நீங்கி
செங்கால்நன் வெண்குருகு பைங்கானல்
இரைதேருந் திருவையாறே. –சம்பந்தர்

ஓ
ஸ்ரீ குருப்யோ நம:
வந்தன் பாதம் கனிவுறும் துணை செய்யும்

சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி
சிவஸ்ரீ S.K. ராண பட்டர் (எ) சந்த்ரசேகர பட்டர்
ஸ்தானிகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி - ஸுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
முதல்வர், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.
66, சன்னதிதெரு, திருப்பரங்குன்றம்.

03.11.2023

வாழ்த்துரை

"ஆகமங்கள் இல்லையேல் ஆலயங்கள் இல்லை" என்று சொல்லத்தக்க அளவிற்கு ஆகமங்களுக்கும் ஆலயங்களுக்குமான தொடர்பை நம்மால் காணமுடிகிறது.

சைவம், வைணவம், சாக்தம், ஸௌரம், பௌத்தம் போன்ற எல்லா சமயக்கோட்பாடுகளையும் விளக்கும் நூல்களாகிய அவ்வச் சமயத்துக்கான ஆகமங்கள் அவ்வச் சமய ஆலயங்களுக்கான அமைப்புமுறையையும், பூஜைமுறைகளையும் விளக்குகின்றன. அவ்வகையில் நம் பாரததேசத்தில் இருக்கின்ற சம்பிரதாயங்கள் அனேகம். மேலோட்டமாகப் பார்த்தால் ஒன்றுபோலத் தோன்றும்; இவற்றுள் வித்யாசங்கள் மிக அதிகம். வித்யாசங்களே அவற்றின் தனித்தன்மை.

ஆனால் இவற்றையெல்லாம் உணர்ந்துகொள்ளாமல், உணர்ந்துகொள்ள முயலாமல் எல்லாவற்றையும் ஒன்றாக ஆக்கும் முயற்சிகள் பலராலும் பலவகையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே சமயங்கள், சமயநூல்கள், சமய ஆலயங்கள் ஆகியவற்றின் தனித்தன்மையின் அவசியத்தை தனித்தனியே எடுத்து விளக்கவேண்டிய ஒரு அவசர –அவசிய காலக்கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

இந்நிலையில் அத்தேவையைப் பூர்த்திசெய்யும் விதமாக பேராசிரியர் சிவாகம வித்வான் சிவஸ்ரீ விஜய. ஸோமசேகர சிவாசார்யார் அவர்கள் சென்ற ஆண்டு வெளியிட்ட "ஆகமக் கோயில் அமைப்பு முறை" – *(ப்ராஸாத-கல்பந-ப்ரகார:) (பாகம்-1)* என்ற நூலில் சித்தாந்தசைவ ஆகமங்களின் அடிப்படையில் அமைந்திருக்கின்ற ஆலயங்கள் எவை? என்பதை அனைவரும் விளங்கிக்கொள்ளும் வண்ணம் அமைத்துத் தந்திருந்தார்கள்.

அந்நூலின் தொடர்ச்சியாக சைவ உலகிற்கு பெரும்பயனளிக்கும் வகையில் இரண்டாவது பாகமாக 'லிங்க ஸ்தாபனம் அஷ்டபந்தனம்' எனும் பெயரில் வெளியிடுவதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நூலினுள் சிவதத்வநிதி என்று தலைப்பிட்டு நூலை ஒன்பது பாகங்களாகப் பிரிக்கிறார்.

ஆசார்யர் அவர்கள் முதலில் கோயிலின் அருங்கலைக் கோலம் என்னு தலைப்பில் திருக்கோயில்களைப் பற்றி மிக விரிவாக கூறிவிட்டு, லிங்கவகைகள், லிங்க அமைப்புமுறைகள், பிண்டிகை(பீடம்) என்று சொல்லப்படும் ஆவுடை பற்றியும், லிங்கஸ்தாபன விதி, அஷ்டபந்தன மருந்து சாற்றும் முறைகள், ஆலயாங்க தத்வரூபவிளக்கம், லிங்கதத்வரூப பாவனை முறைகள், வழிப்பாட்டின் பயன்கள் என ஒன்பது விதமான தலைப்பிற்குள் பல்வேறு துணைத் தலைப்புகள் இட்டு விஷயங்களைத் தொகுத்து வழங்கியிருக்கிறார்.

நூல் முழுவதும் பல்வேறு விளக்கப் படங்களுடன் விஷயங்களை விளக்கியிருப்பது படிப்பதற்கு புரிந்து கொள்வதற்கு மிக எளிதாக இருக்கிறது.

சைவத் திருக்கோயில் ஒன்றிற்கு நாம் சென்றால் எந்த பதங்களில் எந்த தேவதைகள் ப்ரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளனர்? எந்தவகையான லிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன? என்பது போன்ற பல விஷயங்களை நாம் எளிதில் உணர்ந்துகொள்ளும் வண்ணம் அமைந்துள்ள இந்நூல் சித்தாந்தசைவ மரபினைச் சார்ந்த அனைவருக்கும் பெரிய பொக்கிஷம் எனலாம்.

எது ஆகமக்கோயில் என்பதையும், ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள லிங்கங்கள் எந்த வகையைச் சார்ந்தவை என்பதையும் கண்டறிய முயற்சிக்கும் ஆய்வாளர்களுக்கு இந்நூல் ஒரு கையேடாக அமையும்.

காலவெள்ளத்தால், மாற்றத்தால், அரசு அதிகாரத்தால் தனித்தன்மையை இழந்துநிற்கின்ற பல்வேறு சம்பிரதாயங்களின் வரிசையில் சித்தாந்த சைவ ஆலயங்கள் சேர்ந்துவிடாமல் காக்கும் அருமருந்து இந்நூல் என்றால் மிகையில்லை.

ஆகமக்கோயில் கலைக்களஞ்சியம் போன்ற இந்நூலை சைவர்கள் அனைவரும் பெற்றுப் பயனடையவேண்டும்.

நூல் நல்லமுறையில் வெளிவந்து பயனளிக்க மதுரையம்பதியில் வீற்றிருந்தருளும் அங்கயற்கண்ணி உடனமர் ஆலவாயண்ணல் சொக்கநாதப் பெருமானின் திருவடி மலர்களையும், பரங்குன்றப் பரமன் தெய்வானை மணாளன் முருகக் கடவுளின் இணையடி மலர்களையும் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

பேரன்புடன்

திருப்பரங்குன்றம்

Dr. R. Sathyanarayana Sarma
Śiromani, M.A., M.Phil. Ph.D.
Associate Professor

आर्याः, विद्वद्वरेण्याः, शिवज्ञानपीयूषपायिनः,

नित्यनिर्मलनिरतिशयज्ञानक्रियारूपः परमकरुणामूर्तिः महेश्वरः निष्कल, सकल, सकलनिष्कलरूपेण सर्वेषां जनानाम् अनुग्रहं कुर्वन् सदा विराजन्ते। उमापतिः सर्वत्र विद्यमानोऽपि भक्तानामनुग्रहार्थम् आलयेषु प्रतिष्ठाप्य पूज्यते। तादृशा आलयाः कथं निर्मातव्याः, तेषां प्रमाणानि इत्यादि विविधविषयाः शैवागमेषु दृश्यन्ते।

यत्र लिङ्गं पूजाहीनं दृश्यते, तत्र दुर्भिक्षम् अनावृष्टिः इत्यादि दोषाः सञ्जायन्ते। यः मार्गे पुष्पहीनं लिङ्गं दृष्ट्वा अभिषिच्य पत्रं पुष्पं वा समर्पयति, सः अश्वमेधवाजपेयादिकरणेन यत्फलं लभते तावत्फलं लभते इति अजितमहातन्त्रे [क्रियापाद 30:17b – 22b] निरूपितम्।

लिङ्गे देवो महादेवः साक्षादेव प्रतिष्ठितः। अनुग्रहाय लोकानां तस्माल्लिङ्गं समर्चयेत्॥

लिङ्गं यत्र भवेद्राष्ट्रे पूजाहीनं चिराय वै। तत्र व्याधिश्च दुर्भिक्षमनावृष्टिश्च जायते॥

प्रवासी पथि दृष्ट्वा तु पुष्पहीनं तु मस्तकम्। शिवलिङ्गस्य गच्छेच्चेत्सर्वपापनिधिर्भवेत्॥

तस्मात्पूजाविहीनं तु लिङ्गं दृष्ट्वा पथि स्थितम्। स्नाप्य पुष्पं च पत्रं वा शिवस्याधार्यं यो व्रजेत्॥

अश्वमेधसहस्रस्य वाजपेयशतस्य च। स पुण्यं लभते मर्त्यो नात्र कार्या विचारणा॥

आगमरीत्या आलयाः कथं निर्मातव्याः, तेषां प्रमाणग्रन्थाः, आलयाणां विविध प्रकाराः, विमान भेदाः, परिवार देवताः, तेषां स्थापन प्रकाराः, मण्टपाः, गोपुराणां रूपाणि इत्येतत्सर्वं (*ஆகமக்கோயிலமைப்புமுறை பாகம்* 1) प्रथम भागे निरूपितम्।

इदानीम् अत्र द्वितीय भागे, आलयानां आवश्यकता, तेषां निर्माणं, मण्डपप्राकारादीनां लक्षणं, तत्र प्रतिष्ठीयमान लिङ्गानां विग्रहाणां च भेदाः, तेषां लक्षणं, मानं, पिण्डिका भेदाः, अष्टबन्धन प्रकाराः, अष्टबन्धनाद्यकरणे फलहीनता, प्रतिष्ठायाः कालः, एतत्सर्वं – यदिहास्ति तदन्यत्र यन्नेहास्ति न तत्कचित् इतिवत् – लिङ्गलक्षणादारभ्य सदाशिवतत्त्वपर्यन्तं सर्वं मूलागमेभ्यः आरभ्य पद्धतिग्रन्था यावत् सप्रमाणं निरूपिताः। अयं ग्रन्थः "*லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம்* (*ஆகமக்கோயிலமைப்புமுறை பாகம்* 2)" न केवलं आलय पूजाकर्तृणाम् उपकाराय अपि तु ये शिवशास्त्रं ज्ञातुं उत्सुकाः अपि च इतरशास्त्र पण्डिताः अपि अमुं ग्रन्थं उपयुज्य शिवज्ञान

वेत्तारः भवेयुरिति न संशयलेशः। यथा पद्धति ग्रन्थाः प्रत्येकस्य विषयस्य निर्णयार्थं मूलागमेभ्यः प्रमाणं प्रदर्शयन्ति एवमेव एते महाशयाः शिवश्री विजय सोमशेखरशिवाचार्याः शास्त्रेषु कृतभूरिपरिश्रमाः सकलागम निष्णाताः स्वशास्त्रनियताभ्यासाः आचारशीलाः अपि विविध शैवशास्त्र ग्रन्थान् आलोड्य लिखितवन्तः। तैः क्रियमाणा शिवज्ञानसेवा प्रतिदिनं वर्धतामभिवर्धताम् इति परमकल्याणमूर्तिं भवानीशङ्करं संप्रार्थ्य प्रामोदः आविष्क्रियते।

रा. सत्यनारायणः

शोभकृन्नाम संवत्सर भाद्रपद बहुल द्वादशी बुधवासरः



கண்காட்டு நுதலானுங்
கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும்
பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும்
பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும்
விடைகாட்டுங் கொடியானே. –சம்பந்தர்

உ

ஸ்ரீ குருகடாக்ஷவும்

சிவாகமசிரோமணி சிவாகமகலாநிதி சிவாகமவாசஸ்பதி

கோ.சோ. பாலசுப்ரஹ்மணிய சிவாசார்யர்

புண்யக்ஷேத்ரம் சுவாமிமலை,

முதல்வர் ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடம்,

வைதிகாகமபாடசாலை, உடையாளூர்.

தலைவர், ஆகமலல்லுனர் குழு. கும்பகோணம் 9842134803

லிங்கஸ்தாபனம்-மகிழ்வரைவு

அனைத்து உயிர்களும் பிறவிப் பெருங்கடல் நீந்தி இறையருளால் மாயப்பிறப்பறுத்தலை அடைவது அவரவர் பிறப்பின் நோக்கமாகும். ஆன்மாக்களின் நலனுக்காக, தானே முன்தோன்றியாக, நேயத்தேநின்ற நிமலன் சிவபெருமானேயாவார். அவனருளால் அவன் அடிபோற்றிப் பணிந்து இக பர நலம் பெறுவது, அறிவார்ந்த ஞானவான்களான நம் முன்னோர் வழக்கமாகும். இந்த ஞானமுனிவர்களின் ஆணையிற் கிளைந்த அறநெறிநூல்கள், நிகமாகமமெனும் வேதஆகமநூல்களாகும். இதன்கண் பொதுவாக, அனைவராலும் ஓதப்படுவது வேதமும், சிவக்ஞானம் பெற்றோர் அறிவது சிறப்பானஆகமமும் என்பார் திருமூலர். பலவகை வழிமுறைகளை எல்லோர்க்கும் இயல்பாககூறும் வேதத்தினின்று அவரவர் ஆன்ம பக்குவநிலைக்கேற்ப பற்பல வடிவங்களில் தெய்வவழிபாடு அன்றாடக்கடமைகளை தெளிவாக அறுதியிட்டு விளக்குவது ஆகமமே யாகும். வேதமறிந்தோர் வேதமோதியே வீடுபெறுவர், மற்றையோர் தீக்ஷை முதலான, அறநெறியில் வழுவாது வாழ்ந்து உணர்ந்து அரிய பரம்பொருளை தன்னகத்தே அர்ச்சித்து பேறுகளையும் பெற்று, ஆன்மசுகமும் அடைவர். அதிலும் இயலாதவர் அங்கிங்கெணாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை ஓரிடத்தில் ஒருங்கிணைத்து நிலைநிறுத்தி, அருள் மிகுந்து வழங்கும் இடத்திற்குச் சென்று வழிபட்டு நலமடைவர். மக்களில் அதிகமானோர் இத்தகையில்தான் வாழ்கிறார்கள். இத்தகைய அனைத்து மாந்தர்க்கும் இறையருள் பெறவே ஆங்காங்கு கோயில்கள் நிறுவப்பட்டன. இறைவன் தான்தோன்றியாக ஸ்வயம்பூ நிலைகொண்ட இடங்களில் அத்திருவுருவத்துக்கு தக்கபடி திருக்கோயில் கள் அமைக்கப்பட்டுள்ளன. ஸ்வயம்பூ போலவே மேலும் ஆறுவகையான சிவலிங்கங்கள் உள்ளன. அவை, தேவிகம், திவ்யம், மானுஷம், ஆர்ஷம், ராக்ஷஸம், பாணம் என்பதாகும். இந்த மூர்த்தங்களுக்கும் திருக்கோயில்கள் அமைக்கப்படவேண்டியது அவஸ்யமாகும். இப்படி அமைக்கப்படும் கோயில், ஊனுடம்பாகவும், கருவறை உள்ளமாகவும், சிவலிங்கம் உயிராகவும், கருதப்படுகிறது. ஆத்யேஷ்டகா முதல் மூர்த்நீஷ்டகா ஸ்தூபீ முடிய அனைத்தும் அதனதன் கட்டுமான முறைப்படி அமைந்தால்தான் அங்கு தெய்வஸான்னித்யம் நிரந்தரமாக நிலைபெறும்.

இல்லையேல் கேடுகளும், துக்கங்களும், இயற்கை வேறுபாடுகளும், குவியும். தற்காலத்தில் பற்பல மாறுபட்ட கருத்துக்களோடு மாறுபட்ட வழக்கமுறையில் அமைக்கப்படும் ஆலயங்கள், நமக்கு வறுமை, நோய், இன்னல்கள் முதலிய கேடுகளை வழங்குவதும். அதனை நாம் அறியாமல் மேலும் மேலும் தவறுகளை செய்யும் நிலையை கருத்தில் கொண்டு, அவைகளை களைந்து, நாமும் நாடும் முன்னேற்றமடைய வேண்டும், எனும் பெரும்நோக்கோடு, சைவஆகமங்கள் அனைத்திலும் நிறம்பிய ஆறிவாற்றல் பெற்றவரும், தமிழகத் திருகோயில் வழக்கமுறைகளை நன்கு அறிந்தவரும், மந்த்ரங்கள், அனுஷ்டானங்கள் அனைத்திலும் தேர்ந்தவரும், முனைவர் முதலான பற்பல விருதுகளைப் பெற்றவரும் ஸாந்தானிகர்களில் முதன்மையரான பாரத்வாஜ கோத்ரத்தவருமான ஸகலாகமபண்டிதர் **சிவஸ்ரீ. விஜய. சோசசேகர சிவாசார்யார் அவர்கள் லிங்கஸ்தாபனம்–அஷ்டபந்தனம் (ஆகமக்கோயில் அமைப்புமுறை இரண்டாம் பாகம்)** எனும் நூலினைத் தொகுத்துக்கோர்த்துள்ளார். ஆன்மார்த்த பரார்த்த பூஜைகளை அன்றாடம் செய்து அருள்பெற விரும்புவோர்க்கும், ஆகம அபிமானிகளுக்கும், ஆதிசைவ பாடசாலை மாணவர்களுக்கும், சிற்பசாஸ்த்ர நிபுனர்களுக்கும், கண்கண்ட ஞானவிருந்தாக இன்னூல் அமைந்துள்ளது. ஒவ்வொருகருத்தும் ஆழமான மூதுரையாக, அமைந்திருப்பது அன்னாரின் புலமைக்கும் ஞானத்துக்கும் சான்றாக இருப்பது போற்றுதலுக்குரியது. இதுபோல் சைவாகமம் சார்ந்த மேலும் பலநூல்கள் வெளிவருவது சைவஉலகின் பேறாகும். அரியவகையான முயற்சிகளைக் கைக்கொள்ளும் சிவஸ்ரீ சிவாசார்யார் அவர்கள் தீர்கஆயுளோடு எல்லாநலன்களும் பெறவேண்டும் என என் குலகுருநாதனான ஸ்ரீ துர்வாஸாசார்யரையும், ஸ்ரீ சிதம்பரேஸ்வரரையும் இறைஞ்சுகிறேன்.

கோ.சோ. பாலசுப்ரஹ்மணிய சிவாசார்யர்
புண்யக்ஷேத்ரம் சுவாமிமலை,

சாலக் கோயில் உளநின் கோயில்
அவையென் றலைமேற் கொண்டாடி
மாலைத் தீர்ந்தேன் வினையுந் துரந்தேன்
வானோர் அறியா நெறியானே
கோலக் கோயில் குறையாக் கோயில்
குளிர்பூங் கச்சூர் வடபாலை
ஆலக் கோயிற் கல்லால் நிழற்கீழ்
அறங்கட் டுரைத்த அம்மானே. –சுந்தரர்

முனைவர். ந. பாலசுப்ரமண்யன், M.A., Ph.D.,
நுண்கலைத்துறை விரிவுரையாளர் (ஒய்வு)
தமிழ்நாடு அரசினர் கட்டட மற்றும் சிற்பக்கலைக்கல்லூரி,
மாமல்லபுரம், செங்கை வட்டம்.

ஓம் நமசிவாய!

வாழ்த்துரை

லிங்க ஸ்தாபனம் அஷ்டபந்தனம் (ஆகமக் கோயிலமைப்புமுறை பாகம்–2) என்ற இந்நூலின் ஆசிரியர் திரு. சோமசேகர சிவாசாரியார் அவர்கள் எனது கெழுதகை நண்பர். இந்நூல் இவரது முப்பத்தி இரண்டாவது நூலாகும்.

இந்நூலின் மையக் கருத்தான லிங்க வழிபாடு நமது நாட்டில் தொன்று தொட்டு பண்டைக்காலம் முதல் இருந்து வந்துள்ளது.

அருவுருவ திருமேனியாகிய லிங்கம் பற்றிய பல அரிய செய்திகளை தந்துள்ளார் இந்நூலாசிரியர். **வேதம், உபநிடதம், சாத்திரங்கள், தோத்திரங்கள், காவியங்கள் மற்றும் இலக்கியங்கள்** (தமிழ் மற்றும் சம்ஸ்கிருதம்) வரலாற்று நூல்கள் ஆகியவற்றை ஐயம் திரிபற கற்று அவற்றின் அடிப்படையில் சைவநெறி தழைத்தோங்க அயராது உழைத்திடும் இவர் நவீன காலத்து நாயன்மார்.

நம்முன்னோர்கள் அல்லும் பகலும் ஆய்ந்து பிறவியின் நோக்கம் பிறவியை அறுப்பது என்பதைக் கண்டறிந்து, அதற்கு ஒரே வழி சைவநெறி எனும் முடிவிற்கு வந்தனர்.

அத்தகைய சைவநெறியின் உயிர்நாடியாக விளங்குவது **லிங்கவழிபாடு.** லிங்க வழிபாட்டின் எல்லா அம்சங்களையும் நூல்வழி ஆய்ந்து நுண்மையாக எடுத்துரைத்துள்ளார் இந்நூலாசிரியர்.

அன்னாருடைய எழுத்தையும், நூலையும் ஆய்வு செய்யப் புகுந்தால் அது ஒரு ஆய்வுக் கட்டுரையாய் முடியும்.

உள்ளபடியே சொல்லப்போனால் இத்தகைய நூலை உருவாக்க நூலாசிரியர் எத்தகைய முயற்சியையும், உழைப்பையும் கொட்டி இருப்பார் என எண்ணிப்பார்க்கவே பிரமிப்பாக உள்ளது.

தமிழ்கூறும் நல்லுலகுக்கும், சைவநெறிதழுவும் சான்றோருக்கும், சிற்பி களுக்கும், சிற்பம்பயிலும் மாணவர்களுக்கும் இதுஒரு பொக்கிஷமாகும்.

நன்றி, வணக்கம்.

முனைவர். ந. பாலசுப்ரமண்யன்

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

உ

சிவமயம்

Dr. Deepa Duraiswamy
B.E., PGDM (IIMC), MA, PhD
Author, "Temple Management in Śaivāgama-s"
Founder, "Śaktinipātam"
facebook.com/ddswamy | tweets @DDuraiswamy | deepa.duraiswamy@gmail.com

பண்டைய காலம் முதல் "விஷ்வகுரு" என உலகத்திற்கே வழிகாட்டியாக விளங்கும் பாரதமும் அதன் இணைபிரியா சனாதன தர்மமும் வேதாகம நெறியின்படி கோவில்கள் சார்ந்த சமூகங்களை அமைத்து, அம்மக்கள் அறம்-பொருள்-இன்பம்-வீடு என்று தெளிவான சுயதர்ம பாதையில் இயங்கி, இகபர சுகம் பெற்று விளங்குவதற்கு சாக்ஷியாக, இப்புவியில் வேறெங்கும் காணாதவாறு அவதார புருஷர்களும் ஞானிகளும் தபஸ்விகளும் சித்தர்களும் மட்டுமல்லாது, தெய்வங்களும் இந்த மண்ணில் தோன்றி மிளிர்கிறார்கள்.

அந்த ஆன்மீக நிறைவை சுவைக்க வந்த பிற நாட்டவர், நம் தர்மத்தை அறிந்து கொள்ள முற்பட்டு, அதை அவரவர் மொழியில் புரியுமாறு மொழிபெயர்ப்பு செய்து கொள்ளும் பொழுது, தெரிந்தோ தெரியாமலோ, பொருட்குற்றம் பல ஏற்படுகிறது.

இதில் முக்கியமாக சைவத்தின் ஆணிவேராக சனாதனத்தின் அணிமகுடமாகத் திகழும் இறையின் நிறையான லிங்க மேனியைப் பற்றி பல குழப்பங்கள் நிலவுகின்றன. அந்நியரின் மொழிபெயர்ப்பு என்றாலும் இன்றைய சூழலில் ஆங்கிலவழிக்கல்வி பயிலும் இளைய தலைமுறை அவற்றையே முதலில் கற்பதால், நம் நாட்டிலேயே கோவில் வழிபாடு செய்யும் ஆன்மீக பக்தர்களிடையேயும் கூட தவறான புரிதல்கள் ஏற்படுகின்றன.

இதனை ஈடு செய்யுமாறும், புத்தகங்களே நாளைய வரலாற்று சான்றுகள் என்பதாலும், சிவலிங்க ஸ்தாபனம் பற்றிய இந்த அரிய பொக்கிஷத்தை பல மூல கிரந்தங்களிலிருந்தும் தொகுத்து நாம் கற்றுணர்ந்துய்திடுமாறு ஸ்ரீ காளிகாம்பாளின் பரம அனுகிரஹத்தால் சிவப்ரசாதமாக நமக்கு அளித்துள்ளார் ஸ்ரீ வாத்தியார் அண்ணா.

ஆலயம், ஆலய அங்கம், லிங்கம், லிங்க வகை, பீடம், அஷ்டபந்தனம் என பல பிரிவுகளாக ஆழ்ந்த அரிய செய்திகளை எளிதில் புரியுமாறு வற்றாத சிவ தத்துவ நிதியாக அருளியுள்ளார். உதாரணமாக சிவலிங்க ஸ்வரூபத்தை பாவாகாரமாக நோக்கில் சாதாக்யபாவனையாகவும் லிங்கதாண்டவபாவனையாகவும் அறிய வேண்டும். பதியின் படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளுதல் என்ற பஞ்சகிருத்தியமாக ஆதி-அந்த வடிவாக சிவலிங்க ஸ்வரூபம் திகழும் என்று அற்புதமாக விளக்குவதனுடன் கூட, பாரத நாட்டையே லிங்காகாரமாக நிரூபணம் செய்திருப்பது ஆச்சார்யருக்கே உரித்தான கலாபாவனை!

ஆசார்யர் அவர்களின் பாதம் வணங்கி இந்த ஞான பிரவாகம் பல்லாயிரம் பேருக்கு பேறாக அமைய அந்த ஆதி பகவன், வாலறிவன், தனக்குவமையில்லாதான், நட்டம் பயின்றாடும் நாதன், மனமுவக்க வேண்டுகிறோம்.

ஹர ஹர.

விஜயதசமி 2023

தீபா

உ

வெளியீட்டுரை

குரும் கணபதிம் ஸ்கந்தம் ஸாம்பம் ச பரமேச்வரம்|
வந்தே வாணீம் மஹாலக்ஷ்மீம் இஷ்டகாம்யார்த்த ஸித்தயே||

*****

யாதேவீ ஸர்வபூதேஷு மாத்ரு ரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம: ||

ஆன்மீக வாசக நேயர்களே! வணக்கம்,

உலகில் உயிர்களை உய்வித்திடுவதற்காக அருளாட்சியை செய்து வருகிற காளிகாம்பாளின் கருணா கடாக்ஷத்தாலும், எங்கள் தந்தையின் அருளாசியாலும் எங்கள் அறக்கட்டளைகள் வாயிலாக எட்டு ஆண்டுகளாக மாதந்தோறும் ஆகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியை நடத்தியும், பலநூல்களை வெளியிட்டும் ஆண்டுதோறும் சைவாகம கலாசார தீபிகோத்ஸவத்தை கலாசார அபிவிருத்தி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நடத்தியும் உங்கள் ஆதரவைப் பெற்றவர்கள் என்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

எங்கள் அறக்கட்டளையின் ஆலோசகரும், குருநாதருமான சிவஸ்ரீ. சோமசேகர சிவாசார்யர் அவர்கள் எழுதி அளித்துள்ள **லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம்** என்ற நூலானது, ஆலயஅமைப்பில், லிங்கவகைகள், ஆலயதத்வபாவனைகள், லிங்கதத்வபாவனை முறைகள், லிங்கஸ்தாபனம் செய்யவேண்டியமுறைகள், லிங்கப்பெருமை, வழிபாட்டுமஹிமை, அஷ்டபந்தனம், பஞ்சபந்தனம், திரிபந்தனம் முதலிய பந்தனவகைகளைச் செய்யும்முறைகள், பந்தனமருந்தினை தயாரிக்கும் முறைகள், இவற்றை ஆஸ்தீகர்களுக்கு தெளிவுபடுத்துகிற, அரியசெய்திளை அளிக்கும் வகையில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் சோபக்ருத் வருடம் ஐப்பசி மாஸ மூலநக்ஷத்திரத்தில் வெளியிடுவது போற்றுதற்குரியது. இந்நூல் என்றும் இந்துசமய ஆஸ்தீகப் பெருமக்களுக்கு பயன்தரக்கூடிய அரிய ஞானக்கருவூலமான நூலாக இருப்பதால், இதனை எங்கள் அறக்கட்டளை வாயிலாக வெளியிட்டு மகிழ்கிறோம். இந்துமக்கள் இந்நூலை வாசித்தும், பின்பற்றிவாழ்ந்தும், உலகெங்கும் பரவச்செய்தும், தம்மையும் சமயத் தொண்டில் இணைத்துக் கொள்வதுடன் படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

அன்புடன்,

சென்னை காளிகாம்பாள் கோயில் அர்ச்சகர்கள்.

சிவாசார்யர் அறக்கட்டளை நிறுவனர்

சிவஸ்ரீ. T.S. காளிதாஸ் சிவாசார்யர்

&

சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் டிரஸ்ட் நிறுவனர்

சிவஸ்ரீ. T.S. ஷண்முக சிவாசார்யர்

சென்னை–600 001.

இந்நூலில் எடுத்தாண்ட நூல்கள்

1. காமிகாகமம்
2. காரணாகமம்
3. அஜிதாகமம்
4. சூக்ஷ்மாகமம்
5. சுப்ரபேதாகமம்
6. ரௌரவாகமம்
7. மகுடாகமம்
8. கிரணாகமம்
9. அம்சுமதாகமம்
10. வாதுளசுத்தாக்யம்
11. சித்தாந்தசேகரம்
12. கிரியாஸாரம்
13. பௌஷ்கராகமம்
14. காலோத்தராகமம்.
15. தந்த்ரசாரம்
16. சித்தாந்தசாராவளி–உரையுடன்
17. சோமசம்புபத்ததி
18. வாமதேவபத்ததி
19. அகோரசிவாசார்யபத்ததி
20. வாருணசிவாசார்யபத்ததி
21. ஸகலாகமஸாரஸங்கிரஹம்
22. சிவலிங்கப்ரதிஷ்டாவிதி
23. சிவப்ரதிஷ்டா (பிரயோகக்ரமம்)
24. லிங்கபுராணம்
25. உபநிஷத்ஸங்கிரஹம்
26. சிவபூஜார்ணவம்
27. சில்பரத்தினம் (சிற்பசாஸ்த்ரம்)
28. காச்யபசில்பம்
29. மயமதம்
30. ஸகளாதிகாரம்
31. நித்யபூஜாலக்ஷணசங்கிரஹம்
32. நிச்வாஸகாரிகா
33. திருமந்திரம்
34. பன்னிருதிருமுறை
35. சிவஞானசித்தியார்
36. அருணாசலபுராணம்
37. சிற்பச்செந்நூல்
38. சிவவடிவங்கள்



உ

ஸ்ரீகணேசாய நம:

ஸ்ரீ சம்பந்த விநாயகர் திருவண்ணாமலை

அவ்வையார் தீவிரமான கணபதி உபாசனை செய்தவர் என்பது விநாயகர் அகவல் படித்த நம் அனைவருக்குமே நன்கு தெரியும். இந்த விநாயகரை கூட

அல்லல் போம் வல்வினை போம்
அன்னை வயிற்றில் பிறந்த தொல்லைபோம்
போகாத் துயரம் போம் – நல்ல குணம்
அதிகமாம் அருணைக் கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைத்தொழுதக் கால்.

என்று பாடி உள்ளார். இந்தப் பாடல் பழமையான நீதி நூலாக இருக்கக்கூடிய விவேக சிந்தாமணியில் இருக்கிறது. அனைத்து அல்லல்களையும் அழித்து பிறப்பு, இறப்பு என்ற இந்த ஸம்சார கடலில் இருந்து நம்மை விடிவிக்க கூடிய மிகப்பெரிய செல்வத்தை நல்க கூடியவர் இந்த செல்வ கணபதி என்று அவ்வையாரின் வாக்கில் இருந்து நமக்கு தெரிகிறது.

மஹாசதாசிவர்

ப்ரஸந்த பஞ்சவிம்சக ஸ்புடாநதம் ஜடாதரம்
ஸுபஞ்சஸப்த தீக்ஷணம் கபோல குண்டலாங்கிதம் |
சதார்த ஹஸ்த பூஷிதம் வராபயாந்விதம் ஸிதம்
புஜங்க பூஷணம் பரம்பஜே மஹாசதாசிவம் ||

ப்ரகாசமான மலர்ந்த முகத்துடனும் ஜடாமுடியும், எழுபத்து ஐந்து கண்களும் குண்டலங்கால் பிரகாசமான கன்னங்களையுடையவரும் ஐம்பது கரங்கள் கொண்டவரும் வரதமும் அபயமும் கொண்டவரும் வெண்ணிறமானவரும் பாம்பை ஆபரணமாக கொண்டவரும் அனைத்துக்கும் மேலானவரான மஹாசதாசிவரை நமஸ்கரிக்கின்றேன் என்பது இதன் பொருளாகும்.

ஐம்பது கைகளில் என்னென்ன ஆயுதங்கள் தரித்துள்ளார் எனில்,

வலது பக்கம்
25 கைகளில்

1. அபயம்
2. சக்கரம்
3. சூலம்
4. டங்கம் (உளி)

இடது பக்கம்
25 கைகளில்

1. வரதம்
2. வில்
3. மான்
4. சங்கம்

5. அம்பு	5. கேடயம்
6. கதை	6. பாசம்
7. தாமரை	7. கோடரி (பரசுவதம்)
8. கத்தி	8. முத்கரம்
9. தோமரம்	9. உடுக்கை
10. சக்தி	10. மணி
11. பிராசம்	11. சுவடி
12. கோடரி (பரசு)	12. ருத்ரவீணை
13. பாம்பு	13. கபாலம்
14. கலப்பை	14. முண்டம்
15. அங்குசம்	15. கட்வாங்கம்
16. அக்ஷமாலை	16. பூசுண்டி
17. சூரிகை (சிறுகத்தி	17. பரிகம்
18. கொடி	18. பலகை
19. தண்டம்	19. பட்டஸம்
20. வஜ்ரம்	20.பிரம்பு
21. கமண்டலம்	21. குந்தம்
22. அஸ்திதம்ஷ்ட்ரம்	22. அனல்
23. ரம்பம்	23. கத்தரிக்கோல்
24. பிண்டி	24. உலக்கை
25. பாலம்	25. மயில்தோகை

இப்படியாக ஐம்பது கைகளில் பொருட்களை ஏந்தியவராக உள்ளார். ஈசான முகத்தில் முக்தியளிக்க கூடிய மாந்திரி கதந்திரமானது தோன்றியது. தத்புருஷமுகத்தில் எல்லா விஷத்தையும் போக்கடிக்கும் காருடமும், வாமதேவ முகத்தில் எல்லாவற்றையும் வசீகரணம் செய்யும் வாமமும், ஸத்யோஜாத முகத்தில் கிரஹ பீடைகளைப் போக்கும் பூத தந்திரமும் அகோர முகத்தில் பகைவர்களை வெல்லும் பைரவமும் தோன்றின.

காமிகாகமத்தில் சதாசிவனின் முகத்தில் தோன்றிய மந்த்ரமானது ஸித்தாந்தம், காருடம், வாமம், பூததந்திரம், பைரவம் எனவும் இவைகள் முறையே ஈசானம், தத்புருஷம், வாமதேவம், ஸத்யோ ஜாதம், அகோரம் ஆகிய முகங்களில் தோன்றின. சித்தாந்தமான காமிகம் முதலான ஞானசாஸ்திரங்கள் மேல்முகத்தில் தோன்றின. தாலம் முதலிய ஞானங்கள் கிழக்கு முகத்திலும், ஸம்மோஹம் முதலிய ஞானங்கள் வடக்கு முகத்திலும், சண்டாஸிதாரா முதலிய ஞானங்கள் மேற்கு முகத்திலும், அஸிதாங்கம் முதலிய ஞானங்கள் தெற்கு முகத்திலும் உண்டானதாக கூறுகிறது. மேலும் நான்கு வேதங்களும், பிரவாக ரூபமாக வெளியாயிற்று எனவும் கூறுகிறது.

இந்த சாஸ்திரமானது (ஆகமங்கள்) வேதத்தை காட்டிலும் சிறந்தது. புராணங்களைக்காட்டிலும் வேதமும், வேதத்தை காட்டிலும் ஆகமமும் உயர்ந்தது. சாஸ்த்திர ரூபமான ஞானத்தில் வேதஸம்பந்தமான ஞானம் அபரம் எனவும் சித்தாந்த சம்பந்தமான ஞானம் பரம் எனவும் கூறப்படுகிறது.

லிங்காஷ்டகம் [ஆதிசங்கரர் அருளியது]

ப்ரஹ்மமுராரி ஸுரார்ச்சித லிங்கம் –
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம். [1]

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம். [2]

ஸர்வஸுகந்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம். [3]

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம். [4]

குங்குமசந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் [5]



தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் [6]

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் [7]

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பரமபர பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் [8]

லிங்காஷ்டக மிதம் புண்யம் யஹ் படேச் சிவ ஸந்நிதௌ
சிவலோக மவாப்நோதி சிவேந ஸஹ மோததே.

உ

நமச்சிவாய்யாம்

லிங்கஸ்தாபனம் அஷ்டபந்தனம்

(ஆகமக்கோயிலமைப்புமுறை பாகம்-2)

பொருளடக்கம்

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
	சிவதத்வநிதி-1	
	கோயிலின் அருங்கலைக் கோலம்	
1.	ஆலய அமைப்பில் ஆகம சிற்பத் துறைகள்	79
2.	ஸ்தபதியும் ஸ்தாபகாசாரியரும்	80
3.	அண்டத்திலும் பிண்டத்திலும் ஆண்டவன்:	80
4.	உடலும் உயிரும்போல் கோயிலும் இறையும்	81
5.	ஆன்மசுகம் பெற உதவும் அருங்கலை	82
6.	நுண்கலைகளின் ஒலிஒளி வடிவங்கள்	82
7.	லிங்கம் சொல்விளக்கம்	83
8.	சிவலிங்க சொல்விளக்கம்	83
9.	வேதமும் ஆகமமும்	88
10.	முப்பொருளை விளக்கும் ஆலயத் தேவை	88
11.	சைவாலயப் பெருமைகள்	89
12.	கோயில் தத்துவம்	90
13.	ஆலயம் சொல்விளக்கம்	90
14.	ஆலயத்தின்தேவை தத்துவ விளக்கம்	91
15.	ஆலய அமைப்பின் நோக்கம்	92
16.	ஆலயவழிபாட்டின் அவசியம்	92
17.	ஆலய வழிபாட்டின் அரும்பயன்கள்	93
18.	ஆலய அமைப்புவிதி	93
19.	ஆலய அமைப்பில் அடிப்படைநூல்	94
20.	ஆலய அமைப்பு முறைகள்	94
21.	புதிய ஆலய கட்டிட அமைப்புமுறை	94
22.	அர்த்தமண்டபத்தின் அவசியத்தேவை	97

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
	சிவதத்வநிதி-2	
	லிங்க உருவஅமைப்புகள்	
23.	லிங்கம் யூபாகாரம் (லிங்கவடிவில் மரத்தூண்)	100
24.	லிங்கஉருவில் உள்ள பாரததேசம்	100
25.	ஸ்தூலலிங்கம் – சிவாலயம்	102
26.	சுதைச்சிற்ப தேஹசூல அமைப்பில் லிங்கவடிவம்	103
27.	பீடஉருவங்களில் லிங்கவடிவம்.	104
28.	தேஹே லிங்கதாரணம்	104
29.	குண்டங்களினமைப்பும் லிங்கபீடத்தின் அமைப்பும்	105
30.	சிவலிங்கத்தின் வேதத்துப் பெயர்கள்	106
31.	நிஷ்களம் ஸகளம் மிச்ரம் விளக்கம்	107
32.	சிவலிங்க தத்வபாவனா விவரணம்	108
33.	லிங்கசப்த நிர்வசனம்	110
34.	லிங்கத்தில் முப்பாலில் முப்பகுதிகள்	114
35.	லிங்கபஞ்சாம்சம்	114
36.	லிங்க லக்ஷ்மரேகா நிர்மாணவிதி	115
37.	லிங்கத்தின் லக்ஷ்மசூத்ர லக்ஷணம்	115
38.	லக்ஷ்மரூபபேதம் (குறிவகைகள்)	116
39.	லிங்க லக்ஷணோத்தாரணம்.	118
40.	லிங்கசிரோவர்த்தன இலக்கணம்	119
41.	லிங்கலக்ஷ்மவகையில் திக்பாலகஆயுதசின்னம்	120
42.	லிங்க பூஜாம்சமும் படிமஅளவுகொள்முறையும்	121
43.	லிங்க திசைநோக்கு முறை	122
44.	பிம்பமான வீதிமுறைகள் (சிலைக்குஅளவுகொள்முறை)	123
45.	லிங்கமானத்தில் அளவுமுறை	123
46.	கர்பமானத்தால் அளவுமுறை	124
47.	துவார மானத்தால் படிம அளவுமுறை	126

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.

சிவதத்வநிதி-3

லிங்கவகை அமைப்பு முறைகள்

48.	மூன்றுவகை லிங்கங்கள்	128
49.	வியத்தலிங்கம் (3ல்1)	129
50.	அவ்யக்தலிங்கம் (3ல்2)	129
51.	வியக்தாவ்யக்தலிங்கம் (3ல்3)	129
52.	மூன்று வகைலிங்கங்கள்(3ல்1)	130
53.	அசலலிங்கம் (ஸ்தாவரலிங்கம்அசையாதது) (3ல்2)	130
54.	சலாலசலலிங்கம் (உபயாத்மகம்) (3ல்3)	131
55.	க்ஷணிகலிங்கம்	131
56.	க்ஷணிகலிங்க பூஜையின் பயன்	132
57.	இரண்டுவகை லிங்கங்கள்	133
58.	இருவகை லிங்கவிளக்கம் (லிங்ககல்பம்)	133
59.	லிங்கவகைகள் (அசைப்பதும் அசைக்காததும்)	133
60.	ஸ்தாவரலிங்க லக்ஷணம் (அசையாதது) (2ல்1)	134
61.	ஜங்கமலிங்கலக்ஷணம் (அசைப்பது) (2ல்2)	135
62.	ஆத்மார்த்தபூஜா க்ருஹலிங்கம் (ஸ்வார்த்தலிங்கம்)	136
63.	பரார்த்தலிங்கம் (ஆலயலிங்கம்)	136
64.	பாலலிங்கம்	137
65.	மூலலிங்கம்	137
66.	அங்கலிங்கம்	137
67.	திசாலிங்கம் (திகீசலிங்கம்)	138
68.	பஞ்சப்ரும்மலிங்கம் (பஞ்சலிங்கம்)	138
69.	மூர்த்தீசலிங்கம் (அஷ்டலிங்கம்)	138
70.	இஷ்டலிங்கம்	139
71.	சிஷ்டலிங்கம்	139
72.	பலிலிங்கம்	139

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
73.	கிருத்யலிங்கம்	140
74.	காம்யலிங்கம்	140
75.	அன்னலிங்கம்	140
76.	பஸ்மலிங்கம்	141
77.	ரஸலிங்கம்	141
78.	ரஸலிங்கபூஜையின் பயன் (தூதுலிங்கபூஜாபலன்)	141
79.	ஸ்தூலலிங்கம்	142
80.	சூக்ஷ்மலிங்கம்	142
81.	பத்ரலிங்கம் (சுபத்ரலிங்கம் (மஹாபீடலிங்கம்)	142
82.	வல்மீகலிங்கம் (பார்த்திவலிங்கம்)	143
83.	பௌராணிகலிங்கம்	143
84.	பர்வதாக்ரலிங்கம்	143
85.	பித்திலிங்கம் (சித்ரலிங்கம்)	144
86.	நாகலிங்கம்	144
87.	படலிங்கம்	144
88.	மண்டலசக்ரலிங்கம்	144
89.	காரணலிங்கம் (கொடிமரம்)	145
90.	ஆலயத்தின் ஐவகைலிங்கம் பரமகாரணலிங்கம்	145
91.	புஷ்பலிங்கம் (மலர்வகை லிங்கம்)	145
92.	பலலிங்கம் (பனைமரக்கனி)	146
93.	ஸாலோக்யதலிங்கம்	146
94.	ஸாமீப்யதலிங்கம்	146
95.	ஸாரூப்யதலிங்கம்	147
96.	ஸாயுஜ்யதலிங்கம்	147
97.	ஆறுவகை சலலிங்கங்கள்	148
98.	பார்த்திவலிங்கலக்ஷணம் (மிருண்மயலிங்கம்) (6ல்1)	148
99.	தாருஜலிங்கம் (6ல்2)	149

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
100.	சைலஜலிங்கம் (6ல்3)	150
101.	லோஹஜலிங்கம் (6ல்4)	150
102.	உலோகலிங்கவகைப் பயன்கள்	151
103.	ரத்னஜலிங்கம் (6ல்5)	151
104.	ரத்தினலிங்கார்ச்சனவிதி (ரத்னலிங்கபயன்)	152
105.	நவரத்ன லிங்கவகைப் பயன்	152
106.	ரத்தினலிங்கலக்ஷணம் (ரத்னலிங்கத்தின் செய்முறை)	153
107.	தாதுஜலிங்கம் (6ல்6)	154
108.	தாதுஜலிங்கம் வகை	154
109.	ஆலயத்தின் லிங்கவகைகள் ஏழு	155
110.	ஆலயத்தில் லிங்கவகைகள் (கோயில்லிங்கவகை)	155
111.	ஆலயலிங்க பூஜாதிகாரீ பூஜைசெய்வோர்)	156
112.	ஆலயலிங்க பரார்த்த பூஜை	156
113.	ஏழுவகைக் கோயில்கள் (ஹர்ம்யபேதம்)	157
114.	விமானஸ்தாபனத்தின் அவசியம்	157
115.	எழுவகைலிங்கமும் 28வகை ஆகமபூஜைமுறையும்	158
116.	சுயம்புலிங்க லக்ஷணம் (தானேதோன்றியது) (7ல்1)	159
117.	தைவிகலிங்க லக்ஷணம் (தேவீவழிபட்டது) (7ல்2)	160
118.	திவ்யலிங்க லக்ஷணம் (தேவர்கள் பூசித்தது) (7ல்3)	161
119.	திவ்யலிங்க ஸ்தலங்கள் (தேவர்கள் வழிபட்டவை)	161
120.	ஆர்ஷகலிங்க லக்ஷணம் (ரிஷிகள் பூசித்தவை) (7ல்4)	162
121.	காணபலிங்க லக்ஷணம் (சிவகணங்கள் பூசித்தவை) (7ல்5)	162
122.	பாணலிங்கலக்ஷணம் (நீரில்கிடைத்தவை) (7ல்6)	163
123.	பாணலிங்க மஹிமை	163
124.	பாணலிங்கதோற்றம் இருப்பிடங்கள்	164
125.	பாணலிங்க பெருமை	164
126.	மானுஷ லிங்க லக்ஷணம் (மனிதன் தயாரித்தது) (7ல்7)	165

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
127.	எட்டுவகை மானுஷலிங்கங்கள்	166
128.	ராக்ஷஸலிங்கம்	167
129.	உத்பூதலிங்கம்	167
130.	உத்ருதலிங்கம். வெளிப்பட்டலிங்கவகை.	167
131.	நாகரலிங்கம்	168
132.	திராவிடலிங்கம்	168
133.	பௌருஷலிங்க பேதங்கள் (மானுஷலிங்கவகைகள்)	168
134.	ஆட்ய அனாட்ய சுரேட்ய லிங்கலக்ஷணம்	169
135.	எட்டுவகை லிங்கங்கள் (மானுஷலிங்கவகைகள்)	170
136.	ஸமலிங்க அமைப்புமுறை (ஸமகண்டம்) (8ல்1)	170
137.	வர்த்தமான லிங்க அமைப்புமுறை (8ல்2)	171
138.	சிவாதிக்ய லிங்கஅமைப்புமுறை (8ல்3)	171
139.	ஸ்வஸ்திகலிங்க அமைப்புமுறை (8ல்4)	172
140.	ஸர்வதோபத்ர லிங்கஅமைப்புமுறை (8ல்5)	173
141.	ஸார்வதேசிகலிங்கஅமைப்புமுறை (8ல்6)	173
142.	தாராலிங்க அமைப்புமுறை (8ல்7)	174
143.	தாராலிங்கஅமைப்புமுறைகள் (பட்டைலிங்கம் 100வகை)	175
144.	முகலிங்க அமைப்புமுறை (வக்த்ரலிங்கம்) (8ல்8வது)	176
145.	முகலிங்க லக்ஷணம்	177
146.	ஏகமுகலிங்கம் (ஒருமுகம்)	177
147.	த்விமுகலிங்கம் (இருமுகம்)	178
148.	திரிமுகலிங்கம் (மூன்றுமுகம்)	178
149.	சதுர்முகலிங்கம் (நான்குமுகம்)	178
150.	பஞ்சமுகலிங்கம் (ஐந்துமுகம்)	178
151.	மானுஷலிங்கவகைகள் (மனிததயாரிப்புவகைகள்)	178
152.	த்ரைராசிக லிங்க அமைப்புமுறை (9வது வகை)	179
153.	ஸஹஸ்ரலிங்க அமைப்புமுறை	180

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
154.	ஸஹஸ்ரலிங்க அமைப்புமுறை.	180
155.	1001லிங்க அமைப்பு விதிமுறை (ஆட்யலிங்கம்)	181
156.	அஷ்டோத்தரசதலிங்கம் (108லிங்கபாணம்)	181
157.	108லிங்க அமைப்பு விதிமுறை (சதாஷ்டகலிங்கம்)	182
158.	ஸ்தூலலிங்க அமைப்புமுறை	182
159.	சதாஷ்டகலிங்கம்	182
160.	சிகராக்ரலிங்கம்	183
161.	இஷ்டகாலிங்கம்	183
162.	உத்ருதலிங்கம் (பாஷாண லிங்கம்) (எடுப்புலிங்கம்)	183
163.	நக்ஷத்திரலிங்கம்	183
164.	ஆகம லிங்கங்கள்	183
165.	ஸ்ரீமன் மகுடாகமம் கூறும் 96 லிங்கப்பெயர்கள்	184
166.	மானுஷலிங்கவகை உயரஅளவுப் பகுப்புமுறைகள் அட்டவணை	186

சிவதத்வநிதி-4

பிண்டிகை (ஆவுடையாள்) (பீடஉருவஇலக்கணம்)

167.	பிண்டிகையின் சொல்விளக்கம்	190
168.	லிங்கபிண்டிகையின் அமைப்புமுறை	190
169.	லிங்கபீடத்தின் இலக்கணம்	191
170.	லிங்கங்களின்பீடத்தின் தத்வரூபம்	192
171.	லிங்கபீடத்தின் பெருமை	192
172.	கோமுகையின் நீட்டிப்புமுறை (களத்திமுறை)	193
173.	பிண்டிகையின் வடிவவகைகள்	193
174.	பத்மபீடஅமைப்புமுறை (5ல்1)	194
175.	பத்ரபீட வடிவமைப்புமுறை (5ல்2)	196
176.	விஜயபீட வடிவமைப்புமுறை (5ல்3)	197
177.	சுவாயம்புவபீட வடிவமைப்புமுறை (5ல்4)	198
178.	ஸ்தண்டிலபீட வடிவமைப்புமுறை (5ல்5)	198

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
179.	நந்தியாவர்த்த பிண்டிகை. (6வதுவகை)	199
180.	அஜிதாகமத்தின் பத்துவகை பீடஅமைப்புகள்	200
181.	சதுரபிண்டிகை ஐந்துவகை.	200
182.	விருத்த பிண்டிகை ஐந்து வகை.	200
183.	பத்துவகை பிண்டிகைகளின் அமைப்புமுறை	200
184.	பத்ரபீட உருவஅமைப்பு-(சதுரபீடம்-5ல்1) (10ல்1)	200
185.	யக்ஷீ பிண்டிகை வடிவமைப்பு-(சதுரபீடம்-5ல்2) (10ல்2)	200
186.	வஜ்ரீ பிண்டிகா அமைப்பு - (சதுரபீடம்-5ல்3) (10ல்3)	201
187.	ஸ்ரீகரா பிண்டிகை அமைப்பு-(சதுரபீடம்-5ல்4) (10ல்4)	201
188.	விஜயா பிண்டிகாஅமைப்பு (விஜயபீடம்)-(சதுரபீடம்-5ல்5) (10ல்5)	202
189.	பத்மபீட அமைப்பு (வட்டத்தில்-5ல்1) (10ல்6)	202
190.	சக்ரபீட அமைப்பு (வட்டத்தில்-5ல்2) (10ல்7)	203
191.	வேதீபீடஅமைப்பு - (வட்டத்தில்-5ல்3) (10ல்8)	203
192.	ஸௌம்யபீட அமைப்பு (வட்டத்தில்-5ல்4) (10ல்9)	204
193.	ரம்யபீட அமைப்பு (வட்டத்தில்-5ல்5) (10ல்10)	204
194.	பத்ரா முதலான பத்துவகை லிங்கபீடங்களின் பயன்	205
195.	பிண்டிகை வகைகளின் பயன்கள்	205
196.	பிண்டிகையில் லக்ஷ்மசூத்ரகல்பனம் (லக்ஷணோத்தாரம்)	206
197.	பிண்டிகையின் பழுதுநீக்கும் முறை (மாற்றும் முறை)	206
198.	பிண்டிகைஅளவின் அவசியம்	206
199.	முறையற்ற அளவின் பயன் (விலக்ஷணபலம்)	207
200.	லிங்கபீடத்தின் ப்ராண ப்ரகிருதி பாவனை	207
201.	காரணாகம 9வகை பிண்டிகைகளின் அளவு அட்டவணை	209
202.	அஜிதாகம 19வகை பிண்டிகைகளின் அளவு அட்டவணை	211
203.	லிங்கபிண்டிகைகளின் உருவமும் பயனும்	213

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.

சிவதத்வநிதி-5

லிங்கஸ்தாபன விதிமுறைகள்

204.	சிவாலய அமைவிடப்பயன்கள் (கிராமாதிகளில்)	215
205.	லிங்கஸ்தாபனமுறை	216
206.	கிராமத்தில் லிங்கஸ்தாபன ஸ்தானவிதி	217
207.	பதவிந்யாஸத் தேவை (பகுப்பின் அவசியம்)	218
208.	ஆதார சிலையின் ஸ்தாபன விதிமுறை	219
209.	சைலஜலிங்கஸ்தாபன விதிமுறை (மானுஷசிலாலிங்கம்)	219
210.	லிங்கபீட நியாஸவிதி	221
211.	பிரதிஷ்டாக்ரியையின் தத்வார்த்தம் (சொல்விளக்கம்)	223
212.	லிங்கஸ்தாபன முறைகள் (ஐவகைப்ரதிஷ்டைகள்)	224
213.	ப்ரதிஷ்டையின் செய்முறை (5ல்1)	225
214.	ஸ்தாபனம் செய்யும்முறை (5ல்2)	226
215.	ஸ்தித்ஸ்தாபனம் செய்யும்முறை (5ல்3)	226
216.	ஆஸ்தாபனம் செய்யும்முறை (5ல்4)	226
217.	உத்தாபனம் செய்யும்முறை (5ல்5)	227
218.	பஞ்சலிங்கஸ்தாபனவிதி (ஐந்துலிங்கஅமைப்பு)	227
219.	பஞ்சலிங்க ஸ்தாபனமுறை	228
220.	நவலிங்க ஸ்தாபனவிதி (ஒன்பது லிங்கஅமைப்பு)	229
221.	பஞ்சலிங்க ஸ்தாபனமுறை	229
222.	நவலிங்க ஸ்தாபனமுறை	230
223.	சிவாதிக சதாஷ்டக லிங்கஸ்தாபன விதி	231
224.	ஸஹஸ்ரலிங்க ஸ்தாபனவிதி (ஆயிரம்லிங்க அமைப்பு)	232
225.	ஆதாரசிலையில் ஒன்பதுகட்டப் பள்ளம் அமைப்பு	232
226.	பீட ரத்னநியாஸவிதி	233
227.	நவரத்னநியாஸவிதி	234
228.	நவரத்தினம்வைப்புமுறை (சிந்தியவிச்வாகமத்தில்)	234

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
229.	நவஉலோக நியாஸவிதி (5ல்2)	234
230.	நவபீஜநியாஸவிதி. (தீப்திசத்தி மயமானவை) (5ல்3)	234
231.	நவதாது நியாஸவிதி. (வீரியசத்தி மயமானவை) (5ல்4)	234
232.	நவஔஷதி (நியாஸவிதி) (9வகை) (5ல்5)	234
233.	பஞ்சஔஷதங்கள் (ஐந்து பச்சிலைகள்)	235
234.	அபாவே யோக்யதிரவியம் (இல்லாப்பொருளின் மாற்றுப்பொருள்)	235

சிவதத்வநிதி-6

அஷ்டபந்தனம் (மருந்துசாத்தும் முறைகள்)

235.	லிங்கம்அருள்தர உதவும் பந்தனம்	236
236.	அஷ்டபந்தனத்தின் அவசியம் (அருள்பெறஉதவுவது)	237
237.	அஷ்டபந்தனம் சொல்விளக்கம்	238
238.	மூவகை பந்தனப்பயன் (பந்தனவகையின் சிறப்புப்பயன்)	238
239.	பந்தனவகைகள் (ஏழுவகைப் பிணைப்புமுறைகள்)	239
240.	சுவர்ணபந்தனம் (தங்கக் காப்புக்கட்டு)	240
241.	உஷ்ணபந்தனமும் சீதபந்தனமும்	241
242.	ஏகபந்தனம் (குங்குலிய பந்தனம்)	241
243.	த்ரிபந்தனம் (முப்பொருளால் கட்டிஇணைத்தல்)	241
244.	பந்தன இருவகை	243
245.	பஞ்சபந்தனம் (ஐம்பொருளால் கட்டும்காப்பு)	243
246.	அஷ்டபந்தனம் (எண்பொருட்கலவைக்கட்டுதல்)	244
247.	எட்டு மூலப்பொருளின் அளவுமுறை	246
248.	அஷ்டபந்தனப்பொருட்களும் அளவுமுறையும்	248
249.	அஷ்டபந்தன மருந்தின் தயாரிப்புமுறை	248
250.	பந்தனச்செயல்முறைவிதி	250
251.	அஷ்டபந்தன சொல்விளக்கம்	251
252.	பந்தன மின்மையில் விளையும் தீயபயன்	251
253.	அஷ்டபந்தன ஹீநே திசாம்பலம்	252

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
254.	அஷ்டபந்தனம் விலகியதற்கான பரிஹாரச்செயல்.	253
255.	இருவகைபந்தன விநியோக முறைகள்	254
256.	பந்தனம் செய்யகாலவிதி	255
257.	பந்தனவகையும் லிங்கவகையும்	255
258.	அஷ்டபந்தனத்தின் அவசியத்தேவை	257
259.	பந்தனவகைகளின் லிங்கமும் பயனும்	258

சிவதத்வநிதி-7
ஆலயாங்கதத்வரூபவிளக்கம்

260.	ஆலயஅமைப்பில் தத்துவபாவனைமுறைகள்	260
261.	கோயிலும் கடவுளும்.	261
262.	தேவாலயமும் தேஹபாவனை முறைகளும்	261
263.	கிடந்தநிலையில் கோயிலுடல்	261
264.	நின்ற நிலையில் கோயிலுடல்	262
265.	அமர்ந்த நிலையில் கோயிலுடல்	263
266.	மூலாலயமும் மூவகைத் தேஹமும்	265
267.	ஆலயத்தில் கதவுகளின் அமைப்புத் தத்துவம்	266
268.	மூலஸ்தான சிவலிங்கஅமைப்புத் தத்துவம்	267
269.	விருஷப தேவரின் அமைப்புத்தத்துவம் (நந்திதேவர்)	267
270.	பலிபீடத்தின் அமைப்புத் தத்துவம் (மஹாபீடம்)	268
271.	கொடிமரத்தின் அமைப்புத் தத்துவம் (துவஜஸ்தம்பம்)	269
272.	திருவாசியின் அமைப்புத் தத்துவம் (பிரபாவளி)	269
273.	ஆலய திரைச்சீலையின் அமைப்புத்தத்துவம்	271
274.	ஆலய திருவிளக்கு அமைப்பு (தீப ப்ரதீபங்கள்)	271
275.	வாத்யவிசேஷங்களின் தத்துவம்	272
276.	கோயில் வகைகள் (திருமுறைகளில்)	273
277.	பெருமைமிகுத் தலலிங்கங்கள்	
278.	பஞ்சபூதத்தலங்கள் – மஹாபூதரூபலிங்கம்	274

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
279.	பஞ்சசபைகள் – நடேசரின் சபைவகை	274
280.	ஆறுஆதாரத்தலங்கள் (தேஹஷடாதாரக்ஷேத்திரம்)	275
281.	அஷ்டவீரட்டத்தலங்கள். (வீரட்டேச்வரத்தலவெண்பா)	276
282.	ஸப்தஸ்தான க்ஷேத்திரங்கள் (வெண்பா)	277
283.	தியாகராஜப்பெருமானின் ஏழுதலங்கள்	277
284.	காசிக்கு நிகரான ஏழுதலங்கள்	277
285.	பஞ்ச வ்யாக்ரபுரிகள் (புலிக்கால்முனிவர் வழிபட்டதலம்)	278
286.	நான்கு நாகேச்வரம் (பாம்பரசன் வழிபட்டதலம்)	78
287.	மூன்று தென்கயிலைத் தலங்கள்	278
288.	பன்னிரு ஜோதிர்லிங்க ஸ்தலங்கள்	279
289.	நவக்ரஹங்கள் பூஜித்த சிவஸ்தலங்கள்	281
290.	அறுபத்தெட்டு சிவக்ஷேத்ரங்கள்	282
291.	சிவத்தலவாழ்வும் சிவகதிப்பேறும்	285

சிவதத்வநிதி-8

லிங்கதத்துவரூப பாவனை முறைகள்

292.	ஆலயத்தை அருள்தரச்செய்யும் விமானப்ரதிஷ்டை	288
293.	சிவலிங்க தத்துவம் (லிங்கம் சொல்விளக்கம்)	289
294.	ஆலயத்தின் சூக்ஷ்மதேஹமே லிங்கம்	291
295.	மந்திர தர்மரூபமே லிங்கம் (பண்புஉருவமே)	292
296.	மந்திரதேஹரூபமே சிவலிங்கம்	293
297.	நாதபிந்து ரூபமே சிவலிங்கம்	293
298.	லிங்கத்தில் சிவசக்தி தியானமுறைகள்	295
299.	லிங்கபீடபாவனா முறைகள்	296
300.	ஹம்ஸபாவனா முறை	297
301.	சிவலிங்கத்தில் ரூபாரூபபாவனாமுறை	297
302.	சிவலிங்கத்தில் சிருஷ்டிகிருத்யபாவனை	298
303.	பஞ்சஸாதாக்யபாவனைகள்	299

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
304.	நாத ஜ்யோதிரூபமே லிங்கம்	300
305.	வேள்வித்தூண் உருவமே சிவலிங்கம்	301
306.	பாரதபூமிஅமைப்பே சிவலிங்கவடிவம்	302
307.	சிலைநடுவே சூலங்களில் லிங்கஉருவம்	303
308.	வஸ்துக்கருவின் யோகரூபமே சிவலிங்கம்	304
309.	சிவசக்திசங்கமரூபமே சிவலிங்கம்	305
310.	விச்வஸ்வரூபமே சிவலிங்கம்	306
311.	ஷட்த்வ ஸாதாக்யரூபமே லிங்கம்	307
312.	சப்தபிரம்மரூபமே சிவலிங்கம்	309
313.	ஞானஸாதன ஸத்பாவனாவிருத்தி	316
314.	லிங்கத்தில் சிவபாவனை	317
315.	ஸகளமும் நிஷ்களமும்	319
316.	ஆவாஹனவிஸர்ஜன பாவனைமுறை	323
317.	பரப்ரம்ம நிஷ்கள தடஸ்த இலக்கணம்	326
318.	சிவலிங்கத்துள்ளே சிவபாவனாமுறை	328
319.	பிண்டிகா தத்வரூபபாவனை	330
320.	லிங்கத்தில் தத்துவபாவனை (மூப்பகுதிகள்)	333
321.	ஷாட்குண்யரூபம் லிங்கம்	334
322.	ஸகளநிஷ்களமே சிவலிங்கம்	334
323.	சிவலிங்கத்தில் பரசிவ நிஷ்களபாவனை.	335
324.	பரமசிவத்தின் பத்துபெயர்களின் விளக்கம்	336
325.	சிவபரத்வவிளக்கம்	337
	சிவதத்வநிதி-9	
	வழிபாட்டின் பயன்கள்	
326.	ஐவேள்வி வகையில் இறைவழிபாடு	338
327.	லிங்கத்திலிருந்து தேவர்களின் தோற்றம்.	339
328.	மூலமூர்த்தியின் பெருமை (மூலலிங்கமஹிமை)	340

வ. எண்.	தலைப்பு விவரங்கள்	பக்கம் எண்.
329.	லிங்கபூஜையில் எண்ணிக்கையின் பயன்	341
330.	சிவபூஜா பலவிதி	342
331.	சிவபூஜா ஆதாரங்கள்	342
332.	சைவாகமங்கள் கூறும் மண்டலவகைகள்	
333.	பன்னிருமாஸ பௌர்ணமி பூஜை மண்டலங்கள்	345
334.	ஷட்ருது (ஆறு பருவகால) பூஜாமண்டலங்கள்	345
335.	பன்னிரண்டு மண்டலவகைகள் (சூக்ஷ்மாகமத்தில்)	345
336.	மண்டலபூஜையின் சிறப்புப் பயன்கள்	345
337.	மண்டலத்தில் சிவலிங்க வழிபாடு	346
338.	கௌரீதிலக மண்டலம்	347
339.	கௌரீலதாலிங்க பூஜாமண்டலம்	348
340.	உமாகாந்த மண்டலம்	349
341.	பத்ரமண்டலம்	350
342.	சிவபுராகாரமண்டலம்	351
343.	புராகார மண்டல கல்பனகிரமம்	351
344.	ஸர்வதோபத்ர மண்டலம்	353
345.	ஸ்வல்ப ஸர்வதோபத்ர மண்டலம்	354
346.	நவநாபமண்டலம்	354
347.	பஞ்சாப்ஜ மண்டலம்	355
348.	மண்டலப் பயன்பாடும் பயனும்	355
349.	ஸ்வஸ்திக மண்டலம்	356
350.	துவாதசலிங்கதோ பத்ரமண்டலம்.	358
351.	மண்டலபூஜையில் 108தெய்வங்களின் இடமும் பெயரும்	361
352.	அண்டமும் பிண்டமும் அருட்சிவலிங்கமே	362
353.	சிவலிங்க வழிபாட்டின் அவசியம்	363
354.	சிவ வழிபாட்டுத்தத்துவம் (ஆலயவழிபாட்டுப்பெருமை)	365
355.	வாழ்த்து	370

உ

நமச்சிவாய்யாம்

லிங்கஸ்தாபனம்-அஷ்டபந்தனம்

(ஆகமக்கோயிலமைப்புமுறை பாகம்-2)

கோயிலின் அருங்கலைக் கோலம்

ஆலய அமைப்பில் ஆகம சிற்பத் துறைகள்

உலகெங்கும் உள்ள உயிர்கள்யாவும் போகம் மற்றும் மோக்ஷம் என்னும் இருவகையான பயனையும்பெற்று, உய்வுபெறுவதற்காக, இறைவன் உபதேசித்து அருளிய சிறப்புச் சமயநூல் சிவாகமம், வேதம் விதித்ததே விதி. ஆகமம் கூறியதே கிரியை, இறைவனை வெளிப்படுத்தி, நிலைபெறச் செய்திடவும், ஆன்மாக்கள் அருள்பெறவும் தேவாலயங்கள் தேவையானவை. கோயில்கள் இறைவனின் உறைவிடமாகவும், திருமேனியாகவும், இறைவனுடைய அருளம்சங்கள் நிறைந்தவைகளும் ஆகும். இறைவன் (மந்திரத்தினால்) தக்க ஒலிமுறையினால் வெளிப்படும் பெருஞ்சோதியன். ஆலயவழிபாட்டுச் சிற்பங்கள், ஆலயகட்டிடங்கள் இவை ஒளிமயமான இறைவனின் கலை உருவங்கள். இறைவன் மந்திரத்தில் ஓசையிலும், சிற்பத்தில் ஒளிமயமான கலைவடிவிலும் நீக்கமற நிறைந்து அருள்கிறான். ஆதலால்

சிற்பசாஸ்திரத்தின் விதிமுறையிலான கலைஉருவத்தினுள்ளே, சிவாகம மந்திரவடிவத்துள்ளமாக இறைவன் மறைந்து நின்று அருள்கிறார் என்கின்றன சிவாகமங்கள்.

மந்த்ரம் விநா க்ரியா நாஸ்தி கர்ஷணாதி அர்ச்சனாந்திகா

என்கிறது காமிகாகமம். இதனால் தெய்வத்தொடர்புள்ள அனைத்துக் கிரியைகளிலும் மந்திரமின்றி ஒரு கிரியையும் ஏற்புடையதாக கூறப்படவில்லை என்கிறது ஆகமம். **"ஓசை ஒளியெலாம்ஆனாய் நீயே"** என்பது அருளாளர் அப்பரடிகளின் திருவாக்கு. மந்திரஓசை ஆசார்யராலும். ஒளிஉருவம் சில்பியாலும் அமைகிறது. எனவே புதிய ஆலய அமைப்பில் இடம்பெரும் சடங்குகள் பற்றி இனி காண்போம்.

ஸ்தபதியும் ஸ்தாபகாசாரியரும்

ஆலய கட்டிடமூர்த்திகளுக்குச் சிற்பாசார்யரும், கிரியை மற்றும் இறையின் வெளிப்பாட்டிற்குச் சிவாசார்யரும் முழுவதுமாக பொறுப்பாளர்களாகி, குழந்தைக்கு அதன், தாயும் தந்தையும் உள்ளதுபோல் ஒரு கோயிலுக்கு இருவரும் இருந்துகொண்டு அந்த ஆலயத்தில், இறையின் அருளை நிலைபெறச் செய்கின்றனர். எனவே, சிற்பிக்கும் ஆசார்யருக்கும், சமயநூல்களுள் இணைந்து பணியாற்றும்வகையில், பலசடங்குகள் கூறப்படுகின்றன. இறைவனின் திவ்யத் திருமேனியே திருக்கோயில்கள், கோயில் கோபுரம், பிராகாரம், விமானம், முதலியன யாவும் அதன் அங்கங்கள். கோபுரம் என்பது திருவடியாக விளங்கி, அருள்தரும் பெருமைமிக்க உடலுறுப்பு நிலையாகும்.

அண்டத்திலும் பிண்டத்திலும் ஆண்டவன்:

மனிதன் தன் முயற்சியாலும், அறிவாலும், உணர்வாலும், கண்டு பிடித்துச் சொல்லிய அனைத்துச் செய்திகளிலும், தலையாயதாகக் கொள்ளப்படுவது ஒன்றேயொன்று. அது நாம் கண்ணுறும் அண்ட சராசரங்களை ஒரேயொரு ஆற்றலே வெளிப்படுத்துகிறது என்றும், அவ்வாற்றல் அவ்வனைத்துப் பொருள்களிலும் மரத்தில் தீ போல் மறை பொருளாக விளங்குகிறது என்றும், அதுவே மெய்ப்பொருளென்றும், நமது உள்ளத்தின் உயிர்ப்பாக அது உள்ளது என்றும், கொண்ட உணர்வும், கருத்தும், முடிவும், அதுவே என்பதுமாகும். அவ்வுணர்வால் உறுதிப் படுத்துவது யாது? எனில், நமது உடம்பை அண்டமென்றும், அவ்வண்டத்திற்குள் உயிர்ப்பொருள் ஒன்று, மறைபொருளாக விளங்குகிற தென்றும் கொண்டதேயாகும். இன்னும் சுருக்கிக்



கூறுவோமேயானால் உயிர்ப்புள்ள ஆற்றலே ஆன்மாவென்றும், அதன் உறைவிடம் உள்ளம் என்றும், அதனை அடைத்து நிற்பது உடம்பு என்றும், அறுதி யிட்டுக்காட்டிய அருமைப்பாடே அதாகும். உடலை பின்டம் என்பர். அண்டங்களைத் தோற்று வித்த பேராற்றலே, பெரும் பொருளே, மறைபொருளே, வஸ்துப்பிரம்மம் என்றும் (வஸ்து = மூலக்கருப்பொருள்) பிண்டமாகிற அண்டத்திலும், அண்டமாகிற பிண்டத்திலும், அடைபட்டு விளங் கிடும் மறைபொருளே, பெரும் சக்தியே வாஸ்துப் பிரம்மம். வாஸ்து என்றால் வஸ்துவின் சம்பந்தமானது. வஸ்து என்ற சொல்லுக்கு மண், நிலம், என்பது பொருள். அதில் அமையும் பயன்படும்பகுதிகள் வாஸ்து ஆகும். இதற்கான சான்று, **"தரா ப்ரதான வஸ்து ஸ்யாத் தத்பவம் வாஸ்து ருச்யதே"** என்பதாகும். இதன்படி மனையில் அமைந்த கோயில் முதலான கட்டிடங்கள் வாஸ்து என்பதைப் பண்டைக்காலச் சிற்பிகள் கண்டறிந்து, நமது நாட்டிற்கு அரிய ஓர் ஆன்மீகச் செல்வத்தை அளித்து இருக்கிறார்கள். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டே வாஸ்துசாத்திரங்களையும் ஆலயக்கட்டிட விதிமுறைகளையும் அவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

உடலும் உயிரும்போல் கோயிலும் இறையும்

மனித உள்ளத்தைப் பெருங்கோயில் என்றும், ஊனுடம்பை ஆலயம் என்றும் திருமூலரின் திருமந்திரம் உணர்த்திச் சொல்லும். உயிராகிய உத்தமன் குடிகொள்ளும் இடம் உடம்பு ஆகையினால், உயிரை ஓம்புதற் பொருட்டு உடம்பையும் ஓம்புதல் வேண்டும் என்கிறது அந்நூல். எனவே கோயில்கட்டிடத்தை இறைவனின் உடம்பாகக் கொண்டு, அதற்குள் பிரதிஷ்டை செய்யப்படும் உருவத்தை பரமாத்மா, என்றும் சொல்கிறோம். இந்த பரமாத்மாவை விசாரணையை நிலைநிறுத்திடவும், உறுதிப்படுத்திடவும், வழிவழியாக வரும் தலைமுறையினர் தெரிந்து கொள்வதற்கும், இங்ஙனம் நாம் கோயில்பூசை முதலிய இறைபணிகளைச் செய்ய வேண்டியவர்களாகிறோம்.

ஆன்மசுகம் பெற உதவும் அருங்கலை (ஆகமமும் சிற்பமும்)

லிங்கோத்பவர் (மும்மூர்த்திகள்)

ஆன்மநிலையினை, உயிரின் உண்மையான தன்மையினை, உற்று ணர்ந்த மனிதன், ஆன்மப்பண்புகள் வளர்ந்து, மேலும் வளம்பெறத் தனது ஆன்ம அனுபவங்களை, சுகங்களைத்தேடி அலைகிறான். ஆன்மாவுக்கு இன்பநுகர்வுகளைத் தந்திடும் மகத்தான ஆற்றல்கள் வாய்க்கப்பெற்றவை நுண்கலைகள். நுண்கலை விற்பன்னர்கள் அன்றாடம் ஆன்ம அனுபவம் வாய்க்கப்பெற்ற அனுபூதிமான்கள். ஆகமம் சிற்பம் இவை இரண்டும் அகக்கலை மற்றும் புறக்கலை ஆகும். இவை இரண்டுக்கும், மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களின் சுத்திகளும், ஆனந்தநிலையுடன், ஈடுபாடும், உணர்ச்சிமிகுந்த வெளிப்பாடும், ரசானுபவமும், தேவை. இக்கலைஞர்கள் தத்தமது ஆன்மானுபவங்களையே கலைவழியாக மக்களிடம் பகிர்ந்து கொள்கிறார்கள். ஒருகலைஞனின் அன்றாடப்பணியே இப்படித்தான் அமைந்துள்ளது. எனவே நுண்கலையைத் தமிழ்நாட்டு மன்னர்கள் தங்கள் நேரடிப் பார்வை யின்கீழ் வைத்துப் போற்றிப் பாதுகாத்துவந்தனர்.

நுண்கலைகளின் ஒலிஒளி வடிவங்கள்

கலையின்பம் உடலின்பத்தைத் தருவதல்ல. மாறாக உடலை, மறந்துபோகச்செய்து, ஆன்மாவைத் தீண்டி, ஆன்மாவை, இன்பநுகர்ச்சியில் திளைக்கச்செய்து, ஆன்மாவைப் பக்குவப்படுத்துகிறது. மேலும் வளம்பெறச் செய்கிறது. ஆன்மாவும் நுண்பொருள் (சூக்ஷ்மம் / சித்து) அவ்வாறே கலைகள் தோற்றுவிப்பதும் நுண்பொருள். எனவேதான் இதில் முழுமையான ஐக்கியம் (லயம்) அதாவது இரண்டறக் கலந்து ஒருமித்தல் எளிதாகிறது. நுண்கலை வழியாகக் கிடைத்திடும் ஆன்மானுபவங்கள், தன்மையில் ஒன்றேயா யினும் ஒருசில கலைகள் அவ்வனுபவங்களை உள்ளத்தில்

நிறுத்திடும் ஆற்றல் வாய்ந்தவைகளாக அமைந்துள்ளன. மற்றும்சில தோன்றி மறைந்துவிடுகின்றன. ஒலிவழிப்பட்ட கலைகள் தோன்றிய கணமே மறையும் தன்மையின. ஆனால் ஒளிவழிப்பட்ட கலைகள் எப்பொழுதும் நிலையானவை. அவை ஓவியம், சிற்பம், கட்டிடம், ஆகிய நுண்கலைகள் இத்தன்மையின, என்பதை உற்று அறிதல் வேண்டும். ஆகவேதான் அத்தகைய இலக்கண ஒளிஉருவக் கட்டிட சிற்பத்துள், ஒலிவடிவம் (மந்திரஓசை) பொருத்தப்பட்டு, பலகாலம் தெய்வாம்சத்தை நிலைபெறச்செய்ய சிவாசார்யர்களால் பிரதிஷ்டை செய்யப்படுகிறது. இங்கே ஒளிவடிவத்துள் உள்ள தெய்வபிம்பத்தில், மந்திர ஒலிவடிவத்துள் இறை உறைகிறது. இதுவே பிரதிஷ்டை அல்லது கும்பாபிஷேகம் எனப்படுகிறது. ஓசையும் ஒளியும் கூடிய நாதபிந்து வடிவமே சிவலிங்க உருவமாகும். இதில் யாவரும் அடங்கிஉள்ளனர்.

லிங்கம் சொல்விளக்கம் (லிங்கம்=பெயரின் பொருள்)

லிங்க்யதே = ஞாயதே, அனேன இதி = லிங்கம். லிகி கதௌ என்ற தாதுவிலிருந்து **"யே கத்யர்த்தகா: தே ஞானார்த்தகா:"** என்ற விதிப்படி இதனால் அறியப்படுவதால் இது லிங்கம் என்பது இதன் பொருள். **"லிங்கம் சின்ஹ சோபயோ:"**, என்று அமரம் என்கிற வடமொழி நிகண்டு, சின்னம் என்று லிங்கசப்தத்திற்குப் பொருள் கூறுகிறது. மற்றும் தார்க்கிகர்கள் கூறும் பிரமாணங்கள், சாங்கியர்கள் கூறும் பிரகிருதி, குறியீடு, சின்னம், ஆண்குறி. ஆகியவை எல்லாம் லிங்கம் என்னும் சொல்லுக்குப் பொருளாக நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சாதாரணப் பொருளாக, பொதுவாக மொழிவழி நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சாதாரணப் பொருள்களே ஆகும். நிர்குணம் என்பது சிவலிங்கம் ஸகுணம் என்பது தெய்வஉருவச்சிலை எனப்படும்.



எட்டுபட்டையுடன் மூலலிங்கம்

சிவலிங்க சொல்விளக்கம்

சிவஸ்ய லிங்கம் = சிவலிங்கம், என்பதாக சிவனுடைய அடையாளம் **சிவலிங்கம்** என்பது

பொருள் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் சுவேதாச்வதரஉபநிஷதம் மற்றும் அதர்வசிரஸ் ஆகிய உபநிடதங்கள் சிவபெருமானை லிங்கநாசர் என்று கூறுகின்றன. இதற்கு அடையாளம் அற்றவன் என்பதுபொருள். இதுபோல் சூதஸம்ஹிதையின் யக்ஞவைபவ காண்டத்திலும் **ஸ்வயமேவ ஸதா லிங்கம் ந லிங்கம் தஸ்ய வித்யதே** (சூத–4–28–29) என்று கூறப்படுகிறது. இதனால், தானேதான் லிங்கம் அவருக்கு தனித்து வேறு லிங்கம் ஒன்றும் அறியப்படவில்லை என்று பொருள்வருவதால், சிவலிங்கம் என்பதற்கு சிவனே லிங்கம் என்பதுதான் சரியான பொருளாகும். இவ்வாறே யஜுர்வேதமும் **சிவாய நம: சிவலிங்காய நம:**, என்று சிவபெருமானையே சிவலிங்கமாகக் கூறுகிறது. சிவபெருமான் போரொளிப்பிழம்பாக இருப்பதை லிங்கம் என்ற சொல் உணர்த்துகிறது. **லிங்கரூபம் பரம் ஜ்யோதிர் லிங்க மித் யபிதீயதே.** யஜுர்வேதம் 4வது நாயராயணவல்லி என்கிற தைத்தரீய உபநிஷதத்தில் 10–ம்பிரச்னத்தில் லிங்கம் உணர்த்தும் ஸம்ஹாரசெயலுக்குஅதிபதி என்றுகூறி வணங்குகிறது வேதம். அதாவது, **நிதனபதயே நம:, நிதனபதாந்திகாய நம:** என்றும் மேலும் லிங்கத்தைப்போற்றும் முறைமையைக் கூறியுள்ளது. **ஊர்த்வலிங்கம், ஹிரண்யலிங்கம், சுவர்ணலிங்கம், திவ்யலிங்கம், பவலிங்கம், ஸர்வலிங்கம், சிவலிங்கம், ஜ்வலலிங்கம், ஆத்மலிங்கம், பரமலிங்கம்,** முதலான திருநாமங்களை வேதம் போற்றிக் கூறியுள்ளது **ஸர்வாத்மகம் சிவலிங்கம்** என்பதை உணர்ந்திடஉதவும், இவைகளில் இந்த உருவங்களிலேயே சிவப்பரம்பொருளும் சிவலிங்கமும் உள்ளதாகக் கூறி போற்றப்படுகிறது.



சிவஸ்ய + லிங்கம் = சிவலிங்கம் என்பதாக இச்சொல்லானது. தொகைச்சொல்லாக, சிவனுடைய அடையாளம் சிவலிங்கம் என்று சிலர் ஸமாஸபதம் என்று கூறுகிறார்கள். சிவன் என்றால் பரம்பொருள் சிவனைக் குறிக்கும் குறியீடு லிங்கம். எனவே இது சிவலிங்கம் எனப்படுகிறது. ஆனால் சுவேதாஸ்வதரம், என்ற உபநிஷதம் அதர்வசிரஸ் ஆகிய உபநிடதங்கள் சிவபெருமானை லிங்கநாச: என்று கூறுகின்றன. இதற்கு அடையாளமற்றவன் என்பதுபொருள். இதேபோல் சூதஸம்ஹிதையின். யக்ஞ வைபவ கண்டத்திலும்.

ஸ்வய மேவ ஸதா லிங்கம் ந லிங்கம் தஸ்ய வித்யதே.

(சூதஸம்ஹிதை 4–28–29)

"தானேதான் லிங்கம். அவருக்கு தனித்து லிங்கம் வேறு என அறியப் படவில்லை" என்று வருவதால், சிவலிங்கம் என்பதற்கு சிவனேலிங்கம் என்பதுதான் சரியானபொருளாகும். இவ்வாறே யஜுர்வேதமும் "சிவாய நம: | சிவலிங்காய நம:" என்று சிவபெருமானையே சிவலிங்கமாகக் கூறுகிறது. சிவபெருமான் பேரொளிப் பிழம்பாக இருப்பதையே லிங்கம் என்ற சொல் உணர்த்துகிறது. குணம் குறிகடந்தபேரொளியாகிய இறைவனை ஒரு குறியின் கண் வைத்து வழிபடும் பொருட்டுதிகழ்வது சிவலிங்கம்.

சிவரூபம் பரம் ஜ்யோதிர் லிங்க மித் யபிதீயதே |
தத்ரஸ்தா சக்தி ரித்யுக்தா பீடிகா ஸைவ நாந்யதா |
ஸர்வஸ் யோத்பத்தி லக்ஷ்யத்வாத் ப்ரதமம் லிங்க முச்யதே |
சிவ சக்த் யாத்மகம் ஸர்வம் சரா சர மிதம் ஜகத் |
த்ருப்திர் பவதி சாகானாம் வ்ருக்ஷமூலே ஜலார்ப்பணாத். |
தஸ்மாத் லிங்கார்ச்சனாத் த்ருப்தா: கீர்வாணா: ஸர்வதேஹின: ||

(சிவபூஜார்ணவே சிவகண்டம் படலம் 28)

இதன்படி, பேரொளியான சிவஸ்வொரூபம்தான் லிங்கம். அதன் ஒளிதான் சக்தி. லிங்கத்தின் பீடமும் அவள்தான். அனைத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாக இருப்பதால் லிங்கம் என்று பெயர். இவ்வுலகமெல்லாம் சிவசக்திகளின் சொரூபமானவை. "மரத்தின் வேரில் நீர்ஊற்றினால் மரம் முழுவதும் செழிப்படைவதைப் போல சிவலிங்கபூஜையைச் செய்வதால் வானவர்கள் (தேவர்கள்) முதல் உடல்படைத்த அனைவரும் திருப்தி அடைவார்கள்" என்கிறது அறநூல். எல்லாமும் நிறைந்து கடவுளாக கடந்து நிற்கும் பரம்பொருள் சிவம்.

ஸமேதயதி யந்நித்யம் ஸர்வார்த்தானாம் உபக்ரமம் |
சிவம் இச்சன் மனுஷ்யாணாம் தஸ்மாத் தேவஸ் சிவஸ் ஸ்ம்ருத:||

இதன்படி சிவம் என்ற சொல்லிற்கு மஹாபாரதத்தின் துரோணபர்வம் சிவம் என்பது இன்பம் எனப்பொருள்படும். அத்தன்மையுடைய பரம்பொருளே சிவமெனப்படுகிறது. மனிதர்க்கு இன்பஞ்செய்யவிரும்பி, எப்பொருள் களுக்கும் நித்தியமாய் உபக்ரமமாய் துவக்கமாய் ஆதியாய் உள்ளதை விருத்தி செய்தலினால் அந்தத்தேவன் சிவனெனப்படுவன் என்று சிவசப்தத்திற்கு வியாக்யானம் செய்யப்பட்டுள்ளது. யாவுமாகி பரிபூரணமாய்த் திகழ்வதும் அண்டமும் பிண்டமுமாகி விளங்குவதும் சிவலிங்கம். இதனை வேதஉபநிடதங்களும் கூறுகின்றன.

பூர்ணமதப் பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே|
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா(அ)வ சிஷ்யதே|| (உபநிடதம்)

புருஷஏவே (இ)தம் ஸர்வம் யத் பூதம் யத்ச பவ்யம். என்கிறதுவேதம்.

கேனோபநிஷதத்தில் ஒரு கதை உள்ளது. வானவர்கள் வ்ருத்திரன் ஏன்னும் அசுரனை வென்று வெற்றிக்களிப்பில் கர்வமுற்றனர். வானவர்களுக்குக் கர்வம் வரக்கூடாது என்பதை உணர்ந்த சிவபெருமான் பேரொளிமயமாக பூஜிக்கத்தக்க அரியவடிவில் தோன்றினார். இதற்கு யக்ஷம் என்று பெயர். இந்த **யக்ஷம்** என்பது யாது? என்றுஅறிய அக்னியும், வாயுவும் முயன்றும் முடியவில்லை. இந்திரன் தானே அறியவந்த பொழுது யக்ஷம் மறைந்து. அவ்விடத்தில் உமாதேவியார் காட்சியளித்தார். இந்திரன் அவரை யக்ஷம் யாது? என வினவியபொழுது, "அது பரம்பொருள். அவர்தான் உங்களுக்காக வ்ருத்திரனை வென்றார்" என்று கூறினாள். இங்கு கூறப்பெற்ற யக்ஷம் என்பதுதான் சிவலிங்கம். இதனை அதர்வணவேதம் கூறுகிறது.

"தவ யக்ஷம் பசுபதே அப்ஸ்வந்தஸ் துப்யம் க்ஷரந்தி திவ்யா ஆபோ ம்ருதே" என்கிறது இதன்பொருள் வருமாறு,

1) தவ = (த்வதீயம்) உம்முடைய

2) யக்ஷம் = (ஸ்வரூபம்) புண்யம். உருவம்

3) அப்ஸு = (உதகேஷு) நீரில். தண்ணீரில்

4) அந்த: = (மத்யே) உள்ளே. நடுவில்

5) வர்த்ததே = உள்ளது

6) அத: = ஆகையால்

7) துப்யம் = (த்வதர்த்தம்) உம்பொருட்டு

8) ம்ருதே = (உந்தனாய/அபிஷேகாய) நீராட்டலுக்காகவே

9) திவ்யா: =(திவிபவ:) ஆகாயத்தில் தோன்றிய கங்கை முதலான

10) ஆப: = (உதகானி) தண்ணீர்தீர்த்தவகைகள்

11) க்ஷரந்தி = ப்ரவஹந்தி = பெருகி ஓடுகின்றன என்பது இதன் பொருள் ஆகும்.

அதாவது **"உன்னுடைய பூஜ்யமான சொரூபம் நீருக்குள் இருக்கிறது. உன்னை அபிஷேகம் செய்ய திவ்யமான நீர் பெருகுகிறது."** என்பது இதன் பொருள். இக்கதையை அடியொற்றியே புராணங்களில், பெரிய ஜோதிஸ்தம்பமாக சிவபெருமான் தோன்றினார் என்றும், அவருடைய (சிரஸை) தலையை நான்முகனும், திருவடியைத் திருமாலும் தேடிக் காணஇயலாமல் திரும்பினர், என்ற கதை வருகிறது. இவ்விரு கதைகளும்கூட இறைவனேதான்லிங்கம் என்பதையே கூறுகின்றன. சைவசமயச் சிறப்புநூலான ஆகமம் இச்சொல்லுக்குக் கூறும் விளக்கம் இதுவேயாகும்.

லிங்காத் ஸர்வம் ஸமுத்பன்னம் லயம் தஸ்மின் ப்ரகீர்த்திதம் |
ஸ்ருஷ்டி ஸம்ஹார மேவோக்தம் லிங்க நாம்நா த்விஹோச்யதே |

(வாதுளசுத்தம்)

இதன்பொருள் லிங்கத்திலிருந்தே எல்லாம் தோன்றியது. முடிவில் அதனிடத்திலேயே எல்லாம் ஒடுங்குகிறது. இவ்விதம் படைத்தல், அழித்தல் ஆகியவைகளைச் செய்வதால் லிங்கம் என்று சொல்லப்படுகிறது என்று வாதுளசுத்தம் என்ற சைவாகமம் கூறுகிறது. இச்சிவலிங்கம் அருஉருவத்திருமேனி எனப்படுகிறது. மேலும் சூக்ஷ்மானதாக உள்ளதால் லிங்கம் என்கிறது கிரணாகமம்.

லயம் கச்சந்தி பூதானி ஸம்ஹாரே நிகிலான் யத: |
தேந லிங்க மிதி ப்ரோக்தம் சூக்ஷ்மத்வாத் லிங்கம் உச்யதே |

(கிரணாகமம்)

அநுக்ரஹாய லோகானாம் லிங்கானி ச மஹேச்வர |

என்ற ஆகமவசனப்படி உயிரினங்களுக்கு அருளவே லிங்கங்கள் பலவாக விளங்குகின்றன என்று அறியதக்கது.

ஸர்வம் லிங்கமயம் லோகம் ஸர்வம் லிங்கே ப்ரதிஷ்டிதம்

(லிங்கபுராணம் (2) 46-13)

என்று லிங்கபுராணம் கூறுகிறது. எல்லா உலகங்களும் லிங்கமயமாக உள்ளவையே. எல்லாம் லிங்கத்திலேயே நிலைபெற்றிருக்கின்றன, என்பது இதன்பொருள். எனவே அண்டசராசரங்கள் எல்லாம் சிவலிங்கத்தின் சொரூபம்தான் என்றே ஏற்படுகிறது. பெற்றோருடைய சாயலை மக்கள் பெறுவது தானே இயல்பு?

வேதமும் ஆகமமும்

சிவ ஏகோ த்யேயஸ் சிவங்கரஸ் ஸர்வ மன்யத் பரித்யஜ்ய.

(அதர்வசிகை)

வேதங்களில் **உண்மையை பேசு, தர்மம் செய், சிவன் பரம்பொருள், அவனை வணங்கு,** என்று சொல்லப்பட்டுள்ளது. **(ஸத்யம் வத - தர்மம் சர.)** சிவனை எப்படி வணங்குவது? அவன் உருவம் யாது? அவனை அடையும் வழிகள் எவை? என்பவைக்கு விளக்கங்கள் தேவையானால், அவற்றிற்கு ஆகமங்களில்தான் விடைகள் பேசப்பட்டுள்ளன. வேதம் மந்த்ரரூபமாய் தோத்திரரூபமானது. ஆகமம் செய்முறை கிரியா ரூபமாய் சாஸ்திர ரூபமானது. ஆகமங்களில் ஆலயம், சிவலிங்கம் இவைகளில் இறைவழிபாட்டு நெறிமுறைகள் தெளிவாகக் கூறப்பட்டு, வாழ்வியல் நன்நெறிமுறைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

சைவாகமங்கள் இறை, உயிர், தளை (உலகு), எனப்படுகிற பதி, பசு, பாசம் என்கிற மூன்று உண்மைப்பொருளை விளக்குகின்றன. இவைகளின் புறஅமைப்பே ஆலய சிவலிங்க அமைப்பு ஆகும், இந்த மூன்று பொருள்களும் என்றும் நித்தியமாய்உள்ள பொருள்கள் என்று அறிக.

முப்பொருளை விளக்கும் ஆலயத் தேவை

யஜுர்வேதத்தில் ருத்ரத்தில் **"நமச்சிவாய ச சிவதராய ச"** என்றும், **"அம்பிகாபதயே உமாபதயே பசுபதயே நமோ நம:"** என்றும், கூறப்பட்டுள்ளது. இதில் பசுபதயே என்பதற்கு "பசுக்களின்

தலைவன்" என்பது பொருள். பதி ஒன்று, பசு மற்றொன்று, பாசத்தால் கட்டப்பட்டதால் உயிருக்குப் பசு என்றபெயர் வந்தது. எனவே இனம்பற்றிப் பாசமும் கொள்ளவேண்டும். இம் முப்பொருள் உண்மையை உலகத்தவர்களுக்குச் சுலபமான முறையில் சுட்டிக்காட்டவே வசிப்பிடங்களில் நம்முன்னோர்கள் கோயில்களைக் கட்டிவைத்து, அதில் பதியாய் சிவலிங்கத்தையும், அதன் முன்னர், உயிராகிய பசுவடிவாய் விருஷபதேவரையும், அதன்பின்னால் பாசவடிவமாய் பலிபீடத்தையும் பிரதிஷ்டை செய்துள்ளார்கள். இக்கருத்தைத் திருமூலநாயனார் தனது திருமந்திரத்தில் கூறிப்பிட்டுள்ள சான்று.

ஆய பதிதான் அருட் சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றென நிற்கும்
ஆய பலி பீட மாகும் நற் பாசமாம்
ஆய அரனிலை ஆய்ந்து கொள் வார்கட்கே (திருமந்திரம்)

என்று திருமந்திரத்தில் ஆகமப்படி அருளிச் செய்துள்ளதாலும் உணரலாம். பசுக்களாகிய ஆன்மாக்கள் இயல்பாகவே பாசங்களால் பிணிப்புண்டவையும், குறைந்த ஆற்றல்உடையவையுமாம். பசுக்கள் பாசநீக்கம் பெறவும், போகம், மோக்ஷம் இவற்றைப் பெறவும் ஆலயவழிபாடு அவசியமாகின்றன.



மஹாதேவரும் மஹாவிருஷபமும்

சைவாலயப் பெருமைகள்

சைவசமயம் மிகமிகப் பழமையானது. சிவனின் சம்பந்தம் உடையது சைவம். இதனை தத்திதாந்த நாமம் என்பர். இதனை திருமந்திரப் பாடல் "சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆகுதல்" என்கிறது. இதனைச் சைவசமயம் என்று சொல்வார்கள். சமயம் என்றால் நல்வழி அல்லது

நந்நெறி அதாவது ஸன்மார்க்கம் என்று பொருள். மதம் என்றால் கருத்து என்று பொருள். அது அபிமதம், சம்மதம் போன்றசொல். யானைக்குப் பிடிக்கும் மதம் என்பது வேறு எழுத்தும் அர்த்தமும் உள்ள வடமொழிச் சொல். எனவே இந்த மதம் என்ற சொல்லுக்கு அஹந்தை எனும் பொருள் கொள்ளலாகாது. எனவே சைவசமயமே உண்மைச் சமயம் என்றும், "சைவத்தின்மேற் சமயம் வேறிலை அதிற்சார் சிவமாந் தெய்வத்தின்மேற் தெய்வம் இல்" என்று பாராட்டியுள்ளனர். சித்தாந்த ஆகமசாத்திரங்களில் கூறப்பட்ட உண்மை யாதெனில்? உயிர்கள் பாசத்தை விட்டு நீங்கிப் பதியாகிய சிவபெருமான் திருவடிகளை அடையும் (கூடும்) சிவயோகத்தையே சிவாலயவழிபாடு உணர்த்தும். யோகம் என்னும் சொல்லுக்குப் பொருள் "ஒன்றுபடுதல்" என்பதாம். உயிரும் இறைவனும் ஒன்றுசேருவது, இந்நிலையில் இது சிவயோகம் எனப்படும் ஆன்மாக்கள் ஒடுங்கி, பேரின்பம் துய்க்குமிடம் ஆலயம். ஆலயவழிபாடு என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிமுறைகள் மூலமும் செய்யத்தக்கதும், நால்வகை முக்திகளை அடைவிப்பதும் ஆகும். எனவே அதற்குத் தேவையான, சைவசமயத்தின் நான்குதிசை வாயில்கள் உடைய சிவாலயத்தையும், அங்குள்ள சிவலிங்கத்தையும், இவைகளின் சைவசித்தாந்த தத்துவ உருவ விளக்கத்தையும், உணர்த்துகின்ற செய்திகளையும் பற்றி இனிகாண்போம்.

கோயில் தத்துவம்

கோயில் என்பது (கோ+இல்) என்பதாக அரசன் இருக்கும் இடமாகிய அரண்மனைக்கும், நம் தலைவனாகிய கடவுள் எழுந்தருளி இருக்கும் இடங்களுக்கும் வழங்கும் சிறப்புச் சொல்லாகும். "தேவஸ்யாங்காநி பவனம் வக்ஷியே தல் லக்ஷணம் ச்ருணு" என்கிற மகுடாகமவசனப்படி கோயில் தேவனின் உறுப்பு என்பதை அறியலாம். தெய்வத்திருமேனியே கோயில்.

ஆலயம் சொல்விளக்கம்

ஆன்மாக்கள் (உயிர்கள்) வசிக்கும் (லயிக்கும்) இடமாதலால் ஆலயம் எனப்படும். இதில் உள்ள "ஆ" என்பது உயிர்களையும், "ல" என்பது ஒடுங்குதலையும், "ய" என்பது இறைவனை அடைதலையும் "ம்" என்பது மலநாசம் பெற்று மங்களத்தைப் பெறுதலையும் உணர்த்துவனவாகும்.

ஆலயத்தின்தேவை தத்துவ விளக்கம்

உடம்பிலுள்ள உயிரானது நம் உடம்பெங்கும் பரவி இருப்பினும், அறிவித்தால் அறிகின்ற ஜாக்ராவஸ்தையிலே, விசேஷித்து நிற்பது போலவும், பசுவினிடத்தில் பாலானது தேகமெங்கும் செறிந் திருப்பினும் மற்றைய இடங்களில் தோன்றாது அதன் மடியில் ஸ்பரி சித்த மாத்திரத்திலேயே அதனின்றும் தோன்றுதல் போலவும், மேலும் நிலத்தடிநீர் பரவிஇருப்பினும் கிணறு மூலம் பயன்தருவது போலவும், ஆதியும் அந்தமுமில்லாத ஆண்டவன் சர்வவியாபகத்துவம் உள்ளவராய் இருப்பினும், ஆலயங்களிலே தயிரில் நெய்போல் விளங்கியும், மற்றைய இடங்களில் பாலில் நெய்போல் விளங்காது நிறைந்து நின்றும், "இறைவன் அருள்செய்வார்" என்பது ஆலயங்களின் தத்துவத்தையும், அவசியத்தையும் உணர்த்தும். இக்கருத்தையே சிவஞானசித்தியார் நூலின் அருட்பாடலும் விளக்குகிறது. அப்பாடல் இதுவே,

திருக்கோயி லுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவெ கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
உருக்கோலி மந்திரத்தா லேநிலையு மவர்க்கும்
உளனெங்கு மிலனிங்கு முளனென் பவர்க்கும்
இருப்பாய வடிவாகி யின்தனத்தி னெரிபோல்
மந்திரத்தின் வந்துதித்தே யிருஞ்சுர பிக் கெங்கும்
உருக்காண வொண்ணாத பான்முலைப் பால் விம்மி
ஒழுகுவது போல் வெளிப்பட் டருளுவ னன்பர்க்கே.

(சிவஞானசித்தியார்)

சிவாலய விமானமும் சன்னதி விருஷபபீடமும்

ஆலய அமைப்பின் நோக்கம்

மானுடப்பிறவி அல்லாத விலங்குகள் முதலான பல்லுயிரும் மேன்மை பெற்றிட, பொதுவாக வேண்டப்படுகிற, பிறருக்காக வழிபாடு செய்யப் படுகிற, இடமே ஆலயமாகும். சிவயோக சாமர்த்திய மில்லாதவர்க்கு உண்மை உணர்வதற்கு உபாயமாக விளங்குபவை ஆலயங்களாகும்.

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்துமாடும் அரன்பணிக்காகவன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன்தனை அருச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ.

(சிவஞான சித்தியார்)

ஆலயபூசையே "பரார்த்த பூசை" எனப்படுவது. தன்நலம் கருதி, தம் வீட்டில் தம்மால் செய்யப்படுவது "ஆத்மார்த்த பூஜை" எனப்படுவது. இவ்விதம் ஆத்மார்த்தம், பரார்த்தம் என்று பூஜை இருவகை. அவ்வாறே தனக்குள் மனதால் செய்வது "மானஸ பூஜை" (அந்தர்யாகம்), அகப்பூஜை எனவும், தனக்கு வெளியே பொருளால் செய்வது பாஹ்யபூஜை, புறப்பூஜை எனவும் இருவகைப்படும். ஆத்மஞானிகள் மானஸபூஜையை செய்வார்கள். அது நம்போல்வார்க்கு எளிதல்ல, ஆதலால், நாம் ஆலய வழிபாட்டை முதற்கண் கடைபிடித்துப் பின்பு, இங்குள்ள ஈசனே அங்குள்ளான், அங்குள்ள ஈசனே இங்குள்ளான் என்றும், பின்பு அவனே எங்குமுள்ளான் என்ற உணர்வும், பக்குவமும் வந்தபின்பு ஆலயவழிபாடு நம்மை அறியாமலேயே நம்மைவிட்டு அகலும். நாம் அதனை அகற்றுவதற்கு தகுதியற்றவர்கள் என்று அறிவது அவசியம்.

ஆலயவழிபாட்டின் அவசியம்

சாதாரணமக்கள் அறிவுடையவர்கள் போல நடித்து ஆலய வழிபாடு செய்யும் மக்களை ஏளனஞ்செய்து வருவதைக் கண்டு, நாம் ஒருபோதும் ஆலயவழிபாட்டைப் புறக்கணித்தல் கூடாது. ஆண்டவனை நேரில்கண்ட நமது சமயாசாரியமூர்த்திகளே அநேக அடியார்கூட்டத்துடன், தலயாத்திரையைச்செய்து ஆலயங்களில் பெருமானைக்கண்டு, வணங்கி வழிபட்டார்கள் என்று நம் நூல்கள் கூறுவதால் அறியலாம். அவர்கள் எதற்காக ஆலய வழிபாட்டினை மேற்கொண்டார்கள்? அவர்கள் இறைவனை நேரில் புறக்கண்களால் கண்டார்கள். அவனுடன் அளவிளாவினார்கள். அவனருளைப்பெற்று அவன்செய்யும் பலஅற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார்கள் என்றால், ஒன்றுக்கும்பற்றாத நாமா ஆலயவழிபாட்டைக் கைவிடுவது? விட்டால் நமக்கு உய்வே இல்லை. இறைவன் வெளிப்பட்டு அருளும் இடமே கோயில் எனும் லிங்கம் என்று உணர்க. மரக்கட்டையில் நெருப்பு

வெளிப்படுவது போலவும், தயிரில் நெய்போலவும், மலரில் மணம்போலவும், லிங்கத்தில் சிவன் மறைந்தும் நிறைந்தும் எப்போதும் இருந்தபடி அவ்வப்பொழுது வெளிப்பட்டு அருள்கிறார் என்கிறது ஆகமம்.

காஷ்ட மத்யே யதா வன்ஹிர்: ததி மத்யே யதா க்ருதம். |
புஷ்பமத்யே யதா கந்தம் லிங்கமத்யே ஸதாசிவ: || (காமிகாகமம்)

என்கிறது சிவாகமம். இதனையே கூறும் திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரப்பாடல் இதுவே.

விறகிற் றீயினன் பாலிற் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்
உறவு கோல்நட் டுணர்வு கயிற் றினால்
முருக வாங்கிக் கடய முன் நிற்குமே. (அப்பர் தேவாரம்)

ஆலய வழிபாட்டின் அரும்பயன்கள்

ஆலயதரிசனத்தால் நமக்கு காணக்கூடியவை (ப்ரத்யக்ஷமான பயன்கள்), காணப்படாதவை (பரோக்ஷமான பயன்கள்) என்று இருவகையிலும் பயன்கள் ஏற்படுகின்றன. உயிர்கள் தாம்உய்யும் பொருட்டுச் சாத்திரங்களில் கூறிய சரியை கிரியை முதலாகத் தொண்டுகளைச் செய்து, பயனடைவதற்கு கோயில்கள் உதவுகின்றன. உயிர்கள் அனைவரும் தங்கள் கவலைகளையும், உலகஉறவு எல்லாவற்றையும் மறந்து, ஆண்டவனைக் கண்டு வணங்கி, அவனருளைப் பெறவும், அவனிடத்தில் அமர்ந்து, அவனிடம் ஒருமுகப் படுத்திய மனதுடன் தியானித்துக் கூடி, மனஅமைதியைப் பெறவும், கோயில்கள் உதவுகின்றன. பிறவித் தத்துவார்த்தங்களை மக்கள் உணர்ந்து கொள்ளவும், பிறவிப்பயனை எய்தவும், ஆலயங்கள் பெரிதும் உதவுகின்றன. மக்கள் ஆஸ்தீகர்களாக வாழவும், பிறருக்கு உதவுகின்ற இரக்ககுணம், அஹிம்சைப் பண்பு, எல்லாம் இறைவன் செயல் என்ற எண்ணம், இவைகளுடன் நல்லொழுக்க வாழ்வியல், இவைகள் நிலைத்திட ஆலயவழிபாடு வழிவகுத்து நமக்கு உதவுகின்றது.

ஆலய அமைப்புவிதி கோயில்கட்டும்குறிக்கோள்)

உலகில் சுவர்க்கவாசம் எனும் சுகநிலையைப்பெற விரும்பிடும் மன்னர்களால் கலியுகத்தில், நகரங்களை தேவாலயங்களுடன் அமைக்கவேண்டும் என்கிறது அறநூல். இதனைக்கூறும் சான்று,

தேவதா வேச்ம பூர்வாணி நகராணி கலௌயுகே |
கர்த்தவ்யாநி மஹீபாலைர் ஸ்வர்க்கலோக ம்ப்ீப்ஸுபி: ||

(விஷ்ணுதர்மோத்தரே & ஸ்மிருதிகௌஸ்துபே)

ஆலய அமைப்பில் அடிப்படைநூல்

சைவாகம வகைகளுள் சித்தாந்தவகையைச் சார்ந்த காமிகம் முதலான 28 சிவாகமங்களின் விதிமுறைக் கூற்றுப்படியே ஆலயங்கள் அமைக்கப்பட வேண்டும். இவற்றுள்ளும் ஏதேனும் ஒரு மூலாகம நூலையே பின்பற்றி கோயிலை அமைத்திடவேண்டும். இவற்றில் நாம் ஏற்றதில் கூறுப்படாதவற்றிற்கு மட்டுமே, பிறமூலநூலைப் பின்பற்றலாம். ஆலய அமைப்பிலக்கணத்திற்கு மூலஆகமத்தையும், கட்டிடத் தொழில்நுட்பம், கட்டிடவலிமை அழகுக்கலைநயம் இவற்றிற்கு சிற்பசாஸ்த்திரத்தையும், கைக்கொள்ளுவதே விதிக்கப்பட்ட ஆகமவிதிமுறையாகும், சிறப்பாக கோயில்கட்டுவதற்கு 28வகை மூலஆகமங்களையும், அந்த ஆலயத்தினுடைய நித்தியபூஜை முறைகளுக்கு 207 உபாகமநூல்களையும் அதிலும் அதனுடையதை மட்டும் பின்பற்றுமாறும் ஆகமம் கூறுகிறது. சிற்பசாஸ்திரத்திற்கும், ஆகமசாஸ்த்திரத்திற்கும் எதிலேனும் கூற்று கருத்து முரன்படும்போது, கோயிலுக்குமட்டும் சைவாகமத்தையே பின்பற்றவேண்டும் என்று ஆகமங்கள் உறுதியாக ஆணையிடுகின்றன.

ஆலய அமைப்பு முறைகள்

மூல லிங்கத்தின் (தெய்வஉருவத்தின்) தன்மைக்கு ஏற்ப, ஆலயம் அமைக்கப்படுவது அவசியம். புதியதாக ஆலயத்தை அமைப்பது இருவகைப்படும். அவை மூலலிங்கத்திற்கு ஏற்றதாக அதன் அளவைக் கொண்டு விதிமுறைப்படி கோயில்கட்டுவது. இதனை **"லிங்கவசாத் பிராஸாத நிர்மாணம்"** என்பர். மற்றொன்று கட்டும் கோயிலுக்கு ஏற்றவாறு, அக்கோயிலின் அளவுக்கேற்ப அதன் மூலலிங்கத்தை அமைத்து, நிறுவுவது, இதனை **"பிராஸாதவசாத் லிங்கநிர்மாணம்"** என்பர். இவற்றில் சுயம்பு – மானுஷலிங்க வகைகளுக்கு, முறையே அதற்கேற்ப முதலாவது கூறிய முறையையும், மற்றதையும் கைக்கொள்ளவேண்டும். அப்பர்பெருமான் பலவகைக் கோயில்களை தனது தேவாரத்தில் தொகுத்துக் குறிப்பிட்டுள்ளார். அதன் வா யிலாகவும் அறியலாம்.

புதிய ஆலய கட்டிட அமைப்புமுறை

ஆலய அமைப்பானது முறையே 1)நூலின்படி புதியகோயிலைக் கட்டும்முறை, 2)அமைந்துள்ள பழைய கோயிலின் மறுவடிவமைப்புமுறை என்று இருவகையில் கொள்ளப்படும். இதில் புதுக்கோ



மாமல்லபுரம் பல்லவர்கால கடற்கரைக்கோயில்

யிலை அமைப்பதற்குப் பல விதிமுறைகளையும், பலவகையான புனிதசடங்குகளையும் சிவாகமங்கள் கூறியுள்ளன. கட்டுமானப் பணியிடையே செய்யத்தக்கச் சிலநிகழ்ச்சிகளை சிற்பி, ஆசார்யர் இருவரும் கூடிச்செய்தலும், திருப்பணி முடிவுற்றபின்பு செய்யவேண்டிய பிரதிஷ்டாங்கமான மந்திரக்கிரியைகளை ஆசார்யர் மட்டுமே தனித்தும் செய்திட வேண்டும். ஆலயஅமைப்பு விதிமுறைகளை விளக்கிடில் விரியுமென்பதால் முக்கிய கிரியைகளை இங்கு முறைப்படுத்திக் குறிப்பிடுகிறேன்.

1. **கால நிர்ணயம்** = ஏற்றகாலத்தை முடிவுசெய்தல்.
2. **நிமித்தபரீக்ஷா** = சுபஅசுப சகுணமறிதல்.
3. **பூமிலக்ஷணம்** = (ஸ்தல) வாஸ்து இலக்கணமுறை.
4. **பூபரீக்ஷா** = முறைப்படி 16 வகை மண்பரிசோதனைமுறை.
5. **பிரவேசபலி** = உட்புகும்காலத்தில் அன்னபலிதரும் பூஜை.
6. **விப்ரப்ரீதி** = அங்குவேதியர்க்கு உணவளித்துகுறைகளைதல்
7. **பூமிநவகண்ட பதபூஜை** = 9 கட்டத்துள்ளேபிரம்மதேவர்குழு பூஜை
8. **பூபரிக்ரஹம்** = வாஸ்துவின் ஸ்வீகரணம் (மணையை கோயிலுக்கு ஏற்றல்)
9. **அவடசோதனம்** = குழியில் ஜலபூரணம் (நீர்நிறைத்தல்)
10. **ஆசார்ய அதிவாஸம்** = குருவானவர் அங்கு ஒருஇரவு தங்கி, வசித்தல்.
11. **பூகர்ஷணம்** = மண்ணை முறையே உழுதல்
12. **பீஜாவாபம்** = விதைகளைவிதைத்தல்
13. **கோவாஸம்** = பசுக்களை அங்கு தங்கவைத்தல்

14. பூபவித்ரீகரணம் = மனையை புனிதப்படுத்துதல்
15. சங்குஸ்தாபனம் = மரத்துமுளைக்குச்சியைத்தரையில் அடித்து அதன் நிழலால் திசையை நிச்சயித்தல்
16. ஆலயமானோபகரணபூஜை = அளவுகோல் முதலானவைகளை நிச்சயித்து ஏற்றல்
17. வாஸ்து பதவிந்யாஸம் = இடத்தைக் கோடுஅடித்துப் பகுத்தல்
18. தேவதாஸ்தானநிர்ணயம் = தெய்வ கர்பகிருக ஸ்தலநிச்சயம்
19. ஆயாதிகணித மானம் = பொருந்தும் அளவை நிச்சயித்தல்
20. வாஸ்துசாந்தி பலிதானம் = 81 பதத்தில் பலிதருதல்.
21. வாஸ்து அங்கபரீக்ஷா = பதபரீக்ஷா, பரிஹார சாந்தி
22. சல்யோத்தாரம் = குழிதோண்டி தேவையற்றவைகளை நீக்குதல், பின்பு சமன்படுத்தி மெழுகுதல்
23. ஆலய சூத்திரநியாஸம் = கோயிலுக்கான தரைப்பகுதிக் கோடிடுதல்
24. பாலாலயம் = இளங்கோயில் இடத்தை அமைத்தல்
25. பாலலிங்கஸ்தாபனம் = இடைக்காலபூஜைக்கான சிறிய லிங்கத்தை ஸ்தாபித்தல்
26. பாலாலய தேவ நிசேனம் = இளங்கோயிலில் இறைவனை இருத்துதல்
27. ஆலயபூமிதானம் = தசாங்கலேகனமாக செப்புபட்டய தானம் (இடப்பதிவு).
28. ஆலய உபபீடம் = ஆலயத்தின் அடித்தளத்தைக் கட்டுதல்
29. பாதசிலாநியாஸம் = அடியில் முதற்கல் பதித்தல்
30. கர்பநியாஸம் = ரத்தினக் கருப்பேழையை மறைத்துவைத்தல்
31. சாலாகல்பனம் = ஆறங்கக்கோயில் கட்டுதல்
32. விமானகல்பனம் = நாகரம்முதலான ஆறுவர்க்க கோயிலமைத்தல் (பிராகாரநிர்ணயம்)
33. பரிவாராலயம் = சுற்றுக் கோயிலின் நிர்ணயம் இடம் உருவம், அளவு இவற்றை நிச்சயித்தல்
34. துவார சிலாநியாஸம் = திருநிலை வாசக்கால் நாட்டுதல்
35. பிரணாளிகா ஸ்தாபனம் = கோமுகைக்கல் பதித்தல்
36. மூர்த்தேஷ்டிகா ஸ்தாபனம் = கோயிலின் உச்சித் தலைக்கல்பதித்து மூடுதல்
37. ஸ்தூபிதண்ட ஸ்தாபனம் = உச்சிகலசத்தூணைபொருத்தி வைத்தல்
38. சூளிகாஸ்தாபனம் = விமான உச்சியின் மகுடகலசத்தை வைத்தல்
39. துவஜபடஸ்தாபனம் = தெய்வத்தின் கொடியைபொருத்துதல்
40. சூலஸ்தாபனம் = உச்சியில் தெய்வச் சின்னத்தை பொருத்துதல்

Lingasthapanam-Astabandanam_360 Pages

41. **ஆலயதுவாரபாலகஸ்தாபனம்** = கருவறை முன்பு துவார தோரணம் அமைத்தல்

42. **கவாடஸ்தாபனம்** = கோயில்கதவுகளைப் பொருத்துதல்

43. **விமானதளத்து கண்டஸ்தானத்தில் திக்தேவதாகல்பனம்** = விமானத்தில் திசைச் சிற்பங்களை அமைத்தல்

44. **வர்ணலேபனம்** = பஞ்சவர்ணம்பூசுதல்

45. **நேத்ரோன்மீலனம்** = விமான 4திசாமூர்த்திகளுக்கு கண்திறத்தல்

46. **விமான தேவதா ந்யாஸம்** = கோயிலின் கட்டிடகோட்ட தேவதைகளை நிலைநிறுத்துதல்

47. **ஆலயஷடத்வசக்திநியாஸம்** = ஆறங்கமுள்ள கட்டிடத்தில் ஒலிபதிப்பால் ஆற்றலைக் கூட்டுதல்

48. **விமானப்ரதிஷ்டாயாகம்** = கோயில் மற்றும் விமானத்தின் தெய்வவேள்வியைசெய்தல்.

49. **கும்பாபிஷேகம்** = தெய்வப்புனிததிருக்குட நன்நீராட்டுதல்.

50. **நித்யஅர்ச்சனம்** = ஆலயத்தில் நித்யபூஜையை செய்தல்.

இவற்றுள்ளும் பல உள்ளுறுப்புச்செயல்கள் உள்ளன என்றறிய வேண்டும். இதில் உள்ள கும்பாபிஷேக செயல் மட்டும் 64 சடங்குகளை உடையது.

அர்தமண்டபத்தின் அவசியத்தேவை (முகமண்டப அமைப்புமுறை)

மூலாலயத்தை ஆகமப்படி ஒருபோதும் அதற்குமுன்புறம் அர்தமண்டபம் இல்லாமல் அமைக்கக்கூடாது. இக்காலத்தில் இறைவனை அருகில் தரிசிக்க விருப்பம்கொண்டு, மக்கள் பலர் முகமண்டபத்தின் அமைப்பைப், புதுக்கோயிலின் அமைப்பில், தவிர்த்து வருகின்றனர். இது மிகவும் தவறானசெயலே ஆகும். எவ்வாறெனில், இப்பகுதியானது மூலக்கருவறைக்கு முன்புறத்தில் அமைக்கப்படுவது. கருவறைப்பகுதி இறைவனுக்கு தலைப்பகுதி என்றால், இப்பகுதி வாய்ப்பகுதியாகும். இதனாலேயே இது முகமண்டபம் என்று பெயர் பெறுகிறது.

I. இங்கு இருந்துதான் திரையிட்டு மறைத்தபடி அன்னவகைப் பெரும்படையல்களை அதாவது நிவேதனத்தை, அமுதுபடைத்தலைச் செய்யவேண்டும் என்கிறது ஆகமம்.

II. மேலும் இப்பகுதி, உபசாரங்களின் வகைகளை இறைவனுக்கு அளிப்பதற்கு உரிய போகசக்திப்பகுதியாகும்.

III. மேலும்பல முக்கிய பயன்பாட்டுக்கும், இப்பகுதி அவசியம் தேவையாகிறது. இப்பகுதி. கருவறையின் அளவிலேயே அகலத்தையும், அதன் பாதிஅளவில் நீளத்தையும் கொண்டது. இதனாலேயே இது (அர்தம்=பாதி) **அர்தமண்டபம்** எனப்பெயர் பெறுகிறது. ஆனால் இப்பகுதி முக்கால்பங்கு, முழுப்பங்குவரை நீளம்மட்டும் கூடுதலகவும் அமைக்கப்படலாம். ஒரு முகத்தின் அளவான ஆலய கருவறையின் அளவிலேயே இது அமைக்கப்படுவதால் இது **முகமண்டபம்** எனப்படுகிறது. (முகம் = என்பதற்கு வாய் என்ற உடல்உறுப்பு பொருள்ஆகும்.) மேலும் இப்பகுதியானது முறையே கருவறையின் முன்புறத்தில் மட்டுமே அமைக்கப்பட வேண்டடியதாகையால் இது **அக்ரமண்டபம்** எனவும் பெயர்பெறுகிறது.

IV. விசேஷபயன்பாடாக போகசக்தியின் சிலையானது இங்கேயே இடதுபுறத்தில் வைத்து, நிலைபெறத்தக்கதால் இப்பகுதி **போகசக்தி மண்டபம்** என்றும் அழைக்கப்படும். சயனாலய மூர்த்தி (சொக்கர்) அல்லது பாதுகை இங்கு மட்டுமே வலதுபுறத்தில் வைத்திருக்கவேண்டும்.



கருவரையின் முன்மண்ட அமைப்பு

V. இதுவே கழுத்துப்பகுதியாக உள்ளது. ஆதலால் இங்கேயே மந்திரம் ஓதப்படவும் ஓதி உபசரிக்கவும் இந்த முகமண்டபம் தவறாமல் அமைக்கப்படவேண்டும்.

முன்மண்டபம், அக்ரமண்டபம், முகமண்டபம், எனப்படுகிற இது, கர்பக்ருஹத்திற்கு சமமாகவே, அதே அகலத்திலும் நீளத்திலும் முன்புறம் அமைக்கப்படுவது உத்தமமான, சிறந்த அமைப்புமுறையாகும். கருவறையின் முக்கால்பங்கு மட்டுமே நீளமுள்ளது மத்யமமான அமைப்புமுறையாகும். கருவறையின் பாதிபங்குமட்டுமே நீளம்உள்ளதாய் அமைப்பது கடைநிலை அமைப்புமுறையாகும். இருக்கிற இடவசதிக்கு ஏற்ப, இதற்கான இடப்பகுதி, தவறாமல் அமைக்கப்படவேண்டும் என்கிறது ஆகமம். இதன் அளவையும் பயன்பாட்டையும் கூறுகின்ற ஆகமசான்று, இதுவே.

ஸமம் த்ரிபாதம் அர்த்தம் வா ஹர்ம்யம் ஸ்யாத் வக்த்ர மண்டபம் |
ததர்த்த மண்டபம் குர்யாத் ஆசார்யா ராதனம் ஸ்ம்ருதம் ||

(பூர்வகாரணாகமம் + காமிகாகமம்)

இதன் அமைப்புமுறையைசைவாகமநூல்களில்பிராஸாதலக்ஷணவிதி எனும் படலத்தில் விரிவாகக் காணலாம். இதனமைப்பை பகூறும் சான்று,

ப்ராஸாதார்த்தம் முகாயாமம் விஸ்தாரம் ஸம முச்யதே |
த்ரிபாதம் வா முகாயாமம் சார்தமண்டப முச்யதே || (சுப்ரபேதாகமம்)

இவ்வாறு சுப்ரபேதாகமம் அளவுடன்கூறி வலியுறுத்தியுள்ளதைக் காணலாம். இப்பகுதி தவறாமல் முக்கியமாக அமைக்கத்தக்கது ஆகும்.



சிதம்பரம் ஸபாநாயகர் சிவகாமி

லிங்க உருவஅமைப்புகள்
(உருவவகை அமைப்புச்சிறப்பு)

லிங்கம் யூபாகாரம் (லிங்கவடிவில் மரத்தூண்)
(வேள்வித்தூண்களின் உருவமாவதே லிங்கம்)

வேதநெறியில் செய்யப்படுகின்ற வேள்விகளில், செய்யப்பெறுகின்ற யூபம் என்னும் (யூபஸ்தம்பம் என்னும்) மரத்தூண் மூன்றுஉருவங்களை உடையதாக வேள்விகளில் கூறப்பட்டுஉள்ளது. அதாவது, முறையே

I. வாஜபேயம் என்னும் வேள்வியில் நாட்டப்பெறும் தூண் சதுரவடிவானது. இவ்வேள்வி பிரம்மனுக்கு உரியதாகும்.

II. சோமயாகம் முதலான சிலவேள்விகளில் ஸ்தாபிக்கப்பெறும் தூணான யூபம் எட்டுப்பட்டையுள்ள வடிவமானது. இவ்வேள்வி விஷ்ணுவைத் தேவதையாக உடையது என்று வேதம் கூறுகிறது.

III. சூலகவா முதலான சிவபெருமானுக்குரிய யாகங்களில் அமைக்கப்பெறும் மரத்தூணான யூபம், செதுக்கப்பெறாத மரத்தில், வட்டவடிவமாகவே அமைந்திருக்கும். இவ்விதமாக முறையே நாலுபட்டை, எட்டுபட்டை, சமவட்டம் ஆகிய இம்மூன்றும் சேர்ந்த, மூன்றுவகை யூபத்தூண்களின் உருவங்களையும் கொண்டதான, ஒருசிவலிங்கத்தின்பூஜையே இதனாலேயே ஸகலயாகங்களின் பயனையும் லிங்கபூஜையானது தரவல்லதாகிறது.

சதுர் ஹஸ்தோ பவேத் யூபோ யக்ஞவ்ருக்ஷ ஸமுத்பவ: |
வர்த்துளஸ் சோபனஸ் ஸ்துல: கர்த்தவ்யோ வ்ருக்ஷமௌளிகா: |

(மகுடாகமம்)

லிங்கஉருவில் உள்ள பாரததேசம்

ஸர்வா லிங்கமயீ பூமி: ஸர்வம் லிங்கமயம் ஜகத்|
ஸர்வம் லிங்கமயம் தீர்த்தம் ஸர்வம் லிங்கே ப்ரதிஷ்டிதம்|| (தந்த்ரஸாரம்)

இந்தியாவின்முப்பிரிவுகளுக்கு, சிவலிங்கத்தின்மூன்றுபாகங்களின் வடிவம் உள்ளதால், (இந்தியநாடு) பாரததேசமே சிவஸ்வரூபமானது. சிவபெருமான் உயர்ந்த ஜடையைத் தரித்திருக்கிறார். இங்கு ஜடையின் ஸ்தானத்தில் உயர்ந்த இமயமலை உள்ளது. உயரமான அவருடைய திருமுடியில் கங்கைநதி உள்ளது. இமயத்திலிருந்து கங்கைநதி பாய்கிறது. அவர் தக்ஷிணாமூர்த்தியாகவும், நடராஜராகவும் தென்முகம்

நோக்கும் மூர்த்தியாகவும் இருக்கிறார். இந்தியாவும் தெற்குநோக்கியே நீண்டுஉள்ளது. இவ்விதம் உள்ளதே **பாரததேசமாகும்.** அவருடைய சிவலிங்கத்திருமேனி, மூன்றுபிரிவுகளை உடையது. இதே போல இந்தியமுழுமையையும், மூன்றுவகையான விமானவகைப் பிரிவுகளுள் அடக்குகிறார்கள். அதாவது,

I. **இமயமலை முதல், விந்தியமலை வரையில் நாகரம் என்னும் விமானம்.** இது கோயில் கட்டிடத்தில் உபானம்முதல் ஸ்தூபிவரையில் சமசதுரமாக வடிவமுடைய விமானம். **பௌமாதி ஸ்தூபி ப்ரயந்தம் நாகரம் சதுரச்ரகம் |**

II. **விந்தியமலை முதல் கிருஷ்ணாநதி வரை வேஸரம்** என்னும் விமானம். இது கோயில் கட்டிட அமைப்பில் கண்டம் முதலாக வட்டமான சிகரத்தை உடைய விமானம். **கண்டாத் ப்ரப்ருதி வ்ருத்தம் யத் வேஸரம் தாம கத்யதே |**

III. **கிருஷ்ணாநதீ முதல் கன்னியாகுமரிவரை திராவிடம்** என்னும் விமானம். இது கோயில் கட்டிட அமைப்பில் கண்டம் முதலாக ஸ்தூபி வரையில் எட்டுபட்டை வடிவான விமானம். **கண்டாத் ப்ரப்ருதி சா(அ)ஷ்டாச்ரம் த்ராவிடம் பரிகீர்த்திதம் |**

இவ்வாறு சைவாகமநூல்கள் கூறியுள்ளவாறு நமது இந்தியா முழுவதுமே சிவலிங்கவடிவத்துக்குள் அடங்கியிருக்கிறது. இங்கு ஒரு சந்தேகம் தோன்றும். வரிசையாக இல்லாமல் விருத்தத்தின் அமைவிடம் நடுவில் வந்தது ஏன்? என்று கேட்கலாம். விருத்தம் **சிவபாகம்** அல்லவா? எனவே மத்தியப்பிரதேசத்தில் நர்மதைஆற்றில் **பாணலிங்கங்கள்** உண்டாகும் இடம் இருக்கிறது. அது ப்ரணவஸ்வரூபமான ஓங்காரேச்வரரின் இடமாகும். அதனால்



இருபக்கங்களிலும் பிரம்மபாகமும், விஷ்ணுபாகமும் இருக்க அவற்றின் நடுவில் வட்டவடிவமான சிவபாகம் உள்ளது. எனவே இந்தியா முழுவதும் சிவஸ்வரூபம் என்பதில் என்ன பிழை? உண்மையே என்றறியலாம்.

ஸ்தூலலிங்கம் – சிவாலயம்
(விமானஅமைப்பும் சிவலிங்க உருவஒப்புமையும்)

பௌமாதி ஸ்தூபி பர்யந்தம் ஸ்தூலலிங்கம் இதி ஸம்ருதம்

(சூக்ஷ்மாகமம் 64ல் 55)



உபபீடம் முதல் ஸ்தூபி வரையிலுமுள்ள ஆலயமானது, ஸ்தூலலிங்கம் எனப்படும். எனவே பொதுவாகவே கோயில் சிவஸ்ரூபம் என்பது வழக்கம். இத்தகைய ஆலயங்களை தொண்ணூற்றாறாக வகுத்திருக்கிறார்கள். இவை எல்லாவற்றிற்கும் மூலமானவை மேற்கூறிய நாகரம், வேஸரம், திராவிடம் என்பவைகள்தான். இவைகளை மேலே கூறியாகிவிட்டது. தொண்ணூற்றாறு ப்ராஸாதங்களுள் ஒன்று, ருத்திரகாந்தம் என்பது. இது வட்டமானவடிவத்துடன் லிங்கவடிவாகவே உள்ள சிகரத்தை உடையது. இதனைக்கூறும் காச்யபசில்பம் எனும் சிற்பசாஸ்திரநூல்.

ததேவ வ்ருத்தசிகரம் களம் வை வேதிகா ததா |
ருத்ரகாந்தம் இதம் நாம்நா || (காச்யபே 29–ல் 28–29)

மேலும் லிங்கலக்ஷணத்தை ஒட்டியே கோயில்சுவரில் அமைகிற உரியவகைகளான ஸ்தம்பங்கள் (தூண்வடிவம்) அமைந்துள்ளன.

சதுரஷ்டாச்ர வ்ருத்தாபம் ருத்ரச் சந்தம் ஸமாம்சத:| (மயமதம்)

சதுரம் (நாலுபட்டை) அஷ்டாஸ்ரம் (எட்டுபட்டை), விருத்தம், (சமவட்டம்) என்ற மூன்றுவடிவமான அவயவங்களையும் உடையதான தூணை (அவயவஸ்தம்பத்தை) ருத்ரச்சந்தம் என்று மயமதம் என்கிற சிற்பநூல் கூறுகிறது. இதையே ருத்ரகாந்தம் என்றபெயரில்

சில்பரத்தினம் கூறுகிறது. (ருத்ரகாந்தத் தூண் / பாதவர்கம்)

ஆத்ய த்ரிபாகோ வேதாச்ரோ வ்ருத்தஸ் த்வக்ர த்ரிபாகத : |
தயோர் மத்யே து வஸ்வச்ர: ஸ பவேத் ருத்ரகாந்தக :|

(சில்பரத்னம்–21–ல்60–61)

இவ்வாறே இலக்கணம் அம்சுமத்காச்யபத்தில் (8.12–14) காமிகாகமத்தில் (53–சுலோகம்–20–21) கூறப்படுகிறது.

சுதைச்சிற்ப தேஹசூல அமைப்பில் லிங்கவடிவம்

சுதைச்சிற்பத்தில் சிவலிங்கம் உள்ளே அமைவதையும் ஆகமப்படி காணமுடிகிறது. சுதையாலான ப்ரதிமைகளை அமைக்க முதலில் சூலஸ்தாபனம் செய்வது வழக்கம். இந்த சூலங்கள் எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதை சில்பரத்தினம் நூல்கூறுகிற சான்றுஇதுவே.

நாப்யந்தம் சதுரச்ரம் து ஹிக்காந்தம் வசுகோணகம் |
ததூர்த்வம் வ்ருத்தம் ஆக்யாதம் சேஷம் வ்ருத்த மேவ வா ||

(சில்பரத்னம் 17–5)

இவ்வாறே அம்சுமத்காசியபம் 83வது படலத்திலும் வருகிறது. அதாவது பாதத்திலிருந்து நாபிவரை உருஅமைக்க, உடலின் நடுஎலும்பாகிற சூலம் சதுரமாகஇருக்கவேண்டும். ஹிக்காவரையில் அதாவது நெஞ்சுக்குழிவரை சூலம் எட்டுபட்டையாகவும், இதற்குமேல் தலைகிரீடம் வரை தேஹசூலமானது வட்டமாகவும் இருக்கவேண்டும் என்றும். அல்லது சூலம்முழுவதுமே வட்டமானவையாகவும் இருக்கலாம் என்பதும் மேற்கூறிய சுலோகத்தின் பொருளால் அறியலாம். இவ்வாறு மண்சுண்ணாம்புச் சாந்தால் பூசி கட்டுகின்ற சிலையினுள் எலும்புபோல வலுவாக மரத்தால் செய்துவைக்கப்படுகிற சூலமானது லிங்கஉருவத்தில் செய்யப்படுகிறது எனஅறியலாம்.



பீடஉருவங்களில் லிங்கவடிவம்.

நாகரம் சதுரச்ரம் ஸ்யாத் அஷ்டாச்ரம் திராவிடம் ததா |
வ்ருத்தம் ச வேஸரம் ப்ரோக்தம் ஏவம் பீடாக்ருதிஸ் ததா |

(சில்பரத்தினம்)



பீடத்தின் வடிவமைப்பிலும் நாகரம் முதலான மூன்று பேதங்களை சில்பரத்னம் என்னும் நூல் கூறுகிறது. முற்றிலும் நாற்கோணமுள்ள பீடம் நாகரபீடம் என்றும், முழுவதும் எட்டுகோணமாயுள்ளது திராவிடபீடம் என்றும், வட்டமானது வேஸரபீடம் என்றும் பெயர்பெறும்.

தேஹே லிங்கதாரணம்

லிங்கதாரணம் என்பது, சிவலிங்கத்தை எப்பொழுதும் தமது உடலில்தாங்கி அணிந்து இருத்தல் (தாரணம் எனப்படுவது லிங்கத்தை அணிவது என்பது பொருள்) லிங்கத்தை கழுத்தில் தரிக்கும் (தாங்கும்) வழக்கமானது, மக்களிடையே சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்பாகவே உள்ளது. வடஇந்தியாவில் நாகவம்சத்தைச் சார்ந்த பாரசிவர்கள் என்ற அரசகுலமரபினர் (காந்திபுரி,) தற்காலத்தில் பீர்ஜாபூர் என்று வழங்கப்படுகிற இடத்திலிருந்து அரசாண்டவர்கள். இவர்கள் காலம் கி.பி. 185 முதல். இவர்கள் அமைக்க ஆரம்பித்த விமானத்திற்கு நாகரம் என்று பெயர். இவ்வரசர்கள் எல்லோரும் லிங்கதாரணம் செய்துகொண்டு இருந்தமையால் இவர்களுக்கு பாரசிவர்கள் என்று பெயர்வந்தது. இவ்வாறே வாகாடகர்கள் என்னும் அரசமரபினரும் லிங்கதாரணம் செய்து கொண்டவர்கள். பல்லவமன்னர்கள் சிலர் லிங்கதாரணம் செய்து கொண்டிருந்ததாக கல்வெட்டுகள்மூலம் அறியமுடிகிறது. இவ் வழக்கம் கர்நாடகத்தில்

பஸ்வரால் மிகுதியாக வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கர்நாடகத்திலும் எட்டாம்நூற்றாண்டுமுதல் லிங்கத்தை அணியும் வழக்கம் இருந்ததாக, அறியமுடிகிறது. இவர்கள் இன்றும் லிங்காயதர்கள் அல்லது லிங்கங்கட்டிகள் என்று அழைக்கப்படுகின்றனர். உலோகத்தாலான சிறுசம்புடத்தில் வைத்துள்ள சிறியலிங்கத்தைக் கயிற்றில் கோர்த்து, அதனைத் தனது கழுத்தில் தொங்கவிட்டுக்கொண்டு இருப்பவர்கள் லிங்கதாரிகள் எனப்படுவர்.

குண்டங்களினமைப்பும் லிங்கபீடத்தின் அமைப்பும்

தாராலிங்கத்தை அடியொற்றியே, காந்தாரம் போன்ற விமான சிகரங்கள் (உறுப்புகள்) பட்டைதீட்டியனவாக அமைக்கப்படுகின்றன. ஆகமங்களில் சதுரகுண்டம், யோனிகுண்டம், வட்டகுண்டம், ஆறுகோண குண்டம், பத்மகுண்டம், எட்டுகோணகுண்டம் என்று ஹோமகுண்டங் களின் லக்ஷணங்கள் பலவாறு கூறப்பட்டுள்ளன. இதே வடிவில் லிங்கபீடங்களின் லக்ஷணங்களை மத்ஸ்யபுராணம், ஞானப்பிரகாச தீபார்ணவம், லிங்கபுராணம், கிரணாகமம் போன்ற நூல்கள் பலவும், பலஉருவில் கூறுகின்றன. சதுரமாகவும் ஒருமேகலையோடு கூடியபீடம் ஸ்தண்டிலம் எனப்படும். இருமேகலையுடையது வாபி என்றும் மூன்றுமேகலையுடையது யக்ஷி என்றும் நீண்ட சதுரமானது வேதிகா என்றும் இவைகள் நான்கும் சதுரபீடத்தின் விகாரங்கள். திரிகோண பீடம், அர்த்தசந்திரபீடம், வட்டகண்டம்உடையது மண்டலம் என்றும், பூர்ணசந்திரம் என்றும் இருவகைப்படும். ஆறுகோணகண்டத்திற்கு வஜ்ரிகா என்று பெயர். பத்மகுண்டம், மற்றும் எண்கோணகுண்டங்கள் என்பன குண்டங்களின் வடிவங்கள் கண்டத்திற்கு நாபி, யோனி, என்ற அவயவங்கள் உண்டு. இவை இரண்டும் லிங்கபீடத்திற்கும் உண்டு. இங்கு நாபி என்பது பிரம்மபாகம் அமரும்இடத்தின்கீழே,

சிவலிங்கப் பிரதிஷ்டா யாகசாலை

இரத்தினநியாஸம் செய்யப்படுகிற இடத்திலும், யோனி என்பது நீர்வடியும் கோமுகத்திலும் கூறப்படுகிறது. இவ்வாறாக ஹோமகுண்டத்திற்கும் லிங்கபீடத்திற்கும் ஒரே உருவ அவயவ இலக்கணம் உள்ளது. இதனை, சைவஸித்தாந்தம் பரமஉபாதானமான தூயதோற்றுவாயாக உள்ள "பரபிந்துவே ஸ்ருஷ்டிசக்தியே லிங்க பிண்டிகை, பிந்துவின் ஸ்வரூபமே யாககுண்டம்" என்றும் பூஜாபத்ததிகளில் விளக்கிக் கூறியுள்ளதையே, இந்த லிங்கபீடத்தின் உருவஅமைப்புகள் உறுதிசெய்வதாக உணரலாம். லிங்கத்தின் பீடம் ஆலயங்களில் எவ்வாறு அமைந்திருக்கிதோ, அவ்வாறே நித்யாக்னி காரியத்திற்குரிய ஹோமகுண்டத்தின் உருவம் அமையவேண்டும் என்று வீராகமம் கூறுகிறது.

சிவலிங்கத்தின் வேதத்துப் பெயர்கள்
(சிவலிங்கத்தின் தத்துவக் கருத்துப் பெயர்கள்)

லிங்கம் காஷ்டம் ச ஜனிமம் அம்ருதம் ப்ரம்மேடிதம் பரம் |
ஸத்யம் ஞானம் சுகம் நித்யம் வார்தகம் சரணம் ச்ருதம் ||

(க்ரியாஸாரம்–1–51–52)

லிங்கம், காஷ்டம், ஜனிமம், அம்ருதம், பிரம்மம், ஈடிதம், பரம், ஸத்யம், ஞானம், சுகம், நித்யம், இவைகளோடு யக்ஷம் என்றும் வேதத்தில் சிவலிங்கத்தின் பெயர்கள் கூறப்படுகின்றன.

யாவ தச்ரம் பவேத் பீடம் தாவ தச்ரம் து குண்டகம் |

(வீரதந்த்ரம் 39–8ல்)

இவ்வாறே லிங்கப்பிரதிஷ்டையிலும், லிங்கபீடத்தின் வடிவிலேயே யாகசாலையில் பிரதானகுண்டத்தின் உருவத்தை அமைத்திடுமாறு காரணாகமும் கூறியுள்ளது. இதனால் பீடமானது, வட்டம் அல்லது சதுரம் ஆகும். நாதமே லிங்கம் என்று கூறப்படுவதால் எல்லாக் கலை நூல்களும் லிங்கத் திலிருந்தே தோன்றியது என்றே ஏற்படுகிறது. வானமே லிங்கம், பூமியே பீடம் என்றும் "மானுடராக்கை வடிவம் சிவலிங்கம்" என்று திருமூலரும் கூறுகிறார். இவ்விதம் லிங்கதத்துவம் அறியத்தக்கது.



நிஷ்களம் ஸகளம் மிச்ரம் விளக்கம்

ஆக்ருதிஸ் ஸகளாயாஸ் து ஸா சக்தி ரிதி ஸம்மதா |
ததாகார ஸ்திதம் யத் து நிஷ்களம் தத் சிவாத்மகம் ||
நிஷ்களம் ஸகளம் சைவ மிச்ரம் ஏவம் ப்ரகீர்த்திதம் |
பிரதிஷ்டாபித தேவாநாம் தத்தத் தேவ்யப் ப்ரதிஷ்டிதா: || (மகுடாகமம்)

இந்த மகுடாகம வசனப்படி தெய்வங்களுடைய உருவம் என்பது ஸகளம் உருவநிலை எனப்பட்டது. அது சக்தியே என்பது ஆகமஸம்மதக் கருத்து. அந்த உருவத்திற்கு உள்ளே ஜீவனாக இருப்பது நிஷ்களம் அருவநிலை எனப்பட்டது. அதுசிவமே என்பது சைவசமயக்கருத்தாகும். இவ்விதம் நிஷ்களம் என்றும், ஸகளம் என்றும் இரண்டும்கலந்தது மிச்ரம் என்றும், இறைநிலை மூன்றுவகையில் ஆகமங்களில் கூறப்பட்டது.

பிரதிஷ்டை செய்யப்பட்ட புருஷரூப தேவர்களுக்கு, அவர வருடைய தேவியர்களும், ஸ்திரீ ரூபசக்திகளாக ஸ்தாபிக்கப்பட வேண்டியவர்கள். இந்த மூன்று நிலையில், ஏதேனும் ஒருநிலையில், சக்தியுடனேயே சிவம் விளங்கும். தேவர்களின் விக்ரஹங்களையும் உரியமுறையில் சக்தியுடனேயே ஸ்தாபித்து, அல்லது அர்ச்சா பேரமானதிலோ உத்ஸவமூர்த்தி யிலோ பூஜித்திடவேண்டும்.



தொன்மைமிக்க கருவறைக்காட்சி

இவை இரண்டும் கூடுகிற நடுப்பகுதியில் மட்டுமே லிங்கத்தை நிறுவிடவேண்டும் நடுஇல்லாத நிலையில் ஒருபோதும் லிங்கத்தை ஸ்தாபனம் செய்யக்கூடாது என்று சைவாகமங்கள் வலியுறுத்துகின்றன.

தெய்வங்களை அவர்களுக்குரிய பதப்பகுதியில் மட்டுமே ஸ்தாபனம் செய்யவேண்டும். அந்த உரியஇடம் வேறுபட்டால் அது குருக்களுக்கும் சிற்பிகளுக்கும் கர்த்தா என்னும் நிகழ்ச்சிக்கு உரிய அதிகாரிக்கும் பதவியிழப்பு பொருள்சேதம் முதலிய தீயபயன்கள் ஏற்படும் எனக்கூறி எச்சரிக்கிறது ஆகமம்.

சிவலிங்க தத்வபாவனா விவரணம்



உலகெலாம் உள்ள உயிர்கள் யாவும் இம்மையிலும், மறுமையிலும் பேரின்பம் பெற்றிட நல்வழி கூறும் **"ஞானநூல்களே சிவாகமங்கள்".** சிவாகமங்கள் இறைவனை சிவம் என்றும்,அதுவே பரம்பொருள் என்றும் விளக்குகின்றன. இப்பரம்பொருள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும். சத்சிதானந்த அருட்பெருஞ்ஜோதியாம், சிவம் எனும் பரம்பொருள், உருவமும், பெயரும், தொழிலும் அற்றது. அதற்கு உரிய இயற்பண்புகளால் இது **சிவன், சம்பு, சங்கரன், பவன்** என்ற பல பெயர்களை பெறுகிறது. இப்பரம்பொருளானது எங்கும் இருந்து கொண்டே ஒன்றில் வெளிபட்டும் விளங்கும். இயல்பாகவே மிகவும் சுத்தமாக இருப்பதால் இது சிவம் எனப்படுகிறது. தானே மங்களமாக இருந்தவாறு, யாவருக்கும் மங்களத்தையே தருவதால் இது சிவம் என்றும், **சம்பு** என்றும், **சங்கரன்** என்றும் பெயர் பெறுகிறது. ஸர்வக்ஞதாதி ஆறுகுணங்களைக் கொண்டிருப்பதால் பகவானாக, பதியாக விளங்குகிறார்.

ஸர்வக்ஞ நித்யதிருப்திச் ச ததா (அ)னாதி ப்ரபோதினி |
ஸ்வதந்திர சாப் யலுப்தா ச ததா அனந்தா ச சக்தய: ||
சக்திபிஸ் ஸம்யுதைச் சைவ ஷாட்குண்ய பரிபூரிதம் | (காரணாகமம்)

சிவாகமங்களில் மூன்று பொருள்கள் **பதி, பசு, பாசம்** என்பவை விளக்கப்படுகின்றன. இவற்றுள் **பதி சிவனே** ஆவார்.பதியின் தேவையை ஆகமம் விளக்குகிறது. அதற்கான சான்று,

யஸ் து ப்ரவர்த்தகச் சக்த: ஸ பதி: பரிபட்யதே. (பௌஷ்கராகமம்)

அசேதனம் ஜகத் விப்ரா: சேதன பிரேரகம் விநா |
ப்ரவ்ருத்தெள வா நிவ்ருத்தெள வா ந ஸ்வாதந்த்ர்யம் ரதாதி வத்||

வேறெந்த தெய்வமும் பதிசப்தவாச்யராகவும், பரமபதியாயும், பசுபதியாயும் ஆகாது. பசு எனப்படுவது ஸ்வதந்திரமற்ற பல்உயிர்கள். பாசம் எனப்படுவது உயிர்களிடமிருக்கும் இயல்பான மாசுகள், உடல்கள், உலகங்கள் முதலிய பிறஅனைத்துமாம். இவ்வுயிர்கள் மாசற்ற நிலையை எய்தினால் மட்டுமே, இறைவனுக்கு நிகரான உயர்வுநிலையைப்

பெறஇயலும். உயிர்களின் மாசற சிவஞானம் பெறவேண்டும். அந்த சிவஞானம் பெற சிவபூசை செய்திடவேண்டும். சிவபூஜை செய்திட லிங்கமும், மந்திரமும் முறையே குருவிடம் பெறவேண்டும். இதனைப் பெற சிவதீக்ஷை பெற வேண்டும். தீக்ஷைபெற ஸத்குருவைத் தேடி, நாடித் தொழவேண்டும். குருவருளால் சிவமந்திர ப்ராஸாத விளக்கம் பெற்று பூசைமுறையை அறிந்து, சிவலிங்கத்தைத் தேர்ந்தெடுத்து, சிவபூஜைசெய்து, வினைகளை முற்றுபெறச்செய்து, ஞானத்தைப் பெறவேண்டும். வெளிப்புற சிவவழிபாட்டிற்கு லிங்கம் அவசியமாகிறது.

சிவபூஜையில் சிவலிங்கம்

பரம்பொருளானதும் பரமபதியானதுமான பரசிவத்தை, நாம் பூஜிக்கவேண்டுமெனில், முதலில் தேவைப்படுவது ஒரு இலக்காகிய ஒருவடிவம். அதுவே மூர்த்தம். ஸ்வரூபம், லிங்கம் என்ற பெயர்களால், ஒருபொருளின் உருவமே கூறப்படுகிறது. லிங்க மானது பொதுவாக மூவகை. நடேசாதி உருவமாய் உள்ளது. **வ்யக்தலிங்கம்.** சிவலிங்கமானது **வ்யகத்தாவ்யக்தலிங்கம்.** க்ஷணிகலிங்கம் மற்றும் தீபம் முதலானவை **அவ்யக்த லிங்கம்** என அறியலாம். சிவபூஜையில் பூஜைக்கு மட்டில் அவ்வப்பொழுது தயாரித்து, பூசித்து பின்பு கைவிடுவது **க்ஷணிகலிங்கம்** ஆகும். இது பலவகையாக, பொருள்களின் வடிவங்களில் அமையும். சிவலிங்கத்தையே சிறுஅளவில் தனக்கேற்ற அளவில் உலோகலிங்கம் ரத்னலிங்கம் சிலாலிங்கங்களாகச் செய்து அவற்றை மந்திரித்து ஏற்று, பூஜிப்பது **சலலிங்கம்** எனப்படும். இதில் இறைவன் எப்பொழுதும் இருப்பார். **ஸ்திரலிங்கம்** என்பது ஒரு இடத்தில் அசையாதவாறு நிலையானதாக அமைக்கப்பட்டது. இதனை **த்ருவலிங்கம்,** அல்லது **ஸ்தாவரலிங்கம்** என்பர், இவ்வகைலிங்கம் கோயில்களில் அமைந்திருப்பதாகும். பூஜைக்கு என சிவலிங்கவகைகளுள் ஒன்றை ஏற்று, அதில் உரிய மந்திரத்தால் உரியபொருள்களை உள்ளன்போடு அர்ப்பணிக்கும் செயலே பூஜை எனப்படும். இறைவன் எங்குமிருப்பவன் எனக்குறிப்பிடின், எதுவும் தியானிக்க கருத இயலாது, புகழ்ந்து கூறஇயலாது. எப்பொருளையும் அவருக்கு தரஇயலாது.

எனவே பூஜையில் கொடுப்பவனும், ஏற்பவனுமாக இறைவன் ஒருருவில் தேவையாகிறபடியால் மந்திரத்தால் வெளிப்படுகிறான். இதனையே ஆகமங்கள், உருவமற்றவனான இறைவன் பக்தர்கள் பூஜைசெய்வதற்காகவும், தியானித்து மனதை ஒரு முகப்படுத்தி பயிற்சிபெறவும், குறிப்பிட்ட விதிமுறையால் குறிப்பிட்டகாலத்திற்கு உருவத்துள் உயிர்போன்று, உள்ளிருக்குமாறு வெளிப்பட்டு லிங்கப்பிரதிமாதிகளில் விளங்குகிறார் என்கிறது.

த்யானபூஜந ரூபஸ்தம் நிஷ்களம் து மஹேச்வர: | எனமகுடாகமும்,
த்யான பூஜா நிமித்தம் ஹி நிஷ்களம் ஸகளம் பவேத்|| என்று,

காரணாகமமும் கூறுகிறது. எனவே ஆகமத்தின்படி இறைவன் எங்கும் நிறைந்தவராய் அறியத்தக்கவர். ஸ்தூல மற்றும் சூஷ்ம சரீரத்துள்ளே எண்ணி தியானிக்கத்தக்கவர். சிவலிங்கத்தின் நடுவே எண்ணி பூஜிக்கத்தக்கவர். இதனை சிவபூஜாஸ்தவம்

ய ஏஷ தேவோ மஹதோ மஹீயாந் –
அணோ ரணீயான் பவ பீருபிஸ் ஸஹ |
ஞேயஸ்சிவஸ் ஸர்வகதஸ் சரீரே –
த்யேயஸ் ஸ பூஜ்யஸ் சிவலிங்க மத்யே || (சிவபூஜாஸ்தவம்)

லிங்கசப்த நிர்வசனம்

லிங்கம் என்கிற ஸம்ஸ்க்ருத சொல்லிற்கு சாதாரணமான பொதுவான பொருள். அடையாளம், சின்னம், இலக்கு என்பதாகும். இச்சொல் கல் முதலான பொருள்களால் செய்யப்பட்ட வழிபாட்டிற்கு உரிய அனைத்தையும் உணர்த்தும். மேலும் சின்னம் என்கிற இப்பொருள, ப்ரதிஷ்டைக்கு முன்பாக கல்லாக உள்ளபொழுது ஏற்புடையது. பிற்காலத்தில் பிரதிஷ்டைக்குப்பின்பு இதுவே சிவனாக வழிபடத்தக்கதாகும். இது இலக்காக சின்னமாக, இறைவன் வெளிப்பட ஓர் அடையாளமாக விளங்குகிறது எனலாம். இது சாமான்யப்ரகிருதி பாவனையில் பொருளாகும். இவற்றில் மந்திரநியாசத்தால் இறைவன் குடிகொண்டபின்பு அது சின்னமாக கருதத்தக்கதல்ல. எனவே, சிவாகம சிவபூஜைமுறையில் இந்த **சின்னம்** என்ற பாவனை போக்கப்பட்டு, **லிங்கம் இறைவனே, சிவனே என்று கருதப்படுகிறது.** எனவே சிவாகமங்கள் லிங்கம் எனும் இச்சொல்லுக்கு, பலவாறு சித்தாந்தக் கருத்தை உணர்த்தும் வடிவமாக இது உள்ளதால், இப்பெயர் என்றும், எனவே இந்த (பாவ = பாவனை + ஆகாரம் = உருவம்) லிங்க உருவத்தை **பாவாகாரம்** என்றும் கூறுகிறது.

லிங்கம் சின்னம் சரீரம் ச கத்யதே (அ)த்ர ஜநார்தன |
சரீரம் மந்த்ர ஏவ ஸ்யாத் சப்தப்ரஹ்மேதி ஸம்ஞித: ||

சரீரம் ப்ரதமம் க்ருத்வா வ்யக்தாவ் யக்தோபாயத்மகம் |
த்ரிவிதம் தத் ஸமாக்யாம் பூஜார்த்தம் தஸ்ய நித்யசம் || அஜிதாகமம்

லிங்காத் ஸர்வம் ஸமுத்பன்னம் லயம் தஸ்மின் ப்ரகீர்த்திதம் |
ஸ்ருஷ்டி ஸம்ஹார மேவோக்தம் லிங்கநாம்நா த்விஹோச்யதே ||

என்ற வாதுளசுத்தாக்ய ஆகம வசனத்தின்படி ஆகமசாத்திரத்தில் **லிங்கம்** என்னும் சொல்லானது, எந்தஒன்றில் அனைத்தும் தோன்றி, முடிவில் அவையாவும் எதில் ஒடுங்குகிறதோ, அதனால் அது லிங்கமெனப்படுவதாகவும், இச்சொல் படைத்தலையும், நல்லொடுக்கமாகிற ஸம்ஹாரத்தையும் உணர்த்துகிற வடிவம் என்பதனையும் உணர்த்து வதாகவும் விளக்கப்படுகிறது. ஒடுக்கம் என்பது இயல்பாகவே காரணத்தில்தானே கார்யங்கள் ஒடுங்கும். எனவே அனைத்திற்கும் மூல, முக்கிய, முதல் காரணம் இச்சிவலிங்க உருவமேயாகும். இந்த உலகம் கார்யமாக, செய்யப்பட்ட பொருளாக விளங்குவதால், இதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒருகாரணம் இருப்பது இயல்பு. அதுவே சுத்தமாயா எனும் பிந்துவாகும். இதிலிருந்துதான், கலாமுதலான யாவும் தோன்றின. பிந்துவை நாதம் கலக்கிட, யாவும் தோன்றின. எனவே, நாத பிந்து கலாதியாகவே தோன்றி ஒடுங்குவனவே யாவும் எனவே நாதமே லிங்கமாகவும், பிந்துவே பீடமாகவும், அறியதக்கது. பீடமற்ற லிங்கமானது ப்ரதிஷ்டைக்கும், பூஜைக்கும், பிரம்மதேவருக்கே கூட தகுதியற்றதாகும் என்கிறது ஆகமம்.

நாதம் லிங்க மிதி க்ஞேயம் பிந்துப் பீட முதாஹ்ருதம்.
நாத பிந்து யுதம் ரூபம் லிங்காகார மிதி ஸ்ம்ருதம்.

எனும் ஆகமகூற்றால் ஒலியும் ஒளியும் இணைந்த அற்புதமான சிறப்புவடிவமே ஆகமங்களில் லிங்கம் என்ற சொல்லுக்குப் பொருளாகும்.

லிங்க ஆகார விவரணம்

லிங்கத்தை ஸ்ருஷ்டி ஸ்திதி லயாத்மகமாகவும், ஜகன்மாதா பிதாக்களின் வடிவாயும் எண்ணுதல் வேண்டும். எனவே தான் இவ்வடிவம் உற்பத்தி மற்றும் ஒடுக்கத்திற்கு மூலகாரணமாகிறது. பஞ் சகிருத்யங்களுக்கு ஏற்ப பஞ்சஸாதாக்ய பாவனை அவசியமாகிறது. படைத்தலின் பொருட்டு சிவகத்தி இணைந்ததாக மனதால் பாவித்தல் முறை.

லிங்கம் சிவஇதிஞ்ஞேயம் பீடம்சக்தி ருதாஹ்ருதாம் |
யோநிலிங்க ப்ரகாரேண ஜகத் சிருஷ்டியர்த்தகாரணம் ||

இத்தம் ஸதாசிவம் ரூபம் லிங்கபீட ஸமன்விதம் |
தத் ஸாதாக்ய ப்ரபாவஸ் து வர்ணிதம் நைவசக்யதே ||

இத்தகைய ஸாதாக்யமஹிமை அளப்பரியதாகும். பலவாறு பாவனை செய்யத்தக்கதான ஒரேவடிவம் லிங்க ஆகாரமாகும். செயல்படவேண்டுமாயின் சரீரம் தேவையாகிறது. சரீரம் எனில் உருவம் அமைகிறது. அவ்வாறு மானுஷலிங்கத்தில் கோடுகள்மூலம் ப்ரம்ம சூத்ர அமைப்பால் உறுப்புகளை பாவிக்கலாம். லிங்கத்தின் அடிப்குதியே சரணமாயும் (பாதம்) லிங்கத்தின் முனையே முகமாகவும், பூஜாம்ச மைய ப்ரம்மசூத்திரத்தின் இருபக்கங்களும் நான்கு கைகளின்பகுதிகளும், சூத்திரத்தின் முடிவுப்பகுதி பின்புற புட்டமாயும், திவ்யமான மகேச்வர ரூபத்தை நான்கு கையுடன் பாவித்து, பிரம்மா முதலான தேவர்கள் யாவரும், அந்தந்த பகுதியிலிருந்து வெளிவந்ததாக மகுடாகமம் விளக்கி உள்ளது.

லிங்க ரூப விசேஷம் து ச்ருணுஷ் வேவம் மஹேச்வர |
லிங்க மூலம் து சரணௌ லிங்காக்ரம் முக முச்யதே ||
சூத்ர பார்ச்வௌ சதுர் பாஹூர் சூத்ராந்தம் ப்ருஷ்ட முச்யதே ||

(மகுடாகமம்)

இதன்படி சிவனது படைப்பு முறையானது வலதுதோளிலிருந்து படைத்தலுக்கு பிரம்மாவும், இடது தோளிலிருந்து காத்தலுக்கு விஷ்ணுவும், மூக்கிலிருந்து வாயுவும், காதிலிருந்து பத்து திசைகளும், கைத்தலத்திலிருந்து கணேசரும், இதயத்திலிருந்து ஷண்முகரும், தொப்புளிலிருந்து பாஸ்கரரும், பின்பகுதியிலிருந்து இந்திரனும், கண்ணிலிருந்து அக்னியும், இடதுகண்ணிலிருந்து சந்திரனும், மார்பிலிருந்து யக்ஷர்களும், தேவர்களும், வலது கண்ணிலிருந்து ருத்ரரும், கைமுனையிலிருந்து ஆயுதங்களும், நகங்களிலிருந்து சந்தியாதேவதைகளும், துடையிலிருந்து நாகங்களும், முழங்காலில்

இருந்து ரிஷிகளும், பாதங்களில் இருந்து ஸகலதேவர்களும் சிவாகமங்களும் முறையே வெளிப்படுகின்றன, பின்பு அவையாவும் அதே இடத்தில் அவ்வாறே ஒடுங்குகின்றன. லிங்கத்தின் நடுவே ஸாதாக்யபாவனையும், ஒடுக்ககாலத்தில் ஸம்ஹாரகாலத்தின் லிங்கதாண்டவத்தையும் தியானித்து, பஞ்சக்ருத்யம், பஞ்சஸாதாக்யம், பஞ்சதாண்டவம் ஆகிய பாவனைகளால், லிங்கமே தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணம் என்பதை சிவாகமங்கள் கூறியும் உள்ளதால் தெளிவுபெறலாம்.

தியான த்யாத்ரு த்யேய ஸ்வரூபம்

ஆகமவிதிமுறையில், ஆலயபூஜையில், சிவலிங்கத்தில், ஆசார்யர் ஆத்மபாவனையால் தாமும் சிவனாகியபின்பு, தாமே சிவனை பூஜித்தல் வேண்டும். பஞ்சமந்த்ரதனுர் தேவ: எனும் ஆகமக்கூற்றால் ஈசானாதி ஐந்து ப்ரஹ்மமந்திரங்களே இறைவனுக்கு வடிவமாகி, திருஉடலாக இருப்பதால், அம்மந்திரங்கள் 38 சக்திகளின் கலைகளாக உள்ளதால், இவற்றை லிங்கத்தில் வைத்து மந்திரித்தலால், லிங்கம், பிம்பாதி தேஹம், எதுவாயினும் அது மந்திரமயமேனியாகி "வித்யா தேஹம்" என்ற சிறப்புத்தகுதியைப் பெறுகிறது. எனவே இப்புனித மேனியிலே அப்புனிதரான இறைவன் உறைகிறான். அர்ச்சகர் சிவனாகிய பின்பு சிவனை அவர் அர்ச்சிப்பது எவ்வாறுமுறை? எனில், கொடுப்பவரும், தூய்மையால் சிவனேஆகிறார். அதைப்பெறுபவரும் சுத்தத்தால் சிவம் எனப்படுகிற பரமசிவனே ஆவார். இதனை சிவாகமம் பூஜ்யபூஜகபாவனையால் இருநிலையில் பூஜிக்கப்படுபவராயும் பூஜிப்பவராயும் சிவனே விளங்குவதாகக் கூறும். சிவனே தாதா கொடுப்பன், சிவனே போக்தா அதைஎடுத்துக் காப்பவன் நுகருபவன் என்கிறது.

பூஜ்ய பூஜக பாவேந த்விதா ஸ்தித சிவோஹமிதி பாவயேத் | என்றும், யாவந் ந தத்ஸமோ ஜாதஸ் தாவன் நாராதனே (அ)க்ஷம: ||என்றும்,

ஆகமபத்ததிகள் கூறுவதால் இறைவனை இலக்குஉருவில் எவ்வகையில், எவ்வாறு தியானித்து, பூஜிக்கப்படுதல்முறையென்று அறிவது அவசியமாகிறது. இனி அதனை விரிவாகக் காணலாம்.

கருத்துரை: "த்யாத்ரு" என்பதால் அர்ச்சிப்பவரான, தியானித்திடும் பூஜகரும், "த்யேயஸ்வரூபம்" என்பதால் சிவலிங்கத்தின் ஸாதாக்யஸ்வரூபமும், த்யானம் என்பதால் அச்சாதாக்யத்துள் தியானிக்கப்படும் தேஹீ எனப்படும் பரசிவம். பரஞ்சோதி ஆகிய ஆனந்ததாண்டவம். ஒன்றுள்ஒன்றாக, பிந்து, நாத ஜோதிகளில் தியானித்தல் வேண்டும், என்பதையும் சிவாகமம் விளக்கியுள்ளது. இவை மூன்றையும் ஆகமவிதிமுறைப்படி சிவயோகநெறியில் பயிற்சிசெய்துப் பழகிய, ஞானபாதத்தின் தத்வார்த்த பாவனைகளை மனதால்பாவிக்கும் பயிற்சிபெற்றவராக "த்யாதா" எனும் அர்ச்சகர் இருத்தல் அவசியம். "அர்ச்சகஸ் ஸ ஹரஸ் ஸாக்ஷாத்" என்பதால் அர்ச்சகரின் பாவனைக்குஏற்ப சிவனானவர் விளங்குவார் என்கிறது ஆகமம். ஆதலால் சிவனை முறையே தியானித்து பூஜித்தல் முறையாகும். அவரது விருப்பத்திற்கு ஏற்ப தோன்றுபவர் சிவன். இதனை யத் பாவம் தத் பவதி என்றும் சிந்தாமணிரிவேச்வர: என்றும் ஆகமம் கூறுகிறது.

லிங்கத்தில் முப்பாலில் முப்பகுதிகள் (பொதுவிலக்கணம்)

நபும்ஸகம் து ப்ரஹ்மாம்சோ விஷ்ண்வம்ச ஸ்திரிய வித்யதே |
தத் புமான் ஊர்த்வபாகஸ் ஸ்யாத் ஏவம் ஸங்கல்பிதம் த்ரிதா ||

பூர்வகாரணே 9ல் 108)

லிங்கத்தில் அடியில் உள்ள பிரம்மபாகம் நபும்ஸகமாயும் (அலி) நடுவில் உள்ள விஷ்ணுபாகமானது பெண்பாலாகவும், மேலே உள்ள வட்டமான ருத்ரபாகமானது ஆண்பாலாகவும் இவ்வாறாக சிவலிங்கத் திலே மூன்று பகுதிகளும் மூன்று பாலினவடிவமாயும் கருதப்பட வேண்டியது லிங்கம் ஸ்த்ரீபும்நபும்ஸகரூபம் என்கிறது ஆகமம்.

லிங்கபஞ்சாம்சம்

பிரஹ்மாம்சம் சைவ விஷ்ண்வம்சம் ருத்ராம்சம் ச மஹேச்வரம் |
ஸதாசிவாம்சகம் சைவ லிங்கம் பஞ்சாம்சம் உச்யதே ||

இவ்வாறு மகுடாகமம் சிவலிங்கமானது ஐந்து அம்சங்களை உடையதாகும் என்றும், அவை ஐந்து தொழில் அதிபதிகளான பிரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், ஸதாசிவன் ஆகியோரின் பாகங்களைக் கொண்டவையாக விளங்குவது என்று கூறியுள்ளது.

லிங்க லக்ஷ்மரேகா நிர்மாணவிதி

ருத்ரபாகே த்ரிதா பக்தே பாகம் ஊர்த்வே பரித்யேஜத் |
பாகயுக்மேந குர்வீத லக்ஷ்மரேகா த்வயம் குரு: || (சித்தாந்தசேகரம்)

லிங்கத்தின் லக்ஷ்மசூத்ர லக்ஷணம் (லக்ஷணோத்தாரம்)

நவதா சூத்ர விஸ்தாரஸ் ஸர்வலிங்கேஷு கீர்த்தித: |

சிவலிங்கத்தின் சிவபாகத்தில் உயரத்தை ஒன்பதுபாகம் செய்து, மேலே, சிரோவர்தனத்திற்குக் கீழே, மூன்றுபாகத்தைவிட்டு கீழே உள்ள ஆறுபங்கினால், பிரம்மசூத்ரத்தை அமைக்கவேண்டும். 1 பங்கினால் சூத்ரமுனையில் சிறுபூமொட்டுபோல அமைத்து, அதிலிருந்து வலமாக ஒருசூத்ரம்சுற்றிமேலேயேமுடிவதாக அமைத்திடவேண்டும். இதன் அமைப்புமுறை ஒன்பதுவகைகள் ஆகும். பொதுவான முறை இதுவே,

ருத்ராம்சம் நவதா க்ருத்வா சோர்த்வே பாகத்ரயம் த்யஜேத் |
முகுளம் சைக பாகேந நாளம் பஞ்சாம்சதோ பவேத் ||

மற்றொருமுறையில் பூஜாம்சஉயரத்தை பதினோருபாகம் செய்து, மேலே மூன்று பாகத்தைவிட்டு, அதன்கீழே ஒருபங்கினாலே பத்ம மொட்டையும், அதிலிருந்து கீழே ஏழுபங்கினால் நாளமாகிய தண்டுப்பகுதியையும் சூத்திரத்தையும் சுற்றியதாய் அமைத்தலாகும்.

ருத்ராம்சே ருத்ரபாகே து குணாம்சம் உபரி த்யஜேத் |
ஏகேந முகுளீநாளம் ஸப்தாம்ச மிதி கீர்த்திதம் || பூர்வகாமிகே-64ல்)

லிங்கத்தில் பாணத்தில் முகம் முன்பக்கம் எது என்று அறிவிக்கும் அடையாள அமைப்பு லக்ஷணோத்தாரம் எனப்படும். இது திருச்யபாகத்தில் சிரோவர்தனத்திற்குக் கீழே கோடாகவோ குறியாகவோ விளங்குவதாகும். இது பலவகையில் அமைக்கத்தக்கது. இதனை ஸார்வதேசிக லிங்கத்தில் இவ்வாறு பலவகையில் லக்ஷ்ம சூத்ரத்தைச் செய்யவேண்டும். ரத்தின மய, உலோகமய, பாணவகை லிங்கங்களுக்கு இது கிடையாது. ரத்தனமயமான உலோகலிங்கத்தில் செய்யலாம் தவறில்லை. இந்த ரேகை முறையாக இல்லாவிடில் அது யஜமானரையும்,

சில்பியையும் அழிக்கும், ஆதலால் இந்த ரேகையை முறைப்படியே செய்யவேண்டும். விரும்பியபடி அமைத்தல் தீமைபயக்கும்.

ரேகா ஹீநா (அ)திகா ஹன்யாத் யஜமானம் ஸ சில்பினம் |
ராஜானம் ராஷ்ட்ர ஸஹிதம் ஸமம் தஸ்மாத் விவர்த்தயேத் ||

(பூர்வகாமிகே–64ல்)

லிங்கஸ்தாபணத்தில், ஆசார்யர் மந்திரங்களைக் கூறவும், ஸ்தபதியார் செயலைச் செய்யவும் தகுதியுடையவர்களாய், இருவரும் சேர்ந்து முறைப்படி **லிங்கஸ்தாபனத்தைச்** செய்யவேண்டும். பிறகு தேவப்பிரதிஷ்டையை ஸ்தபதியின்றி ஆசார்யரே மந்திரத்தால் செய்யவேண்டும் என்கிறது ஆகமம்.

லிங்கத்தின் ஆவுடையாளுக்குமேல் விளங்கும் **பூஜாபாகம்** என்கிறதாகிய **பாணம்**, உயரஅளவில் பலவகையில் இருக்கும். சிரோவர்த்தனத்திற்கு அடியில்உள்ளது **முகப்பகுதி** அதாவது பார்வைப்பகுதி, இதுவே **திருச்யபாகம்** எனப்படுவது. முகஅமைப்பு **லக்ஷணோத்தாரம்** எனப்படுவது. **லக்ஷணம்** அல்லது **லக்ஷ்ம** என்றால் அடையாளம், **உத்தாரம்** என்றால் வெளிப்படுத்தி அமைத்தல். அதாவது வட்டவடிவபாணத்தில் முகம்என்பது எது? எனக்காட்டும் அடையாளம் லக்ஷ்ம ஆகும். பாணஉயரத்தை ஒன்பதுபாகம் செய்து, மேலே மூன்றுபங்கு உச்சிப்பகுதியை நீக்க வேண்டும். கீழே ஆறுபங்கில் சூத்ரமுனை பூமொட்டை ஒருபங்கினாலும், சூத்திரத்தின் தண்டாகிய நாளத்தை மீதமுள்ள ஐந்துபாகத்தாலும் செய்திடவேண்டும் என்று காமிகாகமம் கூறியுள்ளது. கீழே உள்ள மூன்றில் இரண்டுபங்கை எட்டுப்பகுதியாக்கி, அடியில்உள்ள, இரண்டுபகுதியை நீக்கிவிட்டு நடுவில் உள்ள ஆறுபாகத்தில் முகசூத்ரத்தை அமைத்திடவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த முகக்குறி **சூத்திரலக்ஷணோத்தாரம்** ஆகமங்களில் பலவாறாக லிங்கத்திற்கு ஏற்ப கூறப்பட்டுள்ளது. இந்த லக்ஷ்மசூத்திரஅமைப்பு மானுஷலிங்கத்திற்கே செய்யத்தக்கது.

லக்ஷ்மரூபபேதம் (குறிவகைகள்)

யானைக்கண், குடை, நீர்க்குமிழி, கோழிமுட்டை, வாழைப்பூ, லிங்கலக்ஷ்மமானது தாமரைப்பூ, லிங்கம், [illegible]பியஅஞ்சலிகை, நெல், யவை, அரசஇலை, முக்கோணம், நீண்டவடடம், இரண்டுகத்திகள், திரிசூலம், ஆயுதவடிவங்கள், குறியற்றதாயும் இது பலவகையில் அமைக்கத்தக்கது. வழிபடுவோருடைய விருப்பப்பயனுக்கு ஏற்பவும்,

எட்டுவகையோகலித்திகளை அளித்திடும் வகையிலும், ஒன்பதுவகை மானுஷலிங்கங்களில் தசாயுதங்கள் அடையாளமாய் விளங்கும். லிங்கலக்ஷணோத்தாரத்தை பூர்வகாமிகபடலம் 63ல் காணலாம்.

குட்மளம் வா கஜாக்ஷம் வா லிங்காக்ரம் பத்ம ஸந்நிபம் |
கதளீ முகுளாகாரம் சூலாக்ரா (அ)ச்வத்த பத்ரகம் || 54
லோகபாலாயுதாஸ்த்ராக்ரம் சிவாஸ்த்ராக்ரம் து வா பவேத் |
ஸார்வதேசிக லிங்கஸ்ய லக்ஷ்மேத்தம் கீர்த்திதம் த்விஜா: || 55

(காமிகே—64)

சிவலிங்கபூஜாம்ச பகுதியில் குறியீட்டுமுறைகள்



இந்த லக்ஷணோத்தாரமாகிய முகஅடையாளக் குறியீடுகளை, ரத்தினலிங்க வகை, உலோகமயலிங்கவகைகள் தாதுமயம், பாண லிங்கம், நதிவீழ்ச்சியில் எடுத்த உத்ருதசிலாலிங்கம் (நீர்வீழ்ச்சியில் நதிநீரில்) இவைகளுக்கு செய்யவேண்டியதில்லை. இவற்றில் விலக்கிடுக. ரத்தினவகை மற்றும் உலோகவகையில் விரும்பினால் செய்யலாம் அல்லது செய்யாமலும் விடலாம். இதனை சில்பியானவர்

சில்பசாஸ்த்திரமுறைப்படியே கண்திறத்தலைப்போன்று, முறைப்படியே செய்திடவேண்டும். பிறகு குருவானவர் இதனையே தங்கசலாகையினால் தூரிகையால் லக்ஷ்மலேகனத்தை முறையே, நேத்ரமந்திரத்தால் லக்ஷ்மத்தைலிங்கத்தில் எழுதவேண்டும் என்கிறது காமிகாகமம். இதற்கான சான்று,

ரந்த்ரமத்யே பகாகாரம் ஊர்த்வாக்ரம் லக்ஷ்மபீடகம் |
ஏவம் லக்ஷ்ம லிகேத் வித்வான் குருர் ஹேமசலாகயா ||
அக்ஷி லோஹ ஸமோபேதம் அஸ்த்ர மந்த்ரம் (அ)நுஸ்மரன் |
சில்ப சாஸ்த்ராந்தராப்யாம் து தாப்யாம் வா லக்ஷ்ம வா லிகேத் |
தத் தஸ்மா தேவ சாஸ்த்ரேண ஸம மேவ விவர்த்தயேத் |
ரேகா ஹீநா(அ)திகா ஹான்யாத் யஜமானம் ஸசில்பினம் ||
ராஜானம் ராஷ்ட்ரஸஹிதம் ஸமம் தஸ்மாத் விவர்ஜயேத் |
ஆசார்யோ மந்த்ரயோக்யஸ் து ஸ்தபதிக் கர்மகாரயேத் ||

பூர்வகாமிகபடலம்-64)

லிங்க லக்ஷணோத்தாரணம். (லிங்கசூத்திரபாவணை)

லிங்கத்தின் பிரம்மசூத்திரம் எழுதுவது உத்தாரணம் என்பது இருவகைப் பயனை முன்னிட்டது. ஒன்று முன்னாளில் லிங்கத்தை மூலமாகவைத்தே பிரதிமைகளை செய்திருக்கிறார்கள். அதற்கு பயன்படும் வண்ணம் மத்தியபாகத்தை உணர்த்த பிரம்மசூத்திரம் பயன்பட்டது. இவ்விஷயம் கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த லிங்கமாகிய குடிமல்லம் சிவலிங்கத்தைக் கண்டால் விளங்கும். இரண்டாவது சாக்ததந்திரங்களில் மட்டுமே கூறப்படும் உடலினுள்ளே மூலாதாரத்தில் இருக்கும் சுயம்புலிங்கத்தின் அடையாளமாகவும் இந்த பிரம்மசூத்திரம் அமைத்திருக்கிறது. சைவாகமங்களில் பிரதிமைகளுக்கு நேத்ரோன்மீலனம் செய்யும் இடத்தில், லிங்கத்தில் மூன்றுகண்களைத் திறக்கும் நிலையில் லக்ஷணோத்தாரம் என்ற செயல் (ஆகமக்ரியை) செய்யப்படவேண்டியதாக விதிக்கப்படுகிறது.

சிவலிங்கத்தில் இந்த ப்ரம்மசூத்திரத்தின் பகுதியிலேயே ஸதாசிவரின் வித்யாதேஹத்தின் உருவம் பாவனைசெய்யப்படுகிறது. மேலும் நந்தியாவர்தம், வைதிகம் போன்ற கிராமவடிவங்களின் அமைப்புகள் எல்லாமும்கூட மேற்கூறிய சிவலிங்கபீட உருவங்களை ஒத்திருப்பவைகளே. ஆகையால் ஸர்வம் லிங்கமயம் என்பது பொருத்தம்தானே? சைவசித்தாந்த உண்மையாவும் சிவலிங்கமே என்பதே அனைத்து அடிப்படட அறநூல்களின் முடிவுஆகும்.

[நதியிடைமலைகளில் அமைந்துள்ள லிங்கம்]

லிங்கசிரோவர்த்தன இலக்கணம்

(நால்வகை தலைவட்டஅமைப்புமுறை)

இத்தகைய லிங்கங்களுக்கு பிரம்மா, விஷ்ணு, சிவஸ்சொரூபங்களான சூத்திரங்களை அதாவது முக்ககோடுகளை லிங்க பூஜாபாகத்தில் அதாவது மேலேதெரிகின்ற இடத்தில் செதுக்க வேண்டும். மேலும், லிங்கத்தின் முனை அமைப்பை உச்சிமழுப்புதல் சிரோவர்த்தனம் என்பதாகும் (1) சத்ராகாரம் அதாவது விரித்தகுடையைப்போன்றசிரஸ் முனையுடையது. இது தாழ்குடைத்தோற்றம். தலைஉச்சிபகுதி, உள்ளதாகவோ, 2) பாதிசந்திரனைப்போல் அரைவட்டம் போன்றது இது அர்த்தசந்திராகாரம், 3) குக்குடாண்டாக்ருதி என்றதான, கோழி முட்டையைப்போன்ற, நீள்வட்ட வடிவமுடையசிரஸ், 4) திரபுஷாக்ருதி என்ற வெள்ளரிப்பழத்தின் வடிவமுடைய நீண்டவடமான சிரஸ் என்று நான்குவகையாக, லிங்கத்தின் சிரோலக்ஷணங்கள் (லிங்காக்ரலக்ஷணம்) கூறப்பெற்றுள்ளன. மேலும் ஒருவகை காமிகம் மகுடம் முதலான ஆகமத்தில் புத்புதாகாரம் என்பதும் கூறப்படுகிறது. இது நீர்க்குமிழித் தோற்றமாகும். இதனை மயமதம் என்ற சிற்பசாஸ்திரமும் கூறுகிறது.

சத்ராகாரம் து விப்ராணாம் குக்குடாண்டம் நிருபஸ்ய து |
வைச்யானாம் புத்புதாகாரம் சூத்ரே கண்டேந்து ஸந்நியம் ||
இத்யேதைர் லக்ஷணைர் யுக்தம் லிங்கம் மானுஷ முச்யதே || (மகுடாகமம்)

குடைவடிவம், கோழிமுட்டைவடிவம், பாதிமதிவடிவம், புத்புதவடிவம், இந்நான்கும் முறையே அந்தனர்முதலானவர்களுக்கு ஏற்றவடிவங்கள் ஆகும் என்கிறது மகுடாகமம்.

சிரோவர்த்தன மேதேஷாம் வக்ஷ்யே தத் பஹுதா மதம் |
புண்டரீக விசாலாக்யம் ஸ்ரீவத்ஸம் சத்ருமர்தனம் || 52
காஷ்டாம்சகே சதுர்பக்தே பாகபாக விவர்த்தனாத் |
பவந்தி புண்டரீகாதி பேதா பின்ன பலாப்தயே || 53

சிரோவர்தனம் நால்வகை புண்டரீகம் இது புகழளிக்கும்.

சத்ராகாரம் து விப்ராணாம் ந்ருபாணாம் குக்குடாண்டகம் |
வைச்யாநாம் சைவ கண்டேந்து சூத்ராணாம் த்ரிபுஷாக்ருதி ||

(பூர்வகாரணே 9ல் 128)

ஜாதிலிங்க விபேதேந சிரஸ் சதுர்விதம் மதம் |
சத்ராகாரம் து விப்ராணாம் குக்குடாண்டநிபம் ந்ருபே |
வைச்யாநாம் அர்தசந்த்ராபம் சூத்ராணாம் த்ரிபுஷம் பவேத் |
அபரம் சந்த்ர மப்யன்ய லிங்கபேதேந கத்யதே |

இத்தகைய பௌருஷலிங்க பேதங்களை, அறுபத்துநான்கு வகைகளாக ரௌரவோத்தரம் என்ற சைவாகமத்திலும், தொண்ணூற்றாறு வகையில் (96வகைகளாக) மகுடாகமத்திலும் கூறப்பட்டிருக்கிறது. அவைகள் அங்கு கண்டு அறியத்தக்கவைகள்.

லிங்கலக்ஷ்மவகையில் திக்பாலகஆயுதசின்னம்

ஒன்பதுதிசைகளில் லிங்கஅமைப்பு
இவைஅட்டசித்தி (எண்வகைச் செல்வங்களைத்தருபவைகள்)
தசாயுதக்குறியுடன் சிவலிங்கத் திருமேனிகள் ஒன்பது.



1. நடுவிலே-பிரம்மலிங்கம்
2. இந்திரலிங்கம்
3. அக்கினிலிங்கம்,
4. ஜயலிங்கம்
5. திருதிலிங்கம்
6. வருணலிங்கம்,
7. வாயுலிங்கம்
8. குபேரலிங்கம்
9. ஈசானலிங்கம்.

லிங்க பூஜாம்சமும் படிமஅளவுகொள்முறையும்

சிவலிங்கமானது அடியிலிருந்து மேல்நோக்கி பிரம்மபாகம், விஷ்ணுபாகம், ருத்ரபாகம், என்று மூன்று அங்கங்களாக ஒரே அமைப்பில் செய்யப்படும். இவற்றில் பிரம்மபாகம் திருவுண்ணாழித் தளமட்டத்திற்குக்கீழேயும், விஷ்ணுபாகம் தளமட்டத்திற்குமேல் ஆவுடையாருக்குள்ளும் மறைந்திருக்கும். மூன்றாவது கூறாகிய ருத்ரபாகம் ஆவுடையாருக்குள்ளும் மேல்மட்டத்திலிருந்து ஓங்கியும் நிற்கும். இங்ஙனம் வெளியே தெரியும்பாகம் பூஜாபாகம் என்றும், திருச்யபாகம் என்றும் பூஜாம்சம் என்றும் சொல்லப்படும். இவ்வமைப்பு சிற்பிகளால் செதுக்கப் பெறும் மானுஷலிங்கங்களில் அமையும். பிறவகையான சுயம்பு, மற்றும் பாணலிங்கங்களில் பிரம்மபாகம், விஷ்ணுபாகம் என்பன இருக்காது. ஆனால், அவை ஆவுடையாருடன் சேர்ந்தே பூஜிக்கப்படும். இங்ஙனம் அமைந்த எல்லாவகை லிங்கங்களின் பூஜாம்சம் என்பது ஆவுடையார் மேல்மட்டத்திலிருந்து மிகஉயரமான எல்லைவரைஉள்ள பகுதியின் அளவேயாகும். மானுடலிங்கங்களின் தலைப்பகுதியில் புடைத்துக் குடைபோன்றமைந்த பகுதி சிரோவர்த்தனம் என்று சொல்லப்படும். மானுடலிங்கங்களில் சிரோவர்த்தனத்தை நீக்கி, மீதியுள்ள பாகத்தை பூஜாம்ச உயரமாகக் கொள்ளுதல் வேண்டும். சுயம்புலிங்கம். பாண லிங்கம் ஆகியவற்றில் இத்தகைய சிரோவர்த்தனம் என்ற அமைப்பு இல்லாத காரணத்தால் ஆவுடையாரின் மேல்மட்டத்திலிருந்து வெளித்தோன்றும் பகுதியில் அதிக உயரமுள்ளதைப் பூஜாம்சஉயரமாகக் கொள்ளுதல் வேண்டும். இந்த அளவு பிற சைவப்படிமங்களின் உயரங்களை நிர்ணயிப்பதற்கு மூலஅளவாகக் கொள்ளப்படுகிறது.

லிங்க பூஜாம்ச உயரத்தைக் கொள்ளுவதைப்போலவே லிங்க பூஜாம்ச அகலம், அல்லது சுற்றளவு இதில் ஏதாவதொன்றை மூலஅளவாகக் கொள்ளுதலும் மரபு. ஆனால், சுயம்புலிங்கம், பாணலிங்கம் மற்றும் பிற லிங்கங்களிலிருந்து அகலம், சுற்றளவு ஆகிய அளவுகளைக் காண அந்தந்த லிங்கங்களில் எவ்விடத்தில் அதிகப்பருமன் உள்ளதோ அவ்விடத்தின் அளவுகளைப் பற்றுதல் வேண்டும். எனவே லிங்கமானத்திலிருந்து படிமமானங்களை நிர்ணயம் செய்வதற்கு, லிங்கத்தின் பூஜாம்ச உயரம். அகலம், சுற்றளவு எனத் தனித்தனியே மூன்று அடிப்படை அளவுகள் கிடைக்கின்றன என்பதை சிற்பிகள் கருத்திற்கொள்ளவேண்டும்.

லிங்க திசைநோக்கு முறை

சீரேஷ்டம் பஸ்சான்முகம் லிங்கம் அபாவாத் ப்ராங்முகம்ஸ்மிருதம்|
யாம்ய கௌபேர வக்த்ரம் து ஸித்தா விஷ்யதே புதை:|
அதவா சாந்திகர்மாதௌள ஸௌம்யாபி முக மிஷ்யதே|
ஏகத்வார விமானே (அ)யம் நியமோ நிஷ்களஸ்ய து|
சதுர்த்வாரே ச மேர்வாதௌள லிங்கே ச சதுரானனே|
சதுர்த்வாரம் ப்ரகர்த்தவ்யம் தத்ரா (அ)யம் நியமோ நஹி|
யஸ்யாம் திசி பவேத் த்வாரம் தாம் ப்ராசீம் பரிகல் பயேத்|
லிங்கஸ்யா பிமுகம் யத் து த்வாரம் தத் பூர்வம் இஷ்யதே|
தத்ர தத்புருஷம் வக்த்ரம் ஊர்த்வம் சா(அ)பிமுகம் பவேத்||

(பூர்வகாமிகாகமம்–படலம்–4ல்)

இதன்பொருள் = அருவுருவவடிவில் உள்ள சிவலிங்கமானது, மேற்குமுகமாய் உள்ளது சிறப்பாகும். அது இல்லாதபொழுதில் கிழக்குமுகாகலிங்கம் செய்வது ஏற்கப்படுகிறது. தெற்குமுகம் மற்றும் வடக்குமுகமாக உள்ள லிங்கம் ஸித்திபெறுவதற்கேற்றவை. சாந்திக்கான செயல்முறையில் வடக்குமுகலிங்கம் ஏற்புடையதாகும். அல்லது இந்த நியமம் கட்டுப்பாடு ஒருவாயில் மட்டுமேயுள்ள கருவறை விமானத்திற்கு மட்டுமே, அதுவும் உருவமில்லாத சிவலிங்கத்திற்கு மட்டுமே என்றுஅறிக. நான்கு வாயில் உள்ள கருவறை விமானத்திலும், மேரு என்கிற விமானத்திலும், நான்கு முகமுள்ள லிங்கத்திலும் கருவறையில் நான்குவாயில்களை அமைத்திடவேண்டும். அங்கு ஒரு வாயிலின் நியமம் கிடையாதல்லவா. லிங்கத்திற்கு எந்த திசையில் வாயில் உள்ளதோ, அந்த திசையே அந்த லிங்கத்திற்கு கிழக்குதிசையாக விளங்ககுவதாக மனதால் கருதி வழிபடவேண்டும். **லிங்கம் நோக்கும் திசையே கிழக்கு** என்று வழிபடத்தக்கது. அதாவது கிழக்குமுகமாகிய தத்புருஷம் வாயிலை நோக்கியதாக விளங்கும், மேல்முகமாகிய ஈசானமுகமும் அந்ததிசையை வாயிலையே நோக்கிடும். இதனை தேவப்ராசீ என்று ஆகமஅறிஞர்கள் கூறுவார்கள். இதனால் சிவலிங்கம் பெருமளவில் மேற்குமுகமாயும், கிழக்குமுகமாயும் பலதலங்களில் ஸ்தாபிக்கப்பட்டு உள்ளன. இது பிரதான மூலலிங்க விஷயமாகும். சுற்றுப் பிராகாரங்களில் அமைந்துள்ள பரிவாரமாயுள்ள அங்கலிங்கங்கள் மேற்கு அல்லது கிழக்குநோக்கியதாகவும், மூலக் கருவறையை நோக்கிடுமாறும் லிங்கஸ்தாபனம் செய்யத்தக்கது.

பிம்பமான வீதிமுறைகள் (சிலைக்குஅளவுகொள்முறை)

லிங்க பூஜாம்ச உயரத்திற்குச் சமமாகவோ அல்லது அகலத்திற்குச் சமமாகவோ அல்லது சுற்றளவுக்குச் சமமாகவோ படிமங்களின் உயரம் இருக்க வேண்டும். சிவலிங்க அளவினால் சந்திரசேகரர் முதலான 25வகை மாஹேச்வர பிம்பங்களை செய்யவேண்டும்.

1. லிங்கமானத்தில் அளவுமுறை

லிங்க பூஜாம்ச உயர அளவை 16 கூறுகளாகப் பிரித்து அத்துடன் 3, 5, 7, 9, 11 ஆகிய கூறுகளை முறையே, கூட்டியோ அல்லது குறைத்தோ கிடைக்கும் 10 அளவுகளில் ஒன்றினைப் படிமத்தின் உயரமாகக் கொள்ளலாம்.

இங்ஙனமே அகல அளவினால் 10 உயரங்களும், சுற்றளவினால் 10 உயரங்களும் கிடைப்பதில் ஏதேனும் ஒன்றைப் படிம உயரமாகக் கொள்ளலாம். எனவே மொத்தத்தில் கிடைக்கும் 33 உயரங்களில் பொருத்தமான ஏதேனும் ஒன்றைச் சிற்பிகள் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

லிங்க பூஜாம்ச அகலம், கற்றளவு, உயரம், ஆகிய வற்றைத் தனித்தனியே 16 கூறுகளாகப் பிரித்து அக்கூறுகளுடன் ஒவ்வொரு கூறையும் முறையே கூட்டியோ அல்லது குறைத்தோ 11 விதமான படிம உயரங்களைப் பெறலாம். (17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25. 26, 27): (15, 14, 13, 12, 11, 10, 9, 8, 7, 6, 5).

லிங்க பூஜாம்ச உயரத்தை இரட்டித்து அதனை 32 கூறுகளாகப் பிரித்து அக்கூறுகளில் 5, 7, 9, 11, 13, 16, 19, 21, 23, 25, 27 கூறுகள் ஆகிய ஏதேனும் ஒன்றினைப் படிமஉயரமாகவும் நிர்ணயிக்கலாம். இதேமுறையில் லிங்கஅகலம், லிங்கச்சுற்றளவு ஆகியவற்றைத் தனித்தனியே இரட்டித்து, 32 கூறுகளாகப் பிரித்து, மேற்குறிப்பிட்ட 11 விதமான உயரங்களைக் கணித்து ஏதேனும் ஒன்றை படிமஉயரமாகவும் கொள்ளலாம். இம்முறைகளால் மொத்தத்தில் 33 உயர அளவுகள் கிடைக்கின்றன.

அன்றியும், மேற்குறிப்பிட்ட 11விதமான உயரங்களைத் தனித்தனியாக 9கூறுகளாகப் பிரித்து அதன் ஒருகூறுமுதல் 27 கூறுவரை 27 விதமான உயரங்களை. பூஜாம்சஉயரத்தாலும் அகலத்தாலும் சுற்றளவாலும் தனித்தனியே பெறலாம். இம் முறையில் மொத்தத்தில் 81 விதமான

உயரங்கள் கிடைப்பதில் ஏதேனும் பொருத்தமான ஒன்றினைச் சிற்பிகள் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

மேலும் லிங்க பூஜாம்ச உயரத்தை 9 கூறுகளாக்கி அத்தகைய கூறுகளில் ஒன்று முதல் 27 கூறுகள் வரை 27 உயரங்களும். பூஜாம்ச உயரத்தை இரட்டித்து அதனை 31 கூறுகளாக்கி, 31 கூறிலிருந்து இரண்டிரண்டு கூறுகளாகக் குறைத்து 5 கூறுகள் வரை 14 விதமான உயரங்கள் கிடைப்பதில் ஏதேனும் ஒன்றைப் படிமஉயரமாகவும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

லிங்க பூஜாம்ச உயரத்திற்குச் சமம். இருமடங்கு மும்மடங்கு ஆகிய அளவுகளைக் கொண்ட படிமஉயரங்கள் முறையே **கன்யசம், மத்யமம், உத்தமம்** என்று சொல்லப்படும். உத்தம அளவிற்கும், கன்யச அளவிற்கும், உள்ள வித்தியாசத்தைக் கூறுகளாக்கி, கன்யசஅளவு முதல் உத்தமஅளவு வரை ஒவ்வொரு கூறாகக்கூட்டி 9 வகையான உயரங்களைப் பெறலாம்.

இங்ஙனமே லிங்கபூஜாம்ச அகலத்தாலும் கற்றளவாலும் ஒன்பதொன்பது அளவுகளைப் பெறக்கூடும். இந்த அளவுகளில் ஏதேனும் ஒன்றினைப் பொருத்தமுடன் தேர்ந்து கொள்ளுதல் வேண்டும்

2. கர்பமானத்தால் அளவுமுறை

திருவுண்ணாழிக் கால்புறவாய் அகல அளவை அடிப்படையாகக் கொண்டு **ஜாதி, சந்தம், விகல்பம், ஆபாசம்** என்று நான்கு வகையாகக் கோயில்கட்டடத்தைச் ஆகம சிற்பநூல்கள் பாகுபடுத்திக் கூறுகின்றன.

மூலலிங்க உயரத்திற்குச் சமஅளவு. முக்கால்பங்கு, அரைப்பங்கு, கால்பங்கு உயரங்களை முறையே **ஜாதி, சந்த, விகல்ப, ஆபாச** ஆலயங்களில் அமைக்கவேண்டிய சகளத்திருமேனியின் உயர அளவாகக் கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் சுற்றளவிற்குச் சமம், முக்கால், அரை, கால்பங்கு அளவுகள் முறையே அந்நால்வகை ஆலயங்களுக்கு ஏற்ற படிமமானங்களாகும். அல்லது லிங்க உயரத்திற்குச் சமஅளவிலிருந்து கால், கால் பங்காகக் கூட்டி மூன்று மடங்கு அளவுவரை ஒன்பது விதமான உயரங்களில் ஏதேனும் ஒன்றினைப் படிமஉயரமாகவும் கொள்ளலாம். (படிமம்/சிலை/விக்ரஹம்)

லிங்க பூஜாம்ச உயரத்திற்குச் சமம் அல்லது ஒன்றரை மடங்கு அல்லது இரண்டு மடங்கு ஜங்கமப் படிமங்களுக்கு உயர அளவுகளாகும். மேலும், பூஜாம்ச உயரத்தைப்போல் இரண்டரை அல்லது மூன்று மடங்கு ஜங்கமப் பிரதிமையின் உயரமாகவும் இருக்கலாம். இம்முறை சாளக்கிராமம், பாணலிங்கம் போன்றவை மூல லிங்கமாக உள்ள ஆலயங்கட்கு மிகவும் ஏற்றது.



[எண்ணற்ற லிங்கவழிபாடு]

லிங்க பூஜாம்ச உயரத்திற்குச் சமஅளவு இரு மடங்கு, மூன்று மடங்கு ஆகிய ஒவ்வொன்றையும் 27 பாகம் செய்து மூன்று பாகம் முதல் இரண்டு இரண்டு பாகமாகக் கூட்டி 27 கூறுவரை கிடைக்கும் 13 விதமான உயரங்களைப் படிமஉயரமாகக்கொள்ளலாம். அல்லது மேற்கண்ட அளவுகளை 64 கூறுகள் செய்து, மூன்றுகூறு முதல் ஒவ்வொரு கூறாகக்கூட்டி. 64 கூறு வரை 62 விதமான உயரங்களை அமைக்கலாம். அல்லது 29 கூறுகள் செய்து மூன்று கூறு முதல் ஒவ் வொன்றாகக் கூட்டி 29 கூறு வரை 27 விதமான உயரங்களைப் பெறலாம்.

லிங்கத்தினுடைய பூஜாம்ச த்தின் அகலத்தை 33 கூறுகள் செய்து, மூன்றுகூறு முதல் ஒவ்வொன்றாகஏற்றி, 33 கூறுவரை 31 உயரங்களும் 47 கூறுகள் செய்து 5 கூறு முதல் இரண்டிரண்டாகக் கூட்டி 43 கூறு வரை 20 உயரங்களும். அல்லது 57 கூறுகள் செய்து மூன்று கூறு முதல் இரண்டிரண்டாக 57 கூறு வரைக் கூட்டி 28 உயரங்களும், அல்லது 65 கூறுகள் செய்து 5 கூறு முதல் இரண்டிரண்டாகக் கூட்டி 65 கூறுவரை 31 கூறுகளும் கிடைப்பதில் பொருத்தமான ஏதேனும் ஒன்றினைப் படிமஉயரமாக ஏற்கலாம். (உருவச்சிலைக்கு)

லிங்க பூஜாம்ச உயரத்திற்குச் சமம் அல்லது மூன்று மடங்கு அல்லது ஐந்து மடங்கு அளவு படிமங்களின் உயாமானங்களாக இருக்கலாம். அல்லது ஒவ்வொன்றையும் மூன்று கூறுகளாகப் பிரிக்க 9 வகையான உயரங்கள் கிடைக்கும். எனவே. அங்ஙனம் கிடைத்த 18 உயரங்களில் ஏதேனும் ஒன்றினை, இடத்திற்கும் பொருளுக்கும் ஏற்றவாறு தேர்த்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

நித்யோத்சவர், அஸ்த்ரமூர்த்தி ஆகிய படிமங்களின் உயரத்தை லிங்கபூஜாம்ச உயரத்தால் செய்வதாயின், பூஜாம்சஉயரத்தை 5பாகம் செய்து ஒருகூறுமுதல் ஒன்பதுகூறுவரை ஒன்பதுவிதமான உயரங்களில் ஏதேனும் ஒன்றினைப் படிமஉயரமாகக் கொள்ளலாம்.

லிங்க பூஜாம்ச உயரத்தால் தேவியின் உயரம்காண, லிங்கபூஜாம்ச உயரஅளவிற்குச் சமஅளவிலிருந்து கால், கால் பங்காகக் கூட்டி, ஆறுமடங்குவரை 24விதமான உயரங்களாகக் கொள்ளலாம்.

3. துவார மானத்தால் படிம அளவுமுறை

திருவுண்ணாழி என்ற கர்ப்பக்கிருஹ துவாரமாகிற திருவாயில், உள்அளவை அடிப்படையாகக் கொண்டு படிமமானங்கள் நிர்ணயம் செய்யத்தக்க முறைகளைக் கீழேகாணலாம்.

சுத்தத்துவார உயரத்திற்குச் சமம் அல்லது ஒன்றேகால் பங்கு அல்லது முக்கால் பங்கு உயரம் படிம உயரமாக இருக்கலாம். சமஉயரத்திற்கும் முக்கால் பங்குக்கும் அதேபோல் சமஉயரத்திற்கும் ஒன்றேகால் பங்கு உயரத்திற்கும் உள்ள வித்தியாசத்தை 4 பாகங்கள் செய்து மொத்தத்தில் 9 விதமாகப் படிம உயரம் வைக்கலாம்.

சுத்தத்துவார அகலம், உயாம் ஆகிய ஒவ்வொன்றையும் 4 கூறுகள் செய்து அத்துடன் ஒருகூறு கூட்டி அல்லது ஒருகூறு குறைத்துக் கிடைத்த ஒன்றேகால் பங்கு, முக்கால் பங்கு உயரங்களுக்கிடையேயுள்ள வித்தியாசத்தை 4 கூறுகளாகப் பிரித்து முக்கால் பங்கு முதல் கால். கால் கூறாகக்கூட்ட ஒவ்வொரு வகையாலும் ஐந்துவித உயரங்கள் கிடைக்கும். இதில் ஏதேனும் ஒன்றைப் பிம்பஉயரமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறே சிற்பசாஸ்திர முறைப்படி ஸ்தபதியாரால் ஆயாதி சுத்தம்செய்தஅளவினால் மட்டுமே தெய்வச்சிலைகளை வடிவமைத்திடவேண்டும்.

திருக்கோயில்களில் **மூலமூர்த்திகள்** என்றும் **பரிவாரமூர்த்தங்கள்** என்றும் **உற்சவமூர்த்தங்கள்** என்றும் மூன்று வகையில் விக்ரஹங்கள் இடம் பெற்றுள்ளன. இவை, பேரம் என்றும் பிம்பம் என்றும் கூறப்படும். இவற்றை ஆகமங்களிலும் சிற்பசாஸ்த்திர நூல்களிலும் கூறப்பட்டுள்ள அளவு விதிமுறைகளின்படியே தயாரித்திடவேண்டும். இவ்விதம் ஆலய வழிபாட்டிற்கு உரியசிலைகளை அமைப்பதற்கு 12வகையில் அளவுமுறைகள் கூறப்பட்டுள்ளன.

1. லிங்கமானத்தால், 2. கர்ப்பமானத்தால், 3. துவாரமானத்தால், 4. அதிஷ்டானமானத்தால், 5. பாதவர்க்கமானத்தால், 6. மூலபேர மானத்தால், 7. மானாங்குலத்தால், 8. மாத்ராங்குலத்தால், 9. முழமானத்தால், 10. தாளமானத்தால், 11. கர்த்தாவின்உயரமானத்தால், இவைகளில் ஒருமுறையில் செய்வதுமுறை. இவற்றின் விரிவான விளக்கத்தினை சில்பகலாநிதி திரு. வை. கணபதிஸ்தபதி அவர்களுடைய **சிற்பச்செந்நூல்** எனும் நூலில்கண்டு தெளிவுபெறவும்.

திருவீழிமிழலை கல்யாணசுந்தரசுவாமி

லிங்கவகை
அமைப்பு முறைகள்

மூன்றுவகை லிங்கங்கள்

சிவபெருமானுக்கு 1. அருவநிலை, 2. உருவநிலை, 3. இரண்டும் கலந்த ரூபாரூபநிலை என்று, மூன்றுவடிவங்கள் உண்டு என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. இதனை உணர்த்தவே அவ்யக்தம் என்பதாக லிங்கத்தை அருவமென்றும், சோமாஸ்கந்தர் முதலான திருமேனிகளை வியக்தம் என்றும், முகலிங்கத்தை வியக்தாவ்யக்தம் என்ற ரூபாருபநிலையென்றும், ஆகமங்கள் கூறுகின்றன. இதற்கான ஆகமச் சான்று. எடுத்துக்காட்டு இதுவே.

லிங்கம் து த்ரிவிதம் ப்ரோக்தம் வ்யக்தா(அ)வ்யக்தோ பயாத்மகம் |
வியக்தம் யா ப்ரதிமா (அ) வ்யக்தம் சிவலிங்க மிதி ஸ்மிருதம் |
முகலிங்கம் பவேத் அன்யத் த்ருதீயம் உபயாத்மகம் | (காமிகம்&காரணம்)

மூன்றுவகை லிங்கங்கள்
(உருவம், அருவம், அருஉருவம்)

வ்யக்தம் யத் ஸகளம் ஞேயம் அவ்யக்தம் நிஷ்களம் மதம் |
ஞான ஜ்யோதிர்மயம் லிங்கம் வ்யக்தாவ்யக்த மிதி ஸ்மிருதம் ||

(காலோத்தராகமம்)

என்பது சைவ ஆகமவசனம். ஸகலமூர்த்திகளையும் வியக்தலிங்கம் என்றுதான் ஆகமங்கள் கூறுகின்றன.

வியத்தலிங்கம் (3ல்1)

இறைவன் ஆத்மாக்கள் எண்ணி தியானித்து வழிபடுவதற்காக ஒரு திருமேனியில் இருந்து அருள்கிறார். தலை, உடல், கை, கால் முதலிய உறுப்புகளோடு விளங்குவது சகளம் எனப்படும். கோயிலில் சந்திரசேகர மூர்த்தம், நடராஜமூர்த்தம், சோமாஸ்கந்தமூர்த்தம், தக்ஷிணாமூர்த்தி முதலியவை சகளத்திருமேனிகளாகும். இதில் உருவம் வெளிப்படையாக உள்ளதால் இவ்வகையை ஆகமங்கள் வ்யக்தலிங்கம் என்று குறிப்பிடுகின்றன. இது உருவநிலை வழிபாட்டுக்கு உரியவைகளாம். இதுவே, சகளலிங்கம், ரூபலிங்கம், வியக்தலிங்கம், ஸகுணலிங்கம் ஆகும்.



அவ்யக்தலிங்கம் (3ல்2)

அவயவங்கள் எதுவும் இல்லாதவகையில் உள்ள சிவலிங்கமாவதால் இது நிஷ்களம் எனப்படுவதாக நிஷ்களலிங்கம். இதில் உருவம் வெளிப்படையாகத் தெரியாததால் இது அவ்யக்தலிங்கம் எனப்படுகிறது. இது சூக்ஷ்ம நிலையில் இருப்பதாகும். இந்த நிஷ்களமாகிய லிங்கம் ஆழ்ந்த தத்துவப்பொருளை உணர்த்தும் கடவுளின் வடிவமாகும். இதுவே சிவாலயத்தில் மூலாயக் கருவறையில் விளங்கும் சிவலிங்க மாகும். இதுவே அரூபலிங்கம், நிர்குணம் அவ்யக்தலிங்கம் என்பது ஆகும்.

மத்யார்ஜுனஸ்தல மஹாலிங்கம்

வியக்தாவ்யக்தலிங்கம் (3ல்3)

இறைவனுடைய திருமுகம் வெளிப்பட்ட நிலையில், பிற உடலுறுப்புகள் வெளிப்படா நிலையிலும் ஆக இருவகைக் கூறுகளும் கொண்டுள்ள முகலிங்கமே வியக்தாவ்யக்த லிங்கம் ஆகும். இதுவே ஸகள நிஷ்களலிங்கம், ரூபாரூபலிங்கம் குணாகுணவடிவலிங்கம் ஆகும்.

மூன்று வகைலிங்கங்கள்

சலலிங்கம் (ஜங்கமலிங்கம்) அசைவது. (3ல்1)

இறைவனது திருமேனியான லிங்கம் அல்லது பிம்பம் அசையும் வகையில் விளங்குவது சலலிங்கம் எனப்படுவதாகும். இது அசைவது இது ஆத்மார்த்தபூஜையில் வீடுகளிலும், கோயில்களில் மறுவடிவாய் நடராஜர், தியாகராஜா சன்னதிகளில் தினமும் அபிஷேகத்திற்கு விளங்கும் சிவலிங்கமும் ஆகும். இது கல், மரம், உலோகம், இரத்தினவகைகளில் இடம் பெற்றிருப்பது. கோயிலில் உள்ள அன்னலிங்கம், பலிபேரம் பலிலிங்கம் உற்சவபேரங்களும் சலலிங்கவகையைச்சேர்ந்தவை ஆகும். அவ்வப்பொழுது தனது தேவைக்கேற்ப இடமாற்றம் செய்து பூஜிக்கப்படுவதும், பெட்டிகளில் வைத்து பாதுகாக்கப்படுபவையும் சலலிங்கவகைகள் ஆகும். இது யானகலிங்கம் எனப்படும். ஆலய பூஜகரும் சலலிங்கமேஆகிறார்.

அசலலிங்கம் (ஸ்தாவரலிங்கம்அசையாதது) (3ல்2)

இறைவனின் திருமேனியாகும் லிங்கம் மற்றும் பிம்பம் (மூலவர்சிலை) அசைக்கக்கூடாதவகையில் ஒரே இடத்தில் அசையாததாக ஸ்திரமாக விளங்குவதே அசலலிங்கம் எனப்படுவதாகும். சலனம் என்றால் அசைதல் இது இல்லாதது என்பதே அசலம் என்ற சொல்லின் பொருளாம். இவ்வகை பெரும்பாலும் கல் மற்றும் இரத்தினவகையில் விளங்கிடும். கோயில்களில் கருவறைநடுவே ஸ்தாபிக்கப்பட்டுள்ள லிங்கம் மற்றும் பிம்பங்கள் அவ்யத்தலிங்கம் வியக்தலிங்கம் என்பதாக இருப்பவையாகும். திருச்சுற்றுப்பகுதிகளிலும் பரிவார மூர்த்தங்களாயும்,அங்கலிங்கமாயும் ஆங்காங்கு நிலையாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள லிங்கங்கள் ஆகும். இதுவே ஸ்தாவரம், ஸ்திரலிங்கம், த்ருவலிங்கம், நிச்சலலிங்கம், அசரலிங்கம் எனப்படுவதுமாகும். இவ்வகையில் பாலாலயங்களில் ஸ்தாபிக்கப்பட்டதாயும் விளங்கும்.

சலாசலலிங்கம் (உபயாத்மகம்) (3ல்3)
(அசைவதும் அசையாததும்)

திருக்கோயில்களில் தெய்வத்திருமேனிகள், மற்றும் கும்பம், சிலை முதலான பூஜாஆதாரங்கள் அசைவதும் அசையாததுமாக இரண்டு வகைப்பயன் பாட்டிலும் விளங்கும் மூர்த்தங்கள் சலாசலலிங்கம் எனப்படுவது ஆகும். எடுத்துக்காட்டாக ஸபையில் நிலையாக நிருவப்பட்டது போல் தோன்றுவதும், இருப்பிடம் உள்ள போதிலும் நடராஜர் திருமேனிவிக்ரஹம் மண்டபத்தில், தேர்பவனியில் எழுந்து அருளுவதால் சலமாயும், முடிவில் திருச்சபையில் அதே வடிவில் வெகுகாலத்திற்கு அசையாது ஓரிடத்திலேயே உரியநிலையில் உள்ளதால் அசலமாயும், வைக்கவும் விளங்குவதா கிறது. மேலும் விமானத்திலுள்ள தியாக ராஜப்பெருமான், மற்றும் சிவனாரின் எட்டு வகை அட்டவீரட்டேச்வரமூர்த்திகளும் சலாசல வியக்தலிங்கவகையில் விளங்கு வதாகும்.

[வெள்ளி-ரஜதலிங்கம்]

க்ஷணிகலிங்கம்

ஆத்மார்த்தமான வீட்பூசையை மண், அன்னம், கோமயம் (பசுஞ்சாணம்), சந்தனம், இவற்றின் கூம்புவடிவிலோ, பத்ரம் (இலை), புஷ்பம் (மலர்மாலை), அரிசி, வெண்ணை, ருத்ராக்ஷம், விபூதி, கூர்ச்சம் முதலான பலவகையான தற்காலிக க்ஷணிகலிங்கங்களிலோ, ஸ்படிகம், பவழம், மரகதம், முதலான பலவகையான ரத்தினலிங்கங்களிலோ, பத்மமண்டலம், லதாலிங்க மண்டலம், முதலான பலவகை மண்டலங்களிலோ, யந்திரம், அக்னி, தீபம், சூலம் முதலியவற்றிலோ தினமும் சிவபூஜையைச் செய்யலாம் என்று ஆத்மார்த்த பூசைக்கான லிங்கபேதங்கள் கூறப்பெற்றுள்ளன க்ஷணிகலிங்கம் என்பது பூசையின் காலம்வரையில் மட்டுமே ஏற்றது. ஆத்மார்த்தபூஜா விதிச்சான்று,

[சிவமணி-ருத்திராக்ஷம்]

க்ஷணிகே சிவலிங்கே ச ஸ்தண்டிலே மண்டலே (அ) பி ச |
கௌதுகே பித்திசித்ரே வா ஆத்மார்த்தே (அ)ர்ச்சன மாரபேத் |

(சுப்ரபேதாகமம்)

இறைவனை குறிப்பிட்டபொருள்களில், இலக்காகும் தற்கால வடிவங்களில், அல்லது பொருளால் லிங்கங்களைச் செய்து வழிபட்டு, அந்த வழிபாடு முடிந்ததும் நீக்கப்படுவது (மறைக்கப்படுவது) க்ஷணிகலிங்கம் எனப்படுவதாகும். குறிப்பிட்ட நேரத்திற்கே பயன்படுவதால் இது இப்பெயர் பெற்றது. க்ஷணம் என்பதற்கு காலம் பொழுது, கணம் என்பது பொருளாகும்.இவற்றைச் செய்வதற்கு அளவுகள் தேவையில்லை. இதனை மண்ணாலும், சாணம், மணல், சந்தனம், மாவு இவைகளால் அமைப்பர் இதனை பன்னிரண்டுவகையில் பொருள்களால் ஆகமங்கள் குறிப்பிடுகின்றன 1. மண், 2. அன்னம் 3. அரிசி 4. நதிமண் 5 பசுவின் சாணம் 6. சந்தனம் 7. மணல் 8. வெண்ணை 9. ருத்ராக்ஷம் 10. விபூதி (பஸ்ம) 11. தர்பைகூர்ச்சம் 12. மண்டலம் 13. பூமாலை 14. வெல்லம் 15. தாமரைப்பூ 16. பழம் முதலானவற்றில் வழிபாடு செய்யலாம். இவை அப்பூசைகாலத்திற்கு மட்டுமே ஆகும் லிங்கவகையாம்.



[பாணலிங்க வழிபாடு]

க்ஷணிகலிங்க பூஜையின் பயன்

க்ஷணிகாநாம் பலம் வக்ஷ்யே ஸைகதம் மோக்ஷகாங்க்ஷினாம் |
தண்டுலம் விபவார்த்தீநாம் அன்னம் அன்னப்ரதாயிநாம் |
நதீமிருத் பூமிலாபம் ஸ்யாத் கோமயம் ரோகநாசனம் |
நவநீதம் மனோஹ்லாதம் ருத்ராக்ஷம் ஞானவர்த்தனம் |
கந்தம் ஸ்யாத் போககாங்க்ஷீனாம் கூர்ச்சம் முக்தியர்த்தினாம்ஸ்மிருதம்|
ஆயுஷ்யவர்த்தனம் புஷ்பம் குளம் இஷ்டார்த்த ஸித்தம் |
பிஷ்டம் புஷ்டிப்ரதம் ப்ரோக்தம் க்ஷணிகாநாம் பலம் பவேத்|

(அம்சுமதாகமம்)

அம்சுமதாகம கூற்றின்படி க்ஷணிகலிங்க வகைளில் நதியின் மணல் லிங்கபூஜையால் முக்தியும், அரிசிலிங்கபூஜையால் செல்வப்பெருக்கும், அன்னலிங்கபூஜை அன்னமளிப்பதும், நதிமண்லிங்கம் பூமிலாபத்தையும், பசுஞ்சாணலிங்கம் நோய்நீக்குவதும், வெண்ணைலிங்கம் மன மகிழ்ச்சியையும், ருத்ராக்ஷத்தின்பூஜை ஞானப்பெருக்குதலும், சந்தனலிங்கத்தில் பூஜித்தல் சுகபோகங்களையும் தர்பையாலான கூர்ச்சத்தில் பூஜைசெய்வது முக்தியைக்தருவதும், மலர்ந்தமலரில் சிவபூஜித்தல் விரும்பியபயனைக் கூட்டுவிப்பதும், அரிசியின்மாவில்

செய்தலிங்கபூஜை செழிப்பைத்தருவதுமாக தற்காலிகமாக பூஜைக்கு மட்டுமே ஏற்கப்படும் க்ஷணிகலிங்க வகைகளின் பயன்ஆகும். ஆத்மார்த்தமான வீட்டுபூசையில் க்ஷணிகலிங்கம் எல்லாவகையான விரும்பும் பயனை அளிக்கவல்லதாய் ஆகமங்கள் கூறுகின்றன.

இரண்டுவகை லிங்கங்கள்

ஸ்தாவரம் என்றும், ஜங்கமம் என்றும், லிங்கபேத்தை பூர்வகாரணாகமம் இருவகையாகக் கூறுகிறது. இதில் ஸ்தாவரம் என்பது ஓரிடத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டலிங்கம். ஜங்கமம் என்பது உற்சவமூர்த்திகள் மற்றும் அதை பூஜிக்கும் ஆசாரியர் என்று கூறப்படுகிறது. இதற்கான ஆகமசான்று,

ஸ்தாவரம் ஜங்கமம் சைவ த்விவிதம் லிங்க முச்யதே |
ஸ்தாவரம் ஸ்தாபிதம் லிங்கம் ஜங்கமம் தீக்ஷிதம் விது: ||

(காரணாகமம் – மகுடாகமம்)

இருவகை லிங்கவிளக்கம் (லிங்ககல்பம்)

சிவலிங்கமானது பொதுவாக பொருளாலும் பயன்பாட்டு முறையாலும் இருவகைப்படும். அவை ஸ்தாவரம் மற்றும் ஜங்கமம் என்பவை. ஸ்தாவரலிங்கம் பூசைஇடத்திலேயே நிலைத்திருப்பது ஆகும்.) ஸ்தாவரலிங்கம் கல்லாலும், ரத்தினத்தாலும், உலோகத்தாலும், மண்வகையாலும், செய்யத்தக்கது. கல்லால் அமைந்ததும், பிரம்மா விஷ்ணு ருத்ர பாகங்கள் மூன்றையும் கொண்டிருப்பதும், முகப்பில் மூன்று கோடுகளோடும், பூமொட்டு, தீச்சுடர்சின்னத்தோடும், கூடியலிங்கம் (மானுஷலிங்கவகை) ஸ்தாவரலிங்கம் எனப் பெயர்பெறும். பிறவகைகள் அனைத்தும் ஜங்கமலிங்கம் என்று பெயர்பெறும் என்கிறது காரணகாமச்சான்று.

ஸர்வேஷாம் ரக்ஷணார்த்தாய கிராமாதிஷு விசேஷத: |
ஸ்தாபிதம் விதிநா லிங்கம் சுரைர் வா முனிபிர் நரை: ||
ஸ்வய முத்பூத லிங்கம் வா ப்ரதிமாம் சேச்வராத்மிகாம் |
தத் பரார்த்தம் இதி க்யாதம் ஸர்வேஷாம் ஆத்மனப் பலம் ||

(காரணாகமம் 13011)

லிங்கவகைகள் (அசைப்பதும் அசைக்காததும்)

சுயம்புலிங்கம், பாணலிங்கம், காணவலிங்கம், தைவிகலிங்கம், திவ்யலிங்கம், ஆர்ஷகலிங்கம், ராக்ஷஸலிங்கம் மானவலிங்கம் முதலானவையாக லிங்கம் பலவகைப்படும். அசைக்கத்தக்கது

சரலிங்கம், அசைக்கக்கூடாதது **ஸ்திரலிங்கம்.** லிங்ககல்பத்தில் கூறப்பட்டுள்ள **லிங்கவகைகள்** மணல், ருத்ராக்ஷம் முதலியவை, தற்காலிகமான இலக்குஉருவமாய் அமைந்திடும் பலவகையான **க்ஷணிகலிங்கங்கள்,** முதலானவற்றில், அவைகளையே சிவலிங்கமாகக்கருதி லிங்கபாவனையுடன் பூசிக்கவேண்டும். இதனால் **எல்லாம் லிங்கமயம்** என்றறியலாம்.

ஸ்தாவரலிங்க லக்ஷணம் (அசையாதது) (2ல்1)

சிலாமயம் து யத் ரூபம் அஜ விஷ்ணு ஹரைர் யுதம் |
த்ரிசூத்ரம் முகுளைர் யுக்தம் ஸ்தாவரம் லிங்கம் உச்யதே ||

(பூர்வகாரணாகமபடலம் 9ல்3)

கல்லாலானதும் பிரம்மா விஷ்ணு ருத்ரபாகங்கள் மூன்றுடன் உள்ளதும், மூன்று லக்ஷ்மசூத்ரம் மொட்டுடன் கூடியதும் **ஸ்தாவரலிங்கம்** என்பதாம்.

சிவலிங்கமானது சலமென்றும், அசலமென்றும் இருவகை. சலம் என்பது அசைக்கத்தக்கது.அசலம் என்பது அசைக்கக்கூடாதது. இறை முறையே சலலிங்கமானது **சரலிங்கம்,** அல்லது **ஜங்கமலிங்கம்** எனப்படும். அசலலிங்கமானது அசரலிங்கம் அல்லது **ஸ்தாவரலிங்கம்** துருவலிங்கம் அல்லது **ஸ்திரலிங்கம்** என்று பெயர்பெறும்.

லிங்கம்து த்விவதம் ப்ரோக்தம் சலா சல விபேதத: |
ஸ்தாவரம் ஜங்கமம் சைவ த்விவிதம் லிங்கமுச்யதே || (சிவாகமங்கள்)

இவற்றுள் உருவமாய் உள்ள நடேசர்தக்ஷிணேசர், உமேசர்முதலான மாஹேச்வரமூர்த்திகளும், பூஜைசெய்யும் அர்ச்சகரும் **ஜங்கமலிங்கம்** எனப்படுவர். துருவலிங்கம், அல்லது **மூலலிங்கம்** எனப்படுவதாக கோயில்களில் மூலஸ்தானக் கருவறை எனும் தேவமண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள, சிவலிங்கமே, **ஸ்தாவரலிங்கம்** எனப்படும். தற்காலிக க்ஷணிகலிங்கத்தைவிட சலலிங்கம் விசேஷம். அனைத்தையும்விட **ஸ்தாவரலிங்கமே** விசேஷமானதாகும். இது **சிஷ்டலிங்கம்,** மானுஷலிங்கம் என்று இருவகைப்படும். மனிதனால் செய்யப் பட்டு ஸ்தாபிக்கப்பட்ட லிங்கமானது **மானுஷ லிங்கம்** எனப்படும். மற்றய சிறப்புலிங்க வகைகள்,யாவும் **சிஷ்டலிங்கவகையாகும்.**

சிவாதிக லிங்கம்
ஸ்தாவர மூலலிங்கவகை

கோயிலில் காணப்படும் சிவலிங்கங்கள் யாவும் எட்டு வகையாகும். அவை 1.ஸ்வயும்பு, 2.தைவிகம், 3.தியவம், 4.காணவம், 5.ஆர்ஷகம், 6.ராக்ஷஸம், 7.பாணலிங்கம், 8.மானுஷலிங்கம் என்பனவாகும். மானுஷலிங்கத்தில் தவறாமல் பூஜாம்சத்தில் ப்ரம்மசூத்ரம் என்கிற கோடு பதிவு செய்யப்பட்டிருக்கும். மற்றதில் இருக்கலாம், இல்லாமலும் அமையலாம். எந்தலிங்கத்தைப் பூசிப்பதானாலும், முதலில் பஞ்சசுத் திகிரியை முடித்து, பின்பு மானச பூசையை செய்துமுடித்து, பின்பு மனத்து அகத்தே கண்டதையே வெளியில் லிங்கவகைகளில் கருதி பூசிப்பதே முறையாகும்.

அந்தர்யாகம் புராக்ருத்வா பாஹ்ய பூஜாமதாசரேத் |
ஜோதிலிங்கம் ஹிருதிஸ்தம யத் ததேவாப் யர்ச்யதே பஹி: ||

(சிவாகமபத்ததி)

ஆகவே உலகஉயிர்களின் பொதுநலன்கருதி செய்யப்படும் ஆலய பூசையானது, மிகஉயர்ந்த பூஜைமுறையாகும். இது சிவாகமங்களின் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்குபாத பகுதிகளிலும், தேர்ச்சிபெற்றவராலும், பயிற்சிபெற்ற வராலும், ஆதிசைவ ஆசார்ய அர்ச்சகர்களால் மட்டுமே செய்யத்தக்கது. இது சிவயோக நெறியுடன் கூடிய அகக்கலையாக, மனோவாக்காய முக்கரணங்களால், மந்திரக் கிரியா பாவனைகள் மூன்றையும் செய்யத்தக்க சிவாகமஸார முமாகிய உத்தமகிரியையுமாகிய **"சிவபூஜை"** ஆலயத்தில் மிகச்சிறப்பு உடையதாகும்.

ஜங்கமலிங்கலக்ஷணம் (அசைப்பது) (2ல்2)

சேஷாண்யன் யாநி ஸர்வாணி ஜங்கமம் லிங்கம் உச்யதே.

ஸ்தாவரலிங்கமில்லாத மற்றவகைகள் அனைத்துமே ஜங்கமலிங்கம் எனக் கூறப்படுவதாகும், உருவமுள்ள பேரங்கள், சிலைகள், பூஜகர். முதலானவை ஜங்கமலிங்கம் எனும் அசைத்துபயன்படுத்துபவை. ஜங்கமலிங்கத்தைக் காட்டிலும் அசையாத நிலைத்திருக்கும் **ஸ்தாவரலிங்கம்** (கல்லாலான துருவலிங்கம்) விசேஷமானது. கோயில்களில் மூலக் கருவறையில் நாம் காண்பது **ஸ்தாவரலிங்கமே.** இந்தலிங்கத்தை ஆகமமுறைப்படி மலை யிலிருந்து பூஜை செய்து கல்லைத் தேர்ந்தெடுத்து **சிலாஸங்கிரஹணம்** செய்து, சிற்பியான ஸ்தபதியே கர்மமண்டபத்தில் முறைப்படியே தயாரித்து அளிக்கவேண்டும்.

சோமாஸ்கந்தேச்வரர்
(ஜங்கமலிங்கவகை, சலபேரவகை)

ஆத்மார்த்தபூஜா க்ருஹலிங்கம் (ஸ்வார்த்தலிங்கம்)

ஸர்வேஷாம் ஆத்ம ரக்ஷார்த்தம் இஷ்ட லிங்கார்ச்சனம் க்ருஹே |

ஆத்மார்த்த மிதி விக்யாதம்... .... பூர்வகாரணாகமம் 30–ல் சு–12)

க்ஷணிகே சலலிங்கே ச ஸ்தண்டிலே மண்டலே (அ)பி ச |
கௌதுகே பித்திசித்ரே வா ஆத்மார்த்தே (அ)ர்ச்சன மாரபேத் ||

(சுப்ரபேதாகமம்)

தன்நலம் கருதியும் தனது குடும்பத்தினரின் நலம் வேண்டியும் தனது வீட்டிலே தன்னால் வழிபாடு செய்யப்படுகிறலிங்கமானது ஆத்மார்த்த இலிங்கம் எனப்படுவதாகும். இதனை லிங்ககல்பத்தில் கூறிய வகைகளில் ஒன்றாக ஏற்கலாம். கருங்கல், மரவகை, உலோகவகை, ரத்தின வகையில் இதனைக்கொள்வர். இதனை அவரவர் களுக்கு ஏற்றஆயாதி சுத்ததாள அளவில் ஒருசாண் அளவிற்குள் அமைத்துப் பூசித்திடவேண்டும். 12அங்குலம் வரை இருக்கலாம்.



இரத்தின மரகதலிங்கம்

பரார்த்தலிங்கம் (ஆலயலிங்கம்)

கிராமம் முதலானமக்களின் வசிப்பிடங்களில், பொதுஇடத்தில், பொதுநலம்கருதி கிராமமக்கள் மற்றும் அங்குள்ள எல்லா உயிரினங்களும் வளமுடன் வாழவேண்டி, பொதுவான ஆசார்யரால், சிவன் படைத்துக்கட்டளை யிட்டுள்ள ஆதிசைவகுலத்தினரால், கோயில்களில் பூஜிக்கப்படுபவை பரார்த்த லிங்கம் எனப்படுவதாகும். இதுவே ஆலயலிங்கம், மூலஸ்தானலிங்கம் எனவும் அழைக்கப்படும். இதுகோ யில்களில், மண்புற்றுலிங்கம், கல்லாலான சிலாலிங்கம், தானே வெளிப்பட்டலிங்கம், எடுத்துவைத்த உத்ருதலிங்கம் ஆக விளங்கும். ஆகமங்களில் தன்மையால் இது ஏழுவகையாக கூறப்பட்டுள்ளது.



சிலாலிங்கம் (கல்லிங்கம்)

பாலலிங்கம்

புதிதாகக் கோயிலமைக்கும் தருணத்தில் முன்னதாக முதலாவதாக அதற்குரிய உருவத்திலே சிறியஅளவில் கட்டப்பட்ட இளங்கோயிலில் மூலலிங்கத்தினுடைய அளவில் முறையே முக்கால், அரை, கால் பங்கு அளவில் கூறப்பட்டுள்ள அளவு முறையில் தயாரித்து புதுக்கோயிலில் மூலலிங்கம் பிரதிஷ்டைசெய்யப்படும் வரை குறிப்பிட்டகாலத்திற்கு மட்டும் ஸ்தாபிக்கப்படுகிறலிங்கம், மற்றும் மறுசீரமைப்பின் போதும் இடைக்கால குறுகிய காலத்திற்கு வேறு இடத்தில் மாற்றாக சிறிய அளவில் பால ஸ்தாபனம் செய்யப்படுவதும் பாலலிங்கம் எனப்படுவதாகும். இதனை மரவகை லிங்கமாகவும், கல்வகையிலுமட, வெகுகாலத்தேவைக்கு உலோகத்திலும், காலஅளவிற்கு ஏற்ப பலவகைவடிவிலும் கொள்வார்கள்.

[பாலாலயலிங்கம்]

மூலலிங்கம்

ஆலயங்களில் அதன் அளவிற்கு ஏற்ப மூலக்கருவறையில் முறையே ஸ்தாபிக்கப் பட்டுள்ளது மூலலிங்கம் எனப்படுவதாகும். இதனைச் சுற்றி பல லிங்கம் அல்லது பிம்பம் பரிவாரமாக ஸ்தாபிக்கப்படும் என்பதாலும், அவை இதன் அளவினாலேயே அமைவதாலும் இதுவே அடிப்படையாக விளங்குவதால் இப்பெயர் பெறுகிறது.

அங்கலிங்கம்

கோயில்களில் திருச்சுற்றுப்பகுதிகளில், பல இடங்களில், மூலத்திற்குத் துணை, உறுப்புகள் போல சூழ்ந்துள்ளவாறு. அமைக்கப்பட்டுள்ள பரிவாரமாயுள்ள சிவ லிங்கங்கள் ஆகமங்களில் அங்கலிங் கங்கள் என்று கூறப்படுவன ஆகும். இவை பல ரிஷிகள் ஸித்தர்களால் நிறுவப்பட்டவையாகவும் விளங்குவன ஆகும்.



திசாலிங்கம் (திகீசலிங்கம்)



கிராமம் நகரம் முதலானவற்றில் மூலக் கோயிலினுடையவெளிவீதியில் எட்டுதிசை களிலும் தனித்தனியே அமைந்தவிமானக் கருவறையில் ஸ்தாபிக்கப்படுவது திசா லிங்கம் ஆகும். இவை உரியதிசையில் உரிய பதத்தில் (இடத்தில்) லிங்கபாணத் தின் தெரியும் பூஜாம்சத்தில் அந்தந்ததிசை நாயகர்களுடைய ஆயுதக்குறியை லக்ஷ்ம மாகக் கொண்டு விளங்குவன ஆகும். வஜ்ரம் முதலான படைக்குறி யீடுடன் விளங்கும் திசைகளில் நிறுவியலிங்கங்கள் ஆகும்.

பஞ்சப்ரும்மலிங்கம் (பஞ்சலிங்கம்)



ஒரு ஆலயத்தினுள்ளே நடுவிலும் நான்கு மூலைகள் அல்லது நான்கு பெருந்திசைகளிலுமாக ஐந்து இடங்களில், தனித்தனியே சிறுவிமானத்துடன் விளங்கும் கோயில்களில் கருவறைகளில், சிவனாரின் ஐந்து திருமுகங்களின் அம்சமாக ஐந்துபிரம்மமந்திர மூர்த்தி மற்றும் பஞ் சகலாவடிவமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளவை பஞ்சபிரம்மலிங்கம் எனப்படுவதாகும். இதனை பஞ்சலிங்கம் எனவும் கூறுவார்கள்.



மூர்த்தீசலிங்கம் (அஷ்டலிங்கம்)



ஒருஆலயத்திலேயே நடுவில் உள்ள மூலலிங்கத்திற்கு எட்டுதிசையிலும் சுற்றுப் பகுதியுடன், மூலலிங்கத்தையே நோக்கிய வாறு ஸ்தாபிக்கப்படுகிற, பரிவாரமாக முதல் சுற்றுக்கோயிலில் எட்டில் அமைகிற எட்டு லிங்கங்கள், பவர் முதலானவர் களின் அம்சமுள்ளதாக பூஜிக்கப்படும். அஷ்ட மூர்த்தீச்வரலிங்கம் எனப்படுவதாகும். இது ஒன்பதாக விளங்குவதால் இதனை நவலிங்கம் என்றும் அழைத்திடுவார்கள். இவை எட்டும், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம், சூரியன், சந்திரன் வேள்விசெய்விப்பவர் என்ற

எட்டு மூர்த்தங்களாகக் கருத்தப்படுபவையாகும். பிரதானமானதுஸத், சித், ஆனந்த, பரிபூர்ண பரப்ரம்மமாயும் கருதப்படும்.

இஷ்டலிங்கம்

[விருப்பலிங்கம்]

தீக்ஷைபெற்ற ஒருவர்தான் விருப்பப்படி தேர்ந்தெடுத்து உயிருள்ள மட்டில் தொடர்ந்து தினமும் வழிபட்டுவரும் லிங்கத்திற்கு இஷ்டலிங்கம் என்று பெயர். இஷ்டம் என்ற சொல்லுக்கு இச்சா, விருப்பம் என்பது பொருள். விரும்பும் பயனை அடைய ஏற்ற லிங்கமாகத் திகழ்வதால் இது இப்பெயர் பெறும். இது பலவகைப்படுவதாம்.

சிஷ்டலிங்கம்


[சித்தர்கள்பூசித்த லிங்கம்]

மனிதனால்தயாரிக்கப்படாததும்,எவ்வித கைவினை திருத்தமும் புரியாததும், தேவகனம், ரிஷிகணம், அசுரகணம் இவர் களால் பூமியில் பூசை செய்து விட்டுச் சென்றதும், சுயம்புலிங்கம், நதீபாணலிங்கம் இவைகள், ஆலயத்தின் மானுஷலிங்கம் நீங்கலான மற்றய ஆறுவகைலிங்கங்களும், ஆகமங்களில் தனிச்சிறப்பு விதிமுறைகளுடன் சிஷ்ட லிங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளவை ஆகும்.

பலிலிங்கம்

ஆலய பூஜையில் காலை, நண்பகல், மாலை ஆகிய முப்பெரும்பொழுதுகளில் செய்யப்படுகிற மஹாஸந்திகால பூஜை யில் கூறப்பட்டுள்ள நித்திய ஸ்ரீபலி அளித்திடும்பொருட்டு விசேஷமான விதிமுறைப்படி ஆயலத்தை வலம் வருவதற்காகபுதிதாக தினமும் தயாரிக் கப்படுகிற நித்யோத்ஸவாங்கமான அன்ன லிங்கம், புஷ்பலிங்கம், அக்ஷதை லிங்கம், பலிநாயகலிங்கம், பாசுபதபலி பேரம் இவைகள் பலிலிங்கம் என்று கூறப்படுவன ஆகும்.

கிருத்யலிங்கம்

[மரத்தாலானது]

தெய்வ உபாஸனையுடன் உள்ள தீக்ஷிதர், மந்த்ரீ (மந்திரவாதி), ஸாதகர் எனப்படுகிற ஆசார்யர் என்பவரால் அடியவர்களின் பாதுகாப்பு கருதி ஒருவிருப்பப்பயனை அடையும் குறிக்கோளுடன் குறிப்பிட்டகாலத்திற்கு செய்யப்படுகிற எட்டுவகையிலான அஷ்டகர்ம ப்ரயோகத்திற்கான நக்ஷத்ரமரங்களில், உரிய வகையில்,உ ரியபொருளில் முறைப்படி தயாரித்து பூசிக்கப்படுவது கிருத்யலிங்கம், நைமித்திககர்மலிங்கம் எனப்படுவது ஆகும். இதனை மந்திரவாதிகள் கைக்கொள்வார்கள்.

காம்யலிங்கம்



[விருப்பபூசைக்கானது]

சிவனடியார்களால், தான் வேண்டி விண்ணப்பித்தபடி, விருப்பமான பயனை அடைய, விசேஷமாக மண்வகைகளை சேகரித்து சிறப்பாக வடிவமைக்கப்பட்டதும், பயனுக்கு ஏற்ற மரவகையில் கருங்காலி, வேம்பு, வில்வம் முதலியவற்றில் செய்யப் பட்டதும் குறிப்பிட்டகாலத்திற்கும் குறிப்பிட்ட செயலுக்குமாக விளங்குவது காம்யலிங்கம் எனப்படுவதாகும். ஆகமங்களில் காம்யலிங்கார்ச்சனம் பல்வேறு வழி முறைகளில் விரதநியமங்களுடன் கூறப்பட்டுள்ளது.

அன்னலிங்கம்

[உணவுவடிவம்]

ஆலயங்களில் நித்யோத்ஸவத்திற்காக தினமும் புதிதாக பலிப்ரமணத்திற்காகத் தயாரிக்கப்படுவது அன்னலிங்கம் ஆகும். இதற்கு விசேஷவிதிமுறை அளவு முறைகளும் கூறப்படுள்ளன. ஐப்பசிமாஸ பௌர்ணமி நாளிலும், அச்விநீநட்சத்திரத் தன்றும் கோயிலில் விசேஷமாக அன்னலிங்கம் தயாரித்து பூஜிக்கப் படுவது முறை. இதனை பூஜைமுடிவில் கோயிலின் குளத்திலோ கிணற்றிலோ நீர்நிலை களிலோ சேர்த்து கரைத்து விடவேண்டும்.

எவரும் உண்ணக்கூடாது. கோயில் யானைக்கு உணவாக அளிக்கலாம் குற்றமாகாது இதன் அளவு ஒருகை சாண் அளவு ஒரு முழஅளவுக்குள் இருத்தல் வேண்டும்.

பஸ்மலிங்கம்

[விபூதிலிங்கம்]

காம்யபூஜையில் விபூதியால் நறுமணப் பொருட்களுடன் சேர்த்துப்பிசைந்து சந்தனத்துடன் தயாரித்து பூஜிப்பது திருநீற்றால் செய்து திருநீற்றால் நீராட்டிமந்திரங்களை ஜபித்துப்பயன்படுத்துவது பஸ்மலிங்கம் என்றும் பூதிலிங்கம் என்றும் பெயர் பெறும்.

ரஸலிங்கம்

[பாதரஸலிங்கம்]

சிவனடியார்களாலும் சித்தர்கள் யோகிகளாலும் பாதரஸத்தைக் கொண்டு, அதனை நெருப்பிலிட்டுத்திடமாக்குகிற மூலிகையுடனான ரஸவாதவித்தையை அறிந்தவர்களால் ரஸத்தை கட்டியாக்கித் தயாரித்தது ரஸலிங்கம் எனப்படுவதாகும். சிலர் இதனை தனது ஆத்மார்த்த பூசையில் கொண்டுள்ளனர். பாரததேசத்தில் வடதிசையில் பல கோயில்களில் அங்கலிங்கமாகவும் இவ்வகை காணப்படுகிறது.

ரஸலிங்கபூஜையின் பயன் (தாதுலிங்கபூஜாபலன்)

[ஸ்படிகலிங்கம்]

ரஸலிங்கமானது, பாணலிங்கத்தினும் கோடிமடங்கு பயன்தருவதாகும். ரஸலிங்கம் பூஜையினால் அணிமாதி எட்டுவகை ஸித்திகளும் கைக்கூடும். ரஸலிங்கார்சனையால் முக்கதிகிட்டும். செல்வம் பெருகும். ஆகையால் முயற்சியோடு ரஸலிங்கத்தைப் பூஜிக்கவேண்டும். இதனால் எல்லாவகை பாவங்களுக்கும் அழிவு ஏற்படும். ரஸலிங்கத்தைக் காண்பதால் பாவமழியும், நமஸ்கரித்தலால், தீயகிரகங்களையும் போக்கி எல்லாவிருப்பங்களையும் தந்திடும். ஆதலால் முயற்சியுடன் ரஸலிங்கபூஜையை செய்யவேண்டும் என்று நாரதஸ்மிருதி கூறுகிறது.

ஸ்தூலலிங்கம்


[விமானலிங்கம்]

மூலாலயமானது, கிழிருந்து விமான ஸ்தூபியுடன் கூடியதாய், அதிஷ்டானம், பாதம், பிரஸ்தரம், கண்டம், சிகரம், ஸ்தூபி என்கிற ஆறுகட்டிட உறுப்புகளுடன் சிற்ப சாஸ்த்திரமுறைப்படி கட்டப்பட்டுள்ள விமான மானது ஸ்தூலலிங்கம் எனப்படுவது ஆகும். ஆறு அத்வாக்களின் வடிவமாக ஸர்வக்ஞதா முதலான ஆறுவகை தெய்வகுணப்பண்புகளுடன் கூடியதாய், பிரதி ஷ்டைசெய்யப்பட்டு அருள்தரும் பெரிய லிங்கம். இது அசையாக்கோ யிலாய், பெரிய அளவிலாவதால் இப்பெயர் பெறுகிறது.

சூக்ஷ்மலிங்கம்


[சூக்ஷ்மலிங்கம்]

சிவாலயங்களில் மூலக்கருவறையின் நடுவே விளங்குகிற முப்பகுதியுடனான மூல லிங்கமே சூக்ஷ்மலிங்கம் எனப்படுவதாகும். வெளியிலிருந்து பல அடுக்குப்பகுதிகளைக் கடந்து உள்ளே இருப்பதாலும் சதாசிவரின் உருவத்தை உள்ளே வெளிப்படாதநிலையில் கொண்டுள்ளதாலும், ஸ்தூலமான விமானத் தினுள்ளேஇருப்பதாலும்இப்பெயர்பெறுவதாகும்.ஸ்தூலலிங்கம்விமானம் ஸ்யாத் சூக்ஷ்மலிங்கம் ஸதாசிவம் என்கிறது ஆகமம். ஆவுடையாள் மேல் ஆகாயமாய் ஒளிவடிவில் மறைந்துள்ளது நுட்பலிங்கம்.

பத்ரலிங்கம் (சுபத்ரலிங்கம் (மஹாபீடலிங்கம்)

ஆலயங்களின் மூலலிங்கத்திற்கும், விமானத்திற்கும், சந்நதிக்கும் எதிர்திசையில், முன்புறத்தில், மலர்ந்த தாமரை மலர் வடிவத்தை உயரத்துடன் பத்மமண்டலத்தையே உருவமாகக்கொண்ட தாகத்தயாரித்து பாசத்தைநீக்கும் வடிவமாக விளங்குவது பலிபீடம் எனப் படுவதே ப4த்ரலிங்கம் என்று ஆகமங்கள் பலிபீடம் பத்ரலிங்கம் எனக்கூறுகின்றன இது விசேஷமான மூலலிங்கத்திற்கு இணையாக அருள்தரும் லிங்கவடிவமாகும்.

[மஹாபத்ரபலிபீடம்]

வல்மீகலிங்கம் (பார்த்திவலிங்கம்)

இயற்கையாகவே மண்ணில் புற்று வடிவில் ஓங்கி வெளிபட்டு லிங்கவடிவில் பல்லாண்டுகளாக அருள் பாலிக்கும் புற்றிடம் கொண்ட மண்ணாலான (செப்புத்தகடுபோர்த்தி மூடிவழிபட்டு வருகிற) லிங்கம், புற்றுவடிவிலேயே இலக்கணமேதுமின்றிவிளங்குவதே புற்றுலிங்கம் இதுவே வல்மீகலிங்கம் எனப்படுவதாகும். இவ்வகையில் திருவாரூர், அவிநாசி, திருவான்மியூர், முதலான பலதலங்களின் பேராலயங் களில் மூலலிங்கம் விளங்கியபடி பலஆ யிரமாண்டுகளாக அருள் பாலிக்கின்றன.



[புற்றும்வெளிபீடமும்]

[மண்புற்றுலிங்கம்]

பௌராணிகலிங்கம்

[சரித்திரலிங்கம்]

எந்தவகையினாலும் குறிப்பிடப்படாததும், இதுவே என்று நிச்சயிக்கக்கூடமுடியாத லிங்கம் பௌராணிகலிங்கம் எனப்படுவ தாகும். சூக்ஷ்மாகமத்தில் இவ்வகை குறிப்பிடப்பட்டுள்ளது. புராணங்களில், தலபுராணங்களில் பலராலும் வழிபடப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளவைகளும், காலத்தால் மிகவும் தொன்மையானவைகளும் பௌராணிகலிங்கவகையாகும்.

பர்வதாக்ரலிங்கம்

மலையின் சிகரஉச்சிமட்டுமே, தரை மட்டத்திற்கு மேலே தெரிவதாயும், மற்றவை பூமியினுள் மறைந்தபடி அடிகாண இயலாதவாறு உள்ளதாயும், மலைமுகடு வடிவில் உள்ளதாகவழிபடப்படுவது பர்வதாக்ரலிங்கம் எனப்படுவதாகும். இவ்வகையில் திருக்கேதாரம் கொடுமுடி, அண்ணாமலை முதலியதலங்களில் மூலலிங்கம் அருள்கின்றன.



[கிரீசமகுடேச்வரர்]

பித்திலிங்கம் (சித்ரலிங்கம்)



[சுவர்சித்திரலிங்கம்]

சுவர்களிலும் தூண்களிலும் மலைகளின் குடைவறைகளிலும் பாதி வெளிப்பட்டநிலையில்புடைப்புச்சித்திர லிங்கமாக விளங்குவதே பித்தி சித்ரலிங்கம் எனப்படுவதாக அறியவும். இதனை சித்ரார்த்திங்கம் என்றும் குறிப்பிடுவார்கள்.

நாகலிங்கம்



[நாகலிங்கம்]

ஆலயங்களில் பாம்பின் மீது, முகபடத்தின் நடுவிலேயும், மூன்றடுக்கில் சுற்றியுள்ள பாம்பின் உடல்மீது நாகாஸனத்தில் முப்பகுதிகளுடன் விளங்கும் சிவலிங்கம் பலதலை களுடன் நாகராஜவாசுகி அறவக்குடையில் கீழ்விளங்குவது நாகலிங்கம் எனப்படுவதாகும். இதுபாவம் நீக்க வல்லதும் மகப்பேறு அளிக்கவல்லதுமாகும். இரட்டையாயுள்ள நாகதம்பதியின் நடுவே லிங்கம் விளங்குவதாகவும் காணப்படுவதாகும்.

படலிங்கம்



[துணியில்லிங்கம்]

துணியில் ஐவகைவண்ணங்களால் முறைப்படி வரைந்து. வண்ணம், தீட்டப்பட்டு பூசிக்கப்படுவது படலிங்கம் எனப்படுவ தாகும். விரதநாள், விழாநாள், கொடிகள், அரசசின்னங்களில், பதாகையில் துணியில் விளங்குவதே படலிங்கம் ஆகும். படம் என்பது வஸ்த்ரமாகும்.

மண்டலசக்ரலிங்கம்

வண்ணப்பொடிகள் அல்லது தானியம், ரத்தினம் இவற்றால் முறைப்படி வரைந்து உரிய முறையில் அலங்கரிக்கப்பட்ட வண்ணக் கோலவடிவிலமைந்தலிங்கமே மண்டலசக்ர லிங்கம் ஆகும். இதனை மாதந்தோரும் பௌர்ணமி நாள் வழிபாட்டிலும், தீக்ஷையிலும் பவித்ராரோபணத் திலும் விசேஷமாக யந்திரம் என்கிற சக்ரவடிவில் பூசித்திடுவர்.

காரணலிங்கம் (கொடிமரம்)



சிவாலயத்தில் சன்னதி எதிரில் விருஷபத்தடியில் விளங்குகிற கொடிமர மானது **காரணலிங்கம்** எனப்படுவதாகும். இது ஜீவாத்மா பரமாத்மாவை அடைய உதவிடும் உடலின்மைய சுழுமுனை நாடி வடிவில் இருந்து சிவயோகமும் சிவ போகமும் பெற காரணமாய்த்திகழ்வதாலும், மூலாதாரம் முதலிய ஏழுஸ்தானங்களின் நாயகர்களான ஐந்தொழில்புரியும் பிரம்மா, விஷ்ணு-ருத்ரன், ஈஸ்வரன், ஸதாசிவன் என்கிற **ஐந்து காரணேச்வரர்களையும் கடக்கக் காரணமாயுள்ளதாலும் கொடிக்கம்பம்** எனும் துவஜஸ்தம்பம் என்பதே கோயிலில் ஐநதுவகைலிங்கத்தில் ஒன்றான **காரணலிங்கமாம்.**

ஆலயத்தின் ஐவகைலிங்கம் பரமகாரணலிங்கம்

1.ஆலயமூலலிங்கம், இது திருமூலட்டாணம் எனப்படுகிற **மஹாகாரணலிங்கம்.** 2. கொடிக் கம்பமான துவஜஸ்தம்பமானது **காரணலிங்கம்** 3. சிவனுறைவிடம் பலிபீடமானது, பாசத்தை நீக்கிபவித்ரமாக்குகிற **பத்ரலிங்கம்** என்பதாம் 4. விமானம், கோபுரம், ஸ்தூபி முதலானவை **ஸ்தூலலிங்கம்** எனப்படுவதாகும். 5. உற்சவ மூர்த்திகளானவை **ஜங்கமலிங்கம்** என்று சைவாலயத்தில் ஐவகைலிங்கம் கூறப்படும்.

புஷ்பலிங்கம் (மலர்வகை லிங்கம்)



ஆலய நித்யோத்ஸவத்தில் புறப்பாட்டிற்காகத் பூக்களால் சுற்றி தயாரிக்கப்படுவதானலிங்கம். பலவகை பூக்களாலும் இது தாமரைமலர் வடிவிலும் தயாரிக்கப்படுவதாகும்.

பலலிங்கம் (பனைமரக்கனி)

மத்யஸ்தூலம் ச லிங்கம் து நாளிகேர பலாக்ருதி: |
கதலீபல ஸங்காசம் பில்வவிருக்ஷ பலாக்ருதி: | (மகுடாகமம்)

தற்கால க்ஷணிகலிங்க பூஜைக்கு ஒருவகைக் கனியையே லிங்கமாகக் கொண்டு, அர்ச்சனைபுரிவதில், பலாபழம், பனம்பழம், வில்வப்பழம், தேங்காய் இவற்றில் ஸதாசிவரைப் பூசிப்பது பல லிங்கார்ச்சன வழிபாட்டுமுறையாம்.



[பனம்பழலிங்க]
[தாலபலம்]

ஸாலோக்யதலிங்கம்

இறைவனுடைய உலகை, அதாவது சிவலோகத்தை அடைவதையே பயனாக அளித்திடும் லிங்கவகையே ஸாலோக்யதலிங்கம் எனப்படுவதாகும். ஸாலோகம் எனில் தேவனின் சிவலோகப்ராப்தி. இது ஒருவகை பதமுத்தி எனும் பேறு ஆகும். பாணம் வட்டமாயும், பீடம் சதுரமாயும் உள்ளலிங்கம். சிவலிங்கத்தில் பாணம் வட்டவடிவ மாகவும், அதன் பிண்டிகை எனும் ஆவுடையார் நாற்கோணத்துடன் சமச துரவடிவமாயும், அமைந்திருக்கும். நல்லூர், கீழ்வேளூர் முதலிய தலங்களில் உள்ளது.

ஸாமீப்யதலிங்கம்

இறைவனுடைய அருகாமையை அடைவித்திடும் லிங்கம் ஸாமீப்யதலிங்கம் எனப்படுவதாகும். இது பாணம் பீடம் இரண்டுமே வட்டமாய் விளங்கும் லிங்கம். சிவலிங்கத்தில் பாணம் வட்டவடிவமாகவும், ஆவுடையாரும் வட்டவடிவமாகவே அமைந்திருக்கும். இது எங்கும் அதிக அளவில் காணப்படுவது ஆகும்.



ஸாரூப்யதலிங்கம்

இறைவனுடைய திருவுருவத்தையே அடியார்களுக்கு முக்திபேறாக அளிக்க வல்லதே **ஸாரூப்யதலிங்கம்** எனப்படுவதாகும். இதனை ஒரு முகலிங்கம் என்று கூறுவர். பீடம் சதுரமாயும் உள்ளது. சிவலிங்கத்தில் பாணம், வட்டவடிவிலும், அந்த பாணத்தின் திருச்யபாகமாகிய பூஜாம்சத்தில், ஒரு திருமுக அமைப்புடன் கூடியுள்ளதும், ஆவுடையார் வட்டவடிவமாய் உள்ளதும் ஆகும். இதனை அரிதாக சில இடங்களில் காணலாம்.

ஸாயுஜ்யதலிங்கம்

இறைவனுடைய பத்துவகை குணமனைத்தையும் தந்து சமநிலையில் ஸங்கமிக்கும் பேற்றை அளிப்பது **ஸாயுஜ்யதலிங்கம்** ஸாயுஜ்யம் என்ற சொல்லுக்கு சமமாகிக் கலந்திருத்தல் என்பது பொருளாகும். இதுவட்ட மானபீடத்தில் பல பட்டைகளுள்ள தாராலிங்க வகையாகும். சிவலிங்கத்தில் பிண்டிகையான ஆவுடையார் வட்ட வடிவமாக இருக்க, அதில் பாணம் நாலுபட்டை, எட்டுபட்டை, பதினாறுபட்டை, முப்பத்திஇரண்டு பட்டை, அறுபத்திநான்குபட்டைகள் இவற்றில் ஒருமுறையில் பட்டைகளை (தாரைகளை) உடையதாயிருக்கும். இதனை தாராலிங்கம் என்றும் அழைப்பர். இதனை காஞ்சீபுரம் கைலாசநாதர்கோயிலின் மூலலிங்கம், திருவதிகைவீரட்டேச்வரர் கோயிலின் மூலலிங்கம், முதலான பலதொன்மையான தலங்களிலும் காணலாம்.

ஆலய திருச்சுற்றில் அமைந்துள்ள அங்கலிங்கம்

ஆறுவகை சலலிங்கங்கள்

(வீட்டுபூசைக்கான லிங்கவகைகள் ஆறு)

லிங்கஸ்ய லக்ஷணம் வக்ஷ்யே ச்ரூயதாம் த்விஜ ஸத்தமா: |
மிருத் த்ருமோ(உ)பல லோஹோத்தம் ரத்ன பாணாதி ஸம்பவம் ||

(காமிகம் 62ல்–சுலோகம்-1)

இதன்படி 1. மண், 2. மரம், 3. கல், 4. உலோஹம், 5. ரத்தினம், 6. பாணம் ஆகியவை. 6வகையான இந்த வீட்டில் லிங்கத்தில் ஆத்மார்த்தபூஜையை அனைவரும் செய்யவேண்டும்.

மண்ணாலான லிங்கம் சுட்டது மற்றும் சுடப்படாததாக இருவகையில் முறையே அபக்வம் பக்வம் என்று பெயர்பெறும். 1. பார்த்திவலிங்கம் (மண்லிங்கம்), 2. தாருஜலிங்கம் (மரலிங்கம்), 3. சைலஜலிங்கம் – (கல்லிங்கம்), 4. ரத்னஜலிங்கம் – (மணிலிங்கம்), 5. உலோஹஜலிங்கம், 6. பாணலிங்கம். ரஸலிங்கம் (பாதரஸம்கட்டியலிங்கம் தாதுஜலிங்கம்) இவைகள் வீட்டுபூஜைக்கு ஏற்றவகைகளாகும்.

பார்த்திவலிங்கலக்ஷணம் (மிருண்மயலிங்கம்) (6ல்1)

பிருத்வீ என்ற சொல்லுக்கு மண் என்பது பொருளாகும். அந்த மண்ணில் செய்யப்பட்டதால் மண்ணாலானது என்ற பொருளில் பார்த்திவம் எனப்படுகிறது. இதனையே மிருன்மயலிங்கம் என்றும் கூறுவர். இது சுட்டதும் சுடாததுமாக இருவகைப்படுவதன் சான்று.

த்விவிதம் மிருண்மயம் லிங்கம் பக்வம் சா(அ)பக்வ மேவச |

மண்ணால் செய்யத்தக்க பார்த்திவலிங்கமானது தயாரிப்பு முறையில் அபக்வம் என்றும் பக்குவம் என்றும் இரண்டுவகைப்படும். பக்வம் சுடப்பட்டது. அபக்குவம் சுடப்படாத மண்ணால் செய்யப்பட்டதாகும். பார்த்திவலிங்கத்திற்கு கல்லிங்கத்திற்குக்கு கூறியது போலவே அளவு ஏற்புடையதாகும். இதில், எவ்வளவு உயரஅளவோ அவ்வளவே வட்டஅளவுமாகக் கூறப்படுகிறது. தாலமானமாக பள்ளமானது ஒரு அம்சம் ஆகும். அவ்வாறேபீடத்தின் கட்டும் பந்தனமும் ஒரு பங்கு ஆகும். இதனை முகப்பகுதியில் திரிசூத்திரம் என்பது இல்லாமல் செய்திடவேண்டும். இதன் பிண்டிகையை நாற்கோணம் மற்றும் எட்டுகோணங்களில் அமைப்பதைத் தவிர்க்கவேண்டும்.



[மண்ணாலானலிங்கம்]

வட்டமாகவே பீடத்தைச் செய்யவேண்டும். எனவே சதுரம் கூடாது. மண் லிங்கத்திற்கு உரிய சிறப்பான மண் சேகரிப்புமுறை ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. அதன்படி 8வகை புனித மண்வகை ஆகும்.

மலையின் முனைமண், நதிக்கரைமண், புண்ணியக்ஷேத்திரமண், முதலான மனங்கவரும் இடத்தின் மண்ணே, லிங்கத்திற்காக சேமிக்கத் தக்கது. இவ்வாறு புனிதமண்வகைகளால் செய்வது பெருமைமிக்கதும் எல்லாவிருப்பப்பயனைத் தருவதுமாகும். வெள்ளைமண், சிகப்புமண், மஞ்சள்மண், கருப்புமண் இவற்றை மென்மையாக சுத்தமாக பொடி செய்து, பசுவின் பஞ்சகவ்யத்துடன் சேர்த்துப் பிசைந்து, நெல், கோதுமை பொடி, நெல்உமியுடனும், உளுந்துப்பொடி, பிறவகைப் பொடிகளையும், மண்ணுடன் கலந்து பிசைந்து, மேலும் கரும் அறக்குத்தூள், குங்குலியத்தூள், மட்டிப்பால், திருவட்டப் பிசினி, வில்வப்பிசினி முதலான ஐந்துவகை பிசினிகளோடும் சேர்த்து (பஞ்சநிர்யாஸம்) இதனை ஒருமாஸம் அல்லது 1 பக்ஷம் பதினைந்துநாட்கள் ஊரவைத்து, பிறகு உரியஅளவுமுறையில் சிவலிங்கத்தைத் தயாரித்திடவேண்டும். அதற்கு மண்ணாலேயே பிண்டிகையை பீடத்தைச் செய்திடவேண்டும். இந்த லிங்கத்தின் பாணஅகலத்தின் மூன்றுமடங்கில் இதன் பீடஅகலம் இருக்கவேண்டும். இதனைப் பெறுமுயற்சியால் பூசைசெய்வதனால், சிறப்பான அறம் பொருள், இன்பம், வீடுபேறு, ஆகிய பயன்களை அளிப்பதாகும். இவ்வாறு காமிய பூசையில் லிங்கம் ஏற்புடையது.

தாருஜலிங்கம் (6ல்2)

தாரு என்ற சொல்லுக்கு மரம் என்பது பொருள். அதில் தயாரித்தது எனப்பொருளில் தாருஜம் எனப்படுகிறது. மரவகைகளில் செய்யப்படுகிற லிங்கங்கள் அனைத்தும் தாருஜலிங்கம் எனப்படும். விருக்ஷம் எனில் மரம். என்பதால் அதனாலானது என்பதாக இதுவே வார்க்ஷலிங்கம், த்ருமம் எனில் மரம். அதிலமைவதால் த்ருமஜம் எனப்படும்.

மரத்தால் செய்யத்தக்க தாருஜலிங்கத்திற்கு ஏற்றவைகளான விசேஷ மரவகைகள் முறையே, கருங்காலி, சந்தனமரம், சாலமரம், வன்னிமரம், இலுப்பை, ஸரளமரம், அஸனமரம், வில்வம், கதம்பமரம். கதிரம், வாகைமரம், இராஜதாளிமரம், வெள்ளெருக்கு, தேவதாருமரம், சிம்சுபா, பலா, மருதம், அசோகம், செஞ்சந்தனமரம், ஸ்நிக்தவர்ணம் (ரோஸ்வுட், தேக்கு, பாலுள்ளமரம்) இவை ஆத்மார்த்தலிங்கம், அல்லது நைமித்திக லிங்கம் அல்லது காம்யபூஜாலிங்கம், பாலலிங்கம் இவற்றைச்செய்ய ஏற்றவை. இவைகளில் பூஜிப்பது இஷ்டஸித்தியை அளித்திடுவதாகும்.

சைலஜலிங்கம் (6ல்3)


[சைலஜலிங்கம்]

சிலா என்ற சொல்லுக்கு மலையின் கருங்கல் என்பது பொருள். அதனால் தோற்று விக்கப்பட்ட கல்லிங்கத்திற்கு சைலஜ லிங்கம் என்று பெயர். சிலையைத் தேர்வு செய்துகைக் கொண்டு விதிமுறைப்படி தயாரித்திட வேண்டும். இவ்வகையில் 1 முழத்திற்கு மேல் உள்ளவை ஆலயத்திலும், அதற்குள் அளவுள்ளவை வீட்டிலும், ஆத்மார்த்தம் மற்றும் பரார்த்தம் என்கிற இருவகைப் பூசையிலும், அசைக்கவல்லது, அசைக்காதவாறும் இரு வகையில், சலலிங்கமாயும், அசலலிங்கமாயும் பலவகையில் உருவ முடையதாகும்.

(லிங்கத்திற்கான கல்வகைத் தேர்வுமுறை)

ஸகளம் நிஷ்களம் பேரம் பும்ஸாம் பும்சிலயா விது: |
யோஜ்யா ஸ்த்ரீசிலயா ஸம்யக் நாரீபேரம் ச பிண்டிகா ||
நபும்ஸகோ (உ)பலேநைவ ப்ரம்ம கூர்மசிலே ஸ்மிருதே |
ப்ராஸாத சில்ப குட்யாதௌ நபும்ஸகசிலாம் நயேத் ||
பும்லிங்கை: கல்பிதா பிண்டி ராஜராஷ்ட்ர பயங்கரீ |
யுவத்யா கல்பிதம் லிங்கம் ஸர்வ ப்ராணி பயங்கரம் ||
நபும்ஸகேந லிங்கம் வா க்ருதம் சேத் பிண்டிகா (அ)தவா |
துர்பிக்ஷம் து பவேத் பூமௌ யஜமானோ விநச்யதி ||
ரேகா பிந்து களங்காநி விமலம் பரிவர்ஜயேத் || (காரணே–9)

ஆண்கல்லினால் சிவலிங்கத்தையும், பெண்கல்வினால் அதன் பிண்டிகையையும் (ஆவுடையார்), அலிக்கல்லினால் பிரம்மசிலை மற்றும் கூர்மசிலைகளையும் இவ்வாறாக சிவலிங்கத்திற்கு முறைப்படி மூவகைக் கல்லையுமே ஏற்கவேண்டும். கோயில்கட்டவும், சிற்பம்செய்யவும், சுவர் அமைக்கவும் அலிக்கல்லையே பயன்படுத்தவேண்டும். லிங்க பிண்டி கையை, (கோமுகையை ஆண்கல்லால் செய்வதும், பெண் சிலையால் சிவலிங்க பாணத்தைச் செய்வதும், அரசு, அரசன், பிராணிகளுக்கு அச்சமளிக்கும். அலிக்கல்லால் லிங்கமோ கோமுகையோ செய்தால், அங்கு பூமியில் பஞ்சம் ஏற்படும், செய்பவர் அழிந்திடுவார். எனவே, கூடாதகல், கோடு, புள்ளி, களங்கம், குறைகள் உள்ளதை லிங்க அமைப்பில் விலக்கவேண்டும்.

லோஹஜலிங்கம் (6ல்4)

[சுவர்ணலிங்கம்]

லோஹம் என்பதற்கு உலோகம் எனப்பொருள். உலோக வகைகளில் ஹிரண்யம் முதலானவற்றில் சலமாக தயாரிக்கப்படுவது லோஹஜலிங்கம் எனப்படுவதாகும்.

இது, தங்கம், வெள்ளி, தாமிரம், வெண்கலம், தகரம், இரும்பு, ஈயம், பித்தளை ஆகியவற்றில் எட்டுவகையில் உள்ளதாகும். இவற்றின் பயன் உலோகத் திற்கு ஏற்பவேறுபடும். அவற்றைஅறிந்து ஏற்க வேண்டும்.

உலோஹலிங்கம்]

உலோகலிங்கவகைப் பயன்கள்

தங்கத்தால் செய்தலிங்கபூஜை போகம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டுவகைப் பயனையும் தரும். தாமிரலிங்கபூஜை புத்திரப்பேற்றைத் தரும். வெள்ளிலிங்கம் செல்வம் தந்திடும். வெங்கலலிங்கம் சுகத்தைத்தரும். பித்தளைலிங்கம் ரோகத்தை அழிக்கும். இரும்புலிங்கம் புத்திரனை அழிக்கும். மூன்றுஉலோகக்கலப்புலிங்கம் மரணமளிக்கும் அவ்வாறே த்ரபுலிங்கம் மற்றும் ஸீஸகலிங்கம் (ஈயலிங்கம்) முதலானவற்றைச் செய்திடவேண்டும். உலோகலிங்கவகைக்கு இரத்தினலிங்கத்திற்குக் கூறியவழிமுறையே பின்பற்றப்படவேண்டும். இவற்றின் பயன்கூறும் ஆகமசான்று இதுவே.

ஸௌவர்ணேந க்ருதம் லிங்கம் புக்தி முக்தி பலப்ரதம் |
தாம்ரஜம் புத்ரதம் ப்ரோக்தம் ராஜதம் ஸ்ரீப்ரதம் பவேத் ||
சுகதம் காம்ஸ்ய மித் யுக்தம் பைத்தளம் ரோகநாசநம் |
ஆயஸம் புத்ரநாசம் து திரிலோஹம் மாரகம் பவேத் || (காரணே)

ரத்னஜலிங்கம் (6ல்5)

[இரத்தினலிங்கம்]

ரத்தினலிங்கவகையினை, லிங்க பாணபகுதியாகவும், பீடத்துடன் சேர்ந்தே உள்ளதாயும் இருவகையில் கொண்டு அமைக்கப்பட்டது இரத்தின ஜலிங்கம் எனப்படுவ தாகும். இவ்வகையில், ஸ்படிகம், மரகதம் (பச்சை) நீலம், பவழம், வைடூர்யம், முத்து, புஷ்பராகம் என்பவற்றில் ஏழுவகையாகக் கூறப் பட்டுள்ளது. மாணிக்கம், வைரம், கோமேதகம், ராஜாவர்த்தம், முதலான வற்றை தங்கபீடத்தில் பாணமாகப் பொருத்தியும் வழிபாடுசெய்யலாம். பாணவகையிலேயே லிங்கபீடம் உள்ளது உத்தமம், அல்லது சுவர்ணபீடத்தைச்செய்து, அதில் ரத்தினத்தாலான பாணத்தைப் பொருத்தி தயாரித்தும் ரத்தின லிங்கத்தை ஏற்கலாம்.

ரத்தினலிங்கார்ச்சனவிதி (ரத்னலிங்கபயன்)

இரத்தினத்தாலானலிங்கம் இருவகைப்படும். அவை 1. சலலிங்கம் மற்றது அசலலிங்கம். இவைகளில் அசலம் என்றது கோயிலில் அசையாதநிலையில் ஸ்தாபித்துள்ள ஸ்திரலிங்கம் எனப்படுவதாகும். மற்றதான சலலிங்கமானது, கோயில்களில் அசைத்துப்பயன்படுத்துகின்ற வகையில் அல்லது பெட்டியில்வைத்து, காக்கப்படுகின்ற சிறிய ரத்ன லிங்கம் ஆகும். இதுவே வீடுகளிலும், மண்டபத்திலும், மடங்களிலும் ஆத்மார்த்தபூஜையிலும் உள்ள ரத்தினவகையாலான லிங்கமாகும்.

த்விவிதம் தத் ஸமாக்யாதம் சலம் சைவா(அ)சலம் ததா |
ஸ்திரம் ப்ராஸாத லிங்கம் து சலம் ஸர்வத்ர பூஜ்யதே ||

நவரத்ன லிங்கவகைப் பயன்

இவற்றில் மரகதலிங்கம் வளத்தையும், பத்மராகலிங்கம் செல்வத்தையும், வைடூர்யலிங்கம் ஆயுள் விருத்தியையும், ஸ்படிகலிங்கம் புத்திரப்பேற்றையும், புஷ்யராக லிங்கம் சத்ருஸ்தம்பனத்தையும் ப்ரவாளம் எனும் பவழலிங்கம் துஷ்டர்களை நம்மிடம் வசியம் ஆவதையும், வித்ருமலிங்கம் ஜனங்களின் ஆகர்ஷணத்தையும். மாணிக்கலிங்கம் ஸர்வஸித்தியையும், இந்திரநீலலிங்கம் மோக்ஷத்தையும் தரும். இவ்வாறு இரத்தின லிங்கவகைகளின், பூஜையின் சிறப்புப்பயனை காரணாகமம் கூறியுள்ளதால் அறியமுடிகிறது. இவற்றை அறிவிக்கும் ஆகமசான்று இதுவே.


[நவலிங்கஸ்தாபனம்]

மரகதம் புஷ்டிதம் ஞேயம் பத்மராகம் தனார்த்தகம் |
ஆயுஷ்ய விருத்திம் வைடூர்யம் ஸ்படிகம் புத்ரவர்தனம் || 277
ஸ்தம்பனம் புஷ்யராக ஸ்யாத் துஷ்டவச்யம் ப்ரவாளகம் |
ஆகர்ஷணம் வித்ருமாக்யம் மாணிக்யம் ஸர்வஸித்திதம் || 278
இந்திரநீலம் து மோக்ஷார்த்தம் ரத்னஜாநாம் பலம் பவேத் |
அங்குள்யாதி விதஸ்த்யந்தம் குர்யால் லிங்கம் து ரத்னஜம் | 279

(பூர்வகாரணே 9ல்)

இரத்தினவகை லிங்கத்தினை (கட்டைவிரல் அல்லது விரல்பருமன் அளவில்) ஒரு அங்குலம் முதலாக கைப்பெருவிரல் நடுவிரலிடையிலான நீண்ட அளவாகிய விதஸ்தி எனும் ஒருசாண் அளவு, 12அங்குலம் வரையில் செய்யப்படவேண்டும். இவற்றிற்கு நீளத்திற்கு சமமாக சுற்றளவு இருக்க வேண்டும். தலைமழுப்பிடும் விதிமுறைப்படி சிரோவர்த்தனத்துடனேயே இருக்க வேண்டும். இரத்தினலிங்கத்திற்கு பிண்டிகையானது, அந்த ரத்னத்தின் அளவினாலேயே செய்யப்படவேண்டும். ரத்னலிங்கத்தின் பிண்டிகையானது அந்தந்த ஜாதிரத்தினத்தினாலேயே செய்யப்படவேண்டியதாகும், பீடத்தை இதனைமட்டும் வேறு இரத்தின வகையில் செய்து பொருத்திடக்கூடாது. அதேவகை இரத்தினம் இல்லாத பொழுதில் அந்தரத்தினலிங்கத்திற்கான பீடபிண்டிகையை தங்கத்தினாலேயே செய்து, அதன்நடுவே ரத்னலிங்கத்தை ஸ்தாபனம் செய்ய வேண்டும். இரத்தினவகை லிங்கத்திற்கு வெள்ளி மற்றும் தாமிரத்தாலான பிண்டிகையானது கடைசிநிலையாய் இயலாதபோது அதமமாகக் கூறப்பட்டது. அசையக்கூடிய சலலிங்கவகைகளுக்கு பிண்டிகையை சமசதுரவடிவிலோ, சமவட்டமானவடிவிலோ, முகசூத்திர மில்லாமல் அமைத்திடவேண்டும் என்று ஸ்ரீமத் காரணாகமம் விளக்கிக் கூறுகிறது.

ரத்தினலிங்கலக்ஷணம் (ரத்னலிங்கத்தின் செய்முறை)

அங்குள்யாதி விதஸ்த்யந்தம் குர்யால் லிங்கம் து ரத்னஜம் |
ஆயாம ஸத்ருசம் நாஹம் சிரோவர்த்தன ஸம்யுதம் ||
ஸ்வ ப்ரமாணேந கர்த்தவ்யா ரத்னலிங்கஸ்ய பிண்டிகா |
பிண்டிகா ஸ்வஸ்வ யோநிஸ் ஸ்யாத் ததபாவே ஹிரண்மயம் ||
ரஜதம் தாம்ரகம் சைவ அதமம் சேதி கீர்த்திதம் |
சதுரச்ரா(அ)த வ்ருத்தா வா சலலிங்கஸ்ய பிண்டிகா ||
ஆயாம த்விகுணார்தம் வா த்விகுணம் த்ரிகுணம் து வா |
விஸ்தாரம் தத்ஸமம் ஞேயம் சேஷம் பூர்வோக்தவத் குரு ||
லிங்காயாமத் த்ரிபாகைகம் பீட(ம்) மத்யே நிவேசயேத் |
ஸர்வத்ர வ்ருத்தகம் லிங்கம் த்ரிபாகம் சூத்ரவர்ஜிதம் ||
ரத்னலிங்கம் ஸமாக்யாதம் லோஹஜம் லிங்கம் உச்யதே |

(பூர்வகாரணபடலம்9)

தாதுஜலிங்கம் (6ல்6)

அரிதாரம் முதலான தாதுவகையில் தயாரிக்கப்பட்டது தாதுஜலிங்கம் எனப்படுவ தாகும். தாதுக்கள் ஏழுவகையிலும் ஒன்பது வகையிலும் ஜீவசக்தியுள்ளவையாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வகையில் பாஷாண லிங்கம், பாதரஸலிங்கம் இவற்றையும் ஜாதி லிங்கம் எனப்படும் ஹிங்குளம் என்பதிலும் காணப்படும். மேலும் மலைபூமியிலிருந்து எடுக்கப்படும் சிகப்புநிறக்கல் சோணஜம் முதலானவையும் பலநிறத்தில் விசேஷமாக தயாரிக்கப்படுவதுமாகும்.



அரிதாரக்கட்டி

தாதுஜலிங்கம் வகை

பூமியில் கிடைக்கப்பெருகிற விசேஷ ஆற்றல்மிக்க குறிப்பிட்ட கனிமவளப் பொருட்களே தாது எனப்படுவன. இவை அரிதாகக் கிடைப்பவை. சில ஆயுர்வேத சித்தமருந்துவ குணமுள்ள பொருட் களும். அரிதாரக்கட்டி, அஞ்ஜனக்கல், மனோசிலை, ஸௌராஷ்ட்ரக்கல், (குஜராத்ராஜாவர்த்திகல்) கைரிகம் என்கிறதான மலையின் சுக்காங்கல் கட்டி, கந்தகம், பாதரஸம், பாஷாணம், கௌரீபாஷாணம் ஜாதிலிங்கம் முதலான தாதுவகைகளில் முறையே வலுவூட்டி, திடப்படுத்தி, தொழில்நுட்பத் துடன் தயாரிக்கப்படும் லிங்கம் உயிர்ச் சக்தியுள்ள தாதுலிங்கம் ஆகும். இவற்றில், ஹிங்குளம் என்பதாகிய சிகப்புநிறமான ஜாதிலிங்கக் கட்டி யிலும், மஞ்சள்நிறமான அரிதாரக் கட்டியிலும், பாஷாணங்களிலும், பாதரஸத்தைக்கட்டி தயாரிக்கப்பட்டதும் தாதுலிங்கம் எனப்படும். இதனை தனது இஷ்டலிங்கமாகக் கொண்டு வீட்டில் ஆத்மார்த்த பூஜையை இதிலேயே செய்திடுவர்.



சோணபத்ரம் என்கிற கிரிசைலலிங்கம்



காவிக்கல்கட்டி

ஆலயத்தின் லிங்கவகைகள் ஏழு
(பாரார்த்தபூஜா லிங்கபேதம்)

ஆலயத்தில் லிங்கவகைகள் (கோயில்லிங்கவகை)

ஸ்வயம்பூர் தைவிகம் சைவ திவ்யம் மானுஷ மார்ஷகம் |
ராக்ஷஸம் பாண லிங்கம் ச ஸப்ததா லிங்க முச்யதே ||

(காரணாகமம் 30ல்13)

ஆலயலிங்கத்தை 1. சுவாயம்புவம். 2. தைவிகம். 3. திவ்யம். 4. மானுஷம், 5. ஆர்ஷம் 6. ராக்ஷஸம், 7. பாணம் என்று ஏழுவகைகளாக, ஸ்திரலிங்க வகையில் லிங்கபேதங்களைக் காரணாகமம் தொகுத்துக் கூறுகிறது. இதனை விளக்கும் ஆகமச்சான்று இதுவே.

ஸ்வயம்பூ ஸ்வய முத்பன்னம் தேவ்யர்ச்சனம் து தைவிகம்|
திவ்யம் தேவார்ச்சனம் சைவ ரிஷிபூஜிதம் ஆர்ஷகம் |
மானுஷைஸ் ஸ்தாபிதம் லிங்கம் மானுஷம் பரிகீர்த்திதம் |
அசுரைர் ராக்ஷஸைர் பூஜ்யம் ஆசுரம் ராக்ஷஸம் பவேத் |
பாணநாம ஜலம் ப்ரோக்தம் தஜ்ஜாதம் பாணலிங்ககம் |
பாணேந பூஜிதம் லிங்கம் பாணலிங்க மிஹோச்யதே || (காரணே)

இவற்றின் விளக்கமாவது, முறையே 1) சுவாயம்புவம் என்பது, தாமாகத்தோன்றிய லிங்கம். 2) தைவிகம் என்பது, உமாதேவியாரால் பூஜிக்கப்பெற்றது. 3) திவ்யம் என்பது, தேவர்களால் பூமியில் வைத்து வானவர்களால் வணங்கப்பெற்றது. 4) மானுஷம் என்பது, மன்னர்களால் நிறுவி வழிபடப்பெற்றது. 5)ஆர்ஷம் என்பது, முனிவர்களால் வழிபடப்பெற்றது 6) ராக்ஷஸம் என்பது, ராக்ஷஸர்களால் ஸ்தாபித்து வைத்து ஏத்தப்பட்டது. 7) பாணலிங்கம் என்பது, நர்மதை முதலான ஆற்றுஜலங்களிலிருந்தும் பாணதீர்த்தத் திலிருந்தும் எடுக்கப்பட்டதான சிலாமய லிங்கங்கள். மேலும் ஆயிரம் கைகளைக் கொண்ட பாணாசுரனால் தினமும் பூஜிக்கப்பட்டு பின்பு நீரில் விடப்பட்டவை என்றும், பாணம் என்ற பெயருள்ள நீரில் தோன்றியவை என்றும் காரணாகமத்தில் அங்கேயே விளக்கம் கூறப்படுகிறது. லிங்கஇலக்கணத்தை, கல்லைதேர்வு செய்வதில் வெளி இலக்கணங்களையும். வடிவமைப்பதில் உள் இலக்கணங் களையும் கொள்ள வேண்டும்.



திருமூலஸ்தான மூலலிங்கம்

ஆலயலிங்க பூஜாதிகாரீ (பூஜைசெய்வோர்)

ஆகமோக்த ப்ரகாரேண ப்ரதிஷ்டா லிங்கபூஜனம் |
உத்ஸவாதி ப்ராயச்சித்தம் ஆதிசைவேந காரயேத் |
ஆதிசைவஸ்ய பூஜா ச ஸர்வ ஸித்திகரீ ஸ்மிருதா |
(காரணே)

இந்த காரணாகமக் கூற்றின்படி, ஆலயலிங்கத்திற்கான, பிரதிஷ்டை, பூஜை, உத்ஸவம், மற்றும் பிராயச் சித்தம் அனைத்தும், ஆதிசைவகுலத்தில் தோன்றிய சிவாசார்யரால் மட்டுமே செய்யப்பட வேண்டும். மற்றவர்கள் ஆலயபூஜை செய்வது கூடாது நாட்டுக்குத்தீங்கு.

ஆலயலிங்க பரார்த்த பூஜை

பூஜை என்பதன் ஒரு பொருட்சொற்களாக சம்ஸ்கிருதநிகண்டுவான அமரகோசத்தில் பின்வருவன கூறப்படுகின்றன அச்சான்று.

பூஜா நமஸ்யா (அ)பசிதிர்: ஸ்பர்யா சார்ஹணா: ஸமா: |
வரிவஸ்யா து சுச்ரூஷா பரிசர்யாப் யுபாஸனா || (அமரகோசம்)

இதன்படி பூஜை, நமஸ்யை, அபசிதி:, ஸபர்யா, அர்ஹனா, வரிவஸ்யா, சுச்ரூஷா, பரிசர்யா, உபாஸனா, என்பவைகள் ஒத்தபொருளுடைய பூசையைக்குறிக்கும் சொற்கள் என்பதை அறியலாம். இதன்பொருள்,

பூர்யந்தே ஸர்வ கர்மாணி ஜாயதே ஞான மாத்மனி |
பூரணாத் ஜாயதே யஸ்மாத் பூஜா சப்த இஹ உச்யதே | (காரணாகமம்)

என்னும் ஆகமப்பிரமாண வசனத்தின்படி, எல்லாகர்மாக்களையும், நிறைவுறும்படிச் செய்வதாலும், உபாஸகனுக்கு ஆன்மஞானத்தைக் கொடுப்பதாலும், இச்செயல் பூஜை எனப் பெயர்பெற்றது. அன்றியும், புண்யமானதும், நன்மையளிப்பதும், பாவத்தையழிப்பதும், மாபாதகங்களை நீக்கவல்லதும், எல்லாவகையான வேள்விகளின் பயன்களை அளிப்பதும், நித்யார்ச்சனம் என்று பூசையின் பயன்களை பூர்வ காரணாகமம் கூறுகிறது. அச்சான்று இதுவே ஆகும்.

வக்ஷ்யே நித்யார்ச்சனம் புண்யம் சுபதம் பாபநாசனம் |
மஹாபாதக தோஷக்னம் ஸர்வ யக்ஞ பல ப்ரதம் || பூர்வ காரணாகமம்-30ல்)

இவ்வாறாக ஆலயவடிவமைப்பும், லிங்கவடிவமைப்பும், அந்த ஆலய லிங்கபூஜைகளின் அரியபயனும் ஆகமப்படி அறியத்தக்கவை. இத்தகைய சிறப்புமிக்க ஆலயத்தில் சென்று வழிபடுவதையும், சிவலிங்க வழிபட்டையும் சைவசமயநெறியில் தினமும் தவறாமல் செய்து இகபரசுகம் யாவற்றையும், யாவரும்பெற்று உய்யவேண்டும் என்பதே அறநூலின் முடிவாகும். இனி தெய்வங்களுக்கான கோயிலமைப்பைக் காண்போம்.

ஏழுவகைக் கோயில்கள் (ஹர்ம்யபேதம்)
(மூலப்பொருளால் கோயில்வகைகள்)

ஹேமைர் வா ரஜதைஸ் தாம்ரைஸ் சிலாரூபைஸ் ச பித்தளை: |
இஷ்டகா தாருபிர் வாத ஹர்ம்யம் க்ருத்வா விசக்ஷண: | (காரணாகமம்)

இவ்வாறு காரணாகமம் கூறுவதால், கோயிலானது, தங்கம், வெள்ளி, தாமிரம் (செம்பு), பித்தளை, கருங்கல், இஷ்டகா (சுட்டசெங்கல்) தாரு, (மரம்) இவைகளால், ஏழுவகையில் துறைஅறிவாளிகளால் விதிமுறைப்படி கட்டி அமைக்கத்தக்கது.

விமானஸ்தாபனத்தின் அவசியம்

விமான ஸ்தாபனே ஹீநே தேந ஹர்ம்யேந கில்பிஷம் |
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந ப்ராஸாத ஸ்தாபனம் குரு || (காரணாகமம்)

இதன்படி கட்டப்பட்டதான கோயில்கட்டிடத்திற்கு, முறையான விமானஸ்தாபனம் செய்யப்படாவிட்டால் அக்கோயிலால் அங்கு தீமைகளே ஏற்படும். அதனால் அனைத்துவிதமான முயற்சிகளாலும், கோயிலுக்கு விமானஸ்தாபனத்தை அதாவது மஹாகும்பாபிஷேகத்தைச் தவறாமல் செய்யவேண்டும் என்கிறது சைவாகமம்..

தேவாலயாநாம் த்ருச்யந்தே விமானம் கோபுராணி ச |
யாவத் தேசேஷு பரிதஸ் தாவத் கைலாச பூதலம் ||

(பூர்வகாரணாகமம் 30ல்1))

ஒரு கோயிலினுடைய விமானம் அல்லது கோபுரங்கள் எவ்வளவுதொலைவிலிருந்து காணப்படுகின்றனவோ, சுற்றிலும் அவ்வளவு தொலைவுப்பகுதியும், கைலாசத்திற்கு நிகரான புனிதபூமியே (சிவனதுஇருப்பிடம்) என்று சிவாகமநூல்படி அறியப்பட வேண்டும்.



திருமயிலை கோயில்கோபுரம்

எழுவகைலிங்கமும் 28வகை ஆகமபூஜைமுறையும் (சுப்ரபேதாகமத்தின்படி)

I. சுயம்புலிங்கம் இது 1. காரணம், 2. வாதுளம், 3. சூக்ஷ்மம், 4. சுப்ரபேதம் ஆகிய நால்வகை ஸித்தாந்த ஆகமங்களால் முறையே பூஜிக்கத்தக்கது.

II. தைவிகலிங்கம் இது 1. காமிகம், 2. விஜயம், 3. சுவாயம்புவாகமம், 4. அநலாகமம் ஆகிய நான்கு ஆகம நூல்களின் படி ஜிக்கத்தக்கதுஇதம்

III. திவ்யலிங்கம் இது 1.சிந்த்யம், 2.ஸஹஸ்ரம், 3.தீப்தம் 4.அஜிதம் ஆகிய நான்கு ஆகமநூல்களின்படி பூஜை செய்யப்படவேண்டும்.

IV. ஆர்ஷகலிங்கம் இந்த ரிஷிலிங்கத்தை 1.யோகஜம் 2. மகுடம், 3. நிச்வாஸம், 4. ரௌரவம் என்ற நான்கு ஆகமங்களால் பூஜிக்கவேண்டும்.

V. மானுஷலிங்கம் இதனை 1. வீராகமம், 2. விமலாகமம், 3. சந்திரஞானம், 4.பிம்பாகமம் ஆகிய நால்வகை ஆகமங்களால் பூஜிக்கவேண்டும்.

VI. ராக்ஷஸிலிங்கம் இதனை 1. ப்ரோத்கீதம், 2. லலிதம், 3. ஸித்தம், 4. ஸந்தானம் ஆகிய நால்வகை ஆகமங்களால் பூஜிக்கவேண்டும்.

VII. பாணலிங்கம் இதனை, காணபலிங்கத்தை 1. பாரமேச்வரம், 2. அம்சுமான், 3. கிரணம், 4. சர்வோக்தம் ஆகிய நான்கு ஆகமங்களால் பூஜைசெய்யப்பட வேண்டும் என்று சுப்ரபேதாகமம் கூறுகிறது. சிவகணங்களாலும் தேவகணங்கள் முதலான பதினெட்டு வகைகளான கணங்களால் பூமியில் பூஜைசெய்துவிட்டுச் சென்றதும், கணபதியால் பூஜைசெய்யப்பட்டதுமான காணப லிங்கமும் இவற்றால் பூஜைசெய்யப்பட வேண்டியவை என்று ஆகமம் கூறுகிறது.

மானுஷலிங்கம் ஒருயோஜனைத்தொலைவு தூரவியாப்தியும், புராணஸித்த திவ்யஸித்தலிங்கம் பத்துயோஜனையும், ரிஷிகள்பூஜித்த ஆர்ஷலிங்கம் நூறுயோஜனை தூரவியாப்தியும், தேவீபூஜித்த தைவிகலிங்கம் ஆயிரம்யோஜனைதொலைவுக்கும் அருள்ஒளியை

பரப்பிவிளங்குவதாய் பலமடங்கில் உயர்ந்தபயனை அளிப்பவையாய் சுப்ரபேதாகமம் பெருமையைக் கூறியுள்ளது.

ஸ்ரீமத்கிரணாகமத்தில், சுயமுத்பூதலிங்கம், ஆர்ஷலிங்கம், தேவஸ் தாபிதமான திவ்யலிங்கம் இவைக்கு உருவமும், அளவும் பார்த்திடத் தேவையில்லை என்றும், இவை கிடையாது என்றும் இவ் வகையினை அவை இருக்கும் உருவத்திலேயே ஏற்கவேண்டும் என்றும், அதற்குஏற்ப லிங்கப்பெயரும், வகையும், உருவமும், தனித்தனியாகும் என்றும் கூறப்படுகிறது.

ஸ்வயமுத் பூதலிங்கஸ்ய ஸ்தாபிதஸ்ய மஹர்ஷிபி: |
தேவைர் வா ஸ்தாபிதஸ்யா (அ)பி ரூப மானம் ந விதீயதே |
தல் லிங்காகிருதி ரூபேண நாம பேத: ப்ருதக் பவேத் ||

இந்திரன் முதலான பத்துதிசைப்பாலகர்களின் லிங்கங்கள், குடை முதலான பலவடிவங்களில், அவர்களின் ஆயுதக்குறியை உடையதாக பலவகையாகும். தலையில் தாமரைகுறியுள்ளது பிரம்மலிங்கம் என்றும் சக்கரசங்கு குறியுள்ளது விஷ்ணுலிங்கம் என்று இவை சிறப்புமிக்கப் பயன்களை அளிப்பவை என்றும் கிரணாகமம் பத்துவகையில் லிங்கத்தை திக்பாலகர்களுக்கு உரியவையாகக் கூறுகிறது.

சுயம்புலிங்க லக்ஷணம் (தானேதோன்றியது) (7ல்1)

பூமியிலிருந்து தானே வெளித்தோன்றியது. மனிதனால் செய்யப் படாதது தனி இலக்கணமில்லாதது, பலவகை உருவங்களில் இருப்பவை சுயம்புலிங்கம் எனப்படுவதே ஆகும்.

நாநா சின்ஹ ஸமாயுக்தம் நாநா வர்ண ஸமன்விதம் |
கர்கசம் ஸுஷிராஸ் சைவா நியதம் த்ருச்யதே புவி ||

சிரஸோ வர்த்தனம் தத்வத் சூத்ரவர்த்தன மேவ ச |
நாஹோத்ஸேதாதி மானம் ச ந கதாசித் ப்ரத்ருச்யதே ||

பீட ப்ராஸாத க்லுப்திஸ் து லிங்கமானாத் விதீயதே |
ஸ்வயம்பூதம் இதி ப்ரோக்தம் ஸர்வலோக சுகாவஹம் ||

பலவகையான அடையாளங்களை உடையதும், பலவிதமான நிறத்தை உடையதும், புள்ளிகள், பள்ளங்கள், துவாரங்கள் கோடுகள், இவைகளை உடையதும் பூமியில் இயற்கையாகவே காணப்படுகிறதும் ஆகும். இதற்கு சிரோவர்த்தனமோ, பிரம்மசூத்திரமோ, குறிப்பிட்ட உயர அகலஅளவுகளோ, சுற்றளவோ இவைக்கு ஒருபொழுதும் கிடையாது. இவை எப்படியும் இருக்கும். லிங்கத்தின் அளவைக் கொண்டே இதற்கு உரியபீடத்தையும், கோயிலையும் செய்யவேண்டும். அனைவருக்கும் நன்மையைத் தருகின்ற சுயம்புவின் லிங்கலக்ஷணம்

இவ்வாறு கூறப்பட்டது. இது சிஷ்டலிங்க வகையுமாகும். எல்லா இலக்கணங்களுடன் கூடிய லிங்கம் எல்லாப்பயனையும் அளிக்கவல்ல தாகும். இதற்கான சான்று,

ஸ்வாயம்புவாதி லிங்காநாம் லக்ஷணம் நேஷயதே த்விஜா: |
கிந்து தேஷாம் விபாகம் து ப்ரஸித்தோக்த்யா ஸமாசரேத்||
ஸர்வலக்ஷண ஸம்யுக்தம் லிங்கம் ஸர்வார்த்த ஸாதகம் ||

(பூர்வகாமிகாகமம் 62ல்–சு75)

காமிகாகமானது, சுயம்புமுதலான 6வகை சிஷ்டலிங்கங்களுக்கும் இலக்கணம் பார்க்கத்தேவையில்லை என்றும், ஆனால் இவைக்கு புகழ்மிக்க இவற்றின் சரித்திர மஹிமையால் இலக்கணத்தை அறிக என்கிறது.


திருவான்மியூர் சுயம்புலிங்கம்

தைவிகலிங்க லக்ஷணம் (தேவீவழிபட்டது) (7ல்2)

தேவியால் பூசைசெய்யப்பட்ட லிங்கம் தைவிகலிங்கம். இவ்வகையில் மூலலிங்கம், காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருமாகாளம், திருமங்கலக்குடி முதலிய பலதலங்களில் உள்ளது. இதன் இலக்கணம் கூறும் சான்று,

தீர்க்காகாரம் பவேத் லிங்கம் நிம்நோந்த ஸமன்விதம் |
ரேகா கோடர ஸம்யுக்தம் முகே தாரா யவோன்னதம் ||
பர்வதாக்ர க்ருதம் ரந்த்ரம் பிரம்ம க்ரந்தி சிகா யுதம் |
(பர்வதாக்ராத்ருதிர் லிங்கம் பஹ்வக்ரம் சிகயா யுதம்)
கராப்யாம் ஸம்புடாகாரம் பிரம்மஸூத்ர விவர்ஜிதம் ||
இத்யேதைர் லக்ஷணைர் யுக்தம் தைவிகம் லிங்க முச்யதே | (மகுடாகமம்)

இதன்படி நீண்டதும், உயர்ந்ததும் பருத்து உள்ளதும், கோடு, பட்டை, குழி, இவற்றோடு கூடியதும், மலைஉச்சியைப் போன்றதும், (துளை) துவாரமுள்ளதும், முடிச்சுபோன்ற பல பிரிவுள்ளதும், இருகைகளையும் சம்புடமாக கூப்பி (முஷ்டி) வைத்தது போன்ற வடிவமுள்ள தும், பிரம்மசூத்திரம் இல்லாததும், தைவிக லிங்கத்தின் லக்ஷணங்கள் ஆகும். தேவீபூஜித்து சிவனோடுகூடியதை காரணாகமம் கூறி யுள்ளது.

காஞ்சீபுரம் தைவிகலிங்கம்

பத்ரகாளீ ஸ்வயம் பச்சாத் பக்தியுக்தா மஹேச்வரீ |
ஸம்பூஜ்ய விதிவத் லிங்கம் ஸாயுஜ்யம் பதமாப்நுயாத் | (பூர்வகாரணே–12)

திவ்யலிங்க லக்ஷணம் (தேவர்கள் பூசித்தது) (7ல்3)

திவ்யலிங்கம்

பிரம்மா, விஷ்ணு, இந்திரன், சூரியன் முதலான தேவர்கள் பலரும் பூமியில் வந்து சிவனைப் பூசை செய்து, விட்டுச்சென்றுள்ள, அரியலிங்கங்கள். திவ்யலிங்கம் எனப்படுவதாகும். இவ்வகை லிங்கமானது, சீர்காழி, வைதீச்வரன் கோயில், திருவெண்காடு, தென்திருநின்றவூர், திருவிடை மருதூர் முதலான தலங்கள் பலவற்றில் பேரலாய மூலலிங்கமாக விளங்குகிறது.

யக்ஷஸ் ச கின்னரைஸ் சைவ காலேந வருணேந ச |
க்ருசானுநா ச மருதா பாஸ்கரேண ஹிமாம்சுநா |
வ்யாக்ரபாத ஹநூமத்ப்யாம் பாதஞ்ஜல புரஸ்ஸரை: |
வசுபிஸ் ச மருத்பிஸ் ச தானவைச் ச யுகே யுகே |
திவ்யைஸ் தபோதனைஸ் சைவ பூஜிதம் லிங்க மத்புதம் |
கரண்டமூல ஸம்ஸ்தாவம் சிவலோகேச்வரம் சிவம் ||

(பூர்வகாரணாகமபடலம் 12ல் பக்கம் 126ல்)

யக்ஷர்கள், கின்னரர்கள், யமன், வருணன், அக்னி, வாயுதேவன், சூரியன், சந்திரன், வியாக்ரபாதர், ஹநூமான், பதஞ்ஜலி, வசுக்கள், மருத்துக்கள், அசுரர்கள், தபோதன மஹரிஷிகள் முதலானவர்களால், பூஜிக்கப் பட்ட அத்புதலிங்கத்தை தலைவணங்கி துதி செய்து சிவலோகநாதனை சிவபெருமானை இம்மண்மேல் வந்து அர்ச்சித்து பயன் பெற்றனர் என்கிறது காரணாகமம். மேலும் திவ்யலிங்கத்தலங்களையும் இடங்களையும் கூறுகிறது.

திவ்யலிங்க ஸ்தலங்கள் (தேவர்கள் வழிபட்டவை)

சந்த்ர புஷ்கரிணீ தீரே சந்த்ரமாஸ் ஸஹ தாரகை: |
ஸ்வ கரைஸ் ஸ்தாபிதம் லிங்கம் பூஜயாமாஸ பக்தித: |
சுராணாம் பூஜிதாநாம் ச கீத நிருத்த மநோஹரை: |
ஸந்நிதான ப்ரதம் லிங்கம் காவேரீ மத்யமே சுபே |
ஸ்ரீமத் தீர்க்கபுராதீசம் ஸஹஸ்ர கிரணஸ் ஸதா |
ஸம்பூஜ்ய லோகவந்த்யத்வம் பத மவ்யய மாப்தவான் |
பத்ரகாளீ ஸ்வயம் பச்சாத் பக்தியுக்தா மஹேச்வரீ |
ஸம்பூஜ்ய விதிவத் லிங்கம் ஸாயுஜ்யம் பதமாப்நுயாத் |
இந்த்ர புஷ்கரிணீ தீரே ஸ்நாத்வா நியத மாநஸா: |
க்ஷாலயந்தி ஸமஸ்தாநி பாபாநி விவிதாநி ச || (பூர்வகாரணேபடலம்–12)

ஆர்ஷகலிங்க லக்ஷணம் (ரிஷிகள் பூசித்தவை) (7ல்4)

மஹரிஷிகள் இம்மண்ணின் மீது லிங்கத்தை வைத்து வழிபட்டு விட்டுச் சென்றுள்ள லிங்கங்கள், ரிஷிகளின் சம்பந்தமுள்ளவை என்பதால் ஆர்ஷகம் என்று பெயர் பெற்றுள்ள சிஷ்டலிங்கங்கள்.

மூலஸ்தூலம் பவேத் லிங்கம் அக்ர ஸ்தூலம் ததைவ ச |
மத்யஸ்தூலம் ச லிங்கம் து நாளிகேர பலாக்ருதி: |
கதலீபல ஸங்காசம் பில்வவிருக்ஷ பலாக்ருதி: |
லிங்க மார்ஷக மாக்யாதம் ப்ரம்மசூத்ர விவர்ஜிதம் | (மகுடாகமம்)

அடிபருத்துள்ளதும் அல்லது மேலே பருத்துள்ளதும், அல்லது நடுபாகம் பருத்துள்ளதும், தேங்காய், வாழைப்பழம், வில்வப்பழம் போன்றவைகளின் வடிவங்களை உடைய லிங்கங்கள் ஆர்ஷலிங்கங் களாகும் இதற்கும் பிரும்மசூத்திரம் கிடையாது. (ரிஷிகள் பூமியில் பூசித்துவிட்டுச்சென்றவை)

ரிஷிபூஜித - ஆர்ஷகலிங்கம்

காணபலிங்க லக்ஷணம் (சிவகணங்கள் பூசித்தவை) (7ல்5)

கூச்மாண்ட பல ஸங்காசம் மாதுலிங்க பலாக்ருதி: |
உர்வாருக பலாகாரம் கபித்த பல ஸந்நிபம் |
ததா தால பலா காரம் காணபம் லிங்க முச்யதே | (மகுடாகமம்)

பூசணிக்காய், மாதுளம்பழம், வெள்ளரிப்பழம், விளாம்பழம், பனம்பழம். போன்ற வடிவங்களை உடைய லிங்கங்கள் காணப லிங்கங்களாகும். இவை சிவகணங்களால் தரையில் வைத்து பூசிக்கப்பட்டவைகள். கணபதியால் பூஜித்து விடப்பட்டு உள்ள லிங்கங்களும் காணபலிங்கம் ஆகும்.

சிவகணங்களால் பூஜிக்கப்பட்ட லிங்கங்கள் காணபலிங்கம் எனப் படுவன ஆகும். கணபதி, கந்தன், நந்தி, பிருங்கி, முதலானோர் வழிபட்டவையும் காணபவகையைச் சேர்ந்தவையாகும்.

கணார்ச்சித காணவலிங்கம்

பாணலிங்கலக்ஷணம் (நீரில்கிடைத்தவை) (7ல்6)
(இயற்கையில் கிடைக்கும்லிங்கம்)

இது நர்மதை நதியிலிருந்து எடுக்கப்பட்ட, இயற்கையான, நடுவில் பருத்த, நீண்டவட்டவடிவமான பாணலிங்கம் ஆகும்.

பாணலிங்கம்என்பதுநதிகளில்கிடைப்பது. இதற்கு நீர்க்குமிழிபோல் உள்ளது உத்தமம். முட்டை உருவில் உள்ளது மத்யமம், எருதின் திமில் போல் உள்ளது அதமம் என்கிறது தந்த்ரஸாரம் எனும் நூல். மேலும் பழுத்த நாலற்கனி உருவமும், எருமைமாட்டின் கண் போன்றுள்ளதும், பசுவின்விழி போலுள்ளதும், பாணலிங்கத்தின் இலக்கணமாகும். இதில் பருத்திருப்பது தலை என்றும், மெலிந்துள்ளது பாதம் என்றும், உயர்ந்துள்ளது முகம் என்றும் கண்டு அறியத்தக்கது. கருவண்டு நிறமுள்ள பாணமே இல்லறத்தோரால் பூஜிக்கவேண்டியது.



பூஜிதவ்யம் க்ருஹஸ்தேந வர்ணே நப்ரமரோபமம் |
உத்தமம் புத்புதாகாரம் மத்யமம் சாண்டகா க்ருதி: |
அதமம் வ்ருஷப ஸ்கந்தம் இத்யேதத் லிங்கலக்ஷணம் |
பக்வ ஜம்பூ பலாகாரம் மஹிஷாக்ஷி ஸமப்ரபம் |
கபிலாநேத்ர ஸத்ருசம் பாணலிங்கஸ்ய லக்ஷணம் |
ஸ்தூலம் சிர: க்ருசம் பாதம் உந்நதம் து முகம் பவேத் |

(தந்த்ரஸாரம்)

பாணலிங்கம்
(வீட்டுபூஜையில்)

பாணலிங்க மஹிமை

நர்மதா ஸம்பவம் லிங்கம் பாணலிங்க முதீரிதம் |
ஸர்வ ப்ராஸாத யோக்யம் ச ஸர்வபீடார்ஹகம் மதம் ||

மண்ணுலகில் பதினான்குகோடி பாணலிங்கங்கள் விளங்கும் அதிஷ்டிதஸ்தலங்களை ஆகமம் கூறியுள்ளது. அமரேச்வரமலை நேபாளமலை மஹேந்திர மலை, கன்யகா தீர்த்ததீரம், அரண்யங்கள் அதனருகில் உள்ள ஆச்ரமங்களில் தனித் தனியே கோடிவீதம் ஐந்துகோடியும், ஸ்ரீசைல மலையில், லிங்கபர்வதத்தில் 3கோடியும், காளீகர்த்தத்தில் 3கோடியும் நதிகள் மலைகள் யாவிலும் இவ்வாறு பலகோடி லிங்கங்கள் உள்ளதாக சித்தாந்தசேகரம் எனும் நூல் இடங்களைக் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு காமிகாகமம் இடங்களையும் குறிப்படுகிறது.

பாணலிங்கம்
(நர்மதாபாணம்)

பாணலிங்கதோற்றம் இருப்பிடங்கள்

பாணன் என்ற அசுரன், சிவனிடமிருந்து 14கோடி லிங்கங்களை வேண்டிப்பெற்று, அவற்றைப் பூஜித்து மலை, நதி, வனம் இவற்றில் பலகோடி லிங்கங்களை இட்டுள்ளான், அவையே பாணலிங்கம் எனப்படுவதாகும். அவ்விடங்கள் லிங்கமலை, காளீகர்த்தம், ஸ்ரீசைலம், கன்யகாச்ரமம், கன்யாநதீதீரம், நேபாளம், மஹேந்திரமலை, அமரேச்வரம், நர்மதாநதீ முதலிய நதிகளில், எட்டுமலைகளிலும், போடப்பட்டுள்ளதாக காமிகாகமம் தெரிவிக்கிறது. இதற்கான சான்று,

பானோ நாமா(அ)சுர: ப்ரோக்த: ஸ ச ஸித்யர்த்த மாதராத் |
ப்ரார்த்தயாமாஸ பூஜார்த்தம் லிங்காநி விவிதாநி ச |
தத்தவான் லிங்ககோடிநாம் சதுர்தச மஹேச்வர: |
தாநி ஸம்பூஜ்ய காலாந்தே ஸ்தாநேஷ் வேதேஷு ந்யக்ஷிபத் |
லிங்காத்ரௌ காளிகாகர்த்தே ச்ரீநகே கன்யகாச்ரமே |
கன்யாதீரே ச நேபாளே மாஹேந்த்ரே சாமரேச்வரே |
அன்யத்ரச நதீமத்யே பர்வதே ச விசேஷத: | (காமிகே)

பாணலிங்க பெருமை

ஸ்வாயம்புவம் யதாபூஜ்யம் ஸர்வலிங்கோத்தமோத்தமம் |
பாணலிங்கம் ததா பூஜ்யம் ஸர்வலிங்கோத்தமோத்தமம் |
பாணலிங்கம் ததா ஜ்ஞேயம் புக்தி முக்தி ப்ரதாயகம் ||

பாணலிங்கம் சுயம்புலிங்கத்தைப்போலவே மிகச்சிறந்ததாகப் பூஜிக்கதக்கது.

[பாரதபூமியில் கிடைத்திடும் பாணலிங்கங்கள்]

மானுஷ லிங்க லக்ஷணம் (மனிதன் தயாரித்தது) (7ல்7)
(மனிதர்கள் தயாரித்து ஸ்தாபித்தவை)

மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டது மானுஷலிங்கம். இதனை சாஸ்திர முறைப்படி சிற்பிதயாரித்து அளித்த தை மன்னர்கள் ஸ்தாபித்தலிங்கம் என்று அறியவும். தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் முதலான பெருங்கோயில்களில் காணப்படுவது.

த்வாரம் வா கர்பமானம் வா பித்தி மானம் அதா பிவா |
சில்ப சாஸ்த்ரோக்த மானம் வா சத்ராகார சிரோதயம் ||
ஏகவர்ணம் சிரோ ஸ்நிக்தம் ப்ரம்மசூத்ர ஸமன்விதம் |
இத்யேதைர் லக்ஷணைர் யுக்தம் லிங்கம் மானுஷ முச்யதே || (மகுடாகமம்)

கருவறைத் துவாரத்தின் அளவுள்ளதாகவோ, கர்பக்கிருஹத்தின் அளவைக் கொண்டதாக, கருவறையின் சுவருடைய பத்தி மானத்தாலோ, சில்பநூல்களில் கூறப்பெற்ற அளவுகளை உடையனவாகவோ, அமைக்கப் பெற்ற வைகளும், சத்ராகாரம் அதாவது குடைவடிவம்முதலான லிங்க சிரோலக்ஷணங்களை உடையவைகளும், பிரும்மசூத்திரத் தோடு கூடியவைகளும், மானுஷ லிங்கங்கள் என்று கூறப்படுகின்றன. இந்த லிங்கங்கள் அடிபாகத்தில் சதுரமாகவும், நடுபாகத்தில் எட்டுபட்டைகளை உடையதாகவும், மேல்பாகத்தில் வட்டவடிவமாகவும் மூவகைப் பகுதிகளுடன் அமைந்திருக்கும். இதற்கான சிற்பசாஸ்த்திரச்சான்று இதுவாகும்.

தஞ்சைபெருவுடையார் - மானுஷலிங்கம்
(பெரியபெளருஷ லிங்கவகை)

லிங்கலக்ஷணம் (பொதுவான மானுஷலிங்கம்)

சதுரச்ரம் அதோபாகம் ப்ரம்மபாகம் அதோ (உ)ச்யதே |
மத்யே து வசுகோணம் ஸ்யாத் விஷ்ணுவம்சம் தத் ப்ரகீர்த்திதம் |
ஊர்த்வபாகம் து விருத்தம் ஸ்யாத் தத் சைவாம்சம் நிகத்யதே |

(காஸ்யபசில்பே49ல்113–114)

எட்டுவகை மானுஷலிங்கங்கள்

மானுஷம் எனப்படுகின்றதான பௌருஷலிங்கத்தின் பேதங்களை பலவகைகளாக சைவாகமங்கள் விளக்குகின்றன. இந்தபேதம் பொதுவாக அமைப்புமுறையால் எட்டுவகையாகக் காமிகாகமத்தில் கூறப்படுகிறது. அவைகள், 1.ஸமலிங்கம், 2.வர்தமானம், 3.சைவாதிக்யம், 4.ஸ்வஸ்திகம், 5.ஸர்வதோபத்ரம், 6.ஸார்வதேசிகம், 7.தாராலிங்கம், 8.முகலிங்கம் என்பன இவற்றைத் தெரிவிக்கும் சிவாகமசான்று இதுவாகும்.

ஸமலிங்கம் வர்தமானம் சைவாதிக்யம் ச ஸ்வதிகம்.
ஸர்வதோ பத்ர லிங்கம் ச ஸார்வ தேசிக மேவ ச.
தாராலிங்கம் முகலிங்கம் லிங்கம் அஷ்டவிதம் பவேத். (காமிகாகமம்)

பூர்வகாரணாகமத்தில் ஸமலிங்கம், வர்தமானம், சிவாதிகம், த்ரைராசிகம் என்று நான்குவகையிலும், அஜிதாகமத்தில் மேலே கூறப்பட்ட எட்டுவகைகளில் முதல்நான்கு வகையிலும், பூர்வகாமிகத்திலும், சித்தாந்த ஸாராவளி யிலும் 1.ஆட்யம், 2.அனாட்யம், 3.சுரேட்டியம், 4.சர்வசமம் என்று நால்வகையாக மற்றொரு முறையிலும், 1.சமலிங்கம், 2.வர்த்தமானம், 3.சிவாதிகம், 4.த்ரைராசிகம், 5.ஸ்வஸ்திகம் என்று ஐந்துவகையிலும் கூறப்பட்டுள்ளன.


[லிங்கத்தின் முப்பகுதிகள்]

ஸமலிங்கம், வர்தமானம் சிவாதிகம், த்ரிராசிகம் என்ற நான்கு வகை லிங்கங்கள் முறையே நான்கு வர்ணத்தார்களுக்கு உரியது என்றும், இதில் வர்தமானம், சிவாதிக்யம் என்ற இரண்டுவகை மட்டும் எல்லா ஜாதியினருக்கும் உகந்தது என்றும் காமிகாகமம் கூறுகிறது. இதைக் கூறும் சான்று இதுவே.

ஸமகண்டம் வர்த மானம் சைவாதிக்யம் த்ரிபாகிகம் |
வர்ணாநாம் பிராம்மணாதீநாம் க்ரமேண பரிகல்பயேத் ||
வர்தமான சிவாதிக்யே ஸர்வஜாத் யர்ஹகே மதே | (காமிகம் 1-62-67)

அதஸ்தாத் சதுரச்ரம் து பிரம்மபாகம் ததுச்யதே |
அஷ்டாச்ரம் மத்யமம் ஞேயம் விஷ்ணுபாகம் ததுச்யதே |
ஔர்த்வே சுவ்ருத்தபாகம் து ருத்ராம்சம் இதி கீர்த்திதம் |

(பூர்வகாரணே)

லிங்கத்தில் அடியில் உள்ள சதுரவடிவப்பகுதி பிரம்மபாகம் எனப்படும். நடுவில் உள்ள எட்டுபட்டை வடிவப்பகுதி விஷ்ணுபாகம் எனப்படும். மேலே உள்ள வட்டமான பகுதியோ ருத்ராமசமான ருத்ரபாகம் எனப்படும்.

சதுரமான பாகத்திற்கு பிரம்மபாகம் என்றும், எட்டுப்பட்டையான பாகத்திற்கு விஷ்ணுபாகம் என்றும், வட்டமான பாகத்திற்கு சிவபாகம் என்றும் பெயர். இத்கைய பௌருஷலிங்க பேதங்கள் பலவகைகளாக ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. பௌருஷம் என்பது மானுஷம் என்பதே ஆகும். புருஷனின் ஸம்பந்தமுள்ளது, பௌருஷம் எனப்படுவது ஆகும்.

மூலதோ பிரம்ம ரூபாய மத்யதோ விஷ்ணுரூபிணே |
அக்ரதச் சிவரூபாய சிவலிங்காய தே நம: ||

ராக்ஷஸலிங்கம்

இராவணன் முதலான ராக்ஷஸர்கள் பூசித்தலிங்கம் ஆசுர லிங்கம் எனப்படுவதாகும். திருக்கோகர்ணம், திருப்பனந்தாள் முதலான பல தலங்களில் உள்ள மூலலிங்கப்பெருமையை தலவரலாற்றால் அறியலாம்.



[திவ்யஸ்தலமூலலிங்கம்]

உத்பூதலிங்கம்

பர்வதாக்ரவதாகாரம் வல்மீகாக்ர வதுன்னதம் |
பஹூதாக்ரம் ச ஸம்பரோக்தம் இதம் உத்பூதலக்ஷணம் ||

மலைஉச்சிமுகடு போன்ற உருவ முள்ளதும் மண்புற்றின் முனை போன்ற உருவமுடையதும், பலமுனைகளை கொம்பு கள்போல் சிகரங்களை உடையதும், உத்பூதலிங்கம் என்ற பெயருடையது ஆகும்.



தானேதோன்றிய சுயம்புலிங்கம்

உத்ருதலிங்கம். வெளிப்பட்டலிங்கவகை.

பூமியிலிருந்தும், நீர்நிலையிலிருந்தும், மலையிலிருந்தும், லிங்க உருவில் உள்ளதாக தோற்வு செய்து எடுத்து வந்து எவ்வகையிலும் கைவேலையோ திருத்தமோ செய்யாமல் அப்படியே இருந்த வடிவிலேயே ப்ரதிஷ்டைசெய்து பூஜிப்பது உத்ருதலிங்கம் எனப்படும்.

நாகரலிங்கம்

முற்றிலும் நான்குபட்டைவடிவில் விளங்குவது. இது நீளத்தால் அகலத்தைக் கொண்டு அமைப்பது. லிங்க உயரத்தை பத்து பங்கு செய்து அவற்றில் 2-3-4 அல்லது 5 கூறு அகலம் கொண்டது நாகரலிங்கம் எனப்படுவதாகும். கொடிபோன்ற வடிவம் உடையது.



சதுரபீடநாகரலிங்கம்

திராவிடலிங்கம்

இது உயரத்தை 18 பாகமாக்கி அதில் 3பங்கு, 4பங்கு, 5பங்கு அல்லது 6 பாகம் அகல அளவை உடையது திராவிடலிங்கம் ஆகும். இது எட்டு பட்டைபாணமுள்ளது.



வட்டபீட வேஸரலிங்கம்

வேஸரலிங்கம்

லிங்க உயரத்தை இருபது பாகங்களாக்கி அவற்றில் 5பங்கு, 6பங்கு, 7பங்கு அல்லது 8பாங்குகளை அகலமாகக் கொண்ட வட்டவடிவமான லிங்கம் வேஸர லிங்கம் எனப்படுவதாகும். இது பருத்தவடிவமானது.

பௌருஷலிங்க பேதங்கள் (மானுஷலிங்கவகைகள்)

நான்கு வகை லிங்கங்கள் (மானுஷ லிங்கவகை)

பூர்வகாரணாகமத்தில் ஸமலிங்கம், வர்த்தமானம், சிவாதிக்யம். த்ரைராசிகம் என்று நான்குவகைகளாகக் கூறப்பட்டுள்ளன. அதற்கான சான்று இதுவே.

ஸமகண்டம் வர்தமானம் சைவாதிக்யம் த்ரிராசிகம் |
லிங்கம் சதுர்விதம் ப்ரோக்தம் த்விஜாதீனாம் அநுக்ரமாத் ||
வர்தமானம் சிவாதிக்யே ஸர்வஜாதி அர்ஹகே ஸ்மிருதம் ||

(பூர்வகாரணாகமம் படலம் 9ல் சுலோகம் 116)

லிங்க உருவங்கள் நால்வகையில் கூறப்படுகின்றன. பொதுவாக லிங்கத்தில் பாணமும் ஆவுடையாரும் வட்டமாகப் பலஇடங்களில் இருப்பினும், சிலஇடங்களில் சதுரமாகவும், பட்டையாகவும் அமைந்துள்ளன. நமது சைவசமயமரபில் சிவபெருமானைச் சென்றடையச்

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்கு நெறிகள் உண்டு. இந்த ஒவ்வொரு நிலையிலிருந்து, இறைவனை வழிபட்டவர்கள், முறையே அடையும் நிலைகளும் நால்வகையாக, முறையே ஸாலோகம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம் என்பனவாகும். இவை இறைவனின் உலகைஅடைதல், அருகாமையை அடைதல், உருவத்தை அடைதல், குணவல்லமைகளை நிகராக அடைந்து கூடுதல் ஆகிய இவை நால் வகைப் பதமுக்திகள் எனப்படுபவை ஆகும்.

[அங்கலிங்கஸ்தாபனம்]

அஜிதாகமத்தில் 1. ஸமலிங்கம், 2. வர்த்தமானம், 3. சிவாதிக்யம், 4. ஸவஸ்திகம் என்று வேறுவகையாக நான்குவகையானலிங்கங்கள் கூறப்பட்டுள்ளன. பூர்வகாமிகத்திலும், சித்தாந்தஸாராவளியிலும் 1. ஆட்யம், 2. அனாட்டியம், 3. சுரேட்டியம், 4. ஸர்வஸமம் என்று மற்றொருமுறையிலும் நான்கு லிங்கவகை கூறப்பட்டிருக்கிறது.

ஆட்யா நாட்ய ஸுரேட்யம் ச தாராலிங்கம் ஸஹஸ்ரகம் |
ஸர்வேஷாம் ப்ராம்மணாதீனா மபி ஸாமான்ய மீரிதம் ||

(பூர்வ–காரணாகமம் 9–17)

அன்றியும் காமிகாகமத்தில் 1. ஸமகண்டம், 2. வர்த்தமானம், 3. சிவாதிகயம், 4. த்ரிபாகிகம், 5.ஸ்வஸ்திகம் என்று நான்கு வகையாகக் கூறப்பட்டுள்ளது.

ஸமகண்டம், வர்தமானம், சைவாதிக்யம் த்ரிபாகிகம் |
வர்ணாநாம் ப்ராம்மணாதீனாம் க்ரமேண பரிகல்பயேத் |
வர்தமான சிவாதிக்யே ஸர்வ ஜாத்யர்ஹகே மதே || (பூர்வகாமிகமம் 62ல்)

ஸமலிங்கம், வர்தமானம், சிவாதிகம், த்ரிராசிகம் ஆகிய நான்கும் நான்கு வர்ணத்தார்களுக்கும் ஏற்றது. இதிலும் வர்தமானம், சிவாதிகம் இரண்டும் எல்லாஜாதியினருக்கும் உகந்த நலம் தருவதாகும் என்று காமிகாகமம் கூறுகிறது.

லக்ஷ்மஸூத்திரமுள்ள மானுஷ லிங்கம்

ஆட்ய அனாட்ய சுரேட்ய லிங்கலக்ஷணம்

லிங்காயாமே விகாராம்சே சதுர்பூதம் ரஸை க்ரமாத் |
ஸ த்ரிபாகைஸ் த்ரி ரம்சைஸ் து சுரேட்யா நாட்யகே த்விஜா: ||
ஆட்யம் ஸர்வஸமம் லிங்கம் விசிஷ்டம் பரிகீர்த்திதம்| (காமிகம் 62ல் 24)

இதன்படி உயரத்தை 15 பாகம் செய்து, 4–5–6 என்று கீழிருந்து அமைப்பது சுரேட்யம் அநாட்யம் ஆகும். முப்பகுதியும் சமமாக உள்ளது ஆட்யம் ஆகும்.

எட்டுவகை லிங்கங்கள் (மானுஷலிங்கவகைகள்)

ஸமலிங்கம் வர்தமானம் சைவாதிக்யம் ச ஸ்வஸ்திகம் |
ஸர்வதோபத்ர லிங்கம் ச ஸார்வதேசிக மேவச |
தாராலிங்கம் முகலிங்கம் லிங்க மஷ்டவிதம் பவேத் ||

1. ஸமலிங்கம், 2. வர்த்தமான லிங்கம் 3. சைவாதிக்ய லிங்கம், 4. ஸ்வஸ்திக லிங்கம் 5.ஸர்வதோபத்ர லிங்கம், 6. ஸார்வதேசிக லிங்கம், 7.தாராலிங்கம், 8. முகலிங்கம் என்று எட்டுவகைகளாக மானுஷலிங்கம் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

ஸமலிங்க அமைப்புமுறை (ஸமகண்டம்) (8ல்1)

இவை நால்வகையும் இலிங்கநீளத்தில் மூன்று பாகங்களை உயரத்தில் பங்கீடு செய்வதை அடிப்படையாகக் கொண்டவை. சமகண்டலிங்கம் மூன்று பாகங்களையும் சமஅளவில் உடையதாகும். இதுவே ஆட்யலிங்கம் எனப்படுவதாகும்.

லிங்காயாமம் த்ரிதா க்ருத்வா பிரம்மாம்ச த்வேக பாகத: |
விஷ்ணுவம்சஸ் தத்வதேவம் ஸ்யாத் ருத்ராம்சோ பாகமேவச |
ஏகாம்ச ஸத்ருசஸ் தார: ஸம கண்டோய மீரிதம் | (காமிகே62ல்29)

பாணஉயரத்தை 24 பங்குசெய்து, 8பங்கிலேயே மூன்று பாகத்தையும் அமைப்பது. அதாவது, பிரம்மபாகம், விஷ்ணுபாகம், சிவபாகம் என்பவை மூன்றும் முறையே ஒவ்வொன்றும் எட்டுஅம்சங்களை உடையனவாக, ஸமஅளவிலேயே மூன்றும் இருப்பது ஸமலிங்கம் எனப்படுவது ஆகும். இதுவே ஸமகண்டம் என்றும் கூறப்படும். இந்த வகைலிங்கம் கிடந்தநிலையிலுள்ளதாக சயன லிங்கம் எனப்படுவதாகும்.


ஸமகண்டலிங்கம் (மானுஷம்)

கிஞ்சி தஸ்மின் விசேஷோ (அ)ஸ்தி ஸமகண்டஸ்ய தம் ச்ருணு|
லிங்கஸ் யோ(உ)த்ஸேத மானம் து சதுர்பாகேன பாஜயேத் ||
ஆயாமார்த்தம் பஜே தஷ்ட விஷ்கம்பம் து சராம்சகம் ||
பஞ்சாம்சம் பீவத்விஷ்ணுஸ் தஸ்மாத் தத் த்விகுணோ ஹர:!!
அக்ரேமூலே ச மத்யே ச ப்ரமாணம் ஸர்வதஸ் ஸமம் || (பூர்வகாரணே.9)

இதன்படி முப்பகுதியிலும் உயரத்தை ஒன்றாயும், அகலம் மட்டும் கீழிருந்து ஒரு ஒரு அம்சம் குறைந்ததாயும் அமைப்பது சிறப்பாம்.

வர்த்தமான லிங்க அமைப்புமுறை (8ல்2)

லிங்க நீளஉயரத்தைப்பகுத்துகீழிருந்து மேல் வரை முறையே பிரம்ம விஷ்ணு ருத்ரபாகங்களுக்கு ஒருபங்கு கூடுதலாக்கி அமைக்கப்படுவதால் இப்பெயர் பெற்றுள்ளது வர்த்தமானலிங்கம் ஆகும். இதுநால் வகைப்படும். இதுவே அநாட்யலிங்கம் எனப்படுவதுமாகும்.

சதுஷ் பஞ்ச ஷடம்சம் து பஞ்ச ஷட் ஸப்த பாகிகம் |
ஷட் ஸப்தா ஷ்டாம்சகம் ஸப்த பாகாஷ்ட நவ பாகிகம் |
வர்த்தமான மிதம் ப்ரோக்தம் விப்ராதீனாம் அநுக்ரமாத் || (காமிகே-62ல்30)

(1) பிரம்மபாகம் நான்கு அம்சம், விஷ்ணுபாகம் ஐந்தம்சம், சிவபாகம் ஆறம்சங்கள் உள்ளதாகவோ, அல்லது (2) இவைகளை கீழிருந்து முறையே ஐந்து, ஆறு, ஏழு என்ற முறையிலோ (3) ஆறு, ஏழு, எட்டு, என்ற முறையிலோ (4) ஏழு, எட்டு, ஒன்பது என்ற முறையிலோ உயரம் பகுக்கப்பெற்றதான சிவலிங்கம் நால்வகையும் வர்த்தமானலிங்கம் எனப்படுவது ஆகும்.



வர்த்தமான சைலஜலிங்கம்

சதுப் பஞ்ச ஷடம்சம் து பஞ்ச ஷட் ஸப்த பாகிகம் |
வர்த்தமானம் இதி ப்ரோக்தம் விப்ராதீநாம் அநுக்ரமாத் ||

பூர்வகாரணே-9ல்-117)

இவை அந்தணர் முதலான நால்வகை வர்ணத்வர்களும் முறையே கைக்கொள்ளவேண்டிய பகுப்புஅளவு முறையாகும். இந்த வகை ஸ்திதலிங்கம் என்ற நின்றநிலை லிங்கம் ஆகும்.

சிவாதிக்ய லிங்கஅமைப்புமுறை (8ல்3)

பிரம்மவிஷ்ணு பாகங்கள் இரண்டும் ஒரேவகை அளவிலிருக்கையில் சிவபாகத்தைமட்டும் மேலே ஒருபங்கு கூடுதலாக அதிகமாக வைத்து அமைக்கப்படுவது சிவாதிகலிங்கமாகும். இது நான்கு வகைப்படும். இதுவே சுரேட்யலிங்கம் எனப்படுவதுமாகும்.

ஸப்த ஸப்தாஷ்ட பாகம் து பஞ்ச பஞ்ச ஷடங்ககம் |
வேத வேத சராம்சம் து குணா (அ)னல யுகாம்சகம் |
ஏவம் சிவாதிகம் ப்ரோக்தம் த்விஜாதீநா மநுக்ரமாத் | (காமிகே-62-33)

1). பிரம்மபாகம் ஏழம்சம், விஷ்ணுபாகம், ஏழுஅம்சம், சிவபாகம் மட்டும் எட்டுஅம்சங் கள் கொண்டதாகவோ, அல்லது 2). இவை மூன்றும் முறையே ஐந்து ஐந்து, ஆறு பாகங் களாகவோ, 3). நான்கு, நான்கு, ஐந்து அம்சங் களாகவோ, 4). மூன்று, மூன்று, நான்குஅம்சங் களாகவோ, வகுக்கப்பெற்ற லிங்கம் சிவாதிக லிங்கம் என்ற பெயர் பெற்றதாகும். இவை நான்கு வர்ணத்தார்களுக்குமான அளவு முறையாகும். இதில் மூன்று பாகங்களில் சிவபாகம்மட்டுமே அதிகமாக உள்ளதால் இவ்வகை இப்பெயர் உடையதாகும். இது அமர்ந்த நிலையிலுள்ள ஆஸீனலிங்கம் எனப்படுவதாகும். (அதிகம் = கூடுதலாய் உடையது = சிவபாகத்தைக் கூடுதலாகக் கொண்டது) (வேதம் = 4 நால்வேதம், சரம் = காமனின் மலர்கணைகள் ஐந்து 5. குணம் = 3. அணவ: = உயிர்த்தொகை 3வகை யுகம் = 4 யுககாலம் என்று பொருள்கொள்ளத் தக்கவை.)



சிவாதிக்ய சிலாலிங்கம்

ஸ்வஸ்திகலிங்க அமைப்புமுறை (8ல்4)

நவதா லிங்கமாநேந த்வ்யம்சம் மத்யே குணாம்சகம் |
விருத்தே யுகாம்சம் தைர்க்யம் சூத்ரே(அ)ப்யேதச்ச சாஸ்யதோ|| (காமிகே)

I. லிங்க நீளத்தை ஒன்பது பாகம் செய்து கீழிருந்து 2பங்கு, 3பங்கு, 4பங்குகளால் அமைப் புடையது ஸ்வஸ்திக லிங்கம் எனப்படும்.

சதுரபீட சுவஸ்திக பௌருஷலிங்கம்

II. லிங்கஉயரத்தை ஒன்பது அம்சங்களை உடையதாகச் செய்து, ஒன்பதாகப் பகுத்து அதில் சிவபாகம் இரண்டு அம்சங்கள், பிரம்மபாகம் மூன்றுஅம்சங்கள் விஷ்ணுபாகம், நான்குஅம்சங்கள் உடையவை களாகச் செய்வது ஸ்வஸ்திகலிங்கம் என்ற பெயருடைய தாகும். இதில் நடுவிலுள்ள விஷ்ணுபாகம் கூடுதலாயும் மேலேஉள்ள சிவபாகம் குறைந்ததாயும், அமைப்புமுறை வித்யாசமாக உள்ளதால் இப்பெயர் என்பது இங்கு அறியத்தக்கது.

III. உயரத்தை பதினாரு பங்குசெய்து மூன்றால் ருத்ரபாகத்தையும் மற்ற இருபாகங்களையுமே நான்கு பங்கினால் அமைப்பது ஸ்வஸ் திலிங்கம் எனப்படுவது ஆகும்.

ஆத்மா யாமே ருத்ர பாகே குணாம்சே –
வைரிஞ்ய ஸ்யாத் வைஷ்ணவோ வேதபாக: |
வர்தமானம் ஸ்திதம் லிங்கம் ஆஸீனம் சிவாதிகம் –
த்ரைராசிகம் து யானம் ஸ்யாத் சயனம் ஸமகண்டகம்|| (மகுடாகமம்)

ஸர்வதோபத்ர லிங்கஅமைப்புமுறை (8ல்5)

இந்தலிங்கமானது மூன்றுபாகமுமே முழுவதுமே வட்டவடிவமாகவே இருப்பதாகும். முழுஉயரத்தையும் இருபத்திநான்கு பங்காகச் செய்து, அதில் எட்டுபங்கில் பிரம்மபாகத்தை பீடத்திற்குள்ளும், நடுவில் உள்ள எட்டு பாகத்தை ஆவுடைக்குள்ளும், விஷ்ணுபாக மாக கோமுகையுடனும், மேலே ருத்ரபாகத் தையும் எட்டுபங்கிலே காணும் திருச்யபாக மாகவும் சமமாக அமைப்பதாகும். இந்தவகையில் முழுவட்டமானலிங்கத்தைப் பூஜித்தல் நான்கு வர்ணத்தவர்களுக்கும் நலம்தருவதாகும்.



விசேஷபீடமுள்ள முகபத்ரலிங்கம்

லிங்கத்தின் பாணமானது அடிமுதல் முடிவரையிலும் மூன்று பாகமுமேவிருத்தமான வடிவில் திரட்சியாக அமைப்புடையதும் மூன்று பாகமும் மூன்றில் ஒரு பங்கு அளவில் சமகண்டம் போலவே உடையதும், ருத்ரபாகம் மட்டுமே பீடத்தின் மீது தெரிவதும் ஸர்வதோபத்ரம் எனப்படுவதாகும். இது எல்லோருக்கும் நலம் தரும் ஏற்றவகையாகும்.

ஸார்வதேசிகலிங்கஅமைப்புமுறை (8ல்6)

லிங்கநீளமானது அடிமுதல் தலைவரை திரண்ட விருத்தவடிவமானதும், இந்த நீளஅளவில் ஐந்தில் இரண்டு பங்கு அல்லது ஐந்தில் ஒரு பங்கு பீடத்திற்குள் சொருகிப்பொருத்தி எஞ்சியபகுதி ஆவடையாள் பீடத்திற்கு மேல் தெரியும் வகையில் திருச்யபாகமாக உள்ளதும் ஸார்வதேசிகலிங்கம் எனப்படுவதாகும். இது எங்கும் யாவர்க்கும் அமைக்கத்தக்க வகையாகும். ஆலயமும் லிங்கமும் ஆகமசில்பசாஸ்திரமுறைப்படியே இருப்பது மிகவும் அவசியமாகும்.

திரிகண்ட மானுஷ மூலலிங்கம்

இந்த லிங்கத்தை மூன்றுபாகத்துடனும், கீழிலிருந்து மேல்வரை உயரம் ஒருபங்குவீதம் குறைந்ததாக முழுவதும் வட்டவடிவிலேயே அமைப்பது. முழுஉயரத்தையும் 12 பங்கு செய்து அதில் பிரம்மபாகத்தை

பீடத்துள்ளே ஐந்துபாகமாகவும், நடுவே விஷ்ணுபாகத்தை பிண்டிகை எனும் ஆவுடைக்குள்ளே நான்கு பாகமாகவும், மேலே ருத்ரபாகத்தை திருச்யபாகமாக காணும் நிலையில் சிவபாகம் மூன்றுபாகமாகவும் அமைக்கப்படுவதாகும். இந்தலிங்கத்தை பூஜித்தலால் நான்கு வர்ணத்தார்களும் நலம் அடைவார்கள்.

தாராலிங்க அமைப்புமுறை (8ல்7)

பன்னிரண்டு தாராலிங்கம்

இது மூன்று வகையாகச் செய்யப்படுவ தாகும். லிங்க நாளமான பாணமானது அடி முதல் தலைவரையிலும் சதுரமாகவே நான்கு பட்டையாகவேஅமைவது, சுருதிதாரா லிங்கம் நான்குபட்டைகள் உள்ளது. 2–வது, மற்றது சமகண்டலிங்கத்தில் பிரம்மபாக உயரம் வரையில் நான்கு பட்டையாகவும் மேலே மற்றய இருபாகங்களும் எட்டுபட்டையாகவே அமைப்புடையது வசுதாராலிங்கமான 8 பட்டை லிங்கம் ஆகும் 3–வது மற்றது பிரம்மாகத்தை சமகண்டலிங்கம் போலவே பகுத்து நான்குபட்டையும் விஷ்ணு பாகத்தை எட்டுப் பட்டமாகவும் அமைத்து மேலே தெரியும் ருத்ரபாகத்தை மட்டும் பதினாறு பட்டமாகவும் அமைத்தல் மூன்றாவது அமைப்புவகையாகும்.

அதோ வேதாச்ரகம் குர்யாத் ததூர்த்வே த்வஷ்டதாரயா |
ஊர்த்வே ஷோடச தாராச்ச போகார்த்தீ லபதே சுகம் |
ஏவம் க்ரமேண ஸம்யுக்தம் தாராலிங்க மிதி ஸ்மிருதம் |
ஏதத் த்விஜ மஹா ப்ராக்ஞ ஸர்வகாம ப்ரஸாதனம் |

(பூர்வகாரணாகமபடலம் 9ல்–126)

தாராலிங்கத்தின் முழுஉயரத்தையும் 24பங்குசெய்து, மூன்று பாகத்தையும் சமகண்டமாக எட்டுபங்குஉள்ளதாகவே செய்து முழுவதும் நாலுபட்டை வடிவிலேயே அமைத்திடுவது ஒருமுறை, அல்லது இதையே கீழே நாலுபட்டையாகவும், நடுவே எட்டுபட்டையாகவும், மேலே எட்டுபட்டை அல்லது பாதினாறு பட்டையாகவும் விளங்குமாறு அமைத்திடுவதும் இவ்வகை தாராலிங்கத்தை காஞ்சீபுரம் கைலாசநாதர் கோவில் உள்ள மூலலிங்கம், மற்றும்



16பட்டைகள் உள்ள சோடஷ தாராலிங்கம்

திருவதிகையில் மூலலிங்கமாக காணலாம், திருவையாற்றில் தக்ஷிணா மூர்த்தி முன்மண்டபத்தில் 64பட்டை யில் தாராலிங்கத்தை அங்கலிங்கத் தில் காணலாம். இவ்வகையை ஒருபட்டை முதல் நூறுபட்டை வரையில் உள்ளவாறு அமைக்கலாம் என்று கூறப்படுகிறது.



[64தாரைகள் உள்ள லிங்கம்] திருவையாறு

ஒருபட்டைமுதல், நூறுபட்டைகள் அல்லது ஆயிரம்பட்டைகள்வரைஉள்ளவை தாராலிங்கவகை. சிவலிங்கத்தின் பூஜாபாகத்தில் மேலிருந்துகீழாக வரிசையாக அமைக்கப்பெற்ற கோடுகளை அல்லது பட்டைகளை உடையது தாராலிங்கம் எனப்படுவ தாகும். இவற்றில் உச்சியில் சிரோவர்த்தனத்திலும் அவ்வாறே தாரைகள் அமைந்திருக்கும்.

தாராலிங்க அமைப்புமுறைகள் (பட்டைலிங்கம் 100வகை)

ஏகாதி தாரயா வ்ருத்தம் சத தாரா வஸானகம் |
தாராலிங்கம் ப்ரசஸ்தம் ஸ்யாத் ஸஹஸ்ர மதுநோச்யதே ||

(பூ.காமிகம் 62ல்-37)

பஞ்ச தாரா ஸப்த தாரா நவ த்வாதச தாரகம் |
தாரா ஷோடச விம்சத்து சதுர்விம்சா ஷ்டவிம்சதி: || (முகுடாகமம்)

லிங்கத்தின் பூஜாபாகத்தில் மேலிருந்துகீழாக ஒருபட்டை முதல் நூறுபட்டைவரையில் அமைக்கப் பெற்ற லிங்கம். **தாராலிங்கம்** எனப் படும். **தாரா** என்பதற்கு மழை ஒழுக்குக் கோடு என்று பொருள். இதுவே **அச்சரலிங்கம்** என்றும் பெயர்பெறும். அச்சரம் என்பதற்கு = பட்டைகள் என்று பொருள், கொள்ளப்படும். நாலுபட்டையுடனும், இவைகளை ஐந்துபட்டை, ஏழுபட்டை, ஒன்பது பட்டை, பன்னிரண்டுபட்டை, பதினாறு பட்டை, இருபதுபட்டை, இருபத்தி நான்குபட்டை, இருபத்திஎட்டுபட்டை, 32, 64, 100 இவைகளிலும் அமையும்.



பரிவாரத்தில் தாராலிங்கஸ்தாபனம்

முகலிங்க அமைப்புமுறை (வக்த்ரலிங்கம்)
(முகம்மட்டுமுள்ள லிங்கவகை) (8ல்8வது)


[நான்குமுகலிங்கம்]

இது ஐந்து வகைப்படும். லிங்கநாளத்தின் ருத்ரபாகத்தில் லங்கத்தில் இருந்து வெளியே நீண்டுத்தெரிகிற புடைப்புச் சிற்பமாக மார்பளவு திருமுக அமைப்புடையதாகும். இவ்வாறு ஒரு முகம் முதல் நான்கு முகம் வரை அமைக்கப்படுவது முறை. இது சகள நிஷ்களத்திருமேனியாக விளங்குவதால் நிஷ்களத்தை உணர்த்துவதற்காக மேலே ஈசான முகத்தை வெளிப்படுத்தாமல் ஐந்து முகம் காட்டப்பெறுவதில்லை. மேல் முகத்தையும் கருவறையின் வாயில் திசையில் கிழக்கில் மேலே அமைத்தும் செய்துட ஆகமங்கள் கூறியுள்ளன. இவ்விதமாக ஒருமுகம் முதல் ஐந்துமுகம் வரை உள்ளதாக ஐந்துவகைப்படும்.

அஷ்டாச்ராத் ஊர்த்வ பர்யந்தம் யவாம்சம் வா யவோன்னதம் |
பூஜாபாகம் த்ரிதா க்ருத்வா சோர்த்பாகோ முகம் பவேத் || (மகுடாகமம்)

லிங்கத்தின் பூஜாபாகத்தில் 1) நான்குதிக்குகளிலும் நான்கு முகங்களையும், நடுவே லிங்கத்தின் மேல்பாகத்திலோ, லிங்கத்தின் ஈசானதிசை பாகத்திலோ) ஒருமுகத்தையும் உடையதாக **பஞ்சமுக லிங்கத்தையும்,** இவ்வாறே 2) நான்குதிக்குகளில் நான்குமுகங்களை மட்டும் உடையதாக **சதுர்முக லிங்கத்தையும்** (3) பின்புறத்தை தவிர்த்து மற்றய மூன்றுபக்கங்களில்மட்டும் மூன்றுமுகங்களை உடையதாக, **த்ரிமுக லிங்கத்தையும்** (4) முன்னாலும் பின்னாலும் ஆக இருமுகங்களைமட்டுமே உடையதாக, **த்விமுக லிங்கத்தையும்** 5) முன்னால்மட்டுமே ஒருமுகத்தை உடையதாக **ஏகமுக லிங்கத்தையும்,** இவ்வாறாக ஐந்துவகையில் முகத்துடன் அமைக்கப்பெறும் லிங்கங்கள் முகலிங்கம் என்று பெயர்பெற்றவை ஆகும்.


[சதுர்முகலிங்கம்]

முகலிங்கம் நால்வகைப்படும். அவை 1. ஆட்யம், 2. அநாட்யம், 3. சுரேட்யம், 4. ஸர்வகம். என்பவை ஆகும் 1. **ஆட்யலிங்கம்** சிவபாகத்தில் ஆயிரம் முகங்களை உடையது. 2. முகம்எதுவும் இல்லாதது **ஆநாட்யம்** எனப்படுவது. 3. **சுரேட்யம்** என்பது சிவபாகத்தில் நான்கு

அடுக்குச் சுற்றில் 27 லிங்கம் வீதமாக 108 லிங்கஅமைப்பை உடையது.
4. இதுவே முழுஉறுப்புகளையும் கொண்டுள்ள ஐந்துமுகலிங்கம் ஸர்வகம் எனப்படுவது ஆகும். இதுவே இவ்வாறாக ஐந்துவகையில் முகத்தின் எண்ணிக்கையால் அமையும்.

முகலிங்க லக்ஷணம்

முகலிங்கம் ததோ வக்ஷ்யே ஸர்வ காமார்த்த ஸாதனம் |
பூஜாபாகம் ஸமஸ்தம் து த்விஷஷ்ட்யம்சம் பஜேத் க்ரமாத் || 234

த்ரயோதசாங்குலார்தம் து முகம் ஏகம் ப்ரகீர்த்திதம் |
சராநநம் சதுர்வக்த்ரம் த்ரிவக்த்ரம் சைகவக்த்ரகம் || 235

சதுர்திக்ஷு சதுர்வக்த்ரம் த்ரிவக்த்ரம் ப்ருஷ்டஹீநகம் |
குரு ஏகவக்த்ரம் ஊர்த்வே து முகமாநேந புத்திமான் || 236

மகுடேநோ (ஊ) ர்த்வ வக்த்ரம் து த்ரயோதசார்த்தாங்குலேந து |
க்ரீவ மூலாத் ஸ்தநாந்தம் ஸ்யாத் அர்தாதிகம் த்ரயோதச || 237

ஸ்தனஸூத்ரா (அ) வதிர் யாவத் காரயேத் த்விபுஜாந்விதம் |
ப்ரதிமா லக்ஷணோக்தேந மார்க்கே ணைவ ஸமாசரேத் || 238

சேஷம் லிங்கவ தாகாரம் காரயேத் லக்ஷணான் விதம் |

(பூர்வகாரணம் – 9ல்– 234 – 238)

முகலிங்கத்திற்கு பூஜாபாகத்தை முழுஉயரத்தையும் 62பங்கு செய்து அதில் பதிமூன்றரை பங்கினால் ஒரு முகத்தைச் செய்வது முறையாகும். மேல்முகம்மட்டுமே மகுடத்துடன் கூடியதாகும். கழுத்து அடிமுதல் மார்புவரையில் பதிமூன்றரைபங்காகும். இதனை இருகைதோள்களுடன் பிரதிமாலக்ஷணப்படி அமைத்திடவேண்டும்.

இவ்விதம் முகலிங்கம் கிரீடத்துடன்கூடிய, மேல்முகத்துடன் ஐந்து முகங்களும், கழுத்து மற்றும் இருகைத்தோள்களுடன் மார்பகக்கோடு வரையில் பிரதிமைஇலக்கணப்படி சிவனுருவம் உள்ளதாக அமைக்கத் தக்கது. இது 5முகம் 4முகம் 3முகம் 2 முகம் 1 முகம் என்று ஐந்து வகைப்படும். முகலிங்கவழிபாடு எல்லா விருப்பப்பயனையும் தரவல்லது.

ஏகமுகலிங்கம் (ஒருமுகம்)

லிங்கத்தின் பூஜாபாகத்தில் முன்னால் மட்டுமே ஒருமுகத்தை உடையது ஏகமுக லிங்கம் எனப்படுவது ஆகும்.

த்விமுகலிங்கம் (இருமுகம்)

லிங்கத்தின் பூஜாபாகத்தில் முன்னாலும் பின்னாலும் ஆக இருமுகங்களை மட்டுமே உடையது த்விமுகலிங்கம் எனப்படுவது ஆகும்.

திரிமுகலிங்கம் (மூன்றுமுகம்)



லிங்கத்தின் பூஜாபாகத்தில் பின்புறத்தை மட்டும் தவிர்த்து, மற்ற மூன்று பக்கங்களில், திசைகளில்மட்டும்மூன்றுமுகங்களைமட்டுமே உடையது திரிமுகலிங்கம் எனப்படுவதாகும்.

சதுர்முகலிங்கம் (நான்குமுகம்)



லிங்கத்தின் பூஜாபாகத்தில் நான்கு திசைகளில் மட்டும் நான்குமுகங்களை உடையது சதுர்முகலிங்கம் எனப்படுவதாகும்.

பஞ்சமுகலிங்கம் (ஐந்துமுகம்)



லிங்கத்தின் பூஜாபாகத்தில் நான்குதிசை களிலும், நான்கு முகங்களையும், லிங்கத்தின் மேல்பாகத்திலோ அல்லது லிங்கத்தின் வட கிழக்கிலோ (ஈசானபாகத்திலோ)ஒருமுகத்தை யும் உடையதாகப் ஐந்துமுகங்களை உடையது பஞ்சமுகலிங்கம் எனப்படுவதாகும்.

முகலிங்கம் அதோ வக்ஷ்யே புக்திமுக்தி பல ப்ரதம் |
சதுர்முகம் தத் திரிமுகம் ஏகவக்த் ரயுதம் பவேத் |
யோச் சதாரா த்விபக்தா ஸா குண த்யாகாத் அதோ சிர: | (காமிகே 62ல்40)

மானுஷலிங்கவகைகள் (மனிதஉருவாரிப்புவகைகள்)

மானுஷம் எனப்படுகிற பௌருஷலிங்கபேதங்கள் அறுபத்துநான்கு வகை என்று ரௌரவோத்தரம் என்ற சைவாகமத்திலும், தொண்ணூற்றாறு வகையில் மகுடாகமத்திலும் கூறப்பட்டுள்ளது. விரிவுக்கு அங்கு கண்டு தெளிவுபெறலாம்.

லிங்கத்தின் உயரஅளவின் பகுப்புமுறைகள்



த்ரைராசிக லிங்க அமைப்புமுறை (9வது வகை)

க்ருத்வா நவாம்சம் லிங்கோச்சம் பந்த பந்த குணாம்சகம் |
ஷட் ஸப்தாஷ்ட நாஹம் து வ்ருத்தே (அ) ஷ்டாச்ரே யுகாச்ரகே ||
த்ரைராசிக மிதம் சாஸ்த்ரே ஸ்வஸ்திகம் து அதுநோச்யதே |

(பூர்வகாமிகே–62–33)

ஆயாமம் நவதா க்ருத்வா வ்ருத்தம் ஷட்பாகம் உச்யதே |
ஸப்தபாகம் அதா(அ)ஷ்டாச்ரம் துர்யச்ரம் வசுபாகிகம் |
த்ரைராசிகம் இதி ஞேயம் தனதான்ய சுகாவஹம் | (பூர்வகாரணேபடலம் 9ல்123)

லிங்கத்தை ஒன்பது பாகங்களாகச்செய்து, அதனால் பிரம்மபாகம் மூன்றம்சம், விஷ்ணுபாகம்மூன்றம்சம், சிவபாகம் மூன்றம்சங்களை உடையதாகவும், ஆனால் சுற்றளவைமாற்றி வட்டமான சிவபாகம் ஆறம்சச் சுற்றளவுள்ளதாகவும், எட்டுப்பட்டையான விஷ்ணுபாகம் எழம்சச் சுற்றளவுள்ளதாகவும், சதுரமான பிரம்மபாகம் எட்டம்சச் சுற்றளவுள்ளதாகவும் அமைப்பது த்ரைராசிகலிங்கம் எனப்படுவதாகும். இவ்வகை லிங்கம் நடக்கும் நிலையான யாநகலிங்கம் ஆகும்.

த்ரைராசிகம் து ஸர்வேஷாம் ஸர்வகாம ப்ரதம் மதம் | (காமிகே)

இந்தவகையில் லிங்கத்தின் மூன்று பாகங்களும் ஒவ்வொன்றும் வெவ்வேறு சுற்றளவு உடையதாகச் செய்யப்படும் லிங்க மாகும். சமகண்டலிங்கத்தின் உயரத்தை ஒன்பது பாகம் செய்து மேலே ருத்ரபாகத்தின் சுற்றளவு ஆறுபாகமும் நடுவே விஷ்ணு பாகத்தின் சுற்றளவு ஏழுபாகமும், அடியில் பிரம்மபாகத்தின் சுற்றளவு எட்டுபாகமும் இருத்தல் வேண்டும். இது திரைராசிகலிங்கம் எனப்படுவதாகும்.



பூஜித மானுஷ மூலலிங்கம்

ஸஹஸ்ரலிங்க அமைப்புமுறை



ஸஹஸ்ரலிங்கம் (மேற்குமுகம்)
20அடுக்கில் 1000 லிங்கம்

லிங்கத்தினுடைய ருத்ரபாகமான பூஜா பாகத்தை இருபத்தைந்து பாகங்களாக உயரத்தைப் பகுத்துக்கொண்டு அவற்றில், ஒருபகுதிக்கு நாற்பதுலிங்கங்கள் வீதம், மேலும் கீழுமாக ஆயிரம்லிங்கங்களை 25 சுற்றில் வரிசையாக முறையாக அமைப்பது ஸஹஸ்ரலிங்கம் எனப்படுவதாகும். (25X40= 1000) இவை அனைத்தும் பௌருஷலிங்கபேதங் களைச் சேர்ந்தவைகள். இவ்வாறு அமைக்கப் பெற்ற சிவலிங்கம்தான் சிறபக்கலைக்கே மூலமாக சிறப்பானதாக அமைந்தது. இத் தகையலிங்கஅளவுமுறைகள் பலவகையாகும் என்பதால் அவை நூலின்படி அறியத்தக்கவை யாகும்.

ஸஹஸ்ரலிங்கம்
திருவண்ணாமலை
(விசேஷஅமைப்பு)

ஸமகண்டே சிவாயாமே ருத்ரபாக விநிர்மிதே|
ஏகாதிகம் நவத்யம்சே விஷமாம்ச நிவேசிதம்|
ஸைகஸாஹஸ்ரலிங்காநாம் நவபாகோச்ச மேவ வா|
(காமிகே 62ல் 38-39)

ஸஹஸ்ரலிங்க அமைப்புமுறை. (ஆயிரம் லிங்ககுறிகள் உள்ள ஒருலிங்கம்)



ஸஹஸ்ரலிங்கம்
திருவண்ணாமலை
(கிழக்குமுகம்)

சிவலிங்கத்தின் பூஜாபாகத்தை, அதாவது மேலே சிவபாகமாகத் தெரிகின்றதான த்ருச்ய பாகத்தின் உயரத்தை, முதலில் இருபதுபாகங் களாகப் பகுத்துக் கொண்டு, இரண்டாவதாக அவற்றில் ஒருபகுதிக்கு ஒருபாகவட்டத்திற்கு ஐம்பதுலிங்கங்கள் வீதம் இருபத்தைந்து அடுக்குகளில் ஆயிரம் லிங்கங்களை (50X20= 1000) அமைப்பது, ஸஹஸ்ரலிங்கம். இவை அனைத்தும் பௌருஷலிங்க பேதங்களைச் சேர்ந்தவைகள். இவ்வாறு அமைக்கப்பெற்ற சிவலிங்கம்தான் சிற்பக்கலைக்கே மூலமாக சிறப்பானதாக அமைந்து விளங்குகிறது எனலாம். இதில் உள்ள ஆயிரமும் சிவாம்சவடிவம்

1000லிங்கம் 20வரிசையில்
திருவையாறு மேற்கு
முகலிங்கம்

மட்டுமே, நீள்வட்டபாணமாகவே கொண்டிருத்தல் முறை சிவபாகத்தில்மட்டுமே அமைக்கப் படுவதால் இம்முறையில் என்றும் இவைக்கு மற்றஇரு பாகங்களைச் செய்யக்கூடாது என்று அறியலாம்.

ஸஹஸ்ரலிங்கம்

ஆகமங்களிலும் காச்யபசில்பத்திலும் லிங்க வகைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இது ருத்ரபாகத்தில் ஆயிரம் லிங்கமுடையலிங்கம் ஸஹஸ்ரலிங்கம் எனப்படுவதாகும்.

11வரிசையில் 1001லிங்கம் உள்ள ஸஹஸ்ரலிங்கம்

1001லிங்க அமைப்பு விதிமுறை (ஆட்யலிங்கம்)

ருத்ரபாகத்தை பதினோரு பாகம்செயது, ஒவ்வொருபாகத்தின் சுற்றிலும் 91பாகம்செய்து அவைகளில் 91லிங்கவடிவங்களை அமைத்திட ஆயித்திஒருலிங்கம்ஆகும்.(91X11=1001)

ஆட்யாக்யஸ்ய ச லிங்கஸ்ய
ருத்ரபாகஸ்ய காரயேத் |
ஏகாதசாம்சம் உத்ஸேதம்
தேஷு சைகைக முத்தமம் |
ஏகோத்தர நவதியம்சம் தேஷு
லிங்காநி காரயேத் ||
தத் ஸங்கியாதாநி தல்லிங்கம்
பவேச் சைக ஸஹஸ்ரகம் |
ஸஹஸ்ரலிங்க மித் யுக்தம்
ஸர்வகாம ப்ரதம் ந்ருணாம் ||

(ஸித்தாந்தசேகரே & காலோத்தராகமே)

ஸஹஸ்ரலிங்கம்
திருவண்ணாமலை
கிழக்குமுகம்

அஷ்டோத்தரசதலிங்கம் (108லிங்கபாணம்)

சிவலிங்கத்தின்ருத்ரபாகமான திருச்யபாகமான வட்டப் பகுதியை சிரோவர்தனத்திற்குக் கீழே உள்ள பூஜாம்சமான உயரத்தை ஒன்பதாகப்பகுத்து, அவற்றில் ஒரே அளவில் ருத்ரபாகவடிவம் மட்டுமே உள்ளவாறு ஒவ்வொரு சுற்றிலும் பன்னிரண்டுலிங்கம் சுற்றிலும் ஒருவரிசையில் உள்ளவாறு அதே அளவு இடைவெளியுடனும்

நேருக்கு நேராக இல்லாது விஷமமாக வைத்து ஒன்பது வரிசையில் 9 X 12 = 108 நூற்று எட்டுலிங்கங்களையும் காணும் ருத்ரபாகப்பகுதியிலேயே உடைய ஒருலிங்கமே சதாஷ்டகலிங்கம் ஆகும்.



நாலுவரிசையில் 108லிங்கம் பௌருஷவகை

108லிங்க அமைப்பு விதிமுறை (சதாஷ்டகலிங்கம்)

ருத்ரபாகத்தின் உயரத்தை நான்குபாகம் செய்து, ஒவ்வொரு பாகசுற்றிலும், இருபத்திஏழு லிங்கங்களைச் செய்வதால் (27 X 4 = 108) நூற்றுஎட்டு லிங்கம் ஆகும். சிரோவர்த்தனத்தையும் கீழ்பாகத்தையும் மேல்பாகத் தையும் நீக்கிடவேண்டும். இதுவே தேவர்கள் பூஜித்த சுரேட்யலிங்கம் எனப் பெயருடையதாகும்.

சுரார்ச்சிதஸ்ய லிங்கஸ்ய ருத்ரபாகஸ்ய தைர்க்யகம் |
சதுர்பாகம் ப்ரகுர்வீத பாகேஷு ச சதுர்ஷ் வபி |
ஸப்தவிம்சதி லிங்காநி காரயேத் ச ப்ருதக் ப்ருதக் |
ஏவம் அஷ்டசதம் லிங்கம் ருத்ரபாகே பவந்தி ஹி |
அதோ பாகஸ்ய லிங்காநாம் குர்யால் லிங்காநி நோபரி |
லிங்கஸ்யோபரி பாகம் ச த்யக்த்வா லிங்காநி காரயேத் |
அஷ்டாதிக சதே நார்த்தம் யுக்தம் தத் சதலிங்ககம்| (சித்தாந்தசேகரம்)

ஸ்தூலலிங்க அமைப்புமுறை (அடி/நடு/முனை/பெருத்தது) (ஸ்தூலம்=பருமனானது)

லிங்கபானத்தின் முழுஉயரத்தையும் 21பங்குசெய்து, கீழிருந்து மூன்றுபாகத்திற்கும் எட்டுபங்கு, ஏழுபங்கு, ஆறுபங்கு என்று இருப்பதாகும். இது அடிபருத்து நுனிசிறுத்துக் காணப்படுவது. சிற்பரத்னம் சிற்பசாஸ்திரமும் 1. அடிபாகம்பருத்தது, 2. நடுபாகம் பருத்தது 3. உச்சிபாகம்பருத்தது, என்று மூன்றுவகையாகக் கூறுகின்றன.

சதாஷ்டகலிங்கம்

இந்த லிங்கவகையில் சமகண்டலிங்கவகையின் ருத்ரபாகத்தைப் பகுத்து நூற்றெட்டுலிங்கங்களை சிரோவர்த்தனத்திற்குக்கீழே அமைக்கப்பட்டது **சதாஷ்டகலிங்கம் / சதலிங்கம்** எனப்படுவதாகும்.

சிகராக்ரலிங்கம்

மலையின் உச்சிமுகடுவடிவில் விளங்குவது கிரிலிங்கம் ஆகும். இதனை சிருங்கலிங்கம் என்றும் கூறுவர், காவிரிகரையில் கொடுமுடித்திருத்தலமூலநாதர், மகுடேச்வரலிங்கம் ஆகும்.

இஷ்டகாலிங்கம்

எளியமுறையில் கிராமக்குடில்களில் சுட்டமண் செங்கற்களால் அமைந்தலிங்கம். செங்கற்களால் கட்டிசுட்டுப் பண்படுத்திய லிங்கம் இஷ்டகாலிங்கம். இஷ்டகா என்ற சொல்லுக்கு சுட்டசெங்கல் என்பது பொருளாகும்.

மண்ணாலான பார்த்திவலிங்கம்

உத்ருதலிங்கம் (பாஷாண லிங்கம்) (எடுப்புலிங்கம்)

மஹாநதீ ஸமுத்பூதம் ஸித்த க்ஷேத்ராதி ஸம்பவம் |
பாஷாணம் பரயா பக்த்யா லிங்கவத் பூஜயேத் ஸதா || (சூக்ஷ்மாகமம்)

வற்றாத பெரிய ஜீவந்திகளிலிருந்து அல்லது பிரஸித்திபெற்ற விசேஷபுராண பெருமை யுள்ள ஸித்தக்ஷேத்ரத்திலிருந்து தோன்றி யதும், உயர்வான பக்தியால் அங்கிருந்து எடுத்துவரப்பட்டதுமான குழவிபோன்ற கருங்கற்களையும் எப்பொழுதும் லிங்கத்தைப் போல ஸ்தாபித்து பூஜைசெய்யலாம் என்று சூக்ஷ்மாகமம் கூறுகிறது.

நதியில்கிடைத்த பாணலிங்கம்

நக்ஷத்திரலிங்கம்

ஒருஇடத்திலேயே இருபத்திஏழு லிங்ககங்களைக் குழுவாகநிறுவுதல் நக்ஷத்திரலிங்கம் எனப்படும். இந்த அமைப்பு சிலகேயிலில் உள்ளது.

ஆகம லிங்கங்கள்

ஒரே இடத்திலேயே இருபத்திஎட்டு லிங்கங்களைக் குழுவாக நிறுவுதல் சைவாகம சித்தாந்த எண்ணிக்கையில் ஆகமநூல்வடிவில் அமைப்பதாகும் இவ்வகையில் திருமுதுகுன்றம் எனும் விருத்தாசலம் சிவாலயத்தில் காணலாம்.

ஸ்ரீமன் மகுடாகமம் கூறும் 96 லிங்கப்பெயர்கள்

1. ஸமகண்டலிங்கம்
2. ஆஸ்தாபனலிங்கம்
3. ஸம்ஸ்தாபனலிங்கம் (ஸ்தாபிதம்)
4. யோநிலிங்கம் (பகலிங்கம்)
5. கணலிங்கம்
6. கணாதிபலிங்கம்
7. வர்ணோத்கடலிங்கம்
8. விகடலிங்கம்
9. நிச்வாஸலிங்கம்
10. பலலிங்கம்
11. மக்னலிங்கம்
12. சக்ரலிங்கம்
13. பாஸ்வரலிங்கம்
14. மூலஸ்தூலலிங்கம் (ஸ்தூலமூல)
15. மத்யஸ்தூலலிங்கம்
16. அக்ரஸ்தூலலிங்கம் (ஸ்தூலாக்ரம்)
17. அஸ்தூலலிங்கம்
18. முகலிங்கம் (வக்த்ரலிங்கம்)
19. முகநிஷ்களலிங்கம்
20. டங்கலிங்கம் (விடங்கம்)
21. மகுடலிங்கம் (மாகுடம்)
22. ஸ்நிக்தலிங்கம்
23. ஸ்தூலலிங்கம்
24. ப்ரகீர்ணகலிங்கம்
25. சண்டலிங்கம்
26. விக்ராந்தலிங்கம்
27. ஸௌபத்ரலிங்கம் (சுபத்ரகம்)
28. சிவலிங்கம்
29. வீரலிங்கம் (க்ஷீரலிங்கம்)
30. வீரவிபுலலிங்கம் (விபுலம்)
31. சாச்வதலிங்கம் (ஸ்திரலிங்கம்)
32. பாவனலிங்கம் (பவித்ரலிங்கம்) (அக்னிலிங்கம்) (அனலகம்)
33. நிம்நோந்நதலிங்கம்
34. ஸர்கபேஷஜலிங்கம்
35. குக்குடஸாரலிங்கம் (அண்டலிங்கம்)
36. வியாக்யாதலிங்கம் (விக்யாதலிங்கம்)
37. சுபத்ரலிங்கம் (பத்ரலிங்கம்)
38. விக்ருதலிங்கம்
39. சிருங்கலிங்கம் (ஸிதலிங்கம்)
40. சூலலிங்கம் (த்ரிசிகலிங்கம்)
41. பந்தனலிங்கம் (சூலபந்தலிங்கம்)
42. ஸ்தம்பலிங்கம் (தண்டாகாரலிங்கம்)
43. ராசிலிங்கம்
44. ஆர்யலிங்கம் (சூரியலிங்கம்)
45. அமலீக்ருதலிங்கம்
46. லிப்தலிங்கம்
47. ஆசேகரலிங்கம் (ஆலோகலிங்கம்)
48. மங்களலிங்கம்
49. விவிதலிங்கம்
50. காந்திலிங்கம் (நீலபர்வத காந்திலிங்கம்)
51. குலப்ரம்ம லிங்கம் (குசேகரம்)
52. ப்ரபுலிங்கம் (ஸ்வாமிலிங்கம்)
53. ப்ரதிலிங்கம் (லாபலிங்கம்)
54. லாபலிங்கம் (11பட்டையில்)
55. தப்தலிங்கம்
56. யவலிங்கம் (நெல்வகைஉருவம்)
57. சுமத்யகலிங்கம் (தர்மமத்யஸ்தலிங்கம்)
58. பிபீலிகசுலிங்கம் (பிபீலிகாக்யம்)
59. பல்லவலிங்கம் (சுபர்ணகம்)

60. நாகலிங்கம் (ஸர்பலிங்கம்)
61. பஞ்சாக்ரலிங்கம்
62. பார்ச்வாக்ரலிங்கம் (குந்தபார்ச்வலிங்கம்)
63. மூலாக்ரலிங்கம்
64. மத்யாக்ரலிங்கம் (மத்யமாச்ரகலிங்கம்)
65. ஊர்த்வாக்ரலிங்கம் (ஊர்த்வாங்ககம்)
66. சதுரச்ரலிங்கம் (வேதாச்ரகம்) சமசதுரம்
67. ஆயதாச்ரலிங்கம் (ஆயதாக்ரம்) நீள்சதுரம்
68. ஆயதவிருத்தலிங்கம் (நீண்டவட்டம்)
69. அரவிந்தலிங்கம் (பத்மகம் / கமலலிங்கம்)
70. பஞ்சகோஷ்டலிங்கம் (பஞ்சகோஷ்டகம்)
71. மந்தலிங்கம் (ஸௌரிலிங்கம்) (சனைச்சரன் பூஜித்தது)
72. கைடகலிங்கம் (கீடகேட்யம்) (புழுக்கள் பூசித்தது)
73. ஸரலிங்கம் (மாலாலிங்கம்)
74. ஸுப்ருலிங்கம்
75. விலம்பிதலிங்கம்
76. ஸுவர்ணலிங்கம் (ஹைமம்) (கனகலிங்கம்) ஸௌவர்ணகம்
77. தாம்ரவர்ணாப லிங்கம் (தாமிரஉலோகநிறம்)
78. மஹேசலிங்கம் (மாஹேசம்)
79. சிவலிங்கம்
80. சந்திரலிங்கம் (ஸோமலிங்கம்) (ஸௌம்யலிங்கம்)
81. சரலிங்கம் (ஸாயகலிங்கம்) (அம்பு/கணை வடிவம்)
82. சாச்வதலிங்கம் (அக்ஷயலிங்கம்)
83. ஷட்தாராலிங்கம் (6பட்டைலிங்கம்)
84. நவதாராலிங்கம் (9பட்டைலிங்கம்)
85. ஷோடசதாராலிங்கம் (16பட்டைலிங்கம்)
86. சுப்ரலிங்கம் (சுவேதலிங்கம்) (வெள்ளை)
87. சிகரலிங்கம் (மலைமுகடுஉச்சிலிங்கம்)
88. சிகராக்ரலிங்கம்
89. மாணிக்கலிங்கம் (மணிலிங்கம்) (அருணமணிலிங்கம்)
90. சிலாலிங்கம் (சைலலிங்கம்)
91. சிகாக்ரலிங்கம் (உச்சிலிங்கம்)
92. ஸஹஸ்ரதாரா லிங்கம் (1000பட்டையுள்ளது)
93. சதாஷ்டதாராலிங்கம் (108 பட்டையுள்ளது)
94. அச்வத்தலிங்கம் (அரசஇலை)
95. மாஷலிங்கம் (உளுந்துநிறலிங்கம்)
96. லவலிங்கம் (யவலிங்கம்) சிறியது
97. ஸ்படிகலிங்கம் (வெண்பளிங்கு) (ஸ்பாடிகலிங்கம்)
98. நாகரலிங்கம் (ஆஸீநலிங்கம்) (4பட்டை)
99. திராவிடலிங்கம் (8பட்டை)
100. வேஸரலிங்கம் (வட்டம்) (முழுவதும்விருத்தம்)
101. வர்தமானலிங்கம்
102. சிவாதிக்யலிங்கம் (சிவாம்சமட்டும்அதிகம்)
103. சமலிங்கம் (3பாகமும்சமஅளவுள்ளது)
104. த்ரைராசிகலிங்கம்
105. ஸ்வஸ்திகலிங்கம்

மானுஷலிங்கவகையின் உயரஅளவுப் பகுப்புமுறைகள்

வ. எண்.	லிங்கவகைப்பெயர்	வகை	பாணத்தின் பங்கு	பிரம்ம பாகம்	
				பங்கு	பூமிக்குள் அடிப்பகுதி
1.	ஸமலிங்கம்/சமகண்டம்	1வது	24பங்கில்	8	சதுரம்
	(உயரத்தை 3-பங்கு)	2வது	27பங்கில்	9	சதுரம்
2,	வர்த்தமான லிங்கம்	1வது	24பங்கு	7	சதுரம்
	நான்குவகைகள்	2வது	21பங்கு	6	சதுரம்
	(ஸ்திதலிங்கம்)	3வது	18பங்கு	5	சதுரம்
	(காரணாகமம்-9ல்)	4வது	15பங்கு	4	சதுரம்
3.	சைவாதிகலிங்கம்	1வது	10பங்கு	3	4பட்டை
	(சிவாதிகலிங்கம்)	2வது	13பங்கு	4	சதுரம்
	(நான்குவகைகள்)	3வது	16பங்கு	5	சதுரம்
	(ஆஸிநலிங்கம்)	4வது	19பங்கு	6	சதுரம்
	(காமிகாகமம்	5வது	22பங்கு	7	சதுரம்
	படலம்62ல்)	6வது	23பங்கு	7	4சதுரம்
4.	ஸ்வஸ்திகலிங்கம்		9பங்கு	2	சதுரம்
5.	ஸர்வதோபத்ர லிங்கம்		24பங்கு	8	விருத்தம்
6.	ஸார்வதேசிக லிங்கம்		12பங்கு	5	விருத்தம்
7.	தாராலிங்கம்-4பட்டை	1வது	24பங்கு	8	சதுரம்
8.	தாராலிங்கம்-8பட்டை	2வது	24பங்கு	8	சதுரம்
9.	தாராலிங்கம்-16பட்டை	3வது	24பங்கு	8	சதுரம்
10.	தாராலிங்கவகைகள்	4வது	24பங்கு	8	சதுரம்
11.	ஏகமுகலிங்கம் ஒருமுகலிங்கம்	1வது	24 பங்கு	8	சதுரம்

மானுஷலிங்கவகையின் உயரஅளவுப் பகுப்புமுறைகள்

விஷ்ணு பாகம்		ருத்ர பாகம்		சான்று
பங்கு	ஆவுடை நடுப்பகுதி	பங்கு	சிவபாகம் உச்சிமுகம்	நூல் பகுதி
8 9	8பட்டை 8பட்டை	8 9	விருத்தம்	காமிகம்–62ல்
8 7 6 5	8பட்டை 8பட்டை 8பட்டை 8பட்டை	9 8 7 6	விருத்தம் விருத்தம் விருத்தம் வட்டம்	காமிகே(மகுடே) காமிகே காரணே காரணே
3 4 5 6 7 8	8பட்டை 8பட்டை 8பட்டை 8பட்டை 8பட்டை 8பட்டை	4 5 6 7 8 8	வட்டம் விருத்தம் விருத்தம் விருத்தம் விருத்தம் வட்டம்	காரணே காரணே காரணே காரணே காரணே மகுடே
3	8பட்டை	4	விருத்தம்	காமிகே–62ல்
8	விருத்தம்	8	விருத்தம்	காமிகம்
4	விருத்தம்	3	விருத்தம்	காமிகம்
8	சதுரம்	8	சதுரம்	காரணே–9ல்
8	8 பட்டை	8	8பட்டை	காரணே
8	8 பட்டை	8	16பட்டை	காரணே
8	8 பட்டை	8	32பட்டை 64பட்டை	காரணே
8	8 பட்டை	8ல்	வட்டத்தில் ஒருமுகம் கழுத்துவரை	

மானுஷலிங்கவகையின் உயரஅளவுப் பகுப்புமுறைகள்

வ. எண்.	லிங்கப்பெயர்	வகை	பாணத்தின் பங்கு	பிரம்ம பாகம்	
				பங்கு	பூமிக்குள் அடிப்பகுதி
12.	த்விமுகலிங்கம் முன்னும்–பின்னும்	2வது	24 பங்கில்	8	சதுரம்
13.	திரிமுகலிங்கம் மும்முகம் (பின்புறம் மட்டும் நீங்குக)	3வது	24 பங்கில்	8	சதுரம்
14.	சதுர்முகலிங்கம் நான்குமுகம் (4–திசைகளில்4முகம்)	3வது	24 பங்கில்	8	சதுரம்
15.	பஞ்சமுகலிங்கம் (4திசையிலும் மேலேயும்) (5முகலிங்கம்)	5வது	24 பங்கில்	8	சதுரம்
16.	த்ரைராசிகலிங்கம் த்ரிபாகிகம் (காமிகே) (யாநலிங்கம்)	1ம் வகை	21பங்கு	8	சதுரம்
17.	முகலிங்கம் 4வகை கழுத்த 2கை தோள்கள் மார்புடைய கோடுவரை	4 வகை	62பங்கு	8	சதுரம்
18.	ஸஹஸ்ரலிங்கம் ஏகஸாஹஸ்ரலிங்கம்	1001ல்1	11பாகம் ருத்ரபாகம் 91அம்சம் விஷமாம்சம்	8	சதுரம்

மானுஷலிங்கவகையின் உயரஅளவுப் பகுப்புமுறைகள்

விஷ்ணு பாகம்		ருத்ர பாகம்		சான்று
பங்கு	ஆவுடை நடுப்பகுதி	பங்கு	சிவபாகம் உச்சிமுகம்	நூல் பகுதி
8	8 பட்டை	8ல்	வட்டத்தில் இருமுகம்	
8	8 பட்டை	8ல்	3 முகம்	
8	8 பட்டை	8ல்	4 முகம்	
8	8 பட்டை	8ல்	5முகம் 4+1முகம்	
7	8பட்டை	6பாகம்	விருத்தம் உயரம் சுற்றளவில்	காரணே 9ல்123ல் காமிகே
	8 பட்டை	131/2அங்	ஒருமுகம்	காரணே 9ல்134
8	8 பட்டை	8 பங்கில்	91லிங்கசுற்று 11அடுக்கு	காமிகம்62ல் 91x11x1001

பிண்டிகை (ஆவுடையாள்)
(பீடஉருவஇலக்கணம்)

பிண்டிகையின் சொல்விளக்கம்

யயா வ்யாமோஹிதம் ஸர்வம் ஜகத் ஸ்தாவர ஜங்கமம் |
சக்தி: கிரியா ச யா சக்ர பிண்டிகா ஸைவ கீர்த்திதா ||

(மோஹசூரோத்தராகமம்)

இந்த அசையும்பொருள் அசையாப்பொருள் வடிவாகிய உலகமனைத்தும் எந்த ஒரு ஆற்றல் சக்தியாக, கிரியாசக்தியாக படைத்திடும் பரபிந்துசக்தியாக உள்ளதோ, அதுவே லிங்கத்தில் உள்ள **பிண்டிகை** என்று கூறப்பட்டது, இந்திரனே! என்கிறது ஆகமம்.

லிங்கபிண்டிகையின் அமைப்புமுறை

பிரம்மவிஷ்ணுபாகங்களின் உயரத்தை எட்டாகப் பகுத்து, கீழே மூன்று பாகத்தை விட்டு, ஐந்துபாக உயரத்தில் பீடம் அமைத்தல்முறை. அல்லது இருபாக உயரத்தை பதினாறுபங்கு செய்து, கீழே ஏழுபாகத்தை விட்டு, மேலே ஒன்பதுபங்கு பிண்டிகையின் உயரமாகக் கொள்ளுதல் முறை.

லிங்கத்தின் அகலத்திலிருந்து, லிங்கத்தின் சுற்றளவைக் கணக்கிட்டு, சுற்றளவிற்குச் சமமாக, லிங்கபீடத்தின் அகலத்தைக் கொள்ள வேண்டும். இது வட்டவடிவமான பீடத்தின் விட்டமாகும். விட்டஅளவில் 5ல்4பங்கு பீடத்தின் உயரமாகும். அவ்வுயரத்தில்



தயாரித்த சதுரபிண்டிகை (லிங்கபீடம்)

பாதிகோமுகையின் களத்தியாகும். அதாவது நீட்சி (நீவ்ரம் எனப்படுவதாகும்) இது பீடத்தைச்செய்வதற்கேற்ற பொதுமுறையாகும். வேறுசில சிறப்பான முறைகளும் கூறப்பட்டுள்ளன.

லிங்கஉயரத்திற்குச் சமமாக லிங்கபீடத்தின் அகலமிருத்தல் ஒருவகையாகும். லிங்கபூஜாம்ச உயரத்திற்குச் சமமாக பீடத்தின் அகலம்கொள்வது மற்றொருவகை ஆகும். இவ்விரண்டு அளவுக்குள்ள வித்தியாஸத்தை எட்டுபாகங்களாக்கி, ஒன்பது விதமாகவும் பீடஅகலத்தை கொள்ளலாம். லிங்கபூஜாம்சத்தின் சுற்றளவிற்குச் சமமாகவோ அல்லது முக்கால் பங்கினதாகவோ பீடத்தின் அகலத்தை அமைப்பதும் ஒருமுறையாகும். கர்பக்கிருஹத்தின் உள்அகலத்தில் பாதி அல்லது கால்பங்கு பீடத்தின் அகலமாகவும் இருக்கலாம்.

பீடத்தின் உயரமாவது, பீடத்தின் அகலத்தில் மூன்றில் இரண்டுபங்கு உயரம் உடையது ஒருவகை. அதே பீடஅகலத்தில் அரைபங்கு உயரமுடையது மற்றொருவகை. இவ்விருஅளவுகளின் வித்தியாசத்தை எட்டுபாகங்கள் செய்து ஒன்பது விதமாக பீடஉயரத்தைக் கொள்வதும் சாஸ்திரமுறையாகும். கோமுகஅமைப்பாவது, லிங்கபீடமானது வட்டமாகவோ சதுரமாகவோ இருத்தல் வேண்டும். மேற்பகுதியில் கோமுகத்தை அமைத்தல் வேண்டும். இதுபொதுவாக லிங்க அகலத்திற்குச் சமஅளவுடையதாக இருத்தல் நன்றாம். பீடஅகலத்தில் மூன்றில் ஒருபங்கு கோமுகையின் நீட்டிப்புக் களத்தியாகக் கொள்வதும் ஒருமுறை. கோமுகத்தின் அடிஅகலம், அதன்நீளத்திற்கு சமமாகவும், அதன் நுணிஅகலமானது, அடிஅகலத்தில் மூன்றில்ஒருபங்காகவும் இருத்தல்வேண்டும். பீடத்தின்மேல் மட்டத்தில் அபிஷேக நீர்செல்வதற்கு ஏற்றவாறு கரைவோடுகூடிய நீர்தாரையையும் அமைத்தல் வேண்டும்.

லிங்கபீடத்தின் இலக்கணம்

லிங்க நாஹ ஸம பீட விஸ்தரம் –
விஸ்த்ருதஸ்ய சர வேத துங்ககம் |
விஸ்த்ருதார்த்த ஸம கோ முகாந்தகம் –
கோமுகாந்த ஸமகண்ட நாஹகம் ||

என்ற வாக்கின்படி லிங்கத்தின் சுற்றளவிற்கு ஸமமாக பீட அகலமும், அகலத்தின் நான்கு அல்லது ஐந்து பங்கு உயரமும், அகலத்தின் பாதியளவில் கோமுகையின் நாளநீளமும், கோமுகம் வரையிலாக ஸமகண்ட சமஅளவில் முப்பகுதியுள்ளது சிவலிங்கஅளவாகும்.

லிங்கங்களின்பீடத்தின் தத்வரூபம்

பிண்டிகை எனப்படுகிற கோமுகையே, ஸதாசிவருடைய சக்தியாகிய மனோன்மனீ எனப்படுபவள் ஆவாள். ஜோதிஸ்தம்பமாகஉள்ள லிங்கபாணமே ஸதாசிவர் என்பவராகிறார். இவ்விருவரின் அதாவது ஜகன்மாதா, ஜகத்பிதாக்களின் ஸங்கமித்தலைச் செய்வதே சிவப்ரதிஷ்டை என்று ஸ்ரீமத்காமிகாகமம் விளக்குகிறது. இதனைத் தெரிவிக்கும் ஆகம சான்று இதுவே,

பிண்டிகாயாம் உமாதேவீ லிங்கே ஸ்யாத் ச ஸதாசிவ: |
த்யோர் யக் க்ரியதே யோக: ஸா ப்ரதிஷ்டேதி கத்யதே || (காமிகாகமம்)

ஸ்த்ரீசிலாம் து பரிக்ராஹ்ய பீடம் குர்யாத் விசேஷத:
லிங்க விஸ்தார மானேந த்ரிகுணம் பீட விஸ்த்ருதம்
கர்ணாத் த்விகுண மேவம் வா த்ரிகுணம் பீடவிஸ்த்ருதம்
கர்ணஸ்ய த்விகுணார்தம் வா லிங்கதைர்க் யஸமம் து வா
கர்பகேஹும் த்ரிதா பஜ்ய பாகைகம் பீட விஸ்த்ருதம்
லிங்கமானேந ஹர்ம்யம் ஸ்யாத் லிங்கமானேந பிண்டிகா

பெண்கல்லினால் லிங்கபீடத்தை சிறப்பாகச் செய்யவேண்டும். லிங்க அகலஅளவின் மூன்றுமடங்கு பீடஅகலம் ஆகும். கர்ணசூத்ரத்திற்கு இருமடங்கு அல்லது மும்மடங்கு பீடஅகலம். மேலும், லிங்கநீளத்திற்கு சமஅகலம், அல்லது கருவறைஅகலத்தின் மூன்றில் ஒருபங்கு பீடஅகலமாகும்.

லிங்கபீடத்தின் பெருமை

சிவலிங்கமானது, ஆவுடையாராகிய பீடத்தை ஊடுவிச்சென்றிருப்பதும், லிங்கத்தின் கீழ்பகுதியில் ஆவுடையார் என்பது சூழ்ந்து. அடங்கியிருப்பதும், பரவெளியாகிய சிவம் அல்லது நாதம் என்பது சக்தி அல்லது பிந்துவைஊடுருவிவியாபித்து, ஒன்றையொன்று பிரியாமல் சேர்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. ஆவுடையாரின்மேல்பாகத்தில்வெளியே

லிங்கத்தில் விளங்கும் பிண்டிகை



நீண்டிருக்கும் சிவசக்தியானது அதாவது கோமுகையானது உயிர்களுக்குச் செய்யும் கிருபையைக் குறிக்கின்றது. ஆதலால்தான் கோமுகத்தின் வழியாகப்பாயும் அபிஷேகதீர்த்தங்களை, இறைவனது அருள்சுரப்பதாகப் பாவித்து, அதனைக் கைகளினால் ஏந்தி தலைமீது தெளித்துக்கொண்டு புனிதராகி ஆனந்திக்கின்றனர். அருள்தரும் பீடசக்தியாகிய இந்த சிவபிண்டிகையின்மீது எவ்வகையான பொருளையும் வைப்பது கூடாது. இதில் பொருள்வைப்பது பெரும் டாவச்செயலாகும். இவ்வாறு லிங்கபீடசக்தி என்றும் போற்றத்தக்க அருட்சக்தியாகும் என்பது இங்கு அறியத்தக்கது ஆகிறது.

அரூபியாகிற இறைவன் மற்ற உருவங்கள்எல்லாம், தோன்றுவதற்கும் இறுதியில் அவை தனக்குள் ஒடுங்குவதற்குமாகவே ஒரு திருவுருவத்தைக் கொள்ள வேண்டியவராகிறார். அந்த திருவுருவந்தான் ரூபமாகிற (அருவுருவமாகிற) சதாசிவமாகிற சிவலிங்கமாகும். மூவுலகத் தாய்தந்தையரின் ஒருமித்தவடிவம் சிவலிங்கம் என்பது முடிந்த முடிவாகும்.

கோமுகையின் நீட்டிப்புமுறை (களத்திமுறை)

பிண்டிகையின் நீர்விழும் வெளிப்புற நீட்டிப்பு அளவானது, அரைபங்கு அல்லது அதன் முக்கால்பங்கு அல்லது ஸமமான பங்கு மீதமுள்ளவை நிர்கமம் என்கிற களத்தி (நீட்சி) ஆகும். அதன் நாளத்தின் அடிப்பகுதிஅளவுக்கு முனைப்பகுதியின் அகலஅளவு எட்டில் ஒருபங்கு குறைந்ததாக முதலாவதான பத்மபீடத்தில் இருந்திடவேண்டும்.



பிண்டிகையின் வடிவவகைகள்

இத்தகைய பீடங்களைச் சமசதுரமாகவோ, யோனி (அரச இலை) வடிவமாகவோ, அர்த்த சந்திராகாரம் எனும் அரைவட்ட நிலாவடிவிலோ, திரிபுராகார மாகிய முக்கோண வடிவ மாகவோ, அல்லது சமவட்டமான பரபிந்துவடிவ மாகவோ, பஞ்ச

தத்வாத்மகமான ஐங்கோண வடிவமாகவோ, நூல்படி செய்திடலாம். ஆனால் பீடத்தை நீண்டவட்டமாகச் செய்வது, கூடாதுஆகும். இதனையே, வட்டம், சதுரம், அஷ்டாச்ரம் ஷோடசாச்ரம் என்று நான்கு வகையில் சித்தாந்தசேகரம் நூல் கூறியுள்ளது.

பாகார்தம் தத்த்ரிபாதம் வா ஸமம் வா சேஷநிர்கமம்
மூலாதஷ்டாம் ச மக்ரே து ஹீநம் ஸ்யாத் பத்மபீடகே
ஸர்வேஷாமேவ பீடாநாம் உபாநாத் பீடவிஸ்த்தரம்
பீடிகாலக்ஷணம் ப்ரோக்தம் பாதசைலவிதிம் ச்ருணு 11 (காரணே9)

மேலும் அந்தணர்களுக்கு எட்டுபட்டைபீடமும் அரசருக்கு ஆறுபட்டைபீடமும், வைச்யருக்கு நான்கு பட்டையாயும், சூத்திருக்கு வட்டமான பீடமும் ஏற்றதாகும் எல்லா ஜாதியினருக்கும் சுற்றிலும் சமவட்டமானதாகும் என்று ரௌரவாகமம் கூறுகிறது.

பிராமணாநாம்ச வஸ்வச்ரம் க்ஷத்ரியஸ்ய ஷடச்ரகம்
வைச்யஸ்ய சதுரச்ரம் ஸ்யாத் சூத்ரஸ்ய ஸ்யாத்து வ்ருத்தகம்
ஸர்வ ஜாதி ப்ரகர்த்தவ்யம் பிருத்தபீடம் ஸமந்தத (ரௌரவாகமே)

பத்மபீடஅமைப்புமுறை (5ல்1)

ஆவுடையார் எனும் பிண்டிகையின் உயரத்தை விகாராம்சத்தில் பகுத்து, அதாவது 16பங்கில் பகுத்து, அதில் கீழிருந்து, **கீழ்பட்டிகை** இரண்டுபங்கும், **பத்மதளபிண்டம்** ஐந்துபங்கும், **கண்டவட்டம்** இரண்டுபங்கும், **மேல்பத்மதளம்** நான்குபங்கும், அதற்குமேலே உள்ளதான பட்டிகை இரண்டுபங்கும், நெய்தண்ணீர் செல்லும் **கிருதவா ரிணீ** என்பது ஒருபங்கும் உடையதாக **பிண்டிகையை** அமைப்பது முறை. என்றுமே பீடத்தின்அகலத்தில், மூன்றில் ஒரு பங்கு நாளத்தின்



பத்மபீடம்

நீர்விழும் தண்டுப்பகுதியின், வெளியே நீட்டிப்பு அளவு, அதாவது கோமுகையின் களத்தி இருக்கவேண்டும். அதற்கு சமமானதாக அடிஅகலம், அதன் மூன்றில் ஒருபாகம் முனையாகும். அடியின் எட்டில் ஒருபாகம், முனையில் குறைவுஉள்ளது நாளம். ஆவுடையார் அல்லது லிங்ககோமுகை எனப்படுகிறதான பிண்டிகையானது, வடக்கில், நீர்வெளியேறும்வழி உள்ளவாறு வடக்கைநோக்கியபடியே இருக்கவேண்டியதாகும். இதன் நடுவில் பள்ளம் (குளை) முறையே மூன்றில் ஒருபாகஅளவில் வரவரகுறுகியதாக அமைந்திட வேண்டும். இவ்விதமாக மேலும் கீழும் தாமரை இதழ்களுடனுள்ளது பத்மபீடம் எனப்படுவதாகும். இதனைக்கூறும்ஆகம பத்மபீடஅமைப்புச்சான்று

பீடோத்ஸேதம் து யன்மானம் விகாராம்சேந பாஜயேத் |
பக்ஷாம்சம் பட்டிகா ப்ரோக்தா பாணாம்சம் பத்மபிண்டகம் ||
அம்ச த்வயேந வ்ருத்தம் ஸ்யாத் வேதாம்சம் சோர்த்வபத்மகம் |
தஸ்யோர்த்வே பட்டிகா த்வாப்யா மம்சேந க்ருதவாரிணீ |
பீடதார த்ரிபாகைகம் நாள நிர்கமம் உச்யதே |
தத்ஸமம் மூல விஸ்தாரம் தத் த்ரிபாகைக மக்ரத: |
உத்தரே ஜலமார்க்கம் ஸ்யாத் ஸோமஸ் யாபிமுகம் பவேத் |
மத்யே காதம் த்ரிபாகைகம் க்ரமேண க்ருசகா பவேத் |
ஏவம் து பத்மபீடம் ஸ்யாத் பத்ரபீடம் அதோ(உ)ச்யதே ||

(பூ.காரணம் 9ல் 146–150)



பத்மபீடம்

பித்மபீடத்தில் இரண்டாம்வகை

ஏகவிம்சதி பாகே(அ)பி பாகைப் பாதுக மூர்த்வத: |
பஞ்சபிப் பங்கஜம் கம்பஸ் த்வேகேநோர்த்வம் த்ரிபாகத: |
கர்ணஸ் த்வேகேந கம்பஸ் ஸ்யாத் பூதாம்சை ரூர்த்வபங்கஜம்|
த்வாப்யாம் பங்க்திர் பவேத் ஊர்த்வே க்ருதவாரீ ஏகபாகத:|

பத்ரபீட வடிவமைப்புமுறை (5ல்2)

பீடத்தின் உயரத்தை பதினாறுபங்கு செய்து, அதில் கீழிருந்து மேல்வரையில் ஒருபங்கு பாதுகா உயரம் (கீழ்பட்டை/கீழ்பட்டி) அதன்மேல் ஜகதீ 4பங்குஉயரம், அதன் மேல் விருத்தப்பகுதி மூன்றுபங்கு, பட்டிகை ஒருபங்கு, கர்ணம் (கண்டவர்க்கம்) மூன்றுபங்கு, பட்டிகா ஒருபங்கு அதன்மேல் மஹாபட்டி இரண்டுபங்கு, அதன்மேல் கிருதவாரி என்பது ஒருபங்கு என்று பதினாறு பங்கினால் அமைத்திடவேண்டும். இவ்வாறு அமைப்புடையது அனைத்துவகை லிங்கங்களுக்கும்ஏற்றதான பத்ரபீடம் எனப்படுவதாகும், சிறந்தவகை லிங்கபிண்டிகையான இதற்கான ஆகமசான்று,

பூர்வவத் ஷோடசாம்சேந பீடோத்ஸேதம் பஜேத் தத |
வ்யோமாம்சம் பாதுகோத்ஸேதம் வேதாம்சம் ஜகதீ பவேத் |
அக்னியம்சம் விருத்த மித்யுக்தம் பாகைகேன து பட்டிகா |
குணாம்சம் கர்ணமித்யுக்தம் பாகைகேந து பட்டிகா |
மஹாபட்டி த்வயாம்சேந கருதவாரி ததாம்சகம் |
ஏவம் ஸ்யாத் பத்ரபீடம் ஸர்வலிங்கேஷு யோக்யகம் |

(பூர்வகாரணே 9ல்250 – 253)



பத்ரபீடம்



விஜயபத்ரபீடம்

விஜயபீட வடிவமைப்புமுறை (5ல்3)

பீடத்தின் உயரத்தை இருபத்திஓர் பங்குசெய்து, அதில் கீழிருந்து மேல்வரையில் முறையே, பாதுகா ஒருபங்கு, ஜகதீ நான்குபங்கு, கர்ணம் ஒருபங்கு, பத்மம் ஒருபங்கு, தத்கும்பம் மூன்றுபங்கு, பத்மம் ஒருபங்கு, கம்பம் ஒருபங்கு, கர்ணம் இரண்டுபங்கு, கம்பம் ஒருபங்கு, பத்மம் ஒருபங்கு, மஹாபட்டிகா இரண்டுபங்கு, பத்மம் ஒருபங்கு, பட்டிகா ஒருபங்கு, கிருதவாரிணீ ஒருபங்கு என்று பதினான்கு அடுக்குவரி வர்க்கங்களுடன் அமைக்கப்படுவது விஜயபீடம் என்பதாகும். இதற்கான ஆகமசான்று,

ஏகவிம்சதி பாகேந பீடோத்ஸேதம் விபாஜயேத் |
அம்சேந பாதுகாம் குர்யாத் சதுர்தா ஜகதீம் குரு ||
கர்ணம் ஏகேந கர்த்தவ்யம் பத்மம் ஏகாம்ச மேவச |
தத்கும்பம் த்ரிபி ரம்சைஸ்ச பத்ம மேகாம்ச மேவச |
குர்யா தேகேந கம்பம் து பக்ஷாம்சே நைவ கர்ணகம் |
கம்பம் ஏகேந கர்த்தவ்யம் பத்மமேகேந காரயேத் |
மஹாபட்டி த்விபாகாப்யாம் பத்ம மேகாம்சகேந து |
தஸ்யோர்த்வே பட்டிகைகேந க்ருதவாரி ததாம்சகம் |
விஜயம் நாம பீடம் து ஸர்வ சாந்திகரம் பரம் ||

பூர்வகாரணே 9ல் சுலோகம் 253–257)

சுவாயம்புவபீட வடிவமைப்புமுறை (5ல்4)

பீடத்தின் உயரத்தை பதினெட்டுபங்கு செய்து, அதில் கீழிருந்து மேல் வரையில் பாதுகா (உபானம்) ஒருபங்கு, கம்பம் ஒன்றரைபங்கு, பத்மம் ஒன்றரைபங்கு, ஜகதீ நான்குபங்கு, வப்ரகம் மூன்றுபங்கு, கம்பம் ஒருபங்கு, பட்டிகா இரண்டுபங்கு, பத்மம் ஒருபங்கு, மஹாபட்டி இரண்டுபங்கு, கிருதவாரிணீ ஒருபங்கு என்று இவ்வாறு அமைக்கப்படுவது ஸ்வாயம்புவபீடம் என்பதாகும். இந்த பீடவகை எல்லா தேவர்களிடத்திலும் அமைத்திட ஏற்ற பீடமாகும்.



சுவாயம்புவபீடம்

விபஜேத் பிண்டிகோத்ஸேதம் அஷ்டாதச விபாகத: |
ஏகேந பாதுகாம் குர்யாத் அத்யர்த்தம் கம்ப பத்மயோ: |
ஜகதீ சதுரம்சம் ஸ்யாத் குணாம்சேநைவ வப்ரகம் |
ததூர்த்வே கம்ப மேகாம்சம் த்வாப்யாம் வை பட்டிகா பவேத் |
பத்மம் ஏகேந கர்த்தவ்யம் அம்சேந க்ருதவாரிணீ |
ஸ்வாயம்புவ மிதி ப்ரோக்தம் ஸர்வதேவேஷு யோக்யகம் |

(பூர்வகாரணாகமம் 9ல்)

ஸ்தண்டிலபீட வடிவமைப்புமுறை (5ல்5)

பீடத்தின் உயரத்தை பதினெட்டுபங்கு செய்து, அதில்கீழிருந்து மேல்வரை, உபானம் ஒருபங்கு, பத்மம் இரண்டுபங்கு, கம்பம் ஒருபங்கு, கர்ணம் (கண்டம்) ஏழுபங்கு, கம்பம் இரண்டுபங்கு, பத்மம் இரண்டுபங்கு, மஹாபட்டி ஒன்றரைபங்கு, பத்மம் அரைபங்கு, கம்பம் அரைபங்கு,

கிருதவாரிணீ அரைபங்கு என்று இவ்வாறு அமைக்கப்படுவது, ஸ்தண்டிலபீடம் எனப்படுவது எல்லா தேவர்களுக்கும் ஏற்றபீடவகை ஆகும். இதனிலக்கணம் கூறும் சான்று,

விகாராம்சேந விபஜேத் பாகேநோபாந முச்யதே |
பத்மதுண்ட த்விபாகேந கம்பம் ஏகேந காரயேத் ||
ஸப்தாம்சம் கர்ணம் இத்யுக்தம் த்வாப்யாம் வை கம்பபந்தகம் |
அத்யர்தேந மஹாபட்டி பத்மம் அர்தேந காரயேத் |
கம்பம் அர்தேந கர்த்தவ்யம் அர்தேந க்ருதாவாரிணீ |
ஸ்தண்டிலம் ஸ்யாத் இதம் பீடம் ஸர்வதேவேஷு பூஜிதம் | (பூர்வகாரணே)

நந்தியாவர்த்த பிண்டிகை. (6வதுவகை)

பீடஉயரத்தை 11 பாகங்களாகப் பகுத்து அப்பீடஉயரத்தில் 1பாகம் பாதுகம், 3பாகம் ஜகதி, 1பாகம் கம்பம், 2பாகம் கர்ணம், 1பாகம் வாஜனம், 2பாகம் மஹாபட்டி, 1பாகம் கிருதவாரி, இந்தஅளவுகளுடன் கூடியது நந்தியாவர்த்தபீடம் எனப்படுவதாகும். இதற்கான ஆகமச்சான்று,

ருத்ரபாகே து தத்துங்கே வ்யோமாம்சம் பாதுகம் பவேத்|
குணாம்சம் ஜகதீ கம்பம் ஏகம் கர்ணோ தீவிபாகத: |
ஏகாம்சே வாஜனப் புரோக்தோ மஹாபட்டி தீவிபாகத: |
கிருதவாரி ஏகபாகேந நந்தியாவர்த்த மீதீரிதம் ||



நந்தியாவர்த்தபீடம்

அஜிதாகமத்தின் பத்துவகை பீடஅமைப்புகள்

சதுரச்ரா(அ)த வ்ருத்தா ச பிண்டிகா தீவிவிதா மதா | (அஜிதம்)

சதுரவடிவாயும், வட்டவடிவாயும் பிண்டிகை இரண்டு வகைப்படும்.

சதுரபிண்டிகை ஐந்துவகை.

பத்ரா யக்ஷீ ச வஜ்ரீ ச ஸ்ரீகரா விஜயேதி ச |
சதுரச்ரஸ்ய பேதா: ஸ்யுர் வ்ருத்தபேத மதச் சுருணு ||

நாற்கோண பிண்டிகையானது: 1. பத்ரா, 2. யக்ஷீ, 3. வஜ்ரீ, 4. ச்ரீகரா, 5. விஜயா என்ற பெயரில் ஐந்து வகைப்படும்.

விருத்த பிண்டிகை ஐந்து வகை.

பத்மம் சக்ரம் ததா வேதீ ஸௌம்யா ரம்யா ச பஞ்சமீ |

இதன்படி வட்டவடிவமான பிண்டிகையானது ஐந்துவகைப்படும். அவை 1. பத்மபிண்டிகை. 2. சக்ரபிண்டிகை, 3. வேதீபிண்டிகை. 4. ஸௌம்யாபிண்டிகை. 5. ரம்யாபிண்டிகை எனப்படுபவை ஆகும்.

பத்துவகை பிண்டிகைகளின் அமைப்புமுறை

பத்ரபீட உருவஅமைப்பு-(சதுரபீடம்-5ல்1) (10ல்1)

பீடோத்ஸேதே விகாராம்சே வ்யோமாம்சம் பாதுகம் பவேத் |
வேதாம்சம் ஜகதீ தஸ்ய கைரவம் வன்ஹி பாகச: ||
பட்டிகைகேந கர்த்தவ்யா கண்டம் தஸ்ய குணாம்சகம்|
ததூர்த்வே கம்பம் ஏகேந தஸ்யோர்த்வே பட்டிகா பவேத் ||
த்வாப்யாம் ததூர்த்வே சாம்சேந க்ருதவாரி ப்ரகல்பயேத் || (அஜிதாகமம்)

பீடஉயரத்தைப் பதினாறாகப் பகுத்து, அதில், ஒருபாகம் பாதுகை, நான்குபாகம் ஜகதி, மேலே தளம் மூன்றுபங்கும், பட்டிகை ஒருபங்கும், கண்டம் மூன்றுபங்கும், அதன்மேலே கம்பம் ஒருபங்கும், அதன்மேலே பட்டிகை இரண்டுபாகங்களிலும், கிருதவாரி ஒருபாகம் உள்ளது பத்ரபிண்டிகை என்ற பெயருடையதாகும் என்கிறது அஜிதாகமம்.

யக்ஷீ பிண்டிகை வடிவமைப்பு-(சதுரபீடம்-5ல்2) (10ல்2)

உத்ஸேதம் பூர்வவத் க்ருத்வா த்வத்யர்த்தம் பாதுகம் பவேத் |
ஜகத் யக்னி யம்சகை ரூர்த்வே பத்ம மர்த்தாதிகம் த்ரயம் |
ததூர்த்வே கம்ப மேகாம்சம் த்வாப்யாம் கைரவ முச்யதே ||

தஸ்யோர்த்வே கம்பமேகாம்சம் ஊர்த்வ பத்மம் த்ரிபிர் பவேத் |
அர்த்தாம்சே பட்டிகாபந்தம் அர்த்தாம்சே க்ருதவாரிணம் |
யக்ஷபீடம் இதி ப்ரோக்தம் வஜ்ரபீட மதச்ருணு || (அஜிதாகமம்)

யக்ஷிபிண்டிகை என்பது, உயரத்தை முன்கூறியது போலவே பதினாறு பாகமாகச்செய்து, அவற்றில் ஒன்றரைபாகத்தால் பாதுகையும், மூன்றுபாகத்தால் ஜகதியும், மூன்றரைபாகத்தால் பத்மமும், ஒருபாகத்தால் கம்பமும், பூவிதழ் எனும் கைரவம் இரண்டு பாகத்தாலும், ஒருபாகத்தால் கம்பமும், முன்றுபாகத்தால் பத்மமும், அரைபாகத்தால் பட்டிகையும், அரைபாகத்தால் கிருதவாரியும் முறையே கீழிருந்துமேல்வரை அமைப்புடையது யக்ஷிபிண்டிகை என்பதாகும். இதுவே யதீபிண்டிகை எனவும் பெயர்பெறும்.

வஜ்ரீ பிண்டிகா அமைப்பு - (சதுரபீடம்-5ல்3) (10ல்3)

பீடோத்ஸேதம் து விபஜேத் பஞ்சவிம்சதி பாகத: |
ஏகாம்சம் பாதுகம் வித்தி பத்ம மேகேந காரயேத் ||
ததூர்த் வைகாம்சத: கம்பம் தரணீம் ஆச்ரமாம்சகை: |
அர்த்தாதிக த்ரிபாகேந பத்ம மூர்த்வே து காரயேத் |
ஏகேந கம்ப மேகேந பத்ம மூர்த்வே ப்ரகல் பயேத் |
அக்னி யம்சம் குமுதம் வ்ருத்தம் ததூர்த்வே (அ)ம்புஜ மம்சத: |
கம்ப மேகேந கர்த்தவ்யம் கண்டம் த்வாப்யாம் ப்ரகல்பயேத் |
ஏகேந கம்ப மூர்த்வே (அ)த: பத்ம மேகாம்சதோ பவேத் |
த்வாப்யாம் சாத மஹாபட்டி ததூர்த்வைகாம்ச வாஜநம் |
அர்த்தேந க்ருதவாரி ஸ்யாத் வஜ்ரபீடம் ப்ரகீர்த்திதம் || (அஜிதே)

இதன்படி உயரத்தை இருபத்திஐந்தாகப்பகுத்து, அதில் பாதுகை ஒருபாகம், பத்மம் ஒருபாகம், கம்பம் ஒருபாகம், தரணீ நான்குபாகம், பத்மம் மூன்றரைபங்கு, கம்பம் ஒருபாகம், பத்மம் ஒருபாகம், வட்டகுமுதம் மூன்றுபாகம், பத்மம் ஒருபாகம், கம்பம் ஒருபாகம், கண்டம் இரண்டுபாகம், கம்பம் ஒருபாகம், பத்மம் ஒருபாகம், பெரியபட்டி இரண்டு பாகம், வாஜனம் ஒருபாகம், கிருதவாரி அரைப்பாகத்தாலும் கீழிருந்து முறையே அமைத்திடுவது வஜ்ரபீடம் எனப் பெயருடையது ஆகும்.

ஸ்ரீகரா பிண்டிகை அமைப்பு-(சதுரபீடம்-5ல்4) (10ல்4)

த்ரிஸப்தாம்சே ததுத்ஸேதே கபாகம் பாதுகம் பவேத் |
ஜகதீதலம் சதுர்பிஸ் ஸ்யாத் கண்டம் ஏகேந காரயேத் |
ததூர்த்வே கம்பம் ஏகேந கும்பம் அக்னி யம்சகைஸ் ததா |
பத்ம மேகம் ததூர்த்வே து கம்ப மேகம் ததூர்த்வத: |

களம் து நேத்ரபாகம் ஸ்யாத் கம்ப மேகாம்ச முச்யதே |
பத்ம மேகேந கர்த்தவ்யம் மஹாபட்டி து த்வயம்சகா |
பத்ம மேகாம்ச முத்திஷ்டம் ததூர்த்வே பட்டிகா(அ)ம்சத: |
க்ருதவாரி ததாம்(அ)சேந குர்யாத் ச்ரீகர பிண்டிகாம் ||

ஸ்ரீகரபீடமானது, உயரத்தை இருபத்தியொன்றாகப் பகுத்து, அவற்றில் கிழிருந்துமேல்வரை முறையே, ஒருபாகம் பாதுகம், நான்குபாகம் ஜகதீ, ஒருபாகம் கண்டம், ஒருபாகம் கம்பம், மூன்றுபாகம் கும்பம், ஒருபாகம் பத்மம், ஒருபாகம் கம்பம், இரண்டுபாகம் கண்டம் (களம்), ஒருபாகம் கம்பம், ஒருபாகம் பத்மம், இரண்டுபாகம் பெரியபட்டி, ஒருபங்கு பத்மம், ஒருபாகம் பட்டிகை, ஒருபாகம் கிருதவாரி என்று அமைக்கப்படுவது ஸ்ரீகரபீடம் ஆகும்.

விஜயா பிண்டிகாஅமைப்பு (விஜயபீடம்)-(சதுரபீடம்-5ல்5) (10ல்5)

உத்ஸேதே ஷோடசாம்சே து தத்ரைகாம்சேந பாதுகம் |
ததூர்த்வே பத்ம மர்த்தேந கம்ப மர்த்தேந காரயேத் |
த்ரியம்சா ஜகதீ குர்யாத் பத்மம் பாக த்வயேந து |
கண்டம் அர்தேந கர்த்தவ்யம் பத்மமர்த்தாம்சதோ பவேத் |
கும்பம் குர்யாத் த்விபாகேந பத்ம மர்தாம்சதோ பவேத் |
கம்பம் அர்தேந கர்த்தவ்யம் அத்யர்தம் கண்ட முச்யதே |
அர்தேந பட்டிகாம் குர்யாத் அர்தாம்சம் பத்ம மேவ ச |
அத்யர்தேந மஹாபட்டிம் ஆக்யாதம் பஞ்சமம் சதுரச்ரகே| (அஜிதே)

விஜயபீடமானது, உயரத்தை பதினாறாகப் பகுத்து, அவற்றில் கீழிருந்துமேல்வரை முறையே, ஒருபாகம் பாதுகம், அரைபாகம் பத்மம், அரைபாகம் கம்பம், மூன்றுபாகம் ஜகதீ, இரண்டுபாகம் பத்மம், அரைபாகம் கண்டம், அரைபாகம் பத்மம், இரண்டுபாகம் கும்பம், அரைபாகம் பத்மம், அரைபாகம் கம்பம், ஒன்றரைபாகம் கண்டம், அரைபாகம் பட்டிகை, அரைபாகம் பத்மம், ஒன்றரைபாகம் பெரியபட்டிகை, ஒருபாகம் கிருதவாரி என்ற அளவில் அமைக்கப்படுவது ஆகும்.

பத்மபீட அமைப்பு (வட்டத்தில்-5ல்1) (10ல்6)

பத்மபீட மதோ வக்ஷ்யே வ்ருத்தஸ்ய ப்ரதமம்து யத் |
ததுத்ஸேதே விகாராம்சே த்வாப்யாம் மூலே து பட்டிகா |
ததூர்த்வே பஞ்சபிப் பத்மம் வ்ருத்த மம் சத்வயேந து |
ஊர்த்வே பத்மம் சதுர் பாகைர் த்வாப்யா மூர்த்வே து பட்டிகா |

ததூர்த்வே க்ருதவாரீ ச பாகே நைகேந காரயேத் || (அஜிதே)

பத்மபீடமானது, வட்டவடிவில் உயரத்தை பதினாறுபாகம் செய்து, அவற்றால் கீழிருந்து மேல்வரை முறையே இரண்டுபாகத்தில் பட்டிகை, ஐந்துபாகத்தில் பத்மம், இரண்டுபாகம் வட்டமான கண்டம் (விருத்தம்), நான்குபாகத்தில் மேல்பத்மம், இரண்டுபாகத்தில் மேல்பட்டிகை மேலே ஒருபாகத்தால் கிருதவாரி என்பதுமாக அமைக்கப்படுவது ஆகும்.

சக்ரபீட அமைப்பு (வட்டத்தில்-5ல்2) (10ல்7)

அஷ்டாதசாம்சகே தஸ்மின் த்வாப்யாம் மூலே து பட்டிகா |
த்ரிபி ரூர்த்வே (அ)ம்புஜம் குர்யாத் கம்ப மேகாம்சதோ பவேத் |
ஷட்பி ரூர்த்வே களம் குர்யாத் ததூர்த்வே கம்ப மேகத: |
ஊர்த்வே பத்மம் த்ரிபிஸ் சைவ ஸார்தே நைகேந பட்டிகா |
அர்தேந க்ருதவாரீ ஸ்யாத் வேதீ பிடம் ததச் சுருணு || (அஜிதே)

சக்ரபீடமானது, வட்டவடிவில், உயரத்தைப் பதினெட்டுபாகமாகச் செய்து, அவற்றால் கிழிருந்து மேல்வரை முறையே, இரண்டுபாகம் பட்டிகை, முன்றுபாகம் பத்மம், ஒருபாகம் கம்பம், ஆறுபாகம் கண்டம் (களம்), ஒருபாகம் கம்பம், மூன்றுபாகம் பத்மம், ஒன்றரைபாகம் பட்டிகை, அரைபாகம் கிருதவாரி என்றவாறு அமைக்கப்படுவது சக்ரபீடம் எனப்படுவது ஆகும்.

வேதீபீடஅமைப்பு - (வட்டத்தில்-5ல்3) (10ல்8)

உத்ஸேதே து விகாராம்சே பாகே நோபாந முச்யதே |
பத்மதுண்டம் த்விபாகேந கம்ப மேகேந காரயேத் ||
ஸப்தாம்சம் கண்டம் உத்திஷ்டம் ததூர்த்வே கம்ப மம்சத: |
பத்ம மூர்த்வே(அ)ம்சத: ப்ரோக்தம் அத்யர்தேந து பட்டிகா |
ததூர்த்வே (அ)ர்தாம்சத: பத்மம் கம்பம் அர்தேந காரயேத் |
அர்தேந க்ருதவாரீ ஸ்யாத் ஸௌம்யபீடம் அத சருணு || (அஜிதே)

வேதிபீடமானது, வட்டவடிவில் உயரத்தைப் பதினாறு பாகமாகச் செய்து, அவற்றில் கீழிருந்து மேல்வரை முறையே ஒருபாகம் உபானம், இரண்டுபாகம் பத்மதுண்டம், ஒருபாகம் கம்பம், ஏழுபாகம் கண்டம், ஒருபாகம் கம்பம், ஒருபாகம் பத்மம், ஒன்றரைபாகத்தால் பட்டிகா, அரைபாகம் பத்மம், அரைபாகம் கம்பம், அரைபாகம் க்ருதவாரி என்றவாறு அமைப்புடையது வேதீபீடம் எனப்படுவதாம்.

ஸௌம்யபீட அமைப்பு (வட்டத்தில்-5ல்4) (10ல்9)

உத்ஸேதே மநுபாகே து த்வாப்யாம் மூலே து பட்டிகா |
கம்பம் ஏகேந கர்த்தவ்யம் ததூர்த்வே கண்ட மஷ்டபி: |
ததூர்த்வே கம்பம் அர்தேந ஸார்த்தே நைகேந பட்டிகா |
ததூர்த்வே கருதவாரீ ச பாகே நைகேந கல்பயேத் || (அஜிதே)

ஸௌம்யபீடமானது, வட்டவடிவில் உள்ளதாய், உயரத்தை பதினான்கு பாகமாகச்செய்து, கீழிருந்து மேல்வரை முறையேஇரண்டுபாகம் அடிபட்டிகை, ஒருபாகம் கம்பம், எட்டுபாகம் கண்டம், அரைபாகம் கம்பம், ஒன்றரைபாகம் மேல்பட்டிகை. மேலே ஒருபாகம் க்ருதவாரி, என்றவாறு அமைப்புகளை உடையது ஸௌம்யபீடம் என்ற பெயருடையதாகும்.

ரம்யபீட அமைப்பு (வட்டத்தில்-5ல்5) (10ல்10)

ரம்யபீட மதோ வக்ஷ்யே ஷோடசாம்சே ததுந்நதே |
ஏகேந பாதுகம் குர்யாத் பத்மதுண்டம் த்விபாகத: |
கம்பம் அம்சேந கர்த்தவ்யம் கண்டம் தஸ்ய த்விபாகத: |
அர்தேந கம்பம் அர்தேந பத்மம் வ்ருத்தம் ததூர்த்வத: |
குமுதம் ஸ்யாத் த்விபாகேந பத்மம் அர்தாம்சதஸ் தத: |
பட்டிகா(அ)ர்தேந கர்த்தவ்யா த்வாப்யாம் ச களம் ஏவ ஹி |
ஏகாம்சம் கம்ப பத்மே து ஹ்யத்யர்தம் ப்ரஸ்தரம் ததா |
ஆலிங்காந்தரிதா (அ)வம்சாத் க்ருதவாரி யர்த்த மேவச || (அஜிதே)

ரம்யபீடம் எனப்படுவது, வட்டவடிவில் அதன் உயரத்தைப் பதினாறு பாகம்செய்து அவற்றில் கீழிருந்து மேல்வரை முறையே, ஒருபாகத்தால் பாதுகம், இரண்டுபாகத்தால் பத்மதுண்டம், ஒருபாகத்தால் கம்பம், இரண்டுபாகத்தால் கண்டம், அரைபாகம் கம்பம், அரைபாகம் பத்மம், அதற்குமேலே வட்டவடிவமான குமுதமானது இரண்டுபாகத்தாலும், அரைபாகத்தால் பத்மம், அரைபாகத்தால் பட்டிகை, இரண்டுபாகம் களம்(கண்டம்), ஒருபாகம் கம்பம், ஒருபாகம் பத்மம், ஒன்றரைபாகம் பிரஸ்தரம், அவ்வாறே ஆலிங்காந்தரிதம், ஒருபாகத்தாலும் மேலே அரைபாகத்தால் கிருதவாரி, என்ற முறையில் அமைக்கப்பட்டது ரம்யபீடம் ஆகும்.

பத்துவகை பிண்டிகைகளுக்குமான, பொதுஇலக்கணமாவது மேல் பகுதியின் அகலம், அடிப்பகுதியின் எட்டில் ஒருபாகம் குறைவாக செய்யவேண்டும். இவற்றின் உள்உறுப்புகளில் உள்ளடக்கமும்

வெளிப்புடைத்தலும் அம்சங்களில் நான்குபாகமோ, அரைபாகமோ, மூன்றுபாகமோ, சமமாகவோ உள்ளவாறு செய்யவேண்டும்.அவை களுக்கு நாளமானது வடக்கில் உள்ளவாறு செய்யப்படவேண்டும். பீடத்தின் அகலத்தில் மூன்றில் ஒருபாகம் நாளத்தின் துவக்க அகலம் இருந்திடவேண்டும். நாளத்தின்நீளம் கீழுள்ள பீடத்திற்குச் சமமாகச் செய்யவேண்டும். இது தொடர்ச்சியாகக் குறுகவேண்டும். அடிப் பாகத்தைக்காட்டிலும் மேல்பாகத்தின் அகலமானது மூன்றில் ஒருபாகம் குறைவாகச் செய்யவேண்டும். இவற்றுக்கு நடுவில் அகலத்தில் மூன்றில் ஒருபாகம் நீர் செல்லும்வழி செய்யப்படவேண்டும். இதன் ஆழம் க்ருதவாரிக்கு சமமாகவும், தடையின்றி நீர்முழுவதும் வெளியே செல்லு மாறும் இருத்தல் அவசியம். இவ்வாறு பிண்டிகை விதிமுறைப்படி அளவும் உருவமும் கொண்டதாக இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

பத்ரா முதலான பத்துவகை லிங்கபீடங்களின் பயன்

பிண்டிகை வகைகளின் பயன்கள்

பத்ராதீநாம் து ஸர்வேஷாம் பலபேதம் அத ச்ருணு |
பத்ரா போகப்ரதா ஞேயா யக்ஷீ க்ஷேமங்கரீ ததா ||
வஜ்ரீ புஷ்டிப்ரதா ஞேயா ஸ்ரீகரா ஸ்ரீப்ரதா பவேத் |
ஜயதா விஜயா சைவ பத்மம் சாபீஷ்டஸித்திதம் ||
சக்ரா சாந்திகரீ ஸா ஸ்யாத் வேதீ புத்ர ஸமிருத்திதா |
ஆயுப்பிரதா ததா ஸௌம்யா ரம்யா (ஆ)ரோக்யப்ரதா ஸ்மிருதா ||
ஏவம் பலவிசேஷேண குர்யாத் பீடம் யதேச்சயா || (அஜிதாகமம்–16ல்).

அஜிதாகமக் கூற்றின்படி சிவலிங்கத்தின் ஆவுடையாளான (பீடம்) பிண்டிகைவகைள் பத்தும், அளித்திடும் சிறப்புப்பயன்களாவன 1. பத்ராபிண்டிகை சுகபோக(யோக) சித்தியையும், 2. யக்ஷீபிண்டிகை நன்மையளித்தலையும், 3. வஜ்ரீபிண்டிகை வளமளிப்பதும், 4. ஸ்ரீகராபிண்டிகை செல்வமளிப்பதும், 5. விஜயாபிண்டிகை வெற்றியையளிப்பதும், 6. பத்மபீடம் விரும்பும் பயன்களைத்தருவதும், 7.சக்ராபிண்டிகை சாந்தியை (நிம்மதிநிறைவை)த் தருவதும், 8.வேதீபிண்டிகை புத்திரர்களை (மகப்பேற்றைத்) அளிப்பதும், 9.ஸௌம்யாபிண்டிகா ஆயுளை நீண்டவாழ்நாளைத் தருவதும், 10.ரம்யாபிண்டிகை நோயற்றதான ஆரோக்கியத்தைத் தருவதும் ஆகும். இவ்விதமாக சிறப்புப்பயனை பீடம் தந்துஅருள்வதால் விருப்பப்பயனுக்கேற்ப இதனைச்செய்து சிவலிங்கத்துடன் சேர்த்துப் பூஜித்திடவேண்டும் என்கிறது ஆகமம்.

பிண்டிகையில் லக்ஷ்மசூத்ரகல்பனம்
(லக்ஷணோத்தாரம்)

லிங்க லக்ஷ்ம ஸமீபஸ்தம் யதா ஸ்யாத் பக லக்ஷணம் |

என்கிற ஆகமவசனப்படி பிண்டிகையில் இணையும் மையத்துளை யருகில், துளையினுள் அரசஇலை பெண்குறிவடிவில் லக்ஷ்மத்தைச் செய்யவேண்டும். பீடத்துளையின் அளவை மூன்று பங்குசெய்து நடுவில் இருபங்கில் கீழே ஒருபங்கைத் தவிர்த்து மேலே உள்ள இருபாகத்தில் துளையின் அடியில் துவங்கி, இருகோடுசெய்து அதனைச்சுற்றி இணைத்து அரசஇலையைப்போல் செய்யவேண்டும். இதன் சான்று,

ரந்த்ரமத்யே பகாகாரம் ஊர்த்வாக்ரம் லக்ஷ்ம பீடயோ: |
ரந்த்ரஸ்யைவ த்விபாகேந தன்மூலே ப்ரம ரேகி ஸத் |
அச்வத்த பத்ரவத் குஹ்யம் வர்த்தயேத் குஹ்யலக்ஷணம் |
ப்ரணாள ஸ்யாத் ஸவிஸ்தாராத் பீடரந்த்ரே கலேந்து வத் ||

பிண்டிகையின் பழுதுநீக்கும் முறை (மாற்றும் முறை)

சிவலிங்கத்தில் ஆவுடையாரான பிண்டிகை உடைந்தோ சிதைந்தோ பழுதுபட்டுவிட்டால், அதனை நீக்கி, மீண்டும் அதேபோல் செய்து, முறைப்படி இணைத்திடவேண்டும். அப்பொழுது அதன் உருவத்தையும் அளவையும் மாற்றக்கூடாது. எவ்வாறு முன்பு இருந்ததோ, அதே உருவத்திலேயே மீண்டும் மீண்டும் அவ்வாறே செய்யத்தக்கது. வேறு உருவத்தில் பிண்டிகையை செய்யக்கூடாது, அவ்வாறு உருமாற்றி செய்து பொருத்தினால் அது கர்த்தாவை அழித்திடுவதாகும். இந்த சிறப்பு விதிமுறையைத் தெரிவிக்கும் காரணாகமச் சான்று இதுவே.

பூர்வாக்ருதிர் யதா பீடம் ததா குர்யாத் புனப் புன: |
அன்யாக்ருதிர் ந கர்த்தவ்யா க்ருதா சேத் கர்த்ருநாசி நீ || (காரணே)

பிண்டிகைஅளவின் அவசியம்

கர்பகேஹம் த்ரிதா பஜ்ய பாகைகம் பீடவிஸ்த்ருதம் |
லிங்கமாநேந ஹர்ம்யம் ஸ்யாத் லிங்கமாநேந பிண்டிகா ||
லிங்கபீடஅகலம் கருவறையின் அகலத்தில் மூன்றில் ஒருபங்கு அகலமே, எல்லாவகை பிண்டிகை எனும் பீடத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட அளவுஆகும். பீடத்தின் நீளம் விஷ்ணுபாகம் (உயரம்) வரையிலுமே இருக்கவேண்டும். விதிமுறைஅளவின்றியும், இஷ்டப்படியும் அமைத்திடலாகாது என்கிறதுஆகமம்.

முறையற்ற அளவின் பயன் (விலக்ஷணபலம்)

லிங்கம் (பாணம்மட்டில்) அதிகஅளவில் இருப்பதால் மிருத்யு (குர்மரணம்) ஏற்படும். சக்திபாகமான பிண்டிகை மிகப்பெரியதாக அமைந்தால் செல்வஅழிவு ஏற்படும். லிங்கம் பீடம் ஸமமாக செய்யப்படுவது போகமோக்ஷபலப்ரதம் என்பதாக, சுகபோகமான வாழ்வையும், முக்தியையும் தருவதாகும். தலையில் அடிபட்டது, களங்கம், காதம். குழி, பாதகுறி, கோடுகள், புள்ளிகள், வெடிப்பு இவை கூடாதவை. பாணலிங்கம் என்பது கரடுமுரடாக இருத்தல் ஆகாது, என்று அளவு வலியுறுத்தப்படுகிறது.

லிங்காதிக்யம் பவேந் மிருத்யு சக்தியாதிக்யம் தனக்ஷயம் |
லிங்க பீட ஸமம் குர்யாத் போக மோக்ஷ பலப்ரதம் | (காரணே)



புதிதாய் தயாரித்த லிங்கபிண்டிகை

லிங்கபீடத்தின் ப்ராண ப்ரகிருதி பாவனை

சிவலிங்கத்தின் பீடமானது, வட்டவடிவம், தாமரைவடிவம், நாற்கோணம், எட்டுபட்டை, ஷோடசாச்ரம் என்று (பலவடிவில்) ஐந்துவகையாயும், விஜயம், ஸ்தண்டிலம், பத்மம், பத்ரம், சுவாயம்புவம் என்ற ஐந்துவகையாயும், பத்ரா, யதீ, வஜ்ரீ, த்ரிகோணா, பரிமண்டலா, வேதீ, பத்மா, அர்த்தசந்திரா-மா(அ)ர்த்தசந்ஸ்தண்டிலா என்று எட்டுவகையாகவும் பிண்டிகை விளங்கும். இதனைக் கூறும்ஆகமச் சான்று இதுவேயாம்.

பத்மாக்யம் பத்ரபீடம் ச பீடம் ஸ்வாயம்புவம் ததா |
விஜயம் ஸ்தண்டிலம் சேதி ஸர்வலிங்கேஷு காரயேத் |
பத்ரா யதீ ச வஜ்ரீ ச திரிகோணா பரிமண்டலா |
வேதீ பத்மா(அ)ர்தசந்த்ரா ச ஸ்தண்டிலா விஹிதா(அ)ஷ்டதா||

(கிரணாகமம்)

ஸ்ரீமத் கிரணாகமம் சிவலிங்கத்தின் பீடத்தை எட்டுவகையாக, உருவம், பயன், பெயர்களுடன் விளக்குகிறது. அதன்படி நான்குபட்டை வடிவுடையது பத்ரபீடமாம். இதுயோகமளிக்கும், மூன்றுமேகலையுடையது யதீபீடமாம். இது கோமஹிஷபிரதமாம். ஆறுபட்டையுள்ளது வஜ்ரீபீடமாகும், இது ஆயுளைத் தருவதாகும். முக்கோணவடிவமுள்ள கோணபீடம் சிருங்காடகா பீடம் ஆகும், இது சக்ருக்னதம் என்பதாய் எதிரியை மாய்ப்பது, முழுநிலவு போன்றது, பரிமண்டலாபீடம், இதுதனதான்யமளிப்பதாகும். தாமரைப்பூ வடிவானது பத்மாபீடம் இது ஸௌபாக்யதாயினீ. பாதிசந்திரவடிவமான அரைவட்டபீடம் அர்த்தசந்திரா அல்லது கண்டசந்த்ரா எனப்படுவது ஆகும், இது மகப்பேறு அளிப்பதாம். இருமேகலையுள்ள பீடம் ஸ்தண்டிலா என்பது, இது எல்லா விருப்பங்களையும் அளிக்கவல்லது. பிண்டிகா என்பது, ஸ்வயோனிஸ்தாவாக, ரத்னதாதுக்களுடன் செய்யப்படுவதாகும். பீடமில்லாத லிங்கத்தை ஒருபோதும் பூஜிக்கவோ, தியானிக்கவோகூடாது. இதனால் சிவலிங்கத்திற்கு பீடத்தின் அவசியமும், சக்தியின் பிரியாதநிலையும், வடிவமைப்பால் பலவகைப் பயன்களும் அறிந்து பாவிக்கத்தக்கது. லிங்கத்தை நாதவடிவாயும், பீடத்தை பிந்துவடிவமாயும், இவை இரண்டுமே பிராணனும், பிரகிருதியும் ஆகும் என்பதாகக் கருதவேண்டும்.

தேவீ மனோன்மனீ

ஒன்பது வகையில் லிங்கபிண்டிகை (கோமுகை)
காரணாகமபடலம்-9ல் கூறியுள்ளவாறு பீடஅலங்காரம்

(தேர்ந்தெடுத்த ஒருவகைப்பீட உயரத்தைப் பகுத்து கீழிருந்து உறுப்புகளை அமைத்தல்)

1. பத்மபீடம்	2. பத்ரபீடம்	3. விஜயபீடம்
பதினாறுபங்கு	16 பங்குகள்	21 பங்குகள்
ஷடங்கபீடம் (6கூறு)	அஷ்டாங்கபீடம் (8கூறு)	சதுர்தசாங்கபீடம் (14கூறு)
வர்கம் & அம்சம்	வர்கம் & அம்சம்	வர்கம் & அம்சம்
கீழ்ப்பட்டிகா – 2	பாதுகா(உபானம்) – 1	பாதுகா –1
பத்மபிண்டம் – 5	ஜகதீ – 4	ஜகதீ –4
விருத்தம்(கண்டம்) – 2	விருத்தம்(குமுதம்) – 3	கர்ணம்(கண்டம்)–1
ஊர்த்வபத்மம்(தளம்)– 4	கீழ்பட்டிகா – 1	பத்மம் (தளம்) –1
மேல்பட்டிகா – 2	கர்ணம் (கண்டம்) – 3	கும்பம் –3
கிருதவாரிணீ – 1	பட்டிகா (மேல்கம்பு)– 1	பத்மம் –1
ஆகக்கூடுதல்பங்கு– 16	மஹாபட்டிகை – 2(1)	கம்பம் –1
விகாராம்சம் – 16 பங்கு	கிருதவாரிணீ – 1 (2)	கர்ணம்(களம்) –2
கீழிருந்து வரிசைகள்–6	ஆகக்கூடுதல்பங்கு– 16	கம்பம் –1
நடுவேபள்ளம் – 3ல்1	எட்டுவரிசைகள்	பத்மம்(பூவிதழ்) –1
பீடஅகலத்தில்–3ல்	கீழிருந்து மேல்வரை	மஹாபட்டிகா –2
1–நாளநீளம்	பீடஉறுப்புகளை	பத்மம் (தளம்) –1
பத்மம் 16 இதழ்களைக்	அழகுறச்செய்தல்	பட்டிகா –1
கொண்டது.	ஸர்வலிங்கயோக்யம்	கிருதவாரிணீ –1
ஸர்வலிங்கயோக்யம்		ஆகக்கூடுதல்பங்கு–21
		14 அடுக்குகள்
		ஸர்வசாந்திதரும்.

ஐந்து வகையில் லிங்கபிண்டிகை (கோமுகை)
காரணாகமபடலம்-9ல் கூறியுள்ளவாறு பீடஅலங்காரம்

(தேர்ந்தெடுத்த ஒருவகைப்பீட உயரத்தைப் பகுத்து கீழிருந்து உறுப்புகளை அமைத்தல்)

4. சுவாயம்புபீடம்	5. ஸ்தண்டிலபீடம்	6. வேதிபத்ரபீடம்
18 பங்குகள்	18 பங்குகள்	15 பங்குகள்
தசாங்கபீடம் (10கூறு)	தசாங்கபீடம் (10கூறு)	அஷ்டாங்கபீடம் (8கூறு)
வர்கம் & அம்சம்	வர்கம் & அம்சம்	வர்கம் & அம்சம்
பாதுகா –1	உபானம் –1	உபானம் –3
கம்பம் –1½	பத்மம் (தளம்) –2	பத்மம் –3
பத்மம் –1½	கம்பம் –1	கம்பம் –1
ஜகதீ –4	கர்ணம் (களம்) –7	கண்டம் –2
வப்ரகம் –3	கம்பம் –2	கம்பம் –1
கம்பம் –1	மஹாபட்டி –1½	பத்மம் –2
பட்டிகா –2	பத்மம் –½	பட்டிகை –2
பத்மம் –1	கம்பம் –½	கிருதவாரிணீ –1
மஹாபட்டிகா –2	கிருதவாரிணீ –½	ஆககூடுதல்பங்கு–15
க்ருதவாரிணீ –1	ஆககூடுதல்பங்கு–18	எட்டுவரிசையில்
ஆககூடுதல்பங்கு18	பத்துவரிசைகள்	பொதுவானபீடம்
பத்துஅடுக்குகள்	ஸர்வதேவயோக்யம்.	ஸர்வதேவயோக்யம்.
ஸர்வதேவயோக்யம்		

7. மஹாபத்மபீடம்	8. நந்தியாவர்த்தபீடம்	9. வேதிபத்ரபீடம்
19 பங்குகள்	11 பங்குகள்	16 பங்குகள்
அஷ்டாங்கபீடம்	சப்தாங்கபீடம்	அஷ்டாங்கபீடம்
வர்கம் & அம்சம்	வர்கம் & அம்சம்	வர்கம் & அம்சம்
உபானம் –1	உபானம் –1	உபானம் –2
பங்கஜம் –5	ஜகதீ –3	ஜகதீ –3
கம்பம் –1	கம்பம் –1	குமுதம் –3
கர்ணம் –3	கர்ணம்(களம்) –2	கம்பு –1
கம்பம் –1	வாஜனம் –1	கண்டம் –3
பத்மம் –5	மஹாபட்டி –2	கம்பு –1
மஹாபட்டி –2	கிருதவாரிணீ –1	பட்டிகை –2
கிருதவாரிணீ –1	ஆககூடுதல்பங்கு–11	கிருதவாரிணீ –1
ஆககூடுதல்பங்கு–19	7அடுக்குள்	ஆககூடுதல்பங்கு–16
8 அடுக்குள்	ஸர்வதேவயோக்யம்.	8அடுக்குள்
		ஸர்வதைவத்யம்.

அஜிதாகம கூற்றின்படி
10வகைபிண்டிகைகளின் அளவு அட்டவணை

10. பத்ராபீடம்	11. யக்ஷீபீடம்	12. வஜ்ரீபீடம்
16 பங்கு உயரம்	16 பங்கு உயரம்	25 பங்கு உயரம்
அஷ்டாங்கபீடம்	நவாங்கபீடம்	16அங்கபீடம்
சமசதுரபீடம்	சமசதுரபீடம்	சதுரபீடம் (6பட்டை)
வர்கம் & அம்சம்	வர்கம் & அம்சம்	வர்கம் & அம்சம்
பாதுகம் – 1	பாதுகம் – 1½	பாதுகம் – 1
ஜகதீ – 4	ஜகதீ – 3	பத்மம் – 1
கைரவதளம் – 3	பத்மம் – 3½	கம்பம் – 1
பட்டிகை – 1	கம்பம் – 1	தரணீ – 4
கண்டம் – 3	கைரவதளம் – 2	பத்மம் – 3½
கம்பம் – 1	கம்பம் – 1	கம்பம் – 1
பட்டிகை – 2	பத்மம் – 3	பத்மம் – 1
கிருதவாரி – 1	பட்டிகா – ½	வட்டகுமுதம் – 3
ஆகக்கூடுதல்பங்கு16	கிருதவாரி – ½	பத்மம் – 1
8அடுக்குகள்	ஆகக்கூடுதல்பங்கு16	கம்பம் – 1
யோகஸித்தி	8அடுக்குகள்	கண்டம் – 2
போகஸித்தி	க்ஷேமம் (நலம்)	கம்பம் – 1
		பத்மம் – 1
		பெரியபட்டி – 2
		வாஜனம் – 1
		கிருதவாரி – ½
		ஆகக்கூடுதல்பங்கு 25
		16அடுக்குகள்
		பயன்
		செழிப்பு/வளம்

13. பத்மாபீடம்	14. சக்ராபீடம்
16 பங்கு உயரம்	18 பங்கு உயரம்
6அங்கபீடம்	8அங்கபீடம்
விருத்தபீடம்	விருத்தபீடம்
வர்கம் & அம்சம்	வர்கம் & அம்சம்
மூலபட்டிகா – 2	மூலபட்டிகா – 2
பத்மம் – 5	பத்மம் – 3
விருத்தம் – 2	கம்பம் – 1
பத்மம் – 4	களம்(கண்டம்) – 6
ஊர்த்தவபட்டி – 2	கம்பம் – 1
கிருதவாரி – 1	பத்மம் – 3
ஆகக்கூடுதல்பங்கு16	பட்டிகா – 1½
பீடப்பயன்	கிருதவாரி – ½
அபீஷ்டஸித்தி	ஆகக்கூடுதல்பங்கு18
விருப்பம் ஈடேருதல்.	பீடப்பயன்
	சாந்திகரீ
	அமைதிதருவது

அஜிதாகம சூற்றின்படி 10வகைபிண்டிகைகளின் அளவு அட்டவணை

15. ஸ்ரீகராபீடம்

21 பங்கு உயரம்

14அங்கபீடம்

சதுரபீடம்

வர்கம் & அம்சம்	
பாதுகம்	– 1
ஜகதீதலம்	– 4
கண்டம்	– 1
கம்பம்	– 1
கும்பம்	– 3
பத்மம்	– 1
கம்பம்	– 1
கண்டம்	– 2
கம்பம்	– 1
பத்மம்	– 1
பெரியபட்டி	– 2
பத்மம்	– 1
பட்டிகை	– 1
கிருதவாரி	– 1

ஆகக்கூடுதல்பங்கு 21

பயன் ஸ்ரீப்ரதம்
(செல்வப்பெருக்கு)

16. விஜயாபீடம்

16 பங்கு உயரம்

15அங்கபீடம்

சமசதுரபீடம்

வர்கம் & அம்சம்	
பாதுகம்	– 1
பத்மம்	– ½
கம்பம்	– ½
ஜகதீ	– 3
பத்மம்	– 2
கண்டம்	– ½
பத்மம்	– ½
கும்பம்	– 2
பத்மம்	– ½
கம்பம்	– ½
கண்டம்	– 1½
பட்டிகா	– ½
பத்மம்	– ½
மஹாபட்டி	– 1½
கிருதவாரி	– 1

ஆகக்கூடுதல்பங்கு 16

15அடுக்குகள்

பயன் – ஜயம்.

17. ரம்யாபீடம்

16 பங்கு உயரம்

14அங்கபீடம்

விருத்தபீடம்

வர்கம் & அம்சம்	
பாதுகம்	– 1
பத்மதுண்டம்	– 2
கம்பம்	– 1
கண்டம்	– 2
கம்பம்	– ½
பத்மம்	– ½
குமுதம்வட்டம்	– 2
பத்மம்	– ½
பட்டிகா	– ½
களம்(கண்டம்)	– 2
கம்பத்மம்	– 1
ப்ரஸ்தரம்	– 1½
ஆலிங்கம்	– 1
கிருதவாரி	– ½

ஆகக்கூடுதல்பங்கு 16

14அடுக்குகள்

பீடபயன் ஆரோக்யப்ரதா
உடல்நலம்தருவது

18. வேதீபீடம்

16 பங்கு உயரம்

10அங்கபீடம்

விருத்தபீடம்

வர்கம் & அம்சம்	
உபானம்	– 2
பத்மதுண்டம்	– 1
கம்பம்	– 7
கண்டம்	– 1
கம்பம்	– 1
பத்மம்	– 1½
பட்டிகா	– ½
பத்மம்	– ½
கம்பம்	– ½
கிருதவாரி	– ½

ஆகக்கூடுதல்பங்கு 14

புத்ரஸ்மிருதி
மகப்பேறுகிட்டும்.

19. ஸௌம்யசக்ராபீடம்

14 பங்கு உயரம்

6அங்கபீடம்

விருத்தபீடம்

வர்கம் & அம்சம்	
அடிபட்டிகை	– 2
கம்பம்	– 1
கண்டம்	– 8
கம்பம்	– ½
மேல்பட்டிகை	– 1½
கிருதவாரி	– 4

ஆகக்கூடுதல்பங்கு 14

ஆயுப்பிரதா
நீண்டஆயுள்தரும்.

20. யதீபீடம்
(3படிமேகலைகள்)

21. சிருங்காடகாபீடம்
(முக்கோணவடிவம்)

22. பரிமண்டலபீடம்
(முழுநிலாவட்டம்)

23. அர்த்தசந்திராபீடம்
(அரைநிலாவட்டம்)

24. பத்மாபீடம்
(கமலமலர்வடிவம்)

லிங்கபிண்டிகைகளின் உருவமும் பயனும் (ஆவுடையாள்)

லிங்கத்தின் ஜலமார்க்கமான கோமுகை வடிவப்பயன்

வ. எ.	பீடப்பெயர்	உருவஅமைப்பு	சான்றுநூல்	விளையும் பயன்
1.	பத்மபீடம்	வட்டவடிவம் தாமரைப்பூவிதழ்கள்	காரணாகமம்	இஷ்டஸித்தி
2.	பத்ரபீடம்	பட்டைகள் 3/4/5/6/8/16	சித்தாந்தசேகரம் காரணம்	ஸர்வகாமபலதம்
3.	விஜயபீடம்	சமசதுரம்/ சமவட்டம்	காரணம்	போகஸித்தி
4.	சுவாயம்புவபீடம்	சமசதுரம்/ சமவட்டம்	காரணம்	போகஸித்தி (ஞானம்)
5.	ஸ்தண்டிலபீடம்	சதுரம்	காரணம்	போகமோக்ஷப்ரதா
6.	பத்ராபீடம்	சமசதுரம்	அஜிதாகமம்	போகப்ரதா(யோகம்)
7.	யக்ஷீபீடம்	சமசதுரம்	அஜிதாகமம்	க்ஷேமங்கரீ
8.	வஜ்ரீபீடம்	சமசதுரம்	அஜிதாகமம்	புஷ்டிப்ரதா
9.	ஸ்ரீகராபீடம்	சமசதுரம்	அஜிதாகமம்	ச்ரீப்ரதா
10.	விஜயாபீடம்	சமசதுரம்	அஜிதாகமம்	ஜயப்ரதா
11.	பத்மாபிண்டிகை	சமவட்டம்	அஜிதாகமம்	அபீஷ்டஸித்திப்ரதா
12.	சக்ரபீடம் (சக்ரா)	சமவட்டம்	அஜிதாகமம்	சாந்திகரீ
13.	வேதீபிண்டிகை	சமவட்டம்	அஜிதாகமம்	புத்ரஸித்தா
14.	ஸௌம்யாபிண்டிகை	சமவட்டம்	அஜிதாகமம்	ஆயுப்ரதா

வ. எ.	பீடப்பெயர்	உருவஅமைப்பு	சான்றுநூல்	விளையும் பயன்
15.	ரம்யாபிண்டிகை	சமவட்டம்	அஜிதாகமம்	ஆரோக்யப்ரதா
16.	யதீபிண்டிகா	திரிமேகலைகள்	கிரணாகமம்	கோமஹிஷப்ரதா
17.	வஜ்ரீபிண்டிகா	ஆறுபட்டைகள்	கிரணாகமம்	ஆயுப்பிதா
18.	சிருங்காடகா பிண்டிகா (திரிபுரா)	முக்கோண வடிவம் (யோனிவடிவம்)	கிரணாகமம்	சத்ருக்னதா
19.	பரிமண்டலா பிண்டிகா	முழுநிலவுவடிவம்	கிரணாகமம்	தனதான்யப்ரதா
20.	பத்மினீபிண்டிகா	மலர்ந்ததாமரைப்பூ	கிரணாகமம்	ஸௌபாக்யப்ரதா
21.	அர்த்தசந்திரா பிண்டிகா	அரைவட்டநிலா	கிரணாகமம்	புத்திரபாக்யதா
22.	ஸ்தண்டிலா பிண்டிகா	இரண்டுபடிகள் 2 மேகலலகள்	கிரணாகமம்	ஸர்வாபீஷ்டதா
23.	மஹாபத்ம பீடம்(கமலா)	பெரியதாமரைமலர்	ரௌரவம்	ஸர்வசாந்திப்ரதா
24.	நந்தியாவர்த்த பீடம்	சதுரம்	ரௌவரம்	ஸர்வமங்களப்ரதா
25.	வேதீபத்ரபீடம்	சதுரபீடம்	ரௌவரம்	ஸர்வகாமநாஸித்தி
26.	ஸௌம்யசக்ரா பிண்டிகா	விருத்தவீடம்	ரௌவரம்	ஸர்வாபீஷ்டதா
27.	சுபத்ரா (பத்ரீ) பண்டிகா	பலபட்டைகள் (4பட்டை)	கிரணாகமம்	யோகஸித்திப்ரதா
28.	விஜயபத்ரபீடம்	நாலுபட்டை	ரௌரவாகமம்	ஸர்வஸித்திப்ரதா

லிங்கஸ்தாபன விதிமுறைகள்

சிவாலய அமைவிடப்பயன்கள் (கிராமாதிகளில்)

கிராம மத்யே சுபம் லிங்கம் பூர்வே ஸித்தி ப்ரதம் சுபம் |
ஆக்னேய்யாம் அக்னிதாஹம் ச தக்ஷிணே மரணம் பவேத் ||

நைருத்யாம் ரோக ஸித்தம் ச வாருணே வர்ஷ வர்தனம் |
வாயவ்யாம் சூன்ய நாசம் ச ஸோமே தேஜோமயம் ததா ||
ஐசான்யம் போக மோக்ஷம் ச ஸ்தானானாம் பலம் உச்யதே |

இதன்பொருள் சிவலிங்கத்தை நிலைபெறச்செய்திடும் பொழுதில் கிராமத்தின் நடுவே அமைவது மங்களத்தை நன்மைகளையும் கிழக்கில் அனைத்துவகைப்பயனை அளிப்பதும் சுபமளிப்பதுமாகும். தென்கிழக்கில் நெருப்புத்தொல்லையும், தெற்கே மரணம் மிகுவதும், தென்மேற்கில் நோய்மிகுதியும், மேற்கில் மழை மிகுதியும், வடமேற்கில் தரித்திரம்நீங்குதலும், வடக்கில் ஒளிவளம் பெருகுவதும், வடகிழக்கின் போகம் மோக்ஷம் இவை இரண்டும் ஏற்படும் பயனாகக்கூறப்படுகிறது. இதனால் கிராமநடுவிலோ வடகிழக்கு மூலயிலோ சிவாலயம் கட்டுவது நற்பயனை அளிப்பதாகிறது என்பதை அறியலாம்.

கிராமத்தில் அமைந்த சிவன் மற்றும் சக்தி ஆலயஅமைப்பு

மத்யேந யோஜயேத் லிங்கம் வினா மத்யம் ந யோஜயேத்|

என்கிற சிவாகம வசனப்படி சிவாலயக் கருவறையில், கிழக்குமுகமாய் அமையும்கோடு **பிரம்மசூத்திரம்** என்றும், வடக்குமுகமானகோடு **ஸோமசூத்திரம்** என்றும் பெயர்பெறும். இவ்வாறான கோடுகளால் 8X8=64ஆக 9ஆல் 64 ஆக கருவறையைப் பகுத்து, இருகோடுகளும் இணையும் நடுவில் சிவலிங்கத்தை ஸ்தாபிக்கவேண்டும். பதப்பகுப்புமுறை,

ப்ராஸாத மத்யபாகம் து ஸப்ததா பரிகல்பயேத் |
மத்யமம் ப்ரம்மபாகம் து தைவிகம் த தனந்தரே ||
ததந்தே மானுஷம் ஞேயம் பைசாசம் பித்திமாச்ரிதம் |
தத்ரமத்யே ஸ்திதம் ஸத்பி: பாதசைலம் ந்யஸேத் தத: ||
ரத்னந்யாஸ க்ரமேணைவ ஸ்தாபயேத் நவகோஷ்டகே | (மகுடாகமம்)

ஆகமசூற்றின்படி கருவறையை ஏழாகப் பகுத்திடவேண்டும். அதில் நடுவே உள்ளது **பிரம்மபதம்**, அதற்கு அடுத்த பதசுற்று **தைவிகபதம்**, அதற்கடுத்த பதசுற்று **மானுஷபதம்**, அதற்குஅடுத்த சுவரைஒட்டியபதம் **பைசாசபதம்** என்று அறிந்து, நடுவிலே முதலில் ஆதாரசிலையை (பாதிசிலையை) வைத்து, அதன் நடுவே உள்ளதான ஒன்பதுகட்டமாக உள்ள குழிகளான **ஒன்பதுபதங்களிலும் நவபீஜம், நவரத்னம், நவதாது, நவஉலோகம்,** பிறதிரவியங்களையும் வாஹனசின்னம் முதலான வற்றையும் **பிரம்மஸ்தானத்தில்** வைத்திடவேண்டும். பின்பு அங்கு சுத்தி புண்யாஹவாசனம் செய்து புனிதநீரால் தெளித்து புனிதப்படுத்திய பின்பு, அவற்றை திக்பாலகர்கள், வித்யேச்வரர்கள் எண்மரையும், பிரம்மாவை சூழ்ந்துள்ளவாறு, சந்தனம், மலர், தூபம், தீபம், நைவேத்யம், இவற்றால் பூஜைசெய்யவேண்டும். பிறகு இதன்மேல் லிங்கபேராதிகளை ஸ்தாபனம் செய்யவேண்டும்.



லிங்கஸ்தாபனமுறை

கிராமத்தில் லிங்கஸ்தாபன ஸ்தானவிதி
(வாஸ்துஅங்க சிவஸ்தானம்)

வாஸ்த்வங்கம் கல்பயேத் தீமான் க்ராமே பைசாசிகே பதே |
கிராமதார சராம்சைகம் க்ராமபாஹ்யே விநிக்ஷிபேத் || 49

தத் பைசாசம் இதி ஞேயம் க்ராமம் பைசாச ஸம்யுதம் |
சதம் சதுஸ் சத்வாரிம்சத் அதிகம் காரயேத் பதம் || 50

கர்ணசூத்ரம் ததக் கிருத்வா சைச த்வயாம்சகே(அ)பிச |
இந்த்ர ஈசானயோர் மத்யே ஸோம சங்கர மத்யமே || 51

யதேஷ்டம் காரயேத் தீமான் ப்ராகார தோரணஸ்ய து |
தத் ஸ்தானே ஸ்தாபயேத் லிங்கம் வாஸ்த்வங்க விதிநா ததா||52

அன்யதா புர துர்காதௌ சிவஸ்தானம் இஹோச்யதே |
அஷ்டாசு திக்ஷு மத்யே ச சிவஸ்தானம் ப்ரகல்பயேத் || 53

(பூர்வகாரணாகமபடலம் 8ல்)

ஸ்ரீமத் காரணாகம சூற்றின்படி, கிராமத்தில் வெளிச்சுற்றுப் பகுதியாகிற பைசாசபதம் என்கிற ஸ்தானகட்டப்பகுதியில், சுற்றிலும் வாஸ்துவின்அங்கமாகிற கிராமத்தின் மொத்த அகலத்தினுடைய ஐந்தில் ஒருபங்கு அளவினை கிராமத்திற்கு வெளியே குறியிட்டு வைத்து, எல்லையாகக்கொண்டு, அந்த பதசுற்றுப் பகுதியை பைசாசபதம் என்று அறியத்தக்கது. இவ்விதம் கிராமமானதை பைசாசபதத்துடன் கூடியதாகச் செய்ய வேண்டும். கிராம அகலத்தை நூற்றுநாற்பத்திநான்கு பதமுள்ளதாக வாஸ்துவை பகுத்து, நான்கு மூலைகளையும் மூலையின் எதிர்மூலைக்கோடுகளால் சேர்த்து, கர்ணசூத்திரத்தின் இருபக்கமுள்ள ஐசான்ய மூலையின் இருபதத்திலும், கிழக்கிற்கும் வடகிழக்கு மூலைக்கும் நடுவில் உள்ள பதஸ்தானத்திலும், அவ்வாறே வடக்கிற்கும் வடகிழக்கு மூலைக்கும் இடையிலுள்ளவையான நடுவில் உள்ள பதஸ்தானத்திலும், அல்லது பிராகாரத்தினுடைய மற்றும் தோரணவாயிலினுடைய, விரும்புகிற ஏற்ற இடங்களிலும் அந்தகிராமவாஸ்துவிற்கு முக்கியஉறுப்பாகவும் வாஸ்து அங்கமாகவும் உள்ள சிவாலயத்தை அமைத்து அவ்விடத்தில் சிவலிங்கத்தை ஸ்தாபித்திடவேண்டும். வேறுவகையிலும், புரம், பட்டணம், கோட்டை, நீர்அகழி இவற்றின் நடுப்பகுதியிலும், மக்களின் வசிப்பிடத்தின் எட்டுதிசைகளிலும், கிராமம் முதலானவற்றின் நடுவிலேயும், சிவனுக்கு ஸ்தானத்தைக் கல்பித்தது லிங்கஸ்தாபனத்தை செய்வது ஆகமமுறையாகும்.

ஸ்தாபன க்ரியாவிதிமுறை ஆகமச்சான்று

அர்வாக் ஸப்த தினாத் லிங்கே பிண்டிகாம் ச விதாய ச |
பிரதிஷ்டா திவஸாத் லிங்கம் ஸந்தாப்ய ச சிலான்விதம் ||
பீடம் ஸம்யோஜ்ய க்ருத்வா (அ) ஷ்டபந்தம் ஸர்வாம் க்ரியாம் தத:|
குர்யாத் ஸ்நபனம் ஆதௌ து ஸஹஸ்ராதிஷு ஸம்பவை: ||

(காமிகே–64ல்)

இவ்வாறு லிங்கம், பீடம், ஆதாரசிலா ஆகிய மூன்றுக்கும், பூஜை, ஹோமம், நியாஸங்களை செய்து ஸ்தாபனம் செய்வது முறையாகும்.

களங்கம் க்ஷயரோகம் ச காகபாதம் சிரோஹதம் |
ரேகா கட்கஹதம் சைவ பிந்து ப்ரீதி விநாசனம் |
கர்கசே பாணலிங்கே து புத்ரதாரக்ஷயோ பவேத் |
சிரஸி ஸ்புடிதே பாணே வ்யாதிர் மரணமேவச | (தந்த்ரஸாரே)

பதவிந்யாஸத் தேவை (பகுப்பின் அவசியம்)

பதபேதம் மூர்த்திபேதம் ஸ்தானபேதம் அபேதகம் |
குரோஸ் ச சில்பினக் கர்துர் ஸ்தானநாசம் தனக்ஷயம் || (காரணே)

ஆலயக்கருவறையின் 3ல்1பங்கில், ஏகலிங்கஸ்தாபனமுறை



கர்பக்ருஹஉள்தரை அளவு

(இதில் வெளிசுற்றைத் தவிர்த்து 7x7=49ல் நடுவில் 3பதபீடத்தில் அமையலாம்)

இதனால் மூலக் கருவறையில், தரைப்பகுதியை இருபதாகப் பகுத்து அதில் முன்பக்கப் பாதியைத் தவிர்த்து, பின்பாதியில் நடுவில் சிவனை லிங்கமாயும், அடுத்தது பிரம்மா, அடுத்தது விஷ்ணு, குஹன், கணேசர் முதலானோரை பின்சுவர் வரையில் உரிய பதவிந்யாஸபதத்தில் அமைத்திடுவது அவசியமாகிறது. பதத்தை மாற்றி ஸ்தாபனம் செய்வதும், பதத்தில் மூர்த்தியை மாற்றி ஸ்தாபித்தலும், இடம்மாற்றி ஸ்தாபித்தலும், வேறுபாடுஇன்றி, முறையின்றி ஸ்தாபித்தாலும் குருக்கள், சில்பி, கர்த்தா இவர்களுக்கு வசிப்பிடஇழப்பையும் செல்வஇழப்பையும் தருவதாகும். எனவே இவற்றை தவிர்த்திடவேண்டும்.

ஆதார சிலையின் ஸ்தாபன விதிமுறை

ஆதௌ கூர்ம சிலாம் ந்யஸ்த்வா ப்ரம்மபாகான்விதம் த்ருடம் |
கிஞ்சிதீசான மாச்ரித்ய சிலாம் மத்யே நிவேசயேத் |
மத்யேந யோஜயேல் லிங்கம் விநா மத்யம் ந யோஜயேத் || (பத்ததி)

இவ்வாறு சோமசம்புசிவாசாரியார் முதலில் கூர்மசிலையை வைத்து பிரம்மபாகத்துடன் சிறிது வடகிழக்கு மூலையையில் நகர்ந்துள்ளதாக வைத்து நடுவிலேயே லிங்கத்தை வைத்து இணைக்கவேண்டும். என்றும், ஒருபோதும் நடுவில் இல்லாதவாறு சிவலிங்கத்தை பீடத்தில் சேர்க்கக்கூடாது என்றும் கூறியுள்ளார்.

சைலஜலிங்கஸ்தாபன விதிமுறை (மானுஷசிலாலிங்கம்)

விமானக்கருவறையில் மத்யசூத்திரத்திற்கு சிறிது இடதுபக்கம் தள்ளி சிலாலிங்கமத்யத்தை இணைத்திட வேண்டும். இதற்காக தாங்கிடும் கூர்மசிலையின் நடுவே குழியை லிங்கத்தின் அகலஅளவிற்குச் சரியாகச் செய்யவேண்டும். அல்லது அக்குழியின் அளவு கருவறையின் பாதியில் பாதிஅளவும் கூறப்படுகிறது. பிரம்மபாகத்தைப் புகுத்திடுவதற்கு அதன் சதுரபகுதிஅளவை அறிந்து, பிரம்மசிலா உயரத்தை குழிஅளவை விலக்கி பிரம்மபாகம் வரையிலுமாக நந்தியாவர்த்த சிலைகள் நான்கையும், நான்குதிசையிலுமாகச் சேர்த்திடவேண்டும். அவற்றை கிழக்கு மேற்காக நீண்டதாயும், தெற்கு வடக்காக நீண்டதாயும், கிழக்கு மற்றும் வடக்கில் மட்டுமே முனை உள்ளவாறும் சேர்த்து, முதலில் கிழக்கிலும் மேற்கிலும் சேர்த்துப்பின்பு தெற்கிலும் வடக்கிலுமாகமுறையே நான்குகற்களையும், லிங்கத்தடியில் நெருக்கிச்சேர்த்து, லிங்கத்தை நேராக நிற்குமாறுசெய்து பின்பு, அதன் தலைவழியாக துளைமூலமாக



லிங்கநாளமும், யோனிபீடமும்

பிரம்மபாகசிலையுயும், பின்பு விஷ்ணுபாகமான பிண்டிகையையும் சேர்த்திட வேண்டும். பிண்டிகாசிலையை ஆண்சிலாவான லிங்கத்துடன் கூடியிருக்குமாறு மலையினுடைகற்பொடிகளால்நிறப்பி வலுவுறச்செய்து கட்டிடவேண்டும். இவ்வாறு வலமாக, முறையே அசையாதவாறும், உள்ளே இடைவெளி இல்லாதவாறும், வலுவுடன்சேர்ந்துள்ளவாறும் விசேஷவிதிமுறைப்படி சேர்ந்துள்ளவாறு செய்து, வெளியே விசேஷவி திமுறைப்படி நல்லெண்ணையால் பூசி தைலகாப்பிடவேண்டும். இத்தகைய மானுஷசிலாலிங்கஸ்தாபன விதியைக்கூறும் காரணாகம சான்று இதுவே.

ப்ராஸாத மத்யசூத்ராத் து கிஞ்சித் வாமே (அ)தி யோஜயேத் |
மத்யமே த்வவடம் குர்யாத் லிங்கவிஸ்தார மானத: || 269



யோனிபீடத்தின் மேல்மட்டத்தோற்றம்



பிரம்மசிலைகளின் ஸ்வஸ்திக அமைப்பு

அதவா ச்வப்ர விஸ்தாரம் கர்பக்ஷ்மா (அ)ர்தார்த முச்யதே |
பிரம்மபாக ப்ரவேசம் ஹி ஞாத்வா ப்ராஹ்மசிலோச்ரயம் || 270
ச்வப்ரா வகாசம் ஸந்த்யஜ்ய ப்ரம்ம பாகாந்தம் ஏவ ச |
நந்தியாவர்த்த சிலாம் யோஜ்ய சத்வாரி யுக திக்ஷு ச || 271
பூர்வ பச்சிம மாயாமம் ததா வை தக்ஷிணோர்த்தரம்
பச்சாத் பச்சிம பூர்வம் து தத் பச்சாத் தக்ஷிணோத்தரம் || 272
லிங்கஸ்யா (அ)த்யர்த தாரேண தைர்க்யம் தஸ்யார்த விஸ்த்ருதம் |
ததூர்த்வே பிண்டிகாம் யோஜ்ய பந்தயேத் அஷ்டபந்தநை: || 273
பாதா (ஆ)தார பதே மத்யே ஸ்தாபயேத் லிங்கம் உத்தமம் |
தாஸ்ச தாம் பும்சிலா ஸக்தாம் சைலசூர்ணோ (அ)பி பந்தயேத் || 274
ப்ரதக்ஷிண க்ரமேணைவ யோஜயேத் து விசேஷ: |
சைலலிங்க மிதி ப்ரோக்தம் ரத்னலிங்க விதிம் ச்ருணு || 275

(பூர்வகாரணாகம படலம்–9)

லிங்கபீட நியாஸவிதி

பரமம் நிஷ்களம் பிந்தும் விந்யஸேத் விருத்த பாககே |
ஆஸனா (அ)ணூன் ந்யஸேத் பீடே லிங்கே மூர்த்திகதான் ந்யஸேத் ||
ஞானசக்திம் ந்யஸேத் லிங்கே க்ரியாக்யாம் பீடவிக்ரஹே |
மந்த்ரான் ஏதாம்ஸ் து பூர்வேத்யு: அதிவாஸே து விந்யஸேத் ||

(காமிகாகமம்–64)

இவ்வாகமவசனப்படி, சிவலிங்கத்தில் பாணத்தில் பரம்பொருளை அருவநிலையில் உள்ளவாறும், வட்டமான ஆவுடையாரில் பரபிந்து என்கிற, அனைத்திற்கும் ஆதிதோற்றுவாயான மஹாதேவீ மனோன்மணியையும் அவ்வாறே பீடத்தில் இருக்கைக்கான ஆஸன மந்திரங்களையும், லிங்கத்தில் ஒன்பது தத்வமூர்த்திகளையும், நியாலம் செய்யவேண்டும். லிங்கத்தில் ஞானசக்தியையும் பீடத்தில் கிரியாசக்தியையும் முறையே நியாஸம் செய்யவேண்டும். இவ்வாறு ஆறுவகை அதிவாக்களையும், ஆகம மூலமந்திரங்கள் ஸம்ஹிதாமந்திரம் பதினொன்றையும் ஸ்தாபனம் செய்வதற்கு முதல்நாளிலேயே, (சயன அதிவாஸத்திலேயே) அனைத்து மந்திரப்பதிப்புகளையும் செய்வதுமுறை.

லிங்கம் நாதமயம் ப்ரோக்தம் பிடம் பிந்து ஸ்வரூபகம்.
லிங்கா பாவே ததா பீடே தன்மூர்த்திம் தத்ர சிந்தயேத்.

என்ற ஆகமகூற்றுப்படி லிங்கம் நாதவடிவானது, பீடம் பிந்து வடிவமானது. லிங்கமில்லாதபொழுதில் பீடத்தின் மேல் தேவதையின் சிலையை (விக்ரஹத்தை) உருவமாகவோ அங்கு வைத்து

சிந்திக்கவேண்டும் என்கிறது. இவ்வாறு பீடத்தின் மேலேயே தெய்வச்சிலைகள் ஸ்தாபிக்கவேண்டியவை என்பது உணரத்தக்கது.

சக்தி சக்தி மதோர் த்யாயேத் ந பேதோ தர்ம தர்மிணோ: |
லயாந்தம் மந்த்ரம் உச்சார்ய ஸ்ருஷ்டி மார்க்கேண விந்யஸேத் ||

இவ்வாறு சிவன் சக்தி இருவரையும், லிங்கம் பிண்டிகை ஆகிய இரண்டிலும், பண்பும் பண்புஉடையதுமாக, அதாவது தர்ம ரூபம் மற்றும் தர்மிரூபம் என்றும் சக்தி மற்றும் சக்திமான் என்பதாகக் கருதி நியாஸத்தால் மந்திரப் பதிப்பைச் செய்யவேண்டும். பிறகு நந்தியாவர்த்த சிலைகளான நான்கையும் நான்கு மூலைகளில் தர்மம், ஞானம் வைராக்யம், ஐச்வர்யம் என்கிற நான்குமந்திரங்களால் இணைத்து, அதன்மீது கிரியா சக்தியான ஆவுடையாரை உயர்த்திவைத்து அஷ்டபந்தனத்தை சாத்தி பிரதிஷ்டையைச் செய்யவேண்டும். இதற்கான ஆகமச்சான்று இதுவே.

நந்தியாவர்த்த சிலாப் பச்சாத் சதஸ்ரோ வன்ஹிகோணத: |
தர்மாதி மந்த்ரைஸ் ஸம்யோஜ்ய தேவீ முத்ஸேதயேத் கிரியாம் ||
பிண்டிகாம் ச ஸமாயோஜ்ய பந்தயேத் அஷ்டபந்தனை: |

இதன்படி லிங்கம் அல்லது பேரத்தை பீடத்தில் வைத்து, நிலை நிறுத்தி இரண்டின் இடைவெளியில் அஷ்டபந்தனம் சாத்தி நன்கு இணைக்கவேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. சிவலிங்கப் பிரதிஷ்டையின்போது, அந்தலிங்கத்தினுடைய மூன்று பகுதிகளில், லிங்கநாளம் (பாணம்) பிண்டிகக்ஷகை, ஆதாரபீடம் ஆகிய மூன்றிலும் மூன்று தத்துவங்களையும் முப்பகுதிகளில் கற்பித்து ஒன்பது பகுதிகளாகக் கருதிஷடத்வமந்திரங்களை ஒதிநியாஸமெனும் செயலால் பதிவு செய்கின்றனர். 36தத்வங்களும் மூன்று தத்துவங்களில் ஒடுங்கி விளங்குவனவாகும். அவை 1. ஆத்மதத்வம், 2.வித்யாதத்வம், 3. சிவதத்வம் இம்மூன்றையும் லிங்கம் பிண்டிகை, ஆதாரபீடம் மூன்றிலும் எண்ணிப்பதிப்பை ஆகமம் நவகண்டகல்பனம் என்று கூறிவிதிக்கிறது.

இதனாலேயே லிங்கம் அருள்வதாகும் இதற்கானச் சான்று,

சிவசக்தி ஸதேசாந்தம் த்ரிகண்டம் கல்பயேத் புன: |
வித்யாசக்தி சிவப்ராந்தம் மாயா ஸாதேச சக்திகம் |
சப்தசித்த மனீஷாந்தம் லிங்கபீடே (அ)ச்மநி க்ரமாத் ||

என்பதாக தத்வநிலைகளும் பரவியிருக்கும் வியாப்திநிலைகளும் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு அனைத்தும் கொண்டுள்ளதாக லிங்கம் ஆகிறது.

பிரதிஷ்டாக்ரியையின் தத்வார்த்தம் (சொல்விளக்கம்)

ஞானசக்த்யாத்மகே லிங்கே க்ரியாசக்தேஸ் ஸமர்ப்பணம் |
பீடஸ்ய விதினா யோக: ப்ரதிஷ்டா ஸா ச பஞ்சதா ||

(சைவாகமபத்ததி வருணசிவவசனம்)

ஞானசக்திமயமான லிங்கத்தில் கிரியாசக்தியினுடைய சேர்க்கையே அதாவது லிங்கத்தில் பீடத்தினுடைய முறையான சேர்க்கையே (ஸங்கம முறையே) பிரதிஷ்டை எனப்படுவதாகும். இது ஐந்துவகையில் செய்யப்படுவது ஆகும். அஜிதாகமமானது. உருவம், அருவம், அருவுருவம், என்ற மூன்றுவகையான லிங்கங்களை ஸ்தாபித்து பூசித்தலாலேயே முக்திகிட்டும் என்றுகூறி, இந்த ஸ்தாபனம் என்பது இரண்டுவகை என்றும், அவை ஸ்தாபனம் மற்றது ப்ரதிஷ்டை என்கிறது. இதற்கான அஜிதாகமச்சான்று.

ஸ்தாபிதேஷு பவேன் முக்தி: ஸ்தாபனம் த்வி விதம் பவேத் |
ஸ்தாபனம் ச ப்ரதிஷ்டா ச ஸ்தாபனம் சில்பி ஸம்யுதம் |
பிரதிஷ்டா தத்விஹீநா ஸ்யாத் மந்த்ரேணைவ ஹி ஸா பவேத் |

(அஜிதாகமம்)

இந்த அஜிதாகமப்படி ஸ்தாபனம் என்பது சிற்பியுடன் கூடியவராக குருசெய்வதாகும். ப்ரதிஷ்டை என்பது சிற்பியில்லாமல் ஆதிசைவரான ஆசார்யரால் மட்டுமே மந்திரத்தால் செய்யப்படுவது, என்று இரண்டின் வேறுபாடு அறியத்தக்கது. லிங்கம் அல்லது பிம்பத்தை அதற்கு உரியஇடத்தில், உரியபதத்தில், உரியபீடத்தில், இலக்கணப்படி வலுவுற அசையாமல் குற்றமற்றதாக நிலைநிறுத்துவதே ஸ்தாபனம். தெய்வத்தை ஒருசிலையில், மந்திரஓசைகள் பதிந்தவடிவத்தில், பிந்துமயமான ஒருஉருவில், தெய்வத்தினுடைய மந்திரநாதத்தைப் பொருத்தி, அச்சிலையை உயிர்ப்பித்து, அந்ததெய்வத்தை நிலைபெறச் செய்கிற, அகக்கலைமிகுந்தசெயலே, பிரதிஷ்டை என்கிறது அஜிதாகமம். கோயிலும் லிங்கபேரங்களும் ஒன்றின் ஸ்துலசூக்ஷ்மங்களான

தெய்வசரீரமாவதால், முதலில் இவற்றை ஸ்தாபனம் செய்து, பிறகு அதில் மூலமந்திரமான நாதரூபமான பரஞ்ஜோதியை நிலைநிறுத்துவதே ப்ரதிஷ்டை என்று, மஹாவிஷ்ணுவிடம் மஹேச்வரன் கூறிய அஜிதாகமத்தால் அறியலாம். அதாவது,

மந்த்ர ரூபீ மஹாதேவ: சிவ: பரம காரணம் |
மந்த்ரம் ஸ்யாத் பரமம் ஞானம் மந்த்ரவாச்யஸ் ஸதாசிவ : ||

வாச்யஸ்ய தேவதேவஸ்ய லோகா (அ)நுக்ராஹகஸ்ய ச |
வாச்ய வாசக ஸம்பந்தோ மந்த்ரஸ்யா (அ)ஸ்ய ச த்ருச்யதே ||

லிங்கம் சின்னம் சரீரம் ச கத்யதே (அ)த்ர ஜனார்தன |
சரீரம் மந்த்ர ஏவ ஸ்யாத் சப்த ப்ரம்மேதி ஸம்ஞித: ||

சரீரம் ப்ரதமம் க்ருத்வா வ்யக்தா வ்யக்தோ ப[4]யாத்மகம் |
த்ரிவிதம் தத் சுரச்ரேஷ்ட பூஜார்த்தம் தஸ்ய நித்யச: ||

ப்ரிதிலிங்க ஸ்திதம் மந்த்ரம் ப்ரதிஷ்டேதி ப்ரகீர்த்திதம் | (ஆஜிதாகமம்)

இதன் அடிப்படையிலேயே கோயிலில், முதலில் கோயிலின் விமானசூளிகைமீது கும்பாபிஷேகத்தைச்செய்து, ஞானக்ரியாமயமான உடல் சித்தாக உருவாகியபின்பு, அதனுள்ளே சூக்ஷ்மநிலையிலுள்ள ஞானக்கிரியாமயமான சிலையின் திருமேனிக்கு, பிரதிஷ்டையுடன் கும்பாபிஷேகம் ஆகமப்படி செய்யப்படுவதை, இங்கு உற்றுநோக்கி பிரதிஷ்டா செயலின் தத்வார்த்தம் உணரத்தக்கது.

லிங்கஸ்தாபன முறைகள் (ஐவகைப்ரதிஷ்டைகள்)



ப்ரதிஷ்டா ஸ்தாபனம் தத்வத்
ஸதிதஸ்தாபன மேவச |
ஆஸ்தாபனம் ச உக்தம் தத்
ப்ரோக்தம் உத்தாபனம் தத: ||
ப்ரதிஷ்டா பஞ்சதா ஹ்யேவம்
ப்ரோச்யதே தத் விநிர்ணயம் |

ஒரு பீடத்தில் சிவலிங்கத்தையோ, உருவச்சிலையையோ, அசையாதவாறு, நேராக, முறையான சமபார்வையுள்ளதாக, வலுவாக ஸ்தாபிப்பது, நிலைபெறச்செய்வதே

லிங்கப்ரதிஷ்டை எனப்படுவதாகும். இதனை சிற்பியும் சிவாசார்யரும் இணைந்து நுண்கலைத்திறனும் மந்திரஒலிப்பதிப்பும் சேர்ந்ததாகச் செய்ய வேண்டும். எனவே இதனை லிங்கப்ரதிஷ்டை அல்லது பிம்பப்ரதிஷ்டை என்றே கூறவேண்டும். பிறகுசெயலில் சிற்பியைத் தவிர்த்து, குருவானவர் மந்திரத்தால்மட்டுமே யாகத்துடன் செய்யப்படுவது, மந்திரச்செயலான தேவதாப்ரதிஷ்டை, அல்லது சிவப்ரதிஷ்டை என்றே கூறப்படவேண்டும். இவ்வாறு இருவகையில் பிரதிஷ்டை என்றசொல் ஸ்தாபனம், பிரதிஷ்டை என்றவகையில் கிரியையில் உபயோகிக்கப்பட வேண்டியது என்றறியத்தக்கது. சிலை பிரதிஷ்டை என்பது சிற்பியுடன் செய்யப்படுவது. தெய்வப்பிரதிஷ்டை என்பது மந்திரத்தால் அனுபவித்து ஒன்றிச் செய்யப்படுவது என்று அறியவும்.

ப்ரதிஷ்டையின் செய்முறை (5ல்1)
(சிவலிங்க ப்ரதிஷ்டை விளக்கம்)

யத்ர ப்ரம்ம சிலாமத்யே லிங்கம் ஆதௌ விதாய ச |
அவ்யக்தம் முகலிங்கம் வா பீடபந்தம் விதாய ச ||
சுத்த லக்னம் ஸமாஸாத்ய யோகப் பிண்டிகயா ஸஹ |
க்ரியதே ஸா ப்ரதிஷ்டா ஸ்யாத் ஸ்தாபனம் து ததச்ருணு ||

(வாருணசிவாசார்யார் சைவாகமபத்ததி)

இதன்பொருள் சிவலிங்கமானது இருபகுதிகளை உடையது. ஒன்று பீடம் மற்றொன்று லிங்கம். பீடமில்லாத லிங்கம் ஒருபோதும் பூஜைக்கு ஏற்றது கிடையாது. மேலும் இது பூஜைக்கு ஒருபோதும் கூடவே கூடாது. அதில் பிரதிஷ்டை என்பது உரியது அல்ல. இதற்குக் காரணம், சக்திஇன்றிசிவமில்லை என்பதாகும். பீடமே சக்தி எனப்படும். லிங்கமே சிவன் எனப்படும். இவற்றின் சிவசக்திகளின் மந்திரங்களால் செய்யப்படுகின்ற இவ்விரண்டின் சேர்க்கையே ப்ரதிஷ்டை எனப்படுவதாகும். இதனை பிரம்மசிலையின் (கீழே உள்ள சதுரக்கல் பீடத்தின்) நடுவில் விதிமுறைப்படி லிங்கத்தை வைத்து, நியாஸம்செய்து, பிறகு, பீடபந்தத்தைச்செய்து, நல்லமுகூர்த்தத்தில் உரியலக்கினநேரத்தில் அந்தபிண்டிகையுடன்



ஓரிடத்தில் ஐந்துலிங்க அமைப்புமுறை

(கோமுகையுடன்) மூல மந்திரங்களை உச்சரித்து, செய்யப்படுகிற சேர்க்கையே பிரதிஷ்டை எனப்படும் என்பது அறியத்தக்கது.

ஸ்தாபனம் செய்யும்முறை (5ல்2)

தாதுரத்னமயம் லிங்கம் பாணம் வா லோஹஸம்பவம் |
லிங்கம் தத் பஞ்சதா க்ருத்வா த்ரிதா வா ஸம்விபஜ்ய ச ||
பாக த்வய மதைகம் வா ஞாத்வா லிங்க பலா (அ)பலம் |
ஸ்தாபிதம் பிண்டிகா மத்யே ஸ்தாபனம் தத் உதாஹ்ருதம் ||

தாதுலிங்கம், ஸ்படிகலிங்கம், பாணலிங்கம், உலோஹலிங்கம் முதலிய யாதாயினுமோர் லிங்கத்தை ஐந்துபாகங்களாகப் பிரித்து இரண்டுபாகங்களையேனும், அல்லது மூன்றுபாகங்களாகப் பிரித்து அதில் ஒருபாகத்தையேனும், இதில் அந்தலிங்கம் அசையாமல் வலுவாக நிற்கத்தேவையான, அதன்பலம் வலுவின்மையை அனுசரித்து பீடத்தில் ஸ்தாபித்தல் (நிலைபெறச்செய்தல் = பொருத்திவைத்தல்) ஸ்தாபனம் எனப்படும். ஷ்டா = கதிநிவ்ருத்தௌ என்ற தாதுவில் தோன்றியாசொல் – பிரதிஷ்டா = விலகாதிருத்தலாகும்.

ஸ்தித‌ஸ்தாபனம் செய்யும்முறை (5ல்3)

"சிவயுதே பீடே ஸ்தித‌ஸ்தாபனம்" என்ற ஆகமவசனப்படி சிவலிங்கத்திலிருந்து பிரிவுபடாத இணைந்தே உள்ளதான, பீடத்தையுடைய ஸ்படிகலிங்கம், மரகதலிங்கம், பவழலிங்கம் முதலான ரத்னலிங்கத்திற்கு (தனது பாகங்களுடன் கூடியுள்ள, தனியே பிரிக்க முடியாதவாறு சேர்ந்தேயுள்ள பீடத்துடன் கூடிய பேரம்) இருபகுதிகளுக்குரிய, பீடலிங்கங்களுக்குரிய மந்திரங்களை உச்சரித்து மந்திரத்தால், மனதால் பாவனையால் செய்யப்படுகிற பிரதிஷ்டையானது ஸ்தித‌ஸ்தாபனம் எனப்படும். (ஸ்தித = முன்னமே சேர்ந்திருக் கிறதை + ஸ்தாபனம் = மனதால் நிலைக்க வைத்தல்)

ஆஸ்தாபனம் செய்யும்முறை (5ல்4)

சதுர்ஹஸ்தாதிகம் லிங்கம் வ்யக்தலிங்கம் அதா(அ)பி வா |
பீட பிண்டிகயா யுக்தம் க்ருத்வா பிராஸாத மத்யகம் |
ஸம்ஸ்க்காரக் க்ரியதே யத்ர ததா ஸ்தாபன மீரீதம் | (வாருணபத்ததி)

(யஸ்யாம் து லிங்க மாரோப்ய ஸம்ஸ்கார: க்ரியதே புதை: |
ஆஸ்தாபனம் ததுத் திஷ்டம் ... . || (சோமசம்புபத்ததி)

மேற்காணும் பத்ததிவழி நூல்களின் கூற்றுகளின்படி, ஒருபீடத்தில் வ்யக்தலிங்கம் எனப்படுகிற ஒருதெய்வத்தின் உருவச்சிலையை

(பேரத்தை) நான்குகைகளுடையது முதலான, பலவகையில் அமைப்புடைய தெய்வபிம்பங்களை, அதற்குரிய பீடத்துடன், ஆலய கர்ப்பக்ருஹத்தின் நடுவே, நிலைபெறச்செய்தபின்பு, அதற்கு, பீடம் மற்றும் பிம்பம், ஆகிய இரண்டிற்கும், உரியசடங்குகளைச்செய்து, பிரதிஷ்டையைச் செய்வதே ஆஸ்தாபனம் எனப்படுவதாகும்.

உத்தாபனம் செய்யும்முறை (5ல்5)

வ்யக்ராதி தோஷ துஷ்டம் யத் லிங்கம் உத்ருத்ய யத்னத: |
அநு யத் ஸ்தாபனம் யத்ர ததுத்தாபன முச்யதே | (வருணபத்ததி)

உத்தாபனம்து ஸா ப்ரோக்தா லிங்கோத்தார புரஸ்ஸரீ | (சொமசம்புபத்ததி)

பூசையில் இருந்துவருகின்றதான, லிங்கம் அல்லது பிம்பம் இவற்றில், பிளவு, முறிவு, சிதைவு, இடமாற்றம், முதலியவற்றால் முற்றிலும் சேதமடைந்து பூசைக்குஉதவாதநிலை ஏற்பட்டால், அப்பொழுது, அதனை அங்கிருந்து முயன்று முறைப்படிபெயர்த்து, வெளியேஎடுத்து, அதனை விதிமுறைப்படி விலக்கியபின்பு, தொடர்ந்து எங்கிருந்து லிங்கம் எடுக்கப்பட்டதோ, அங்கேயே மற்றதை மறுபடியும் ஸ்தாபனம் செய்யப்படுகிறதோ, அச்செயலுக்கு, அதாவது வேறானதை மாற்றாக வைத்திடும் லிங்கபேரங்களுடைய ஸ்தாபனமுறையே (லிங்கபேரப்ரதி ஷ்டை செய்வதே) உத்தாபனம் எனப்படும். எடுத்துவிட்டுவைப்பது இவ்வாறு சிவன், விஷ்ணு, தேவீ, முதலிய மூர்த்திகளின் பிரதி ஷ்டையானது இங்கு ஐந்துவகையாக ஆகமங்களின்படி அறியத்தக்கது.

பஞ்சலிங்கஸ்தாபனவிதி (ஐந்துலிங்கஅமைப்பு)

ஏகலிங்க விதிஸ் த்வேஷா பஞ்சலிங்க விதிம் ச்ருணு |
மத்யே ஸதாசிவம் ஸ்தாப்ய புருஷம் பூர்வதஸ் ததா ||
அகோரம் தக்ஷிணே ஸ்தாப்ய ஸத்யம் பச்சிமதஸ்ததா |
உத்தரே வாமதேவம் து அத கோணேஷு வா புத: ||
கோணேஷு ச மஹாதிக்ஷு ஸம்வீக்ஷ்யாத ஸதாசிவம் |
ப்ருதக் ப்ருதக் விமாநாநி சேஷகர்ம ச பூர்வவத் || (சுப்ரபேதாகமம்)

இதன்படி நடுவில் சதாசிவலிங்கம், கிழக்கில் புருஷலிங்கம், தெற்கே அகோரலிங்கம், மேற்கே ஸத்யோஜாதலிங்கம், வடக்கில் வாமதேவலிங்கம் என்று, நான்கு பெருந்திசைகளில், அல்லது அந்தநான்கையுமே நான்குமூலைகளிலோ ஸ்தாபிக்கவேண்டும். கோணங்களில் லிங்கங்கள் இருந்தாலும் அவை பெருந்திசைகளை நோக்கியவாறு அல்லது மத்தியில் உள்ள ஸதாசிவரை நோக்கியவாறு. தனித்தனியே விமானங்களை உடையதாக அமைக்கத்தக்கவை. மற்றவை அனைத்தும் ஒருலிங்கத்திற்குக் கூறியவாறே செய்யத்தக்கது.

பஞ்சலிங்க ஸ்தாபனமுறை
(நடுவிலும் நான்கு திசைகளிலுமாக)



ஒரே இடத்திலே பஞ்சலிங்கஸ்தாபனம் தரைப்படம்

இருபத்திஓர் கட்டமாகபகுக்கப்பட்ட லிங்கஸ்தாபனம் க்ஷேத்ரம்

பஞ்சலிங்க ஸ்தாபனமுறை
(நடுவிலும் நான்கு மூலைகளிலுமாக)



ஒரே இடத்திலே பஞ்சலிங்கஸ்தாபனம் தரைப்படம்
இருபத்திஓர் கட்டமாகபகுக்கப்பட்ட லிங்கஸ்தாபனம் க்ஷேத்ரம்

நவலிங்க ஸ்தாபனவிதி (ஒன்பது லிங்கஅமைப்பு)

பஞ்ச லிங்கவிதிஹ்யேஷா யேஷா நவலிங்க விதிம் ச்ருணு
தேஷாம் விமானம் பூர்வோக்தம் அஷ்டதிக்ஷு விதீயதே | 133
ஸதாசிவம் ஸமீக்ஷ்யைவ திசாசு விதிசாசு ச ||
நவலிங்கவிதிப் ப்ரோக்த: ஸஹஸ்ராணாம் விதிம் ச்ருணு ||

இவ்வசனப்படி நடுவிலும் நான்குதிசைகள் மற்றும் நான்கு மூலைகளிலுமாக, ஒன்பது இடங்களில் ஒன்பது விமானங்களுடன் கூடியதாக சுற்றிவருவதற்கான பீடஅளவிலான ஸஞ்சாரப்பகுதியுடன் கூடியதாக, வடக்குகிழக்காகக் கோமுகை உள்ளதாகவே ஒன்பது லிங்கங்களை ஓரிடத்தில் ஸ்தாபிக்க வேண்டும்.

நவலிங்க ஸ்தாபனமுறை
(நடுவிலும் எண்திசைகளிலுமாக)



ஒரே இடத்திலே நவலிங்கஸ்தாபனம் தரைப்படம்

இருபத்திஓர் கட்டமாகபகுக்கப்பட்ட லிங்கஸ்தாபனம் க்ஷேத்ரம்

ஓரிடத்தில் ஒன்பதுலிங்க அமைப்புமுறை

சிவாதிக சதாஷ்டக லிங்கஸ்தாபன விதி

(27 x 4 = 108) 108 லிங்கஸ்தாபன விதி (சிவாதிகம்-109)



மொத்தபரப்பளவை 16 கோடிட்டு 15 x 15 = 225 பதங்களாக்கி அவற்றை ஒன்பது பதமுள்ளவையாக ஐந்தாகப் பகுத்து சுற்றிலும் 12 x 9 = 108 லிங்கம். நடுவில் மூலமஹாலிங்கம் சுற்றிலும் முப்பதங்களில் ஸஞ்சாரபதங்கள். வெளியிலும் ஒருசுற்று பதத்துடன் 18கோடிட்டு சூத்ரத்தில் அமைக்கலாம்.

ஸஹஸ்ரலிங்க ஸ்தாபனவிதி (ஆயிரம்லிங்க அமைப்பு)

மத்யே ஸதாசிவம் ப்ராக்வத் வித்யேசாநாம் ப்ருதக் ப்ருதக் |
சதுர்விம்சத் ச தல் லிங்கம் வித்யேசே நா வ்ருதம் புத: || 135
ஸாதாக்யஸ்ய வத் அன்யேஷாம் நாமரூபாணி கீர்த்திதா: |
தத்தத் ஸ்வநாம மந்த்ரேண ஸம்ஸ்தாப்ய விதிசோதித: || 136

(சுப்ரபேதாகமம்—36)

முன்கூறியது போல்லே நடுவில் ஸதாசிவலிங்கத்தைஸ்தாபித்து, அதைச்சுற்றிலும் எட்டுதிசையிலும் எட்டுவித்யேச லிங்கங்களுக்கும் தனித்தனியே இருபத்திநான்கு லிங்கங்களையும் சூழ்ந்ததாக– 25 வீதம் எட்டும் சுற்றிலும் நாற்பதுமாக ஆயிரம் லிங்கங்களை சுற்றுப்பகுதியை பீடஅளவில் கொண்டுள்ளதாக மூன்றில் ஒருபங்கு சுற்றுமிடத்துடன் தனித்தனியே ஏகலிங்க விதிமுறைப்படியே ஸ்தாபித்திடவேண்டும். இதன் பிரதிஷ்டையை எட்டுநாள், 16நாள் அல்லது ஒரு மாஸத்திலோ யாகவிதிமுறையுடன் செய்துமுடிக்கப்படவேண்டும் என்கிறது சுப்ரபேதஆகமம். இதுமிகஅரியசெயலாகும்.

ஆதாரசிலையில் ஒன்பதுகட்டப் பள்ளம் அமைப்பு

ஆதாரவேச்ம மத்யே து நவகோஷ்டம் ஸமாலிகேத் |
கோஷ்டமத்யே விசேஷ்ஷேண சதுரங்குல விஸ்த்தரம் ||
த்ரயாங்குல மதாவாபி விருத்தாகாரம் து நிர்மிதம் |
த்ரயாங்குலம் ஸமாகாதம் நவகோஷ்டம் ப்ரபூஜயேத் ||
கூர்ம சைலே அவடான் சோத்ய புரோக்ஷயேத் புருஷேனது |
சந்தனேனா நுலிப்யாத ரத்னானி விவிதான் நியஸேத் ||

என்கிற ஆகமவிதியின்படி கூர்மசிலையில் நடுவே நான்கு அங்குல அகலத்தில் வட்டமாகவோ சதுரமாகவோ குழியை ஒன்பதுகட்டத்துடன் நடுவிலும் எட்டுதிசையிலும் உள்ளவாறு அமைத்து சுத்திகரித்து சந்தனம்பூசி அதில் உரியரத்தினங்களை திக்பாலர்களின் விதைஎழுத்தால், குழிகளில் வைத்து, பூசைசெய்திட வேண்டும். ரத்தினநியாஸ விதிமுறைப்படி இந்த ரத்தினநியாஸத்தைச் செய்திடவேண்டும்.

ந்யஸேத் ரத்னௌஷதீ லோஹ தாது பீஜாநி பூர்வவத் |
கூர்மம் வா வ்ருஷபம் வா(அ)த ஹைமம் தத்ர விநிக்ஷிபேத் |
விலிக்ய சா (ஆ)யஸேநாத ச்வப்ரம் க்ருத்வா படாவ்ருதம் || 146
வர்மணா (அ)ஸ்த்ரேண ஸம்ரக்ஷ்ய திகீசேப்யோ பலிம் க்ஷிபேத் |
ஸமாசம்ய க்ருதந்யாஸோ ஜுஹுயாத் அஸிநா சதம் || 747

(பூர்வகாமிகே–64)

இவ்வாறு ரத்தினம் முதலான ஐந்துவகைகளையும் வைத்து துணியால்மூடி, கவசமந்திரத்தால் அஸ்திரத்தால் பாதுகாத்து பத்துதிசை அதிபதிகளுக்கும் அன்னத்தால் கைபிடி அளவில் பத்து திசையில் பலியை அளித்து அவ்வாறே நியாஸம்செய்து, குண்டத்தில் அஸ்திரமந்திரத்தால் நூறுஆகுதி செய்வதுமுறை மேலும் இந்த ரத்தின்நியானத்தை அதிகாலையில் சுபமுகூத்த நேரத்தில் செய்ய வேண்டும் என்று காலவிதியும் கூறப்படுகிறது.

ப்ரபாதே சுமுகூர்த்தே து ரத்னநியாஸம் ஸமாரபேத்| (சுப்ரபேதம்-36ல்85)

பீட ரத்னநியாஸவிதி

ந்யஸேத் ரத்னௌஷதீ லோஹ தாது பீஜாதி பூர்வவத் |
கூர்மம் வா வ்ருஷபம் வா(அ)த ஹைமம் தத்ர விநிக்ஷிபேத் ||

(காமிகம்-64)

மேற்காணும் ஆகமவசனப்படி, கருவறையின் நடுவிலேயே லிங்கத்தின் அடியில் **ஆதாரசிலை** என்பதை முதலில் வைத்து, அதன் நடுவேயுள்ள பள்ளமாகஅமைத்திட்ட ஒன்பதுகுழிகளிலும் முறையே ஐந்துவகையில், 1. ரத்தினவகை. 2 ஓஷதிவகை (பச்சிலைமூலிகைகள்) 3. உலோக வகை. 4. தாதுவகை (அரிதாரம்முதலிய கனிமவகை) 5. பீஜவகை (தானியவிதைவகை) இவற்றை ஒன்றன் பின் ஒன்றாக நடுவிலும் கிழக்கு முதலான எட்டுதிசையிலுமாக, ஒன்பதிலும், ஒன்பதுவகையில், கூறிய முறைப்படி வைத்துவிட்டு, அதற்குமேலே தங்கத்தால் செய்யப்பட்ட ஆமை (ஆதிகூர்மத்தை) அல்லது தர்மரூபமான காளைமாடு படுத்தவிருஷபத்தைச் செய்துவைத்து, பிறகு, அதன் மேலே சிவலிங்கபாணத்தை (முப்பகுதியுடன் தூண்போன்றுள்ளதை)சரியாகப் பள்ளத்தில் நடுவே பதித்தவாறு நிலைநிறுத்தி லிங்க ஸ்தாபனத்தைச் செய்திடவேண்டும். பிறகு வட்டமான தாமரைப்பூவடிவமான, பிரம்மபாக சிலையை லிங்க தலைவாயிலாக துளை யால் கிழேபொருத்திடவேண்டும். பிறகு அதற்குமேலே கோமுகை, ஆவுடையார் என்கிற **விஷ்ணுபாகத்தை** தலை வழியாக நடுத்துளையால் பொருத்தி, எட்டுபட்டைமறையும் வரையில் பொருத்தி, சேர்த்திடவேண்டும். இவ்வாறுமுன்றுபாகமும்கூடியிருப்பதாக **லிங்கத்தை ஸ்தாபிக்கவேண்டும்.**

நவரத்னநியாஸவிதி (ப்ரபாசக்தி மயமானவை) (5ல்1)

மாணிக்கம் சைவ வைடூர்யம் நீலம் மரகதம் ததா |
மௌக்திகம் சைவ கோமேதம் வஜ்ரம் புஷ்யம் ப்ரவாளகம் ||
ஏதாநி நவ ரத்னாதி மத்யமாதி விநிக்ஷியேத் || (சுப்ரபேதம்-36).

நவரத்தினம்வைப்புமுறை (சிந்தியவிச்வாகமத்தில்)

மாணிக்கம் சேந்த்ர நீலம் ச வைடூர்யம் ச ப்ரவாளகம் |
முக்தா வஜ்ரம் த்தா புஷ்யராகம் ஸ்பாடிக காண்டகம் ||
மரகதம் சைவ ரத்னாநாம் நவகம் பரிகீர்த்திதம் |

நவஉலோக நியாஸவிதி (5ல்2)

ஸுவர்ணம் ரஜதம் தாம்ரம் ஆயஸம் த்ரபு ஸீஸகம் |
ஆரம் கூடம் ததா காம்ஸ்யம் நவ லோஹ மிதி ஸ்மிருதம் ||

நவபீஜநியாஸவிதி. (தீப்திசத்தி மயமானவை) (5ல்3)

யவ நீவார முத்கம் ச திலம் வை ஸர்ஷபம் ததா |
சாலி ப்ரியங்கு ச்யாமாஸ் ச குளுத்தோ நவபீஜகம் || (சுப்ரபேதம்)

நவதாது நியாஸவிதி. (வீரியசத்தி மயமானவை) (5ல்4)

ஹரிதாலம் ததா ச்யாமம் சந்தனம் ச மனச்சிலாம் |
ஸௌராஷ்ட்ரம் பாரதம் ஸீஸம் கைரிகம் ஹேமமாக்ஷிகம்|
ஏவம் ஸ்மிருத்வா க்ஷிபேத் வித்வான் ப்ராணதாது இந்திரியாதிகே|
ரத்னாநி ப்ராண ஸம்ஞாநி சுபீஜா நீந்திரியாணி ச |
தாதூநி தாதவப் புரோக்தா பீஜமுக்யேந விந்யஸேத் | (சுப்ராயதாகமம்36ல்)

(நவதாதுவகை & ஸ்நபனவிதியில்)

ஹரிதாலம் கந்தகம் ச கந்தம் சைவ மனச்சிலாம் |
மாக்ஷிகம் சைவ ராஷ்ட்ரீம் ச ரஸம் வை கைரிகம் ததா ||
ரஸேந்தும் நவமம் சைவ விந்யஸேத் து விசேஷத:| (காலோத்தராகமம்)

நவஔஷதி (நியாஸவிதி) (9வகை) (5ல்5)

ஸஹதேவீ மத ப்ராம்ஹீம் த்ராயந்தீம் லக்ஷணாவதீம் |
சங்கபுஷ்பீ பலாபீஜா ஜீயோதிஷ்மதீ அபராஜிதா: ||
விஷ்ணுக்ராந்தீ பலா மோடா பில்வ தாத்ரீ பலாம்ருதா: |
சதாஹ்வா சாரிபா துர்வா குச வ்யாக்ரீ புனர் நவா | (மிருகேந்திராகமம்)

பஞ்சஔஷதங்கள் (ஐந்து பச்சிலைகள்)

ஸஹதேவீ ஏகபத்ரம் ச பத்ரம் வைகங்கதம் ததா |
விஷ்ணுகிராந்திஸ் ச பஞ்சைதே பஞ்சைஷத மிதி ஸ்மிருதம் ||

அபாவே யோக்யதிரவியம்
(இல்லாப்பொருளின் மாற்றுப்பொருள்)

ரத்னாபாவே ந்யஸேத் வஜ்ரம் லோஹாபாவே து காஞ்சனம் |
ஜாபாவே யம் சஸ்தம் தாத்வாபாவே ச தாளகம் ||
ஔஷதீநா மபாவே து ஸஹதேவீம் விநிக்ஷிபேத் |



11வரிசையில் 1001 லிங்கஅமைப்பு

அஷ்டபந்தனம்

(மருந்துசாத்தும் முறைகள்)

லிங்கம்அருள்தர உதவும் பந்தனம்

ஆகம வழிபாட்டு முறையில் பூஜைக்கு உரிய லிங்கம் பிம்பம் எதுவா யினும் அது மந்திரத்தால் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும், பிரதி ஷ்டை என்பது பந்தனம் செய்தபின்பே செய்யப்படுவதாகும், லிங்கம் அல்லது பிம்பம் ஒரு இடத்தில் நிலைநிறுத்தி வைத்து ஸ்தாபனம் செய்யும்போது, அதில் பீடத்தையும் லிங்கத்தையும் இணைப்பதற்காகவே இந்த பந்தனம் செய்யப்படுகிறது. இந்த பந்தனம்செய்யும்முறையானது பலவகையாகும்.

சிவாலயத்தில் லிங்கமானது, பிண்டிகை மற்றும் லிங்கம் என்ற இரு பகுதிகளை உடையது. இதில் பிண்டிகை உமையவள், என்றும் லிங்கம் சிவன் என்றும், இவர்கள் இருவரின் சேர்க்கையே பிரதிஷ்டை என்கிறது காமிகாகமம்.

பிண்டிகாயாம் உமாதேவீ லிங்கே ஸ்யாத் ச ஸதாசிவ: |
தயோர் யக் க்ரியதே யோக: ஸா ப்ரதிஷ்டேதி கத்யதே ||

(காமிகாகமம்)

இதில் பீடசக்தியே உமை, லிங்கமே சக்திமானாகிய சிவன். அதாவது இவை இரண்டும் (தர்மம் = பண்பு + தர்மி = பண்பைஉடையவன்) தர்மதர்மிஸ்வரூபமாகும். இவர்களுக்குள் வேறுபாடு கருதக்கூடாது. பிண்டிகையோடு லிங்கத்தை சேர்த்து இணைப்பதாக அஷ்டபந்தனத்தைச் செய்யவேண்டும். இதனைக் கூறும் ஆகமசான்று.

சக்தி சக்திமதோர் த்யாயேத் ந பேதோ தர்ம தர்மிணோ: |
லயாந்தம் மந்த்ர முச்சார்ய சிருஷ்டிமார்க்கேன விந்யஸேத் |
பிண்டிகாயாம் ச ஸம்யோஜ்ய பந்தயேத் அஷ்டபந்தனை: ||

(காமிகாகமம் மி 64-53-54)

இவற்றுள் ஆதாரம் என்பது ஆஸனம் ஆகும். ஆதேயம் என்பது பரமசிவம் ஆகும், இதில் சிவம் என்பது நிஷ்களம் ஆகும். ஆதாரம் என்பது ஸகளம் ஆகும். ஸகளம்=உருவமானது, + நி\ஷ்களம்=அருவம். (உருவமற்றது) இதனைகூறும் ஆகமசான்று

ஆதாரம் ஆஸனம் ப்ரோக்தம் ஆதேயஸ் து பரஸ் சிவ: |
சிவஸ் து நிஷ்களப் ப்ரோக்தஸ் து ஆதாரஸ் ஸகளோ பவேத். ||

இவ்வாறு பீடத்தில் லிங்கத்தைச் சேர்த்து, அங்கு பரநாதமயமான மூலமந்திரத்தை ஜீவனாக நியாஸத்தை செய்யவேண்டும். ஆலயத்தில் லிங்கங்கள் ஏழு வகையில் உள்ளன. இந்த ஏழுவகையான அனைத்து லிங்கத்திற்கும் பந்தனத்துடன் ஸ்தாபனத்தையும், மந்திரத்தால் பிரதிஷ்டையையும் தவறாமல் செய்யவேண்டும். லிங்கம் பீடம் இவைகளினிடையே உள்ள துளையில் பந்தனத்தைச் செய்யாவிட்டால் அதில் தெய்வசாந்நித்யம். இருக்காது.



அஷ்டபந்தனத்தின் அவசியம் (அருள்பெறஉதவுவது)

பீடம் என்பது பூமியாகிய மண் கருப்பொருளின் ஆற்றல் உடையது. லிங்கம் அல்லது பிம்பம் விண்ணாகிய கருப்பொருளின் ஆகாசத்தின் ஆற்றல் உடையது. இவையிரண்டையும் எட்டுதிக்பாலகர்களின் மூலவித்து எழுத்துக்களாலான எட்டுதிக்பாலர்களின் அம்சமான எண்பொருள் மருந்தாகிய அஷ்டபந்தனத்தால் ஒன்றுசேர்பதாலேயே அதில் தெய்வசாந்நித்யம் எனப்படுகிய இறையருள் நிலைபெறுகிறது. எனவே பந்தனம் வழிபாட்டிற்கு மிகவும் அவசியமாயுள்ளது. அஷ்டபந்தனம் இல்லாமல்போனால் தீமையே. பந்தனமில்லாத லிங்கம், பீடம், பேரம் இவைகளில் செய்யப்படுகின்ற பூஜை, நைவேத்யம், பலிதானம், நித்யோத்ஸவம், பிரதக்ஷிணம், நமஸ்காரம், நிருத்தம், கீதம், வாத்யம் மந்த்ரஸ்துதி, நித்யகிரியைகள், நைமித்திகக்கரியைகள் முதலிய அனைத்துவகையான உபசரிப்புச்செயல்களுமே பயன் தராதவையாகும். எனவே இவைகள்யாவும் பயனளிக்கவேண்டுமானால், நாம் அருள்பெற வேண்டுமானால், லிங்கம், பிம்பம், பலிபீடம், இவைகளில் அஷ்டபந்தனம் எப்போதும் வலுவுடன் விரிசலின்றி

விலகாது இருப்பது அவசியமாகிறது. இதற்கான சான்று.

பக்வா (அ)பக்வ பதம் ஞாத்வா பந்தயேத் ஸூத்ருடம் புத: |
அஷ்ட பந்தன ஹீநே ச பூஜா நைவேத்ய மேவ ச ||

பலிர் நித்யோத்ஸவஸ் சைவ நமஸ்கார ப்ரதக்ஷிணம் |
ந்ருத்தம் கீதம் ச வாத்யம் ச நித்ய நைமித்திகம் ததா ||

உபசாராணி ஸர்வாணி நிஷ்பலம் து விதீயதே |
பீட பந்தந ஹீநே ச க்ராமநாசம் விநிர்த்திசேத் ||

(பூர்வகாரணாகமம் 136ல்)

அஷ்டபந்தனம் சொல்விளக்கம்

அஷ்டபந்தனம் என்ற சொல்லில்உள்ள எழுத்துக்கள் ஐந்தும், , அனைத்திற்கும் மூலமானவையும், ஆதிகாரணமானவையும் , பிந்துவின் ஐந்துகலாசக்திரூப செயல்களாலான ஐந்துதொழில்களைக் குறித்து, இறையருள் செயல்படுவதை உணர்த்துவன ஆகும். பெயரில்உள்ள அ என்ற எழுத்து படைத்தலையும், ஷ்ட என்ற எழுத்து காத்தலையும், பம் என்ற எழுத்து ஒடுக்கத்தையும், த என்ற எழுத்து திரோபாவச் செயலான மறைத்தலையும், ந என்ற எழுத்து அருள்வதான அனுக்ரஹத்தையும், ம் என்ற பிந்து எழுத்து எல்லாவிதமான பயன்களை அளிப்பதையும் உயர்த்துவனவாகும். இதனால் லிங்க பீடங்களின் இடைவெளியில் மந்திரம், தந்திரம், பாவனைகளுடன் திரிகரணத்தால், திரிகரணசுத்தியுடன், கிரியையை உரியபாவனையுடன் அஷ்டபந்தனம் செய்யத்தக்கது என்று சைவாகமங்கள் கூறுகின்றன. பெயரெழுத்துப் பயன்கூறும் ஆகம சான்று, காரணாகமத்தில்

அகாரம் ஸ்ருஷ்டிரூபம் து ஷ்டகாரம் ஸ்திதிரூபகம் |
ப³காரம் ஸம்ஹ்ருதிம் சைவ திரோபாவம் த⁴காரகம் ||
அனுக்ரஹம் நகாரம் ச பிந்துஸ் ஸர்வார்த்த ஸாதக: |
இத் யேவம் மந்த்ர தந்த்ரம் ச பாவனம் ஸந்தி பந்தனம் ||

(காரணாகமம் 136ல் சுலோகம்1-3)

மூவகை பந்தனப்பயன்
(பந்தனவகையின் சிறப்புப்பயன்)

ச்ரீப்ரதம் சாஷ்டபந்தம் ஸ்யாத் புக்திதம் பஞ்சபந்தனம் |
மோக்ஷதம் து த்ரிபந்தம் ஸ்யாத் பந்தயேத் லிங்கபீடயோ:||
வர்த்தனம் சாஷ்டபந்தம் ஸ்யாத் ஸ்ரீகரம் பஞ்சபந்தனம் |
மோக்ஷம் சைவ த்ரிபந்தம் ஸ்யாத் பந்தயேத் தத் விதானகம் ||

என்றும் மேற்கண்ட ஆகம வாக்கியங்களால், தெய்வங்களுக்கு கோயில்களில் – அஷ்டபந்தனம் செய்விப்பது செல்வத்தை அளிப்பதும், வளர்ச்சியைத் தருவதுமாகும், பஞ்சபந்தனம் செய்விப்பது ஞானத்தையும், நல்லறிவையும் செல்வத்தையும் அளிப்பதாகும். த்ரிபந்தனம் செய்விப்பது வீடுபேறாகிய முக்தி என்னும் மறுமையில் ஏற்படும் பேரின்பநிலையை அளிப்பதாகும் என்று சைவாகமங்கள் உரிய பயன்களைக் கூறுகின்றன. எனவே பக்திசிரத்தையுடன் பந்தனம் சாத்தி பயனடையவேண்டும்.

ஸ்ரீகரம் ஜயதம் புண்யம் ஆயு ராரேக்ய வர்த்தனம் |
ஸர்வசத்ரு க்ஷயகரம் ஸர்வோபத்ரவ நாசனம் ||
புக்திதம் முக்திதம் ந்ருணாம் ஸர்வஸௌபாக்ய வர்த்தனம் ||

(பூர்வகாரணாகமம் 136ல்58–59)

பந்தனவகைகள் (ஏழுவகைப் பிணைப்புமுறைகள்)

பீடமும் பிம்பமும் சேரும் பொருந்துவாயில் அஷ்டபந்தனத்திற்கு மாற்றாக சுவர்ணபந்தனம், ரஜதபந்தனம், ஸீஸபந்தனம் (பொன் / வெள்ளி / ஈயம்) ஆகியவை உலோகத்தால்நிறப்பிக்கட்டி வலுவூட்டுவதாகும்.

I. இவ்வாறு ஒரு உலோகத்தை உருக்கி ஊற்றிப் பூசிக்கட்டுவது ஏகபந்தனம் எனப்படும்.

II. மேலும் த்ரிபந்தனம் என்பது மூன்று பொருள்கலவை)

III. பஞ்சபந்தனம் என்பது ஐந்துபொருள் கலவை

IV. அஷ்டபந்தனம் எட்டுபொருள்கலவை என்பனவாகும். இவ்வாறாக சைவாகமங்கள் மூன்றுவகையான சாந்துவகைகளை உபயோகிக்கும் முறைகளைக் கூறுகின்றன. இவற்றை விரிவாக இனி காண்போம்.



சுவர்ணபந்தனம் (தங்கக் காப்புக்கட்டு)

லிங்கம் அல்லது பிம்பம் (சிலை / பதுமை) இவை நிலைநிறுத்தப்படுகிற பொழுதில் பெறும் இதனடியிலுள்ள பீடம் ஆகியவற்றின், பொருத்துவாயில் தங்கத்தால் துளையை இடைவெளியை அடைத்து அழகுற உறுதிசெய்வது **சுவர்ணபந்தனம்** எனப்படும். சுவர்ணத்துக்கு மாறாக **வெள்ளி** அல்லது **ஈயம்** அல்லது **செம்பு** ஆகிய உலோகங்களையும் உபயோகிக்கலாம். அதாவது தங்கத்தைக் குவையில் வைத்து உருக்கி, அந்த திரவத்தை பீடம் மற்றும் பிம்பம் ஆகியவற்றின் இடுக்குகளில் ஊற்றிப் பாயச்செய்து, பொருத்துவாயில் விரலுக்கு மோதிரம் அணிவித்தாற்போல வளையமாக அமைத்து, நன்கு கெட்டிப்படுத்துதல் இதற்குரிய செய்முறையாகும். இம்முறைச் செயலானது வெப்பத்துடன் கூடியதால் இது **உஷ்ணபந்தனம்** என்று அதாவது உலோகபந்தனத்தையே வெறோருவகையில் அதாவது சொல்லப்படும். உலோகத்தை மேற்கண்டவாறு உருக்கி, அப்பொருளை மனையில் வைத்து அடித்து, மிகமெல்லிய ரேக்குத் தகடுகளாக்கி, அவற்றை பீடத்தின் இடைவெளிகளில் திணித்து, குத்தூசிவேலையைப்போல நன்றாக உள்ளேசெலுத்தி, கெட்டிப்படுத்துவதாகவும் ஒருசெய்முறை உண்டு. (சீத= குளிர்ந்த குத்தூசிகள்) இதனால் **சீதபந்தம்** என்று இம்முறை சொல்லப்படும். சிவலிங்கத்திற்குச் **சுவர்ணபந்தனம்** சிறந்ததாகும்.

உஷ்ணபந்தனமும் சீதபந்தனமும் (உலோகக்கட்டின் ஆயுட்காலம்)

சிற்பிகளால் கருங்கற்களால் செய்து அமைக்கப்படுகின்ற வகையான மானுஷமான லிங்கம் மற்றும் தெய்வப்படிமங்களுக்கு **உஷ்ணபந்தனமும், சீதபந்தனமும்** செய்வது ஏற்றதாகப் பொருந்தும். ஆனால் **சிஷ்டலிங்** கவகைகளுக்கு மானுஷலிங்கமில்லாத மற்றய ஆறுவகையான ஸ்வயம்வியக்தமான **சுயம்புலிங்க மூர்த்தங்களுக்கும்,** மகரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டவைக்கும், புராதனமானதுமான லிங்கங்களுக்கும், பிம்பங்களுக்கும் **சீதபந்தனம்** செய்யத்தக்கது ஆகும். இவைகளுக்கு உலோகத்தைக் காச்சிஊற்றுகின்ற **உஷ்ணபந்தத்தை** அறவே நீக்குதல்வேண்டும். இது நூறுஆண்டுகளுக்கு உறுதியுடன் இருக்கும். அதன்பின் மீண்டும் இங்ஙனமே செய்திடவேண்டும். வெள்ளிக்கட்டு எனும் ரஜதபந்தனம் 50ஆண்டுகளுக்கும், ஈயக்கட்டு எனும் ஸீஸபந்தனம் 25ஆண்டுகளுக்கும் வலுவுடன் இருக்கும். என்பது பந்தனம் ஒவ்வொன்றின் ஆயுள்காலம் ஆகும்.

ஏகபந்தனம் (குங்குலிய பந்தனம்) (குறுகியகால பந்தனமுறை)

இந்தமுறை பந்தனத்திற்கு ஒரு பாகம் குந்துருக்கம் (வெள்ளைக் குங்கிலியம்) அதில்பாதி நல்ல எண்ணெய், ஆக இவ்விரண்டையும் சேர்த்து அடுப்பில் காய்ச்சி அதனைச் சாந்தாக உபயோகித்தல் ஏகபந்தனம் என்று சொல்லப்படும். குந்துருக்கத்துடன் நீர்விட்டுப் பிசைந்து, பிறகு எண்ணெய்விட்டுப் பிசைந்து உபயோகித்தலும் ஒருமுறையாகும். பாலாலயத்தில் பிம்பங்களை ஸ்தாபனம் செய்வதற்கு இம்முறை உபயோகப்படுகிறது. இதன் ஆயுட்காலம் ஒருவருடகாலம் எனவும் அறியப்படவேண்டும்.

த்ரிபந்தனம் (மூப்பொருளால் கட்டிஇணைத்தல்)

லாக்ஷா குக்குளு பாஷாணம் மாஹிஷம் நவநீதகம் |
த்ரிபந்தன மிதி ஜ்ஞேயம் பக்வா (அ)பக்வம் து பந்தயேத் ||

(காரணாகமம் 136ல்)

I. இதன்படி, 1.சுக்கான்கல்பொடி, 2.கொம்பரக்கு, 3.குந்துருக்கம் (குங்குலியம்) ஆகியவற்றை, மூன்றையும், எருமைநெய்யுடன் காய்ச்சி, சாற்றுவது த்ரிபந்தனம் என்றும், இதனை பக்வம், அபக்வம் என்ற இருவகையிலும் சாத்தலாம் என்கிறது காரணாகமம். பக்குவபந்தம் எனப்படுவது, காச்சிஊற்றிகட்டுறச்செய்வது. அபக்குவபந்தம் என்பது, இடித்து, உருட்டிவைத்து சாத்துவது.

லாக்ஷா ஸர்ஜ பாஷணம் மாஹிஷம் ஸீஸபந்தனம் |
த்ரிபந்தன மிதி க்யாதம் ஸர்வஸித்திகரம் சுபம் ||

(பூர்வகாரணே–136ல்11)

II. மற்றோர்வகையில். 1. சுக்கான்கல்லின்பொடி, 2. குந்துருக்கம் எனப்படுகிற குங்குலியம், 3. எருமையின்வெண்ணெய் ஆகிய இம்மூன்றும்சேர்ந்த சாந்தும், திரிபந்தனம் ஆகும். இதில் சுக்கான்பொடி 2பாகமும், குந்துருக்கம் 3பாகமும் வெண்ணெய் 2பாகமும், ஆக ஒன்றாகச் சேர்த்து, அக்கலவையை ஒருபாத்திரத் திலிட்டு. நெருப்புஅடுப்பில் வைத்துக்காய்ச்சி. உபயோகித்தல் ஒருமுறை. இதுவே பக்குவபந்தனம் ஆகும். வெண்ணையைச் சேர்த்து உரலில்போட்டு உலக்கையால் இடித்து மெழுகுபோலாக்கி எடுத்து அபக்குவமுறையிலும் பந்தனம் செய்யலாம். இதுவே அபக்வபந்கனம் ஆகும். இப்பந்தனத்தின் ஆயுட்காலம் மூன்றுஆண்டு என்கிறது ஆகமம்.

III. திரிபந்தனமுறையில் மற்றும் ஓர் எளியமுறைஉள்ளது. அது 1.சுக்கான்பொடியுடன் 2.இளகிக்கசிந்த நாட்டுவெல்லமும், 3.முதிர்ந்து கனிந்த பேயன்வாழைப்பழங்களையும் நன்கு சேர்த்துப் பிசைந்து, திரிபந்தனசாந்தை தயாரித்தல், இது பெரிதும் வழக்கத்தில் உள்ளது. பீடத்தில் ரத்தின நியாஸம் செய்தபின்பு பீடத்தின் பள்ளத்தைச் சுற்றிலும், இந்தசாந்தையே பூசி, அந்தக் குழியில்



படிமத்தின்அடியை இறக்கிப், பொருத்துவாயில் அஷ்டபந்தனம் செய்வது வழக்கம். தளத்தில் பீடம் நிலைபெறுவதற்கு இந்சாந்தை உபயோகிப்பது, அதிகமாகப் பெரும் வழக்கமாக சமயத்துறையில் உள்ளது.

பந்தன இருவகை

அபக்வம் பக்வம் ஏவம் து த்விவிதம் பந்தன க்ரமம் |
பக்வம் து பாசயோக்யம் ஸ்யாத் அபக்வம் மர்த்தனம் பவேத் ||
பக்வா பக்வபதம் ஞாத்வா பந்தயேத் சுத்ருடம் புன: |

பந்தனம் பக்வம் என்றும் அபக்வம் என்றும் இருவகைப்படும். பக்குவம் காய்ச்சிசாத்துவது அபக்வம் இடித்து சாத்துவது ஆகும்.

பஞ்சபந்தனம் (ஐம்பொருளால் கட்டும்காப்பு) (ஐந்துபொருள்கலவையால் இணைக்கும்முறை)

பாஷாணம் சர்க்கரா சூர்ணம் மதூச்சிஷ்டம் ச குக்குளும் |
லாக்ஷா ச சங்கசூர்ணம் ச பஞ்சபந்தன மிஷ்யதே ||

(காரணாகமம் 136ல்)

I. ஆகமக்கூற்றின்படி 1.சுக்கான்கல்பொடி 2.தேன்மெழுகு, 3.குங்குலியம், 4.கொம்பரக்கு, 5.சங்குப்பொடி ஆகிய ஐந்தையும், நெய் அல்லது நல்லெண்ணெயுடன் கலந்து, அடுப்பில் காச்சியோ, அல்லது உரலில் இட்டு இடித்தோ தயாரிப்பது பஞ்சபந்தனம் எனப்படுவதாகும்.

II. மேலும் 1. சுக்கான்பொடி, 2. கொம்பரக்கு 3. குந்துருக்கம், 4. கஷாயம் 5. வெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் ஆகியவைசேர்ந்த கலவையே பஞ்சபந்தனம் எனப்படும். இச்சாந்தில், 1)குந்துருக்கம் இரண்டுபாகமும் 2) சுக்கான்கற்பொடி ஒருபாகமும், (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகிய திரிபலாசூர்ணம் ஊரியதான 3) கஷாயம் ஒரு பாகமும் 4) கொம்பரக்கு முக்கால்பாகமும், 5) வெண்ணெய் அல்லது எண்ணெய் ஒருபாகமும் சேர்க்கவேண்டும். இதனைக் காச்சாமலும் உபயோகிக்கலாம். இதன் காச்சாதசாந்தை உரல்கல் அல்லது மரஉரலில்போட்டு எருமைவெண்ணெயை கொஞ்சம் இளஞ் சூட்டுடன் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு, ஒன்றுசேர்த்து, நன்கு, உலக்கையால் பலமுறை இடித்து ஏற்படும் இளஞடசூட்டுடன் கொஞ்சம் மெழுகுபோல் ஆனபின்பு, இதனை சிலையின் அடியில்

(இடுக்கில்) சாத்தவேண்டும். இதன்ஆயுள்காலம் ஆறுஆண்டுகள் ஆகும். பந்தனத்தை எப்பொழுதும் அதற்கு உரியகாலம் வரை யிலேயே சாற்றிவைத்திருக்கவேண்டும். இந்த பந்தம் நாளடைவில் விரிசலடைந்தாலோ, விலகினாலோ புதியதாய் மீண்டும் தயாரித்து சாத்திடவேண்டும் லிங்கம் பீடங்களுக்கு இடையில்உள்ள துளையை முதலில், சலித்த தூய ஆற்றுமணல்களால் நிறப்பி, வலுவூட்டியபின்பு, அதன்மீது பந்தனம் செய்யப்படவேண்டும் என்கிறது. ஆகமம். இதனைக் கூறும் ஆகம சான்று, இதுவே.

ஸிகதாபிஸ் ஸமாபூர்ய ஸாந்த்ரம் வை லிங்க பீடயோ: |
ததூர்த்வே விந்யஸேத் பந்தம் விஷ்ணுபாகா வஸாநகம் ||
சர்க்கரா ஸர்ஜராம்சம் து ஸமம் க்ருத்வா து சூர்ணயேத் |
மாஹிஷம் நவநீதம் ச மர்த்தயேத் தேசிகோத்தம: |
பஞ்சபந்த மிதி ச்லாக்யம் விவரே தம் ப்ரயோஜயேத். || (காரணாகமம்)

இதில்காணும் பெயர்ச்சொல் = 1)ஸித்தம் = ஆற்றுமணல்சலித்தூள், 2)ஸர்ஜராம்சம் = ஸர்ஜமரப்பிசினி (கோந்துவகை), 3)ஸ்ரீவேஷ்டகம் = திருவட்டப்பிசினி, 4)நவநீதம் = புதுவெண்ணை. 5)குக்குளு = குங்குலியம், 6)பாஷாணசூர்ணம் அல்லது சர்கராசூர்ணம் = சுக்கான்கல்பொடி) என்றறிக.



அஷ்டபந்தனம் (எண்பொருட்கலவைக்கட்டுதல்)

அஷ்டபந்தனம் என்பது, எட்டுவிதப்பொருள்கள் ஒன்றாகச் சேர்ந்த ஒரு மருந்துவகைச் "சாந்து" ஆகும். இதனை உரலிலிட்டு உலக்கையால் இடிக்கும் நேரத்தில் இடித்தலால் விளைந்த சூட்டினால் இக்கலவை இளகிவிடும். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம்

இது கல்லுக்கு நிகராக கெட்டித்தன்மையைப்பெறும். இது உறு திமிக்கது. இதுவே, கோயில்களில் கருங்கல்சிலைகளை அதன் பீடப்பள்ளத்தில்வைத்து, இடைவெளிப்பள்ளத்தில் இந்த சாந்தை வைத்து பந்தனம் செய்வது பெருமளவில் வழக்கத்தில் உள்ளது. இதில்சேரும் எட்டுபொருள்களையும் அவற்றிற்கான அளவுகளையும் ஆகமம் தெரிவிக்கிறது. அதற்கான ஆகமச்சான்று இதுவே.

அஷ்டபந்தம் த்தக் க்ருத்வா ஜது குக்குலு ஸர்ஜ யுக் |
ஸத்மம் ச ஸ்படிகம் சைவ சர்க்கரா குருவிந்தகம் ||

தைலம் வா சாஸ்டமிச்ரம் வா ததி வா சிக்கணம் புத:: |
ஏவம் பீடே ஸமாயோஜ்ய தத்ர ந்யாஸம் ஸமாரபேத் ||

(பூர்வகாமிகாகமம் 64ல்–15–16)

மற்றோர் நூலில் இதுவே.

லாக்ஷா ஸர்ஜரஸம்யுக்தம் ஸஸித்தம் குருபீஜகம் |
குக்குளும் கைரிகம் சைவ குளம் தைல மிஹேச்யதே ||
அஷ்டபந்தன மேவம் து மானுஷம் லிங்க முச்யதே | (காரணாகமம்)

எட்டுமூலப்பொருள் வரிசைமுறை

தைலம் து ப்ரதமம் வித்தி த்விதீயம் கௌட முச்யதே |
த்ருதீயம் கைரிகம் வித்யாத் சதுர்தம் குக்குளும் ந்யஸேத் ||
பஞ்சமம் ஸிகதாம் வித்தி ஸஷ்டம் ஸ்யாத் ஸ்நிக்த முச்யதே |
ஸப்தமம் ஸ்யாத் ஸர்ஜரஸம் லாக்ஷா சை வாஷ்டமம் ஸ்மிருதம் ||

(காரணாகமம்)

இதன்படி மூலப்பொருட்கள் முறையே 1.செம்பஞ்சு (ஜது–ரக்கதூலம்) 2. கொம்பரக்கு (லாக்ஷா) 3.குங்குலியம் (குக்குலு) 4. வெள்ளை நிறத் தேன்மெழுகு (மதூச்சிஷ்டம்) 5. பூங்காவி (காஷாயம்) 6. (கைரிகம்/ மலைக்கல்பொடி) சுக்கான்கல், 7 சங்குப்பொடி அல்லது ஸ்படிகத்தூள் (சங்கசூர்ணம்) 8.ஜாதிலிங்கம் (ஹிங்குளம்) 9.வெல்லம் (குளம்) 10.எருமை வெண்ணெய், 11.எள்ளின் தூய நல்லெண்ணெய் (தைலம்) 12.திருவட்டப்பிசினி (ஸர்ஜரஸம்) ஸ்ரீவேஷ்டகம்) 13.குந்துருக்கம் = பூனைக்கண் குங்குலியம், 14.கல்காவி = (நற்காவி) 15.ஸர்ஜரஸம் = பிசினி, 16.கார்ப்பாஸம் = பருத்திபஞ்சு (சிவப்பு), 17.சிலாசூர்ணம் = சுக்கான்கல்பொடி, 18.சர்க்கரா = கல்தூள் (பாஷாணசூர்ணம்) ஆகிய மூலப்பொருட்கள் இவ்வாறாக அஷ்டபந்தனதயாரிப்பிற்காக ஆகமங்களில் கூப்படுகின்றன.

எட்டு மூலப்பொருளின் அளவுமுறை
(அஷ்டபந்தன த்ரவ்ய மானம்)

த்ரிபாகம் சர்க்கரா சூர்ணம் த்விபாகம் குந்துருஷ்ககம். |
லாக்ஷாசூர்ணம் து பாகைகம் மதூச்சிஷ்டம் த்ரிபாதகம் ||
காஷாயம் து த்ரிபாதம் ஸ்யாத் ததைவ ரக்ததூலகம் |
நவநீதம் த்ரிபாதம் ஸ்யாத் ஹிங்குளம் பாத மேவச ||
ஹிங்குளா (அ)பாவகாலே து பந்தனம் பலஹீநகம்|| (காரணாகமம் 136)

சான்றில் அளவுச்சொற்களின் பொருள்விவரம்

1) பாதம் (அ) ஏகபாதம் = கால்பங்கு (4ல் 1 பங்கு), 2) அர்தம் / த்விபாதம் = 4ல்2 பங்கு / அரைபங்கு, 3) பாதோனம் / த்ரிபாதம் = முக்கால் (4ல் 3 பங்கு). ஏகம்/ பூர்ணம், ஸமம் = முழு பங்கு/ ஒருபங்கு) என்பவை மேற்காணும் சான்றில்உள்ள, அளவுச்சொற்களுக்கு பொருள் முறையேஆகும். இவ்வசனப்படி, அஷ்டபந்தனசாந்து தயாரித்திட உரியபொருள்கள் முறையே 1.சுக்கான்கல்பொடி மூன்றுபங்கு, 2. குங்குலியம்பொடி இரண்டுபங்கு, 3.கொம்பரக்குப்பொடி ஒருபங்கு, 4.நற்காவிப்பொடி முக்கால்பங்கு, (பூங்காவி), 5. வெள்ளைத்தேன்மெழுகு முக்கால்பங்கு 6. செம்பஞ்சு முக்கால்பங்கு, 7.ஜாதிலிங்கம் ஒன்றேகால்பங்கு, 8. எருமை யின் புதுவெண்ணை முக்கால் பங்கு உரியஅளவுகள் ஆகும். இதில் ஹிங்குளம் எனும் ஜாதிலிங்கத்தின் அளவு குறைந்தால் அந்தபந்தனம் வலுவிழந்துவிடும். ஆகையால், உரியஅளவில் லிங்கசெந்தூரப்பொடியை சேர்ப்பது அவசியம் என்று. காரணாகமம் கூறுகிறது. இந்த அளவுமுறையே மரபில், அதிகமாக வழக்கத்தில் உள்ளது. இவ்வாறே இக்கால பந்தனமருந்து தயாரிக்கப் படுகிறது.

எண்	பொருள் / பெயர்	அளவு	எழுத்தால் அளவு
1.	கல்காவிப்பொடி	7½	தோலாஏழரைத்தோலா எடை
2.	சுக்கான் கல்பொடி	25½	தோலாஇருபத்தைந்தரை தோலா
3.	குங்குலியப்பொடி	9	தோலாஒன்பது தோலா எடை
4.	செம்பஞ்சு சிகப்புபஞ்சு	1	தோலாஒரு தோலா எடை
5.	கொம்பரக்கு	3¾	தோலாமூன்றேமுக்கால் தோலா
6.	ஜாதிலிங்கம்	7½	தோலாஏழரை தோலா எடை
7.	வெள்ளை தேன்மெழுகு	3¾	தோலாமூன்றேமுக்கால் தோலா
8.	எருமை வெண்ணெய்	7½	தோலா ஏழரைத் தோலா எடை

இந்த எட்டு பொருட்களைத் தனித்தனியே இந்தஅளவிலேயே எடுத்து, நன்குபொடித்துக் கலந்து, அதனை 20 பாகமாகச்செய்து ஒவ்வொன்றாக உரலில் இட்டு இடித்து, தனித்தனியே உருட்டி வைத்துக்கொள்வது முறை. தேவைப் படும்போது இதை எடுத்து இடித்துக்கொள்வது செயல்முறையாகும்.

அஷ்டபந்தன மருந்து தயாரிப்புமுறை

அஷ்டபந்தனப்பொருட்களும் அளவுமுறையும்

(எட்டுபொ.ருள்கள்)

கார்பாஸ தூலகம் சைவ மஹிஷாஜ்யம் து சர்க்கரா
லாக்ஷாசூர்ணம் மதூச்சிஷ்டம் குந்துருஷ்கஸ்ய சூர்ணகம்

(எட்டுபொருட்களின் அளவுகள்)

ஏகபாதம் கார்ப்பாஸம் மாஹிஷா (ஆ)ஜ்யம் து தத்ஸமம்
சிலாசூர்ணம் சதுர்பாகம் லாக்ஷா ச ஹ்யேக பாககம்
பாகார்தம் து மதூச்சிஷ்டம் குந்துருஷ்கம் த்விபாககம்
காஷாயசூர்ணம் கார்தம் ஏகார்தம் குடம் உச்யதே
திரவ்யாண்யே தானி ஸர்வாணி பாகார்தார்த்த மிதிஸ்மிருதம்

(காரணகமம்)

அஷ்டபந்தன மருந்தின் தயாரிப்புமுறை

முதற்கட்டப்பணி

சுக்கான்கல்லைக் கொண்டுவந்து, அதில் ஒரு கையளவு எடுத்துப் பொடித்து, இரும்புச்சட்டியில் இட்டு, நெருப்பில் வைத்து, வறுக்கவேண்டும். உப்பைப்போல் வெடிக்குமானால் அது வெடிசுக்கான். அது ஆகாதது ஆகும். அப்பொருள் நீக்கவேண்டியது. இவ்விதம் சோதித்து வெடிக்காமல் இருப்பதும் மணல்போன்று கிடைக்குமானால் அதுவே பொருத்தமாகும். கொம்பரக்கு என்பது அவலரக்கு அல்ல. மரப்பட்டையுடன் ஒட்டிக்கொண்டிருக்கும். செம்பஞ்சு என்பது சிவப்புச்சாயமேற்றிய பஞ்சு அல்ல. சிகப்புநிறபருத்திவகையான ஜாதி செம்பஞ்சு ஆகும். இளம்காவி நிறத்தில் உள்ளது கோத்தி என்று கூறுவர். இது பீஹார், ஆந்திரா பகுதியில் மிகுதி. இதனை கதர்க்கடைகளில் கூறி ஏற்பாடுசெய்து பெறலாம். வெள்ளைநிறத்தேன் மெழுகு என்பது தேன்சத்து (சக்கைக்கூடு) முற்றிலும் அற்றுவிட்ட தேன்மெழுகுதான். (மெழுகுவர்த்திக்குரிய செயற்கை மெழுகல்ல. இது ஆகாது). மற்றவற்றையும் சரிபார்த்து போலிப்பண்டமாய் இல்லாமல் நல்லவையாகவே மூலப்பொருட்களை வாங்கி, எல்லாவற்றையும் சுத்தம்செய்து, தூசு துப்பட்டை இல்லாமல், இவைகளை சேராதவாறு தனித்தனியே வைத்துக்கொள்ளவேண்டும்.

இரண்டாம் கட்டப்பணி

வெண்ணெயில் ஈரம்இல்லாமல் செய்துகொள்ள வேண்டும். வெண்ணெயில் உள்ள நீர்ச்சத்தை அகற்ற ஒரு நல்ல நடைமுறை உண்டு. அது, புதுப்பானையை, தேவைக்கு ஏற்ற அளவில் வாங்கி,

அதை நன்றாகக் கழுவி, வெய்யிலில் காயவைத்து, ஈரம் போனபின்பு ஒருஇரவு நிழலில் வைத்துவிட்டு, மறுநாட்காலை அவற்றின்மீது வெண்ணையை அரைஅங்குல கனம் வெளிப்புறம் முழுவதும் அப்பி, வெய்யில்படாத நல்ல, நிழல்உள்ள அறையில் இரண்டு அல்லது மூன்று நாள் வைத்திருந்தால், வெண்ணையில் உள்ள ஈரப்பசை முழுவதையும் புதுமண்பானை உறிஞ்சிவிடும். அதன்பிறகு அந்த வெண்ணெயைப் அஷ்டபந்தனம் தயாரித்திட ஒன்றுசேர்க்கப் பயன்படுத்தலாம்.

மூன்றாம் கட்டப்பணி

மேலே கொடுத்துள்ள அளவுப்படி, ஏழுசரக்குகளையும் தராசுகொண்டு நிறுத்து, அதை 20கூறுகளாக செய்து வைத்துக்கொள்ளவேண்டும். இவை ஒவ்வொரு கூறும் 58தோலா எடையுள்ளதாக இருக்கும். இவற்றைத் தனித்தனியே 20 மண்சட்டியில், அல்லது பொருத்தமான டப்பாவில் வைத்துக்கொள்ளலாம்.

ப்ராஸாதாக்ரஸ்ய யாம்யே ச பாவகே து விசேஷத: |
லூகலம் முஸலம் சைவ ஸ்தண்டிலோபரி விந்யஸேத் ||
லுகலம் பிரம்ம தைவத்யம் முஸலம்விஷ்ணு தைவம் |
வித்யேச்வராஸ் ச த்ரவ்யானாம் அதிதேவா ப்ரகீர்த்திதா ||

கோயிலுக்கு எதிரில் அலது தெற்கில் சிறப்பாக தென்கிழக்கில் உரல் உலக்கையை வைத்து பூஜித்து இடித்திடவேண்டும்.

நான்காம் கட்டப்பணி

இரண்டு மரத்தாலான உரலை இருபுறமும் மூங்கில்கழிகளைப் பொருத்தி நன்றாக இறுக்கிக் கயிற்றால்கட்டி வைத்துக் கொள்ளவேண்டும். உரலுக்கு இருவராக, இருஉரலுக்கும் நான்குபேர் உலக்கைபோட வேண்டும். ஒவ்வொரு உரலிலும் ஒவ்வொரு கூறு அதாவது ஏழுமருந்துச் சரக்கைக் கொட்டி, அதில் கொஞ்சம் கொஞ் சமாக வெண்ணெயைச் சேர்த்து, நன்றாகக் குழைந்து ஒன்றாகும்படி சுமார் முப்பதுநிமிடங்கள் இடைவிடாது, வெப்பம் தனியாதவாறு இடிக்கலாம். இங்ஙனம் இடித்தவற்றை உருண்டையாக உருட்டி, அதன் தலையில் ஒரு புள்ளியிட்டு, (இடித்தமுறைக்கு அடையாளமிட்டு) வைக்கவேண்டும். எவ்வளவு உருண்டை தேவையோ அவ்வளவு உருண்டைகளுக்கு கூறுசெய்து அவ்வளவு உருண்டைகளையும் இடித்துச் சேகரித்து ஒருஅறையில் வரிசையாக அடுக்கி வைத்துக் கொள்ளவேண்டும். எல்லா உருண்டைகளுக்கும் முதலாவது இடி முடிந்து, பிறகு மறுஇடி இரண்டாவது முறையான இடியைத்

துவங்கவேண்டும். ஒவ்வொரு இடிமுடிந்து எடுத்து உருட்டிய உருண்டைகட்கும் தலையில் (இரண்டாவது முறையில்) இரண்டு புளளி குறியிட்டு வைக்கவேண்டும். இப்படியே எட்டுமுறை ஒவ்வொரு உருண்டையையும் இடிக்கவேண்டும். எட்டாம்முறை இடித்து முடித்த, மருந்து உருண்டை ஒவ்வொன்றும் தலையில் எட்டுபுள்ளிகளைப் பெற்றிருக்கும்.

பந்தனச்செயல்முறைவிதி

அஷ்டபந்தம் ததா பஞ்ச த்ரிபந்தனம் அதர(அ)பி வா |
தத் திரவ்யம் கூடயித்வா து முஸலைக் கும்பஹஸ்தகை: |
சுபக்வம் சாஷ்டபந்தானாம் லிங்கபீடஸ்ய ரந்த்ரயோ: |
ரந்த்ரேஷு பந்தயேத் தீமான் லிங்கபீடம் ஸலக்ஷணம் |
அக்னிபீஜ மனுஸ்மிருத்ய தக்த்வா ச்லக்ஷணம் த்ருடம் குரு |
தைலாப்யங்கம் து தேவஸ்ய குர்யாத் தீமான் விசேத:| (காணாகமம்)

இந்த பந்தனமருந்துஉருண்டைகள் ஆறுமாதம்வரையில் பதம்கெடாமல் இருக்கும். மூர்த்திகட்கு மருந்துசாத்தும் பொழுது, ஒருமுறை நன்றாக மீண்டும்இடித்து, அதைக் கயிறுபோல் உருட்டிச் சூடுஆறுவதற்கு முன்பாக சார்த்தவேண்டும். மருந்து சார்த்தும் முன்பு மருந்துபடியஉள்ள பீடப்பகுதியிலும். மூர்த்தியின் அடிப்பகுதியிலும் வெஎ்ணெயை நன்றாகத் தேய்த்துச் சிறதுநேரம் சென்றபின்பு நல்லதுணியால் துடைத்து, வெண்ணெய் மிக்கிருப்பது முழுவதையும் அகற்றிவிட வேண்டும்.

அபக்வபந்தனம் மருந்துஇடித்தல்

அஷ்டபந்தன சொல்விளக்கம்

அஷ்டபந்தனம் என்ற சொல் எட்டுவகையான பொருள்களாலான கலவை அல்லது சாந்து என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கி வருகிறது, என்றாலும் இச்சொல் வேறு ஒரு பொருளில் வழங்கிவருதலும் உண்டு. அது யாதெனில் அஷ்டதிக்ஷ+ அனேன+ பந்தனம் + இதி = அஷ்டபந்தனம் என்று பொருள்தருவதாகும். அதாவது ஒரு லிங்கம் அல்லது பதுமை எனும் ஒரு சிலையைச் சுற்றிலும் எட்டுதிசையிலும் இதனால் இடைக்கயிறுபோல் பொருந்துமாறு கட்டப்படுவதால் இச்செயல் அஷ்டபந்தனம் எனப்படுகிறது என்பதாகும். எனவே இதனை லிங்கபிம்பாதிகளில் முன்புறம் மட்டில், பார்வைபடுகிற தெரியும்பகுதியில் மட்டும் சார்த்திவிட்டு, சிலபகுதியை பின்பகுதியில் சாத்தாமல் விடக்கூடாது என்பதை இங்கு அறிவது அவசியம்.

பந்தன மின்மையில் விளையும் தீயபயன்

ஆகமநூல்கள் இவற்றில் எங்கு எத்திசையில் விரிசலோ விலகலோ ஏற்படுகிறதோ அதனால் அங்கு தீயபலன் ஏற்படும் எனக் கூறுவதால், எட்டு திசையிலும் சுற்றிலும் தவறாமல் விடுபடாமல் சார்த்தப்படவேண்டியதன் அவசியத்தை அறியலாம். இதனை வலியுறுத்தவே கீழ்கண்ட எச்சரிக்கையினைச் செய்கின்றன ஆகமநூல்கள். எட்டுதிசைகளில் ஏதாவது ஒருதிசையில் ஓரிடத்தில் இந்த பந்தனம் அமையாவிடில், என்ன விளையும்? என்பதையும் ஆகமங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அதாவது ஆகமத்தின் கூற்றுப்படி முறையே 1. கிழக்கில் பந்தனம் இல்லையேல் பஞ்சம் ஏற்படும். 2. தென்கிழக்கில் தீவிபத்து ஏற்படும். 3. தெற்கில் இல்லையேல் அம்மை பரவும். 4. தென்மேற்கில் இல்லாவிடில் பொதுமக்கள் துன்பப்படுவார்கள். 5. மேற்கில் இல்லையேல் மழையின்மை ஏற்படும். 6. வடமேற்கு மூலையில் (வாயுவில்) பந்தனம் இல்லையேல் நாடும் நாடாள்பரும் கெடுவர். 7. வடக்கில் இல்லாவிட்டால் பயிற்பச்சை அற்றுபோகும். 8. வடகிழக்கு மூலையில் (ஈசானத்தில்) இல்லாதுபோனால் வாஸ்துநாசம் (கிராமநாசம்) தனநாசம் ஏற்படும், என்று ஆகமநூல்கள் கூறுகின்றன. எனவே அஷ்டபந்தனம் என்றசொல் இருவகையான பொருள்களில் உபயோகிக்கப்படும்சொல் என்பது இதன்மூலம் உறுதியாகிறதல்லவா? எனவே அஷ்டபந்தனத்தை சுற்றிலுமாக எட்டுதிசைகளிலும் நன்கு

அமைத்து உறுதிபெறச் செய்யவேண்டும். பிரதிஷ்டைக்குப் பின்பும் இருமாத காலத்திற்கு புளிப்பான பொருட்களை அபிஷேகம் செய்வதில் (எலுமிச்சைபழ ரஸம், தயிர், இளநீர் பழச்சாறுகள் முதலியவைகளை) நீக்கிடவேண்டும் என்கிறது. எனவே தினமும் அபிஷேகத்திற்கு முன்பாக தூய எள்ளினாலான நல்லெண்ணெயைக் கொண்டு தாராளமாக நன்கு அஷ்டபந்தன மருந்தின்மேல் 48நாள் பூசிவரவேண்டும். இதனால் அந்த மருந்துக்கட்டு நாளுக்குநாள் மேலும் வலுப்பெறும் என்பது இங்கு அறியத்தக்கது. எண்திசையிலும் பந்தஹீனப்பலன். கூறும் காரணகாமச் சான்று இதுவே.

அஷ்டபந்தன ஹீநே திசாம்பலம்

அஷ்டபந்தன ஹீநே ச பூர்வே ராஷ்ட்ரம் விநச்யதி |
ஆக்நேய்யாம் அக்னிதக்தம் து யாம்யேச ம்ருதி ருச்பதே ||
கிராமநாசம் து நைருத்யாம் வாருண்யாம் வர்ஷவர்ஜிதம் |
ஸர்வநாசம் து வாயவ்யாம் ஸ்த்ரீணாம் நாசம் து ஸௌம்யகே||
ஐசான்யாம் தனநாசம் ஸ்யாத் ஸர்வதோஷம் ப்ரவர்த்ததே |
பிந்துகம் சைவ விச்சின்னே ஜ்வர மாரீ ஸமுத்பவம் ||
யவாங்குலம் து விச்சின்னே ஸத்யோ பந்தன மேவ ச |
துவாதசாங்குல விச்சின்னே ஸபாதாத் அஷ்டபந்தனம் ||
ப்ரமாதாத் பந்தஹீநே து பூஜா நைவேத்யம் நிஷ்பலம் |
அஷ்டபந்தன ஹீநே து புனர் பந்தம் து காரயேத் ||

பூர்வகாரணே–136)

(மற்றோரிடத்தில் சான்று)

இத்யேவம் மந்திரதந்திராம் ச பாவனம் ஸத்தி பந்தனம் |
அஷ்டபந்தன சூன்யே ச பூர்வே ராஷ்ட்ரஸ்ய தோஷக்ருத் || 13
ஆக்நேய்யாம் அக்னிதாஹம் து யாம்யே வா ம்ருதி ருச்யதே |
கிராமநாசம் து நைருத்யாம் வாருண்யாம் வர்ஷவர்ஜிதம் || 14
வாயவ்யாம் ஸ்த்ரீவிநாசம் து ஸௌம்யே சுத விநாசனம் |
ஐசான்யாம் தனநாசம் து ஸர்வதோஷ ப்ரவர்த்ததே || 15

பூர்வகரண–36)

மற்றோரிடத்தில் பந்தனம்விலகிடின் தீயபயன்கள்

பூர்வேது கலஹம் வித்யாத் ஆக்னேய்யாம் அக்னிதாஹகம் |
யாம்யே து வியாதீபீடா ச நைருத்யாம் கிராமநாசனம் ||
வாருண்யாம் வருணநாசம் து வாயவ்யாம் ஸஸ்யநாசனம் |
ஸௌம்யே த்வர்த்த விநாசஸ் ஸ்யாத் ஜசான்யாம் புத்ர நாசனம் ||
பரிதோ பந்தஹீநே து ஸர்வநாசம் தனக்ஷயம் |
தஸ்மாத் ஸர்வப்ரயத்னேன அஷ்டபந்தன மாசரேத் ||

அஷ்டபந்தனம் விலகியதற்கான பரிஹாரச்செயல்.

பிராயச்சித்தம் புராக்ருத்வா திசாஹோமம் ஸமாசரேத் |
பிராயச்சித்தார்த்தகம் சைவ சாந்திஹோமம் ஸமாசரேத்||

ப்ரமாதாத் பந்தஹீநே து ராஜா ராஷ்ட்ரம் விநச்யதி|

(பூர்வகாரணாகமம் 136ல்75)

இதன்பொருள் = அறியாமல் லிங்கம் அல்லது பேரம் இவைகளில் எப்பகுதியிலேனும் பந்தனம் விட்டு விலகிப்போனால் "அரசனும் அரசும் அழியும்" என்கிறது காரணாகமம். இதனால் பொருப்புடன் இருத்தல் அவசியம் என்பதை யாவரும் உணரவேண்டும்.

அஷ்டபந்தனவிலகலில் பரிஹார செயல்

அஷ்டபந்தனம் விலகிடின் அதன் பயனாக ஆகமப்படி அரசாங்கத்திற்கு பிளவும் தாழ்வும், ஏற்படும் என்று பயன் கூறவேண்டும். அவ்வாறு விலகி இருந்தால் பழையமருந்தை முற்றிலும் நீக்கிவிட்டுப், புதிய மருந்தால் மீண்டும் முறைப்படி சார்த்திவிடவேண்டும். த்ரிபந்தனம், பஞ்சபந்தனம், அஷ்டபந்தனம் இவைகளுக்கு சேர்க்கப்பட்ட பொருளின் தரத்தாலும், நேர்த்தியான விகிதாசாரத்தாலும், உரிய அதன் ஆயுட்காலத்தாலும், ஒருகாலத்தில், சாற்றியபந்தனத்தில் பிளவு ஏற்படல் விலகுதல் ஏற்படுதல், இதற்கு உடனே இறைவனுக்கு என்று ஒரு சாந்திகும்பத்தைத் தயார்செய்து வேதியில் வைத்து அகோராஸ்த்திரமந்திரத்தால் பூஜை, ஜபம், ஹோமம், இவற்றைச் செய்துகொண்டு, அந்த பூஜாகாலத்திலேயே அன்று ஒருநாளிலேயே உடனேயே, பகலில் ஒருபொழுதிலேயே இடைக்காலத்தில் புதியதான அஷ்டபந்தனத்தை சாத்துவதைச் செய்யவேண்டும். அப்பொழுது அக்கோராஸ்திரமந்திரத்தால் ஆயிரம்முறை ஜபம்செய்து, மந்திரம் இதனைக்கொண்டு சமித்து, நெய், எள்ளு, அன்னம், இவற்றால் 100முறைஹோமம் செய்துமுடித்து, லிங்கசுத்தியின் (பிம்பசுத்தியைச் செய்து) முடிவில், அந்த பூசித்ததான சாந்திகும்பநீரால் லிங்கத்திற்கு

அபிஷேகத்தைச் செய்யவேண்டும். இதனைத்தெரிவிக்கும் காமிகாகம பிராயச்சித்தவிதிச் சான்றுஇதுவேயாகும். பரிஹாரஹோமவிதி என்பது ஆகமகட்டளை ஆகும். தவறாமல் பின்பற்றவேண்டும்.

அஷ்டபந்தே து விச்லிஷ்டே ராஷ்ட்ரே சைதில்ய மாதிசேத் |
அஷ்டபந்தம் த்ரிபந்தம் வா க்ருத்வா(அ) ந்தே ஸ்நபனம் நயேத் ||
புராதனம் பரித்யஜ்ய சஸ்த்ரேணா (அ)ஸ்த்ரம் ஸமுச்சரன் |
அகோரேண சதம் ஹோமம் ஸமிதாஜ்ய திலைளதநை: ||

(உத்தரகாமிகாகமம் 30-359-361)

புராதனம் பரித்யஜேத் = பழயதை விலக்கிடவேண்டும் என்ற இவ்வசனத்தால் பழையமருந்தை மீண்டும் இடித்து உபயோகிக்கக் கூடாது என்பதும், பழையமருந்து பலவீனமடைந்திருக்கும் என்பதால் நீக்கத்தக்கதே என்பதும், இங்குஇதில் அறியப்பட வேண்டியது ஆகிறது.



பந்தனம் செய்யவேண்டிய லிங்கபீட இடைவெளி

இருவகைபந்தன விநியோக முறைகள் (பந்தன பயன்பாட்டு முறைகள்)

பக்வபந்தனம் என்றும், அபக்வபந்தனம் என்றும் பந்தனமுறை இருவகைப்படும். இதில் பக்குவபந்தனம் என்பது பொருள்களைப் பொடித்து தீயில்காய்ச்சி உருக்கி சார்த்துவது. அபக்வபந்தனம் என்பது பொருள்களை உரலில்இட்டு இடித்துச் சார்த்துவது என்று அறியத்தக்கவை. இதனை லிங்கவகைக்கு ஏற்ப உரியதையே செய்யவேண்டும். அதாவது குறிப்பாக மானுஷமல்லாத தெய்வாம்சமான ஆறுவகையான சிஷ்டலிங்க வகைகளுக்கும், அபக்வபந்தம் (இதுவே

சீதபந்தம் ஆகும்) உரியது என்றும், எப்போதும் மனிதர்களால்செய்து மன்னரால் ஸ்தாபிக்கப்படும், மானுஷலிங்கவகைக்கு பக்வபந்தனம் முறையும் ஏற்றதாகவும் ஆகமம் கூறுகிறது. இதனைக்கூறும் ஆகம சான்று இதுவே. இருவகையுடன் செய்வது மூன்றாவதாகும்

அபக்வம் பக்வம் ஏவம் து த்விவிதம் பந்தன க்ரமம் |
பக்வம் து பாகயோக்யம் து அபக்வம் தத் விஹீனகம் ||
பக்வாபக்வ மிதம் ஞாத்வா பந்தயேத் ஸூத்ருடம் புத: |
அபக்வம் தைவிகம் ப்ரோக்தம் பக்வம் சைவ து மானுஷம் ||

(ஸஹஸ்ராகமம்)

அஷ்டபந்தனவிதி

லிங்க பீடாந்தரம் யோஜ்யம் ஸ்வஸ்திதம் சாஷ்டபந்தனம் |
பக்வா பக்வ மபக்வம் து த்ரிவிதம் பந்தயேத் கிரமாத் || 1€1.

(காரணாகமபடலம்–136)

பந்தனம் செய்யகாலவிதி

தின வார முகூர்த்தம் ச வர்ஜயேத் து விசக்ஷண: |
ஸர்வமாஸேஷு கர்த்தவ்யம் அஷ்டபந்தன கர்ம ச || (136ல்11)

மேற்காணும் பூர்வகாரணாகம வாக்கின்படி பந்தனம் விலகியபோது திதி, வார, நட்சத்திர, முகூர்த்தங்களுக்காகத் தள்ளிவைக்காமல் உடனே எல்லாமாஸங்களிலும் அஷ்டபந்தனம் சாத்துவதைச் செய்யவேண்டும்.

பந்தனவகையும் லிங்கவகையும்

மானுஷலிங்கத்திற்கும் தேவீமனோன்மனீ முதலிய சக்திபேரங் களுக்கும் லிங்கம் அல்லது பிம்பம், பீடம், இவற்றின் இடைவெளித் துளைப்பகுதியில், இலக்கணப்படி பந்தனத்தைச் செய்யவேண்டும் என்பது ஆகமவிதி.

ரந்த்ரேஷு பந்தயேத் தீமான் லிங்க பீடம் ஸலக்ஷணம் |
மனோன்மன்யாதி சக்தீநாம் காரயேத் அஷ்டபந்தனம் ||

மேலும் ஆலயத்தின் ஏழுவகையான லிங்கவகைகளில் முறையே தானேஉதித்ததான சுயம்புலிங்கம், தேவிபூசித்து விட்டதான தைவிகலிங்கம், நீர் நிலைகளிலிருந்து எடுத்த பாணலிங்கம் இவைகளில் அபக்வமுறையில், திரிபந்தனத்தை மட்டுமே செய்யவேண்டும். மேலும் தேவர்கள், ரிஷிகள்பூஜித்து கைவிட்டுச் சென்றுள்ள திவ்யலிங்கம், காணவலிங்கம், ஆர்ஷகலிங்கம் இவைகளில் பஞ்சபந்தனத்தை மட்டுமே செய்யவேண்டும். மனிதர்களாலும் அரக்கர்களாலும் ராக்ஷஸர்களாலும்

பூசித்த மானுஷலிங்கம் ஆசுரலிங்கம், ராக்ஷஸலிங்கம் இவைகளில், அஷ்டபந்தனத்தை மட்டுமே செய்யவேண்டும் என்பது ஆகமவிதி. இதைக் கூறும் ஆகமசான்று

ஸ்வயம்பூர் தைவிகே பாணே பந்தயேத் ச த்ரிபந்தனம் |
திவ்யே ச காணவே சைவ ஆர்ஷகே ச விசேஷத: ||
பஞ்சபந்தன யோக்யம் ஸ்யாத் மர்த்தயித்வா து பந்தயேத் |
மானுஷே ராக்ஷஸே சைவ ப்ரதிமா பீட மேவ ச ||

அஷ்டபந்தன யோக்யம் ஸ்யாத் பக்வா (அ)பக்வம் து பந்தனே ||

மானுஷலிங்க பேரங்ககளுக்கு அஷ்டபந்தனம், ஸ்வயம்புலிங்கத்திற்கு த்ரிபந்தனம், ஆர்ஷலிங்கத்திற்கு பஞ்சபந்தனம், எல்லாவற்றிற்கும் உலோகத்திய கட்டிகளாலான சுவர்ணபந்தனமும் சிறந்த பந்தனமுறை என்று சைவாகமங்களினால் அறியலாம். இவற்றைக்கூறும் ஆகமசான்று,

ஸ்வயம்பூ தைவிகம் சைவ ஆர்ஷம் காணபதம் ததா |
த்ரிபந்தம் பஞ்சபந்தம் ச அஷ்டபந்தன மே ச || பூர்வகாரணே–16ல்–74)

மேலும் அங்கேயே கூறப்படுகிறது.

ஸ்வாயம்புவே த்ரிபந்தம் ஸ்யாத் ஆர்ஷே ச பஞ்சபந்தனம் |
அஷ்டபந்தன கர்மாணி மானுஷே லிங்க ஸம்ஞகே |
மனோன்மன்யாதி சக்தீநாம் காரயேத் அஷ்டபந்தனம்|
ஸர்வேஷாம் பரிவாராணாம் த்ரிபந்தம் வா (அ)ஷ்டபந்தனம் ||

(காரணாகமம் 136ல் – 15)

அஷ்டபந்தனத்துடன் டே ீச்வரர்

அஷ்டபந்தனம் செய்துள்ள
கஜஸம்ஹாரமூர்த்தி

அஷ்டபந்தனத்தின் அவசியத்தேவை

அஷ்டபந்தனமில்லாவிடில் நீரற்ற நிலம்போல் தெங்வச்சிலை பயனற்றதாகும். அஷ்டபந்தனம் இல்லாமற்போனால் அங்கு மழை யின்மை, பஞ்சம் ஏற்படும் என்கிறது ஆகமம். எனவே தீமையகன்றிட உடனே பந்தனத்தைச் செய்யவேண்டும்.

அஷ்டபந்தன ஹீநே ச பார்த்திவம் ஜல வர்ஜிதம் |
ததோ (அ)ஷ்டபந்தனம் குர்யாத் ஸுத்ருடம் காரயேத் புத: ||

(அஜிதாகமம் 76ல்)

அஷ்ட பந்தவிஹீநே து அநாவ்ருஷ்டிர் ந ஸம்சய: |
பூர்வவத் பந்தனம் குர்யாத் மூலமந்த்ரம் சதம் ஜபேத் ||

(அசிந்த்யவிச்வஸாதாக்யம் 81ல்)

இவ்வாறு பந்தனமின்மையால் ஏற்படும் தீமையும், செய்யவேண்டிய பரிகாரமும் கூறப்படுவதால், இதன் மேன்மையையும், தேவையையும் நாம் நன்கு உணரலாம். நாம் பயன்பெற பந்தனம் மிகவும் அவசியம். அஷ்டபந்தனமில்லையேல் மழையின்மை ஏற்படுவது உறுதி என்றும், எனவே முன்புபோல பரிஹாரம் செய்யப்படவேண்டும் என்றும் கூறுகிறது ஆகமம்.



மதுரை மீனாக்ஷிகோயில் கோபுரம்

பந்தனவகைகளின் லிங்கமும் பயனும்

வ. எண்.	பந்தனவகை பிணைப்புக் கட்டுவகை	ஏற்ற உரிய லிங்கவகை	காலஅளவு ஆயுட்காலம்	பந்தனத்தின் பயன்கள்
1.	சுவர்ணபந்தனம் (தங்கக்கட்டு) ஏகட்லோஹபந்தனம்	சுயம்புலிங்கம் & தைவிகலிங்கம்	1000 ஆண்டுகள்	புக்தி & முக்தி புண்யம்
2.	ஜைதபந்தனம் (வெள்ளிக்கட்டு) உலோகஏகபந்தனம்	திவ்யலிங்கம் & ஆர்ஷகலிங்கம்	50ஆண்டுகள்	ஸ்ரீகரம் ஜயதம்
3.	ஸீஸபந்தனம் (ஈயக்கட்டு)	பாணலிங்கம் & மானுஷலிங்கம்	25ஆண்டுகள்	ஆயுர்வர்தனம் சத்ருக்ஷயகரம்
4.	தாம்ரபந்தனம் (தங்கக்கட்டு) உலோகஏகபந்தனம்	பாணம் + பேரம் பரிவாரம் (மானுஷம்)	7ஆண்டுகள் 5ஆண்டுகள் 3ஆண்டுகள்	ஆரோக்யம் தொல்லைநீக்கம்
5.	ஏகபந்தனம் திரவியஏகபந்தனம் (குங்குலியபக்வபந்தனம்) (ஒருபொருள்கட்டுமுறை)	பாலலிங்கம் பாலஸ்தாபனம் ஆலயபரிவாரபேதம் பீடங்கள்	12 ஆண்டுகள்	புண்யதம் இஷ்டபலதம் ஸௌக்யப்ரதம்
6.	திரிபந்தனம் முப்பொருளால் கட்டுதல்	சுயம்புலிங்கம் தைவிகலிங்கம் பாணலிங்கம் பரிவாரம்	12ஆண்டுகள்	மோக்ஷதம் முக்திப்ரதம் புண்யதம்
7.	பஞ்சபந்தனம் ஐம்பொருளால் கட்டுதல்	திவ்யபுலிங்கம் காணவலிங்கம் ஆர்ஷகலிங்கம் & ஆசுரம் ராக்ஷஸம்	12ஆண்டுகள்	புத்திப்ரதம் ஞானப்ராப்தி மெய்யறிவுஏற்படல்
8.	அஷ்டபந்தனம் (எண்பொருள்கட்டு)	மானுஷலிங்கம் சக்திபேரங்கள் பரிவாரங்கள்	12ஆண்டுகள்	ஸ்ரீப்ரதம் செல்வப்பெருக்கம் வளர்ச்சிதரும்

வ. எண்.	பந்தனவகை பிணைப்புக் கட்டுவகை	ஏற்ற உரிய லிங்கவகை	காலஅளவு ஆயுட்காலம்	பந்தனத்தின் பயன்கள்
9.	உஷ்ணபந்தனம் (உலோகஉருக்குக்கட்டு) (வெப்பத்தோடுகட்டுதல்)	மானுஷலிங்கம் ஸகலபேரம் சிலை	7ஆண்டுகள்	மோக்ஷம் ஸௌபாக்யம் செல்வம்
10.	சீதபந்தனம் (உலோகஊசிக்கட்டு) தகடுவேய்ந்துகட்டுதல்	சுயம்பு பாணலிங்கம் தைவிகம் திவ்யம் மானுஷம், பிம்பம்	12ஆண்டுகள்	மோக்ஷப்ரதம் ஞானவிருத்தி
11.	பக்குவபந்தனம் காய்ச்சிக்கட்டுதல்	மானுஷலிங்கவகை சிலாபேரவகை மானுஷம், பிம்பம்	12ஆண்டுகள்	தனவிருத்தி கோஸமிருத்தி ஸௌபாக்யம்
12.	அபக்குவபந்தனம் இடித்துவைத்துகட்டுதல்	தைவிகலிங்கவகை பாணலிங்கம் சிஷ்டலிங்கவகை	12ஆண்டுகள் 6ஆண்டுகள்	ஸர்வாபீஷ்ட ஸித்தி ஸர்வஸௌபாக்யம் போகமோக்ஷம்

தென்மதுரை மீனாக்ஷி சுந்தரேச்வரசுவாமி

ஆலயாங்கதத்வரூபவிளக்கம்

ஆலயஅமைப்பில் தத்துவபாவனைமுறைகள்

1. தேஹதேஹீபாவனை

பௌமாதி ஸ்தூபி பர்யந்தம் ஸ்தூலலிங்க மிதி ஸ்மிருதம் |

(சூக்ஷ்மாகமம்)

சைவாகமங்கள் கோயில்கட்டிடத்தை கீழிருந்து மேல்உச்சிக்கலசம் வரையில் முழுவதையும் ஸ்தூலலிங்கம் அதாவது "கண்ணுக்குத் தெரிகிற இறையின் பெரியதிருமேனி" என்கின்றன. "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக" என்கிறது அப்பர் தேவாரம். அதனுள்ளுறையும் தெய்வத் திருமேனியே சூக்ஷமத்திருமேனி (சூட்சும தேஹம்) என்றும், அதனுள்ளுறை தெய்வத்தை உடலிடங்கொண்டிருப்பவரான பரமாத்மாவை "தேஹீ" என்றும் கருதுமாறு கூறியுள்ளன. அகத்தேயும் புறத்தேயும் ஆலயத்திற்கான ஆகமதத்துவப்பாடல் சான்று. இதுவே

அகக்கோயில்

உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே (திருமந்திரம் 7–1792)

புறக்கோயில்

தேஹம் ப்ராஸாத மித் யுக்தம் தேஹீ லிங்க மிதி ஸ்ம்ருதம் |
உபயோ ரந்தரம் நாஸ்தி தஸ்மாத் இத்தம் விபாவயேத் |
ஸ்தூலலிங்கம் விமானம் ச சூக்ஷ்மலிங்கம் ஸதாசிவம் |
ஸதாசிவஸ்ய தன்மத்யே சிவ மேவம் விசிந்தயேத்|| (சூக்ஷ்மாகமம்)

இப்பொருளையே சைவாகமங்கள்யாவும் வலியுறுத்துகின்றன.

சிவாலய பக்கப்பார்வை

கோயிலும் கடவுளும்.

"ஆலயம் மற்றும் லிங்கம், என்கிற இந்த இருசொல்லும் "லய" என்ற வினைச்சொல்லிலிருந்தே உண்டாகிறது என்று பார்த்தோம். இதில் சொல் ஒற்றுமையோடுமட்டுமல்லாமல், பொருளிலும் ஒற்றுமை உள்ளதை இனிகாணலாம். ஆலயத்தைப்போலவே லிங்கமும், அண்டம் மற்றும் பிண்டம் இவற்றின் ஸ்வரூபமாக உள்ளது. அண்டலிங்கமாகிய கோயிலை 7–ம் திருமத்திரம் 1694லும் 1695லும், பிண்டலிங்கமாகிய சிவலிங்கத்தை 1966ல் "மானுடராக்கைவடிவு சிவலிங்கம்" என்றும் திருமந்திரம் எனும் நூல் சைவாகமப்படியே கூறியுள்ளது. அதாவது பரம்பொருள் என்ற ப்ரம்மமானது பூசிப்பவரின் உடலுக்குள்ளும் வெளியிலும் பரவிஉள்ளது. ஆதலால் உள்ளும் புறமும் அது பூசிக்கப்படுகிறது. "உடலே கோயில் அதில் உயிரே இறை" என்று இங்கு உணர்வதுமுறை. திருநாவுக்கரசுநாயனார் அகவழிபாட்டில் லிங்கபூசையைக் கூறுகிறார் அந்த தேவாரப்பாடல் இதுவே, இதனால் மானஸபூஜை கூறப்பட்டது.

காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மன மணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நீர் அமைய ஆட்டி
பூசனை ஈசனார்க்குப் போற்ற விக் காட்டினோமே. (அப்பர் தேவாரம்)

தேவாலயமும் தேஹபாவனை முறைகளும்

ஆகமங்களில் ஆலய அமைப்பானது மானுடதேஹத்தை ஒத்ததாகவே விளக்கப்படுகிறது. அதன்படி தெய்வத்திருமேனியை (சரீரத்தை) கோயிலை விரித்துக்கூறும் முறை இருவகையில் கூறப்படும். அவை, முதலாவது சரீர ப்ரஸ்தாரம், இரண்டாவது இருதய ப்ரஸ்தாரம் என்பன ஆகும். 1. உடலை விரித்துக்கூறுவது 2.இதயத்தை விரித்துக்கூறுவது என்பன ஆகும்.

கிடந்தநிலையில் கோயிலுடல்
(சரீரப்ரஸ்தாரம்-சயிததேஹப்ரஸ்தாரம்)

சரீர ப்ரஸ்தாரம், எனபதில் படுத்த நிலையில் சயனாகிருதியாக 1. கர்பகிருஹம் எனப்படுகிற கருவறையானது தலையாகவும், 2. அர்த்த மண்டபம் என்பது கழுத்துப் பகுதியாகவும், 3. ஸ்நபனமண்டபமானது மார்பாகவும் 4.மஹாமண்டபமானது தொப்புள் பகுதியாகவும், 5. நிருத்தமண்டபமானது துடைப்படுத்தியாகவும், 6. ஸபாமண்டபம் அல்லது ஆஸ்தான மண்டபம் தர்பார்மண்டபம் என்பது முழங்கால் பகுதியாகவும், வெளிப்புற 7. மஹாகோபுரமானது தேவனின்

திருவடியாகவும், சரீராகிருதி) தேவனின் உடல்தோற்றமானது படுத்த நிலையில் இவ்வாறு முறையே முகாயாம மண்டபங்களால் கோயில் கருதத்தக்கதாகிறது. இவ்விதமே சிவாகமங்கள் கூறியுள்ள சான்று இதுவே.

கர்பக்ருஹம் சிரப் புரோக்தம் அர்தம் கண்டஸ்தலம் பவேத் |
ஸ்நபனம் வக்ஷதேசம் ச மகா மண்டப நாபிகம் |
ந்ருத்தமண்டப மூரு ஸ்யாத் ஆஸ்தானம் ஜங்கிகா பவேத் |
மஹா கோபுர பாதம் ஸ்யாத் இத் யேவம் ரூப முச்யதே ||

(காரணாகமம்)



நின்ற நிலையில் கோயிலுடல் (ஸ்தானகசரீர ப்ரஸ்தாரம்)

இவ்வாறே ஆலயபரமபுருஷரின் வடிவமானது, நின்றநிலையிலும் கூறப்பட்டுள்ளது. அதாவது ஆத்யேஷ்டிகா என்னும் ஆலயத்தின் அடியில் முதல் முதலில் அஸ்திவாரத்தில் பதித்ததான திருவடிக்கல் முதலாக, விமானத்து உச்சி திருமுடிக்கலசம் வரையில் நின்றகோலத்தில் கூறுப்படுவதாவது, 1. பாதசிலைகள் பாதமாகவும், 2. உபபீடம் முழங்காலாகவும், 3. அதிஷ்டானம் துடையாகவும், 3. கருவறையுடன் கூடிய பாதவர்க்கம், 4. பாதவர்க்கம் வரையிலான சுவர்பகுதி வயிறாகவும், 5. கல்ஹாரம் அல்லது பிரஸ்தரம் என்பது மார்பாகவும், 6. உத்தரமாகிய விருஷபதலப் பகுதியானது தோள்பகுதியாகவும், தேவாலங்காரத்துடன் கூடிய 7. காண்டவர்க்கமானது கழுத்துப்

பகுதியாகவும், 8. கருவறையின் வெளியே அமைந்துள்ள பாதத் தூண்கள் யாவும் கைகளாகவும், 9. சிகரவர்க்கத்தின் உச்சித் தாமரைப்பூ வேலைப்பாடுள்ள பகுதி தலையாகவும், 10. விமானத்தின் ஸ்தூபிகலசமானது மணிமகுடமாகவும், 11. சுற்றுச் சுவர்பகுதியானது இடுப்புப்பகுதியாகவும், 12. கர்ணவர்க்கம் காதுகளாகவும், 13. நாஸிவர்கம் என்பவை மூக்குப் பகுதிகளாயும், 14. நான்குதிசையிலும் அமைந்துள்ள 4 திசாமூர்த்தங்கள் நான்கு திருமுகங்களாகவும், 4கண்களாகவும், 15. கோமுகையானது அபான குய்யப் பகுதியாகவும், 16. கட்டிடத்துக் கற்கள் எலும்பாகவும், 17.சுதாசாந்துக் கல்கமானது உடலின் மாமிசப்பகுதியாகவும், 18.சுண்ணாம்புப் பூச்சுப்பகுதி தோலாகவும், 19. சுற்றிலுமுள்ள பிராகாரங்கள் ஆடையாகவும், 20. விமானத்து உச்சிக்கொடியானது திருமுடிச் சிகையாகவும், 21. நூறுதர்பைகளாலான கூர்ச்சமுடிச்சு அணிந்துள்ளதும், கர்ணகூடங்களில் மூலைஸ்தூபிகள். இவை சிகைகளாகவும், இவ்வாறு உறுப்புகளையுடைய மூலாலயமான "விமானம்" என்பது பரமபுருஷரின் திவ்யதேஹமாய் என்றும் கருதி வணங்கத்தக்கது.





அமர்ந்த நிலையில் கோயிலுடல்
இருதயபிரஸ்தாரம் (ஆஸீனசரீர ப்ரஸ்தாரம்)

ஆலயத்தின் உறுப்புகள் யாவும் ஆலயஉடலின் அமர்ந்தநிலை யில்யோகநெறி இயக்கத்திற்கான அகக்கருவிகளாக விளங்குபவை யாகும். இதில, சைவசித்தாந்தப்படி விளங்குகிற முப்பத்தாறு தத்துவங்கள், இருபத்தி ஏழாயிரம் நாடி நரம்புகள், நாடீசக்ரங்களான

ஸப்தஸ்தானங்கள், உடலின் ஏழுவகையான எலும்புமுதலான சப்ததாதுக்கள், பஞ்சபூதாம்சங்கள், ஆறுவகை அத்வாக்களான ஷடத்வாம்சங்கள், பஞ்சகோசங்கள் இவைகள் யாவும் திவ்ய உறுப்புகளாக குறிப்பிடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக வெளிப் பிராகாரத்தில் துவங்கி, மூலக்கருவறையில் முடிவதாகஉள்ள ஒவ்வொரு மண்டபப்பகுதியும் முறையே 1. மூலாதாரம் 2. சுவாதிஷ்டானம் 3. மணிபூரகம், 4. அனாஹதம், 5. விசுத்தி, 6. ஆக்ஞை என்னும் மனிதஉடலில் உள்ள 6வகையான ஷட்சக்ரஸ்தானங்களாகக் கருதத்தக்கவைகளாகும். விமானத்து உச்சிக்கல்லின் கமலப்பகுதி யானது த்வாதசாந்தப் பெருவெளியாகிய சிதாகாசஸ்தானமாகக் கருதத்தக்கது. நூற்றுக்கால்மண்டபம், அல்லது ஆயிரங்கால்மண்டபம் முதலிய முக்யபகுதியானது, ஸஹஸ்ராம் என்னும் ஸஹஸ்ரதள கமலஸ்தானமாகவும், கருவறையே உன்மனிஸ்தானமாயும், ஆலயத்தின் தீர்த்தக்குளமே நமது மூளையின் மேல்புறத்திலுள்ள அமிருதமயமான ஸத்யபுஷ்கரணியாயும், எண்ணத்தக்கதாகும் இவ்வாறாக ஆலயம் முழுவதுமே மூல தெய்வத்தின் அமர்ந்தயோகநிலை தேஹத்தைக் குறிப்பதாகவே கூறுகின்ற சிவாகமங்கள் அங்கு ஆலயவழிபாட்டை தினமும்செய்திடுமாறும் விதித்துள்ளன.



மூலாலயமும் மூவகைத் தேஹமும்
(ஆலய உறுப்புகளும் சக்திகளின் உருவமும்)

ஆலயம் என்பதில் ஸ்தூலதேஹம், சூக்ஷ்மதேஹம், காரணதேஹம், என்று மூன்றுவகையான தேஹமும் ஒன்றுக்குள் ஒன்றாக அமைந்துள்ளன. இதனையே கோசம் என்று குறிப்பிடுவர்

1. ஏழுபிராகாரங்கள் வெளியிலிருந்து உள்வரையில் முறையே ஏழுஉலகங்களான, ஏழு அண்டங்களின் பெயர்களான பூர், புவர், சுவர், மஹர், ஜனஸ், தபஸ், ஸத்யம் ஆகிய ஏழு வியாஹ்ருதிகளையும், ரத்தம், நரம்பு, (நாடி) மாமிசம், மேதா, எலும்பு, மஜ்ஜை, சுக்லம் ஆகிய ஏழுதாதுக்களையும் குறிப்பனவாம்.

2. ஐந்து பிராகாரங்கள் வெளியிலிருந்து உள்வரையில் முறையே 1.அன்னமயம், 2.பிராணமயம், 3.மனோமயம், 4.விக்ஞானமயம், 5.ஆனந்தமயம் என்பனவாகிய ஐந்துவகையான கோசங்களை (சட்டைகளைப்போன்ற உடற்கவசத்தை) உணர்த்துவனவாகும்.



ஐந்துதிருச்சுற்றுள்ள சிவாலய தரைப்படம் (மேற்புறப்பார்வை)

3. மூன்று பிரகாரங்கள் வெளியிலிருந்து முறையே மேலே முன்புகூறிய மூன்றுவகையான தேஹங்களாகவும், ஆத்மதத்வம், வித்யாதத்வம், சிவதத்வம் ஆகிய (36 தத்துவங்களின் முப்பகுதியான) மூன்று தத்துவப்பகுதிகளாகவும், 1. பூலோகம் 2.புவர்லோகம் 3.சுவர்கலோகம் என்னும் மூன்று உலகங்களாகவும் விளங்குவனவாகும். 4.ஒரே சுற்றுபிராகாரமுள்ள ஆலயமானது, இவைகள் அனைத்தையும் தம்முள்ளே சூக்ஷ்மமாகக் புலப்படாத நிலையில் கொண்டுள்ளதாகக் கருதத்தக்கது என்கிறது. ஆகமம் இவ்விதமாக ஆலயமே தேஹம்,, இறைவனே தேஹீ., கோயிலின் உறுப்புகள் யாவும் கலாமயமாகவே உள்ள எண்ணற்றசக்திகளாய் விளங்குவன. என்றும், வெளிச்சுற்று முதல் கருவறை வரையிலாக நிவிருத்திமுதலான ஐந்து கலைகளின் அமைவிடமாகும். "பஞ் சகலாமயம் பேராலயம்" என்றும் உணரத்தக்கது.

ஆலயத்தில் கதவுகளின் அமைப்புத் தத்துவம்

கோயிலில் கதவுகள் நமக்கு தெய்வத்தை காணவிடாமல் (மூடி) மறைத்து நின்றும், கதவு திறந்திடுகையில் (மறைப்பு நீக்கியபோது) தெய்வத்தைக்காணக் காட்டிநின்றும், முறையே இருகதவுகளும் திரோதானசக்திவடிவமாயும், அனுக்ரஹசக்திவடிவமாயும் விளங்குவன ஆகும். கோயிலில் எங்குமே தலைவாசல்களில் கதவுகளை இரட்டையாகவே அமைத்திடவேண்டும், இவை, இருஉதடுகளைப் போலவும், இரு இமைகளைப் போலவும் இவை சூரியகலை மற்றும் சந்திரகலைகளைக் குறிப்பனவாகவும் விளங்குவன. மக்களின் ஆசை, ஆர்வம், அஹங்காரம் என்பவை தோன்றக் காரணமாகி நிற்பதாய், சிவத்தை பக்குவமற்றோர் காணாதவாறு மறைப்பதாய், அனாதியாய் விளங்கும் அவித்தையையும், அது நீங்கியவழியே சிவதரிசனம் என்பதால் இதனால் முக்தி என்னும் வீடுபேறு நமக்கு உண்டா வதையும் கோயில் திருக்கதவுகள் நமக்கு உணர்த்துகின்றன என்று அறியத்தக்கதாகும்.



மூலஸ்தான சிவலிங்க அமைப்புத் தத்துவம்

மூலாலயத்து சிவலிங்கமானது, பரநாதவடிவிலும், பரஞ்ஜோதி வடிவிலும், நாதம், பிந்து, கலா இவற்றின் உருவமாயும், பரமகாரண பரமசூக்ஷ்ம பரமபதியைக் குறிக்கும் சூக்ஷ்மலிங்கங்கள் நிஷ்களமூர்த்தமாகும். இது அகில அண்டங்களையும் தன்னுள் அடக்கியும் விரித்துமுள்ள பரபிரம்மம் என்பதாம்.



மண்டபத்தில் சிவலிங்கம்

விருஷப தேவரின் அமைப்புத்தத்துவம் (நந்திதேவர்)

விருஷபதேவரானவர் சிவலிங்கத்தின் ஆவுடையாரின் உயரமட்டத் திற்கு, உள்ளவாறு (பீடத்தின் உயரமட்டம்) முதல்பிராகாரத்தில் உலோகத்தில் நின்றநிலையிலும், இரண்டாவது முதல் நான்காவது பிராகாரம்வரையில் கருங்கல்லினால் படுத்தநிலையிலும், ஐந்தாம் பிராகாரத்தில் சதையினால் ஆன சிற்பத்தில் ஐந்துபிராகாரங்களிலும் லிங்கத்திற்கு எதிர்புறத்தில், லிங்கத்தைப் பார்த்தவாறு ஆலயத்தின் மையநேர்கோட்டில் அமைவன "பஞ்ச நந்திகள்" எனப்படுபவை ஆகும். இவை மூலலிங்கத்தின் பிரம்மபாகஉயரம் அல்லது விஷ்ணுபாகஉயரத்திற்கு இருத்தல் வேண்டும். உலகஉயிர்களையும் அவைஉய்வுபெற்றிடச் சிவனடியை நோக்கிச் சென்றடைய விரும்புவதையும், விருஷபதேவரின் அமைப்பு உணர்த்துகின்றது. . கோயிலில் விருஷபம் என்பது தர்மரூபமாயிருந்து, தர்மநெறியே உயிர்களுக்கு இறைவனை அறிவித்து அடைவிக்கும் என்பதை நமக்கு உணர்த்துகிறது. என்பதை இங்கு தத்துவக்கருத்தாக அறிய வேண்டும். மேலும் எந்ததெய்வக் கோயிலிலும் எதிரில் அதற்கு உரியதானவாஹனத்தை அமைப்பது மிகவும் அவசியமாகும்.



விருஷபதேவரும், பத்ரபீடமும்

பலிபீடத்தின் அமைப்புத் தத்துவம் (மஹாபீடம்)

பலி என்ற சொல்லுக்கு பலம்தருவது, மற்றும் பயன்தருவது, பூசை என்பதும் பொருள் ஆகும். பூஜைக்குரிய எட்டிதழ் உள்ள தாமரைப் பூ வடிவமாகவுள்ள பூஜாமண்டலமே, பூஜாயந்திரமே, உயரமாக மேருமலைபோன்று அமைக்கப்படுவதால் இது பலிபீடம் எனப்படுவதாகும். இது நம் பாசத்தையும் நம் பாவத்தையும் நீக்கவல்லதான சிறப்புஉருவம் ஆகும். இது ஆலயத்தில் மங்களத்தைத் தருவதால் இது பத்ரலிங்கம் எனப்படும். பத்ர என்ற சொல்லுக்கு மங்களம், சுபம் என்பது பொருள் ஆகும். சிறியவடிவிலான பலிபீடத்தை எட்டுதிசைகளிலும், பிற சன்னதிகளிலும், தெய்வத்திற்கு எங்கும் இதனை ஸ்தாபித்து, எந்த தெய்வத்தையும் உருவச்சிலைக்கு மாற்றாக க்ஷேத்ரபீடத்தில் இதில் பூசிக்கலாம். லிங்கத்தின் எதிர்புறத்தில் உள்ள மஹாபலிபீடத்தில் ஆறு அவிக்னாதியர்கள் பூதபலிதெய்வங்களாக உள்ளனர். எனவே இது மஹாபூதபீடம் எனப்படுவதாகும். அனைத்துப் பிராகாரங்களிலும், எட்டுத்திசைகளிலும், பரிவாரதெய்வங்களுக்கும், அல்லது எட்டுதிசைத் தேவர்களுக்கும், க்ஷேத்ரபீடத்தை சிறியதாக வேறு வடிவ முறையில் தயாரித்து, நிறுவி, பூஜைசெய்தும், இதன்தலை மீது நடுவே அன்னபலிதானம் அளிக்கத் தக்கதாகும். இது பக்தர்களின் பாசங்களை விழுங்கி அவர்களைப் புனிதராக்கியபின்பு, பக்தரை புனிதனாக கோயிலுக்கு உள்ளே அனுமதிப்பதாகவுள்ளது, பீடதெய்வஉருவமானது பஞ்சமுகமாயுள்ளதால் இது பஞ்சபூதங்களின் ஸ்வரூபமாயிருந்தும், கர்மசாட்சியாய் விளங்கியும், உயிர்கள் யாவும் ஐந்துவகையான பாசக் கூட்டங்களில் இருந்து விடுபட்டு, தூய்மைபெறவும் உதவுவதாக கருதத்தக்கதாகும். இதனை "தலையாலே பலிதேரும் தலைவன்" என்று அப்பர் சுவாமிகள் குறிப்பிடுகிறார்

மஹாபலிபீடம்

திரிசூலதேவர்

கொடிமரத்தின் அமைப்புத் தத்துவம் (துவஜஸ்தம்பம்)



கொடிக்கம்பமானது ஆலயமாகிற தேஹத்திற்கு மையசுழுமுனை என்னும் நாடியாகத் திகழ்வதாகும். இது மூலவரின் எதிர்புரத்தில் ஆலயஅமைப்பில் குய்யப்பகுதியில் இடம்பெறுவது ஆகும். இதன் தத்துவக் கருத்தாவது – இது விருஷபத்தின் அடியில், அடுத்ததாக பலிபீடத்திற்கு முன்பு, உள்ளதால் இது பாசநீக்கமுற்ற பசுக்களான உயிர்கள் யாவரும் விருஷபர்போன்று, தர்மரூபிகளாகி, தனது இடை பிங்களை என்னும் சூரியசந்திர நாடிகளிரண்டினுமிருந்துவிலகி, மைய சுழுமுனை நாடிவழியாக, 36தத்துவங்களின் பதநிலைகளின் உயரமானஜ்யோதிஸ்தம்பத்தில், ஜீவன் பயணித்து மனம், ஒருமுகப்படுத்திய இறைதியானத்தால், தன் பிராணவாயுவை உள்அடக்கிட, இதனால் மனம் நிலைபெறவும், அதனால் ஐம்பொறிகளும் ஒடுங்கவும், அவை நிற்றலாலே பிரபஞ்சமும் செயலற்று ஒடுங்கி நிற்க, ஜீவாத்மாவானது பரமாத்மாவினுள் லயமாகி, சிவனோடு ஐக்கியமான, மனதை உடையவனாகிறான், இவ்விதம் சேவார்த்திகள் தினமும் சிவலயத்தைப் பெறவும், தியானித்து இன்புறவும், உதவிட ஏற்றதாய் விளங்குவதே "ஆலயகொடிமரம்" என்றறிய வேண்டும். இதில் விழாக்காலத்தில் துணிக்கொடியில் உரியவாஹனத்தை வழிபட்டு துவஜதண்டத்தின் உச்சியிலேற்றிப் போற்றிப் பின்பு இறக்கி விருஷபத்தில் ஆன்மாவை ஒன்றினைத்து வழிபடும் செயல்முறைகளால் இதன் முக்யத்துவத்தை உணரலாம். பலநாள் நடைபெறும் திருவிழாவில் இக்கொடிமரபூசை மிகவும் சிறப்புடையது.

திருவாசியின் அமைப்புத் தத்துவம் (பிரபாவளி)

திருவாசி என்னும் ஒளிவட்டம் ஒன்று, லிங்கம் அல்லது தெய்வ பிம்பம் இவற்றில், தவறாமல் இதன் பின்புறத்தில் உபாங்கம் எனப்படுவதாக தலைக்கு மேலேயும் இரு பக்கத்திலுமாகவைந்து,

ஒளிவட்டத்தைப் போல, சூழ்ந்து பல எரியும்சுடர்களை கொண்டு காந்தி பொருத்தியதாகவிளங்கும். இது 1.சூரியமண்டலம் 2.சந்திரமண்டலம், 3.அக்னிமண்டலம் இவைகளையே, நடுவிலே வளைந்ததாயுள்ள மூன்றுதண்டங்களாக பிரம்புபோன்ற அமைப்பில் நாளங்களைக் கொண்டுள்ளதாயும், இவை மூன்றுவட்டமும், ஒருபுறம், வியாளியின்வாயில் தோன்றி மறுபக்கத்தில் அதிலேயே முடிவதாயும், இவைகளில் பத்ரம், புஷ்பம்,, ஆயுதம், (இலை, மலர்), தீச்சுடர், படைகள் முதலான ஆயுதசின்னங்களுடன் கூடிய அமைப்பை உடையதும் பிரபாவளி எனப்படுவது ஆகும். திருவாசி எனப்படுகிற இதனால், உலகில் உள்ள எல்லாமே ஓம் என்னும் பிரணவத்தில் உதித்து, அதிலேயே முடிவில் ஒடுங்குகின்றன என்பதும்,, அனைத்து தேவர்களுக்கும் இருப்பிடம் பிரணவமே என்பதும், இதனால் உணர்த்தப்படுகிறது. இவ்வாறு பிரபையானது பிரணவஸ்வரூபமாகவே காணப்படுவதாகும்.. இது முப்புறமும் ஐந்து அல்லது ஏழு தீச்சுடர்களுடன் கூடிய ஒருகைவிரல்கள் போன்ற. தீச்சுடர்வடிவமான ஒளிகற்றைகளால்(16/24) உரிய எண்ணிக்கையில் அலங்கரித்துள்ள ஞானப்ரபாவளியாகும். இதனை தெய்வச்சிலையின் மூலப் பொருளாலேயே அதன் பிரபையை சிலையுடன் கூடியதாகவே அமைத்திடவேண்டும், என்பது சிறப்புவி தியாகும். அல்லது திருவாசியைமட்டும், அதனினும் (கல்லினும்) உயர்தரமான உலோகத்தாலானதாக தனித்ததாகவோ, திருவாசியாக அமைக்கப்படும். பீடமும் பிரபையும் பூசிக்கும் சிலைக்கு ஓர் துணையாகஉள்ள அங்கமாகும். இது சேவிப்போருக்கு ஞானமளிக்கவல்லதாகும். எனவே பிரபாவளி மிகவும் அவசியம் என்பதை அறியவும். பிரபை= ஒளி + ஆவளி = வரிசை என்பது பொருளாகும் சிலையின் மூலப்பொருளிலேயே அதன் பீடமும் பிரபாவளியும் அமையவேண்டும் அல்லது அதனினும் உயர்தரமான உரிய மூலப் பொருளாலேயே அமைத்திட வேண்டும். மாறாக அமைக்கக் கூடாது என்பது ஆகமசாஸ்திர விதியாகும்.

ஆலய திரைச்சீலையின் அமைப்புத்தத்துவம்



தெய்வசன்னிதியில் அமையும் திரையானது, மாயையாகி, சிவத்தை மறைத்து நின்று, உலகசுகபோகத்தை உயிர்கள் அனுபவிக்க உதவி செய்வதும், பின்பு அதுவே ஒதுங்கி, விலகிநின்று, சிவத்தைக்காட்டுகின்ற சிவசக்தியாக திரைச்சீலையாய் அனுக்ரஹரூபமாய் விளங்குவதாகக் கருதப்படுகிறது. எனவே திரை இட்டுள்ளபோது என்றும் ஒருவரும் உள்ளேஉள்ள தெய்வத்தை தரி சித்தல் கூடாது என்கிறது ஆகமம். இந்த திரைச்சீலை பூசையின்போது தினமும் பலமுறை பூசிக்கப்டுகிறது. மேலும் பூசைக்காலத்தில் கிரியைகளையும் அடியவர்களுக்கு அறிவிப்பதாகவும் திரை விளங்குகிறது. திரையில், திரஸ்கரிணீசக்தி, யவனிகா, போகினீ சக்திகள் பெயரால் பூசிக்கப்படுவர். திரையிடுவதற்கான காலங்கள், அவசியங்கள், பயன்கள் ஆகமங்களில் கூறப்படுகின்றதால் இதன் பெருமையை நாம்அறியலாம்.

ஆலய திருவிளக்கு அமைப்பு (தீப ப்ரதீபங்கள்)

கோயிலில் ஒளிரும் அருள்நிறைந்த ஒளிவிளக்குகள் நமக்கு அறிவொளியைத் தருபவை. ஆலய சன்னதிகளில் விளக்கேற்றிவைத்து அங்கு நாம் புறஇருளைப் போக்கினால், இறைவன் நமது அகஇருளைப் போக்கும் ஞானத்தை நமக்கு அளிப்பான் என்பதாகக் கூறுகின்ற ஆகமம், "தீபம் ஞானப்ரதம் வித்தி" என்றுகூறி தீப மேற்றுமாறுவிதிக்கிறது. விளக்கேற்றுவதால் நமக்குஞானப்பிரகாசம் ஏற்படும், புண்ணியப்பயன் கிட்டும். "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என்கிறார் அப்பர்பெருமான். இதன் தத்துவம் யாதெனில் நமது உடலில் மூலதாரத்தில் அதோமுகமாக உறங்கும் குண்டலினியை எழுப்பி, மூலாதாரம் முதலிய ஸ்வாதிஷ்டானாதி ஆறு இடங்களின் ஆதாரசக்கரங்களையும் இந்தஸப்தஸ்தானங்களையும் சிவ யோகத்தின் முறைப்படி ஏறிப்போய், சந்திரனுடைய அமுதத்தைக் குடித்து ஆனந்திக்கின்ற சிவயோகிகளுடைய, ஞானக்கண்ணுக்கு புலப்படுகின்ற மின்மினி, மின்னல், தீபம், தீப்பந்தம், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் அக்னி முதலிய ஒளிதரும் தேஜோரூபமான

வஸ்துக்களைப்போல, உதிக்கின்ற அருள் பிரகாசங்கள் எவையோ அவையே ஆலயங்களில் ஏற்றப்பட்டுள்ள தீபப்ப்ர தீபங்கள் என்பதை நாம் உணரவேண்டும். கோவில் விளக்கேற்றுவதற்காகவே உலோகத்தாலான தூண், அல்லது மரம், பிரபைவடிவிலான விளக்கு, தூண்டா விளக்கு, மணி விளக்கு, குடவிளக்கு, பாவைவிளக்கு, தூண்விளக்கு, பண்முக விளக்கு முதலாக தீபங்களில் பலவகைகள் உண்டு. கோயிலில் பலிபீடத்தருகில் கல்தூண் ஒன்று உச்சியில் சிறிய பீடத்துடன் ஒரு "தீப ஸ்தம்பம்" அமைந் திருக்கும். கைவிளக்கு, சரவிளக்கு, சிறுவிளக்கு, பெருவிளக்கு, பெருஞ்சுடரொளி ,என்றறியப்படவேண்டியவ.

சததீபஸ்தம்பம்
(உலோஹம்)

வாத்யவிசேஷங்களின் தத்துவம்

கோயிலில் தினமும் பஞ்சபூத வடிவங்களான ஐந்துவிதமான இசைக்கருவிகளால் இசைக்கப்படுவது உலகத்தின் உயிர்களுக்கு அறியாமையைப்போக்கி, ஐந்துவகையான புத தோஷங்களையும் நீக்கி அருள்வது ஐவகை இசையாகும். பதினெட்டுவகையான வாத்தியங்கள் பதினெட்டுவகையான தீயகணதோஷங்களை நீக்குபவைகள். இந்த இசைக்கருவிகளின் (கோஷம்) நாதஒலியானது, யோகிகள் பிராணாயாமத்தால் பிரம்மரந்திரத்திலுள்ள சந்திரமண்டலத்தினுடைய அமுதப்பெருக்கால் தமது தேஹநாடிகளை நிரப்பும்பொழுது, அவைகளில் பத்துவித நாதங்கள் உண்டாகும் என்பது சிவயோகலய அனுபவம். அந்த தசவிதநாதங்கள் 1.மணியின்சப்தம் போலவும், 2.மேகத்தின் கர்ஜனை போலவும், 3.கடலின் பேரொலி போலவும், 4.மத்தலத்து த்வனிபோலவும், 5.வீணையின் நாதம் போலவும், 6.சிலம்பின் சப்தம் போலவும், 7.சங்கத்தின் ஒலிபோலவும், .இவ்வாறாக பலவகையில் குறிப்பிடப்பட் நாதோபஸனைகளாக இருக்குமாம். இந்த தசநாடிகளின் தசவிதமான நாதங்களையே ஆலயவாத்ய ஒலிகள் உணர்த்துவனவாகும். பெருவிழாக்களில் பதினெட்டுவகை இசைக்கருவிகள் குறிப்பிட்டு விதிக்கப்பட்டு, அவற்றின் அவசியமும், பயன்களும் கூறப்பட்டுள்ளன. அவ்வூரார்கள் நோயற்று வாழவும் பூதம்பிசாசாதியர்கள், மற்றும் பீடைகள்நீங்கி வாழவும் வாத்தியு இசைநாதம் உதவுகிறது என்று அறிவோம்.

கோயில் வகைகள் (திருமுறைகளில்)

வ.எண்.	அமைப்புவகை	க்ஷேத்ர ஊர்கள்
1.	கரக்கோயில்	திருக்கடம்பூர்
2.	கொகுடிக்கோயில்	கருப்பறியலூர்
3.	மணிக்கோயில்	திருப்பறியலூர்
4.	ஆலக்கோயில்	திருக்கச்சூர்
5.	பூங்கோயில்	திருவாரூர்
6.	பெருங்கோயில்	நன்னிலம்
7.	மாடக்கோயில்	திருச்சாய்க்காடு, வைகல்
8.	இளங்கோயில்	திருமீயச்சூர்
9.	ஞாழல்கோயில்	திருப்பாதிரிபுலியூர்



பன்னிருதிருமுறை தமிழ்மறைமூர்த்தி

பெருமைமிகுத் தலலிங்கங்கள்

பஞ்சபூதத்தலங்கள் - மஹாபூதரூபலிங்கம்

	பஞ்சபூதம்	திருத்தலம்
1.	பிருத்வீ (மண்) பிருத்வீ (மண்)	திருவாரூர் (சிவத்தன்மை) காஞ்சீபுரம் (சக்திதன்மை)
2.	அப்பு (நீர்)	திருவாணைக்காவல்
3.	தேயு (நெருப்பு)	திருவண்ணாமலை
4.	வாயு (காற்று)	திருக்காளஹஸ்தி
4.	ஆகாசம் (விண்)	சிதம்பரம்

பஞ்சசபைகள் - நடேசரின் சபைவகை

	திருத்தலஊர்பெயர்	தெய்வம் சபை
1.	சிதம்பரம் நடராஜர்	கனகஸபை (பொற்சபை) பொன்னம்பலம்
2.	மதுரை நடராஜர்	ரஜதஸபை (வெள்ளிசபை) வெள்ளியம்பலம்
3.	திருநெல்வேலி நடராஜர்	தாமிரஸபை (செம்புச்சபை) (செப்பு/அம்பலம்)
4.	திருவாலங்காடு நடராஜர்	இரத்தினஸபை (மாணிக்கசபை) மணியரங்கம்
5.	திருக்குற்றாலம் நடராஜர்	சித்திரஸபை (சிற்பச்சபை) ஓவியஅம்பலம்



மேற்குநோக்கிய மூலாலயம்

ஆறுஆதாரத்தலங்கள் (தேஹஷடாதாரக்ஷேத்திரம்) (உடலின்சக்கரத் தலங்கள்)

தெய்வத்திருமேனியாகிறதேவாலயங்கள் ஆன்மாக்கள் தவநெறியால் சிவனோடுகூடிய சிவயோகஸித்திகளைப்பெற திருத்தலங்களில் விளங்கும் பெருங்கோயில்கள் ஆறு ஆதாரநிலைகளாக கூறப்படு கின்றன. அவ்வகையில் கூறப்படும் சிவத்தலங்கள், சிவாலயங்கள் முறையே,

1. மூலாதாரம் – (குய்யம்) (நிலத்தலம்) – திருவாரூர்.
2. ஸ்வாதிஷ்டானம் – குறி (கருவாய்) (நீர்த்தலம்) – திருவானைக்கா.
3. மணிபூரகம் – நாபி (தொப்புள்) (நெருப்புத்தலம்)–திருவண்ணாமலை.
4. அனாஹதம்–இருதயம் (நெஞ்சம்) (ஆகாயத்தலம்)–தில்லை சிதம்பரம்.
5. விசுத்திசக்ரம் – வாய் (தாடை/கண்டம்) (காற்றுத்தலம்)–திருக்காளத்தி.
6. ஆக்ஞாய்சக்ரம் – புருவமையம் (பிந்து) (யோகத்தலம்) – காசி (வாராணசி).
7. பிரம்மரந்திரம் – (தலையுச்சித்துளை) (முக்திதலம்) – கயிலை (கேதாரம்).

இவ்வாறு காசியில் தவத்தால் தியானம்செய்தபின்னர் பெரும்பேறு ஆகும். கயிலாயமலையானைக் கண்டுதரிசிப்பது நமது தலையின்



யோகிதேஹ ஷடாதார சக்கரங்கள்

உச்சிமேல் பன்னிரண்டு அங்குல உயரத்தில் பரமாகாசம் எனப்படுகிற சிவஸ்தானமாகிய துவாதசாந்தம் என்கிற பரசிவஸ்தானம் உள்ளது. அந்த துவாதசாந்தத்தலமாக உள்ளது தென்மதுரை மீனாக்ஷிசுந்தரேச்வரர் திருக்கோயில் என்றும், திருவாலவாய்த் திருவிளையாடற் புராணம் கூறியுள்ளது. இக்கருத்தினை அறிவிக்கும், அத்தலபுராணப் பாடல் இதுவேயாகும்.

திருவள ராரூர்மூலந் திருவானைக் காவே நாபி.
மருவளர் பொழில்சூ ழண்ணா மலைமணி பூரநீவிர்.
இருவருங் கண்டமன்ற மிதயமாந் திருக்காளத்தி.
பொருவருங் கண்டமாகும் புருவமத் தியமே காசி.
பிறைதவள் கயிலைக் குன்றம் பிரமரந் திரமாம் வேதம்.
அறைதரு துவாதசாந்த மதுரை.....

இவ்வாறாக புண்ணிய பூமியாகிய நம் பாரததேசத்தில் மேலும் பலவகையில் பலநிலைகளில் இமயமலை முதல் ஸேதுக்கரை வரையில், எண்ணற்ற தலங்கள், பன்னிரு ஜ்யோதிர்லிங்கத் தலங்களும், ஸ்ரீசைலம் முதலானவையும் சிவாலயங்கள் விளங்குகின்றன. மேலும் அறுபத்திஎட்டு சிவனின் சுயம்புக்ஷேத்திரங்களும் ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன். எல்லா சவாலய வழிபாட்டையும் இத்தலங்களில் ஒன்றாகக் கருதிவழிபடவேண்டும் என்பது மரபு.

அஷ்டவீரட்டத்தலங்கள். (வீரட்டேச்வரத்தலவெண்பா)

பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம்அதிகை,
மாமன் பறியல், சலந்தரன் விறகுடி, மா வழுவூர்,
காமன் குறுக்கை, யமன் கடவூர், இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே.

1. திருக்கண்டியூர் – பிரமனின்சிரங்கொய்த தலம்.
2. திருக்கோவலூர் – அந்தகாசுரனைச் சங்கரித்த தலம்.
3. திருஅதிகை – திரிபுரங்களை எரித்து அழித்த தலம்.
4. திருப்பறியலூர் – தக்கன் சிரங்கொய்த தலம்.
5. திருவழுவூர்(ச்யுதபுரீ) – யானையை உரித்தழித்த தலம்.
6. திருக்குறுக்கை – காமனை கனலால் எரித்த தலம்
7. திருக்கடவூர் – யமனைக்காலால் உதைத்திட்டதலம்.

ஸப்தஸ்தான க்ஷேத்திரங்கள் (வெண்பா)

நெய்த்தானம் பூந்துருத்தி நேர்கண்டி வேதிகுடி
துய்த்தார்சேர் சோற்றுத் துறைபழனம் – மெய்த்தான
மானதிரு வையாறதனோ டெழுதலங்கள்
மானதிரு மத்தன் மனை.

1. திருவையாறு.
2. திருப்பழனம்.
3. திருச்சோற்றுத்துறை.
4. திருவேதிகுடி.
5. திருக்கண்டியூர்.
6. திருப்பூந்துருத்தி.
7. திருநெய்த்தானம்.

தியாகராஜப்பெருமானின் ஏழுதலங்கள் சப்தவிடங்க ஸ்தலங்கள் வெண்பா

சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில் – பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத்தலம்.

எண்.	தலம்	விடங்கர்பெயர்	நடனப்பெயர்
1.	திருவாரூர்	வீதிவிடங்கர்	அசபாநடனம்.
2.	திருநள்ளாறு	நகவிடங்கர்	உன்மத்தநடனம்.
3.	திருநாகைக்காரோணம்	சுந்தரவிடங்கம்	(வீசீநடனம்) பாராவார தரங்க நடனம்.
4.	திருக்காறாயில்	ஆதிவிடங்கர்	குக்குடநடனம்.
5.	திருக்கோளிலி	அவனிவிடங்கர்	பிருங்கநடனம்.
6.	திருவாய்மூர்	நீலவிடங்கர்	கமல நடனம்.
7.	திருமறைக்காடு	புவனிவிடங்கர்	ஹம்ஸபாதநடனம்.

காசிக்கு நிகரான ஏழுதலங்கள்

1. திருவெண்காடு.
2. திருவையாறு.
3. திருமயிலாடுதுறை (மாயூரம்)
4. திருவிடைமருதூர்.
5. திருச்சாய்க்காடு.
6. திருவாஞ்சியம்.
7. அவிநாசி (கோவை)

பஞ்ச வ்யாக்ரபுரிகள் (புலிக்கால்முனிவர் வழிபட்டதலம்)

(வியாக்ரபாதரிஷி பூசித்த, ஐந்துபுலியூர் சிவத்தலங்கள்)

1. பெரும்பற்றப்புலியூர் (தென்புலியூர்) சிதம்பரம்.
2. திருப்பாதிரிப்புலியூர் (வடபுலியூர்) கடலூர்.
3. ஓமாம்புலியூர்
4. எருக்கத்தம்புலியூர்.
5. பெரும்புலியூர்.

நான்கு நாகேச்வரம் (பாம்பரசன் வழிபட்டதலம்)

(நாகராஜனாகிய ஆதிசேஷன் பூஜித்த சிவஸ்தலங்கள்)

1. திருநாகேச்சுரம்.
2. திருநாகைக்காரோணம் (நாகப்பட்டணம்).
3. திருக்குடந்தைகீழ்கோட்டம் (நாகேச்வரசுவாமி).
4. திருப்பாம்புரம்.

மூன்று தென்கயிலைத் தலங்கள்

(கயிலைமலைக்கு நிகரானவை)

வாயுதேவனால் பறித்துத் தள்ளப்பட்ட மேருமலையின் சிகரங்கள் விழுந்த மூன்றுஇடங்கள். அவைகளுள் ஒன்று திருக்காளத்தி, மற்றொன்று திருசீராமலை (திருச்சி) மற்றது திருகோணமலை.

முன்னர் வீழ்ந்திடு சிகரி காளத்திய மொழிவர்
பின்னர் வீழ்ந்தது திருசிராமலை யெனும் பிறங்கல்
அன்ன தின்பிற கமைந்தது கோணமா வசலம்
இன்ன மூன்றையுந்தக்ஷிண கயிலையென்றிசைப்பார். (செவ்வந்திபுராணம்)

1. திருகாளத்தி (காளஹஸ்திமலை– ஆந்திரா)
2. திருச்சிராப்பள்ளி (திருச்சிமலை – தமிழ்நாடு)
3. திருகோணமலை (திரிகோணமலை–இலங்கை–யாழ்ப்பாணம்)

பன்னிரு ஜோதிர்லிங்க ஸ்தலங்கள்



1. ஸௌராஷ்ட்ரம் [குஜராத்]
சோமநாதர்.
காட்யாவாட்,
சமுத்திரம் (கடற்கரை)



2. ஸ்ரீசைலம் [ஆந்திரா]
மல்லிகார்ஜுனர்
லிங்கபர்வதம்,
தென்கையிலாயம், கிருஷ்ணாநதி



3. உஜ்ஜயினி [மத்தியபிரதேசம்]
மஹாகாளர்
அவந்திகாபுரீ, க்ஷிப்ராநதீ



4. அமலேச்வரம் [மத்தியபிரதேசம்]
ஓம்காரேச்வரர்
மந்தரபர்வதம், நர்மதாநதீ, சிவபுரீ



5. பரளி [ஜார்க்கண்ட்]
வைத்யநாதர்
பீஹார் சந்தலாமாகாணம்.



6. டாகினீ [மஹாராஷ்ட்ரா]
பீமசங்கரம்
பிரம்மபுரா மலை, கேளஹாத்தி



7. சேதுபந்தம் [தமிழகசேதுகரை]
ராமநாதர்
ராமேச்வரம் சமுத்ரம் (கடற்கரை)



8. தாருகாவனம் [சௌராஷ்ட்ரம்]
நாகேசர்
குஜராத், துவாரகா அருகில்



9. வாராணசீ (காசி)[உத்தரப்ரதேசம்]
விச்வநாதர்
கங்கைநதிக்கரை, ஆர்யாவர்த்தம்.



10. கௌதமீதடம் [மஹாராஷ்ட்ரா]
த்ரயம்பகேச்வரர்
கௌதமஆச்ரமம் (நாசிக்)

11. ஹிமாலயம் [உத்தரகண்ட்]
கேதாரேச்வரர்
புண்யவதீபுரீ, மந்தாகிநீ நதீ



12. சிவாலயம் [மஹாராஷ்ட்ரா]
குச்மேசர்/குச்வேச்வர்
தேவகிரி, தௌலதாபாத்–வெருளா
ஸ்ரீக்ருஸ்ருரணேஸ்வரர்

நவக்ரஹங்கள் பூஜித்த சிவஸ்தலங்கள்

1. சூரியன்தலம் : 1. சூரியனார்கோயில், 2. (செம்பொனார்கோயில்) செம்பொன்பள்ளி, 3. பரிதிநியமம், 4. ஞாயிறு போன்ற தலங்கள்.

2. சந்திரன்தலம் : 1. குடந்தைக்காரோணம், கும்பகோணத்தில் பொற்றாமரைக் குளக்கரையிலுள்ள சோமேசர்கோயில் மற்றும் திங்களூர்.

3. அங்காரகதலம் : 1. புள்ளிருக்குவேளூர், 2. திருச்சிறுகுடி.

4. புதன்தலம் : 1. திருவெண்காடு.

5. குருதலம் : 1. இரும்பூளை (ஆலங்குடி) மாயூரம்துறை காட்டும் வள்ளலார் கோயில். காவிரிக்கரையில் உள்ளது.

6. சுக்கிரத்தலம்: 1. கஞ்சனூர் – அக்னீச்வரர் & திருப்புகலூர்.

7. சனைச்சரத்தலம்: 1. திருநள்ளாறு முதலியதலங்கள்.

8. ராகுகிரஹதலம் : 1. கீழப்பெரும்பள்ளம், 2. நாகப்பட்டினம் நாகநாதர்கோயில்.

9. கேதுஸ்தலம் : 1. திருப்பாம்பரம், 2. திருநாகேச்வரம். 3. நாகபட்டிணம் நாகேச்வரர் ஆலயம் முதலியன.

சூரியனார்கோயில்

திங்களூர்

வைத்தீஸ்வரன்கோயில்

திருவெண்காடு

ஆலங்குடி

கஞ்சனூர்

திருநள்ளார்

திருநாகேஸ்வரம்

கீழப்பெரும்பள்ளம்

அறுபத்தெட்டு சிவக்ஷேத்ரங்கள்
(ஸ்கந்தகாலோத்தராகமம்)

இந்த அறுபத்தெட்டு க்ஷேத்ரங்களும் ஸ்வாயம்புவலிங்க இருப்பிடமாகும். இந்த ஸ்வாயம்புவக்ஷேத்ரங்கள் ருத்ராவதார க்ஷேத்ரங்க ளெனவும் பெயர் பெறும். எல்லா சிவாலய லிங்கத்தையும் இவற்றில் ஒன்றாய் கருதிவணங்குதல்முறை. இவ்வறுபத்தெட்டும் விவரமாக வீராகமத்தில் கூறப்பட்டுள்ளதே இங்கு குறிப்பிடப்படுகிறது.

சிவத்தலமும்	அங்குள்ள சிவனின்பெயரும்
1. வாரணாஸியில் (காசியில்)	மகாதேவர்
2. ப்ரயாகையில்	மஹேச்வர்
3. நைமீசத்தில் (நைமிசாரண்யம்)	தேவதேவேசர்
4. கயையில் (கயாவில்)	ப்ரபிதாமஹர்
5. குருக்ஷேத்ரத்தில்	ஸ்தாணுநாயகர்
6. ப்ரபாஸத்தில்	சசிபூஷணர்
7. புஷ்கரத்தில்	அஜோகந்தர்
8. விமலேச்வரத்தில்	விச்வேசர்
9. அட்டஹாஸத்தில்	மஹாநாதர்
10. மகேந்திரத்தில் (மலையில்)	மஹாவ்ரதர்
11. உஜ்ஜயினில்	மஹாகாளர்
12. மஹாகோடத்தில்	மதோத்கடர்
13. சங்குகர்ணத்தில்	மஹாதேவர்
14. கோகர்ணத்தில்	மஹாபலர்
15. உருத்ரகோடியில்	மஹாயோகீச்வரர்
16. ஸ்தலேச்வரத்தில்	மஹாலிங்கமூர்த்தி
17. கேதாரத்தில்	ஈசானர்
18. இமாலயத்தில்	உருத்ரருத்ரர்
19. ஸ்வர்ணாக்ஷத்தில்	ஸஹஸ்ராக்ஷர்
20. விச்வேசத்தில்	வ்ருஷபத்வஜர்
21. பைரவத்தில்	பைரவேசர்

22. பத்ராவடத்தில்	பத்ரர்
23. கநகலத்தில்	உருத்திரர்
24. பத்ரகர்ணத்தில்	ஸதாசிவர்
25. தேவதாருவனத்தில்	தண்டீசர்
26. குரஜாங்கலத்தில்	சண்டீர்
27. திருஸேந்தியில்	ஊர்தவரேதர்
28. ஜாங்கலத்தில்	கபர்தீசுவார்
29. ஏகாக்ரத்தில்	கிருத்திவாஸர்
30. அம்ருதகேச்வரத்தில்	ஸூக்ஷ்மர்
31. காளஞ்சரத்தில்	நீலகண்டர்
32. விமவேச்வரத்தில்	ஸ்ரீகண்டா
33. த்யானேச்வரத்தில்	ஸித்தேச்வரர்
34. காயத்ரியில்	முக்தகேச்வரர்
35. காச்மீரத்தில்	விஜயர்
36. மகுடேச்வரத்தில்	ஜயந்தர்
37. க்ருதேச்வரத்தில்	பஸ்மகாயர்
38. கைலாஸமலையில் (கயிலை)	கிராதர்
39. வ்ருஷஸ்தானத்தில்	யமலிங்கேச்வரர்
40. கரவீரத்தில்	கபாலீசர்
41. த்ருஸந்தியில்	த்ரியம்பகர்
42. விரஜையில்	திரிலோசனர்
43. தீப்தத்தில்	மஹேச்வரர்
44. நேபாளத்தில்	பசுபதீச்வரர்
45. காரோஹணத்தில்	வருனீசர்
46. அம்பிகாநகரத்தில்	உமாபதீசர்
47. கங்காஸரஸில்	அமரநாதர்
48. மகேசுவரத்தில் (நர்மதைகரை)	ஓங்காரேச்வரர்
49. ஹரிச்சந்திரத்தில்	அப்திநாதர்

50. குருக்ஷேத்திரத்தில்	சங்கரர்
51. வாமேச்வரத்தில்	ஜடிலர்
52. மகுடேச்வரத்தில்	ஸௌர்யர்
53. ஸப்தகோதாவரியில்	பீமர்
54. நாகேச்வரத்தில்	ஸ்வயம்புவர்
55. ஜல்பேஸ்வரத்தில்	த்ருசூலியார்
56. ஸ்ரீசைலத்தில்	த்ரிபுராந்தகர்
57. கர்ணிகாரோஹணத்தில்	அத்யக்ஷர்
58. கைலாஸத்தில்	கணநாயர்
59. ஹேமகூடத்தில்	விரூபாக்ஷர்
60. கந்தமாதனத்தில் (மலையில்)	பூர்பவர்
61. ஹிமஸ்தானத்தில்	கங்காதரர்
62. படபாமுகத்தில்	அநலேஸ்வரர்
63. விந்தியமலையில்	வராஹேச்வரர்
64. கோடிவடத்தில்	உக்ரர்
65. இஷ்டிகாபுரத்தில்	வரிஷ்டர்
66. லங்கையில் (இலங்கை)	ஊர்த்வகேசர்
67. பாதாளேஸ்வரத்தில்	ஹாடகேஸ்வரர்
68. லிங்கேச்வரத்தில்	வரதர்
69. கஜப்ரியத்தில்	ஜலலிங்கேசர்

இவ்வாறு ஆகமத்தில் சிவக்ஷேத்ரங்கள் (தலங்கள்) அங்குள்ள ஈசுவரரின் பெயர்கள் கூறப்படுகிறது. கைவாயரை இருமுறைக் கூறியது. சாஸ்த்ர மரியாதையையும் க்ஷேத்ர விசேஷத்தைப் பொருத்ததாகவும் இருக்கக்கூடும். ஆகமங்களில் கூறப்பட்டுள்ள இடங்களின் பெயர்கள் தற்காலத்தில் பலவேறுபட்டுள்ளன. கண்டறிதல் கடினமாயுள்ளது. அந்தந்த ஸ்தலபுராணங்களால் அடையாளம் காணப்படவேண்டும். ஒருசில சிவக்ஷேத்திரத்திற்கு பத்துக்கும்பேமற்பட்ட தலபுராணப் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் கண்டறிதல்முறை.

சிவத்தலவாழ்வும் சிவகதிப்பேறும்
(கேயிலடி சிவன்சேவடிப்பகுதி)

இந்த ஸ்வாயம்புவ லிங்கத்தின் அறுபத்தி எட்டு க்ஷேத்ரவாஸமுஞ் சிறந்ததோடு வேறு க்ஷேத்ரங்களும் (மக்கள் வாழ்ந்திடத்தகுந்தவை, சிறந்தவை) வாஸயோக்யமாகும். அதன் விவரமும் வருமாறு:

ஸுப்ரபேதாகமத்தில் சிவலிங்கமிருக்குமிடத்திலிருந்து நான்குபுறமும் நூற்றிஐம்பதுமுழ தூரம் சிலக்ஷேத்ரமாகும். இங்கு வசிப்பதும் சிவலோக வாஸத்திற்கு காரணமாகும். இது மானுஷலிங்கவிஷயம். சுவயம்புவாஸஸ்தலம் ஆயிரம் பங்கும், ஆர்ஷலிங்கமிருக்கும் ஸ்தலம் ஐநூறுபங்கும் அதிகபயன்தருவதுமாகும். இன்னும் ஸ்தாவரம், ஜங்கம் (இந்த)பிம்பங்களது ஆராதனங்களாலும் ஸ்ரீபரமேசுவரரது ப்ரபாவத்தாலும் அங்கு வசிப்போர் ஸ்வர்க்கத்தை அடைவார்கள். ஆகையால் சிவாலயத்தின் ஸமீபத்தில் வாஸஞ்செய்யவேண்டும் என்கிறது ஆகமம்.

இப்படியே **ஸர்வஞானோத்தராகமத்தில்** சிவக்ஷேத்ர ப்ரமாணத்திலும் சொல்லப்பட்டுள்ளன. அதாவது, ஆசார்களால், சிவலிங்கமிருக்கு மிடத்திலிருந்து நூறுமுழதூரம் சிவக்ஷேத்திரம் எனபதாக ஸ்தாபிக்கப் பட்டுள்ளன. இதைவிட இன்னும் அம்சுமத் காச்யபத்திலும் பௌருஷலிங்கமுடைய ஆலயத்தைவிட, ஆர்ஷலிங்கமுடைய ஆலயமும், இதைவிட தேவகணங்களால் பிரதிஷ்ட்டை செய்விக்கப்பட்ட காணவ லிங்காலயமும், இதைவிட தைவிகலிங்காலயமும், இதைவிட ஸ்வாயம்புவ லிங்காலயமும் சிறந்ததாகும் எனப்படுகிறது. இது பயனை அடைய விரும்புபவர்கள் அனுஸரிக்க வேண்டியவையாகும். திருவாரூரில் பிறந்தாலேயே முக்திபேறு கிட்டும் என்பார்கள்.

மேலும் **காலோத்தராகமத்தில்** ருத்ரருடைய அவதாரஸ்தானங்கள் யாவும் ஸ்வயம்புக்ஷேத்ரங்கள். இத்தலங்களில் இறந்தவர்கள் சிவக்ஷேத்ரவாஸபலனை அடைவர்கள். பூவுலகில் ஸ்வயம்புலிங்கமிருக்குமிடம் யாவுமே மகத்தான பலன்களைக் கொடுக்கும். இன்னும் இந்த ஸ்வயம்புவலிங்க ஆராதனம், இலிங்கத்யானம், சிவமந்திரஜபம் இவ்விடத்தில்ஸமாதியடைவது, இவைகளைச் செய்பவர்கள் குறைவற்றபலன்களைப் பெறுவதோடு, இறந்தபின் சிவாயுஜ்யமுமடைவார்கள் என்று ஆகமங்கள் கூறியுள்ளன. எனவே பலசிவாலயவெளிச்சுற்றில் ஸித்தர்களின் ஜீவசமாதிகள் அமைந்துள்ளன.

மஹாசதாசிவர்

ஆதித்யபுராணத்தில் சிவாலயத்தின் நான்குபுரமும் ஒரு க்ரோசமளவு சிவக்ஷேத்ரமே. இவ்விடத்தில் இறந்தவர்கள் சிவஸாயுஜ்யமடைவர். இது மானுஷலிங்க விஷயம். ஸ்வாயம்புவ லிங்காலயத்திற்கு ஒருசிவயோஜனை தூரமும், ஆர்ஷலிங்காலயத்திற்கு அரையோஜனை தூரமும் வாஸமே மோக்ஷப்ரதம். (அங்கு வசித்தலே முக்தியை அளிப்பதாகும்) (ஒரு க்ரோசதூரம் என்பது எண்ணா யிரங்கை முழநீளமாகும்.) பாபாசாரமுடையவனும் தினத்தோறும் பாபகர்மாவை செய்பவனுஞ் சிவாலயஸமீபவாஸத்தால் தேவர்களும் அடைய முடியாத சிவஸ்தானத்தையடைவான், ஆனதால் சிவாலய ஸமீபவாஸம் மிகச் சிறந்ததாகும். அண்ணாமலையில் நினைக்க முக்திகிட்டும் (அங்குஜபதியானம்செய்வது) காசியில் இறக்க முக்திகிட்டும். ஸூதஸர்ஹிதையிலும் விஷ்ணுவின்பொருட்டு சிவனாரால் மேல்கண்டவாறு கூறப்பட்டுமுள்ளது. என்பதால் பூர்வஜன்ம புண்யவசத்தால் சிவாலயஸமீபவாஸம், & சிவபக்தாராதனம் (சிவபக்தபூஜை) சிவதீக்ஷையோடு தீக்ஷாகுருவால் கொடுக்கப்பட்ட லிங்கம் பிம்பம் இவைகளில் செய்யப்படும் ஆன்மார்த்தபூஜை. அந்த லிங்கபிம்பங்கள் அது இருக்கத்தக்க பாரார்தாலய விமான ப்ராகார மண்டபங்கள், சிவலிங்கபிம்பங்கள் இவைகளின் ஜீர்ணங்களை பழுதுகளை குறைகளை உடனே செப்பனிட்டு, புதுப்பிப்பது இவைகளை சைவசமயிகள் தவறாது கடமையாச் செய்விக்க

வேண்டும். பழயகோயில் மற்றும் சிலைகளைப் புதுப்பிப்பது பன்மடங்கு புண்ணியபயனைத் தரக்கூடியதாகும்.

அவ்வாறே ஆக்னேயபுராணத்திலும் பிம்பம், லிங்கம், விமானம், பலிபிடம் சிவாலயம் இவைகளில் சிவனார் ஸான்னித்யமாகவஸிப்பார். என்றும் இன்னும் விமானம், லிங்கம், ப்ராகாரம், துவஜஸ்தம்பம், வாஹனம் இவைகளை அரையங்குலம் முதல் முழம் முழமாகக்கூட்டிப் பெரிதாக கட்டிவைப்பது, சிவனாருக்கு மிகப்பிரிய மானதாகும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக சிவாலயத்தருகே வாழ்வதும், சிவாலயத்திருப்பணியைச் செய்வதும் பிறவிப்பயனாகிய பரகதியைத்தரும் என்று வேதாகமபுராண நூல்கள் அறநெறிவாழ்வை எடுத்துரைக்கின்றன.



தமிழ்நாடு. மத்யார்ஜுனக்ஷேத்ரம்

இப்போதுள்ள தேவாரத்தலங்கள் 274 . மேலும் பல க்ஷேத்திரங்களின் தேவாரங்கள் இருந்தும் அவை நமக்குக் கிடைக்காமல் மறைந்து போயுள்ளன. நமது புண்ணிய பாரதபூமியில் ஆயிரத்தெட்டு சிவலிங்க க்ஷேத்திரங்கள் (தலங்கள்) இருப்பதாக முன்னோர்கள் கூறியுள்ளனர்.

லிங்கதத்துவரூப பாவனை முறைகள்

ஆலயத்தை அருள்தரச்செய்யும் விமானப்ரதிஷ்டை

ஆலயஅமைப்பு என்றசொல் அதன் உருவஅமைப்பையும், அதன் தத்துவப்பொருள்களையும் உணர்த்துவதாகும். நாம் காணுகின்ற தொன்மைமிக்கதான பலபெருங்கோயில்கள் சைவாகமப்படி கட்டப்பட்டுள்ளவையாகும். அக்கோயில்கட்டிடங்களுக்கு என்றும் தெய்வாம்சத்தை நிலைபெறச் செய்வதே பிரதிஷ்டை எனப்படும். இதனை கும்பாபிஷேகம் என்றும் கூறுவர். சிலைகளில் ஒரு மூலமந்திரமானது அதற்கு உயிரெனவே உறைந்து இருந்து, அந்த லிங்கம் அல்லது பிம்பங்கள், (சிலை) அருள்தருவதற்காக (ஒளிமயமான பிந்துவடிவத்துள்ளே ஒலிமயமான மந்திரஓசை என்னும் நாதமாய் நிற்பதே பிரதிஷ்டை. நமது உடல் அசித்து ஆனால். தெய்வத் திருமேனி முற்றிலும் சித்து (ஞானம்) என்பதால், சக்திவடிவமான கோயிலுக்கு முதலில் பிரதிஷ்டையும், அதன் பின்பு உள்ளே இருக்கின்ற மூலலிங்கத்திற்குப் பிரதிஷ்டையும் செய்யப்படுவது ஆகமவிதிமுறையாகும். இதற்கு கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்று 64 செயல்முறைகள் கூறப்பட்டுள்ளன. ஆலயத்தில் இதுவரை கூறப்பட்ட தத்துவக்கருத்தின் முழுவிவரமும் அதன் பிரதிஷ்டை எனும் செயலின் மூலம்தான் நமக்கு நன்குபுலப்படும். கண்ணுக்கு புலனாகிற ஆலயமும், தெய்வலிங்கபேரங்களும், நமது கண்ணுக்குப் புலனாகாத(தெரியாத) நாதமயமான(ஓசை) மந்திரங்களால் செய்யப்படுகின்ற ஸம்ஸ்காரங்கள் (சடங்குகள்) செய்யப்படாவிடின் லிங்கம் மற்றும் கோயில் முதலானவை



நாகரவிமான சிகரமூர்த்தி

யாவும் உருவம் மட்டுமே கொண்டவையாக இருக்கும். தெய்வாம்சம் பெற்றவையாக ஆகாது. இதனை **"மந்தர ஸம்ஸ்கார ஹீநே து லிங்கம் ஆக்ருதி மாத்ரகம்"** என்று மகுடாகமம் விளக்கிக் கூறுகிறது. மந்திரசக்தியால் தெய்வஸாந்நித்தியம் ஏற்படச் செய்தலே பிரதிஷ்டை. அப்படி பிரதிஷ்டைசெய்யப்பட்ட லிங்கபிம்பத்திற்கு இடைவிடாது வழிபாடு செய்வதாலேயே அது உரிய பயனளிப்பதாகிறது. சிற்பியின் கலை நிலைத்து இருந்து ஆனந்தமளிப்பவை. ஆசார்யரின் மந்திரக்கலை குறைஏற்படின் விலகிடும் அருள்தராது. அணுவின் வடிவமே சிவலிங்கம். மூலக்கருவின் வடிவம் சிவலிங்கம். இதுவரை கோயில் மற்றும் அதன் உறுப்புகளையும், அவை உணர்த்தும்ஆன்மாவைச்சார்ந்த தத்துவங்களையும் பார்த்தோம். இனி அக்கோயிலிலுள்ள லிங்கத்தின் தத்துவார்தங்களையும் சித்தாந்தக் கருத்துக்களையும் காண்போம்.

சிவலிங்க தத்துவம் (லிங்கம் சொல்விளக்கம்)

லிங்கம் என்ற சொல்லுக்கு (லிங்கியதே = ஞாயதே, அனேந, இதி = லிங்கம். லிகி = கதௌ, என்ற தாதுவின்சொல்) **லிங்** = லயம், **கம்** = தோற்றம் எனப்பொருள் கொண்டு, லிங்கம் என்பது, உலகமும், திருமால்முதலிய உயிர்த்தொகைகளும், தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் இடமாயுள்ளது என்கிறது ஆகமம்.

லீயதே யத்ர பூதாநி நிர்கச்சந்தி யதப் புந: |
தேந லிங்கம் பரம் பூஜ்யம் நிஷ்களப் பரமச் சிவ: ||
லிங்க்யதே சின்ஹ்யதே யேந பாந்யதே பகவன் சிவ: |
யோகிபிஸ் தத் க்ரியாலிங்கம் வ்யக்தா (அ)வ்யக்தோ (உ)பயாத்மகம் ||

(காலோத்தராகமம்)

இங்கு பூதங்கள் என்றது உயிரினங்களாகும். இதனால் அறியப்படுவதால் இது லிங்கம் என்பது இதன் பொருள், லிம் = லயம் (ஒடுங்குதல்) கம் = போதல் (தோன்றுதல் – கிளம்புதல்) வேறுவகையாயும் இச்சொல்லுக்குப் பொருள் கூறுவர். ஸத் சித், ஆனந்தம், ஆகிய மூன்றின் ஒருமித்தஸ்வரூபம் லிங்கம் என்பர். இதிலிருந்தே எல்லா தத்துவங்களும் வெளிப்படுவதும் இதிலேயே ஒடுங்குவதுமாக உள்ளதால் இது லிங்கம் என்று பெயர் பெற்றுள்ளது என்கிறது ஆகமம். இதற்கானசான்று, இதுவே

லிங்காரம் லயமித்யுக்தம் ககாரம் ஸ்ருஷ்டி ருச்யதே |
லயநாத் உதயம் ப்ரோக்தம் லிங்க சப்த மிதீரிதம் ||

(உத்தரகாரணாகமம்)

லிங்கம் என்ற சொல் காரணப் பெயர்ச்சொல்.

லீயந்தே ஸர்வ தத்வாநி கம்யதே தி ககாரகம் |
லீயந்தே கம்யதே சேதி லிங்க மித் யபிதீயதே || (கிரியாஸாரம் 1-51-52)

வேதமானது ஸர்வாய நம:, – ஸர்வலிங்காய நம: என்கிறது. எல்லாமாக உள்ள சிவனும், எல்லாவற்றின் ஒரு உருவமானது லிங்கம் எனவே, ஸர்வலிங்கம் என்று வேதம் போற்றுகிறது. எதில் யாவும் ஒடுங்கினவோ, அதிலிருந்துதான் மீண்டும் வெளிப்படவும் இயலும். ஆதலால் அனைத்துலக அண்டசராசர உயிர்களையும் தம்முள்ளே கொண்டுள்ளதும், லயம் மற்றும் கமனம் இவற்றின் ரூபமாக படைப்புத்தொழிலையும், ஒடுக்கத்தொழிலையும், மற்றவைகளையும், தமக்குள் கொண்டு விளங்குவதுமான அரியவடிவமே சிவலிங்கம் ஆகும். இவ்விதமாக அனைத்தின் ஒடுக்கஉருவமாய் விளங்குவதே லிங்கம் என்ற சொல்லால் உணர்த்தப்படுகிறது. இறைவனுக்கு சின்னமாக உள்ளது. இதனை அமரநி கண்டு சின்னம் என்றும், லிங்கத்திற்கு மறுபெயரை கூறுகிறது. அவயவங்கள் ஏதுமில்லா லிங்கமே நிஷ்களத் திருமேனியாகும். நிஷ்கள மாகிய லிங்கம் ஆழ்ந்த தத்துவப் பொருளை உணர்த்தும் கடவுளின் அடையாளமாகும். லிங்கம் சிவத்தின் அடையாளமாகும். தோன்றி ஒடுக்கும் தன்மைவாய்ந்தது உலகம். அது தொடக்கத்தில் எவ்வாறு தோற்றமெடுக்கிறதோ அவ்வாறே இறுதியில் ஒடுக்கம் கொள்கிறது. சிவலிங்கம் அவற்றைப் படைக்கும் தன்மை வாய்ந்ததாக கொள்ளப்படுவதால் அதற்கு லிங்கம் என்று பெயர். எனவே சிவலிங்கம் சிருஷ்டியின் சின்னம் என்பதாகும். லிங் என்பது ஒடுக்கமாகிய லயத்தையும் கம் என்பது தோற்றத்தையும் குறிப்பிடும். எனவே லிங்கம் என்பதை தோற்ற ஒடுக்கத்தின் சின்னமாக ஆகமங்கள் விளங்கும்.

லிங்காத் ஸர்வம் ஸமுத்பந்நம் லயம் தஸ்மின் ப்ரகீர்த்திதம்.
ஸ்ருஷ்டி ஸம்ஹார மேவோக்தம் லிங்க நாம்நா த்விஹோச்யதே

(வாதுளசுத்தம்)

லிங்கம் ச காஷ்டம் ஜனிமம் அம்ருதம் பிரம்மேடிதம் பரம்
ஸத்யம் ஞானம் சுகம் நித்யம் வார்தகம் சரணம் ச்ருதம்.

(கிரியாஸாரம்–1–51–52)

வேதங்களில் சிவலிங்கத்திற்கு உரிய பெயர்களாக லிங்கம், காஷ்டம், ஜனிமம், அமிருதம், பிரம்மம், ஈடிதம், பரம், சத்யம், ஞானம், சுகம், நித்யம், இவைகளோடு யக்ஷம், யூபம் முதலானபெயர்கள் கூறப்படுகின்றன. ஆத்மாக்களும் உலகங்களும் ஒடுங்குவதற்கும், தோன்றுவதற்குமான இடமே சிவலிங்கம் என்று பொருள்கொள்ள வேண்டும்.

ஆலயத்தின் சூக்ஷ்மதேஹமே லிங்கம்

கோயிலில் மூன்று வகைகளில் லிங்கம் விளங்குகிறது. பொதுவாக மிகவெளிப்படையான பெரியஅளவிலான உருவமாக உள்ள மூலக்கோயில் ஸ்தூலலிங்கம் எனவும், மூலக்கருவறையின் நடுவே விளங்கும் மூலஸ்தானத்து உருவமான ஸ்தாவரலிங்கமானது, தெரிந்தும் மறைந்தும் உள்ளேஉள்ள மூலலிங்கமானது, சூக்ஷ்மலிங்கம் எனவும், ஆலயமைய எதிர்கோட்டில் ஆதாரஸ்தானத்தில் உள்ள மஹாபலிபீடமானது மங்களத்தைத் தருவதான பத்ரலிங்கம் எனவும் மூன்றுநிலைகளில் லிங்கம் விளங்குவதாக அறியத்தக்கது சான்று.

ஸ்தூலலிங்கம் விமானம் ஸ்யாத் சூக்ஷ்மலிங்கம் ஸதாசிவம் |
பலிபீடம் பத்ரலிங்கம் லிங்க த்ரய மிஹோச்யதே || (காரணாகமம்)

மேலும் லிங்கம் என்ற சொல்லால் இறைவன் உறையும் இடமாக அடையாளச் சின்னமாகக்கொண்ட நிலையில் அவ்யக்தலிங்கம் என்பது சிவலிங்கத்தையும், (அருவத்தையும்) வியக்தாவியக்தலிங்கம் என்பது முகலிங்கத்தையும், வியக்தலிங்கம், என்பது நடேசனார், சோமாஸ்கந்தர்,, சந்திரசேகரர் முதலான உமேசரின் திருமேனிகளுடைய மாஹேச்வரமூர்த்தங்களையும் உணர்த்துவதாகும். இதற்கானசான்று,

லிங்கம் த்ரிவித மித்யுக்தம் வ்யக்தாவ்யக்தோபயாத்மகம். (காமிகே)

மற்றோர் இடத்திலும் இதுவிளக்கப்படுகிறது.

லிங்கம் து த்ரிவிதம் ப்ரோக்தம் வ்யக்தா வ்யக்தோபயாத்மகம் |
வ்யக்தம் யா ப்ரதிமா (அ)வ்யக்தம் சிவலிங்க மிதி ஸ்ம்ருதம் ||
முகலிங்கம் பவேத் அன்யத் த்ருதீயம் உபயாத்மகம் | (காரணே)

(சைவாகமங்கள்)

இதனால் ஸகலதெய்வங்களின் உருவநிலையில்உள்ள சிலையான சகளமூர்த்திகளையும் வ்யக்தலிங்கம் என்றுதான் தெய்வச்சிலைகளை

சைவாகமங்கள் குறிப்பிட்டுக் கூறுகின்றன. இதுவே சகளம், மூர்த்தம், பேரம், பிம்பம், விக்ரஹம், பிரதிமா, சித்ரம் எனப்படும்.

மந்திர தர்மரூபமே லிங்கம் (பண்புஉருவமே)

சிவம் ஏகம் விஜாநீயாத் மந்த்ரமூர்த்திப் பரம் சிவம் |

(வாதுளசுத்தாக்கியம்)

கோயிலாகியஉடலுக்குள் உயிராகவிளங்குவதே லிங்கம்

தேஹம் விமான மித்யுக்தம் தேஹீ லிங்கம் இதி ஸ்ம்ருதம் |

சுயம்பு முதலான 6வகை சிஷ்டலிங்கத்திற்கு கோயிலே சரீரமாக இருக்க கோயிலில் லிங்கஅளவுக்கு ஏற்றதாக அதற்குஏற்ப அமைக்கப்படுவதால், **லிங்கமே பரமாத்மா** என்றாகிறது. மேலும் இக்கருத்தை உறுதிப்படுத்தும் ஆகமசான்று, இதுவே ஆகும்.

தேஹோ தேவாலயப் ப்ரோக்தோ ஜீவோ தேவஸ் ஸதாசிவ:

(சைவாகமங்களில்)

சிவலிங்கத்தில் இருப்பவர் **ஸதாசிவர்** எனப்படுவார், அவருக்குள் ஆறுவகையான பண்புகளின் வடிவினராகவே பரசிவம் என்பது அரூபமாக, தர்மியாய் விளங்குவதாகும். தர்மம் = பண்பு, தர்மீ = பண்பையுடையது. சதாசிவம் என்பது, சக்திகலாமயமான மந்திரதேஹத்திற்கு தர்மமாய் விளங்குகின்ற **வித்யாதேஹமே** ஆகும் என்று அறியவும். பிராஸாதம் என்னும் மூலமந்த்ரரூபமே சிவலிங்கம். அதன்விரிவான நமசிவாய எனும் பஞ்சாக்ஷரத்தின் ஐந்தெழுத்தின் ஒருமித்த பஞ்சகிருத்ய காரணேசர்களோடுகூடி விளங்குகின்ற **பஞ்சாக்ஷரரூபமே சிவலிங்கம்.** மேலும் அனைத்தையும் தம்முள்ளே கொண்டுள்ளதும் ஆதியுமான **பஞ்சகலாத்மகமான பிரணவஸ்வரூபமே சிவலிங்கம்.** இப்பிரணவம், அகாரம், உகாரம், மகாரம், நாதம், பிந்து, என்ற ஐந்துகலாமயமாக

விளங்குவதாகும். ஸ்தூலநாத ரூபமான பஞ்சகலாமயம் சிவலிங்கம். ஸர்வதத்துவங்களும் லிங்கமென்னும் சரீரமாயிருக்க, அதனுள் இருக்கும் பரமாத்மாவே சிவம் என்றும் பரமலிங்கம் என்றும் அறியத்தக்கது.

மந்திரதேஹரூபமே சிவலிங்கம்

சிவோ ஜீவ இதி ஞேய: தஸ்மாத் ஜீவ இதி ஸ்ம்ருதம் |
சிவாத் யவநி பர்யந்தம் தேஹத்வாத் தேஹீ சோச்யதே ||

(சைவாகமங்கள்)

தேஹம்=உடல், தேஹீ = உடலை உடையதான உயிர், லிங்கமே = சூக்ஷ்மதேஹம், இதன் சொரூபம் பிரணவவடிவமாகக் காணப்படும். அதாவது, அகாரமந்திரகலையே கண்டம், உகாரமந்திரகலையே கோமுகம், மகாரமந்திரகலையே தெரிகிற வட்டமான பூஜாம்சம் எனவும், இவற்றில் அகாரவாச்சியம் சிவம், உகாரவாச்சியம் சக்தி, மகாரவாச்சியம் மஹத் என்னும் பரசிவம் அதாவது பிரம்மம் எனவும், லிங்கம் அறியத்தக்கது. மேலும் அகாரம்–நாதம், உகாரம்–பிந்து, மகாரம்–கலை எனவும் இதன் உச்சி வட்டப்பகுதி ருத்திரபாகம், எனவும், நடுவேயுள்ள எட்டுமூலையுள்ள எட்டுப்பட்டைப்பகுதி விஷ்ணுபாகம், எனவும், கீழேயுள்ள நான்குமூலைப்பட்டைப்பகுதி பிரம்மபாகம் எனவும் இவ்வாறு சிவயோகபாவனையால் அறியத்தக்கது. ஆத்மாய நம:, ஆத்மலிங்காய நம:, என்று வேதம் கூறிப்போற்றுகிறது.

நாதபிந்து ரூபமே சிவலிங்கம்



சிவனது நாதவடிவமே லிங்கமாய் விளங்குகிறது. இது எப்பொழுதும் சக்தியுடனே கூடியதாக பிரியாதுஇருப்பதாக, சக்தியாலேயே ஜந்தொழிலாற்றுவதாகும். எனவே சிவலிங்கத்தில் சிவன் மட்டும் இல்லை, அதில் இல்லாதவை வெளியில் ஒன்றும் இல்லை என்றறியவேண்டும். சிவலிங்கம் எந்த வகையானாலும் அதனை இருபகுதிகளாகப் பகுத்து சிவம் மற்றும் சக்தி இரண்டின் சேர்க்கையின் உருவமாகவே கருதப்பட வேண்டும். ஸர்வசக்தியின் கலாமயமானதேஹமே சிவலிங்கம்.

சிவலிங்கத்தில் எப்பொழுதும் இரண்டுபாகங்கள் கட்டாயமாய் இருத்தல் வேண்டும். அவை மேலே உள்ள ஒன்று **லிங்கம்** (இது தூண்போன்றது) மற்றொன்று, அதைத்தழுவி அணைத்து, சுற்றியுள்ள **பீடம்**, இவை இரண்டும் முறையே லிங்கம் = நாதம், ஞான சக்திமயமான மந்திரமயமான ஒலிஉருவம் என்றும், பீடம் = கிரியாசக்திமயமான சுத்தமான உற்பத்தி ஸ்தானமான மஹாமாயா எனப்படுகின்ற **பிந்துசக்தி** என்றும் அறியத்தக்கதாகும். பிந்துவே சிவேச்சை யினால் அனைத்தையும் தோற்றுவிக்கும் ஸ்ருஷ்டிசக்தி என்கிற உபாதானசக்திரூபமாய் விளங்குவதாகும். காரணாகமத்தில்,

நாதம் லிங்க மிதி ஜ்ஞேயம் பிந்து: பீட முதாஹ்ருதம் |

என்று கூறுவதை பலஆகமங்கள் விளக்குகின்றன. நாதம் பிந்து இரண்டின் இணைந்த ஸங்கமரூபமே **"லிங்கம்"** எனப்படுவது முடிவுஆகும்.

நாத பிந்து யுதம் ரூபம் லிங்காகாரம் இதி ஸ்மிருதம் | (வாதுளாகமம்)

இந்த ஆகம வசனங்களின்படி நாதமானது, பிந்துவுடன் கூடியதாக, இது அருவமாயிருப்பினும், உருவமுடையதாக அதாவது லிங்கஉருவமாக ஆகிறது, ஆனாலும் பரமாத்மா ஒருபோதும் முற்றிலுமாக உருவமாக ஆவதில்லை. ஒரு இலக்கு உருவத்தினுள்ளே சிவம் என்பது எப்போதும் நமது உடலுக்குள்ளே உயிர் உள்ளதைப்போன்று மறைந்தும், நிறைந்தும் உள்ளது. ஒரு புற்றில் பாம்பு மறைந்து வசிப்பதுபோல், லிங்கத்தில் பரம்பொருள் உள்ளது. வீட்டினுள் உள்ள ஒருவனை பெயர்சொல்லி அழைத்தால் எவ்வாறு அவன் வெளியே வருபவனாக அல்லது தோன்றுபவனாக உள்ளானோ, அதுபோலவே உரிய மூலமந்திரத்தைக் கூறி அழைத்தஉடனே இறைவன் வெளிப்படுபவராகிறார். மந்திரஒலியும், கருத்து உருவஒளியும், இணைந்த பாவனாகாரமே சிவலிங்கம். ஒசையும் ஒளியுமாக, சிவனும் சக்தியுமாக, நாதம்பிந்துவுமாக, உள்ளதே சிவலிங்கம் என்று அறியப்படவேண்டியது.

நாதோ பிந்து ஸமாயுக்த: ஸகளஸ் ஸ து நிஷ்கள: |
ஸ நித்யப் பரமாத்மா ச ஸ சிவஸ் ஸ ச நிஷ்கள: ||
பிந்து நாத பரோ ஜீவ: பிந்து நாதபரோ ஜப: | (நிஸ்வாஸகாரிகா)

ஞானம் என்பது யாதெனில்? அறிவு மற்றும் செயல் இரண்டுமாய் விளங்குவதாகும். சித்ஸ்வரூபியான சிவமும், சைதன்யரூபமாய் ஞான க்ரியாரூபமான திருமேனியாக சிவலிங்கமும் விளங்குகிறது. சிவலிங்கமே ஞானமளிக்கும். ஐந்தொழிலாற்றுகிறதும் லிங்கமே ஆகும்.

சைதன்யம் த்ருக் கிரியா ரூபம் ததஸ்தி ஆத்மநி ஸர்வதா |

(மிருகேந்திரம் – சைவாகமங்கள்)

எனவே ஞானசக்திவடிவமே லிங்கம். கிரியாசக்திவடிவமே பீடம். இவை இரண்டின்சேர்க்கையே சிவனது பிரதிஷ்டையாகும். எனவே லிங்கபீட ப்ரகாரேண தேவேசம் பூஜயேத் ஸதா. என்ற ஆகமவசனப்படி,

ஞானசகத்யாத்மகே லிங்கே கிரியாசக்தேஸ் ஸமர்ப்பணம் |
பீடஸ்ய விதிநா யோக: பிரதிஷ்டா ஸா ச பஞ்சதா||(வாருணபத்ததி)

என்று வாருணபத்ததிநூலும், "ப்ரதி பிம்ப ஸ்திதம் மந்த்ரம் ப்ரதிஷ்டேதி ப்ரகீர்த்திதம்" என்று அஜிதாகமமும் கூறுவதால் நாம், இதனை நன்கு உணரலாம். லிங்கம் என்ற சொல்லில் உள்ள, போக்கை உணர்த்துகின்ற (கத்யர்தகமான– (ககாரம்) க என்ற எழுத்து ஞானார்த்தகமாகவும் இருந்து, ஞானத்தை உணர்த்துவதாக லிங்கம் என்றபெயரில் விளங்குகிறது எனவே சிவலிங்கம் ஞானமளிப்பதாகும்.

லிங்கத்தில் சிவசக்தி தியானமுறைகள்

சிவலிங்கத்திலிருந்து அனைத்தும் தோன்றி ஒடுங்குவதாக முன்னதாகக் கண்டோம் கூறினோம். இவ்விதம் யாவும் லிங்கத்தில் இருக்கும். ஞானசக்தி வடிவினளான மனொன்மனீ எனப்படும் தேவியிடமிருந்தே வெளிப்படுவதால், அனைத்து உலகத்திற்கும் மனோன்மனீ தேவியே தாய் ஆகிறாள், ஸதாசிவரே தந்தையும் குருவும் ஆகிறார். மனோன்மனீ சக்திவடிவினளும் சிவன் மங்களத்தை தந்திடவே ஆண்வடிவினருமாக, ஒருமலரில் மணம் இருப்பதைப்போவும், எள்ளில் எண்ணை இருப்பதைப்போலவும், லிங்கத்தில் சதாசிவர் விளங்குகிறார் என்கிறது சைவாகமம். அசையக்கூடியதான ஜங்கமலிங்கம் எனப்படுகிற சரலிங்கத்திலும். அசையாதிருக்கக்கூடிய ஸ்தாவர லிங்கமான துருவலிங்கம் அல்லது ஸ்திரலிங்கம், எனப்படுகிற மூலஸ்தானத்திலுள்ள மூலலிங்கத்திலும், அந்தலிங்கஸ்தாபனகாலத்தில் உலகத்தோற்றுவாயான சிவலிங்கத்தில் சதாசிவரையும், பராசக்தியான மனோன்மனியையும் இருப்பதாக் கருதவேண்டும் என்பதை சிவாகமங்கள் மிகத்தெளிவுறக் கூறியுள்ளன இதற்கான ஆகமசான்று இதுவே ஆகும்.

ப்ரதிஷ்டாதி க்ரியாணாம் து ஞானசக்திம் மனோன்மநீம் |
ப்ரம்மாதி ஸ்தம்ப பர்யந்தம் சக்திபிருந்தாத் விநிஷ்கிருதம் ||

சக்திர் மனோன்மநீ மாதா சிவ ஏவ பிதா குரு: |
மனோன்மநீ சக்திரூபா பும்ரூபஸ் ஸ்யாத் சிவார்த்தகம் ||

புஷ்பேஷு கந்தவத் ஞேயம் திலேஷு தைலவத் ததா |
ஸ்தாவரம் ஜங்கமம் சைவ ஜகத்யோனிம் சராசரம் ||

லிங்க ஸ்தாபன காலே து சிந்தயேத் து ஸதாசிவம்|(காமிகம்–காரணம்)

இதனால் முன்கூறிய லிங்கதத்துவார்த்தங்களை உறுதிசெய்து கொள்ளவும், சிவலிங்கம் ஒன்றே அனைத்துலக உயிர்களுக்கும் அருளக்கூடிய, உலகின்தோற்றுவாயாகிய சிருஷ்டிகிருத்யரூபமும் ஞானரூபமும்ஆன சிவசக்திவடிவமாகியலிங்கம் என்பதை ஐயமின்றி உணரமுடியும்.

லிங்கபீடபாவனா முறைகள்

ஆலயசிவலிங்கத்தின் முக்கிய இருபகுதிகளான லிங்கம் மற்றும் அதனுடை பிண்டிகை என்னும் ஆவுடையார் இவைகளை என்றுமே பிரியாதவாறு, அஷ்டபந்தனத்தால் (சுவர்ணபந்தனாதிகளால்) ஒன்றாக இணைத்துச் சேர்த்துவைத்தே வழிபடவேண்டும். கிரியாசக்தியின் வடிவமான, பரிக்ரஹசக்தியாக விளங்குகின்ற பிந்துவின் வடிவமாயுள்ள பீடத்தில், தேஜோமயமான, தூண்வடிவமாய், ஜ்யோதிஸ்தம்பமாய், நாதரூபமாய், நீண்டதண்டாகாரமாக, சிவமயமாக உள்ள லிங்கத்தைக் கருதும்முறையே மேன்மையான முதலாவதான, உத்தமமான, மனோபாவனாமுறை என்று அறிப்படவேண்டும்.

தயாரித்துள்ள சதுரபிண்டிகை பீடம்

ஹம்ஸபாவனா முறை

பிராணவாயுவின் போக்குவரத்து ரூபமான உச்வாஸம் நிச்வாசங்களின் ஸ்வரூபமான ஹம்ஸமந்திரரூபமாக, ஹம் என்பது சிவனையும் ஸ என்பது மனோன்மனீயையும், உணர்த்துவதாக, கிரியாசக்திரூபமான பீடத்தில், ஸதாசிவரை ஹம்ஸமந்த்ர ஸ்வரூபராய் பாவனைசெய்வது சிறந்த முறையாக அறியத்தக்கது.

ப்ராணினாம் தேஹமத்யே து ஸ்திதோ ஹம்ஸஸ் ஸதாசிவ: |
ஹம்ஸ ஹம்ஸேதி யோ ப்ரூயாத் ஹம்ஸோ தேவஸ் ஸதாசிவ: ||

(மகுடாகமம்)

ஹம்ஸ என்ற சொல்லில் உள்ள ஹம் என்ற பீஜமான வித்து எழுத்து உள்ளே ஜீவனை இழுத்து இருத்தும், கலை ஒடுக்கிக் காத்தலையும், சிவனையும், ஸ: என்ற பீஜஎழுத்து அமிருதமயமான தேவியையும், ஜீவனையும் வெளிப்படுத்திப் படைத்தலையும், உணர்த்துவதாக ஹம்ஸரூபமாய் பரமனைக் கருதுதல் சிவலிங்கத்தில் சிவசக்திகளை ஸார்த்ததிரிசதி என்னும் நூலின்படி அறிவும், ஆற்றலுமாக, ஞானமும் கிரியையுமாக உள்ள சைதன்யரூபமான சக்திவடிவில், சித்ஸ்வரூபமாக, கருதுதல், கிரியா சக்திவடிவமான பீடத்தில், ஞானசக்தி வடிவமாக லிங்கம் விளங்குவதாய் கருத்து. இவ்வாறு சிவலிங்க பாவனை முறைகள் மூன்று வகையாய் காணப்படுகின்றன. (உச்வாசம் – மூச்சை உள்ளே இழுத்தல் – நிச்வாசம் – மூச்சை வெளியே விடுதல்

சிவலிங்கத்தில் ரூபாரூபபாவனாமுறை
(லிங்கம் உருவஅருவம்)

சிவலிங்கத்தில் சிவம் என்பது, உருவம், உடல், இவை அற்றதாக அருவப் பரம்பொருளாகவே இருக்கும், அதில் பஞ்சபிரம்ம மந்திரங்களின் 38 கலாசக்திமயமான வித்யாதேஹத்தில், அதாவது மந்திரசரீரத்தில் தேஹியாக சதாசிவனும், அவருக்குள் உடலற்றவராக அருவமானதாக பரம்பொருளாக ஷாட்குண்ய பரமதர்மியாக, சிவனும், இருப்பார்கள். ஐந்துதொழிலதிபதிகளான பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், ஈச்வரன், சதாசிவன், ஆகிய ஐவரையும் கடந்து, அருவமாய் எப்போதும் சிவம் மேலானதாக இவ்விதம் மேலான பரம்பொருளாக இருக்கும் இதனை உணர்த்தும் ஆகமசான்றுகள்.

க்ஷித்யாதி குடிலாப்ராந்த மந்த்ர சிம்ஹாஸன ஸ்திதம் | என்றும்,

சாக்தேநாநேந ஸகளோ விக்ஞேயோ நிஷ்களச் சிவ: | என்றும்,

பஞ்சமந்த்ர தநுச்ரீமான் லிங்கமத்யே ஸதாசிவ: | என்றும்,

தேஹஸ்தஸ் ஸகளோ ஞேயோ நிஷ்களோ தேஹவர்ஜித: | என்றும்

காலோத்தராதி ஆகமவசனத்தாலும், சதாசிவருடைய தேஹகல்பன முறையை சைவாகமப்படியான தத்துவத்தை அறியலாம்.

அஷ்ட த்ரிம்சத் கலா யுக்தம் ஸகளம் சேதி வித்யதே.

அதே (ஈ)சானாதி ஸத்யாந்தம் கல்பயேத் து ஸதாசிவம். (மகுடாகமம்)

லிங்கத்தினுள் மந்திரஉருவத்தில் சதாசிவரையும், அவருக்குள் அதாவது அவரின் உடலுக்குள் உயிரைப்போல் அரூபமாக பரமாத்மாவையும் எண்ணி வழிபடவேண்டும். இதனால் லிங்கவழிபாடு அருவமும் உருவமும் கொண்டுள்ள அருவுருவவழிபாடாக ஆகிறது என்று அறியலாம்.

தொன்மைமிக்க 108 லிங்கஸ்தாபனம்

சிவலிங்கத்தில் சிருஷ்டிகிருத்யபாவனை (படைக்கும் செயல்வடிவம்)

உலகில் ஒரு குழந்தையை ஆணும் பெண்ணும் ஒன்றுகூடியே படைக்கின்றனர். அவ்வாறே அனைத்துலகிற்கும் அன்னையும் பிதாவுமான சிவசக்திகளாய், நித்யமான உயிர்களுக்குத் தேவையான உடல், பொருள் அகப்புறக் கருவிகளான தத்துவங்கள், புவனங்களைப் படைக்கும் பொருட்டு, முப்பாலாகவும் சிவலிங்கம் இருக்கிறது. சிவலிங்கத்தில் சிவசக்தி உருக்கொண்டு ஸங்கமித்தவாறு செயல்வடிவில்

இருந்து படைத்து அருள்கின்றனர் என்கிறது ஆகமம், உயிர்கள் இருபாலர்களாக வாழும்பொருட்டே சிவனும்சக்தியும் ஆண்பெண் வடிவங்களை ஏற்றனர். இதன்படி சிவலிங்கத்தில் ஐந்துவகையான ஸாதாக்யபாவனை முறைகளுக்குள் ஒன்றான கர்மஸாதக்யரூபமாக லிங்கத்துப் பீடத்தில், பேடித் தன்மை ஆதாரபீடத்திலும், மேல்பீடமான பிண்டிகையில் பெண்ணின் (உறுப்புகுறி) கருவாய் தன்மையையும், மானுஷலிங்கத்தில் சூத்ரவிதிப்படி ஆணுறுப்புக் கருவாய் தன்மையையும் மனதால் கருதியபடி, மூவுலகையும் (புவனம் பதினான்கையும், ஸஹஸ்ரஅண்டசராசரங்களையும், தோற்றுவிக்கும்) படைத்திடும் செயலை உணர்த்துகிற புணர்ச்சிக் கோலமாக ஒருவகையில் சிவலிங்கத்தைக் கருதுவது கர்மரூப பாவனையாகும். ஞானரூபமாக ஞானக்ரியா சக்திரூபமாய் கருதியதுபோலவே சிவலிங்கத்தில் ஆண், பெண் குறிகளின்சேர்க்கைவடிவில் இவ்வுலகில் உயிர்கள்பெருகி வாழ்ந்திடும் பொருட்டுக் கருதுவதாகும். இதில் மனோன்மனீதேவியை தாயாகவும், ஸதாசிவரை உலகத்தோரின் தந்தையாயும் கருதி, அவ்விருவரும் நம்மீது கருணை கொண்டு நம் உலகில் தொடர்ச்சியாக படைத்தலை செய்வதாயும் இவ்விதமாக, லிங்கம் அருள்வதாக பாவனைசெய்து உபசரித்து வழிபடத்தக்கது ஒருமுறை. இதில் சிவலிங்கம் சிருஷ்டிகிருத்யத்தை உணர்த்துவதாகும்.

பஞ்சஸாதாக்யபாவனைகள்

பஞ்சசாதாக்யங்களில் நான்குவகைகள் சிவனாகிய கர்த்தாவின் உருவங்களாய் கருதத்தக்கவை. இவைநான்கும் நாத ரூபபாவனைகளானவை. முன்கூறிய யோனிலிங்க உருவமுறையில் கருதுவது ஐந்தாவதான படைக்கும் கர்மரூபபாவனை என்பதாக, செயல்முறைஉருவமாய் கர்மஸாதகர்யம் என கர்மஸாதாக்யம் என எண்ணுவது ஒருமுறை ஆகும் இக்கருத்தைக் கூறும் ஆகம சான்று இதுவே..

சத்வாரி கர்த்ரு ரூபாணி கேவலம் நாத மீரிதம் |
லிங்கம் சிவஇதி ஞேயம் பீடம் சக்தி ருதாஹ்ருதா |
யோநி லிங்க ப்ரகாரேண ஜகத் ஸ்ருஷ்டியர்த்த காரணம் |
ததா ஸம்யோக பாவேந கர்மரூபம் உதாஹ்ருதம் || (முகுடாகமம்)

பஞ்சசாதாக்யபாவனைகள் என்பவை முறையே 1.சிவஸாதாக்கியம், 2.அமூர்த்தஸாதாக்யம், 3.மூர்த்திஸாதாக்யம், 4.கர்த்ருஸாதாக்யம், 5.கர்மஸாதகாக்யம் என்பனவாகும், இவைகளை சைவசித்தாந்தத்தின் ஞானபாதவிளக்கத்தால் விரிவாகப்பகுத்து அறியவேண்டும் இவற்றில்

முதலில்உள்ள நான்குவகையான பாவனைகள் கர்த்தாவைக் குறிப்பவை. அவை 1.பரம்பொருள்நிலை, 2.அருவநிலை 3.உருவநிலை, 4.அதிகாரி நிலை ஆகியவை என்றும் ஐந்தாவதானபாவனை ஸ்ருஷ்டிகர்மாவை அதாவது (படைப்புச்செயலைக் குறிப்பவை என்றும் பகுத்து அறியத்தக்கது.

நாத ஜ்யோதிரூபமே லிங்கம்

இந்த சிவலிங்க த்யானமானது சிவலிங்கப் பெருமைகளைக் கூறுகிறது.

நிராகார ஜ்யோதிர்மய மகல மத்யந்த மமலம் |
மஹாதீர்க்கம் ஸ்தூலம் நிரவயவ மத்யந்த ருசிரம் ||
மஹாநாதம் லிங்கம் சமதன முனி த்யேய மதுலம் |
மனோ மார்காதீதம் விதி ஹரி நுதம் நௌமி ஹ்ருதயே ||

(சைவாகமே)

இதன்பொருள் : உருவமற்றதும், ஜோதிவடிவானதும், அவயவமற்றதும், மிகவும் மாசற்றதும், மிகவும் நீண்டு உயர்ந்திருப்பதும், மிகப்பருமனாய் பெரியதானதும், உறுப்புகளற்றதும், மிகமிக அழகுடன் மனம் கவருவதும், பெரிய நீண்டபரநாதமாவதும், லிங்கவடிவாவதும், குறியாவதும், பொறுமை எனும் சாந்தமிக்க முனிவர்களால் எண்ணத் தக்க பரமசாந்தமானதும், ஒப்பற்றதும், மனம் மொழிவழிகளைக் கடந்துவிளங்குவதும், பிரம்மா விஷ்ணு இருவரால் தொழப்பட்டதுமான சிவலிங்கத்தை உள்ளத்திலே எண்ணி வணங்குகிறேன்.



ஓரிடத்தில் சதலிங்க அமைப்புமுறை

நாதம் என்பது ஸ்தூலம், சூக்ஷ்மம், அதிசூக்ஷ்மம் என்று உருவங்களில் மூன்றுவகைப்படும், பரநாதஇலக்கணத்தை நிச்வாஸாகமம் விளக்குவதாவது. நமது இருகாதுகளையும் கைப்பெருவிரலால் நன்கு மூடியபொழுதில், எந்த சத்தமானது உடலினுள்ளே கூர்மையான ஒளிச்சுடர்போல் அறியப்படுகிறதோ,

அதுவே கோஷம் = இறைச்சல் (இறையின் அம்சமாய் அசைந்து விளங்குவது) எனப்பொருள்படுவதாம். இதனைக் கேட்பதிலிருந்து உண்டாவதே நாதமாகும். இதுவே எனது சூக்ஷமசரீரம் நாதத்திலிருப்பது. இதுவே பசுக்களினுடைய பாசகூட்டங்களைப் போக்க, பரமுக்தியை ஞானத்தை வெளிப்படுத்துவதான (லிங்கமாகிய) உருவம் என்கிறது ஆகமம். இதனை "ஆபாதாள நப ஸ்தலாந்த புவன ப்ரம்மாண்ட மாவிஸ்புரத் ஜ்யோதி ஸ்பாடிக லிங்கம்" என்கிறது போதாயன சூத்திரம், வேதமானது ஜ்வலாயநம: + ஜ்வலலிங்காய நம: என்று கூறிப்போற்றுகிறது. ஒளிரும் பேரொளித்தூணே லிங்கம். அனைவரின் உடலுக்குள்ளே எழுந்த நாத ஓசையே சிவலிங்கம். இதனைத்தெரிவிக்கும் ஆகமசான்று,

ச்ரவணாங்குஷ்ட ஸம்யோகாத் யச் சப்தஸ் ஸம்ப்ரவர்த்ததே |
தீப்த வன்ஹி சிகா துல்யோ கோஷ இத் யபிதீயதே ||

அஸ்ய ஸம் ச்ரவணா தேவ நாதஸ் யாயத லோசநே |
பரம் ஏஷ்யதி நிர்வாணம் கிந்து பாச நிபந்தனம் ||

மமாத்மீய மிதம் சூக்ஷ்ம சரீரம் நாத ஸம்ஸ்திதம் |
பசோ: பாசாபநோதாய ப்ரகாசீ க்ருதம் அத்புதம் ||(நிச்வாஸாகமம்)

லிங்கரூபமான நாதம் என்பது பரநாதகலைகளாகும். இவை அதிசூக்ஷ்மநாதமாகும். ஸ்தூலநாதம் என்பது பஞ்சகலாத்மகமாய் பஞ்சதத்வாத்மகமாய் உள்ளது. இதனை விளக்கும் மகுடாகமச்சான்று இதுவே.

பிந்துமத்யகதோ நாதோ நாதமத்ய கதோ த்வநி: |
த்வனி மத்யகதச் சாத்மா சாந்த்யதீதம் பரம் ஸ்ம்ருதம் || (மகுடாகமம்)

இந்த மகுடாகமத்தின் வசனப்படி பீடமாகியுள்ள பிந்துவின்நடுவே லிங்கமாகிறநாதம். சாந்தியதீதகலையைக் கடந்துள்ளதான கடவுள் என்பதாகும். இதனையே அனைத்திற்கும் "காரணக் கலைஞானக் கடவுளே" என்று திருநள்ளாறு தேவாரத்தில் அப்பர் தெரிவிக்கிறார்.

வேள்வித்தூண் உருவமே சிவலிங்கம்

வேள்விகளில் பூசைசெய்யப்பெறும் அத்திமரம் முதலியவற்றால் அமையும் யூபம் என்னும் மரத்தூண் என்பது மூன்றுவகையான உருவங்களை உடையதாக கூறப்பட்டுள்ளது. அதாவது, வாஜபேயம் என்னும் வேள்வியில் நாட்டப்பெறுகிற மரத்தூண் சதுரவடிவமானது. இவ்வேள்விக்குத் தெய்வம் பிரஜாபதி. இது பிரம்மாவின் பெயர் ஆகும். சோமயாகம் முதலானவேள்விகளில் ஸ்தாபிக்கப்பெறும் யூபஸ்தம்பம்

எட்டுபட்டைவடிவமானது. இது விஷ்ணுவைத் தேவதையாக உடையது என்று வேதம் கூறுகிறது. சூலகவாயாகம் முதலான சிவபெருமானுக்குரிய யாகங்களில் அமைக்கப்பெறும் யூபம் செதுக்கப்பெறாத முழு மரத்தில் வட்டவடிவமாக அமைந்திருக்கும். இது சிவாம்சமாக விளங்குவது. இதனைத் தெரிவிக்கும் ஸ்மார்த்தவாக்கிய சான்று,



சதுர் ஹஸ்தோ பவேத் யூபோ
யக்ஞவ்ருக்ஷ ஸமுத்பவ: |
வர்த்துளஸ் சோபநஸ் ஸ்தூல:
கர்த்தவ்யோ வ்ருஷமௌளிக: ||

எனப்படுவதால் **சிவலிங்கவடிவமே யக்ஞங்களின் யூபஸ்தம்பம்.** இதனாலேயே காரணாகமம் சிவலிங்கபூஜை ஒன்றே அனைத்து யாகங்களின் பயனையும் பலமடங்காய் தரக்கூடியது என்று கூறுகிறது. அவ்வாறு தெரிவிக்கும் ஆகமச்சான்று,

ஸர்வ யக்ஞ தபோ தான தீர்த்த தேஷ்வே யத் பலம்.
தத் பலம் கோடிகுணிதம் சிவலிங்கா (அ)ர்ச்சனாத் பவேத்.

(காரணாகமம்–30–1)

இவ்வாறு சிவலிங்கப் பெருமைகளைக்கூறும், ஆகமசான்றுகள் பல காணக்கிடைக்கின்றன.

பாரதபூமிஅமைப்பே சிவலிங்கவடிவம்

இந்தியநாடே சிவஸ்வரூபமானது. சிவனார், உயர்ந்தஜடையை தரித்திருக்கிறார். இங்கு ஜடையின் ஸ்தானத்தில் உயர்ந்த இமயமலை உள்ளது. அவருடைய திருமுடியில் கங்கை உள்ளது. இமயத்திலிருந்து கங்கைநதீ பாய்கிறது. சிவனார் தக்ஷிணாமூர்த்தியாகவும், நடராஜராகவும் தென்முகமூர்த்தியாகவும், தென்திசைநோக்கி இருக்கிறார். இந்தியாவும் தெற்குநோக்கி நீண்டு உள்ளது. அவருடைய சிவலிங்கத் திருமேனி மூன்று பிரிவுகளை உடையது. இதேபோல் இந்தியா முழுமையும் லிங்கத்தின் மூன்றுவகை பகுதிகளையும் மூன்று வகையான விமானப்பிரிவுகளையும் தனக்குள் கொண்டு விளங்குகிறது. அதாவது, இமயம்முதல் விந்தியம்வரை (நாலுப்பட்டை) முழுவதும் சதுரவடிவமான நாகரவிமானம்,

விந்தியமலை முதல் கிருஷ்ணாநதிவரை முழுவதும் வட்டவடிவமான வேஸரவிமானம் கிருஷ்ணாநதிமுதல் கன்னியாகுமரிவரை முழுவதும் எட்டுபட்டைவடிவமான திராவிடவிமானம், இவ்வாறு இந்தியா எனும் பாரததேசம் முழுவதுமே சிவலிங்க வடிவத்துக்குள் அடங்கி யிருக்கிறது. இவ்விதம் இப்பாரதத்திருநாடே லிங்கஉருவமாகும். இதில் நடுவே வட்டப்பகுதி வருவது மத்தியப்பிரதேசத்தில் நர்மதைஆற்றில் பாணலிங்கங்கள் உண்டாகும் இடம் இருக்கிறது. அது பிரணவ ஸ்வரூபமான ஓங்காரேச்வரரின் இடமாகும். அதனால் அதன் இருபக்கங்களிலும் (திரிசூலத்தில் முத்தலையில் நடுவில் சிவன் உள்ளது போலவே) முறையே சூழ்ந்தவாறு இருபுறமும் பிரம்மபாகமும் விஷ்ணுபாகமும் இருக்க இவற்றின் நடுவில் சிவபாகம் அமைந்து உள்ளது. எனவே பாரததேசம் முழுவதும் பரமசிவ ஸ்வரூபம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வாறே காமிக ஆகமத்தில் இமயம் முதல் குமரிவரையிலான லிங்கஉருவம் கூறப்பட்டுள்ளது.

சிலைநடுவே சூலங்களில் லிங்கஉருவம்

தெய்வங்களுக்கான சுதைப்பிரதிமைகளை அமைப்பதற்காக, அதில் எலும்புகளாக உடல்நடுவே பொருத்தப்படுவதற்காக மரத்தினால் சூலஸ்தாபனம் செய்யப்படுவதில், சில்பரத்தினம் என்ற நூல், மற்றும் அம்சுமத்காச்யபஆகமம் இவைகள் நாபிவரையில் நாலுபட்டையான சூலமாகவும், ஹிக்காவரையில் எட்டுபட்டையான சூலமாகவும், அதற்குமேல் உச்சிவரையில் வட்டமான சூலமாகவும், மரத்தாலான

தேஹசூலங்களைக் கூறுவதால் இவைகளிலும் முப்பகுதியில் லிங்கரூபம் உள்ளது இங்கு உற்று நோக்கி அறியதக்கது. சுதா என்பது சுண்ணாம்பு அறைத்தகலவை ஆகும். சிமென்ட்கலவை போன்றது.

வஸ்துக்கருவின் யோகரூபமே சிவலிங்கம்

உலகில் பஞ்சபூதங்களில் தெரிவதாயும், தெரியாததாயும், ஒளியையும் ஒலியையும் தமக்கு பண்பாகவும் இலக்கணமாகவும், கொண்டுள்ளவையும், முக்கியவஸ்துவாக விளங்குபவையும் இரண்டு பொருள்கள். அவை உருவம் தரும் மூலவஸ்துவான மண்ணும், அனைத்திற்கும் தம்முள் இடமளித்து மேன்மையான சப்தகுணமுள்ளதான விண்கருவும் ஆகும். இவைகளே பீடமும் லிங்கமுமாக இணைந்து, சிவலிங்கவடிவமாகி, நமக்கு மண்சக்தியும் மின்னல்என்னும் விண்சக்தியும், இணைந்த மின்ஸாரத்தைப்போல் அருட்பயன்தருகிறது. இக்கருத்தை ரௌரவாகமவசனம் நமக்கு உறுதிபடத் தெரிவிக்கிறது. ஆகாயமே லிங்கம் பூமியே பீடம் என்பதனை வேதம் ஆகாசமய விக்ரஹம் என்றுகூறி இறைவனுக்கு ஆகாயமே உடல் என்கிறது. மேலும் இக்கருத்தையே யஜுர்வேதத்தின் தைத்ரீயோபநிஷத்தின் சிக்ஷாவல்லி கூற்றானது. ஆகாசசரீரம் ப்ரம்ம என்று உள்ளதாலும் ஆகமம் கூறும் ஆகாயமேலிங்கம் பிருதிவியேபீடம் என்பதை உணரலாம், வ்யோமவ்யாயினே வ்யோமரூபாய என்கிறது பதமந்திர ஆகமம். ஆகமச்சான்று இதுவே.

ஆகாசம் லிங்க மித் யாஹு: ப்ருதிவீ தஸ்ய பீடிகா |
ஸர்வ பூதாலயம் ப்ரோக்தம் லயநாத் லிங்க முச்யதே || (ரௌரவாகமம்)

இவ்வாறு ஸர்வ ப்ரபஞ்சரூபமாயுள்ள ஐம்பெரும் பூதங்களுக்கும், பஞ்சபூதங்களின் மூலகாரணங்களான பஞ்சகலைகளுக்கும், இருப்பிடமாகயாவும் ஒடுங்கியுள்ள இடமானதால் லிங்கம் என்பதாக ஆகமம் கூறுகிறது, ஐந்துகலைகளே ஐந்து பூதங்களாக அறியத்தக்கதாக காலோத்தராகமம் கூறுகிறது இதற்கான ஆகமசான்று. இதுவே.

நிவிருத்திப் பிருதிவீ ஞ்யோ ப்ரதிஷ்டா ஹி ஆப உச்யதே |
வித்யா தேஜோ விஜாநீயாத் வாயுஸ் சாந்திப் பிரகீர்த்திதா ||
சாந்த்யதீதா பவேத் வியோம பஞ்சபூதாக் கலாஸ் ஸ்மிருதா: |

(காலோத்தரம்)

ஐந்துவகையான அத்வாக்களையும் தனக்குள் அடக்கியுள்ளவையே, ஐந்துகலைகள். சிவலிங்கத்தில் வட்டமான பரமாகாசமண்டலத்து வடிவத்தில் உள்ள சிவாம்சத்துடன் கூடிய, பீடமாகியபிந்து மந்திர வடிவிலிருந்து வெளிப்பட்ட தெய்வங்களினுடைய படைத்தலைப்பற்றிய

சிவசிருஷ்டியை விளக்குகிறது மகுடாகமம் இதற்கான சான்று, இதுவே.

வ்ருத்தம் ஸதாசிவம் ரூபம் வ்யோமரூபம் பராத்பரம் |
பிந்து மந்த்ர ஸ்வரூபேண சிவஸ்ருஷ்டி க்ரமம் ச்ருணு || (மகுடாகமம்)

"வட்டனை மதிசூடியை வானவர்சிட்டனை" என்கிறார் அப்பர்சுவாமிகள் திருவண்ணாமலை தேவாரத்தில்.

சிவசக்திசங்கமரூபமே சிவலிங்கம்
(படைப்புக்குறிவடிவிலே பரமலிங்கம்)

சிவலிங்கத்திலுள்ள சதாசிவனார், லயம், போகம், அதிகாரம், என்கிற மூன்றுவகைச் செயல்நிலைகளாலும் காணப்படுதலாலும், இயல்பாகவே அழிவற்றவராய் நித்யராயும், சக்தியோடு கூடியவராயும் இருந்து ஐந்தொழிலாற்றுவதால் அவர் பதி என்று சிறப்புநிலையில் விளங்குகிறார். என்று ஸ்ரீமத் பௌஷ்கராகமம் பதியின் இலக்கணத்தைக் கூறுகிறது. தொழிலாற்றுவதற்கு வல்லமையாகவும், மூலகாரணமாகவும் விளங்குபவள் பராசக்தியே. அவளே சிவலிங்கத்தில் ஆவுடையாராக பிண்டிகை வடிவினளாக விளங்குகிறாள். ஆண்குறி வடிவில் சிவனும், பெண்குறி வடிவில் தேவியும், உலகப்படைப்பாற்றலை உணர்த்துபவர்களாய் லிங்கத்தில் விளங்குவார்கள் இது கர்மஸாதாக்ய பாவனைமுறையாம். இதனை விளக்கும் சிவாகமசான்றுகள் இவையே.

லய போகா திகாராத்ம வியாபார த்ரய லக்ஷித: |
ஸ்வபாவாத் அச்யுதச் சக்த: பதார்த்தப் பதி ஸம்ஞித:|| (பௌஷ்கராகமம்)

சிவனுக்குப் பிரியாதசக்தியாய், துணையாய் தாங்கி நிற்பவள், தாரிகா எனப்பெயர் பெற்றவள் பீடசக்தியே என்கிறது ஸ்ரீமத் காரணாகமம். இதற்கான ஆகமசான்று, இதுவே

நாதம் லிங்க மிதி ஞேயம் பீடம் பிந்து ரிதி ஸ்மிருதம் |
நாத பிந்து த்வயம் ஞேயம் சிவ சக்தி ஸ்வரூபகம் || (காரணாகமம்)

இச்சான்றுகளால் சிவலிங்கத்தில் சிருஷ்டிக்கும் மற்றும் லயம் என்னும் ஒடுக்கத்திற்கும், சிவனுக்கு விலகாதவாறு ஸமவேதசக்தியாக,

தீயில் சூடுபோல் இருப்பவள் பராசக்தியே, சைவசித்தாந்தத்தில் பராசக்திவிசிஷ்ட பரசிவமே பதிப் பொருளாம். எனவே சிவலிங்கத்தில் சிவனார் மட்டும் தனித்து இருப்பதில்லை சக்தியுடனேயே கூடி யிருக்கிறார் என்பதே அடிப்படையான லிங்கதத்வ பாவனையாகும். இவ்விருவருமே மூவுலகத்திற்கும் தெய்வங்கள் அனைத்திற்குமான தாய்தந்தையர்களும் நாயகிநாயகருமாவார்கள். எனவே சிவலிங்கத்தில் நாதரூபமான லிங்கம் சிவமாயும், பிந்துரூபமான பிண்டிகை (கோமுகை / பராசக்தி / சதாசிவகுடும்பிணி) ஆவுடையாள் மனோன்மனீதேவீ எனவும், எப்பொழுதும் தத்துவபாவனையால் உணரத்தக்கவர்கள்.

புல்லிங்கஸ் ஸர்வம் ஈசான: ஸ்த்ரீலிங்கம் பகவத் யுமா (உமா) |

என்ற சுருதியின்படி ஆண்பால் அடையாளங்கள் எல்லாம் ஈசானன் (தலைவனாகிய சிவனே) பெண்பால் அடையாளம் எல்லாம் பகவதியாகிய உமாதேவியே என்று யஜுர்வேதத்தின் ருத்ரஹ்ருதயோபநிஷதம் விளக்கிக்கூறியுள்ளது. சிவனும் சக்தியுமே இவ்வுலகில் யாவருமாய் விளங்குகின்றனர். சிவனும் சக்தியும் பிரியாதிருப்பதால் இவ்விருவரே இவ்வுலகம் என்கிறது சுப்ரபேதாகமம். இந்நூல் சிவனும் சக்தியும் நெருப்பில் சூடுபோல என்றும் பிரிக்கமுடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கிறது. அதனைக்கூறும் ஆகமசான்று இதுவேயாகும்.

வன்ஹே ருஷ்ணவத் சக்தி: அவிநாபாவநீ விபோ: |
சக்திஹீநச் சிவோ நாஸ்தி சிவஹீநா ந சக்திகா ||
தஸ்மாத் சிவமயம் ஏவம் ஜகதேதத் சராசரம் | (சுப்ரபேதாகமம்)

விச்வஸ்வரூபமே சிவலிங்கம்

(விச்வம் = உலகம். விச்வநாதன் = உலகநாயகன்சிவன்)

சிவமயமானதாகவே இந்த (சராசரமான) அசையும் பொருள், மற்றும் அசையாப்பொருள் நிறைந்ததாகவே உலகம் உள்ளது என்கிறபடியால், லிங்கபூசைக்கு நிகரானது மூவுலகிலும் வேறு இல்லை என்றும், லிங்கத்தைபூசிப்பதாலேயே ஸகலதேவதைகளும்பூசிக்கப்பட்டவர்களாக ஆகிறார்கள் என்றும் கூறுகின்றன. பேரொளியான விஸ்வரூபம்தான் லிங்கம். அதன் ஒளிதான் சக்தி. லிங்கத்தின் பீடமும் அவள்தான். லிங்கத்தில் ஸமவேதையாக பிரியாதவளாக ஞானசக்தியாக இருப்பவள் மனோன்மனீ ஆவாள். பிண்டிகையில் பரிக்ரஹரூபையாக பிந்துவடிவினாளாக இருப்பவள் கிரியாசக்தி. அனைத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் மூலமானகாரணமாக இருப்பதால் லிங்கம் என்று பெயர். இவ்வுலகமெல்லாம் சிவசக்திசொரூபமானவை.

மரத்தினுடைய வேரில் தண்ணீரை ஊற்றினால் அது மரம்முழுவதும் சென்று, செழிப்படையச் செய்வதைப் போல, சிவனுடைய சிவலிங்கபூஜை ஒன்றினாலேயே வானவர்கள் (தேவர்கள்) அனைவரும், மற்றும் உலகில் உடலைஉடையவர்கள் அனைவருமே திருப்தியை அடைவார்கள் என்பதே சிவாகமங்களின் முடிந்தமுடிவு ஆகும். **ஸர்வம் லிங்கமயம் லோகம் ஸர்வே லிங்கே ப்ரிதிஷ்டிதம்** (லிங்கபுராணம் 2-46-130) எனவே அண்டசராசரங்கள் எல்லாவற்றின் சொரூபம்தான் லிங்கம் என்றாகிறது. பவம் என்ற சொல்லுக்கு உலகம் என்பது பொருள். சிவனே உலகமாய் இருப்பதால் பவன் எனப்படுகின்றான். இதன் ரூபமே லிங்கம் வேதமானது. பவாய நம: என்றும், பவலிங்காய நம: என்றும், ஸர்வாய நம: என்றும் ஸர்வலிங்காய நம: என்றும் கூறிப்போற்றுகிறது. உலகுஆனாய், என்றும் அண்டர்நாயகன் என்றும் தமிழ்திருமுறைகள் சிவனைத்துதி செய்கின்றன.

ஷட்த்வ ஸாதாக்யரூபமே லிங்கம்

லிங்கமும் பீடமும் இணைந்துள்ள சிவலிங்கத்தில் ஆறுவிதமான அத்வாக்களே ஸதாசிவருக்குத் திருமேனியாகின்றன. அத்வா என்ற சொல்லுக்கு இறைசக்தியானது பரவியிருக்கும் வழிகள் என்பது பொருள். அவை முறையே. 1. வர்ணம் = 51எழுத்துக்கள். 2. பதம் = 81சொற்கள், 3. மந்திரம் = 11சம்ஹிதாமந்திரங்கள், ஆகிய இவை மூன்றுஅத்வாக்களும் சப்தப்ரபஞ்சரூபமாகும். 4. தத்துவம் = 36தத்துவங்களான அகக்கருவிகள், 5. புவனம் = 224புவனங்கள் (பலவாயுள்ள அண்டங்கள்), 6. கலைகள் = 5 வகையில் பிந்துவின் காரியமான 1). சாந்தியதீதா, 2). சாந்தி, 3). வித்யா, 4). பிரதிஷ்டா, 5). நிவிருத்தி என்கிற ஐந்துகலைகள், ஆகிய இவைகள், மூன்றுஅத்வாக்களும் அர்த்தப்பிரபஞ்சமாகும். இந்த சொல்லும் பொருளுமான ஆறுஅத்வாக்களுமே லிங்கமாக விளங்குவதால், அதனுள் அனைத்து உலகங்களும், அதனுள்வாழும் அனைத்து உயிர்களும், தேவர்களும் அடங்குவார்கள் என்றுஅறிக. இந்த ஆறுவிதமான அத்வாக்களுமே ஒருஉடலில் முக்கியமான எலும்பு முதலான தாதுக்களாகவும் விளங்குவனவாகும். இதற்கான

ஆகமச்சான்று இதுவேயாகும்

லிங்க பீடப் பிரகாரேண தேவேசம் பூஜயேத் ஸதா |
வர்ணாத்வா ச பதாத்வா ச தத்வாத்வா புவனாத்வக: ||
மந்த்ராத்வா ச கலாத்வா ச ஸாதாக்யஸ்ய ஸ்வரூபகம் |

(சைவாகமங்கள்)

ஆறு அத்வாக்களுக்குள் 1.எழுத்துக்களான வர்ணர்வா என்பது தோலாகவும், 2.பதாத்வா என்பது நரம்பாகவும், 3.தத்வாத்வா என்பது இதயமாகவும், 4.புவனாத்வா என்பது ரோமங்களாவும், 5.மந்த்ராத்வா என்பது ரூருதி, சுக்லம், மஜ்ஜை, எலும்பு இவைகளாகவும், 6.கலாத்வா என்பது ஷட்த்துவதேஹமான அனைத்து உறுப்புகளாகவும், அமைந்திட்ட சிவலிங்கத்தில், ஐந்துதலைகளும், பத்துகைகளும் கொண்டுள்ளதாக சதாசிவஸ்வரூபம் கருதப்படவேண்டும். இந்த மந்திரமயமான வித்யாதேஹத்தில் 1. சாந்தியதீதகலை என்பது தலையாகவும், 2.சாந்திகலை என்பது முகமாகவும், 3.வித்யாகலை என்பது மார்பாகவும், 4.பிரதிஷ்டாகலை என்பது மர்மஸ்தானமான குய்யப் பகுதிகளாயும் 5. ,நிவிருத்திகலை என்பது பாதம், கால், முட்டி, கை, கால்களாகவும் விளங்கியவாறு கலைகள் ஐந்தும் திவ்யதேஹமாகின்றன என்று சிவாகமங்கள் கூறுகின்றன. இதற்கான சான்று,

வர்ணாத்வா து த்வகாதார: பதாத்வா ச ஸிராஸ் ததா |
தத்வாத்வா ஹ்ருதயம் சைவ புவனாத்வா து ரோமகம் ||

மந்த்ராத்வா ருதிராதார: சுக்ல மஜ்ஜா(அ)ஸ்தி ரூபகம் |
கலாத்வா சைவ ஸர்வாங்கம் இத்தம் ஸாதாக்ய ரூபகம் ||

(மகுடாகமம்)

இவ்விதம் ஷடத்வரூபமாகவும் பஞ்சகலாசக்திகளின் வடிவமாகவும் உள்ள சிவனது வித்யாதேஹத்தை சிவலிங்கத்தில் எப்பொழுதும் எண்ணி பாவனை செய்வதால் நமக்கு இம்மைக்கும் மறுமைக்குமாக போகம், மோக்ஷம், என்னும் இருவகையான பயனையும் சிவலிங்கம் அளிக்கும் என்கிறது சிவாகமநூல். இதனை உறுதிபடத்தெரிவிக்கும் ஆகமசான்று இதுவே.

சாந்தியதீத கலா சீர்ஷம் சாந்தி வக்த்ர ஸரோருஹம் |
வித்யா விதத வக்ஷோஜம் பிரதிஷ்டா குஹ்ய மண்டலம் ||

நிவிருத்திர் ஜானு ஜங்காங்கிரிர் புவனாத்வா தநூருஹம் |
வர்ண த்வக் மந்த்ர ருதிரம் பத மாம்ஸ விராஜிதம் ||

தத்வாஸ்தி மஜ்ஜா சுக்லாதி தியானம் ஸத் போக மோக்ஷதம் |
சிவாந்த தத்வ கர்பாத்வா வ்யாபிநம் ஸர்வதா சிவம் ||

(சைவாகமங்கள்)

இதனால் சிவலிங்கத்திலுள்ள வித்யாதேஹம் என்பது, ஸமஸ்தப் பிரபஞ்சரூபமாகி படைப்புத்தொழிலையும், லயத்தையும் அதில் யாவும் ஒடுங்கிஇருத்தலையும் உணர்த்துகிறது.

சப்தபிரம்மரூபமே சிவலிங்கம்
(மாத்ருகாரூபம் மாகேச லிங்கம்)

நாதமே, ஒலிவடிவமே லிங்கம். பிந்துவே, ஒளிவடிவமே பீடம், வாக்கு, கிர:, சப்தம், எனப்படுகிறதான நாதமானது, நான்குநிலைகளில் விளங்கிடும். இவற்றில் முதல் மூன்று வகையான 1. பரா அல்லது சூக்ஷ்மா, 2. பச்யந்தீ, 3. மத்யமா ஆகியவை 3ம் சிவதேஹமாக விளங்கும். இவை சிவலிங்கத்தின் உள்ளே இருப்பவை, 4வது மற்றதான வைகரீ என்னும் சப்தவிருத்தி ஒன்றுமட்டுமே தேஹமான லிங்கத் திற்கு வெளியே இருப்பது. ஆகும். இதனையே அந்தர்மாத்ருகா நியாஸம், பஹிர்மாத்ருகா நியாஸம் என்பதனால் ஆகமம் விளக்கும். இவ்விதம் 50 எழுத்தொலிகளின் கூட்டுவடிவிலும் லிங்கம் கருதப்படும். அந்தரேவ ஸ்திதா திஸ்ரோ பஹி ரன்யா வ்யவஸ்திதா, என்கிறது. வேதமும் ஆகமமும். மாத்ருகாவர்ணங்களின் உபாதானமான லிங்கபீடமாகிய பிந்துவில், அதன் காரியங்களான கலாத்வா முதலானவையும் அடங்கி விளங்குவன ஆகும்.. இவ்விதம் ஷடத்வரூபமானலிங்கம், என்றுமே எழுத்துக்களின் மாத்ருகாவடிவம். ஆகும். நால்வகையான வாக்குகள் 1. சுத்தம், 2. அசுத்தம், 3. சுத்தாசுத்தம் என்கிற மூன்றுவகையான அத்வாக்களிலும் முறையே சூக்ஷ்மம், ஸ்தூலம், ஸ்தூலதரம், என்கிற நிலைகளில் விளங்குவன ஆகும். இதனைத் தெரிவிக்கும் ஆகமசான்று இதுவே.

சூக்ஷ்மா: சுத்தாத்வநி சிர: ஸ்தூலா மிச்ராத்வநி ஸ்திதா: |
அசுத்தாத்வநி தா வாச: ஸ்திதா: ஸ்தூலதராஸ் ஸதா || (சைவாகமங்கள்)

நிவிருத்தி முதலானகலைகள் ஐந்தும், எல்லாவற்றிலும் பரவி இருப்பவையாதலால், சிவலிங்கத்தின் வாயிலாக அனைத்துயிர்களுக்கும் போகமோக்ஷப் பயனளிப்பதாகின்றன என்கிறது சைவாகமம்.

நிவிருத்திச் ச பிரதிஷ்டா ச வித்யா சாந்திஸ் ததைவ ச |
சாந்தியதீதா ச பஞ்சை தா: சுத்தமார்கே புராத்மிகா: || (மிருகேந்த்ராகமம்)

பீடமாகவுள்ள பிந்துவில் ஸர்வதத்துவரூபமாக விளங்குவதே சிவலிங்கமாம். "சுத்தமே சிவம்" என்பதை பல ஆகமங்கள் விளக்கி "சுத்தத்வாத் சிவ மித்யுக்தம்" என்று கூறுவதால், அசுத்த தத்துவங்களான 31 தத்துவங்களும் லிங்கத்தில் பிரம்மபாகவிஷ்ணுபாகங்களில் உள்ளடங்கி மறைந்திருக்க, அதிலே சுத்ததத்துவமான ஐந்துதத்துவங்கள்மட்டுமே மேலே ருத்ரபாகத்தில், தெரிகின்றதான முகமெனும் வட்டப்பகுதியில் இடம்பெற்று, அதுமட்டுமே திருச்யபாகம் என்பதாகக் கூறப்பட்டு விளங்குவதால், என்றும் இப்பகுதி போற்றப்பட்டு பூஜாம்சம் என்பதாக திகழ்கிறது, என்று அறியத்தக்கது.

சிவலிங்கத்தில் ஸகளஸ்வரூபம்

சிவமானது நிஷ்களம், ஸகளம், ஸகளநிஷ்களம் என மூன்று நிலைகளில் அருளும். இவற்றில் களம் என்றால் அவயவம் உடல் உறுப்பு என்று பொருள். எனவே உருவம் உறுப்புகள் சுட்டிக்காட்டுமாறு உள்ள நிலை "ஸகளநிலை". இதுவே ரூபம், மூர்த்தம், ஸகுணம் எனவும் பெயர்பெறும். உருவம், உறுப்புஇல்லாதது, "நிஷ்களநிலை". இதுவே அரூபம், அமூர்த்தம், நிர்குணம் எனப் பெயர்பெறும். நம் கண்ணுக்குத் தெரிகிற ஒரு உருவத்துள், வேறுஉருவில் எண்ணி வழிபடும் வகையில் தெரிவதும், தெரியாததுமாக, உருவமும், அருவமும் கலந்துள்ளதாக, இருத்தலால், சிவலிங்கம், கும்பம் சூலம் முதலானவை "ஸகளநிஷ்களம்" எனும் நிலையாம். இதுவே ரூபாரூபம், மூர்த்தாமூர்த்தம், குணாகுணம், குணாகுணஸ்வரூபஸ்தம் எனக் குறிப்பிடப்படும். இவ்வகையாக சிவலிங்கம் மூவகையாகவும், உரியமுறையில் பாவனைசெய்து பூசிக்கத்தக்கது. எனவே சிவலிங்கத்திருமேனிக்கு "பாவாகாரம்" என்ற சிறப்புப்பெயரும் உண்டு. இச்சிவலிங்கம் ஸகளநிஷ்களமாய் உள்ளபொழுதில் இதில் ஸகளம் என்பது எவ்வகையில் கருதத்தக்கது? எனில், லிங்கமானது சிவனாக ஆண்வடிவமாகவும், லிங்கபீடமானது சக்தியாக பெண்வடிவமாகவும் கருதி பூசிக்கத்தக்கது. இவற்றுள் லிங்கமும், பீடமும் நிஷ்களமாகவும், சக்தியும், சிவனும் ஸகளமாயும் தியானிக்கப்படவேண்டும். லிங்கத்

திலிருந்தும், பீடத்திலிருந்தும், சிவனும் சக்தியும் வெளிப்பட்டுத் தோன்றுவர். கலைகள் அற்றது நிஷ்கள வடிவம். கலைகளுடன் கூடியது ஸகளவடிவம், சன்யாசிகள் பிரம்மஞானியர், மந்த்ரிகள், ஞானியர், யோகிகள் இவர்களின் தியானத்திற்காகவும், பூஜையை ஏற்பதன் காரணமாகவும், சிவலிங்கமாகிற, ஸகளநிஷ்களமாகிய சிவலிங்கம் பாவாகாரமாக அறியத்தக்கது. இறைவனை சிவலிங்க வடிவில் மட்டுமே வழிபட வேண்டும். இதனை பூஜ்யஸ்சிவலிங்கமத்யே என்கிறது ஆகமம்.தெள்ளந்தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம் என்பார் திருமூலர். யோகியரானாலும், ஞானியரானாலும் அவரவர்களின் முறையில் அகப்பூசையில் சிவலிங்கத்து வடிவபாவனையை தமது இலக்காக்கி வழிபடுவதே ஆகமவிதிமுறையாகும். இதனை மகுடாகம வசனத்தால் நன்கு உணரலாம்.

லிங்கம் து பும்ஸ்துவ மேவம் ஸ்யாத் பீடம் ஸ்திரீதத்வ மேவ ச |
நிஷ்களெள லிங்க பீடெள ச ஸகளெள சக்தி சாம்பவெள ||
நிஷ்களா து கலாஹீநா ஸகளா து கலான்விதா |
யதீநாம் மந்த்ரிணாம் சைவ ஞானிநாம் சைவ யோகிநாம் |
தியான பூஜா நிமித்தார்த்தம் ஸ்மிருதம் ஸகலநிஷ்களம் |
லிங்கபீட ப்ரகாரேண தேவேசம் பூஜயேத் ஸதா |
ஏவம் சாக்தம் வபுக் கல்ப்ய தஸ்மின் பரமகாரணம் || (மகுடாகமம்)

மூலலிங்கமும் முப்பால்வடிவமும்

சிவலிங்கத்தில் பூஜாம்சம் எனப்படுகிற தெரிகிற பாணமாகிற **லிங்கப்பகுதியானது** ஆணாகவும், ஜலம்விழும் பகுதியான ஆவுடையார் எனப்படுவது (பிண்டிகை) பெண்ணாகவும், ஆதாரபீடம் அலியெனும் ஒன்றன்பாலாகவும், ஸ்திரீ, பும், நபும்ஸகம் என்னும் முப்பாலும் கொண்டுள்ள முப்பகுதியை உடையது சிவலிங்கவடிவம் ஆகும். மேலும் சதுரவடிவ பீடமுள்ளது, நின்றது. என்றும் வட்டவடிவ பீடமுள்ளது அமர்ந்தது, என்றும் எட்டுபட்டைகள் உடையது படுத்தது சயனித்தது என்றும், உடல்களின் நிலைகளும் கூறப்படுகின்றன. மானுடஉடலின் உறுப்புப்பகுதிகளாக லிங்கத்தின் பீட வடிவப்பகுதிகள் லிங்கபீடவர்கத்தில் முறையே கூறப்படுகின்றன. அவை உபானம் பாதுகையாகவும், ஜகதீ முழங்காலாகவும், குமுதவர்கம் வயிராகவும், கம்பவர்கம் கைகளாகவும், கண்டவர்கம் கழுத்தாகவும், அதரபட்டிவர்க்கம் அதரமாகிய கீழ்உதடாகவும், மஹா–பட்டிவர்க்கம் நெற்றியாகவும், நெய்நீர் முதலியன வழிந்தோடும் பிண்டிகைவரை கேசாந்தபகுதியும்,லிங்கத்தில் மனதால் பாவிக்கத்தக்கது. அமர்ந்ததாயும், நாட்டியமாடுவதாயும், நிற்பதாயும், தூங்குவதாயும், இவ்விதமாக பலநிலைகளில் அவ்வப்பொழுது லிங்கத்துள் சிவனது



சிவலிங்கபாண
தயாரிப்புமுறை

திருமேனி விளங்கும். ஆயினும் பூஜை செய்திடும் பொழுது மட்டும் சுகாஸனத்தில் அமர்ந்திருப்பவராயும், மற்றய காலங்களில் முன்கூறியவற்றில் ஒரு நிலையில் அவரது விருப்பப்படியும் சிவஸ்வரூபம் இடம்பெற்று இருப்பதாக சிவலிங்கத்தில் சிவஸ்வரூபம் பாவனைசெய்யத்தக்கதாக சிவாகமம் கூறுகிறது. மேலும் விமானம் ஸ்தூலலிங்கத் திருமேனியாயும், மூலாலயத்து சிவலிங்கம் சூட்சுமலிங்கத் திருமேனியாயும், அதனுள்ளே கற்பிக்கப்படும் பஞ்சமந்திரமயமேனியானது காரணதேஹமாயும், சதாசிவரூம் வித்யாதேஹமாயும், நால்வகைசரீரங்கள், ஸ்தூல, சூட்சும, காரண, பர சரீரங்களாக பாவித்து, பகுத்து உணரத்தக்கவை. இவ்விதம் லிங்கம், பீடம் எனும் ஸகளநிஷ்களத்தினுள் சிவனையும், சக்தியையும், ஸகளநிலையில் மனதால் கருதி வழிபடுவது முறை.

லிங்க ஸகளத்தில் நிஷ்கள சிவம்

ஸகலவிதமான மனோதத்துவ பாவனைகளுக்கும் ஒரே உறைவிடமாகத் திகழும் தனிப்பெறும் சிறப்பு பெற்றது பாவனாகிருதியான சிவலிங்கம்ஆகும். இது ஸகள நிஷ்கள வடிவாய் இருப்பினும், அதனுள் இறைவன் பஞ்சசாதாக்ய ஸ்வரூபங்களில், ஸதாசிவராகவும், மஹா ஸதாசிவராகவும், மேலும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரர், ஈச்வரர், சதாசிவர் ஆகிய ஐந்து தொழிலதிபர்களாக ஐவரும், ஐந்துஅம்சங்களிலும் அதனுள் உருவமாக ஸகள வடிவாய் தியானித்து, பூசிக்கத்தக்கவர்கள். இவர்களில் சதாசிவரின் ஐந்துதலை மற்றும் பத்துகரங்களுடன் கூடிய சகளத்திருமேனியின் உள்ளே "சிவம்" எனப்படுவது நாதரூபமாய், ஜீவரூபமாய், நிஷ்களமாயும், அச்சிவத்துள்ளேயும் ஆனந்தமயமாய் பரம்ஜோதியாய், சித்ஸபேசர் நிஷ்களத்துள்ளும் அதிசூட்சுமநிஷ்களமாயும், பராபரமாய் நிற்பதாய் சிவயோகபாவனா முறையில் தியானித்து, பூசித்தல்முறை.

ஞானஜேய பாவநா விதி

தேவர்கள் எப்பொழுதும் ஊனக்கண்ணிற்குப் பிரத்யக்ஷ நிலையில் புலப்படாதவாறு எப்பொழுதும் கண்களுக்கு அப்பாற்பட்டு பரோக்ஷமாக மறைந்திருப்பதையே விரும்புபவர்கள் என்பதனை "பரோக்ஷப் பிரியாஹி வஹ்நி தேவா:'' எனவேதம் கூறியுள்ளது. எனவே சிவாகமங்கள், ஊனக்கண்ணிற்குப் புலப்படாத பரம்பொருளை, ஞானக்கண் கொண்டே காணமுடியும். சிவஞானமே ஞானமாகும், மற்றவை பசுஞானமாகிற சாதாரண அறிவாகும். பதியை அறிவிப்பதே ஞானம், ஞானத்தால் அறியப்படுதலால் அப்பரம்பொருளே ஜ்ஞேயம் எனப்படுகிறது. ஊனக்கண்ணால் அதாவது பசுவாக, பாசஸமூகத்தோடு உள்ள உயிரினங்களில் உடலிந்திரியமாகிற மாசு உடையோரின் கண்ணுக்கு மாசுஇல்லாத பரசிவஸ்வரூபம் தெரியாது. அவ்வாறு மாசுடைய சாதாரண மனிதர் முதலான உயிரினங்களுக்குத் தெரியுமேயானால், அவ்வருவம் உயிரற்றதும் அழியக்கூடியதும் நிலையற்றதும் பரிமாண மாற்றம்பெறக்கூடியதாகவே இருக்கும் என்கிறது நம் கண்போன்று இறைவனுடைய திருவுருவத்திற்கு ஜடத்தன்மை இல்லாததால் அது ஜடத்திற்குப் புலப்படுவதில்லை. இறைவடிவம் சித்தானபடியால் ஞானத்தினால், அனுபவத்தினால் அறியத்தக்காக உள்ளது. உலகில் காணப்படாதவற்றை இல்லை என்றும், அது இல்லாததே என்றும் அறிவற்றோர் கூறுவர். அவர்களும் கூட தமது உடலுள் உறைந்து வேறாய் உள்ள உயிரை ஏற்றே ஆக வேண்டும். இதனை சிவஞான போதம் என்ற நூல் நன்கு தெளிவுபடுத்தியுள்ளது ஒருசூத்திரத்தில். அதாவது,

அதிருச்யம் சேத் அஸத்பாவ: திருச்யம்சேத் ஜடிமா பவேத் |
சம்போஸ் தத் வியதிரேகேண ஜ்ஞேயம் ரூபம் விதுர் புதா: ||

(ரௌரவாகமசூத்ரம்)

எனவே, கடவுளின் இல்லாமை யைப் போக்கிடவும், இருப்பதனைக் கண்டு பூசித்திடவும், சிவயோக நெறியில் மானுடப்பிறவியின் மனோபாவனையை சிவாகமங்கள் தெளிவுபடுத்தி விளக்குகின்றன. அதாவது ஒரு கல்லாலான லிங்கத்தில் அல்லது சிலையில் பூசையை செய்திடும் தருணத்தில் அந்தலிங்காதிவடிவத்தை

நான்கு முகமுள்ள சதுர்முகலிங்கம்

ஜடத்தன்மையற்றதாக எப்படி பாவிப்பது? அவ்வடிவத்துள் சிவத்தை அதாவது ஞேயமாகிய சச்சிதானந்த பரபிரம்மத்தை நாம் எப்படிக் காண்பது? என்பது இங்கு மிகப்பெரிய தேவையான வியக்கத்தக்க வினாவாக யாவருக்கும் எழுவது இயற்கையே. கண்ணில் தெரிகிற ஒரு பொருளாலான ஒரு உருவமாகிற லிங்கம், பிம்பம் முதலானவற்றில் அதனை அப்பொருளின் தன்மை மற்றும் இயல்புக்கு மாறாக கண்ணுக்குத் தெரியாத ஞானமயபரப்பிரம்மமாக அதனை மனதால் கருதி பாவித்திடவேண்டும் என்பது சிந்தித்துப்பார்த்தால் யாவருக்கும் எளிதானது அல்ல என்பது விளங்கும். எனவே இத்தகைய மனோபாவனையை நாம் பெறுவதற்கு ஒரு வழிமுறையும் குருமுகப்பயிற்சியும் இன்றியமையாததாகிறது. உரிய வழிமுறையில், உரியவகையில், உள்ளத்தில் பாவனைசெய்து, பலமுறை வெகுகாலமாக பயிற்சி செய்து, பக்திரஸத்தில் லயித்தால் மட்டுமே, இது ஸாத்யமாக கைக்கூடும் என்பது உறுதி. பலரின் முன்பாகவும் பலவகை சூழ்நிலையிலும், ஆடும் பரதநாட்டியக் கலைஞருக்கு மட்டில் அவரதுமனோபாவமும், அங்க அபிநயமும், எவ்வாறு ஸாத்யமாகிறதோ, அவ்வாறே பூஜையின்பொழுது, பயிற்சிபெற்ற அர்ச்சகருக்கு மட்டுமே இது ஸாத்யமாகும். இல்லையேல் வீணாண காட்சியே ஆகும் என்கிறது ஆகமம்.

இத்தகைய மனோபாவனையைப் பெற்றிடும் வழிமுறை பற்றி, சிலஎடுத்துக்காட்டுகளால் அறியமுயல்வோம். அதாவது காரியம் எனப்படுகிற மண்குடம், அல்லது கைத்தறித் துணி, அல்லது கைவேலைச் சிற்பம் முதலிய ஏதெனும் ஒரு செய்யப்பட்டபொருளில், காரணம் எனப்படுகிற, அக்காரியத்திற்கு மூலப்பொருளாக இருந்த, முறையே மண், பருத்திநூல், கல் முதலானற்றின் தன்மையான மண்ணின் தன்மை குடத்திற்கும், வெண்மை மற்றும் மென்மை முதலான நூலின் தன்மை கைத்தறித் துணிக்கும், கடினம் முதலிய கல்லின் தன்மை கற்சிலைக்கும் முறையே காரணத்தன்மையாக வருகின்றது. இது யாவருக்கும் கண்கூடானது. அவ்வாறு காரணத்தில் காரியத்தன்மை வருவதில்லை.ஆதலால் இந்த எடுத்துக் காட்டினைப்போலவே இங்கு தார்ஷ்டாந்தத்திலும், சத்தியஞானாதிவடிவப் பிரமத்திற்கும், காரணத்தன்மை வருகின்றது. பிரம்மத்தில் ஆகாசாதி காரியத்தன்மை யில்லை. ஆதலால் பரமார்த்தமாக ஆகாசாதிகள் (பஞ்சபூதங்கள்) இல்லாததாகவே பிரம்மத்திற்குக் காரணத்தன்மையுமில்லை என்பது பொருளாகும். ஆதலால் இவ்விசாரத்தினால் காரியத்தன்மை இல்லாததாக ஆவதால் காரணத்தன்மை பொய்யாகின்றது. இதனைச் சிவாகமம் உத்ஸ்ருஜ்ய ப்ராகிருதம் பாவம் சிவோஹ மிதி பாவயேத்|

என்றுகூறி பூஜகனுக்கு ஆத்மபாவனையில் கூறுவது போன்றே. பூசை எனும் செயலிலும் லிங்காகாரோ பமர்தேந பாவநே லிங்கதாம் த்யஜேத் என்கிறது. மேலும் ஞானேன ஜ்ஞேய மாலோக்ய ஞானம் தத் பரிவர்ஜயேத் என்று பாவிக்கும் முறையைக் கூறுகிறது. அவ்வாறே இறைவனை ஆவாஹனம் செய்யும்தருணத்தில், ஆகமநெறியில் ஆவாஹன விதிமுறையான ஜீவநியாஸ விதிமுறையில் கூறப்படுவதாலும் நன்கு அறியலாம். அதாவது ப்ராணப் ப்ரகிருதி யோகம் து ஞாத்வா ஸ்தாபன மாசரேத் வழிபாட்டில் உருவம், மூலப்பிரகிருதியும், மூலமந்திரம் பிராணனாகிய ஜீவனும் ஆகும். இது பிரகிருதி என்ற 'தத்துவமல்ல. இது மூலகாரணமாகும். இதனையே ஆதிசங்கரரின் கூற்று,

கார்யே ஹிகாரணம் பச்யேத் பச்சாத் கார்யம் விஸர்ஜயேத் |
காரணத்வம் ததோ கச்சேத் அவசிஷ்டம் பவேந் முனி ||

பரோக்ஷானுபூதி எனும் நூல். இவ்வாறு பின்னர் காரியகாரணத் தன்மையின் நீக்கத்தில்தான், பூஜகன் வாக்கிற்கு எட்டாத பரிசுத்த வஸ்து (பிரம்மம்) எதுவோ அதுவாகின்றான். மண்குட எடுத்துக்காட்டினால் வேற்றுமை தோன்றாத வண்ணம் அடிக்கடி காணவேண்டும். இது சிவஞானஸாதன மற்றும் சிவதியானஸாதனப் பயிற்சியாகும் என்றறியலாம். இவ்விதத்தினால் மனதின்பாவனா விருத்தி பிரம்ம வடிவமாகின்றது. அதன்பின்பு சுத்த சித்தமுள்ளவர்க்குப் பிரம்மஆகார விருத்தி ஞானம் உதிக்கிறது. பிரம்மஸ்வரூபம் என்பது தேஜோரூபாதிகள்.

பாவிதம் தீவ்ர வேகேன யத் வஸ்து நிச்சயாத்மநா |
புமான் தத் ஹி பவேத் சீக்ரம் ஜ்ஞேயம் ப்ரமர கீடவத் ||

என்பதால் இவ்வாறு, கார்யகாரணநிர்முக்தனாக, ஆவதாக பரோக்ஷானுபூதி எனும்நூல் கூறுகிறது.

அதாவது உலகில் மனிதஇயல்பில், மனிதன் முதலில், காரணத்தை காரியமற்றதாக விசாரிக்கவேண்டும். மீண்டும் அக்காரணத்தைப் பொருத்திப்பார்த்து (அன்வயத்தால்) காரியத்திலும், நித்தியமாகக் காண்கிறான். அல்லது முதலில் காரியத்தில் காரணத்தைப் பார்த்துப் பின்னர் காரியத்தை நீக்கிவிடுக. இவ்வாறு காரியத்தை விடுவதால் காரணத்தன்மை

ஸ்படிக ரத்தினலிங்க பயன்பாடு

தானே போய்விடுகிறது. இவ்வாறு காய்யகாரண தன்மைவிலகி விடுவதால் **சச்சின்மாத்ரமாகிறது.** மனிதன் அப்போது முனிவன் எனும் மனன சீலனாகிறான். இவ்வாறே கற்சிலையானது பூஜகனின் பாவனையில் **சத்சித்மாத்ரமாகிய, பிரம்மஸ்வரூபமாகியே** தோன்றுகிறது. எனவே' **"யத்பாவம் தத்பவதி"** என்றும், **"பாவயேத் சின்மயம் விபும்"** என்றும், **சிந்தாமணிர்ிவேச்வர:** என்றும் சிவாகமங்கள் லிங்கபாவனா விதி முறையை விளக்கி நாம் அச்சிவனைக் காணவும், தொடவும், பூசிக்கவும், தகுதிபெறும் உபாயத்தையும், முறையையும், தேவையையும் நமக்கு விளக்குகின்றன. **சுத்ததன்மையே சிவம்** எனப்படும். சுத்ததத்வாத்வ அத்வாக்களையும் கடந்தநிலையே இங்கு பரமசுத்தமெனக் கொள்ளத்தக்கது. இதனை பிராஸாத மந்திரோச்சாரண காலபாவனையில் **ஷட்சூண்யங்களுக்கும்** அப்பால் பாவக்ஷயம் அடைந்ததாய், சுத்தமாக விளங்குவதே **சிவம்** என்று பாவிக்கவேண்டும்.

ஞானஸாதன ஸத்பாவனாவிருத்தி

சிவபூஜையால் ஞானம் ஏற்படும். ஞானமே மோக்ஷத்தைத் தரும். ஞானமளிப்பதாலேயே, சிவபூஜையானது அனைத்தைக்காட்டிலும் சிறப்புடையது. சிவபூசை எனும் கிரியையானது எவ்வாறு மிகப்பெரிய அரிய பயனைத்தருவதாக ஆகிறது? எனில், அதற்கு அர்ச்சகரின் **மனோபாவனையே மூலகாரணம்** ஆகும். மனம் வழிச்செல்லாமல் மனத்தைதாம் விரும்பும்வழியில் செலுத்தவல்லவனே மனிதனாவான். பலரும் இதனை செய்யமுயல்வதில்லை. யோகியரும்,ஞானியரும் செய்கிறார்கள். ஒரு மனிதனின் மனோவிருத்தியே (தொழில் / செயல் / மனோபாவனை) அவனுடைய **பந்தம், மோக்ஷம்** மேலும் **சுகம், துக்கம்** இரண்டுக்கும் காரணமாக விளங்குகிறது. எனவே **மனத்துக்கண் மாசிலன்** ஆதல் எனும் திருவள்ளுவர் வாக்கின்படி மாசற்ற மனமுடையவனாக சிவமனோபாவனை உடையவனாக இருத்தல் அவசியமாகிறது. யோகமார்க்கம், ஞானமார்க்கம் இரண்டிற்கும் மனோலயமே மிகமுக்கியமாகும். மனமும், ஆன்மாவும் சேர்ந்தே பயிற்சி மேற்கொள்கிறது. முடிவில் மனதையும் தாண்டி ஆன்மா சென்று, சிவத்தை அடைகிறது. இதுவே சிவயோகம்.

மனத்தூய்மையும் மனோபாவனையும்

மன ஏவ மனுஷ்யானாம் காரணம் பந்த மோக்ஷயோ:| என்ற வசனத்திற்கு ஏற்ப, மூலகாரணமாகத் திகழும் மனப்போக்கானது, தூயநெறியில்சென்று, தூயவனான சிவனைச் சேர்ந்திடச்

செய்தலே நன்நெறியாகும். எனவே மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைவருக்கும் அவசியம். இதனையே சிவாகமநூல்கள், சௌசவிதியில் நாம் உள்ளும் புறமும் எவ்வளவுதான் தூய்மையாக வைத்திருப்பினும் மனத்தூய்மை ஏற்படாதவரை நமக்கு சுத்திஇல்லை என்று உறுதிபட **யாவத்துமனஸஸ்சுத்தி: தாவத் சுத்தி ருதீரிதா|** என்று தெரிவித்துள்ளது. ஸ்ரீமத்வாதுளாகமம் **"சுத்தத்வாத் சிவமுத்தி ஷ்டம்"** என்றும், மகுடாகமம் **"சுத்தத்வாத் சிவமித்யுக்தம்"** என்றும் கூறி சுத்தமே சிவமாகும் எனவும் உறுதிபடவிளக்குகின்றன. எனவே சுத்தமானால் மட்டுமே சிவத்தைக்காணவும், தொடவும், கூடவும் இயலுமென்பதே சித்தாந்தமுடிவாம். எனவே பூஜாகிரியைகளுள் முதலாவதான **ஆத்மசுத்தியால்** சுத்தபாவனையை ஆன்மா பெறுகிறது. இவ்வாறு பரிசுத்தமாகிய ஜீவாத்மா, **விமலராகிய சிவத்தை** பாவித்தலால் மட்டுமே, அதற்கு நிகராகி, தத்ஸமமாகி, **சிவோஹம்** என்று அதாவது **சிவனேநான்** என்ற பாவனையால் கீடபிரமரநியாயத்தால் தியானித்த தியேயரூபமாகவே த்யாத்ருவின் உருவத்தை அடைகிறான் என்கிறது சிவாகமம். இதனை **யாவன் ந தத் ஸமோ ஜாத: தாவன் ந ஆராதனே க்ஷம:|** எனக்கூறி தத்ஸமமாக ஆகாதவரை பூஜை செய்திட தகுதி யற்றவன் எனக்கூறி இதன்அவசியத்தை உறுதிப்படுத்துகிறது ஆகமம்.

லிங்கத்தில் சிவபாவனை

சிவலிங்காதிகளில் லிங்கபாவனை நீங்கப்பெற்றபின், அது சிவனே என்ற மனோபாவனா விருத்தியினால் பாவத்வம் எனப்படுகிற தன்மயத்வமாகிற சிவத்தன்மையை, அத்திருவுருவம் பெற்று, அதாவது அந்தலிங்கவடிவம் சிவனாகவே ஆகிவிடுகிறது. அதனை வெறும் கல்சிலை என்று கருதினால் அதுசிலையே, அதையே தெய்வம் என்று கருதினால் அதுவே தெய்வமாகத் திகழ்கிறது. எப்படி எண்ணி பாவிக்கப்படுகிறதோ அப்படியாகவே அது மாறிமாறித்தெரியும். எனவே தான் சிந்தித்தவாறே தோற்றமளித்திடும் சிந்தாமணி எனும் ரத்தினக்கல்லைப் போன்றது சிவம். இதனையே **"யத்பாவம் தத்பவதி"** என்கிறது சிவாகமம். இதனைக்கூறும் ஆகமசான்று,

யேந யேந ஹி ரூபேண ஸாதகஸ்: ஸம் ஸ்மரேத் ஸதா |
தஸ்ய தன்மயதாம் யாதி சிந்தாமணி ரிவேச்வர: ||

பூர்வகாமிகாகமம் படலம் 4)

உலகில், அங்கு, அதில், ஒன்றுமே இல்லை, என்ற அபாவவிருத்தி எனும் சூன்யவிருத்தியினால் சூன்யத்துவம் எனப்படும், இல்லாமை ஜடத்தன்மை உண்டாவது உலகப் பிரசித்தம். அதுபோலவே பிரம்மவிருத்தியினால் பூரணத்துவம் (முழுமை) உண்டாவது

ஞானிகளிடத்தில் பிரசித்தம். ஆதலால் உரிய ஸத்பாவனைகளால் (இவ்விடத்தில் விருத்தி என்பதற்கு மனோபாவனைச்செயல் என்று பொருள்). பூரணத்தன்மையைப்பெற அப்யசிக்க (பயிற்சி செய்ய) வேண்டும். இதனை பிரம்மஞானத்தின் அனுபூதிபற்றி பேசுகிற அபரோக்ஷாநுபூதி எனும் நூல் விளக்குகிறது.

பாவவிருத்யா ஹி பாவத்துவம் சூந்யவிருத்யா ஹி சூந்யதா |
பிரம்மவிருத்யா ஹி பூர்ணத்வம் ததா பூர்ணத்வ மப்யஸேத் ||

இத்தகைய ஸத்பாவனாவிருத்தியானது ஞானஸாதனம் மட்டுமாகாமல் சிவயோக தியான ஸாதனமுமாய் விளங்குவதை யுமுணர்தல் நன்று. எவர்கள் தனக்குள்ளே, ஜோதிர்லிங்கத்தில், இதயகமலத்தில், ஜீவனாகிற ஹம்ஸத்தில் பரப்ப்ரம்மத்தைத் தியானித்து ஸத்பாவனா விருத்தியைப் பயின்று அறிகின்றார்களோ, அவ்வாறு அறிந்து எவர்கள் மேம்படச் செய்கின்றார்களோ, அவர்களே **ஸத்புருஷர்கள், தன்யர்கள், மூவுலகிலும் பூஜிக்கப்படுபவர்கள்.** இவர்களே பிரம்மவாதிகள் ஆவர். இதனையே வேதம் பிரம்மவாதிகள் இறைவனை அனுபவிக்கின்றனர் என்கிறது. ஆகமம் சிவபோகத்தை நித்யானந்தத்தை அனுபவிக்கின்றனர் என்கிறது. **ஸோச்னுதே ஸர்வாந் காமான்ஸஹ, பிரம்மணா விபச்சித் ஏதி பிரம்மவாதிநோ வதந்தி** என்கிறது வேதம். **நித்யானந்தாப்திலீன: பரமசுகதயா லக்ஷ்யவான் சைவயோகீ|** என்பர் ஆகம அறிஞர்கள். பிரம்மாதி தேவர்களும், சனகாதி முனிவர்களும், சுகர் முதலான ரிஷிகளும் எப்பொழுதும் பிரம்மமயமான விருத்தியோடு இருப்பவர்கள், அப்யாஸத்தாலேயே இது சாத்தியமாயிற்கு. அதற்கு முயற்சிதேவை. அதுபோல் ஒருசிவாசார்யர் அகமும், புறமும் பரஞ்சோதியை பிரம்மமாகக்கண்டு லயிக்கவும், வெளிப்புற ஒலிஒளி உணர்வுகளுக்கு இடம்கொடுக்காமலும் அதற்கு ஆட்படாமலும், ஆவாஹனகாலத்தில் இலக்குஉருவத்தில் **லிங்கபாவனையை** விலக்கி, அச்சிவலிங்கத்தை பூஜ்யஸ்ரீ பரமகுருவான **ஸதாசிவமே** என்று பாவிக்கவும் பயிற்சிசெய்து, அவசியம் சித்திபெற்றிடவேண்டும்.

ஒருமுகமுள்ள ஏகமுகலிங்கம்

சிவலிங்கத்தில் ஸதாசிவபாவனை

இறைவனது நிலை சூட்சுமம் என்றும், ஸ்தூலமென்றும் இருவகை. ஸ்தூலம் கண்ணுக்குத் தெரியக்கூடியது. சூட்சுமம் கண்ணுக்குத் தெரியாதது, அதேசமயம் மறுக்கமுடியாதது. இதனை சிவாகமம் ஆலயத்தை ஸ்தூலலிங்கமான ஷடத்வகலாரூபம் என்றும், சிவலிங்கத்தை பஞ்சமந்திர சூட்சுமரூபம் என்றும் கூறுகிறது. விறகில் தீ போலும், தயிரில் நெய் போலும், இறைவன் ஸ்தூலமாய் வெளிபடாத நிலையிலும், வெளிப்பட்டநிலையில், பரோக்ஷமாய், மலரில் மணம்போலவும், இரும்பில் வலிமைபோலவும், இறைவன் மறைந்தும், நிறைந்தும் இருப்பதாக சிவாகமங்கள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகின்றன.

காஷ்டமத்யே யதா வன்னிர் ததி மத்யே யதா கிருதம் |
புஷ்பமத்யே யதா கந்தம் லிங்கமத்யே ஸதாசிவ: || (காமிகபடலம்-4)

ஸகளமும் நிஷ்களமும்

அவயவங்களோடு கூடியது ஸகளம். அவயவமற்றது, நிஷ்களம் என்று அறியத்தக்கது. உடல் ஸகளம் என்றும், உயிர் நிஷ்களம் என்றும் உணரலாம். இவ்வாறே சிவலிங்கத்திருமேனியானது, 38கலைகளோடு கூடிய, ஈசானாதி ஐந்துமந்திரவடிவமாகி, சக்தியமயமாய் விளங்கும். இந்த திருமேனியே ஸதாசிவம் எனப்படும். இது ஸகளம் ஆகும். இதனுள் உயிர் போன்று ஜீவனாக ப்ராஸாதமாக, மந்திர மூலமாக விளங்குவது சிவம் ஆகும். இது நிஷ்களம் ஆகும். தர்மம் ஸதாசிவம். என்றும் அதன் தர்மி சிவம் என்றும் அறியத்தக்கது. இதனை சோமசம்புபத்ததி சிவாசார்யரும் தெளிவாக குறிப்பிட்டு உள்ளார்.



அஷ்ட த்ரிம்சத் கலோபேதோ வ்யக்தமூர்திஸ் ஸதாசிவ: |
ஸகளஸ் து பவேத் ஏவம் அன்யதா நிஷ்களச் சிவ: || (ஸோமசம்பு பத்ததி)

சிவலிங்கமாகிற ஸகளத்தினுள்ளே, நிஷ்களமாகிற சிவமானது பூஜையில் ஆவாஹனத்தின்போது வெளிப்படுத்தப்படுகிறது. இங்கு உண்டாக்கபடுவதோ, மாற்றப்படுவதோ இல்லை என அறியவேண்டும்.

சிவலிங்க பாவனாமுறை

அனைத்துக்கும் முதலான இருவஸ்துக்களின் வடிவமே லிங்கம். பஞ்சபூதங்களுள் மூலக்கருப்பொருளாகத் திகழ்வன இரண்டு. ஒன்று நிலம். இது தெரிவது, மற்றொன்று தெரியாதது. இது ஆகாயம் இவை இரண்டுமே மூலவஸ்துவாகும். நிலமாகிற வஸ்துவில் அமைவது வாஸ்து எனப்படுகிற ஆலயம் மற்றும் சிவலிங்கம் முதலானவை. விண்ணாகிய வஸ்துவில் தோன்றுவதே புலப்படாதஓசைவடிவமான நாதமெனும் மந்திரஒலியாகும். எனவே, நாதமேலிங்கமாகவும், ஆகாசமே சிவலிங்கமாகவும், பிந்துவே அல்லது பிருதிவியே லிங்கபீடமாகவும் பாவிக்கத்தக்கதாகும். இதனை ரௌரவாகமம் கூறும்

ஆகாசம் லிங்க மித்யாஹுர் பிருதுவீ தஸ்ய பீடிகா |
ஸர்வபூதாலயம் புரோக்தம் லயநாத் லிங்கமுச்யதே || (ரௌரவாகமம்)
நாதம் லிங்க மிதி ஞேயம் பிந்துப் பீட முதாஹ்ருதம் |
நாத பிந்து யுதம் ரூபம் லிங்காகார மிதி ஸ்மிருதம் || (உத்தரகாரணாகமம்)

இவ்வாறு யாவும் தோன்றிடவும், ஒடுங்கிடவும் இருந்திடவும் இடமாவதால் இது லிங்கமெனப்படுவதாக ரௌரவாகமம் கூறுகிறது. மேலும் எல்லா பூதங்களும் எதில் ஒடுங்குகின்றனவோ அதுவே சூட்சுமநிலையில் இருப்பதால் லிங்கம் எனப்படுவதாக கிரணாகமம் கூறுகிறது. அதாவது

லயம் கச்சந்தி பூதாநி ஸம்ஹாரே நிகிலானியத: |
தேந லிங்க மிதி புரோக்தம் சூஷ்மத்வாத் லிங்க முச்யதே ||

மேலும் லிங்கசப்தத்தில் உள்ள, லிங்காரமான முதல் அக்ஷரமானது, லயம் எனப்படுகிற. அனைத்தின் ஒடுக்கத்தையும், ககாரமான இரண்டாவது அக்ஷரமானது, அனைத்தும் இதிலிருந்தே தோன்றுவதையும், உணர்த்துவதாக இவ்விருஎழுத்தின் சேர்க்கையால் லிங்கம் என்ற இச்சொல் கூறப்படுவதாகவும், ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹாரவருவமானதாகவும் விளக்குகிறது. லிங்கத்திலிருந்தே யாவும் தோன்றுகின்றன. யாவும் அதிலேயே ஒடுங்குகின்றன என்கிறது. ஆகமச்சான்று இதுவே,

லிங்காரம் லய மித் யுக்தம் ககாரம் ஸ்ருஷ்டி ருச்யதே |
லயநாத் உதயம் புரோக்தம் லிங்கசப்த மிதீரிதம் ||
லிங்காத் ஸர்வம் ஸமுத்பன்னம் லயம் தஸ்மிந் பிரகீர்த்திதம் |
ஸ்ருஷ்டி ஸம்ஹார மெவோகத்தம் லிங்கநாம்நா து இஹோச்யதே ||

தோற்றுவாயாகத் திகழ்கிறது என்றாலோ, படைத்தலைச் செய்கிறது

என்றாலே, ஆண் பெண் வடிவ சேர்க்கை அவசியமாகிறது. எனவே உலகத்தாய் தந்தையர்களான சிவசக்திகளையே, சிவலிங்கரூபமாக சிவாகமம் பாவித்திடுமாறு கூறுகிறது. லிங்கமேசிவன் என்றும், பீடமேசக்தி என்றும், இவர்கள் ஆண் பெண் வடிவினர்கள் என்றும், மலரில் மணம்போலும், எள்ளில் எண்ணைபோலும், தெரியாமலும், தெரிந்தும், நிறைந்தும், இணைந்தும், எப்பொழுதும் உலகத்தாய் தந்தையர்களாய் இருப்பார்கள் என்கிறது சுப்ரபேதாகமம்.

பிரம்மாதி ஸ்தம்ப பர்யந்தம் சக்திபிருந்தாத் விநிஷ்கிருதம் |
சக்திர் மனோன்மநீ மாதா சிவ ஏவ பிதா குரூர் |
மனோன்மநீ சக்திரூபா பும்ரூபஸ் ஸ்யாத் சிவார்த்தகம் |
புஷ்பேஷு கந்தவத் ஞேயம் திலேஷு தைலவத் ததா | (சுப்ரபேதகமம்)

இவ்வுதாஹரணத்தில் மலரில்மணம் என்பது தெரிவதான மலரில், தெரியாத சிவஸ்வரூபம் மணம் போல் என்று அறியவும். மேலும் தெரிகிற பலலிங்கங்களிலும், பக்தியில் புலப்பட்டு, வெளிப்படும் நிலையில், கண்ணுக்குத்தெரியும் எள் தானியத்தினுள் நிறைந்திருந்த மறைந்திருந்த எண்ணையானது முயற்சியால் வெளிப்படுதல் போன்று, லிங்கத்தில் பரவி மறைந்துள்ள சிவன், மூலபிராஸாத மந்திர உச்சாரணத்தால், பெயரிட்டு அழைத்ததும், ஒருவன் உடனே வருதல் போன்று உடனே வெளிப்படுவதாக ஆகமகூற்றின்படி பாவித்தல் முறை. பூஜிக்கத்தக்க லிங்கவடிவத்தை அசைவது, அசையாதது என இருவகையாகப் பிரித்து, சிவாகமங்கள் **ஸ்தாவரம்** மற்றும் **ஜங்கமம்** என இருவகையாக விளக்கும். இச்சிவலிங்கமே முழுபிரபஞ்சத்திற்கும் பிறப்பிடமாய், தோற்றுவாயாக விளங்குது. இத்தகைய லிங்கத்தில், லிங்கபீடத்தை முறையே **பிராணன்** மற்றும் **பிரகிருதி** எனும் இவை இரண்டாகப் பாவித்துப்பொருத்துவதே **ஸ்தாபனம்** எனப்படும். சிவலிங்கத்தில் **சிவஸ்தாபனம்** எனப்படுகிற சிவபிரதிஷ்டாகாலத்தில் ஸதாசிவராகவே லிங்கத்தைக் கருதவேண்டும் என்கிறது சிவாகமம்.

ஸ்தாவரம் ஸங்கமம் சைவ ஜகத்யோநிம் சராசரம் |
லிங்கஸ்தாபன காலே து சிந்தயேத் து ஸதாசிவம் ||
ஸ்தாவரம் ஜங்கமம் சைவ த்விவிதம் லிங்கமுச்யதே ||

(பூர்வகாரணம் – சுப்ரபேதாகமம்)

லிங்கத்தில் ஸதாசிவ சிந்தனை

இவ்வாறு பிரதிஷ்டாகாலத்திலிருந்து, சூரியன் சந்திரன் வானில் உள்ளவரையில் அச்சிவலிங்கத்தில் ஸதாசிவரையே பாவித்து பூசிக்கவேண்டும். "லிங்கமூர்த்தி ஸ்வரூபஸ்ய மத்யே ஸாதாக்ய மர்ச்சயேத் (மகுடாகமம்). இதனை ஸாதாக்யபாவனை என்பர். அதாவது

சதாசிவர் ஐந்து கலைகளாகிய மந்திரசக்திகளையே ஞானசக்தி மற்றும் கிரியாசக்தி இரண்டையுமே சூட்சும மற்றும் ஸ்தூல சரீரமாக உடையவர். ஆதலால் அந்த சக்திமயமான தேஹத்தின் ஐவகைக் கலைகளாலும், பஞ்சபிரம்மமாகி, பஞ்சகிருத்யங்கள் எனப்படுகிற. **படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளுதல்** ஆகிய ஐந்தொழில்களையும் செய்கிறார். இந்த ஐவகை சாந்தியதீதாதி கலைகளும், ஆகாயம் முதலான பஞ்சபூதங்களுக்கும் மூலகாரண ஸ்வரூபங்கள் ஆகும்.

லிங்க பஞ்சஸாதாக்ய பாவனைகள்

இந்த பஞ்சவித ஸாதாக்யபாவனை முறைகளை சிவாகமங்கள் கூறியுள்ளபோதிலும், சிறப்பாக மகுடாகமம் மற்றும் வாதுளாகமம் ஆகியன விரிவாக விளக்கிக் கூறுகின்றன. கட்டுரை விரியுமென்று அஞ்சி அவைகளைப் பற்றி இங்கு சுருக்கமாகக் காண்போம்.

1. சிவ ஸாதாக்யம்,
2. அமூர்த்தி ஸாதாக்யம்,
3. மூர்த்தி ஸாதாக்யம்,
4. கர்த்ரு ஸாதாக்யம்,
5. கர்ம ஸாதாக்யம் எனப்படுபவைகள் பஞ்ச ஸாதாக்யங்கள். இவற்றில் முதலாவதான **சிவஸாதாக்யம்**. சிவத்தை நிஷ்களமாக லிங்கமாக பாவிப்பது. சிவனது நிஷ்களநிலை இலக்கணங்களை பாவிப்பதாகும். குறிப்பாக இதனை பரம்பிரம்மத்தின் **தடஸ்தலக்ஷணம்** எனலாம். இரண்டாவது **அமூர்த்திஸாதாக்யம்** என்பது இது உருவமற்றநிலையில் ஸதாசிவனை அனாஹதசிவன் மற்றும் ஆஹதசிவன் நிலையில் பாவித்தலாகும். மூன்றாவது **மூர்த்திஸாதாக்யம்** என்பது இது பஞ்சபிரம்மங்கள், பஞ்சகாரணேச்வரர்கள் ஸ்வரூபமாய் பாவித்தலாகும். நான்காவது **கர்த்ருஸாதாக்யம்** ஜகத்கர்தாவாகபதியாய் உணர்ந்து பாவித்தலாகும். ஐந்தாவதான **கன்மஸாதாக்யம்** என்பது சிவசக்திச்சேர்க்கையால் உலகஉற்பத்திச்செயல் வடிவாகபாவித்தல் எனலாம். இவற்றின் தத்துவம், மூர்த்தி, ப்ரபாவம் விரிவை பிறகு

காண்போம். இவ்வாறு சிவம், ஸதாசிவம், மஹேச்வரம் என்ற மூன்று நிலைகளில், முறையே 1. நிஷ்களமாயும், 2. ஸகளநிஷ்களமாயும், 3. ஸகளமாயும் மூன்று நிலைகளிலும், ஐந்தொழில் வடிவாயும், ஐந்துகலாமய வடிவாயும் விளங்குவதே பஞ்ச ஸாதாக்யமாகும். இது ஸதாசிவம் என்ற பெயருள்ள, 36தத்வங்களுள் ஒன்றான ஸதாசிவதத்வம் இல்லை. இது சிவதத்வம் மூர்த்தி பிரபாவம் ஆகும். மாத்ருகாசக்தி பீடத்தில் சூரியஸோமாக்னிகளின் மூன்று மண்டலங்களையும் கடந்து, வியாபித்திருக்கிறதும், தீப்பிழம்பாகஒளிருகின்ற ஜோதிஸ்தம்பமாக விளங்குவதுமான ஸதாசிவத்தின் திருவுருவமாகிற தேஜோமூர்த்தியை, பிருத்வீதத்துவம் முதலாக, ஈஸ்வரதத்வம் வரையிலாக, ஓங்கி உயர்ந்து நிற்கும் ஒளித்தூண் போன்று, பாவனை செய்யவேண்டும் என்று காமிகாகமம் விளக்குகிறது. இதற்கான ஆகமச்சான்று,

மண்டல த்ரிதயே ப்யுத்தாம் அனல ஸ்தம்பஸந்நிபாம் |
மூர்த்தி மீச்வர தத்வாந்தாம் லிங்கநாஹே து விந்யஸேத் ||

பூர்வகாமிகம் படலம் 4)

ஆவாஹயேத் ததோ தேவம் மந்திரமூர்த்திமயம் சிவம் | (தீப்தாகமம்)

சிவலிங்கத்தில் ஸதாசிவமே சிவனது மூர்த்தமாகும். ஸதாசிவம் மூலமந்திரத்தை வித்யாதேஹமாகவும், 38 கலைகளுடன் கூடிய ஐந்து பிரம்மமந்திரங்களை திருமேனியாகவும், கொண்டதே, ஸதாசிவரது உருவமாகும். இது தியானத்திற்கு மட்டுமே கூறப்படுகிறது. அச்சதாசிவரது உடலுக்குள் ஜீவனாகவும் பிரம்மமாகவும், தர்மியாகவும் உள்ளது, பரம்பொருளான சிவமேயாகும். இதனைக்கூறும் காமிகாகமச் சான்று,

ஹ்ருத் ஸம்புட மஜாதம் வை மூர்த்திமந்திர முதாஹ்ரும் |
ததைவ மூல ஏவாயம் ஸாதாக்யம் மந்திர முச்யதே |
விந்யஸேத் மூர்த்தி மத்யே து வித்யாதேஹம் ஸதாசிவம் |
ஆரோஹே சிவலிங்கஸ்ய சுத்தஸ்தானமயம் பிரபும் |
அஷ்ட த்ரிமசத் கலோபேதம் பிரம்மாங்க கிருத விக்ரஹம் |
சதாசிவஸ்ய ரூபம் து தியானார்த்த மிஹ கத்யதே ||

பூர்வகாமிகம் படலம் 4)

ஆவாஹனவிஸர்ஜன பாவனைமுறை

ஆவாஹனகாலத்தில், சிவலிங்கமாகிற ஸதாசிவம் எனப்படுகிற திவ்யத்திருமேனியில் அதவாது பைந்தவதேஹத்தில், நாதபிரம்மமாக, பிராஸாதமந்திரரூபமாக, சிவம் வெளிப்பட்டுச் சென்றுவரும். மேலும் லிங்கத்தில் வெளிப்பட்டதால் அவரது எங்குமிருத்தலாகிற

வியாபகத்தன்மை ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை. எவ்வாறெனில் விறகினுள் எங்கும் பரவிஇருந்த தீச்சூடானது கடையப்படுவதனால் எவ்வாறு ஓரிடத்தில் தீப்பொறியாக வெளிப்பட்டபிறகும் மேலும் மேலும் கட்டையில் வெளிப்படாது பரவியும் வெளிப்படுகிறதோ, அழிவற்றும் இருஇடத்திலும் வெளிபடுவதற்கு உள்ளேயும், உள்ளும், புறமும் வெளிப்பட்டும் வெளிப்படாமலும் உள்ளதோ, அவ்வாறே லிங்காதிகளின் திவ்யதேஹத்திலும் இறைவனது வெளிபாடு என அறிக. எவ்வாறு உலகில்உயிர் உடல் வாயிலாக தோன்றிவந்து செல்கிறதோ, அவ்வாறே இறைவன் ஐந்துமந்திரஉடல்வாயிலாக சென்று வருகிறார். இவ்விதம் சிவமானது உடலிடம் கொண்டதாயும், உடலிடம் கொள்ளாது எங்கும் நிறைந்ததாகவும் எப்போதும் விளங்கும் என்கிறது காமிகாகமம். லிங்கத்தில் சிவபாவனையைச் கூறும்சான்று,

ஆமூலாக்ரஸ் ஸ்திதஸ் யாக்னே: அபிவியக்திர் யதா தரௌ |
தத்வ தேகத்ர சித் வியக்திர்வியாபகஸ்ய ந பாத்யதே |
யதா ஆத்மனஸ் தனு த்வாரா ஸ்யாதா மிஹ கமா கமௌ |
தத்வத் மந்த்ரதனு த்வாரா சிவஸ்ய இஷ்டௌ கமாகமௌ |

பூர்வகாமிகாகமம்-4)

அசிந்த்ய சக்தி யுக்தத்வாத் வியாபகோ அவ்யாபகச்ச ஸ: ||
ஸதனுர் தனுஹீநோ வா ஸர்வ கிருத் ஸர்வகச் சிவ: |
ஏவம் பிந்துகதம் து ஈசம் ஹஸ்த புஷ்பகதம் ஸ்மரேத் |
தச்ச பிராணபதா கார்யம் நாட்யா ஜோதிஸ் ஸ்வரூபயா |
தஸ்மா தாதாய லிங்கஸ்தம் ஸ்தாபிந்யா விந்யஸேத் தநௌ |
யேந ஸாமர்த்தியதச் சம்போர் ஸ்வஸ்ய ஸ்வஸ்வாமிதா பவேத் ||

பூர்வகாமிகாகமம் படலம்4)

இவ்வாறு ஐந்துமந்திரங்களால், ஐந்துதிருமுகத்துடன் கூடிய சக்திமயமான ஸதாசிவத்திருமேனியை லிங்கவடிவில் பாவனை செய்து, அந்த ஸாதாசிவத்திருமேனியில், பரமகாரண பரபிரம்மமாகிய, பரசிவத்தை தியானித்து பூசிக்கவேண்டும். இதற்கான சான்று,

ஏவம் வக்த்ராணி ஸம்பாவ்ய ரூபம் ஸாதாசிவம் யஜேத் |
ஏவம் சாக்தம் வபுர் கல்ப்ய தஸ்மின் பரமகாரணம் ||

சதாசிவமூர்த்தத்தினுள்ளே தர்மியாகவுள்ள பரம்பொருளான சிவம் என்பது நிஷ்களமானதால், எவ்வாறு பாவிக்கத்தக்கது எனில்? அழிவற்றதாயும், ஸத்யமானதாயும், ஞானம், ஆனந்தம், சுகம் இவற்றினுள் இருப்பதாயும் எங்கும் வியாபித்திருப்பதாயும், எல்லா தத்வங்களையும் கடந்ததாய் அளவிட முடியாத–தாயும், ஒன்றோடும் ஒப்பிடமுடியாததாயும்

இருப்பதாக பாவித்து அச்சிவனை சிறப்பு நிகழ்ச்சியாக ஸதாசிவர் எனப்படுகிற ஒரு உருவத்திருமேனியினுள் சிறப்பு ஆவாஹநகிரியை யினால் வெளிப்படுத்த வேண்டும். இக்கிரியையில் லிங்கத்தில் சிவபாவனையை காமிகாகமம் விளக்குகிறது.

ஏவம் சாக்தம் வபுக் கல்ப்ய தஸ்மின் பரமகாரணம் |
சிவம் வை சாச்வதம் ஸத்யம் ஞானானந்த சுகாத்மகம் ||
வியாபகம் ஸர்வதத்வாநாம் அப்ரமேய மனூபமம். |
வாச்ய வாசக ராஹித்யம் வாங்மனோதீத கோசரம் ||
வியக்தம் குர்யாத் விசேஷேண நிஷ்களம் ஸகளாத்மனி |

நிஷ்கள பரசிவத்தை ஸகளமாகிற லிங்கத்துள் வெளிப்படுத்துவதே **ஆவாஹனம்.** அவ்வாறே பூஜை மற்றும் தியானம் செய்யும் காரணத்திற்காக, வடிவத்துள் வெளிப்படுத்தப்பட்ட நிஷ்களசிவத்தை ஸகளத்திருமேனியிலிருந்து விடுபட்டதாகவும், நிஷ்களத்தன்மையை, முன்புபோல் திருமேனியுள்ளே அடங்காது, எங்கும் வெளியில் வியாபித்ததாகவும், சிவதத்துவப் பகுதியோடு, சேர்ந்ததாகவும் கருதுவதே **விஸார்ஸனத்தின் பாவனை** முறையாகும். இவ்வாறு சிவலிங்கத்தில் சிவனது **ஆவாஹனம், விஸர்ஸனம்,** எனும் இரு கிரியைகளின் பாவனாகிரமத்தை நன்கு அறிந்து, பாவித்து, பூசித்திடவேண்டும்.

ஹ்ருன்மந்த்ரானுகதம் மூலம் உச்சார்ய காரணோஜ்ஜிதம் |
ஸகளோபாதி நிர்முக்தம் யதா நிஷ்களதாம் கதம் ||
சிவதத்வ விபாகேந சிந்தயேத் ஹ்ருத் ஸ்திதேந ச |
நிரபேக்ஷோ விஸர்கோ (அ)யம் லிங்கே ஸாதாரனோ மத: ||

(பூர்வகாமிகமம்)

லிங்கத்தில் சிவசக்திகளின் பாவனை முறை

சிவலிங்கத்தில் சதாசிவரின் வித்யாதேஹத்தில் இதய கமலத்துள் தலையின் உச்சி துவாரம் வழியாக, புகுந்து அமர்ந்த சிவரூபத்தை எவ்வாறு பாவித்திட வேண்டுமெனில்? மனதால் பிரணவத்தை உச்சரித்து மூலபிராஸாதத்தால் ஆவாஹித்தலின் போது, ஸர்வக்ஞத்வம் முதலான ஆறுகுணங்களுடன் கூடியதாகவும், ஸர்வோபாதிகளிலிருந்து விடுபட்டு விளங்குவதாகவும், அனைத்து காரணங்களுக்குமான மூலகாரணமாகவும், எவ்விதமாயும் வாதிட்டுக் கூறமுடியாததாயும், அளவிடமுடியாததாயும், அழிவற்றதாயும், அனைத்தையும் தாங்கிக் காப்பதாயும், தலையானதாயும், சுத்தபிந்துவில் தோன்றியதாயும், தேசிகர்பாவித்துப் பூசித்திடவேண்டுமென்கிறது சுப்ரபேதாகமம்.

ப்ரவிஷ்டே ஹ்ருதயாக்ரே து சிவரூபம் விசிந்தயேத் |
ப்ரணவம் மனஸோச்சார்ய ஸர்வஜ்ஞாதி குணைர்யுதம் ||
ஸர்வோபாதி விநிர்முக்தம் காரணாநாம் து காரணம் |
அதர்க்யம் அப்ரமேயம் ச த்ருவம் அவ்யய மீச்வரம் ||
பிந்தா வப் யுதிதம் த்யாயேத் ஸ்திரதீப் புரத ஸ்திரே |
ஸதாசிவாத்ம மத்யஸ்தம் விந்யஸேத் தேசிகோத்தம: ||

சிவலிங்கத்தில் சக்தியானது, பிந்துரூபமாக பாவிக்கத்தக்கது. லிங்கத்துப்பீடத்தில் யோகசக்தி யாயும், அருகில் ஜகன்மாதா வாகவும், விச்வயோநியாகவும், மனோன்மணி எனும் திருநாமத் தோடுகூடிய போகசக்தியாயும் விளங்குவது சக்தியாகும்.

இராமர் செய்த லிங்கவழிபாடு
(தமிழக இராமேச்வரக் கடற்கரையில்)

வன்னே ருஷ்ணவத் சக்திர்
அவிநா பாவிநீ விபோ: |
சக்திஹீநச் சிவோ நாஸ்தி
சிவஹீநா ந சக்திகா |
ஏதே ஸமஸ்த தேவாஸ்ச
சக்திசம்பு மயா: ஸ்மிருதா:||
(சுப்ரபேதாகமம்)

சிவமும், சக்தியும் ஒருபோதும் எங்கும் எப்பொழுதும் பிரிந்திருக்காது. சூக்ஷ்மநிலையில் சேர்ந்தே இருப்பவையாக பாவிக்கத்தக்கது. சைவாகமத்தில் சக்தி என்பது சக்தி தத்வமாய் சூஷ்மநாதத்தில் தோன்றி பிந்துவாகி நாதபிந்துகலா வாயிலாக உலகெங்கும் வியாபித்து இருப்பதாகும். அத்தகைய சக்தி சிவன் தூண்டுதலால் ஐந்தொழிலாற்றி அருள்தருவதாக பாவிக்கத்தக்கது. இதனை

சக்திதத்வம் விசேஷேன சூஷ்ம நாதோத்பவம் ததா |
நாதே பிந்து ஸமுத்பன்னம் பிந்தெள ஸாதாக்ய முச்யதே |
ஜகத் சக்திமயம் வித்யாத் சக்திம் பிரேரயிதா சிவ: || சுப்ரபேதம்

பரப்ரம்ம நிஷ்கள தடஸ்த இலக்கணம்

லிங்கமே வித்யா தேஹமாகவும் அதுவே சதாசிவமாகவும், அத்திருமேனியுள்ளே ஜீவனாக த்வனியும் அத்துவனி எனும் உள்ஒலிக்குள், பரமாத்மாவும், அதனுள் பராத்பரமாகிய சிவமும் அதனுள்

அதிசூக்ஷ்ம ஆனந்ததாண்டவேச்வரரும் தியானிக்கத்தக்கவர்கள். என்று மகுடாகமம் நமக்கு தெளிவாக்குகிறது.

பிந்துமத்யகதோ நாதோ நாதமத்ய கதோ த்வனி: |
த்வனிமத்யகதச் சாத்மா சாந்தியதீதம் பரம்மஹத் |
சிவம் பராத்பரம் ப்ரம்மம் அப்ரமேயம் வநிந்திதம் |
அநௌபம்யம் ச சூஷ்மம் ச நித்யம் ஸர்வகதம் ப்ரபும் | (மகுடாகமம்)

என்று மகுடாகமம் நிர்குண நிஷ்கள பரசிவஸ்வரூப இலக்கணத்தை விளக்குகிறது. அதாவது சுத்ததன்மையுடனேயே இருத்தலால் **சிவம்** என்றும், மேலானவற்றிற்கு எல்லாம் இதுவே மேலாகஇருப்பதால் **பராத்பரம்** என்றும், பலபிரம்மங்களையும் கடந்து எல்லாபிரம்மங்களுக்கும் மேலான பிரம்மமாகஇதுவே விளங்குவதால் இதுவே **பிரம்மம்** என்றும், **பிரம்மத்வாத் பிரம்மணத்வாச்ச பிரம்மமித்யபி தீயதே** அளவுப்பிரமாணங்களுக்கு அப்பாற்பட்டதாக இருப்பதால் **அப்ரமேயம்** என்றும், இயல்பாகவே மலமற்றதாகவே உள்ளதால் **அமலம் / விமலம்** அல்லது **அநிந்திதம்** என்றும், உவமையற்றதாய் விளங்குவதால் **அனௌபம்யம்** என்றும், ஒப்பிட்டுக் கூறமுடியாததாக உள்ளதால் **அஸாதிருச்யம்** என்றும், பரமாகாசத்தையும் கடந்து நிற்பதால் **சூக்ஷமம்** என்றும், தனக்கென எதையும் காரணமாக கொண்டு இல்லாமையால் தோற்றமும் அழிவும் அற்று என்றுமே உள்ளதால் **நித்யம்** என்றும், எங்கும் எப்பொழுதும் நீக்கமற நிறைந்து பரவியுள்ளதால் **வியாபீ** என்றும், **ஸர்வகதம்** என்றும், அனைத்திற்கும் தலைவானகி அனைத்தையும் தனக்கு சொத்தாகக் கொண்டு பரமபதியாக விளங்குவதால் **பிரபு** என்றும், சைவாகமத்தில் பரம்பொருளான **பரசிவம்** பாவிக்கத்தக்கது. இதனைத் தெளிவாக மகுடாகமம் விளக்கியுள்ளது. **பிராஸாதமந்திரமே சிவஞானம், மந்திரரூபியே சிவன், இது சப்தபிரம்மம்.** இதனை அஜிதாகமம் கூறுவதாவது :

இராமேச்வரம் இராமநாதலிங்கம்

மந்திரரூபீ மஹாதேவ: சிவ: பரமகாரணம் |
மந்த்ரம் ஸ்யாத் பரமம் ஞானம் மந்த்ரவாச்யஸ் ஸதாசிவ: ||
வாச்ய வாசக சம்பந்தோ மந்திரஸ் யாஸ்ய ச திருச்யதே ||
லிங்கம் சின்ஹம் சரீரம் ச கத்யதே (அ)த்ர ஜநார்தன |

சரீரம் மந்திர ஏவ ஸ்யாத் சப்தபிரம்மே தி சம்ஞித: |
சரீரம் பிரதமம் கிருத்வா வியக்தா வ்யக்தோ பயாத்மகம் ||
திரிவிதம் தத் சுரஸ்ரேஷ்ட பூஜார்த்தம் தஸ்ய நித்யச: |
பிரதிலிங்க ஸ்திதம் மந்திரம் பிரதிஷ்டேதி பிரகீர்த்திதம்: ||

அஜிதாகமம்

எனவே, ஒவ்வொரு சிவலிங்கந்தோறும் வைக்கப்படும் மூலபிராஸாத மந்திரமே சப்த-பிரம்மமாகிற ஸதாசிவரின் ஜீவானகிற பரமஹம்ஸராகிய பரசிவமாகும். பூஜைக்காகவே லிங்கவடிவம். பாவாகாரமாக மிக உயர்ந்ததாக கூறப்பட்டு உள்ளதை அறியலாம். பூஜையாகிற தர்மகர்மாவிற்கு ஈசனினவடிவமாகத் திகழ்வதாலேயே லிங்கத்திற்கு கர்மேசரூபம் என்று வாதுளாகமம் சிறப்பித்துக்கூறும். பீடத்தில் லிங்கமும், லிங்கத்துள்ளே ஸதாசிவமூர்த்தியும், அம்மூர்த்தியினுள்ளே தத்வமும், அத்தத்துவத்துள்ளே சிவமும், இவ்வாறாக அனைத்து தத்துவங்களுக்கும், அனைத்திற்கும் உறைவிடமாக, ஆலயமாக விளங்குவதே சிவலிங்கம் என்கிறது வாதுளாகமம்.

சிவலிங்கத்துள்ளே சிவபாவனாமுறை

பிந்து மத்யகதோ நாத: நாதமத்யே து மூர்த்தய: |
மூர்த்தி மத்யகதம் தத்வம் தத்வமத்யகதச் சிவ: ||
ஏதத் சிவமயம் லிங்கம் ஸர்தத்வாலயம் விது: |
லிங்கே து ஜாயதே ஸர்வம் ஜகத் ஸ்தாவர ஜங்கமம் ||
தஸ்மாத் லிங்கம் விசேஷேண கர்மரூப முதாஹ்ருதம் |
ஸர்வ ஞானமயம் தேவம் ஸர்வ காரண காரணம் ||
ஏவம் லிங்கம் து கர்மேசம் தியாயேத் ஸகளநிஷ்களம் |
தேஹஸ்தம் ஸகளம் ஞேயம் நிஷ்களம் தேஹ வர்ஜிதம் ||
சிவமத்யகதம் நிருத்தம் நிருத்தமத்யே து சாந்தகம் |
அதீதம் சாந்தமத்யே து சாந்த்யதீதம் பராத்பரம் || (வாதுளம்)

என்ற வாதுளசுத்தாக்ய வசனத்தால், சிவலிங்கத்தின் கர்மேசதத்வ பாவனாப்ரபாவமும், ஒன்றினுள் ஒன்றாக ஸதாசிவத்துக்குள்ளும் நிருத்தம், சாந்தம், அதீதம், பராத்பரம், என்று நான்கு அருவநிலைகளும், பரசிவபாவனா முறையும்நன்கு அறியமுடிகிறது.பீடமில்லாதலிங்கமானது பிரம்மனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதானாலும்கூட பயன்தராது. அதில் சிவனது சாந்நித்யம் ஏற்படாது என்கிறுது. அதனால் லிங்கத்துடன் எப்பொழுதும் பீடத்தை அவசியம் சேர்த்துவைத்து அமைத்து, தேவராகப் பிரதிஷ்டை செய்து, பூசித்திடவேண்டும், கிரியாசக்தி

வடிவமான பீடத்தில், ஞானசக்திமயமான லிங்கத்தை ஸ்தாபித்து, பெருமுயற்சியால் பீடத்துடனேயே பூசித்துப் பயன்பெறவேண்டும் என்று வலியுறுத்துகிறது.

பீடஹீநம் யதாலிங்கம் விதிநா அபி பிரதிஷ்டிதம் |
ததா ந பலதம் தஸ்மாத் ஸான்நித்யம் நாதிகச்சதி ||

தஸ்மாத் பீடம் பிரகர்த்தவ்யம் லிங்கேந ஸஹ தேசிக: |
கிரியாசக்தியாத்மகே பீடே ஞானசக்தி யாத்மகம் புத: |
லிங்கம் ஸம்ஸ்தாப்ய யத்நேந ஸபீடம் தத் ஸமர்ச்சயேத் ||
லிங்கார்சனஸமோ நாஸ்தி தர்மோ(அ)த்ர புவனத்ரயே || (அஜிதாகமம்)

சிவலிங்கபூசைக்கு நிகராக வேறோன்றும் மூவுலகிலும் இல்லை எனக்கூறி லிங்கார்சனையின் உயர்வை அஜிதாகமம் விளக்குகிறது. சிவப்பரம்பொருளை சிவாகமப்படி லிங்கவடிவில் மட்டுமே ஆராதிப்பது சிறப்புமிக்கதாகும். சைவாகமங்களின் நான்கு பாதங்களிலும் சிவலிங்க பூஜையாகிற கிரியையே முக்கியமானதாகும். பிற கிரியைகள்யாவுமே நேர்முகமாகவோ, மறைமுகமாவோ, துணைக்காரணமாகவோ, சிவபூஜைக்கு அங்கமாக உள்ளவைகளே என்று அறியவும். அத்தகைய **சிவலிங்கபூஜையை** ஆகமவழிமுறையில் செய்திட திரிகரண சுத்தி அவசியம். திரிகரணமாகிய மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் முறையே **பாவனை, மந்திரம், கிரியை** மூன்றையும் சைவாகமமுறையில் வெளிப்படுத்துவது அவசியம். ஆகமபூசையில் மந்திரமில்லாததாக **கிரியை** எதுவும் விதிக்கப்படவில்லை. பாவனை இல்லாததாக மந்திரம், கிரியை, இரண்டுமில்லை. அனைத்திலும் உரிய பாவனையே மிகமுக்கியமாகும். எனவே உரிய **மனோபாவனையுடன் செய்வதே உரியபயனைத்தரும்.** எத்தனையோ உருவங்கள் இறைவனுக்கு இருப்பினும் சிவலிங்க வடிவத்திற்குநிகர், வேறுஎதுவும் இல்லை. எனவே, லிங்கம் பலவடிவில், பலவகையில் விளங்கிடினும், அருட்பெருஞ்சோதிப்பிழம்பாக, தீச்சுடரொளித்தூணாக முதலில் பாவித்து, அதனுள் பரம்பொருளின் நிர்குணமான நிஷ்களரூபத்தைத் தியானித்து, பூசித்திடவேண்டும். இத்தகைய சிவலிங்க வடிவத்தின் பாவிக்கத்தக்க பிரபாவங்களைக் கூறுவது என்பது இயலாத ஒன்று. வாக்கிற்கும், மனதிற்கும் எட்டாத மகிமையுடையதே சிவலிங்க வடிவமாகும். என்கிறது மகுடாகமம்.

இத்தம் ஸாதாசிவம் ரூபம் லிங்க பீட ஸமன்விதம் |
தத் ஸாதாக்ய பிரபாவஸ் து வர்ணிதும் நைவ சக்யதே|| (மகுடாகமம்)

யோகியரும், ஞானியரும், சிவநேயஅடியார்களும் சிவலிங்க வடிவழகில் மனம் லயிக்கப்பெற்று, பூசித்துப் பயன்பெற்றனர். சிவலிங்க

வடிவழகையும், அதன் மகிமையையும் சைவ சந்தான ஆசார்யரின் சுலோகக்கூற்றால் நாம் சிறப்பாக அறியமுடிகிறது.

நிராகாரம் ஜோதிர்மய மகல மத்யந்த மமலம் –
மஹாதீர்கம் ஸ்தூலம் நிரவயவம் அத்யந்த ருசிரம் |
மஹாநாதம் லிங்கம் சமதன முனித்யேய மதுலம் –
மநோ மார்காதீதம் ஹரி விதி நுதம் நௌமி ஹ்ருதயே ||

இதன்பொருள் = உண்மையில் வடிவமற்றது, ஜோதிவடிவானது, பகுதிகள் அற்றது, மிகவுமதூய்மையானது, மாசற்றது, பாதாளாதி ஆகாயம் வரையிலாக மிகவும் உயர்ந்து நீளமானது, மிகவும்பருமனானது, உடல்உறுப்புகளற்றது, மிகவும் மனம் கவரக்கூடியது, மஹாநாதமாகிற ஓசையின் வடிவமாக விளங்குவது, ஆண், பெண், அலி எனும் முப்பாலின் வடிவமாய் சிவனது உறைவிடத்திற்குச் சின்னமாய் விளங்குவது. படைத்தல், காத்தல், ஒடுக்குதல், ஆகிய முத்தொழி லிற்கும் அடையாளத் தோற்றமாய், முப்பகுதியைக் கொண்டு உள்ளது, சாந்தியையே செல்வமாகக் கொண்ட முனிவர்களால் எப்போதும் தியானிக்கப்படுவது, ஒப்பற்றது, மனப்போக்கிற்கு எட்டாது கடந்து விளங்குவது, பிரம்மா விஷ்ணு முதலானோர்களால் வணங்கப்படுவதுமான சிவலிங்கத்தை இதயகமலத்தில் என்றும் வணங்குவோமாக என்பதாம். எனவே லிங்கபீட வடிவில் உலகத்தாய் தந்தையர்களான சிவகக்திகளை பூசித்தல் முறை. லிங்கஸ்வரூபமானது, அனைத்துலகின் பிண்டவடிவமாய், முப்பகுதியுடையதாய், பீடபிண்டிகையுடன் கூடியதாய், நிஷ்களமாய், தூய்மையான வெண்மை நிறத்தாய, மிகவும் அமைதியே வடிவானதாய். ஆறுவகை அத்வாக்களின் தத்வவடிவமாய் எங்கும் வியாபித்த பிரம்மத்தோடு விளங்குவதாய், மிகச்சிறந்த சிவஞானமே வடிவாக உடையதாய், மேலானதாய் பலதத்வரகஸ்யமாக விளங்குவதாய், சுகமானதாய், தேவர்களின் விளையாடும் மகிழ்விடமாய் நீரட்டலுக்கு உரியதாய், படைத்தலுக்கும், ஒடுக்கத்தலுக்கும், காரணமாய் விளங்குவதாய் லிங்க ரூபம் பாவிக்கத்தக்கதாக கூறப்படுகிறது.

பிண்டிகா தத்வரூபபாவனை

பிண்டாகாரம் த்ரிகண்டம் து பீடபிண்டிகயா (அ)ன்விதம் |
நிஷ்களம் தவளம் சாந்தம் அத்வ தத்வ மயம் விபும் ||
அதிஞானம் பரம் குஹ்யம் சுகக் க்ரீடாபிஷேசனம்
ஸ்ருஷ்டி சம்ஹார ஹேதுத்வம் லிங்கரூப முதாஹ்ருதம்|| (ஆகமத்தில்)

சிவலிங்கத்தினடியில் சுற்றுப்பகுதியில் மனோன்மனீ சக்தியை கல்பித்து, அதன்மீது நடுவில் விளங்கும் அசையும், அல்லது அசையாத லிங்கத்தில் ஸதாசிவரை பூஜித்திடுமாறு சுப்ரபேதாகமம் கூறுகிறது.

லிங்கமூல பரீணாஹே கல்பயேத் து மனோன்மனீம் |
தஸ்யோபரி ஸ்திதே லிங்கே சலே சைவம் ஸதாசிவம் ||

(சுப்ரபேதாகமபடலம்–8ல்சுலோகம்–10)

எனவே, பிண்டிகை எனும் லிங்கபீடத்தில் யோகசக்தியை "தாரிகா" எனப் பெயருடையவளாக, மனோன்மணிதேவியையும் அதன் நடுவில், சிவனையும், மனதால்பாவித்து, வணங்கவேண்டும். மேலும் பிண்டிகையில், தேவியானவள் கோமுகை எனும் உறுப்பாக திருமஞ்ஜன நீர்விழும்திசையில் தமது கால்களை நீட்டியவாறுவைத்துதமது மடியிலிருக்கும் சிவனைத்தழுவியவளாய் பாவிக்கத்தக்கவள். தேவி தழுவக் குழைந்தருளும் கருணைக்கடலே கடவுள் என்று அறிக. இக்கருத்தைக்கூறும் ஆவுடையாள் தேவிசுலோகம் இதுவே,

தேவிசிர தக்ஷிண மதோத்தர சுபாதம் –
கோமுக பதாந்த க்ருத வாரி புஜ யுக்மம் |
யோநிகத மத்ய பத சுஸ்தித சுலிங்கம் –
ஸ்தாபித ஸதாசிவ மனோன்மனி ஸ்வரூபம் ||

என்ற சைவாகமமரபுச் சுலோகத்தாலும் உணரலாம். மேலும்

உமாயை பகரூபிண்யை லிங்கரூப சிவாய ச |
சங்கராய நமஸ் துப்யம் இதி ஸ்துத்வா (அ)நுமோத்ய ச ||

என்று சைவாகமபத்ததிஆசார்யரும், சிவசக்திகளின் ஐக்யத்தைத் தியானித்திட உபதேசிக்கிறார். இங்கே சிவமும், சக்தியும் ஒருபோதும் பிரியாது என்றும், தீயும்சூடும் போலவே இருக்கும் என்பது, சைவசமய லிங்கத்தில் மட்டுமின்றி சாக்தசமயத்தின் சாக்தலிங்கமான ஸ்ரீசக்ர மஹாமேருவிலும்கூட, முக்கோணம் சக்தியெனவும், பிந்துசிவம்



லிங்கத்திற்கான
ஆவுடையாள்
பீடஅமைப்பு

எனவும் பாவிக்கப்படவேண்டியதாக இருப்பது இத்தருணத்தில் இங்கு உற்றுநோக்கிக் கருத்தில் கொள்ளத்தக்கதாகிறது. சைவத்தில் தேவிமடியில்சிவனும், சாக்தத்தில் காமேச்வரராகிய சிவனின் மடியில் லலிதாதிரிபுரசுந்தரியும் பிரியாதநிலையில், சொல்லும்பொருளும் போல இணைந்து அருள்வதை கவனத்தில் கொள்ளலாம். எனவேதான், ஸ்ரீசக்ரபிந்துவைச் சுற்றியுள்ள முக்கோணவடிவிலேயே சிவலிங்கத்திற்கும் பீடவகை கூறப்பட்டுள்ளதாலும் உணரலாம். பொதுவாக சிவலிங்கத்தில் சிவபெருமானை பகவானுக்கு உரிய ஆறுவகையான குணங்களை உடையவராக, உருவமற்று பண்புகளாகிய சத்சிதானந்த தேஜோரூபமாய் பாவித்தல் முறையாகும்.

ஸர்வக்ஞதா திருப்தி ரனாதிபோத: –
ஸ்வதந்த்ரதா நித்ய மலுப்த சக்தி: |
அனந்தசக்திஸ்ச விபோர் விதிக்ஞா: –
ஷடாஹு ரங்காநி மஹேச்வரஸ்ய ||

1) எல்லாமறியும் தன்மை, 2) பூரணதிருப்தி, 3) அனாதியாகதாமே அறியும் தன்மை, 4) சுதந்திரமாய் செயல்படுவது, 5) அழிவற்று என்றுமிருத்தல், 6) குறைவற்றதாயும் எண்ணற்றதாயும் உள்ள சக்தி உடைமை, ஆகியன பரசிவத்திற்கு உரிய இயல்புகளாகும். இவையே உருவநிலையில் உள்ள மகேசனுக்கு ஆறு உடலுறுப்புகளாக விளங்குவன என்கிறது ஆகமம். மேலும் எப்பொழுதும் சிவனிடத்தில் பத்து சிறப்புபண்புகள் உள்ளதாகவும் ஆகமம் விளக்குகிறது. அவை **1.ஞானம், 2.வைராக்யம், 3.ஐச்வர்யம், 4.தவம், 5.ஸத்யம், 6.பெருமை, 7.தாங்குதல், 8.படைப்பாற்றல், 9.ஆத்மஸம்போதம், (உயிரை அதிஷ்டித் திருத்தல்), 10.அழிவற்றிருத்தல்** ஆகியனவாம். இதனைக்கூறும் ஆகமசான்று,

ஞானம், விராக தைச்வர்யம், தபஸ் ஸத்யம் க்ஷமா த்ருதி: |
ஸ்ரஷ்ட்ருத்வ மாத்மஸம்போதோ ஹ்யதிஷ்டாத்ருத்வ மேவச |
அவ்யயாநி தசைதானி நித்யம் திஷ்டந்தி சங்கரே | (சிவாகமம்)

இவ்வாறு அஷ்டமூர்த்திகளால் உலகையே வியாபித்து உள்ள பரமேச்வரனே, சராசரபூதங்கள் அனைத்தையும், உலகத்தையும், தாங்குபவனும் போஷிப்பவனுமாவான், அவரையே வேதாந்திகள் பகவான் என்கின்றனர் என்று இதனை லிங்கபுராணம் கூறும் சான்று இதுவே,

அஷ்டமூர்த்திர் ஜகத் வியாப்ய ஸ்திதோ (அ)யம் பரமேச்வர: |
சராசராணாம் பூதாநாம் தாதா விச்வம்பராத்மக: |
பவச் சேத் யுச்யதே தேந பகவான் வேதவாதிபி: || (லிங்கபுராணம்)

இவ்வாறு வேதாகமபுராணாதி தர்மநூல்கள் யாவுமே, கூறுகின்ற சிவமாகாத்மியத்தையும், அவரை வழிபடத்தக்க சிவலிங்கமாஹாத்மியத்தையும், யாவரும் உணர்ந்து, சைவாகமநெறியில் தீட்சையையும், மந்திரமும், லிங்கமும், குருவாயிலாகப்பெற்று, நித்தமும் சிவபூஜை செய்து, இகபரசுக பயனாகிய போகம் மோட்சம் இரண்டையும் பெற்று, உய்ய, சிவலிங்கபாவனையை எடுத்துரைக்கிறது இந்நூல்.

லிங்கத்தில் தத்துவபாவனை (முப்பகுதிகள்)

சிவலிங்கத்தின் மேல்பகுதியான வட்டவடிவமான பூஜாம்சத்தில் அதாவது **ருத்ரபாகத்தில்** சுத்ததத்துவமாக 1. சிவம் 2. சக்தி, 3.சதாசிவம், 4.ஈஸ்வரம், 5.சுத்தவித்யை ஆகிய ஐந்தும்உள்ளன. இந்த 5தத்துவத்திலுள்ள புவனங்களில் ஆத்மாக்களை நேரடியாக சிவனே அருள்செய்வதால் இவை ஐந்தும் **சிவதத்துவம்** எனப்படுகிறது. நடுவே உள்ள எட்டுபட்டைவடிவமான **விஷ்ணுபாகத்தில்** அதாவது பிண்டிகைப்பகுதியில் **மாயாதத்வம் முதலான ஏழுதத்துவங்கள்** உள்ளன, இவைஞானத்திற்கு உதவும் கருவிகளாக உள்ளதால் இவை **வித்யாதத்துவம்** எனப்படுகிறது. இதிலுள்ள பலபுவனவாசிகளையும், சிவனின் அனந்தேச்வரின்மூலமாகவே குருவாகி அருள்கிறார். லிங்கத்தின் அடியில் உள்ள **பிரம்மபாகத்தில்** நாற்கோணவடிவப் பகுதிக்குள் பிரகிருதிதத்வம் முதலாக இப்பூமியாகிய பிருதிவீதத்துவம் வரையிலான 24தத்துவங்களும் உள்ளன, இவை ஆத்மாக்களுக்கு, அவற்றின் உடல்செயல்படுவதற்கு, மூலக்கருவிகளாயுள்ளதால், இவைகள் **ஆத்மதத்துவங்கள்** என்பதாக இருக்க, இதில் உள்ள புவனவாசிகளை ஸ்ரீகண்டருத்ரர்வா யிலாக சிவன் குருவாக வந்து அருள்கிறார். இவ்விதம் 36 தத்துவங்களும்முறையே **ஆத்மதத்வம், வித்யாதத்வம், சிவதத்வம்** என்று மூன்றுபகுதிகளாக, **பிரம்மா விஷ்ணு ருத்ரர்களை** முறையே அதிபதிகளாகக் கொண்டு முத்தொழிலையும் செய் கின்றன, இவ்விதம் ஐந்துநிலையில் பிரம்மாதிகளான ஐவர்வாயிலாக, ஐந்தொழிலாற்றுவதே **சிவலிங்கம்.** 1.ஆத்மா, 2.அந்தராத்மா, 3.தத்வாத்மா, 4.பூதாத்மா, 5.பரமாத்மா என்று



சிவலிங்கத்தின் மூன்றுபகுதிகள்

ஐந்துவகையான ஆத்மாக்களும் கூடியுள்ள திவ்யதேஹம் லிங்கமே. ஆகமங்களில் நவதத்துவாத்மகமாகவும், அஷ்டமூர்த்யாத்மகமாகவும், மந்த்ராத்மகமாகவும், பலவாறாக, ஆகமங்களில், சிவலிங்கம் தத்துவ அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. இது அனைவராலும் அறியப்பட வேண்டியது.

ஷாட்குண்யரூபம் லிங்கம்

முன்கூறிவாறு ஷடத்வநியாஸத்தால் சிவலிங்கத்தில் ஆறுவகையான இறையின் குணப்பண்புகள் லிங்கத்திற்கு ஏற்படுவதால், லிங்கம் அனைத்திற்கும் மூலகாரணமாகவும், பகவானாகவும் ஆகிறது என்பதை ஆகமங்கள் கூறுகின்றன. 1. ஸர்வக்ஞத்வம் = எல்லாமறியும் தன்மை இது கலாநியாஸத்தாலும், 2. நித்யதிருப்தி = என்றுமே அழியாதுள்ள அமைதியான நித்யானந்தம். இது தத்துவநியாஸத்தாலும், 3. அநாதிபோதம் = நித்யமான அறிவாற்றல். இது புவனநியாஸத்தாலும் 4. ஸ்வதந்த்ரதா = சுதந்திரமாயிருத்தல் இது வர்ணாத்வ நியாஸத் தாலும் 5. அலுப்தசக்தி =குன்றாதவல்லமை இது பதாத்வ நியாஸத் தாலும் 6. அனந்தசக்தி = எல்லையற்ற ஆற்றலுடைமை இது மந்திராத்வநியாஸத்தாலும், தெய்வச்சிலைக்கும் மற்றும் சிவ லிங்கத்திற்கும் ஏற்படுகிறது. இந்த ஆறுவகையான குணங்களுமே இறைவனின் இயற்பண்புகளாகும். இந்த ஷாட்குண்யங்களும் நிலைத்து இருப்பதாலேயே சிவலிங்கமானது பகவானாகவும் அருள்தருவதாகவும் அறியப்படவேண்டும். ஆகமமுறைப்படி மந்திரப்பிரதிஷ்டை செய்யப்படாத சிவலிங்கம் தனித்து அவ்வுருவமே பயன்தராது. எல்லாம் அதனுள் நிலைத்து இருக்க பூஜையே ஸர்வகாரணமாவதால் உரிய வழிபாட்டால் மட்டுமே சிவலிங்கம் பயன்தருவதாகிறது என்று அறியவும்.

ஸகளநிஷ்களமே சிவலிங்கம்

சிவலிங்கவடிவத்தை சிவாகமம் விளக்குகையில் பிந்துவின் நடுவே நாதமும், அதனுள் மூர்த்தியும், அதனுள் தத்துவமும், அதனுள் சிவனும் இருப்பதால் லிங்கம் முழுவதும் சிவமயமாக விளங்கி சிவலிங்கம் என்று கூறப்படுகிறது. இந்த சிவலிங்கமானது அனைத்து தத்துவங்களுக்கும் மூலஇருப்பிடமாகவுள்ளதாக அறியப்படவேண்டும். சிவலிங்கத்திலேயே அசையும்பொருள், அசையாப்பொருள் ஆகிய இருவகையில் உள்ளதான, உலகமும் தோன்றுகின்றன. ஆதலால் சிவலிங்கமானது உலகத்தோற்றச் செயலுக்கு விசேஷமான கர்மரூபமாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக அனைத்து வகையான ஞானத்திற்கும், அனைத்து காரணங்களுக்கும், மூலகாரணமாக

விளங்குகிற ஐந்தொழில்களுக்குத் தலைமைஇடமாகவும், உருவம், அருவம், கொண்டுள்ள அருவுருவத்தோற்றமே **சிவலிங்கம்** என்று எண்ணி, **எப்போதும் சிவலிங்கத்திலேயே சதாசிவரை பூசிக்கவேண்டும்.** இதனைத் தெளிவுற மகுடாகமநூல் கூறுகிறது.. சிவலிங்கத்தின் பராத்பரத்வத்தைக் கூறும்சான்று இதுவே ஆகும்.

பிந்து மத்யகதோ நாத: நாதமத்யே து மூர்த்தய: |
மூர்த்தி மத்யகதம் தத்வம் தத்வ மத்யகதச் சிவ: ||

ஏதத் சிவமயம் லிங்கம் ஸர்வ தத்வாலயம் விது: |
லிங்கே து ஜாயதே ஸர்வம் ஜகத் ஸ்தாவர ஜங்கமம் ||

தஸ்மாத் லிங்கம் விசேஷேண கர்மரூபம் உதாஹ்ருதம் |
ஸர்வஞானமயம் தேவம் ஸர்வகாரண காரணம் ||

ஏவம் லிங்கம் து கர்மேசம் தியாயேத் ஸகளநிஷ்களம் |
தேஹஸ்தம் ஸகளம் ஞேயம் நிஷ்களம் தேஹவர்ஜிதம் ||

சிவ மத்யகதம் ந்ருத்தம் நிருத்தமத்யே து சாந்தகம் |
அதீதம் சாந்த மத்யே து சாந்தியதீதம் பராத்பரம் || (மகுடாகமம்)

இத்தகைய பெருமையுடையதாய் அருவுருவமாயுள்ளதான சிவலிங்கத்தினுள்ளே ஸதாசிவரும், அதில்விளங்கும் சதாசிவரின் இதயத்துள்ளே அருவநிலையில் சிவனாரும். அவருக்குள் உள்ளத்தின் ஆனந்தத்துடிப்பாக நடேசரும், அவருக்குள் பரமசாந்தரும், அவருக்குள் பராத்பரம், என்பதாக பரப்ரம்மமும் விளங்கும் ஆக இவ்வாறு உள் நிலைகளில் (தேஹம்) உடல் மற்றும் உருவம் ஏதுமின்றி, **1. சூக்ஷ்மம், 2. அதிசூக்ஷ்மம் 3.பரசூக்ஷ்மம், 4.பராபரசூக்ஷ்மம்,** என்ற நான்கு நிலைகளில் உள்ளனர். லிங்கமே உருவம், அதனுள் சதாசிவரே அருவுருவம், அதனுள்ளே சிவமே அருவம் என்று மூவகையிலுமாக கருதத்தக்கதாக விளங்குவதே **சிவலிங்கம்** என்று ஆகமப்படி உணரத்தக்கது.

சிவலிங்கத்தில் பரசிவ நிஷ்களபாவனை.

ஆதி மத்யாந்த நிர்முக்த: ஸ்வபாவ விமலப் பிரபு: |
ஸர்வக்ஞப் பரிபூர்ணச் ச சிவோ ஞேயஸ் சிவாகமே ||

மேற்காணும் ஆகமவசனப்படி ஸர்வதத்வாலயமாகவுள்ள சிவலிங்கத்தில், அதன் உச்சியில் அருவநிலையில் பரம்பொருளான சிவம் எப்பொழுதும் எண்ணி வழிபடத்தக்கது. லிங்கத்தின் அடியிலிருந்து முறையே உருவநிலை 4-ம் அதன்மேலே, அருவுருவநிலை 1-ம் அதன்மேலே, அருவநிலை, 4-ம் ஆக ஒன்பது தத்துவங்கள் உள்ளன.

பாகங்கள் மூன்றிலுமாக முறையே, படைத்தலைச்செய்யும் பிரம்மா, காத்தலைச்செய்யும் **விஷ்ணு**, ஒடுக்கத்தைச்செய்யும் **ருத்ரன்**, மேலும் நாம்வினைப் பயனை நுகர்ந்திடவே மறைத்தலைச்செய்யும் **மஹேச்வரன்**, முத்தி எனும் அனுக்ரஹம் என்னும் அருளும்செயலைச்செய்யும் **ஸதாசிவர்** ஆகிய, ஐந்துவகையான பஞ்சகிருத்யங்களின் ஐந்து காரண ஈசர்களைக் கடந்துநிற்கும் கடவுளே, சிவம் எனப்படுகிற முழுமுதற் பரம்பொருள் என்று அறியப்படவேண்டியது.

பரமசிவத்தின் பத்துபெயர்களின் விளக்கம்.

(பதிலக்ஷணம்)

முன்கூறிய பரமபதியான பரசிவத்தைக் குறிக்கின்ற சிறப்புப் பெயர்களை மகுடாகமம் விளக்கிக் கூறுகிறது. அதன்படி 1.சுத்தமாய் விளங்குவதால் **சிவம்** என்று கூறப்பட்டது. 2.மேலான ஐந்து பிரம்மங்களையும்கடந்து அனைத்திற்கும் மேலாக விளங்குவதால் பராத்பரம் எனப்படுகிறது. 3.பரம்பொருளான பிரம்மமாக இருப்பதாலும், பிரம்மத்திற்குஉரிய பண்புகளோடு கூடியிருப்பதாலும் **பிரம்மம்** எனப்படுகிறது. 4.அளவுக்கு அப்பாற்பட்டதாக இருப்பதால் இது **அப்ரமேயம்** எனப்படுகிறது. 5.மலமுள்ளதால் பொருள் நிந்திக்கப் படுவதாகிறது, அத்தகையதான **மாசு** எனும் மலம் அனாதியாகவே இவரிடம் இல்லாமையால் **அநிந்திதம்** (நிந்திக்க இகழத் தகாதது) எனப்படுகிறது. 6.வேறுஒன்றும் தனக்கு உவமையாக இல்லாமையால் **அஸாத்ருச்யம்** எனப்படுகிறது. 7.பரமாகாசத்தைக் கடந்து வியோமாதீதனாக கண்ணுக்குப் புலப்படாததாக மிகநுட்பமாக விளங்கு வதால் **சூக்ஷ்மம்** எனப்படுகிறது. 8.தனக்கு, எதற்கும் ஒரு காரணமில்லாதவனாய் இருப்பதால் **நித்யம்** (தோற்றம் மறைவு அற்றது) எனப்படுகிறது. 9.எங்கும் பரவியிருப்பதால் எதிலும் நீக்கமற நிறைந்து உள்ளதால் **ஸர்வகம்** எனப்படுகிறது. 10.ஸ்வம் என்ற சொல்லுக்கு சொத்து என்பது பொருள். அனைத்து

திருச்சுற்றில் அங்கலிங்கங்கள்

உயிர்களையுமே தம்சொத்தாகக்கொண்டு, காத்து அருளுகின்றதால் சுவாமி எனப்படுகிறது. தலைவனாக உள்ளதால், பிரபு என்று அழைக்கப்படுகிறது. இவ்விதமாக பத்துவிதமான அரியபண்புகளைக் கொண்டுள்ளதால் பத்துபெயர்களில் சிவப்பரம்பொருள் லிங்கத்தில் பரப்பிரம்மமாய் விளங்குகிறது எனக்கூறப்படுகிறது.

சிவபரத்வவிளக்கம்

திக் காலாத் யநவச் சிந்நோ வாங் மனோ தீத கோசர: |
நிஷ்களோ நிஷ்கிரியஸ் சைவ ஸர்வ த்ருக் ஸர்வ க்ருத் ஸதா |
தத்ஞானா தேவ முக்தி ஸ்யாத் தத் பக்த்யா வா ஜநார்தன |

(அஜிதாகமம்)

சிவம், சிவபக்தி, சிவஞானம் இவற்றின் பெருமையையே முக்திக்கு காரணம் என்பதை அஜிதாகமம் கூறுகையில் திசை, காலம், வாக்கு, மனம், இவைகளுக்கு உட்படாமல் அப்பாற்பட்டது பிரம்மம் என்றும், அதனாலது உருவமற்றும், செயலாற்றும். எல்லாமறிந்து, எல்லாம் செய்யவல்லதாய், அதுவே அனைத்திற்கும் மூலகாரணமாய், உள்ளதாகவும் திருமாலுக்கு சிவன் கூறியுள்ளார். எவன் ஒடுக்குவதான ஸம்ஹாரசெயலைச் செய்கிறானோ, அவனே மீண்டும் படைக்கும் செயலையும் செய்யக்கூடியவன். ஆதலால், அயன், ஹரி, ஹரன் ஆகிய மூவருக்கும் மேலானவராய், சிவனார் விளங்கியபடிஇருந்து, சிவசிருஷ்டியை பிந்துமூலமாக, சிவலிங்கம் வாயிலாக செய்வதை மகுடாகமம் விளக்குகிறது. அதன்படி சிவசிருஷ்டிரூபம் சிவலிங்கத்திலுள்ள பரமசிவனின் விராட்புருஷ்ரூபமானது, முறையே, லிங்கத்தின் அடிப்பகுதியே பாதங்களாயும், சிவலிங்கத்தின் முனைப்பகுதி முகமாயும், சிவபாணத்தின் மையத்துள்ள முன்புறமுள்ள பிரம்மசூத்திரத்திற்கு இரண்டு பக்கங்களிலும் இருபக்கக் கைகளும், பாணத்தின் பின்புறம் இணையும் கோட்டின் கடைப்பகுதி பின்புறமாகவும், லிங்கத்துள்ளே விளங்குகிற பிராஸாதம் பஞ்சபிரம்மம் என்னும் மந்த்ரகலாமயமாகவுள்ள நாதசரீரத்தை வித்யாதேஹமாகவும் தியானிக்கவேண்டும் என்றும், அந்த வித்யாதேஹத்திலிருந்தே பிரம்மா முதலான தேவர்கள் பலரும் வெளிப்பட்டனர் என்றும் மகுடாகமம் விளக்கியுள்ளது இதனைத் தெரிவிக்கும் ஆகமசான்று இதுவே.

லிங்கரூப விசேஷம் து ச்ருணுஷ் வேவம் மஹேச்வர |
லிங்க மூலம் து சரணௌ லிங்காக்ரம் முக முச்யதே ||
சூத்ரபார்ச்வௌ சதுர்பாஹூர் சூத்ராந்தம் பிருஷ்டமுச்யதே |

(மகுடாகமம்)

வழிபாட்டின் பயன்கள்

ஐவேள்வி வகையில் இறைவழிபாடு

இது தமிழ் திருமுறைகளில் ஐவேள்வி என்று அதிக அளவில் குறிப்பிடப்படுகிற பஞ்சயக்ஞும் என்கிற, ஐந்துவகை வேள்வி எனும் அறங்கள். 1. தேவயக்ஞும், 2. ரிஷியக்ஞும், 3. பித்ருயக்ஞும், 4. மனுஷ்யயக்ஞும், 5. பூதயக்ஞும் ஆகும். இவை ஐந்தினுள் முதலாவது வேதயக்ஞும் என்பது வேதாகமநெறியில் தெய்வத்தை ஒதிவழிபடுவதாகும். இரண்டவாது ரிஷியக்ஞும் என்பது தேவர்களுக்கு ஹோமம் செய்து எறிஓம்புதல். மூன்றாவது பித்ருயக்ஞும் என்பது முன்னோர்களான பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்தல். நான்காவது மனுஷ்யயக்ஞும் என்பது ஏழைஎளியோர்களுக்கும் பசித்தவருக்கும் உணவளித்து உதவுதல், ஐந்தாவதான பூதயக்ஞும் என்பது விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலான எல்லா உயிரினங்களையும் மதித்து உணவளித்தல், இவை ஐந்துவகைசெயலும் தினமும் கடைபிடிக்கவேண்டிய கடமைகள்ஆகும். இதனால் இறைவழிபாடு அறநூல்கள் அனைத்துதிலும் விதிக்கப்பட்டுள்ள மனிதப்பிறவியில் செய்யவேண்டிய தலையாய கடமை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளன.



பஞ்சயக்ஞும் – ஐவேள்விகள்

உயிர்களையுமே தம்சொத்தாகக்கொண்டு, காத்து அருளுகின்றதால் சுவாமி எனப்படுகிறது. தலைவனாக உள்ளதால், பிரபு என்று அழைக்கப்படுகிறது. இவ்விதமாக பத்துவிதமான அரியபண்புகளைக் கொண்டுள்ளதால் பத்துபெயர்களில் சிவப்பரம்பொருள் லிங்கத்தில் பரப்பிரம்மமாய் விளங்குகிறது எனக்கூறப்படுகிறது.

சிவபரத்வவிளக்கம்

திக் காலாத் யநவச் சிந்நோ வாங் மனோ தீத கோசர: |
நிஷ்களோ நிஷ்கிரியஸ் சைவ ஸர்வ த்ருக் ஸர்வ க்ருத் ஸதா |
தத்ஞானா தேவ முக்தி ஸ்யாத் தத் பக்த்யா வா ஜநார்தன |

(அஜிதாகமம்)

சிவம், சிவபக்தி, சிவஞானம் இவற்றின் பெருமையையே முக்திக்கு காரணம் என்பதை **அஜிதாகமம்** கூறுகையில் **திசை, காலம், வாக்கு, மனம்,** இவைகளுக்கு உட்படாமல் அப்பாற்பட்டது **பிரம்மம்** என்றும், அதனாலது உருவமற்றும், செயலாற்றும். எல்லாமறிந்து, எல்லாம் செய்யவல்லதாய், அதுவே அனைத்திற்கும் மூலகாரணமாய், உள்ளதாகவும் திருமாலுக்கு சிவன் கூறியுள்ளார். எவன் ஒடுக்குவதான ஸம்ஹாரசெயலைச் செய்கிறானோ, அவனே மீண்டும் படைக்கும் செயலையும் செய்யக்கூடியவன். ஆதலால், அயன், ஹரி, ஹரன் ஆகிய மூவருக்கும் மேலானவராய், சிவனார் விளங்கியபடிஇருந்து, **சிவசிருஷ்டியை பிந்துமூலமாக, சிவலிங்கம் வாயிலாக செய்வதை மகுடாகமம் விளக்குகிறது.** அதன்படி சிவசிருஷ்டிரூபம் சிவலிங்கத்திலுள்ள பரமசிவனின் விராட்புருஷரூபமானது, முறையே, லிங்கத்தின் அடிப்பகுதியே பாதங்களாயும், சிவலிங்கத்தின் முனைப்பகுதி முகமாயும், சிவபாணத்தின் மையத்துள்ள முன்புறமுள்ள பிரம்மசூத்திரத்திற்கு இரண்டு பக்கங்களிலும் இருபக்கக் கைகளும், பாணத்தின் பின்புறம் இணையும் கோட்டின் கடைப்பகுதி பின்புறமாகவும், லிங்கத்துள்ளே விளங்குகிற பிராஸாதம் பஞ்சபிரம்மம் என்னும் மந்த்ரகலாமயமாகவுள்ள நாதசரீரத்தை வித்யாதேஹமாகவும் தியானிக்கவேண்டும் என்றும், அந்த வித்யாதேஹத்திலிருந்தே பிரம்மா முதலான தேவர்கள் பலரும் வெளிப்பட்டனர் என்றும் மகுடாகமம் விளக்கியுள்ளது இதனைத் தெரிவிக்கும் ஆகமசான்று இதுவே.

லிங்கரூப விசேஷம் து ச்ருணுஷ் வேவம் மஹேச்வர |
லிங்க மூலம் து சரணௌ லிங்காக்ரம் முக முச்யதே ||
சூத்ரபார்ச்வெள சதுர்பாஹுர் சூத்ராந்தம் பிருஷ்டமுச்யதே |

(மகுடாகமம்)

வழிபாட்டின் பயன்கள்

ஐவேள்வி வகையில் இறைவழிபாடு

இது தமிழ் திருமுறைகளில் ஐவேள்வி என்று அதிக அளவில் குறிப்பிடப்படுகிற பஞ்சயக்ஞம் என்கிற, ஐந்துவகை வேள்வி எனும் அறங்கள். 1. தேவயக்ஞம், 2. ரிஷியக்ஞம், 3. பித்ருயக்ஞம், 4. மனுஷ்யயக்ஞம், 5. பூதயக்ஞம் ஆகும். இவை ஐந்தினுள் முதலாவது வேதயக்ஞம் என்பது வேதாகமநெறியில் தெய்வத்தை ஒதிவழிபடுவதாகும். இரண்டவாது ரிஷியக்ஞம் என்பது தேவர்களுக்கு ஹோமம் செய்து எறிஓம்புதல். மூன்றாவது பித்ருயக்ஞம் என்பது முன்னோர்களான பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்தல். நான்காவது மனுஷ்யயக்ஞம் என்பது ஏழைஎளியோர்களுக்கும் பசித்தவருக்கும் உணவளித்து உதவுதல், ஐந்தாவதான பூதயக்ஞம் என்பது விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலான எல்லா உயிரினங்களையும் மதித்து உணவளித்தல், இவை ஐந்துவகைசெயலும் தினமும் கடைபிடிக்கவேண்டிய கடமைகள்ஆகும். இதனால் இறைவழிபாடு அறநூல்கள் அனைத்துதிலும் விதிக்கப்பட்டுள்ள மனிதப்பிறவியில் செய்யவேண்டிய தலையாய கடமை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளன.



பஞ்சயக்ஞம் – ஐவேள்விகள்

லிங்கத்திலிருந்து தேவர்களின் தோற்றம்.

பெருமைமிக்க சிவலிங்கமாகிற வித்யாதேஹத்தில் உள்ளவரான பரமேச்வருடைய வலதுதோளிலிருந்து, படைத்தலுக்காக பிரம்மாவும், இடது தோள்பாகத்திலிருந்து, காத்தல் தொழி லாற்றிட விஷ்ணுவும், மூக்கிலிருந்து வாயுதேவனும், பத்து காதுகளி லிருந்து பத்துதிசைகளும், தாமரை போன்ற உள்ளங்கையிலிருந்து கணேசரும், இதயதிலிருந்து ஆறுமுகக் கந்தரும், தொப்புள் பகுதியிலிருந்து பாஸ்கரனும், பிருஷ்டபாகத்திலிருந்து தேவேந்திரனும், வலது கண்ணிலிருந்து வன்ஹிமூர்த்தியும், இடதுகண்ணி லிருந்து (சந்திரனும்) சோமனும், மார்பகங்களிலிருந்து தேவர்களும், வலது கண்ணிலிருந்து ருத்ரமூர்த்தியும், கைகளின் முனைகளிலிருந்து திவ்யா ஸ்திரமான ஆயுதங்களும், நகங்களி லிருந்து ஸந்தியாதேவியர்களும், தலைமுடிப் பகுதியிலிருந்து பாம்பு இனமும், கால்முட்டிப் பகுதியிலிருந்து ரிஷிகளும், இரு திருவடிகளிலிருந்து ஸர்வதேவர் களும், சிவஞானமும் முதல் படைப்பு சிருஷ்டிகாலத்தில் தோன்றின என்றும், தோற்றத்திற்கு ஆனந்தமயமான லிங்கதாண்டவம் என்பதே (பிந்துக்ஷோபக்ருத்யம்) முதலானது, இரண்டாவதான ஒடுக்ககாலத்தில் ஒடுக்கும்செயலான ஸம்ஹார தாண்டவத்தால், யாவும் சிவலிங்கத்துக்குள்ளேயே ஒடுங்கி ஓய்வு பெறும் என்றும், இவ்விதமாக அனைத்தையும் தம்மிடம் ஒடுக்கிக் கொண்டுள்ள சிவலிங்கத்தின் நடுவே எப்போதும் ஸாதாக்யபாவனை யுடன் சதாசிவரை தியானித்து பூசித்திடவேண்டும் என்றும் மகுடாகமம் சிவசிருஷ்டிமுறையை விளக்கி யுள்ளதால், முன்கூறிய லிங்கம் என்ற சொல்லின் பொருளுண்மையான லயம் மற்றும் படைத்தலின் முறைமை லிங்கத்தில் உள்ளது நன்கு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

மூலமூர்த்தியின் பெருமை (மூலலிங்கமஹிமை)

இந்த கோயில்களில் பூஜைகள் தடையுறாது நிலைபெற்று அண்ட சராசரங்களிலுள்ள சக்திகளைக் கூட்டி, அதனை மந்திர தந்திர உபாயங்களினால் நிலைபெறச்செய்து, அங்கே உருவச்சிலைகளை பொருத்தி, அதனால் மக்கள் பயன்படவேண்டும் என்று பூஜை முதலியவைகளால் வழிபடும்இடமே **கர்ப்பக்கிரகம்.** இதன் உச்சிக் கலசத்திற்கு நேர் மையத்தில் மனம் ஈர்க்கப்படும் வகையில் **மூலஸ்தானம்** அமைகின்றது. யந்திரத்தகடுகள், பொன், வெள்ளி, வைரம், முதலிய சிறப்புமிக்க பொருட்களை அடியில் பீடத்தில் சேர்த்து, வைத்து விக்ரகத்தை அதன்மேல் ஸ்தாபித்து மூலிகைமருந்துகளால் கெட்டிப்படுத்தி மந்திரங்களுடன் **பிரதிஷ்டை** செய்யப்படுகிறது.

இவ்விதமாக **உலோகசக்தி, மனோசக்தி, மந்திரசக்தி, யந்திரசக்தி, ஆன்மசக்தி** ஆகிய சக்திகளால் கற்சிலையானது தெய்வீகசக்தியை பெறுகிறது. இவ்விதமாக தெய்வீகசக்தியைத்திரட்டி, மூர்த்திவடிவில் சேமித்து வைப்பதே ஆலயங்களில் **விக்கிரங்கள்** அமைப்பதின் நோக்கம் (வி+கிரகம் = வி = விசேஷம், கிரகம் = இடம், இறைவன் விசேஷமாக உறைந்து இருக்கும் இடம். திருமேனி எனும் உடலே விக்ரஹம். உடலே இறையின் உறைவிடம்

நாமம், ரூபம், குணாதிசயங்கள் இவை உள்ள சகுணமான இறைவனை, மனதில் இருத்தி தியானிப்பது சுலபம். எனவே இறைவன் பலவகை மூர்த்திகளால் அருள்கிறான் இறைவனை **விக்கிரக ஆராதனை** மூலமே சாதாரணமக்கள் கண்டு அனுபவிக்க முடியும். இதற்கு வேதாந்தம், தத்துவஞானம் வேண்டியதில்லை. மனதிற்கு ஒரு பிடிப்பு ஏற்படுவதற்காக இஷ்டமான. தேவதையிடம் மனதை இருத்தி தியானம் செய்யவேண்டும். இதற்குப் பிரமாணமான நமது வேதங்களும், ஸ்மிருதிகளும் ஆகமங்களும், இதிகாச புராணங்களும், பகவத் கீதையும், இவற்றின் பாஷ்யங் களும் உள்ளன. இவை அறநெறியில் வாழ கூறப்படும் அருள்நெறிகளாகும்



தீயைக் கடைய உதவும் மரத் தினாலான அரணிக்கட்டையில் முழுவதும் பரவி நெருப்பு

லிங்கத்திலிருந்து தேவர்களின் தோற்றம்.

பெருமைமிக்க சிவலிங்கமாகிற வித்யாதேஹத்தில் உள்ளவரான பரமேச்வருடைய வலதுதோளிலிருந்து, படைத்தலுக்காக பிரம்மாவும், இடது தோள்பாகத்திலிருந்து, காத்தல் தொழி லாற்றிட விஷ்ணுவும், மூக்கிலிருந்து வாயுதேவனும், பத்து காதுகளி லிருந்து பத்துதிசைகளும், தாமரை போன்ற உள்ளங்கையிலிருந்து கணேசரும், இதயதிலிருந்து ஆறுமுகக் கந்தரும், தொப்புள் பகுதியிலிருந்து பாஸ்கரனும், பிருஷ்டபாகத்திலிருந்து தேவேந்திரனும், வலது கண்ணிலிருந்து வன்ஹிமூர்த்தியும், இடதுகண்ணி லிருந்து (சந்திரனும்) சோமனும், மார்பகங்களிலிருந்து தேவர்களும், வலது கண்ணிலிருந்து ருத்ரமூர்த்தியும், கைகளின் முனைகளிலிருந்து திவ்யா ஸ்திரமான ஆயுதங்களும், நகங்களி லிருந்து ஸந்தியாதேவியர்களும், தலைமுடிப் பகுதியிலிருந்து பாம்பு இனமும், கால்முட்டிப் பகுதியிலிருந்து ரிஷிகளும், இரு திருவடிகளிலிருந்து ஸர்வதேவர் களும், சிவஞானமும் முதல் படைப்பு சிருஷ்டிகாலத்தில் தோன்றின என்றும், தோற்றத்திற்கு ஆனந்தமயமான லிங்கதாண்டவம் என்பதே (பிந்துக்ஷோபக்ருத்யம்) முதலானது, இரண்டாவதான ஒடுக்ககாலத்தில் ஒடுக்கும்செயலான ஸம்ஹார தாண்டவத்தால், யாவும் சிவலிங்கத்துக்குள்ளேயே ஒடுங்கி ஓய்வு பெறும் என்றும், இவ்விதமாக அனைத்தையும் தம்மிடம் ஒடுக்கிக் கொண்டுள்ள சிவலிங்கத்தின் நடுவே எப்போதும் ஸாதாக்யபாவனை யுடன் சதாசிவரை தியானித்து பூசித்திடவேண்டும் என்றும் மகுடாகமம் சிவசிருஷ்டிமுறையை விளக்கி யுள்ளதால், முன்கூறிய லிங்கம் என்ற சொல்லின் பொருளுண்மையான லயம் மற்றும் படைத்தலின் முறைமை லிங்கத்தில் உள்ளது நன்கு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

மூலமூர்த்தியின் பெருமை (மூலலிங்கமஹிமை)

இந்த கோயில்களில் பூஜைகள் தடையுறாது நிலைபெற்று அண்ட சராசரங்களிலுள்ள சக்திகளைக் கூட்டி, அதனை மந்திர தந்திர உபாயங்களினால் நிலைபெறச்செய்து, அங்கே உருவச்சிலைகளை பொருத்தி, அதனால் மக்கள் பயன்படவேண்டும் என்று பூஜை முதலியவைகளால் வழிபடும்இடமே **கர்ப்பக்கிரகம்.** இதன் உச்சிக் கலசத்திற்கு நேர் மையத்தில் மனம் ஈர்க்கப்படும் வகையில் **மூலஸ்தானம்** அமைகின்றது. யந்திரத்தகடுகள், பொன், வெள்ளி, வைரம், முதலிய சிறப்புமிக்க பொருட்களை அடியில் பீடத்தில் சேர்த்து, வைத்து விக்ரகத்தை அதன்மேல் ஸ்தாபித்து மூலிகைமருந்துகளால் கெட்டிப்படுத்தி மந்திரங்களுடன் **பிரதிஷ்டை** செய்யப்படுகிறது.

இவ்விதமாக **உலோகசக்தி, மனோசக்தி, மந்திரசக்தி, யந்திரசக்தி, ஆன்மசக்தி** ஆகிய சக்திகளால் கற்சிலையானது தெய்வீகசக்தியை பெறுகிறது. இவ்விதமாக தெய்வீகசக்தியைத்திரட்டி, மூர்த்திவடிவில் சேமித்து வைப்பதே ஆலயங்களில் **விக்கிரங்கள்** அமைப்பதின் நோக்கம் (வி+கிரகம் = வி = விசேஷம், கிரகம் = இடம், இறைவன் விசேஷமாக உறைந்து இருக்கும் இடம். திருமேனி எனும் உடலே விக்ரஹம். உடலே இறையின் உறைவிடம்

நாமம், ரூபம், குணாதிசயங்கள் இவை உள்ள சகுணமான இறைவனை, மனதில் இருத்தி தியானிப்பது சுலபம். எனவே இறைவன் பலவகை மூர்த்திகளால் அருள்கிறான் இறைவனை **விக்கிரக ஆராதனை** மூலமே சாதாரணமக்கள் கண்டு அனுபவிக்க முடியும். இதற்கு வேதாந்தம், தத்துவஞானம் வேண்டியதில்லை. மனதிற்கு ஒரு பிடிப்பு ஏற்படுவதற்காக இஷ்டமான. தேவதையிடம் மனதை இருத்தி தியானம் செய்யவேண்டும். இதற்குப் பிரமாணமான நமது வேதங்களும், ஸ்மிருதிகளும் ஆகமங்களும், இதிகாச புராணங்களும், பகவத் கீதையும், இவற்றின் பாஷ்யங் களும் உள்ளன. இவை அறநெறியில் வாழ கூறப்படும் அருள்நெறிகளாகும்



தீயைக் கடைய உதவும் மரத் தினாலான அரணிக்கட்டையில் முழுவதும் பரவி நெருப்பு



இருப்பினும் அதனை முயற்சியால் ஒரே இடத்தில் தொடர்ந்து கடைந்தே அக்னியை உண்டாக்க முடியும். அதுபோலவே ஸர்வவியாபியான பரப்பிரும்மத்தை ஆலயமாகியபசுவின் கர்ப்ப கிரகமான மடியிலிருந்து விக்ரகமாகிய காம்பின் மூலமே, பாலாகிய தெய்வீகசக்தியை அருளைப் பெறமுடியும் என்பது அறநூல்களின் முடிவாகும். இவ்வாறு ஆகமவிதிகளின்படி ஆலயங்களை நாம் அமைத்தாலும், அவற்றைப் பேணிப் பாதுகாத்து நம் வருங்கால சந்ததி யினர் பயனுறச் செய்தலுமே மிகப்பெரிய புண்தை காரியமாகும்.

லிங்கபூஜையில் எண்ணிக்கையின் பயன்

ஸ்ரீமத் காரணாகமம், ஒருலிங்கம் முதலாக ஒன்பதுலிங்கம் வரையிலாக தினமும் ஏற்று பூஜித்தலுக்கான பயனைக் கூறுகிறது. அதாவது, ஒருலிங்கம் மோக்ஷத்தைத் தருவதாகும். இரண்டு லிங்கம் நோயை அளிக்கும் எனவே விலக்கத்தக்கது. மூன்று லிங்கபூஜை யானது, போகம் மோக்ஷம் இருவகைப்பயனையும் தரவல்லது. நான்கு லிங்கம் எங்கு பூஜிக்கப்படுகிறதோ அங்கு செல்வமும் புகழும் குறையும், எனவே இதனைத்தவிர்க்கவும். ஐந்துலிங்கங்களைப் பூஜித்தல் ஐந்துவகையான பஞ்சமாபாதக தோஷங்களையும்அழித்து, அருளக்கூடியது, எனவே ஏற்றது. ஆறுலிங்கத்தை பூஜிப்பது மரணத்தைச் செய்வித்திடும், தவிர்த்திடுக. ஏழுலிங்கங்களை பூஜித்தல் எதிர்ப்பைப்போக்கி நலம்பயக்கும். எட்டுலிங்கத்தை பூஜித்தல் பெரும்வியாதியையும் எதிரிகளையும் பெருக்கிடும், எனவே இதுதவிர்க்க வேண்டியது. தினமும் ஒன்பது லிங்கங்களை பூஜித்துவருபவர் சிவலோகத்தில் மகிழ்ந்து விளங்குவார். என்று காரணாகமம் ஒற்றைப் படையாகவைத்து லிங்கத்தைப் பூஜித்தலை விதித்துள்ளது.

சிவபூஜா பலவிதி

சிவார்ச்சனை செய்வதால் ஏற்படும் பயனை ஆகமங்கள் விரிவாகக் கூறியுள்ளன. சுப்ரபேதாகமம் கூறுவதாவது, எல்லா பாவத்தையும் போக்குவதும், எல்லாவகை உலகசுகமளிப்பதும், எல்லா தானங்களின் பயனையளிப்பதும், எல்லா வேள்விப்பயனை அளிப்பதும், பிரம்மஹத்தி முதலான மகாபாதக தோஷங்களை நீக்குவதும், அச்வமேதயாகப் பயனைத் தரவல்லதும், வெற்றியளிப்பதும், செல்வளிப்பதும் எதிரிகளைஅழிப்பதும், தேசத்தை வளர்த்திடச் செய்வதும், சிவபூஜையே. இதற்கு ஈடான புண்யசெயல் இல்லை. எனவே சிவலிங்கத்தில் யாவராலும் ஸதாசிவர் பூஜிக்கதக்கவர்.

அதாதஸ் ஸம் ப்ரவக்ஷ்யாமி சிவார்ச்சன விதி க்ரமம் |
ஸர்வ பாப ஹரம் சைவ ஸர்வ லோக சுகாவஹம் |
ஸர்வதான பலம் சைவ ஸர்வயக்ஞ பலப்ரதம் |
ஜயதம் ஸ்ரீகரம் ராஷ்டர வர்தனம் ரிபு நாசனம்
சிவபூஜா ஸமம் புண்யம் ந பூதம் ந பஷ்யதி || (சுப்ரபேதாகமம்)

சிவபூஜா ஆதாரங்கள்



சிவனை பூஜைசெய்வதற்கு பலவகையான ஆதாரங்களைத் (வடிவங்களை) திருமேனியாகக் கொள்ளலாம் என ஆகமங்கள் தெரிவிக்கின்றன. பூஜாதாரம் பலவாயிருப்பினும், சிவபூஜையை விசேஷமாக சிவலிங்கத்திலேயே செய்யவேண்டும் என்கிறது ஆகமம். காலோத்தராகமத்தில் பூஜாதாரங்கள் தொகுத்துக் கூறப்படுகின்றன. அவை, வியக்த லிங்கம் (பிரதிமை), அவ்யத்த லிங்கம், சிவவிங்கம், உருவமும் அருவமும் கலந்த உபயாத்மக மான முகலிங்கம், சுயம்புலிங்கம், முதலான திவ்யலிங்கவகைகள், பாணலிங்கம், மானுஷலிங்கம், ஸ்திரலிங்கம், சலலிங்கம், மண்டலம், ஸ்தண்டிலம் (தானியபரப்பு), படம், பித்திசித்ரம் (சுவர்சிற்பம்). பீடம் (பலி பீடம். மண்வேதீ, குருமூர்த்தி, ஸ்வமூர்த்தி (தனக்குள்) முதியோர்,



இருப்பினும் அதனை முயற்சியால் ஒரே இடத்தில் தொடர்ந்து கடைந்தே அக்னியை உண்டாக்க முடியும். அதுபோலவே ஸர்வவியாபியான பரப்பிரும்மத்தை ஆலயமாகியபசுவின் கர்ப்ப கிரகமான மடியிலிருந்து விக்ரகமாகிய காம்பின் மூலமே, பாலாகிய தெய்வீகசக்தியை அருளைப் பெறமுடியும் என்பது அறநூல்களின் முடிவாகும். இவ்வாறு ஆகமவிதிகளின்படி ஆலயங்களை நாம் அமைத்தாலும், அவற்றைப் பேணிப் பாதுகாத்து நம் வருங்கால சந்ததி யினர் பயனுறச் செய்தலுமே மிகப்பெரிய புண்தை காரியமாகும்.

லிங்கபூஜையில் எண்ணிக்கையின் பயன்

ஸ்ரீமத் காரணாகமம், ஒருலிங்கப் முதலாக ஒன்பதுலிங்கம் வரையிலாக தினமும் ஏற்று பூஜித்தலுக்கான பயனைக் கூறுகிறது. அதாவது, ஒருலிங்கம் மோக்ஷத்தைத் தருவதாகும். இரண்டு லிங்கம் நோயை அளிக்கும் எனவே விலக்கத்தக்கது. மூன்று லிங்கபூஜை யானது, போகம் மோக்ஷம் இருவகைப்பயனையும் தரவல்லது. நான்கு லிங்கம் எங்கு பூஜிக்கப்படுகிறதோ அங்கு செல்வமும் புகழும் குறையும், எனவே இதனைத்தவிர்க்கவும். ஐந்துலிங்கங்களைப் பூஜித்தல் ஐந்துவகையான பஞ்சமாபாதக தோஷங்களையும்அழித்து, அருளக்கூடியது, எனவே ஏற்றது. ஆறுலிங்கத்தை பூஜிப்பது மரணத்தைச் செய்வித்திடும், தவிர்த்திடுக. ஏழுலிங்கங்களை பூஜித்தல் எதிர்ப்பைப்போக்கி நலம்பயக்கும். எட்டுலிங்கத்தை பூஜித்தல் பெரும்வியாதியையும் எதிரிகளையும் பெருக்கிடும், எனவே இதுதவிர்க்க வேண்டியது. தினமும் ஒன்பது லிங்கங்களை பூஜித்துவருபவர் சிவலோகத்தில் மகிழ்ந்து விளங்குவார். என்று காரணாகமம் ஒற்றைப் படையாகவைத்து லிங்கத்தைப் பூஜித்தலை விதித்துள்ளது.

சிவபூஜா பலவிதி

சிவார்ச்சனை செய்வதால் ஏற்படும் பயனை ஆகமங்கள் விரிவாகக் கூறியுள்ளன. சுப்ரபேதாகமம் கூறுவதாவது, எல்லா பாவத்தையும் போக்குவதும், எல்லாவகை உலகசுகமளிப்பதும், எல்லா தானங்களின் பயனையளிப்பதும், எல்லா வேள்விப்பயனை அளிப்பதும், பிரம்மஹத்தி முதலான மகாபாதக தோஷங்களை நீக்குவதும், அச்வமேதயாகப் பயனைத் தரவல்லதும், வெற்றியளிப்பதும், செல்மளிப்பதும் எதிரிகளைஅழிப்பதும், தேசத்தை வளர்த்திடச் செய்வதும், சிவபூஜையே. இதற்கு ஈடான புண்யசெயல் இல்லை. எனவே சிவலிங்கத்தில் யாவராலும் ஸதாசிவர் பூஜிக்கதக்கவர்.

அதாதஸ் ஸம் ப்ரவக்ஷ்யாமி சிவார்ச்சன விதி க்ரமம் |
ஸர்வ பாப ஹரம் சைவ ஸர்வ லோக சுகாவஹம் |
ஸர்வதான பலம் சைவ ஸர்வயக்ஞ பலப்ரதம் |
ஜயதம் ஸ்ரீகரம் ராஷ்டர வர்தனம் ரிபு நாசனம்
சிவபூஜா ஸமம் புண்யம் ந பூதம் ந பஷ்யதி || (சுப்ரபேதாகமம்)

சிவபூஜா ஆதாரங்கள்



சிவனை பூஜைசெய்வதற்கு பலவகையான ஆதாரங்களைத் (வடிவங்களை) திருமேனியாகக் கொள்ளலாம் என ஆகமங்கள் தெரிவிக்கின்றன. பூஜாதாரம் பலவாயிருப்பினும், சிவபூஜையை விசேஷமாக சிவலிங்கத்திலேயே செய்யவேண்டும் என்கிறது ஆகமம். காலோத்தராகமத்தில் பூஜாதாரங்கள் தொகுத்துக் கூறப்படுகின்றன. அவை, வியக்த லிங்கம் (பிரதிமை), அவ்யத்த லிங்கம், சிவலிங்கம், உருவமும் அருவமும் கலந்த உபயாத்மக மான முகலிங்கம், சுயம்புலிங்கம், முதலான திவ்யலிங்கவகைகள், பாணலிங்கம், மானுஷலிங்கம், ஸ்திரலிங்கம், சலலிங்கம், மண்டலம், ஸ்தண்டிலம் (தானியபரப்பு), படம், பித்திசித்ரம் (சுவர்சிற்பம்). பீடம் (பலி பீடம். மண்வேதீ, குருமூர்த்தி, ஸ்வமூர்த்தி (தனக்குள்) முதியோர்,

வித்யாபீடம், தண்ணீர், நெருப்பு (அக்னி), ஸ்தண்டிலம் (தானியபரப்பு), கும்பம் (கலசம்), சூரியபிம்பம், கண்ணாடியில் பிரதிபிம்பம், சந்திர பிம்பம், பதினாறு க்ஷணிகலிங்கவகைகள், பசுஞ்சாணத்தால்மெழுகி, மாக்கோலமிட்ட மண்மேடை (மஹீ), கத்தி, திரிசூலம், கண்ணாடி, அலங்கரித்த பூஜாமண்டலங்கள், 100சததர்ப்பகூர்ச்சம்(100), யந்திரம், சிவமேரு, ருத்ராக்ஷம், ருதிரமந்திரசக்ரம், பத்மபீடம், சிவபாதுகை, முதலானவை, சிவனைப்பூஜிக்கத்தக்க ஆதாரமாகும் லக்ஷ்யமூர்த்தங்கள் என்கிறது. இதற்கான சான்று இதுவே.

லிங்கம் த்ரிவிதம் ஆக்யாதம் வ்யக்தாவ்யக்தோபயாத்மகம் |
ஸ்வயம்பு பாண தைவா ர்ஷ மாண வாத்யம் அனேகதா |
ஸ்திர லிங்கம் சலம்வாத மண்டலம் ஸ்தண்டிலம் ததா |
படம் வா பித்திசித்ரம் வா பீடம் வா மந்த்ர ஸம்ஸ்கிருதம் |
ஆவாஹ்ய குரு விருத்தாத்யான் வித்யாபீட மதாபி வா |
விசேஷதஸ் சுவயம் ஸித்தம் சூர்யமண்டல மேவ வா |
அன்யத் வா லிங்க கல்போக்தம் ஸைகதாத்யம் விசேஷத:|
ஏதத்ஸர்வம் சிவேஜ்யார்த்தம் யதாயோகம் ப்ரகல்பயேத்| (காலோத்தராகமம்)

இவ்வாறு பூஜாதாரங்கள் பலவாயினும் சிவலிங்கமே பூஜை செய்திட சிறந்த மூர்த்தமாகக் கொள்ளவேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இக்கருத்தைத் தெரிவிக்கும் ஆகமச்சான்று இதுவே,

யத்யப்பஸ்தி ஸதேசஸ்ய பூஜாதாரம் அனேகதா |
ததா(அ)பி லிங்கே நித்யார்ச்சா ஸம்பூர்ண பலதாயிகா || (காலோத்தராகமம்)

இவ்வாகமவாக்கின்படி லிங்கத்தில் செய்யப்படும் சிவபூஜையே முழுமையான பயனை அளிப்பதாகும் என்பதை அறியலாம்.

கபாலீச்வரர் – கற்பகாம்பாள்

சைவாகமங்கள் கூறும் மண்டலவகைகள்

1. அனந்தவிஜய மண்டலம்	29. ஈசானதிலக மண்டலம்.
2. ஸர்வதோபத்ர மண்டலம்.	30. சுவாயம்புவகிரீச மண்டலம்.
3. கௌரீலதாலிங்க மண்டலம்.	31. பிரம்மகாந்தமண்டலம்.
4. ஸ்வஸ்திகமண்டலம்.	32. சக்ராப்ஜ மண்டலம்.
5. நவநாபமண்டலம்.	33. நந்தியாவர்த்த மண்டலம்.
6. லதாலிங்கோத்பவ மண்டலம்	34. ஸ்வஸ்திகானல மண்டலம்.
7. சுபத்ர மண்டலம்.	35. வர்த்துள மண்டலம்.
8. டங்க மண்டலம்.	36. புராகார மண்டலம்.
9. பத்ம மண்டலம்.	37. ஸர்வபத்ர மண்டலம்.
10. உமாகாந்த மண்டலம்.	38. லிங்காப்ஜ மண்டலம்.
11. லிங்காப்ஜஸ்வஸ்திக மண்டலம்.	39. ஈசதல மண்டலம்.
12. கௌரீதிலக மண்டலம்.	40. பிரணவ மண்டலம்.
13. பத்மபத்ர மண்டலம்.	41. நவகண்ட மண்டலம்.
14. மஞ்சுள பத்ம மண்டலம்.	42. அப்ஜாஷ்டலிங்க மண்டலம்.
15. ஸர்வதத்வாத்மக மண்டலம்.	43. ஷோடசலிங்க மண்டலம்.
16. கைலாசகாந்த மண்டலம்.	44. துவாதசலிங்க மண்டலம்.
17. லதாலிங்கோத்பவ மண்டலம்.	45. பரசிவ மண்டலம்.
18. லக்ஷ்மீதிலக மண்டலம்.	46. அஷ்டலிங்கதோபதிர மண்டலம்.
19. சிருங்காரதிலக மண்டலம்	47. சதுர்லிங்கதோ பத்ரமண்டலம்.
20. ரவிகாந்த மண்டலம்.	48. ஏகலிங்கதோபத்ர மண்டலம்.
21. ஸோமகாந்த மண்டலம்.	49. சதுர்லிங்கஸ்வஸ்திக மண்டலம்.
22. கற்பூரதிலக மண்டலம்.	50. பஞ்சாப்ஜ மண்டலம்.
23. ஸ்வஸ்திகாப்ஜ மண்டலம்.	51. நவசுவஸ்தித மண்டலம்.
24. பத்ரமண்டலம்.	52. பஞ்சசுவஸ்திக பத்ரம்.
25. பார்வதி காந்த மண்டலம்.	53. ப்ரணவ மண்டலம்
26. பத்மஸ்வஸ்திக மண்டலம்.	54. வாஸ்து மண்டலம்
27. ருத்ரகாந்த மண்டலம்	55. நவபத மண்டலம்
28. ஸ்ரீநிவாஸ மண்டலம்.	56. பரமேச மண்டலம்

வித்யாபீடம், தண்ணீர், நெருப்பு (அக்னி), ஸ்தண்டிலம் (தானியபரப்பு), கும்பம் (கலசம்), சூரியபிம்பம், கண்ணாடியில் பிரதிபிம்பம், சந்திர பிம்பம், பதினாறு க்ஷணிகலிங்கவகைகள், பசுஞ்சாணத்தால்மெழுகி, மாக்கோலமிட்ட மண்மேடை (மஹீ), கத்தி, திரிசூலம், கண்ணாடி, அலங்கரித்த பூஜாமண்டலங்கள், 100சததர்ப்பகூர்ச்சம்(100), யந்திரம், சிவமேரு, ருத்ராக்ஷம், ருதிரமந்திரசக்ரம், பத்மபீடம், சிவபாதுகை, முதலானவை, சிவனைப்பூஜிக்கத்தக்க ஆதாரமாகும் லக்ஷ்யமூர்த்தங்கள் என்கிறது. இதற்கான சான்று இதுவே.

லிங்கம் த்ரிவிதம் ஆக்யாதம் வ்யக்தாவ்யக்தோபயாத்மகம் |
ஸ்வயம்பு பாண தைவா ர்ஷ மாண வாத்யம் அனேகதா |
ஸ்திர லிங்கம் சலம்வாத மண்டலம் ஸ்தண்டிலம் ததா |
படம் வா பித்திசித்ரம் வா பீடம் வா மந்த்ர ஸம்ஸ்கிருதம் |
ஆவாஹ்ய குரு விருத்தாத்யான் வித்யாபீட மதாபி வா |
விசேஷதஸ் சுவயம் ஸித்தம் சூர்யமண்டல மேவ வா |
அன்யத் வா லிங்க கல்போக்தம் சைகதாத்யம் விசேஷத:|
ஏதத்ஸர்வம் சிவேஜ்யார்த்தம் யதாயோகம் ப்ரகல்பயேத்| (காலோத்தராகமம்)

இவ்வாறு பூஜாதாரங்கள் பலவாயினும் சிவலிங்கமே பூஜை செய்திட சிறந்த மூர்த்தமாகக் கொள்ளவேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இக்கருத்தைத் தெரிவிக்கும் ஆகமச்சான்று இதுவே,

யத்யப்பஸ்தி ஸதேசஸ்ய பூஜாதாரம் அனேகதா |
ததா(அ)பி லிங்கே நித்யார்ச்சா ஸம்பூர்ண பலதாயிகா || (காலோத்தராகமம்)

இவ்வாகமவாக்கின்படி லிங்கத்தில் செய்யப்படும் சிவபூஜையே முழுமையான பயனை அளிப்பதாகும் என்பதை அறியலாம்.

கபாலீச்வரர் – கற்பகாம்பாள்

சைவாகமங்கள் கூறும் மண்டலவகைகள்

1. அனந்தவிஜய மண்டலம்	29. ஈசானதிலக மண்டலம்.
2. ஸர்வதோபத்ர மண்டலம்.	30. சுவாயம்புவகிரீச மண்டலம்.
3. கௌரீலதாலிங்க மண்டலம்.	31. பிரம்மகாந்தமண்டலம்.
4. ஸ்வஸ்திகமண்டலம்.	32. சக்ராப்ஜ மண்டலம்.
5. நவநாபமண்டலம்.	33. நந்தியாவர்த்த மண்டலம்.
6. லதாலிங்கோத்பவ மண்டலம்	34. ஸ்வஸ்திகானல மண்டலம்.
7. சுபத்ர மண்டலம்.	35. வர்த்துள மண்டலம்.
8. டங்க மண்டலம்.	36. புராகார மண்டலம்.
9. பத்ம மண்டலம்.	37. ஸர்வபத்ர மண்டலம்.
10. உமாகாந்த மண்டலம்.	38. லிங்காப்ஜ மண்டலம்.
11. லிங்காப்ஜஸ்வஸ்திக மண்டலம்.	39. ஈசதல மண்டலம்.
12. கௌரீதிலக மண்டலம்.	40. பிரணவ மண்டலம்.
13. பத்மபத்ர மண்டலம்.	41. நவகண்ட மண்டலம்.
14. மஞ்சுள பத்ம மண்டலம்.	42. அப்ஜாஷ்டலிங்க மண்டலம்.
15. ஸர்வதத்வாத்மக மண்டலம்.	43. ஷோடசலிங்க மண்டலம்.
16. கைலாசகாந்த மண்டலம்.	44. துவாதசலிங்க மண்டலம்.
17. லதாலிங்கோத்பவ மண்டலம்.	45. பரசிவ மண்டலம்.
18. லக்ஷ்மீதிலக மண்டலம்.	46. அஷ்டலிங்கதோபதிர மண்டலம்.
19. சிருங்காரதிலக மண்டலம்	47. சதுர்லிங்கதோ பத்ரமண்டலம்.
20. ரவிகாந்த மண்டலம்.	48. ஏகலிங்கதோபத்ர மண்டலம்.
21. ஸோமகாந்த மண்டலம்.	49. சதுர்லிங்கஸ்வஸ்திக மண்டலம்.
22. கற்பூரதிலக மண்டலம்.	50. பஞ்சாப்ஜ மண்டலம்.
23. ஸ்வஸ்திகாப்ஜ மண்டலம்.	51. நவசுவஸ்தித மண்டலம்.
24. பத்ரமண்டலம்.	52. பஞ்சசுவஸ்திக பத்ரம்.
25. பார்வதி காந்த மண்டலம்.	53. ப்ரணவ மண்டலம்
26. பத்மஸ்வஸ்திக மண்டலம்.	54. வாஸ்து மண்டலம்
27. ருத்ரகாந்த மண்டலம்	55. நவபத மண்டலம்
28. ஸ்ரீநிவாஸ மண்டலம்.	56. பரமேச மண்டலம்

பன்னிருமாஸ பௌர்ணமி பூஜை மண்டலங்கள்

1. சித்திரை – ஸ்ரீகாந்த மண்டலம். (அம்சுமதாகமம்)
2. வைகாசி – ஸ்ரீநிவாஸ் மண்டலம். (அம்சுமதாகமம்)
3. ஆனி – பத்மபத்ர மண்டலம். (அம்சுமதாகமம்)
4. ஆடி – மஞ்சுள மண்டலம். (அம்சுமதாகமம்)
5. ஆவணி – திலக மண்டலம். (அம்சுமதாகமம்)
6. புரட்டாசி – பிரஹ்மகாந்த மண்டலம். (அம்சுமதாகமம்)
7. ஐப்பசி – ருத்ரகாந்த மண்டலம். (அம்சுமதாகமம்)
8. கார்த்திகை – ஈசானம் / ஈசதவமண்டலம். (அம்சுமதாகமம்)
9. மார்கழி – ஸ்வஸ்திக மண்டலம். (அம்சுமதாகமம்)
10. தை – ஸர்வதோபத்ர மண்டலம். (அம்சுமதாகமம்)
11. மாசி – நந்தியாவர்த்த மண்டலம். (அம்சுமதாகமம்)
12. பங்குனி – சுபதிர மண்டலம் (அம்சுமதாகமம்)

ஷட்ருது (ஆறு பருவகால) பூஜாமண்டலங்கள்

மண்டலம் வேதிகோர்த்வே து வஸந்தாதிச ஷட்ருது|
வஸந்தே ஸ்வஸ்திகாப்ஜம்ச கீரீஷ்மே து ஸர்வபத்ரகம் |
ப்ராவ்ருட்ச பத்ர மாக்யாதம் லிங்காபம் ஸ்வஸ்திகம் ததா||
சரத்யேவது ஹேமந்தே பார்வதீகாந்த மண்டலம்|
பத்மஸ்வஸ்திக மாக்யாதம் சிசிரே து விசேஷத: ||

1. வஸந்தருது (சித்திரை & வைகாசி–2லும்) ஸ்வஸ்திக மண்டலம்.
2. கிரீஷ்மருது (ஆனி & ஆடி–2லும்) ஸர்வதோபதிர மண்டலம்.
3. வர்ஷருது (ஆவனி & புரட்டாசி–2–லும்) பத்ர மண்டலம்.
4. சரத்ருது (ஐப்பசி & கார்த்திகை–2லும்) லிங்காப்ஜ ஸ்வஸ்திகம்.
5. ஹேமந்தருது (மார்கழி & தை–2–லும்) பார்வதீகாந்த மண்டலம்.
6. சிசிரருது (மாசி&பங்குனி–2–லும்) பத்மஸ்வஸ்திக மண்டலம்.

பன்னிரண்டு மண்டலவகைகள் (சூக்ஷ்மாகமத்தில்)

ஸ்வஸ்திகம் ஸர்வதோபத்ரம் நந்தியாவர்த்தம் சுபத்ரகம் |
ஸ்ரீகாந்தம் ஸ்ரீநிவாஸம்ச பத்மபத்ரம் ச வர்த்துளம் |
திலகம் பிரம்மகாந்தம் ச ருத்ர மீசதலம் புதி: ||

மண்டலபூஜையின் சிறப்புப் பயன்கள்

ஸர்வ பாபஹரம் சைவ ஸர்வசாந்திகரம் சுபம் |
ஸர்வ சத்ரு க்ஷயகரம் ஸர்வ யக்கு பலப்ரதம்||
ஸர்வ வியாதி ப்ரசமனம் ஸர்வ தீ கீர்த்தி வர்தனம் |
ஆயுஸ் ஸ்ரீ கீர்த்தி விஜயம் மண்டலார்ச்சனதோ பவேத் ||



கௌரீதிலக மண்டலம்
(18கோடுகள்)



தாந்த்ரீக ஸர்வதோபத்ர
மண்டலம் (13கோடுகள்)

சதுர்லிங்க பத்ரமண்டலம்
(18கோடுகள்)



ஸர்வதோபத்ர மண்டலம்
(23கோடுகள்)

அஷ்டலிங்கதோ பத்ரமண்டலம்
(24கோடுகள்)



துவாதசலிங்க பத்ரமண்டலம்
(34கோடுகள்)

மண்டலத்தில் சிவலிங்க வழிபாடு

மாதாந்திர பிரதோஷம், சதுர்தசிதிதியாகிய, 12மாசசிவராத்திரிகள், ஆதிரைதிருநக்ஷத்திரங்கள், சோமவாரம் முதலிய சிவவிரதகாலங்களில் பஞ்சவர்ணப்பொடிகளால் மண்டல கோலம் அமைத்து பூசித்துப்பயன்பெறலாம்.

கௌரீதிலக மண்டலம்

ஏகலிங்க சிவவ்ரதகால மஹாருத்ரர் பூஜாமண்டலம்



1. 28கட்டத்தில் மஹாலிங்கம் கருப்புநிறம் மேற்கில் (லிங்கபக்கத்திலும் தலையிலும் அஷ்டபுஷ்பம் (8பதம் மஞ்சள்பூ).
2. 12கட்டத்தில் 3திசைகளின் பத்ரம் சிகப்புநிறம்.
3. 6கட்டத்தில் பத்ரத்திற்கு இருபக்கமும் முல்லைக்கொடிகள் 2வீதம் நீலம். (3பதம், 3பதம், 1பதம்பூ)
4. 3கட்டத்தில் 4மூலையிலும் சக்திஆயுதம்.
5. 3கட்டத்தில் 4மூலையிலும் சிருங்கலைகள் – வெள்ளைநிறம்.

கௌரீதிலக மண்டல அமைப்புவிதி

திர்யக் ஊர்த்வகதா: ரேகா: கார்யா: ஸ்நிக்தாஸ்த்ரயோதச |
கோணேந்து ஸ்த்ரிபத: கார்ய: ச்ருங்கலாஸ்த்ரிபதா: ஸிதா: ||
வல்லீ சஷட்பதா நீலா பத்ரம் ரக்தம் ப்ரகல்பயேத் |
பதைர் த்வாதசபி: ஸ்பஷ்டம் உத்தரே பூர்வ தக்ஷிணே ||
பச்சிமாயாம் மஹாருத்ரம் அஷ்டாவிம்சதி கோஷ்டகை: |
லிங்கபார்ச்வே ததா மூர்த்நி அஷ்டௌ கோஷ்டா: சுபீதகா: ||
லிங்க மேகம் ததா கௌர்யஸ் திஸ்ரஸ்சாத்ர து மண்டலே |
பூஜயேன் மண்டலம் சைவ தஸ்ய கௌரீ ப்ரஸீததி ||

ஏகலிங்க பத்ரமண்டலம்



வாருண பூஜா மண்டலம் (9கோடுகள்)

கௌரீலதாலிங்க பூஜாமண்டலம்
(சதுர்லிங்கபத்ம சிவபஞ்சபிரஹ்ம பூஜாமண்டலம்)



(மண்டலஅமைப்புவிதி 17கோடுகள் 16 X 16 = 256 பதம்)

சூத்ரைஸ் ஸப்ததசாத்மகை ருபயதோ கௌரீலதா மாஹ்வயம் –
மத்யே வேதபதைர் விதிஷு கபதைர் பூதாம்புஜாதி ந்யஸேத்|
லிங்கம் பட்டஸரோஜ கண்ட கமலம் பட்டம் க்ரமாத் திக்பதைர் –
வர்ஷாபூரிவிஷைச்ச கோணகலிதைர் பூதைப் பதைஸ் ஸ்யுர் லதா:||

(சித்தாந்தசாராவளி சுலோகம்-88)

சதுர்லிங்கதோபத்ரம் (18கோடுகள்)



சதுர்லிங்கதோபத்ரம் (17கோடுகள்)

உமாகாந்த மண்டலம். (33கோடு)



த்வாத்ரிம்சத் பத பாஜிதே து நளிநம் மத்யே சதுஷஷ்டிபி: |
தத்பாஹ்யே த்ரிபதைஸ்ச பீடமத தத்ரைகேந வீதீ ஹரித் |
திக்ஷு த்வார மிருஷித்வயை ருபயதோ வாசாவரைர் வர்ஷயுக் |
லிங்கம் பாஹ்யபதேந வீதி ரிதரத் சித்ரம் ஹியுமாகாந்தகம் ||

(சித்தாந்தசாராவளி சுலோகம்-90)

உமாகாந்த மண்டலத்தின் வடிவமைப்புமுறை.

1. மூன்றுமுழஅளவில் சமசதுர ஸ்தண்டிலத்தில் இடத்தில் 33கோடுகள் இடவும்.
2. முப்பத்திஇரண்டு கட்டங்களால் 32 X 32 ஆக 1024 பதங்களாகப் பகுத்திடுக.
3. இதன் நடுவில் உள்ள 8 X 8 = 64கட்டங்களில் முறையே மலர்ந்த பத்மத்தைசெய்க.
4. இக்கமலத்தின்வெளியே சுற்றிலும் மூன்றுபதங்களால் பீடத்தை செய்திடுக.
5. இந்த பீடத்தில் 4திசையிலும் வெள்ளை கரும்பு சிகப்பு வெள்ளை யில் படிஉருவில் காத்ரங்களைசெய்க.
6. இந்த பீடத்தின்வெளியே ஒருபதத்தால் சுற்றிலும் பச்சை நிறத்தில் வீதியை செய்க.
7. கிழக்கு முதலான நான்கு திசையிலும் 2பதஅகலம், 7பதஉயரம் உடையதான 14பதத்தில் 4வாயில்கள்.
8. இந்த வாயிலின் இருபக்கங்களிலும் 7பதஉயரத்தில் எட்டு லிங்கம் செய்க.
9. லிங்ககல்பனம் இருபதங்களின் அகலஉயரத்தில் 4பதம் பாணம் +அதன்கீழ் ஆறுபதத்தில் கோமுகை + அதன் கீழ்மேல் பட்டிகை 4பதம் + கீழே கண்டம் 2பதம் + கீழ்பட்டி 4பதம் + பீடம் 6பதம் என்பதாகச்செய்க.

10. லிங்கத்திற்கு வெளியே ஒருபத அளவில் சுற்றிலும் திருவீதியை (திருச்சுற்றை) அமைத்திடுக.
11. இதில் மற்றவையாவும் ஐந்துநிறப்பொடிகளை முறையே நிறப்பி அழகுற அமைத்தல்முறை.

உமாகாந்தமண்டலம்
(24கோடுகள்)

உமாகாந்தமண்டலம்
(31கோடுகள்)

ப^{4}த்ரமண்டலம் (ஷட்ஸஹஸ்ராகமம்)

9கோடுகள் (8 x 8 = 64பதம்)



பஞ்சவர்ண ரஜோவிந்யாஸ சிவபூஜாமண்டலம்

அஷ்டதா விபஜேத் க்ஷேத்ரம் மத்யே பத்மம் சதுஷ்பதம் |
தத்பாஹ்யே வீதிகா கார்யா பதைகேந ஸமந்தத: |
பத்மமாநம் சதுர்துவாரம் த்விபதேந கபோலகம் |
கோணபந்தம் ததச்சிஷ்டோ ப^{4}த்ர மேதத் உதீரிதம் || (ஷட்ஸஹஸ்ரே)

சிவபுராகாரமண்டலம் (கிரணாகமம்)

(25கோடு - 576பதம்)

சதுஷ் ஷடஷ்ட ஹஸ்தம் வா ஷோடசாஷ்டக மேவ வா |
க்ஷிப்த்வா பாகத்ரயம் பாகம் ஏகைகம் சாஷ்டதா புன: |
சதுர்பி: கமலம் பாகை: வீதிகா தத்ஸமா பவேத் |
வீத்யர்த்தேந ச யத்கார்யம் தேவதா (ஆ)வரணம் பஹி: |
த்வராணி பத்ம மாநாநி ததம்சேநைவ வர்த்தயேத் |
ஏகபாகஸமம் கர்ணம் கபோலம் வர்த்தயேத் தத: ||
உபகண்டம் ததா வர்த்ய சேஷா சோபேதி கீயதே |
ஏவம் ஸ்யாத் தீவாரவிந்யாஸ: பத்மே பூர்வாஸ்ததேச்வரா: |
தீக்ஷ்ணாக்ரோத்பல ஸம்ஸ்தாநா: பூஜ்யா: ப்ரமதநாயகா: |
லோகேசா: ஸ்வஸ்திகே பூஜ்யா: சதுர்பாக விவர்ஜிதே |
பாஹ்யதோ (அ)ஸ்த்ரகணம் தத்யாத் லக்ஷணேந சுவர்த்தநம் ||

புராகார மண்டல கல்பனகிரமம்

1. நான்கு முழஅளவில் சமசதுர க்ஷேத்திரத்தை 25கோடிட்டுப் பகுக்கவும்.
2. இருபத்திநான்காக பகுத்திட்டதில் 24X24ல்576கட்டத்தில் நடுவே பிரம்ம பதம்16ஆகும்.
3. மையப்ரம்மபதமான பதினாறில் எட்டு இதழுள்ள தாமரைமலரை மலர்ந்ததாக அமைக்கவும்.

4. இதன்வெளியே இருசுற்றுக்களால் சுற்றிலும் 4திசையில் 4பதத்தால் 4காத்ரங்களை (படிகளை) அமைத்திடுக.

5. மீதமுள்ள இருசுற்றுபதங்களை திருவீதிகளாக சுற்றிலும் பங்க்தியை அமைத்திடுக.

6. இதன்வெளியே ஒரு சுற்றுபதம் 8திசையிலும் தாமரைப் பூவுடன் விதியே அஷ்டவித்யேசர்கள் சுற்று.

7. இதன்வெளியே ஒருசுற்றில் 8திசையிலும் 8நீலோத்பலபூவுடன் சிவகணேச்வரர்களின் எண்மரின் சுற்று.

8. இதன்வெளியே ஒருசுற்றில் 8தசையிலும் 10சுவஸ்திகங்களுடன் தசலோகேசர்களின் சுற்று.

9. இதன்வெளியே ஒரு சுற்றில் 10இடத்தில் பத்துஆயுதங்களுடன் தசாயுதங்களின் சுற்று.

10. வாயில்கள் நான்கு திசையின் 4பதஅளவின் இருபக்கமுமாக பத்மசமமாய் 16பதத்தால் நான்கு வாயில்கள் ஆகும் 2பதஅகலம்.

11. சமசதுரமான நான்கு கட்டங்களில் தாமரை, உத்பலம், சுவஸ்திகம் ஆயுதம் இவைகளை நான்கு சுற்றுகளாய் அமைக்கவும்.

12. வாயில் நான்கின் இருபக்கமும் ஒருகட்டஅளவில் வாயிலின் வெளிஉறுப்பு கண்ட உபகண்ட பகுதிகள்.

13. மீதமுள்ளவை 4முலைகளின் இருபக்கப் பதங்களாக ஆகும்.

14. மையகர்ணிகை மஞ்சள்நிறம் மற்றும் 8இதழ்களும் வெள்ளைநிறம், தாமரைப்பூ.

15. பத்மகேஸரம் என்கிற கிஞ்ஜல்கம் முனை நடுஅடிப்பகுதிகளில் முறையே வெள்ளை – சிகப்பு – பொன்நிறமுள்ளவை 64 ஆகும்.

16. தாமரைமலரிதழ்களின் இடைப்பட்டப்(பின்புறம்)பகுதி பச்சைநிற முள்ளதாம்.

17. அக்னிமூலை முதலான நான்கு கோணங்களில் 4பதங்கள் முறையே வெள்ளை, சிகப்பு, மஞ்சள், கருப்புநிறம் உள்ளவை.

18. நான்கு திசைகளில் 4கட்டத்தில் உள்ள 4காத்ரங்களும் பலநிறங்களுடையதாம்.

19. வீதிகள் யாவும் வெள்ளை நிறத்திலேயே விளங்குவனவாகும்.

20. வெளிசுற்றில் இருக்கிற எட்டு தாமரைகளும் வெள்ளை நிறமானவையே ஆகும்.

21. இதன் வெளிசுற்றிலமைந்த உத்பலம் குவலயப்பூ கருங்குவளைப்பூ வெண்மைநிறம்.

22. இதன் வெளிசுற்றிலுள்ள சுவஸ்திகங்கள் பத்தும் சிகப்புநிறத் திலிருப்பவை.

23. இதன் வெளியிலுள்ள 10ஆயுதங்களும் தங்கநிறத்தில் ஒளிர்பவை ஆகும்.

24. இதில் கிழக்கு முதலான 4வாயிலும் 4பிரம்ம நிறத்துடன் தத்புருஷாதி நிறமாகும். (கிழக்கே மஞ்சள் – தெற்கே கருப்பு – மேற்கே வெள்ளை – வடக்கே சிகப்பு)

ஸர்வதோபத்ர மண்டலம் (17கோடுகள்)

ஸர்வதோபத்ர மண்டல லக்ஷணம்

சதுஷ் ஷஷ்டி பதைர் மத்யே பத்மம் வீதீ சதுர்தச |
லிங்கம் பீடம் சதுர்திக்ஷு ஸ்வஸ்திகம் பதபஞ்சகை: |
கோணேஷ்வேக பதம் குர்யாத் ஸர்வதோ பத்ரகம் பவேத் | (சாரதாதிலகே)

ஒன்பது கோடிட்டு 8 X 8 = 64 பதங்களாக்கி, அதன் நடுவில் நாலுபதத்தில் பத்மம் பதினான்கு பதத்தில் வீதி நான்கு திசைகளிலும் லிங்கம் மற்றும் பீடமும் மூலைகளில்4ல் ஐந்துபதங்களால் சுவஸ்திகமும் கோணத்தில் ஒருபதமும் செய்வது ஸர்வதோபத்ர மண்டலம் எனப்படுவதாகும்.



கமல மண்டலம் (13கோடுகள்)



நவாப்ஜ மண்டலம் (9கோடுகள்)



நவ ஸ்வஸ்திகாப்ஜ மண்டலம்
(9கோடுகள்)



ஸ்வஸ்திகாப்ஜ மண்டலம்
(9கோடுகள்)

ஸ்வல்ப ஸர்வதோபத்ர மண்டலம்

சதுரஸ்ராம் புவம் பித்வா திக்ப்யோ த்வாதசதா சுதீ: |
பாதயேத் தத்ர சூத்ராணி கோஷ்டாநாம் த்ருச்யதே சதம் |
சதுஸ்சத்வாரிம்சதாட்யம் பச்சாத் ஷட்திரிம்சதம்புஜம் |
கோஷ்டை: ப்ரகல்பயேத் பீடம் பங்க்த்யா நைவாத்ர வீதிகா: |
த்வாரசோபா யதாபூர்வம் உபசோபா ந த்ருச்யதே |
அவசிஷ்டைப் பதை: குர்யாத் ஷட்பிக் கோணாநி தந்த்ரவித் |
விதத்யாத் பூர்வவத்சேஷம் ஏவம் வா மண்டலே ஸ்மிருதம் ||

(சாரதாதிலகே)

13கோடு இதில் 144 கட்டத்தில் நடுவே 36 கட்டங்களில் மஹாபத்மம் அமைத்து, ஒருசுற்று பங்க்தி, வாயில்கள், கோஷ்டங்கள் பீடங்கள் உண்டு. இதில் வீதி கிடையாது உபசோபா கிடையாது, 6 கட்டத்தால் நான்கு கோணங்கள் வெளியில் ஸீமாரேகை எல்லைக்கோடு மூன்று நிறத்தில் சிறிய ஸர்வதோபத்ர மண்டல அமைப்பு முறையாகும்.

நவநாபமண்டலம் (9கோடு 8 x 8 = 64 கோட்டம்)

நடுவில் 4 கட்டத்தில் பத்மம் எட்டுதிசையிலும் 4கட்டத்தில் 8பத்மம்.

மூலையில் உள்ள 4 கட்டங்களை 16 ஆகப்பகுத்து சுவஸ்திகமாக த்துடைத்து வடகிழக்கு முதலான 4 மூலைகளில் முறையே வெள்ளை (தெ.கி.), மஞ்சள் (தெ.மே.), சிகப்பு (வ.மே.), பச்சை நிறத்தில் சுவஸ்திகங்கள் 4, 4திசையில் 4பத்மம், 4மூலையில் 4 ஸ்வதிகம் ஆக அமைத்தல் நவநாப மண்டலம் எனப்படுவதாகும்.



பஞ்சாப்ஜ மண்டலம் (9கோடுகள்)



ஆனந்தவிஜய மண்டலம் (9கோடுகள்)
(சுவாயம்புவாகமம்)

பஞ்சாப்ஜ மண்டலம் (ஜந்துகமல மண்டலம்)

இதிலேயே 64 கட்டத்திலே நடுவே 4 கட்டத்தில் மைய பத்மமும், 4திசைகளிலும் 4 கட்டத்தில் 4 பத்மமும் உள்ளது பஞ்சாப்ஜ மண்டலம் ஆகும். மூலையில் இருந்த 4சுவஸ்திகம் நீங்கியதாகும். இதற்கானசான்று,

நவநாப மிதம் ப்ரோக்தம் மண்டலம் ஸர்ஸித்திதம் |
பஞ்சாப்ஜ மண்டலம் ப்ரோக்தம் ஏதத் ஸ்வஸ்திகவர்ஜிதம் ||

மண்டலப் பயன்பாடும் பயனும்

தீக்ஷாயாம் தேவ பூஜாயாம் மண்டலாநாம் சதுஷ்டயம் |
ஸர்வதந்த்ரா (அ)நுஸாரேண ப்ரோக்தம் ஸர்வஸம்ருத்திதம் ||



நவநாப மண்டலம்
(9கோடுகள்)



ஸர்வதோபத்ர மண்டலம்
(9கோடுகள்)

ஸ்வஸ்திக மண்டலம்
(வ்ரதகாலதேவதா பூஜாமண்டலம்) (17கோடுகள்)



சமசதுரத்தில் சுவஸ்திக மண்டல வடிவமைப்புமுறை.

ஸ்யாத் ஸ்வஸ்திகம் சேஷ்டிபதேஷு சைசாத் –
கோணாத் ஸமாரப்ய பத த்ரயேஷு |
மத்யஸ்த கோஷ்டாந்த பதேந வேத –
கோஷ்டான் விலோப்யா (அ)ன்ய பதாநி சைவம் ||

(சித்தாந்தசராவளி–91)

செய்முறை

1. உரியஇடத்தில் கிழக்குவடக்கு முனைகளில் 17கோடுகள் இடவும்.
2. வடகிழக்கு மூலையில் மூன்றுபத அகலஅளவில் துவங்கி தென்முகப்பதத்திலும்
3. இதன் நடுவில் நான்கு பத அளவில் இணைப்புள்ளதாக அமைத்தவும்.
4. நடுவே உள்ள நான்கு பதங்களுடன் சேர்த்து இணைத்து பூசிடவும்.
5. அக்னிமுலையிலுள்ள மூன்றுபதங்களை இணைத்துப் பூசிடவும்.
6. நிருருதிமூலையிலுள்ள முன்று பதங்களை வடக்கு முதமாய் இணைத்துப்பூசவும்.
7. வாயுமுலைபதம் மூன்றையும் நடுவரை கிழக்கு முகமாய்பூசி நடுவில் இணைக்கவும்.
8. இவ்விதமாக நான்கு மூலைகளிலும் முனையுடையதாய் மூன்றுகட்ட அகலத்தில் நடுவிலும் அதே அளவில் கிழக்கு வடக்கு கோடுகளுடன் இணைவதால் மங்களவடிவங்களில் தென்றாய் சிறந்ததான ஸ்வஸ்திக வடிவம் ஏற்படும். இதில் விநாயகர், சிவன், லக்ஷ்மி, சண்டிகேசர் இவர்களை வழிபடலாம்.



ஸ்வஸ்திக மண்டலம்
(6 கோடுகள்)



சிவஸ்வஸ்திக மண்டலம்
(5 கோடுகள்)



ஸ்ரீநிவாச மண்டலம்
(35கோடுகள்)



நந்தியாவர்த்த மண்டலம்
(23கோடுகள்)



பத்மபத்ர மண்டலம்
(29கோடுகள்)



பரமண்டலம் (எ) சிவமண்டலம்
(23கோடுகள்)

துவாதசலிங்கதோ பத்ரமண்டலம்.

(வ்ரதஸ்ய பலப்ராப்தயே சிவார்சன மண்டலம்)



(கல்பனக்ரமம் & வர்ணக்ரமம்)

சதுஸ்த்ரிம்சத் ஸமாரேகா: குர்யாத் பூர்வோத்தரா: சுபா: |
மத்யே வ்ருத்தம் ஸமாலேக்யம் தன்மத்யே து தசாரகம் |
பஹிரஷ்டதளம் பத்மம் தத: ஷோடச பத்ரகம் |
சதுர்விம்சதி பத்ராட்யம் த்வாத்ரிம்சத் பத்ரகம் ததா |
சத்வாரிம்சத் பத்ரகம் து வ்ருத்தம் சூர்ய ஸமப்ரபம் |
கண்டேந்து ஸ்த்ரிபதை: கோணே ச்ருங்கலா தசகோஷ்டிகா |
ஏகவிம்சத்பதா வல்லீ பத்ரம் து ஷட்பதைஸ் ததா |
அஷ்டாதசபதம் லிங்கம் பத்ரம் சா(அ)ஷ்டபதம் ததா |
த்ரயோதசபதீம் வாபீம் குர்யால் விங்கஸ்ய ஸந்நிதௌ |
பூஜ்யோபரியபி பத்ராணி பவந்தி நவபி: பதை: |
ஏவம் துவாதச லிங்காட்யம் வாபீஷோடசகான் விதம் |
ஷட் பதாஷ்டக பத்ராட்யம் பூஜ்யம் த்வாதசகாத்மகம் |
மத்யே விம்சதி பத்ரம் து கதிதம் பூர்வஸூரிபி: |



துவாதசலிங்கதோ
ப4த்ரமண்டலம்.
(40 கோடுகள்)

(வர்ணக்ரமம்)

வர்ணக்ரமம் அதோ வக்ஷ்யே மண்டலஸ்ய ச ஸித்தயே |
க்ருஷ்டதண்டுல பிஷ்டேந க்ருஷ்ண வர்ணேந நிர்மிதம் |
லிங்கஜாதம் ஸிதேந்து ஸ்யாத் வல்லீ பில்வதள ப்ரபா |
சிருங்கலா க்ருஷ்ணவர்ணா ச பீதம் பத்ரத்வயம் பவேத் |
ஸிதா வாப்யஸ் ததா பூஜ்யா மத்யபத்ரே த்வயம் க்ரம: |
பூஜ்யோபர்யருணே பத்ரே ஸிதே த்வே மத்யமம் ஸிதம் |
ஸத்வம் ரஜஸ் தமஸ் சைவ பாஹ்யதப் பரிதி த்ரயம் |
ஏவம் சுசோபிதம் கார்யம் மண்டலம் சிவபூஜனே |

துவாதசலிங்க மண்டலவிதி

ஏதன் மண்டலராஜம் து லிங்கைர் த்வாதசபிஸ் ஸ்மிருதம் |
சிவவ்ரதே ப்ரயத்நேந குர்யா தேதத் த்விஜோத்தம: ||

துவாதசலிங்கதோப4த்ரமண்டலம் அமைப்புமுறை.

(34கோடுகள்)

1வது : பத்ரமண்டல மையஒருபதம் – 1வட்டம் – பத்மகர்ணிகை–1.
2வது : மையத்தின்வெளியே முதல்சுற்று 8பதம் – 8இதழ்கள்
3வது : 2ம் சுற்று – 16கட்டத்தில் – பத்மதளம்–16. பூவிதழ்கள்
4வது : 3ம் சுற்று – 24கட்டத்தில் – பத்மதளம்–24. பூவிதழ்கள்
5வது : 4ம் சுற்று – 32 கட்டத்தில் – தளம்–32. பூவிதழ்கள்
6வது : 5ம் சுற்று – 40கட்டத்தில் – பரிதி. (சுற்றுப்பதம்)
7வது : 6ம் சுற்று – வெளிவட்டம் – வீதி. (சஞ்சாரபதம்)

8வது : 40கட்டமுள்ளதில் – 4மூலையில் 1ஐ விட்டும், 4திசையிலும் 1ஐ விட்டும். 32கட்டம் பத்ரம் கருப்பு. மூலையில் 1–கருப்பு சிருங்கலா 2–கருப்பு, 3–வெள்ளை. 1–3–5–ல் ஒன்று நடுவில் கீழே 3கட்டம், கீழே 5கட்டம் பத்ரம் 4திசை4ல்.

9வது : கண்டேந்து – 4 மூலைகளிலும், 3 கட்டங்களால் பிறைமதி அமைப்பு.

10வது : சிருங்கலைகள் – 4 மூலைகளிலும் சக்திவேல் வடிவ சங்கிலி அமைப்பு.

11வது : வல்லீ பூங்கொடி அமைப்பு 21பதங்களால் சக்தி சிருங்கலைக்கு இரண்டு பக்கங்களிலுமுள்ள 10+10 கட்டம் உச்சியில் 1ஆக 21 பதம்–4.

12வது : லிங்கபாணத்தில் இருபக்கம் மேலே 4+2=6பதத்தால் பத்ரங்கள் 1–3–5–கட்டங்களால் 3அடுக்கு பத்ரங்கள்.

13வது : லிங்கங்கள் திசைக்கு 3விதம் 12லிங்கம் மேலிருந்து 1+5+3+1+3+5=18ல், 18கட்டங்களால் 6அடுக்கில் பாணம், கோமுகை, மேல்தளம், கண்டம், கீழ்தளம், பீடம் இவற்றுடன் உள்ளவை.

14வது : லிங்கங்களின் நடுவே இடைவெளியில் நாற்புறவாபீகுளம் 13பதத்தால். 1+3+5+3+1 = 13பதத்தால் சதுரக்குள அமைப்புகள் 16வாபிகள்.

15. அந்த வாபிபக்கத்தில் 4மூலையில் 2வீதம் பத்ரங்கள் 5+3+1=9பதத்தால் அமைக்கவும்.

16. வெளியே 4மூலைகளிலும் வெள்ளைநிற 3பதத்தால் கண்டேந்து பிறைமதியை அமைக்கவும்.

வண்ணமிடும்முறை

1. பன்னிரண்டு லிங்கங்கள் – கருப்புநிறம்.
2. இந்துகண்டம் (பிறைநிலா) – வெள்ளைநிறம்.
3. வல்லீ பூங்கொடிகள் – முல்லைக்கொடிமுனை மலருடன் – பச்சை நிறம்.
4. சிருங்கலா – (சங்கிலிகாப்பு) 4 முலையில் வெளிசுற்றைவிட்டு உள்ளே 10பதம். சக்திஆயுத உருவில் கருப்புநிறம்.
5. பத்ரஅமைப்புகள்மேலிருந்து 1 + 3 + 5. மஞ்சள் நிறம் உள்ளவை – உள்நோக்கு உடையவை)
6. 16வாபிகள் (குளங்கள்) – 13பதங்களில் – வெள்ளை நிறத்தில் உள்ள நீர்நிலை16.
7. லிங்கத்தின்மேலே பத்ரம் சிகப்புநிறத்தில் 5 + 3 + 1–ல் பத்ரங்கள்.
8. வெளியே முக்குண நிறத்தில் பரிதிகள் 3சுற்றுகள். உள்ள–வெள்ளை, நடுவே–சிகப்பு, வெளியே–கருப்புநிறம்.

உரியவண்ணப் பொடிகளால் ஐந்துநிறங்களால் அழகுற அமைத்தல்முறை.

மண்டலபூஜையில் 108தெய்வங்களின் இடமும் பெயரும்.

மண்டலத்தின் வெளியே வடகிழக்குமூலையில் – குருமூர்த்தி
மண்டலத்தின் வெளியே தென்கிழக்குமுலையில் – கணபதி
மண்டலத்தின் வெளியே தென்மேற்குமுலையில் – துர்கை
மண்டலத்தின் வெளியே வடமேற்குமூலையில் – க்ஷேத்ரபாலர்.
மண்டலத்தின் நடுபத்ரத்தின் மத்தியில் – ஸதாசிவன்.
கர்ணிகையின் அருகில் உள்ள 4 வெண்ணிற பத்ரங்களில் –
தத்புருஷம் – அகோரம் – வாமதேவம் – ஸத்யோஜாதம்.
அதனருகில் உள்ள 8கருப்புநிற பத்ரங்களில் – 8–கௌரீசக்திகள்,
அதன்கீழ்உள்ள 8சிகப்பு பத்ரங்களில் – 8–நந்தினீமுதலானோர்–8.
லிங்கத்தின்மேலுள்ள 4வெள்ளைபத்ரங்களில் – தாதா முதலானோர்–4.
அதனருகிலுள்ள லிங்கத்தின்மேலே உள்ள 8மஞ்சள்நிற
பத்ரங்களில் – வருணசூர்யாதிகள்–8.
12லிங்கங்களில் – கிழக்குமுதலாக சிவன்முதலாக
பன்னிரண்டு மகேசமூர்த்திகள்.
பிறகு வெள்ளைநிற 16வாபிகளின் பூஜ்யதேவதைகள்16 – அவைகள்
அணிமாதிகள்–8ம் – மாத்ருக்கள்சண்டியுடன்–8ம் ஆக16.
பிறகு வாபிகளின் அருகிலுள்ள 8சிகப்புநிற பத்ரங்களில் –
ஐசான்யாதியாக அசிதாங்காதி எட்டுபைரவர்கள்8.
பிறகு 8வல்லிகளில் கொடிகளில் தேவதைகள் –
த்ருதாமுதலிய 8அப்ஸரஸ்திரீகள்.
நடுவில் மண்டலமத்தியில் பரிதிஸமீபத்திய சிருங்கலைகளில் –
தென்கிழக்குமூலையில் ஆக்னேயாதியான 10ல் – 10பவாதிகள்.
தென்மேற்கு மூலையில் நைருதி முதலான 10ல் – 10தக்ஷகாதிகள்.
வடமேற்கு வாயவ்யமூலை முதலான 10ல் – 10பரதாதிகள்
வடகிழக்கு ஐசான்யமூலை முதலான 10ல் – ஹேமகூடாதி மலைகள்–10.
பிறகு 4திசைகளில்உள்ள, பாதிமதி எனும் கண்டேந்து என்பவை
நான்கில் அசுவிநிதேவாதிகள்–4.
பிறகுவெளியில் உள்ள வெள்ளைநிறமான சாத்விகபரிதியில் –
இந்திராதி அனந்தர் வரையிலான லோகேசர்கள்–10.
பிறகுவெளியில் நடுவேஉள்ள சிகப்புநிற ராஜஸபரிதியில் –
வஜ்ராதிஆயுதங்கள்–10.
பிறகு வெளியில் உள்ள கருப்புநிற தாமஸபரிதியில் –
காச்யபர் முதலான பத்துரிஷிகள்.
பிறகு வெளியில் நான்கு திசையில் நான்கு வேதமூர்த்திகள்–4.
இவ்வாறாக **துவாதசலிங்க பத்ரமண்டலத்தில் 108 தெய்வங்களை** முறையே பூஜித்து, விரதகாலத்தில் வழிபட்டு விரும்பும்பயனை, பெறலாம்.

அண்டமும் பிண்டமும் அருட்சிவலிங்கமே

உலகெலாமுணர்ந்து ஒதற்கரியவன் இறைவன் சிவன். அவனுள்ளே உலகமனைத்தும் அவ்வுலகில் வாழும் உடலுடன் கூடிய உயிர்களும் ஒடுங்கிஉள்ளன. எனவே சிவன் விச்வநாதர் விஸ்வரூபி, அண்டநாயகன், ஜகதீசன், லோகேச்வரன் என்று பலவாறாக போற்றப்படுகிறார். அண்டத்துள்ளே பிண்டங்களான மனிதகுலம் முதலான உடல்வகைகளும், உள்ளன என்பதை, அண்டமுள்ளே சிறு பிண்டமும் அதனுள் இறையண்டமும், எந்நாளிலுமுண்டு என்றனர் ஆன்றோர். இதனையே அதர்வணவேதம், உபநிஷதம், ப்ரம்மாண்டம் சைவ பிண்டாண்டம் லோகாபூராதயக்கிரமாத் என்கிறது. கீழிருந்துமேலுலகம்வரை ஆபாதாளநபஸ்தலாந்தம் என்பதாக ஈரேழு பதினான்கு உலகங்கள் என்றும் அவையாவும் சிவலிங்கத்துள்ளே உள்ளன. அதாவது, 1. அகப்பாதம் = அதலலோகம், 2. புறப்பாதம் = விதலலோகம், 3. பரடு = நிதலலோகம், 4. கணைக்கால் = சுதலலோகம், 5. முழங்கால் = மஹாதலம். 6. தொடை = இரஸாதலம், 7. இடை = தலாதலம், 8. நாபி (தொப்புள்) = பூலோகம் (இந்தமண்ணுலகம்), 9. வயிறு = புவர்லோகம், 10. இருதயம் = சுவர்லோகம், 11. தோள் = மஹர்லோகம், 12. கண்டம் (குழுத்து) = ஜனோலோகம், 13. பிந்து/புருவநடு (ப்ரூமத்யம்) = தபோலோகம், 14. சிரசு/தலை = ஸத்யலோகம் என இடம்பெற்று உள்ளதை அறநூல்கள் விளக்கியுள்ளன. எனவேதான் திருநாவுக்கரசர் திருவான்மியூரில் –

விண்டமாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டநாயகன் கழலடிதொழுமினே

என்று தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். ஞானசம்பந்தப்பெருமானும் இறைவனின் சூக்ஷ்மஸ்தூலநிலைகளை

நுண்ணியான் மிகப்பெரியான் கணபதிச்சரத்தானே

என்று குறிப்பிட்டுள்ளார்.

அவனை யொழிய வமரரு மில்லை
அவனன்றிச் செய்யு மருந்தவ மில்லை
அவனன்றி மூவரா லாவதொன் றில்லை
அவனன்றி யூர்புகு மாறறி யேனே. (திருமந்திரம்)

என்று கூறி, திருமூலநாயனாரும் சிவனை முன்னிட்டுச் செய்யப் படாத வைதிககன்மம் செயலெதுவும் பயன்படாது என்பதை உறுதியடத் தெரிவித்துள்ளதாலும் உணரலாம். இதற்கு புராணத்தில் தக்ஷயக்ஞநாசம் பெருஞ்சான்றாகும். ஆதலால் யாவரும் நித்தமும் சிவபூஜையைச் சிவலிங்கத்திலேயே செய்து பூர்ணபயனெய்த வேண்டும்.

சிவலிங்க வழிபாட்டின் அவசியம்

உயிர்களுக்கு உற்ற நண்பனாக விளங்குகின்ற பரமஆப்தரான சிவனால் கூறப்பட்டமையால் சிவாகமக் கூற்றுகள், ஒப்பற்றதாய் விளங்கும் உயர்ந்த தர்மமாகும். சிவனை வழிபடுவதால் உயிர்களுக்கு பாசநீக்கமும், கட்டுண்ட பந்தநிலைகளிலிருந்து நிரந்தர விடுதலையும், ஜீவனுக்கு சிவத்தன்மையின் வெளிப்பாடும், மோக்ஷஸாதனமான சிவஞானமும் ஏற்படும் என்பது திண்ணம். எனவேதான் சிறப்பாக பிரம்மா விஷ்ணு முதலானோரும் கைகூப்பி முதலில் சிவலிங்கபூஜையை செய்தபிறகே, தமது செயல்களைச் செய்தனர். அதனால் நாமும் முடிந்த வரையில் பெருமுயற்சியினால் சிவலிங்கபூஜையை விடாமல் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும் என்று சிவதருமநூல்கள் நமக்கு ஆணையிடுகின்றன. **ஸத்மநிர்மாணம் கர்த்தவ்யம் ஸர்வப்பிராணி ஹிதாய வை.** என்ற ஆகமகூற்றுப்படி உயிர்களின் நன்மைக்காக ஆலயத்தை அமைத்து, அதில் தினமும் சிவனை பூசிக்கவேண்டும். ஆலயபூசையைத் தவறாமல் சைவாகமமுறையிலேயே செய்யவேண்டும். ஏனெனில்? **"சிவதர்மாத் பரோ தர்மோ ந பூதோ ந பவிஷ்யதி"** (சுப்ரபேதாகமம்) என்றவசனத்தால் சிவதர்மத்தைத்தவிர வேறு ஒருஅறம் மூவுலகிலும் ஒருபோதும் இல்லை என்றறிக. மற்றைய பசுதர்மங்களில் சுவர்கமே பயனாகும், அது நிலையற்றது. சிவசாஸ்த்திர நெறியிலான வழிபாடுஒன்றே **போகம், மோக்ஷம்** ஆகிய இரண்டையும் தரவல்லது. ஆதலால் அனைத்து சாஸ்த்திரவழிகளையும் கைவிட்டு, சைவாகமநெறியில் மட்டுமே லிங்கத்தைப் பூசித்து, புண்ணியத்தை அடைந்து, எண்ணுவதைப் பெறவேண்டும் என்று சுப்ரபேதாகமம் நல்வழியைக் கூறியுள்ளது. உலக வாழ்க்கையானது தாமரை

இலைமீதான தண்ணீர் துளிப்போல் காற்றில் அசைந்தபடி இருக்கும் நிலையற்றது. ஓ இந்திரனே! அதுபோல் உலகில் உயிர்களின் வாழ்க்கை, யௌவனம், பொருள், மனைவி, பெற்றமக்கள், நண்பர்கள் செல்வங்கள் யாவுமே நிலையற்றவை. ஆகையினால் இத்தகைய பாசமயக்கங்களைத் தருகிற மோஹஜாலங்களைத் தவிர்த்து சிவலிங்கத்தை பூசைக்காக) தம் உயிரினும் மேலானதாக, என்றும் எண்ணி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மோஹசூரோத்தரம் எனும் ஆகமத்தில் (தேவேந்திரனுக்கு உபதேசிக்கும் வகையில்) கூறப்பட்டுள்ளது. மேலும் விஷ்ணுவுக்கு உபதேசிக்கும் வகையில், சிவலிங்கபூஜையே இந்திரபோகபதவி முதலியவைகளைத் தரும்,என்றும் லிங்கத்தில் பூசிக்கப்பட்ட தேவதேவேசர் பக்தியையும் ஞானத்தையும் தருகிறார் என்றும், சிவஞானம், பக்தியோகம் இவை இல்லாமல், மற்றைய கோடிக்கணக்கான எந்தவகையான கர்மாக்களாலும் பரமுக்தியை அடையமுடியாது என்றும் எனவே சிவலிங்கபூசையே மிகச்சிறந்தது என்றும், மூவுலகிலுமே சிவலிங்கார்ச்சனைக்கு நிகாரானது எதுவும்இல்லை என்றும், அஜிதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. **"லிங்கார்ச்சன ஸமோ நாஸ்தி தர்மோத்ர புவனத்ரயே".** (அஜிதாகமம்) எனவே மனிதகுலம் மேன்மைபெறவும் சிவசாயுஜ்யமெனும் வீடுபேறுபெறவும் குரு லிங்க ஜங்கம வழிபாட்டினைச் செய்யவேண்டும் என்கிறது ஆகமம். லிங்கத்தை பூசிக்கும் அர்ச்சகர் நடமாடக்கோயில் நம்பர் என்கிறது திருமந்திரம். மாஹேச்வரர் என்றால் மகேச்வரனின் சம்பந்தமுடையவர் என்பதுபொருள். ஆதலால் அர்ச்சகரை மகிழ்விப்பது ஆண்டவனை மகிழ்வித்தாகிறது. இக்கருத்தை தெரிவிக்கும் திருமந்திரம்.

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே. (திருமந்திரம்)

ஆலயவழிபாட்டில் ஸ்தாவரலிங்கமான மூலஸ்தான சிவலிங்கத் தையும், அதை அர்ச்சனை புரிந்து நாம் பிறவிப்பனெய்த தெய்வ ஸாந்நித்யத்தை நிலைபெறச்செய்து, அருந்தொண்டாற்றிவரும் ஜங்கம லிங்கமான அர்ச்சகரையும், இகழாது ஏத்தி இன்புற்றுவாழவேண்டும்.

ஸ்வயம்பூர் தைவிகம் சார்ஷம் ஆசுரம் காணவம் ததா |
மானுஷம் பௌதிகம் சைவ ஸப்ததா லிங்கம் உச்யதே ||

என்றகாரணாகம வாக்கின்படி ஆலயத்திலுள்ள சுயம்புமுதலான ஏழுவகையான லிங்கங்களுக்கும் தனித்தனியே, நான்கு சிவாகமங்கள் வீதமாக 28 மூலமான ஆகமங்களை ஏழுபிரிவில் பகுத்து சுப்ரபேதாகமம் கூறுகிறது. அதை ஏற்று சிவவாக்கிய பரிபாலனம்செய்து பயனுற வேண்டும். அனைவரும் சைவசமய தீக்ஷையைப் பெற்று பூசித்திடுவதற்காக குருவின் கைகளிலிருந்து ஒரு சிவலிங்கவகையைப் பெற்றுக்கொண்டு, அதிலேயே விட்டில் தினமும் தவறாமல், உள்ளும், புறமும் தூய்மையுடன், கூறப்பட்ட லிங்கதத்துவ பாவனைகளுடன் முறைப்படி மனம்மொழிமெய்யாலே பூஜித்து, இம்மையிலும் மறுமையிலும், எண்ணியபயன்களைப் பெற்று இன்புறவோமாக.

சிவ வழிபாட்டுத்தத்துவம் (ஆலயவழிபாட்டுப்பெருமை)

சர்வக்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசக்தி, அநந்தசக்தி, சுதந்திரத்வம் என்னும் ஆறுகுணங்களை உடையவராய், அஷ்டமூர்த்தியாய் விளங்கும் சிவபெருமான், எங்கும் வியாபகமாக இருப்பினும், சிவலிங்கம் முதலிய திருமேனியும் குருவும் சங்கமும், இடமாகிக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவார். சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய்போல் விளங்கி நிற்பார். மற்றவிடங்களில் பாலில் நெய்போல் வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே ஆன்மாக்கள் யாவரும் பரம்பதியான சிவபெருமானை குரு, லிங்கம், சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபடவேண்டும்.

இவ்வழியாடு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாலும் செயற்பாலதேயாகும். மலம் நீங்கிய சிவஞானிகளும், முன்பிருந்த பூர்வமலவாசனை தாக்காமையின் பொருட்டும், மேன்மேலும் சிவானந்தம் வளருதற்பொருட்டும், சிவலிங்கம் முதலிய திருமேனிகளை வழிபடுவர். ஆன்மாக்களை முக்தியாகிய கரையில் ஏற்றும் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவமாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார். இவற்றை முறையாக வழிபடுவோர் பரமாசாரியரால் உண்மைஞானம்பெற்று முக்தியடைவர் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

மூர்த்தி தலம் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலசற்குருவும் வாய்க்கும் பராபரமே. (தாயுமானசுவாமிகள்)

விபூதி இல்லாத நெற்றி வீண் சிவாலயமில்லாத ஊர் பாழ், ஈஸ்வர பூஜைசெய்யாத பிறப்பு (ஜன்மா) பாழ், சிவனைக்கூறாத வித்தை (கல்வி) பாழ் என்று ஸ்மிருதிசங்கிரஹம் என்னும் நூல் கூறுகிறது. பிறவிகளுள் சிறந்த மானுடஜன்மத்தை முற்பிறப்பில் செய்த புண்ணிய மேலீட்டினால் அடைந்தயாவரும் பசுபதியாகவும், உலகிற்குக் கர்த்தாவாயுமுள்ள சிவபெருமானைப் பூஜிக்கவேண்டும். அந்த சிவபூஜையானது ஆன்மார்த்தபூஜை என்றும் பரார்த்தபூஜை என்றும் இருவகைப்படும்.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ணலார் தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து. (பெரியபுராணம்)

இருபத்தெட்டு ஆகமங்களையும், இருநூற்றிருபத்துநான்கு உபாகமங்களையும் தோற்றுவித்த பரம கருணாநிதியாகிய இறைவன் விரும்புவது சிவாகமத்தினால் செய்யப்படும் பூஜை என்பதை உணர்த்த உமாதேவியார்,

இங்கு நாத! நீமொழிந்த வாகமத்தியல்
பினாலுணையர்ச்சணை புரியப்
பொங்குகின்ற தென்னாசை யென்றிறைஞ்சிப்
போகமார்த்த பூண்முலையாள் போற்றி"

என்ற பெரியபுராணச் சேக்கிழார் கூற்றின்படி ஆலயவழிபாட்டின் பெருமையும், ஆகமங்களால் அருச்சிப்பதால் இறைவனுக்கு ஏற்படும் அளவுகடந்த அன்பையும், அவ்வன்பினால் ஆன்மாக்களுக்குக் கிடைக்கும் அறம், பொருள், இன்பத்துடன் பேரின்பத்தையும் உலகமக்களுக்கு உணர்த்தவே திருவுளங்கொண்ட உமாதேவியர்,



காஞ்சீபுரம், திருவானைக்கா, மயிலாடுதுறை(மாயூரம்), மயிலாப்பூர் (சென்னை) முதலிய இடங்களில் சிவபெருமானை பூஜித்தாள் என்று அறியப்படுகிறது. இவ்வாறே பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலான தேவர்களும், முனிவர்களும் யாவரும் சிவனை வழிபட்டே விரும்பியபயனைப் பெற்றதாகவும் புராணங்களால் அறியப்படுகிறது. சிவபூசை செய்பவன் விசாலமான ராஜ்யத்தையும், அக்னிகாரியத்தினால் ஸம்பத்தையும், ஜபத்தினால் பாவநீக்கத்தையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகிறான் என்கிறது ஆகமம்.

பூஜயா விபுலம் ராஜ்யம், அக்னிகார்யேந ஸம்பதம் |
ஜபேந பாப ஸம்சுத்திம், ஞானம் தியானேந சாச்னுதே |
கிந்த்வா தேஹாவஸாநந்து, யப் பூஜயதி பக்தித: |
ஸ சிவஸ் ஸர்வகிருத் யஜ்வா ஜீவன்முக்தஸ் ஸ உச்யதே|| (விமலாகமம்)



எவர் ஒருவர் தேஹம் இருக்கும் வரை சிவபூஜையைச் செய்து வருகிறாரோ, அவரே சிவன், அவரே எல்லாம் செய்பவர். அவரே யாகம் செய்பவர், அவரே ஜீவன் முக்தர் என சொல்லப் படுகிறது. புண்ணியம் செய்வார்க்குப் பூவூண்டு நீருண்டு என்பதாலும், போதொடு நீர்கமந் தேத்திப் புகுவாரவர் பின் புகுவேன் என்ப தாலும் புஷ்பமானது பூஜையில் முக்கிய இடத்தை பெறுகிறது.

நாவுக்கரசர் பெருமான் தமது தேவாரப்பாடலில்,

கைகாள் கூப்பித் தொழீர் – கடி
மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பரம்பரை யார்த்த, பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

ஆக்கையாற் பயனென் – அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றியென்னாதஇவ்
ஆக்கையாற் பயனென்.?

என்பதனால், நமது கைகள் மலர்தூவியும், இறைவனைத் தொழுதும் பயன் பெறவேண்டுமெனக் கூறுகிறார். பூசையில் மலர்களை, 1. மந்திராஷ்டபுஷ்பம், 2. புஷ்பாஷ்டபுஷ்பம், 3. பாவநாஷ்டபுஷ்பம் என மூன்று வகைகளாக ஆகமம் சொல்லும் ஆகமஆலய வழிபாட்டின் பயன்கூறும் தேவாரம்

அச்சம்மிலர் பாவம்மிலர் கேடும்மில ரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிட றுடையார்நறுங் கொன்றைநயந் தாளும்
பச்சம்முடை யடிகள்திருப் பாதம்பணி வாரே. –(ஞானசம்பந்தர்)

இவ்விதம் முறையுடன் செய்யப்படும் சிவபூசையானது வேண்டிய எப்பயனையும் அளிக்கக்கூடியது ஆகும். சிவநெறிதழைத்தோங்க வேண்டும் என்பது அருளாளர்களின் அருள்வாக்காகும்.

இவ்வாறு பாரததேசத்தில், பல்லாயிரம் ஆண்டுகளாக போற்றிப் பாதுகாத்தும் வழிபட்டும் வருகின்ற சிவாலயம் மற்றும் சிவலிங்கம், இவ்விரண்டினுடைய, அமைப்புமுறைகள், இந்த வடிவமைப்பின் தத்துவப்பொருள்கள், ஆகியன சைவாகமநூல்களின் சான்றுகளின்படி இதுவரை விளக்கப்பட்டன. இத்தகைய ஆலயங்களையும் அரியபல சிவலிங்கங்க வகைகளையும், குறைவு ஏற்படாதவண்ணம் எப்போதும் பாதுகாப்பதும், போற்றி வழிபட்டுப் பயனடைவதும், ஒவ்வொரு இந்தியருக்குமான சமயக் கடமை யாகும். இவ்விதமாக சிவாலய சிவலிங்கத்தின் வழிபாட்டுப் பெருமை களை சைவாகமங்களால் அறிந்து, உரிய ஆலய, சிவலிங்க பாவனைகளுடன் பூசித்து, யாவரும் பயனுறவேண்டும்.

பூஜாயந்திரம்

யச் சிவோ நாம ரூபாப்யாம் யா தேவீ ஸர்வ மங்களா |
தயோஸ் ஸம் ஸ்மரணாத் பும்ஸாம் ஸர்வதோ ஜய மங்களம்||

ஹர ஹர நமப் பார்வதீபதயே ஹர ஹர மஹாதேவ |
ஓம் நமச்சிவாப்யாம். ஓம் தத் ப்ரம்மார்ப்பணம் அஸ்து.

மழை வழங்குக மன்ன னோங்குக
பிழையில் பல்வன மெங்கும் பெருகுக
தழைக வஞ்செழுத்தோசை தரையெலாம்
பழைய வைதீக சைவம் பரக்கவே.

"மேன்மைகொள் சைவநீதி
விளக்குக உலகமெல்லாம்."
வாழியசெந்தமிழ் வாழிய பாரதம்.

தென்னாடுடைய சிவனே போற்றி !
என்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !

திருச்சிற்றம்பலம்
சுபம்.



வாழ்த்து

நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்க இருக்கலாஞ்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. (அப்பர்)

வாழ்கவே வாழ்க! என்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க! மல மறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க! மெய்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க! மலமிலாதான் பாதமே. (குருமூர்த்தி)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

வான்முகில் வழாது பெய்க மவளம் சுறக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க. நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம். (தெய்வச்சேக்கிழார்)

ஆறிரு தடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன்அணங்கு வாழ்க மாறிலா
வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம். (கச்சியப்ப சிவாசார்யர்)



மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.
(கோயிற்புராணம்)

வைய நீடுக மாமழை மன்னுக.
மெய் விரும்பிய அன்பர் விளங்குக.
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக.
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.



வாழ்க சைவம்! திருச்சிற்றம்பலம் ! வாழ்கசீரடியாரெல்லாம்!

ஓம் நமச்சிவாப்யாம்.

ஸ்ரீ ஸதாசிவ ஸ்தவ தசகம். (ரௌரவாகமம்)

ஸுராதிபம் நமஸ் க்ருத்ய சசாங்க க்ருத சேகரம்.
கபால மாலிநம் தேவம் ப்ரணதோ (அ)ஸ்மி ஸதாசிவம். 1

காலேச்வரம் மஹாகாலம் காலஞ்ஜர நிவாஸிநம்.
காலக்ருத் காலதாதாரம் ப்ரணதோ (அ)ஸ்மி ஸதாசிவம். 2

ஸர்வக்ருத் ஸர்வவேத்தாரம் ஸர்வக்ஞம் அபராஜிதம்.
ஸர்வபூதாத்ம பூதஸ்தம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 3

யோ (அ)ஸ்ருஜத் ஸர்வபூதாநி ப்ரம்மாத்யான்ச சுராசுரான்.
தமஹம் லோககர்த்தாரம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 4

வரம் வரேண்யம் வரதம் வரிஷ்டம் வர வாஹனம்.
வனமாலா தரம் தேவம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 5

ப்ரீதிமத் ப்ரீதி தாதாரம் ஸுப்ரியம் ப்ரிய தர்சனம்.
உமாப்ரியம் ஸதா காந்தம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 6

தர்மா தர்ம மயம் தேவம் சுக துக்க பலோதயம்.
பந்த மோக்ஷ ப்ரணேதாரம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 7

மனோ புத்தி ரஹங்கார தன்மாத் ரேந்த்ரிய கோசரம்.
ப்ரதான புருஷேசானம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 8

யம் த்யாயந்தி மஹாத்மானோ முநயஸ் ஸம்சித வ்ரதா:
தம் ஓங்காரபரம் சூக்ஷ்மம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 9

சூக்ஷ்மம் ஸர்வகதம் நித்யம் ஸர்வவித்யேச் வரேச்வரம்.
ஸர்வ தத்வாச்ரயம் தேவம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 10

ஓம் நமோ பகவதே பரமஹம்ஸாய பரமகுரவே ஸதாசிவாய நம:

நமச் சிவாப்யாம் நவ யௌவநாப்யாம்
பரஸ்பரா ச்லிஷ்ட வபுர் தராப்யாம்
நகேந்த்ர கன்யா வ்ருஷகேதநாப்யாம்
நமோ நமச் சங்கர பார்வதீப்யாம்.

ஓம்பவானீசங்கராப்யாம் நம:
சுபமஸ்து நித்யம்

ஸ்ரீ அண்ணாமலையார் துணை



ஓம் நமோபகவதே அருணாசலேச்வராய சிவாய நம:

அண்ணாமலையாரின் சோனாத்ரிநாத ஸ்துதி அஷ்டகம்.

சிவாய ருத்ராய சிவார்ச்சிதாய மஹானுபாவாய மஹேச்வராய.
ஸோமாய சூக்ஷ்மாய சுரேச்வராய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 1

திக்பால நாதாதி விபாவநாய சந்த்ரார்த சூடாய ஸநாதனாய.
ஸம்ஸார துக்கார்ணவ தாரணாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 2

ஜகன் நிவாஸாய ஜகத் ஹிதாய ஸேநாநிதாநாய ஜய ப்ரதாய.
பூர்ணாய புண்யாய புராதனாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 3

வாகீச வந்த்யாய வர ப்ரதாய உமார்த தேஹாய கணேச்வராய.
சந்த்ரார்க்க வைச்வாநரலோசனாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 4

ரதாதிரூடாய ரஸாதராய வேதாச்வ யுக்தாய விதி ஸ்துதாய.
சந்த்ரார்க்க சக்ராய சசிப்ரபாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 5

விரிஞ்சி ஸாரத்ய விராஜிதாய கிரீந்த்ர சாபாய கிரீச்வராய.
பாலாக்னி நேத்ராய பணீச்வராய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 6

கோவிந்தபாணாய குணத்ரயாய விச்வஸ்யநாதாய வ்ருஷத்வஜாய.
புரஸ்ய வித்வம்ஸந தீக்ஷிதாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 7

ஜராதி வர்ஜ்யாய ஜடா தராய அசிந்த்ய ரூபாய ஹரி ப்ரியாய.
பக்தஸ்ய பாபௌக விநாசநாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 8

ஸ்துதிம் சோணாசலேசஸ்ய படதாம் ஸர்வஸித்திதம்.
ஸர்வஸம்பத்ப்ரதம் பும்ஸாம் ஸேவந்தாம் ஸர்வதோ ஜநா:.

ஸ்ரீ சங்கராசாரியார் அவர்கள் அருளிய
சோனாத்ரிநாத ஸ்துதி அஷ்டக விளக்கவுரை

1. சிவனாகவும், ருத்ரனாகவும், பார்வதியினால் அர்ச்சிக்கப்பட்டவராயும், பெரியவராகவும், மஹேஸ்வரராயும், உமையோடு கூடியவராயும், அணுஸ்வரூபராயும், தேவர்களுக்கு ஈஸ்வரராயும், இருக்கிற சோணாத்ரி நாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

2. இந்தரனால் பூசிக்கப்பட்டவராயும், சந்திரனை சிரசில்தரிசித்தவராயும், மிகவும் பழமையானவராயும், சம்சாரமாகிய துக்கசமுத்திரத்தை தாண்டினவராயும், இருக்கிற சோணாத்ரி நாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

3. உலகங்களுக்கு நன்மை செய்பவராயும், உலகத்திலேயே இருப்பவராயும், சேனாதிபதியாகவும், ஐயத்தை கொடுக்கிறவராயும், நிறைந்தவராயும், புண்ய புருஷராயும் பழமையானவராயும், இருக்கிற சோணாத்ரி நாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

4. ப்ரஹஸ்பதயினாலே வணங்கப் பெற்றவராயும், வரத்தைக் கொடுப்பவராயும், உமையின் பாதி சரிரத்தையுடயவராயும் கணங்களுக்கு அதிபதியாகவும், சந்திரன், சூரியன், அக்நி, இவர்களை கண்களாக உடையவராயும், இருக்கிற சோணாத்ரி நாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

5. வேதங்களாகிய குதிரையையுடையதாயும், சந்திரன், சூரியன், இவர்களை சக்ரமாகயுடையதாயும், இருக்கிற ரதத்தில், பிரம்மாவை சாரதியாகக் கொண்டு ஆரோகணிதவராயும், ரசத்தை ஆதாரமாகயுடையவராயும், சந்திரன் போன்ற வெண்மையாக இருக்கிற சிவனுக்கு நமஸ்காரம்.

6. விரிஞ்சியை சாரதியாக உடையவராயும், கிரீந்திரனை வில்லாக உடையவராயும், கிரீஸ்வரனாகவும், நெற்றி கண்களையுடையவராயும், பாம்புகளுக்கு ஈஸ்வராயும் இருக்கிற சோணாத்ரி நாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

7. கோவிந்தனை பாணமாக உடையவராயும், சகுணபிரம்மவடிவராயும், உலகத்திர்க்கு நாதராயும், விருஷபத்தைத்வஜமாகயுடையவராயும், முப்புரங்களை எரிப்பதில் தீக்ஷையையுடையவராயும், இருக்கிற சோணாத்ரி நாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

8. நரை திறை மூப்பு இவைகளை நீகுகினவராயும், ஜடையை தரித்தவராயும், சிந்திக்கமுடியாத உருவத்தையுடையவராயும் மஹாவி ஷ்ணுவுக்கு பிரியமானவராயும், பக்தர்களுடைய பாபக்கூட்டங்களை போக்கபிரசப்பவராயும், இருக்கிற சோணாத்ரி நாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

9. இந்த சோணாத்ரி நாத ஸ்துதியைப் படிப்பதால் எல்லாம் சித்திக்கும், எல்லா சம்பத்துக்களையும் கொடுக்கும் இந்த ஸ்துதியை ஜனங்கள் எப்போதும் சேவிக்கட்டும்.

ஸ்ரீ ஸோமாஸ்கந்தேச்வரர் விருஷபாரூடக்காட்சி

உ

ஸ்ரீகுருப்யோ நம:

சென்னை சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாச்சார்யார் தொகுத்து வெளிவந்துள்ள ஸமய நூல்களை ஆஸ்திக அன்பர்கள் வாங்கிப் பயனடையவும்

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
1.	உருவத்தில் இறைவன்	தமிழ்	தமிழ்	No Stock
2.	விபூதி மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
3.	நவராத்திரி தேவியர் துதித்திரட்டு	தமிழ்	தமிழ்	No Stock
4.	புதுக்கோயில் சடங்கு ஐந்து	64-தமிழ்	தமிழ்	Rs.200/-
5.	சிவாகம கட்டுரைத் திரட்டு-1	122-தமிழ்	தமிழ்	Rs.200/-
6.	சிவாகம கட்டுரைத் திரட்டு-2	132-தமிழ்	தமிழ்	Rs.200/-
7.	காக்கும்காளியின் காருண்ய மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
8.	சிவாகம கட்டுரைத்திரட்டு-3	தமிழ்	தமிழ்	Rs.200/-
9.	சிவாகம கட்டுரைத் திரட்டு-4	168-தமிழ்	தமிழ்	Rs.200/-
10.	சிவயோகநெறி (சைவாகமத்தில்)	116-தமிழ்	தமிழ்	No Stock
11.	ஆலயாகார அர்த்த விவரணம்	64-தமிழ்	தமிழ்	No Stock
12.	புஷ்பார்ச்சன விதி	124-தமிழ்	தமிழ்	Rs.150/-
13.	திவ்யாபிஷேக விதி	136-தமிழ்	தமிழ்	Rs.200/-
14.	ஹோமலக்ஷண ஸங்கிரஹம்	340-தமிழ்	தமிழ்	Rs.500/-
15.	சண்டீயாக விவேகம்	306-தமிழ்	தமிழ்	Rs.400/-
16.	திவ்ய ஸ்தவ கதம்பம் (கிரந்தம்)	180-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
17.	சிவாகம கட்டுரைத்திரட்டு-5	160-தமிழ்	தமிழ்	Rs.200/-
18.	நக்ஷத்ரசாந்தி விதானம்	124-தமிழ்	தமிழ்	Rs.550/-

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
19.	உத்ஸவபேத க்ரியாபோதம்	224-தமிழ்	தமிழ்	Rs.350/-
20.	நற்கூற்று மணிமாலை	352-தமிழ்	தமிழ்	Rs.400/-
21.	சிவாகம சூக்தி மஞ்ஜரீ	224-தமிழ்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
22.	காளீபூஜாப்ரபாவம்	380-தமிழ்	தமிழ்	Rs.450/-
23.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	48-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.250/-
24.	புவனேச்வரீ பூஜாகல்பம்	202-தமிழ்	தமிழ்	Rs.350/-
25.	சைவநிர்வசன வசனாமிருதம்	நாகரம்	சம்ஸ்க்ருதம்	No Stock
26.	சிவசக்தி ஸ்தோத்ரமாலா	320-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.350/-
27.	பத்ரகாளீ தீபபூஜையும் துதிகளும்	124-தமிழ்	தமிழ்	Rs.200/-
28.	பிரத்யங்கிரா ஸபர்யா ஸர்வஸ்வம்	560-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.600/-
29.	பிரத்யங்கிரா ஸஹஸ்ரநாமம்	150-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
30.	சிவாகம கட்டுரைத்திரட்டு-6	108-தமிழ்	தமிழ்	Rs.200/-
31.	திவ்யஸ்தவகதம்பம்	180-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
32.	கோயில்விழாக்களின் வாஹனஉலா	256-தமிழ்	தமிழ்	Rs.400/-
33.	தேர்பவனிப்பெருமை	176-தமிழ்	தமிழ்	Rs.300/-
34.	சிவகாமகட்டுரைத்திரட்டு-13	136-தமிழ்	தமிழ்	Rs.200/-
35.	சிவஸ்தோத்ர முக்தாவளீ	104-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
36.	ஆகமச்சான்றுப் பேழை	186-தமிழ்	தமிழ்	Rs.300/-
37.	சண்டீயாக ப்ரயோகம்	300-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
38.	ஆகமக்கோயில் அமைப்பு முறை	576-தமிழ்	தமிழ்	Rs.750/-
39.	லக்ஷ்மீ ஆராதன சந்திரிகா	528-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.800/-
40.	லிங்கஸ்தாபனம் & அஷ்டபந்தனம்	376-தமிழ்	தமிழ்	Rs.500/-

யந்திர செப்புத் தகடுகள்

ஆலயதேவதா ப்ரதிஷ்டாயந்திர தகடு ஒன்று கிரந்த எழுத்தில் ரூ.1000/-

சைவ, வைணவக் கோயிலின் அறுசமயத் தெய்வச்சிலைகளுக்கான ஆகம பிரதிஷ்டைக்கான தகட்டு யந்திரங்கள், தாமிரத்தகட்டில் அளவு இஞ்ச் 3×3 அல்லது 5×5ல் ஆகம விதிமுறைப்படி எழுதியவை, உரிய மந்திரவகைகளுடன் கூடியவை உரியவைக்கு மட்டுமே கிடைக்கும்.

லிங்கத்தில்
பஞ்சமுக ஸதாசிவ மூர்த்தி

ஓம் நமோ பகவதே பரமஹம்ஸாய
பரமகுரவே ஸதாசிவாய நம: